# தாய்வீடு



மூத்த அரசியலாளர்
இரா. சம்பந்தன் மறைந்தார்

ஒற்றை நட்சத்திர உலா
ஈழக்கூத்தன் ஏ.சி. தாசீசியஸ்
- பொன்னன்





அ. யேசுராசாவின்
'திரை உலா'
தொகுப்பு : நேசன்

THAIVEEDU JULY 2024 ஜூலை www.thaiveedu.com

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Selling
Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc.


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

# நீரின்றி அமையாது உலகு

உலகிலே மூன்றில் ஒரு பங்கு சிறுவர்கள் மோசமான நீர்ப் பற்றாக்குறைக்கு முகங்கொடுத்துள்ளார்கள் என ஐக்கிய நாடுகளின் அனைத்துலகச் சிறுவர் நிதியம் தெரிவிக்கிறது. அதாவது 739 மில்லியன் வரையிலான சிறுவர்களுக்குப் போதியளவு குடிநீர் இல்லை. இந்தச் சிறுவர்கள் உலகின் எங்கோ ஒரு மூலையில் மட்டும் இல்லை. கனடாவிலும் இருக்கிறார்கள். அமெரிக்காவிலும் இருக்கிறார்கள். கனடாவின் பூர்வகுடிகளுக்கு ஒதுக்கப்பட்ட வாழ்விடங்களில் குடிநீரின் பாதுகாப்பின்மை பற்றிய எச்சரிக்கைகள் வருடாந்த நிகழ்வுகளாகத் தொடர்கின்றன. அமெரிக்காவிலே 2.2 மில்லியனுக்கு அதிகமான வீடுகளிலே ஒழுக்கு நீர் வசதியில்லை. பாடசாலைகளிலே மாணவர்களுக்கு தூய குடிநீர் கிடைக்க வழிவகை செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், அதற்கான உத்திகளை ஆராயவும் என அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாட்டுக்கான மையம் ஒரு செயற்றிட்டத்தை முன்னெடுத்திருக்கும் அளவுக்கு அமெரிக்காவிலே குடிநீர் ஒரு முக்கிய சிக்கலாக உருவெடுத்துள்ளது. செல்வம் கொழிக்கும் இந்த நாடுகளிலே வறுமைக்கோட்டுக்குக் கீழே அல்லலுறும் மக்களையே இந்தப் பற்றாக்குறைகள் பாதிக்கின்றன. அதனாலேயே அவை போதிய கவனம் பெறாமலேயே இருக்கின்றன. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் ஒப்பந்தம் குடிநீருக்கான வழிவகை இருத்தலை ஒரு மனித உரிமையாக அறிவிக்கிறது. இருந்தபோதும், உலகச் சிறுவர்களுள் 33 விழுக்காட்டுக்கும் மேலானவர்களுக்கு இந்த உரிமை மறுக்கப்படுகிறது.

பூமியின் பரப்பின் 70 விழுக்காடு நீரால் நிறைந்துள்ளதெனினும், அந்த நீரின் மூன்று விழுக்காடு மட்டுமே நன்னீர். இருக்கும் அந்தச் சொற்ப அளவு நன்னீரிலும் மூன்றில் இரண்டு பங்கு, மனிதருக்குக் கிட்டாத வகையிலே பனிப்பாறைகளாக உறைந்துள்ளது. அதன் காரணமாக உலகில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தூய குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகையின்றி அவதிப்படுகிறார்கள். அசுத்தமான நீரைக் குடிப்பதால் வாந்திபேதி போன்ற நீராற் பரவும் தொற்றுநோய்களால் பீடிக்கப்படுகிறார்கள். வருடாவருடம் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அசுத்தமான நீரைக் குடிப்பதால் ஏற்படும் வயிற்றுப்போக்கு சம்பந்தப்பட்ட நோய்களால் இறக்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள்.

மனிதருக்குப் பயன்படும் வகையில் அமைந்துள்ள நன்னீர் நிலைகளும் தொடர்ச்சியான வகையிலே பாரதூரமான அழுத்தங்களுக்கு உள்ளாகி வருவது பற்றிச் சுற்றுச்சூழலியலாளர்கள் எச்சரித்து வருகிறார்கள். ஆறுகளும் ஏரிகளும் நீர்நிலைகளும் வறண்டுபோவதை அவர்கள் அபாய உணர்ச்சியுடன் சுட்டுகிறார்கள். இயற்கையின் வளத்துக்கும் மனிதரின் வாழ்வுக்கும் ஆதாரமாக இருந்த பல நன்னீர் நிலைகள் பயன்படுத்த முடியாத அளவுக்கு மாசுபடுத்தப்பட்டு வருகின்றன. உலகில் பாதிக்கும் மேற்பட்ட சதுப்பு நிலங்கள் மறைந்துவிட்டன. நிலக்கீழ் நீரைச் சுத்தம் செய்யும் சதுப்பு நிலங்களில் எஞ்சியுள்ளவையையாவது பாதுகாப்பதற்கு மாறாக அவற்றைக் கொங்கிறீற்றிட்டு நிரப்பிக் கட்டடங்களை எழுப்புவதிலேயே செல்வந்த நாடுகளின் முதலாளிகள் முனைப்பாக இருக்கிறார்கள். மற்ற எந்தத் தொழிலையும்விட விவசாயம் அதிகமான நன்னீரைப் பயன்படுத்துகிறது. மேற்குலகில் அளவுக்கதிகமாக நீரைப் பயன்படுத்தும் விவசாய முயற்சிகள் வைன் உற்பத்தி போன்ற கேளிக்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வனவாகவே இருக்கின்றன. வளர்முக நாடுகளில் அத்தியாவசிய உணவை உற்பத்தி செய்வதற்கென நடக்கும் விவசாய முயற்சிகள் கணிசமான அளவு நீரைத் திறனற்ற பயன்பாட்டால் விரயமாக்குகின்றன. பூமி வெப்பமாதலால் காலநிலையில் ஏற்படும் மாற்றங்களும் உலகெங்கிலும் வானிலையையும் பருவச் சுழற்சியையும் மாற்றுகிறது. ஒரே பிரதேசத்திலேயே சில பகுதிகள் வறட்சியில் வாட வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிகழ்வுகள் மலிந்துவிட்டன. தீவிர, நீர்ப்பற்றாக்குறைக்கு முகங்கொடுத்துள்ள நாடுகளுள் ஒன்றான லெபனான், வருடத்தில் ஓர் அரைப்பகுதி வெள்ள அனர்த்தத்துக்கும் மற்றைய அரைப்பகுதி வறட்சிக்கும் முகங்கொடுக்கிறது. இத்தகைய நாடுகளிடம் மழைக்காலத்தில் பெறும் நீரைத் தேக்கிவைத்து வறட்சிக்காலத்தில் பயன்படுத்துவதற்கான பொறிமுறைகளோ தொழினுட்பமோ போதுமான அளவு இல்லை. இத்தகைய தொழினுட்பத் திறனில் முன்னேறியுள்ள நாடுகள், அந்தத் திறனை அனைத்து மக்களினதும் நன்மைக்காகப் பாரபட்சமற்ற முறையில் பயன்படுத்துவதில்லை.

இந்த நிலையிலே, நீர்ப் பற்றாக்குறையை உலகளாவிய பிரச்சினையாக அணுகும் ஒரு பொது முனைப்பு அத்தியாவசியம். ஒவ்வொரு நாடும் தத்தமது தேவைகளை மட்டுமே பூர்த்திசெய்யத் தலைப்பட்டால், எண்ணெய்க்கான போர்களின் காலம் கடந்து, நீருக்கான போர்கள் தொடங்கும். அதை உலகம் தாங்காது.

தாய்வீடு

# இம்மாதத் தாய்வீட்டில்...


நீரின்றி அமையாது உலகு 3

இந்தியப் பொதுத்தேர்தல்
ஒரு பார்வை 5
- நெல்லை ஜெயசிங்

பாலஸ்தீனத் தனியரசு:
நோர்வே, ஸ்பெயின்,
அயர்லாந்தின் அங்கீகாரம்!
அரசியல் முக்கியத்துவமும்
சாத்தியமான விளைவுகளும் 10
- ரூபன் சிவராஜா

பெற்றோ டொலர் 15
- ரதன்

தமிழ்ப் பொதுவேட்பாளர்:
நோக்கமும் நடைமுறையும்... 20
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

அரசியல் பௌத்தத்தின்
கலாசாரக் காட்சிகள் 25
- ஜிஃப்ரி ஹாசன்

மூத்த அரசியலாளர்
இரா. சம்பந்தன் மறைந்தார் 28

ஐரோப்பிய, அமெரிக்கக்
காற்பந்துப் போட்டிகள் – 2024 30
- குரு அரவிந்தன்

வாழ்வதற்கும் உலகை
வெல்வதற்குமான கல்வியை நோக்கி... 32
- அகமட் பிஸ்தாமி

இடர்களைத் தவிர்க்கும்
பத்து வழிமுறைகள் 34
- செந்தூரன் புனிதவேல்

மின்சாரப் பாவனை
புதிய மாற்றம்! அதிக சேமிப்பு ! 36
- வேலா சுப்ரமணியம்

தசை நினைவாற்றல் 38
- நிரேஷ் ரட்ணம்

காற்றுக் கொந்தளிப்பு 42
- சுப்ரமணியம் ஜெயசீலன்

சீனாவின் நிலவை நோக்கிய சாதனை 45
- குரு அரவிந்தன்

அம்மா காலம்... 48
- வேதநாயகம் தபேந்திரன்

'முரளி' எனும் இசைப்
படைப்பாளியைக் கொண்டாடுதல் 51
- ரூபன் சிவராஜா

ஊழி 54
- ரதன்

உயிர்த்தெழுந்த மத்து 57
- ஓவியர் ஜீவா

ஒற்றை நட்சத்திர உலா
'ஈழக்கூத்தன் ஏ.சி. தாசீசியஸ்' 60
- பொன்னன்

மூவலூர் இராமாமிர்தம்
அம்மையாரின் சமூகப்பணிகள் 63
- பொ. திராவிடமணி

தமிழ் அறிஞர் வித்தியாரத்தினம்
நவாலியூர் சோ. நடராஜன் 66
- வே. விவேகானந்தன்

மறைந்தும் மறையாத ஆசான்! 68
- த. சிவபாலு

நாளெந்த நாளோ...?
கவிஞர் மு. துரைசாமியின்
கவிதைத் தொகுப்பு 71
- மல்லியப்புசந்தி திலகர்

அறிஞர் ஆ. சபாரத்தினத்தின்
'ஒரு விளக்கிலிருந்து ஏற்றிய
பல விளக்குகள்' 73
- நா. நவராஜ்

பீ. மரியதாஸ்:
அட்டனில் எழுந்த மார்க்ஸியக் குரல் 79
- மு. நித்தியானந்தன்

வி. மைக்கல் கொலினின்
'பரசுராம பூமி' –
ஓர் அதிர்ச்சி வைத்தியம் 82
- அருட் பணி. பெனி யே.ச.

மொழியும் மொழியும்! 86
- ஜெயஸ்ரீ சதானந்தன்

இரு நிலைகளில் உழல்தல் –
வெளியேற ஒரு வெளிச்சம் 89
- கருணாகரன்

பண்டாரநாயக்க முதல் ஜே.வி.பி. வரை...
பௌத்தமும் சிங்களத் தேசியவாதமும் 92
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

நுஃமானின்
'உதயப் பொழுதும் அந்தி மாலையும்'
ஓர் அறிமுகம் 97
- க. நவம்

ஈழத்தவரின் சமகால நூல் வெளியீடுகள்:
ஒரு நூலியல் சார்ந்த பார்வை 101
- என். செல்வராஜா

அறிவு உற்பத்தியின் மெய்யியல் அடிப்படைகள்
புறநிலை வாதமும் அகநிலை வாதமும் 105
ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

மகாவம்சம் 6–ஆவது தொகுதி
பிரேமதாச காலப் போரும் சமாதானமும் 109
தமிழில்: என். சரவணன்

தம்பிரான் மாணிக்கம் 126
- த. ஜீவராஜ்

இனப்படுகொலையின் அரசியல் – 4
இனப்படுகொலை:
வரலாறும் வரைவிலக்கணமும் 129
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுந்தர ராமசாமியின்
திறனாய்வு அணுகுமுறை –
பொருண்மைக்களம் 133
- சு. வேணுகோபால்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் 138
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

'கனவாய் முடிந்த கதை'
தமிழ்நாட்டிற்கு ஒரு பெரும் நஷ்டம் 140
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து.... 142
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

அ. யேசுராசாவின்
'திரை உலா' 148
தொகுப்பு : நேசன்

பிரளயத்தின் நடுவே...! 152
- உஷாதீபன்

வாழ்வுரிமை! 163
- மா. சித்திவினாயகம்

குறைவற்றதோர் அமைதி 167
- ஜிஜுன் லி
தமிழில்: என்.கே. மகாலிங்கம்




**141** கோடி மக்கள் தொகை கொண்ட உலகின் மிகப்பெரிய சனநாயகநாடான இந்தியாவில் 18-வது நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் கடந்த ஏப்ரல் 19-ம் நாள் தொடங்கி ஜூன் முதல் நாள் வரை 7 கட்டங்களாக நடந்து முடிந்திருக்கிறது. 97 கோடிப் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த போதும் 64.20 கோடி பேர் மட்டுமே அதாவது 65.79% வீதத்தினர் மட்டுமே வாக்களிப்பில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். மூவரில் ஒருவர் வாக்களிக்கவில்லை என்பது வருத்தமளிக்கும் விடயமாகும். 543 என்ற எண்ணிக்கையிலான மக்களவை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடைபெற்ற இத்தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடிக்க 10 இலட்சம் வாக்குச்சாவடிகள், 5.5 இலட்சம் மின்னணு வாக்கு இயந்திரங்கள், 1½ கோடி தேர்தல் பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டனர். இந்தியாவில் உள்ள 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்கள் தங்களுக்கான பிரதிநிதிகளை தேர்வு செய்ய வாக்களிப்பில் கலந்து கொண்டன. இதே காலப்பகுதியில் ஆந்திரப் பிரதேசம், அருணாசலப் பிரதேசம், ஒடிசா, சிக்கிம் ஆகிய மாநில சட்டமன்றங்களுக்கும் சேர்த்து ஒன்றாக தேர்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளின் வாக்காளர்களை விட இந்திய வாக்காளர்களின் எண்ணிக்கை இரண்டரை மடங்கு அதிகம் என கூறப்படுகிறது. இந்தியா முழுமைக்கும் தேர்தலை நடத்தி அதன் முடிவுகளை அறிவிக்கும் கடமையும் பொறுப்பும் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு உரியதாகும்.

## இந்திய தேர்தல் ஆணையம்:

இந்திய குடியரசுத் தலைவர் தொடங்கி உள்ளாட்சி அமைப்புக்கள் வரை தேர்தல்களை நடத்தும் பொறுப்பு மத்திய மாநில தேர்தல் ஆணையங்களுக்கு உரியதாகும். தேர்தல் ஆணையம் விருப்பு வெறுப்பு இன்றி கட்சி சாராமல் நடுநிலையோடு நடந்து கொள்ள வேண்டும் என்று அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது. ஆனால் அவர்கள் ஆளும் கட்சிகளுக்கு சாதகமாகவே நடந்து கொள்வதை அதிக அளவில் நடைமுறையில் காணமுடிகிறது. தேர்தல் ஆணையம் தன்னாட்சி பெற்ற அமைப்பு என கூறப்பட்ட போதும் இதற்கான நியமனத்தின் போது தங்களுக்கு சாதகமானவர்களை ஒன்றிய ஆட்சியாளர்கள் தெரிவு செய்வதால் அவர்களுக்கு சாதகமாக நடக்கவே தலைமை தேர்தல் ஆணையர்கள் முற்படுகின்றனர். மத்திய தேர்தல் ஆணையத்தை தேர்வு செய்யும் குழுவில் ஒருவராக இருந்த உச்ச நீதிமன்ற நீதியரசர் நீக்கப்பட்டு அவ்வதிகாரத்தை தற்போதைய பாஜக அரசு தன்னிச்சையாக எடுத்துக் கொண்டதைக் காணலாம். இதனடிப்படையில்



அண்மையில் காலியாக இருந்த இரு தேர்தல் ஆணையர்களுக்கான நியமனத்தை பிரதமரே செய்து முடித்தமை அவதானிக்க வேண்டிய விடயமாகும். நடந்து முடிந்த தேர்தலின் போது தேர்தல் ஆணையர், பிரதமர் மோடி அவர்களுக்கு பெருமளவில் சாதகமாக நடந்து கொண்டதாக எதிர்க் கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்த போதும் அதனை தலைமை தேர்தல் ஆணையம் கண்டுகொள்ளவில்லை. மோடி அவர்களின் வசதிக்கேற்ப தேர்தலை ஏழு கட்டங்களாக 45 நாட்கள் நீடித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. ஆணையத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றம் வரை எதிர்க்

கட்சிகள் சென்று முறையிட்டமை கவனிக்கத்தக்கதாகும்.

ஆளும் கட்சி குறிப்பாக பிரதமர் உட்பட பாஜக தலைவர்கள் தேர்தலின்போது வெறுப்பு பிரச்சாரங்களை சிறுபான்மை இஸ்லாமிய சமூகத்திற்கு எதிராக முன்வைத்தபோது ஆணையம் எந்த வித தடையும் விதிக்காமல் மௌனமாக இருந்ததை இந்திய சமூக செயற்பாட்டாளர்கள் மட்டுமல்லாமல் உலக ஊடகங்களும் தம் கண்டனங்களை பகிரங்கமாக வெளிப்படுத்த தவறவில்லை. சமமற்ற தேர்தல் களம் இருப்பதை ஆணையம் கண்டு கொள்ளாமல் குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு மட்டும் சாதகமாக தேர்தல் நடத்தியது இந்திய சனநாயகத்திற்கு பெரும் தலை குனிவு என கூறப்படுகிறது. மக்களின் வரிப்பணத்தில் இருந்து பல ஆயிரம் கோடிகளை தேர்தல் நடத்த செலவிட்ட தேர்தல் ஆணையம் மக்கள் நலன் சார்ந்து நடுநிலையோடு செயற்படாதது உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பை குறைத்து விட்டதாக கூறப்படுகிறது.

## வாக்கு பதிவு இயந்திரங்கள்:

கல்வி மற்றும் தொழில் நுட்பத்தில் அபரிமிதமான வளர்ச்சி பெற்றுள்ள அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, கனடா என அதிகமான நாடுகளில் இன்று வரையும் வாக்குச் சீட்டு முறையே பயன்பாட்டில் இருந்து வருகிறது. எழுதப் படிக்கத் தெரியாத டிஜிட்டல் மின்னணு பற்றி அறியாத பல கோடி பேர் இந்தியாவில் வாழ்ந்து வரும் நிலையில் மக்களின் வாக்குகள் பதிவிட இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நிலையை



இங்கு காண முடிகிறது. இதன் மீதான நம்பகத்தன்மை கேள்விக்குறியாக இருப்பதால் மக்கள் வாக்குச் சீட்டு முறையை பெரிதும் விரும்புகின்றனர். இதில் முறைகேடுகள் நடக்க வாய்ப்பு உள்ளதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டிய போதும் அரசு சார்பான தேர்தல் ஆணையம் அதனை முற்றாக மறுத்து வருகிறது. அண்டை நாடான இலங்கையில் வாக்குச் சீட்டு முறையே தொடர்ந்து இருந்து வருகிறது. இயந்திரங்களின் செயற்பாட்டில் நம்பகத்தன்மை இல்லை என மக்கள் கூறிவந்த போதும் அரசு அதனை கருத்தில் கொள்ளவில்லை.

வாக்குப் பதிவை உறுதிப்படுத்த VVPAT (voter verified paper audit trail) எனும் கருவி மேலதிகமாக பயன்படுத்தப்பட்டன. இது ஓரளவு வாக்களிப்போரின் நம்பிக்கையை பெற்ற போதும் தேர்தல் ஆணையம் இதனை வாக்கு பதிவு இயந்திர வாக்கு எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு எண்ண மறுத்து விட்டது. இதனால் அண்மையில் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் நம்பகத்தன்மையை பெறவில்லை என விமர்சகர்கள் கூறி வருகின்றனர். இந்நிலையில் ஜனநாயகத்தின் மேன்மையை காப்பாற்றும் வகையில் மீண்டும் வாக்குச் சீட்டு முறை வர வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர்.

## தேர்தல் கூட்டணிகள்:

இந்தியா பல்வேறு இன மத மொழி பண்பாட்டைக் கொண்ட பரந்துபட்ட மக்களாட்சி நடைபெறும் நாடாக இருப்பதால் அகில இந்திய கட்சிகள், மாநில கட்சிகள் என நூற்றுக்கணக்கான கட்சிகள் செயற்பட்டு வருகின்றன. நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பாரதியஜனதா கட்சி, அகில இந்திய தேசியக் காங்கிரஸ், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பவற்றை உள்ளடக்கிய ஏழு தேசிய கட்சிகளும் திமுக, அதிமுக, சமாஜ் வாதி, திரிணமூல் காங்கிரஸ், உள்ளடக்கிய 57 மாநில கட்சிகளும் தேர்தலில் போட்டியிட்டன. இவை தவிர அரசியல் கட்சிகளாக அங்கீகரிக்கப்படாத 2764 கட்சிகளும் தேர்தல் களத்தில் நின்றன. நூற்றுக்கணக்கான தனிப்பட்ட நபர்கள் சுயேட்சை வேட்பாளர்களாகவும் போட்டியிட்டனர். பெரும்பாலான தேசிய மாநில கட்சிகள் இணைந்து 2024 பொதுத் தேர்தலில் இரண்டு அணிகளாகப் பிரிந்து தேர்தலில் போட்டியிட்டன. பாரதியஜனதா கட்சி தலைமையிலான அணி தேசிய ஜனநாயகக் கூட்டணி, NDA (The National Democratic Alliance) என்ற பெயரிலும் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் பல கட்சிகளை இணைத்து, INDIA (Indian National Developmental Inclusive Alliance) இந்தியா கூட்டணி என்ற பெயரிலும் தேர்தலில் போட்டியிட்டன.

தேசிய ஜனநாயகக் கூட்டணி 540 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி 543 தொகுதிகளிலும் போட்டியிட்டன. 543 தொகுதிகளில் 8337 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 797 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்திய நாடாளுமன்ற தேர்தல் முறையில் விகிதாசார பிரதிநிதித்துவமோ பெண்களுக்கான தனிப் பிரதிநிதித்துவமோ வரையறுக்கப்படவில்லை. ஆனால் இந்திய சமூகத்தில் பட்டியலின மற்றும் மலைவாழ் (Schedule Casts and Schedule Tribals) மக்களுக்கென விசேட தனித்தொகுதிகள் அரசியல் சட்டம் நிர்ணயித்த படி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான தனித்தொகுதிகள் மொத்தம் 131 ஆகும். இவற்றில் அச்சமூகம் சார்ந்தவர்கள் மட்டுமே போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஆக முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மற்ற சமூகத்தினர் இத்தொகுதிகளில் போட்டியிட முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் யார் வேண்டுமானாலும் போட்டி இட்டு நாடாளுமன்ற உறுப்பினராகலாம் என்று கூறப்பட்ட போதும் நடைமுறையில் அது சாத்தியம் அற்ற ஒன்றாகும். சேவை துறையாக இருந்த அரசியல் இன்று பணம் கொட்டும் மிகப் பெரும் முதலீட்டுத் துறையாக மாற்றப்பட்டு இருப்பதால் சாதாரண மக்கள் தேர்தல் பக்கம் எட்டியும் பார்க்க முடியாத இடத்தில்

இருக்கின்றனர். செல்வந்தர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் என்ற நிலை இந்தியா போன்ற நாடுகளின் சனநாயகத்தில் வேர் ஊன்றி விட்டது. இதனடிப்படையில் பார்க்கும் போது இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களில் 93% சதவீத மானவர்கள் கோடீஸ்வரர்களாவர். அதே போன்று 2024 பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் 50 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் கிரிமினல் வழக்குகளில் தொடர்பு உடையவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். தண்டனையின் அடிப்படையில் சிறையில் இருந்தாலும் போட்டி போடலாம் என்ற நிலை இந்தியாவில் இருக்கிறது.

இந்திய தேர்தல் முறையில் கோடீஸ்வரர்கள் மட்டுமல்லாமல் சாதி மத பின்புலம் உள்ளவர்கள் மட்டுமே பெரும்பாலும் வெற்றி பெற முடியும் என்ற நிலை இருப்பதையும் தலை குனிவோடு நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தியா இறுக்கமான சாதிய கட்டமைப்பையும் பரவலான மத நம்பிக்கையையும் கொண்ட ஒரு நாடு. இதனால் பெரும்பாலான தேர்தல் தொகுதிகளில் பெரும்பான்மையாக இருக்கும் சாதியைச் சேர்ந்தவர்களே வேட்பாளராக அறிவிக்கும் போக்கும் அதை மனதில் கொண்டே மக்களும் வாக்களிக்கும் குறுகிய சனநாயக நடைமுறையும் இந்திய தேர்தல் முறையில் பரவலாக காணப்படுகிறது. மிக அரிதான இடங்களில் மட்டும் இதற்கு மாறான நிலை கடைபிடிக்கப்படுவதையும் காணலாம்.

## 18-வது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் பரப்புரை:

மோடி அவர்களின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியும் ராகுல் காந்தி மற்றும் கார்கே வழிகாட்டலில் இந்தியா கூட்டணியும் நாடெங்கும் கடுமையாக தேர்தல் பிரச்சார கூட்டங்களை நடத்தி தங்களின் வேலைத் திட்டங்களை முன் வைத்தன. பாஜக பிரதமர் மோடியை மட்டுமே ஒற்றை மனிதராக முன் நிறுத்தி தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டது. கடந்த பத்து வருட காலத்தில் தாங்கள் மேற்கொண்ட வளர்ச்சி திட்டங்களை, அபிவிருத்திகளை மக்களிடம் கூறி வாக்கு கேட்க பாஜக முன்வரவில்லை. முதற் கட்ட தேர்தலில் இராமர் கோயில் கட்டியதை பெரும் சாதனையாக முன்நிறுத்த முயன்று அதில் பயன் கிடைக்காத நிலையில் மக்களை பிளவுபடுத்தும் பிரச்சாரங்களை மேற்கொள்ளலாயினர். சிறுபான்மையினர் மீது அதிக அளவில் வன்மத்தை கக்கினர். குறிப்பாக இஸ்லாமியர் மீது மிகக் கொடுமையான தாக்குதல்களை மோடி உட்பட அதன் தலைவர்கள் மேற்கொண்டனர்.

இஸ்லாமியர்கள் ஊடுருவல்க்காரர்கள் என்றும் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் பிற்படுத்தப்பட்ட இந்துக்களின் இட ஒதுக்கீடுகள் பறிக்கப்பட்டு இஸ்லாமியர்களுக்கு கொடுத்து விடுவார்கள் என்றும் இந்துக்களின் மங்கள தாலி மற்றும் மேலதிக எருமை மாடுகளைக் கூட பிடுங்கி இஸ்லாமியர்களுக்கு கொடுத்துவிடுவார்கள் என மிகவும் தரம் தாழ்ந்து பிரச்சாரம் செய்த முதன்மையானவரின் முகம் சுளிக்கும் தேர்தல் உரையை நடுநிலையாளர்கள் முதல் அனைத்து எதிர் கட்சிகளும் கடுமையாக கண்டித்தன. இஸ்லாமியர்களுக்கு எதிராக பெரும்பான்மை இந்துக்களை பாஜக பக்கம் திசை திருப்பும் நோக்குடன் இந்துத்துவ காவலனாக தன்னை காட்டிக் கொள்ளவும் மோடி அவர்கள் பெரு முயற்சி செய்தமையை தேர்தல் பிரச்சாரத்தின் போது காண முடிந்தது. அதன் ஒரு பகுதியாக அயோத்தியில் இராமர் கோயில் கட்டியதை மோடி அவர்கள் பாஜக ஆட்சியின் மிகப் பெரும் சாதனையாக பிரச்சாரத்தில் கூறினார். அதையொட்டி இந்து மக்கள் மத்தியில் உணர்ச்சியை தூண்டும் வகையில், இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால் இராமர் கோயிலை இடித்து விடுவார்கள், ராம் என்ற பெயர் உடையவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றெல்லாம் மோடி அவர்கள் பிரச்சாரம் செய்தார். ஆனால் அதனை பெரும்பான்மை இந்து மக்களே ரசிக்கவில்லை என்று கூறப்படுகிறது. எல்லோருக்குமான வளர்ச்சி என்று கூறி வந்த மோடி அவர்கள் ஆன்மீகத்தை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தி வந்தமையை காணமுடிகிறது. இராமர் கோயில் என்ற கோஷம் மக்கள் மத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதைக் கண்ட மோடி கடைசி கட்ட தேர்தல் பிரச்சாரத்தின்போது இது வரை கூறிவந்த 'ஜெய்சிறிராம்' முழக்கத்தை ஒதுக்கி விட்டு 'ஜெய்ஜெகன்னாத்' என முழங்கத் தொடங்கினார். வெறுப்பு அரசியல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக மோடி அவர்கள் உச்சரித்த 'முகலாயர்கள், மட்டன், மங்கல சூத்ரா, மீன், முஜ்ரா நடனம்' போன்றவையும் கைகொடுக்கவில்லை. தேர்தலுக்கு பின்னர் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஆர்.எஸ்.எஸ். தலைவர் திரு. மோகன் பகவத் அவர்கள் பாஜக தலைவர்களின் வன்மையான பேச்சுக்களை கண்டித்ததுடன் வெற்றி பெறுவதற்காக பொய்களை தேடிப் போகாதீர்கள் எனவும் அறிவுரை கூறியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். இறுதியில் தேர்தல் வாக்களிப்பு முடிவதற்கு முன்னதாக கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் 45 மணி நேர தியானத்தை மேற்கொண்டார். இது தேர்தல் நடத்தை விதிகளுக்கு முரணானது என எதிர்கட்சிகள் முறையிட்ட போதும் தேர்தல் ஆணையம் கண்டுகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மறுபுறம் இந்தியா கூட்டணி சார்பாக நடைபெற்ற தேர்தல் பிரச்சாரமானது மாநில மற்றும் தேசிய அளவில் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பானதாக இருந்தது. இளைஞர்கள் மத்தியில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, பணவீக்கம், விவசாய நெருக்கடி, அரசியல் அமைப்பு சட்டத்திற்கான அச்சுறுத்தல், மத நல்லிணக்கம், வறுமை ஒழிப்பு, மாநில உரிமைகள் என ஆரோக்கியமான பிரச்சாரத்தை இந்தியா கூட்டணி நாடெங்கும் மக்களிடம் எடுத்துச் சென்றது. பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்களின் ஒற்றுமையின் அவசியத்தை நாட்டு மக்களிடம் எடுத்துரைத்தது. மாநில உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என கூறிய காங்கிரஸ் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியது. தேர்தலுக்கு முன்னைய 'ஜோடா யாத்திரை' எனப்படும் ராகுல்காந்தியின் நடைபயணமும் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு பெரிதும் உதவிகரமாக இருந்தது எனலாம். ஒரு சில மாநிலங்களைத் தவிர மற்ற அனைத்து தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி கட்சிகள் இணைந்து தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டன.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்தியா கூட்டணியில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ள திமுக தலைவர் ஸ்டாலின் அவர்களின் ஒருங்கிணைப்பில் ஒன்றிணைந்த தமிழக கட்சிகள் மிகச் சிறப்பான தேர்தல் பரப்புரையை முன்னெடுத்தன. தேசிய மற்றும் மாநில பிரச்சினைகள் பிரச்சாரத்தில் முன்வைக்கப்பட்டன. மறுபுறம் அதிமுக, மாநில பாஜக தனித்

தனியாக கூட்டணி அமைத்து தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டன. திரு. சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி தனித்து நாற்பது தொகுதிகளிலும் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இளைய தலைமுறையினர் மத்தியில் இக்கட்சி பெரும் ஆதரவைப் பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. தமிழர் உணர்வு, தமிழ் தேசியம் அதிக அளவில் நாம் தமிழர் கட்சியால் பிரச்சாரத்தின் போது பேசப்பட்டு வந்தன. இதன் காரணமாக சில தொகுதிகளில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றதுடன் ஒரு சில தொகுதிகளில் மூன்றாம் இடத்தைப் பெற்றமை கவனிக்கத் தக்கதாகும்.

## தேர்தல் முடிவுகள்:

ஏழு கட்ட தேர்தல் முடிந்து ஜூன் மாதம் நான்காம் நாள் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. ஏழு சுயேச்சை உறுப்பினர்கள் உட்பட 41 கட்சிகளைச் சேர்ந்த 543 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தேர்வு பெற்றதை தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஆட்சி அமைக்க 272 உறுப்பினர்கள் அவசியம் என்ற நிலையில் பாஜக உட்பட எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெறவில்லை. 2019-ல் 303 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்த பாஜக 2024 தேர்தலில் 240 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. இது அளிக்கப்பட்டவாக்குகளில் 36.56% வீதமாகும். பெரும்பான்மைக்கு 32 இடங்கள் குறைவாக இருந்தமையால் தனித்து ஆட்சி அமைக்கும் வாய்ப்பை அக்கட்சியால் பெறமுடியவில்லை. மறுபுறம் காங்கிரஸ் கடந்த முறை பெற்ற 52 இடங்களை விட இம்முறை 99 இடங்களை பெற்ற போதும் தனித்து ஆட்சி அமைக்கும் வாய்ப்பு அதற்கும் கிடைக்கவில்லை. இந்தியா கூட்டணி 232 இடங்களை பெற்ற போதும் ஆட்சி அமைக்க 40 இடங்கள் குறைவாக பெற்ற நிலையில், பா.ஜ.க ஆட்சி அமைக்க ஏனைய கூட்டணி கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டிய சூழ்நிலை உருவாகியது. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 293 இடங்களில் வெற்றி பெற்றிருந்தமையால் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கும்வாய்ப்பை அக்கட்சி பெற்று ஆட்சியையும் அமைத்துள்ளது. 16 இடங்களைப் பெற்ற தெலுங்கு தேசக் கட்சி, 12 இடங்களைப் பெற்ற ஐக்கிய ஜனதா தளம், 7 இடங்களை பெற்ற ஷிண்டேவின் சிவ சேனா கட்சி, 5 இடங்களைப் பெற்ற லோக் ஜனசக்தி என பல கட்சிகள் பாஜக ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்தன.

இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கும் வாய்ப்பை இழந்த போதும் 234 அங்கத்தவர்களுடன் பலம் வாய்ந்த எதிர்க் கட்சி என்ற அந்தஸ்தை பெற்றுள்ளமை கடந்த பத்து வருட காலத்தில் இல்லாத முக்கிய அம்சமாகும். இரு கூட்டணிகளுக்கும் இடையே வாக்கு வித்தியாசம் 1.62% ஆகும். பாஜக கூட்டணி பெற்ற வாக்குகள் விகிதம் 43.31% ஆக இருக்க இந்தியா கூட்டணியின் வாக்கு விகிதம் 41.69% ஆகும். கடந்த தேர்தல் அங்கத்துவத்தை விட இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகள் சில மாநிலங்களில் மிகவும் பலம் பெற்றவையாக இருப்பதைக் காணலாம். காங்கிரஸ் 99 இடங்களைப் பெற்றதுடன் அதன் கூட்டணி கட்சிகளான சமாஜ்வாடி கட்சி உத்தரப் பிரதேசத்தில் பாஜகவை எதிர்த்து 37 இடங்களிலும் திரிணமூல் காங்கிரஸ் மேற்கு வங்கத்தில் 29 இடங்களிலும் திமுக கூட்டணி தமிழ் நாட்டில் அனைத்து இடங்களிலும் (40 தொகுதிகளிலும்) வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். தேசிய அளவில் இடதுசாரி கட்சிகள் கடந்த முறையை விட 8 தொகுதிகளை வென்றுள்ள போதும் கேரள மாநிலத்தில் ஆளும் இடதுசாரி மார்க்சிஸ்ட் கட்சி ஒரு இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளமையை அக்கட்சி ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டிய விடயமாக கருதப்படுகிறது. சமூக நீதி அடிப்படையிலான அணுகு முறைகளே இந்தியா கூட்டணி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற பெரிதும் காரணம் என நம்பப்படுகின்றது. அத்துடன் ஆளும் அரசின் மீதான அதிருப்தி கிராமப்புற பகுதிகளில் இந்தியா கூட்டணியின் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கச் செய்துள்ளது.

.

தேர்தல் முடிவுகளை பொதுவான கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது பல விதமான அம்சங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. விளிம்பு நிலை மக்களான பட்டியலினத்திற்கு உரிய பல தொகுதிகளை பாஜக இம்முறை இழந்துள்ளமையை குறிப்பிட்டு கூறலாம். கடந்த முறை 82 தனித் தொகு



திகளில் வெற்றி பெற்ற பாஜக இம்முறை 63 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற முடிந்துள்ளது. மேலும் பாஜக வெற்றி பெற்ற 240 நாடாளுமன்ற உறுப்பினர்களில் முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் கூட இல்லை என்பது மாபெரும் இந்திய ஜனநாயகத்திற்கு பெரும் தலை குனிவாக பார்க்கப்படுகிறது. 543 பேர் உள்ள மக்களவையில் இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவம் படிப்படியாக குறைந்து 2024 தேர்தலில் 24 பேர் மட்டுமே தேர்வாகி உள்ளனர். மேலும் மக்களவையில் பெண்கள் 33% இருக்க வேண்டும் என்ற மசோதாவை கடந்த வருடம் தேசிய கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு ஆதரித்தன. எனினும் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைந்தே வருகிறது. 797 பெண்கள் போட்டியிட்ட 2024 தேர்தலில் 73 பெண் பிரதிநிதிகள் மட்டுமே தெரிவாகியுள்ளனர். பெண்களின் பிரதிநிதித்துவம் உலக அளவில் சராசரி 26.9% என்று இருக்க இந்தியாவில் அது 13.63% விகிதமாக குறைந்து காணப்படுகின்றது.

மேலும் இரண்டு மாநில முதலமைச்சர்களை சிறையில் அடைத்த நிலையில் தேர்தலை, தேர்தல் ஆணையம் நடத்தியதை நடுநிலையாளர்கள் வன்மையாக கண்டித்தனர். பஞ்சாப் மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த இருவர் சிறையில் இருந்து கொண்டே சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளமையும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு அம்சமாகும். இந்திய மக்கள் தொகையில் OBC என கூறப்படும் பிற்படுத்தப்பட்ட மக்கள் 50% மேல் இருந்து வருகின்றனர். ஆனால் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 28% சதவீதத்தினர் மட்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற நிலையையும் காண முடிகிறது. அமைச்சரவையிலும் இச் சமூக ஏற்றத் தாழ்வு நிலை தொடர்வதைக் காணலாம். மிக முக்கியமான அமைச்சுத் துறைகளை மேல் தட்டு வகுப்பினர் பெற்று வருவதும் இந்திய சனநாயக

அமைப்பில் காலம் காலமாக இருந்து வரும் நடைமுறையா கும். தேர்தல் முடிவில் உருவாகிய பாஜக கூட்டணி ஆட்சி யின் புதிய அமைச்சரவையில் தேர்தலில் போட்டியிடாத 11 பேர் மேலவை உறுப்பினர் என்ற போர்வையில் அமைச்சர்க ளாகி இருப்பதையும் காணலாம். அமைச்சரவையில் மிகவும் முக்கியமான துறைகள் உயர் சமூகத்தவர்களுக்கு வழங்கப் பட்டிருப்பதும் இந்திய சனநாயகத்தில் தொடர்ந்து இருந்து வரும் அம்சமாக பார்க்கப்படுகிறது. அனைத்து சமூகத்தை யும் அரவணைத்துச் செல்வதாக கூறும் மோடி அவர்கள் முஸ்லீம் சமூகத்தைச் சார்ந்த ஒருவரைக் கூட அமைச்சர் அவையில் சேர்த்துக்கொள்ளவில்லை என்பது கவனிக்கத் தக்க விடயமாகும்.

### தேர்தல் உணர்த்தும் படிப்பினைகள்:

இந்திய மக்கள் ஜனநாயகத்தின் வலிமையை, அரசியல் அமைப்பின் விழுமியங்களை நன்றாக உள்வாங்கி வாக்க ளித்து இருக்கிறார்கள். மோடி என்ற ஒற்றை மனிதரின் அதி காரம் மட்டுமே செல்லுபடியாகும் என்று கட்டமைக்கப்பட்ட கற்பிதத்திற்கு இத்தேர்தல் முற்றுப் புள்ளி வைத்துள்ளது. விலைவாசி உயர்வு வேலைவாய்ப்பு இன்மை போன்ற பிரச்சி னைகளால் பாதிக்கப்பட்ட பெரும்பான்மை மக்கள் இந்துத் துவ மத கோட்பாட்டின் மீது அதிக அக்கறை காட்டவில்லை என தெரிகிறது. அதன் விளைவே இராமர் கோயில் உள்ள அயோத்தியை உள்ளடக்கிய பைசலாபாத் தொகுதியை பாஜக இழந்தது அவர்களுக்கான படிப்பினையாக பார்க்கப் படுகிறது. இத் தோல்வி ஆன்மீகத்தை அரசியல் ஆயுதமாக கொள்வோருக்கு உணர்த்தப்பட்டிருக்கும் சரியான பாடம் என்றே கூற வேண்டும். முஸ்லிம்களை குறிவைத்து வெளிப்ப டையாகவே பாஜக பிரசாரத்தை மேற்கொண்டது. ஆனால் மத வெறுப்பை பகிரங்கமாக வெளிப்படுத்தியவர்கள் இத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.

இந்துக்களுக்கு முதன்மைத்துவம் அளிக்கும் மோடியின் திட் டம் தோல்வியில் முடிந்துள்ளது. தன் பெயரால் மட்டுமே வாக்கு கேட்ட மோடியின் பிம்பம் நொருங்கி விட்டது. சனநாய கம் என்பது தனிநபர் பிம்பம் அல்ல என்பது நன்கு உணர்த் தப்பட்டுள்ளது. இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட கூட்டாட்சி தேசத்திற்கு மாநில கட்சிகள், மாநில அதிகாரம் இன்றியமையாத ஒன்று என்ற அம்சம் வெளிப்படுத்தப்பட்டுள் ளது. மதம் அல்ல மக்களின் பிரச்சினைகளே முக்கியம் என் பதை உத்தரப்பிரதேச மக்கள் உட்பட இந்திய மக்கள் இத் தேர்தல் வாயிலாக நன்கு உணர்த்தியுள்ளனர். தனிநபர் ஆதிக்கம் இனி செல்லுபடியாகாது என்ற உண்மை ஓங்கி ஒலிக்கத் தொடங்கி உள்ளது. 2024 இந்திய பொதுத் தேர்தல் கூட்டணி யுகத்தின் மறு ஆரம்பம் ஆகும்.



jeyasingh@thaiveedu.com






முப்பது ஆண்டுகளுக்கு மேலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் பாலஸ்தீன மக்களின் விடுதலையை அங்குலம் கூட முன்னகர்த்தவில்லை. பாரிய பின்னடைவுகளுக்கே வழிகோலியுள்ளன. பின்னடைவுகள் எனும் போது அவை அரசியல் அர்த்தத்திலான பின்னடைவுகள் மட்டுமல்ல. பாரிய அளவிலான நில இழப்பு, பல்லாயிரக்கணக்கான உயிரிழப்பு, உரிமையிழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேலின் அரச பயங்கரவாத மற்றும் இன அழிப்பு நடவடிக்கைகள் பன்மடங்காகி யுள்ளன. பேச்சுவார்த்தைகளின் மூலமாகவே பாலஸ்தீனத் தனியரசு அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பது வெற்றுக்கூற்று, அல்லது இஸ்ரேலின் இன அழிப்பிற்கும் நிலப்பறிப்பிற்கும் அங்கீகாரம் வழங்குகின்ற போக்கு.

நோர்வே பாலஸ்தீனத்தைத் தனி நாடாக அங்கீகரித்துள்ளது. இது விடயம் கடந்த பல மாதங்களாக நோர்வே அரசியல் மற்றும் ஊடகங்கள் மட்டத்தில் பேசுபோருளாக இருந்து வந்தது. அதிகாரபூர்வ அறிவிப்பு மே 22-ம் திகதி வெளிவந்தது. இதற்கு நோர்வே நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவு முன்னேரே கிடைத்திருந்தது. அயர்லாந்து மற்றும் ஸ்பெயின் ஆகியனவும் பாலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ளன. இஸ்ரேல் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இம்மூன்று நாடுகளுக்கான இஸ்ரேல் தூதுவர்களை நாட்டுக்குத் திருப்பி அழைத்திருந்தது. பாலஸ்தீனத்திற்கான உதவி வழங்கும் நாடுகளின் குழுவில் நோர்வேயின் பங்கு சார்ந்து எதிர்மறை விளைவுகளை எதிர்கொள்ள நேரும் என நோர்வேயை இஸ்ரேல் எச்சரித்துமிருந்தது.

இந்நாடுகளின் அங்கீகார அறிவிப்பினைப் பாலஸ்தீன தன்னாட்சி நிர்வாகம் (Palestinian Authority) மற்றும் ஹமாஸ் ஆகியன வரவேற்றுள்ளன. பயங்கரவாத்திற்கான பரிசு என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கண்டித்துள்ளதோடு, பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதில் இருந்து ஏனைய நாடுகளைத் தடுப்பதற்கு இஸ்ரேல் தீவிர இராஜதந்திர எதிர்த்தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

இஸ்ரேல் துல்லியமாக வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்டிராத போதும் அதற்கு ஆதரவாக மே 11, 1949-ல் ஐ.நா பொதுச்சபையில் இஸ்ரேலின் உறுப்புரிமைக்கான வாக்களிப்பு இடம்பெற்றது. இறைமையும் சுதந்திரமும் கொண்ட அரசாக இஸ்ரேலின் இருப்பிற்கான உரிமையை ஏற்றுக் கொள்வோர் வெறும் சொல்லளவில் மட்டும் நின்றுவிடாது, நடைமுறையில் அதற்கான செயலை முன்னெடுக்கக் கடப்பாடு உடையவர்கள் என்பது அப்போது முன்வைக்கப்பட்ட முக்கியமான வாதமாகும். எனவே அதே வாதம் தற்போது பாலஸ்தீனத்திற்கும் பொருந்தும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

அண்மைய மாதங்களில் ஸ்பெயின் அயர்லாந்து, நோர்வே ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான உரையாடலின் பின்னரே  இந்த முடிவு வெளிவந்தது. நீண்டகாலமாக மூன்று நாடுகளுக்கும் இடையே விரிவான இராஜதந்திர மற்றும் அரசியல் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன. மேலும் ஸ்பெயின் இது விடயத்தில் உந்து சக்தியாக இருந்துள்ளது. காசா மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை எல்லை மீறியுள்ள நிலையில் இந்த அறிவிப்பிற்கும் சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேல் பிரதமர் மீது கைது ஆணை பிறப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கும் முக்கியத்துவம் உள்ளது.

இதன் அரசியல், குறியீட்டு முக்கியத்துவம் மற்றும் பின்னணி, விளைவுகள் குறித்த பார்வையாக இக்கட்டுரை அமைகின்றது.

### 75 வீதமான நாடுகளின் அங்கீகாரமும் வல்லரசுகளின் நிராகரிப்பும்:

பாலஸ்தீனத்தினை முன்னரே உலகின் 75 வீதமான நாடுகள் தனி நாடாக அங்கீகரித்துள்ளன. 193 ஐ.நா உறுப்பு நாடுகளில் 143 நாடுகள் ஏலவே அங்கீகரித்துள்ளன. நோர்வே, ஸ்பெயின், அயர்லாந்து ஆகியனவற்றின் புதிய இணைவுடன் பாலஸ்தீனத்தினை அங்கீகரித்த நாடுகளின் பட்டியல் 146 ஆகியுள்ளது. முன்னர் அங்கீகரித்தவற்றிற் பலவும் ஆபிரிக்க, ஆசிய மற்றும் தென் அமெரிக்க நாடுகளாகும். நோர்வேக்கு முன்னர் அங்கீகரித்த மேற்குலக நாடுகளாக சுவீடன், ஐஸ்லாந்து மற்றும் போலந்து ஆகியன மட்டுமே உள்ளன. உலகினதும் ஐரோப்பாவினதும் பலம்பொருந்திய நாடுகள், குறிப்பாக இஸ்ரேலின் அதீத ஆதரவு சக்திகளாக விளங்கும்



நாடுகள் இதுவரை அங்கீகரிக்கவில்லை. அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, டென்மார்க், பின்லாந்து போன்றன அப்பட்டியலில் உள்ளடங்குகின்றன.

## இரு தேசத் தீர்வு:

அமெரிக்கா உட்பட இந்நாடுகள் இஸ்ரேல் - பாலஸ்தீனம் என்ற 'இரு தேசத் தீர்வினை – Two-state solution' ஆதரிக்கின்ற போதும் நோர்வே உட்பட்ட நாடுகள் வழங்கிய அங்கீகாரத்தினை ஒருதலைப்பட்சமானவை என நிராகரிக்கின்றன. இருதரப்புப் பேச்சுவார்த்தைகளுக்கூடான தீர்வின் அடிப்படையிலேயே பாலஸ்தீனத் தனியரசு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது அமெரிக்க நிலைப்பாடு. இத்தகைய கோரிக்கைகளும் நிலைப்பாடுளும் அடிப்படைகள் அற்றவை என்பதோடு, இஸ்ரேல் என்கின்ற இன அழிப்பு, இனவெறி (Apartheid state) அரசிற்கு முண்டு கொடுக்கின்ற அணுகுமுறையுமாகும்.

மட்டுமல்லாமல் பிராந்தியத்தின் ஏனைய நாடுகள் இஸ்ரேலைச் 'சுதந்திர யூத அரசாக' அங்கீகரித்தலிலும் அது தங்கியுள்ளதாக அமெரிக்கா கூறிவந்துள்ளது. அதாவது மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் சில நாடுகள் இஸ்ரேலின் இருப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை. ஈரான், போன்றவை இஸ்ரேலினை உலக வரைபடத்திலிருந்து அழிக்க வேண்டுமெனக் கருதுகின்றன. பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஆரம்பத்தில் அவ்வாறான கொள்கையினைக் கொண்டிருந்தது. ஆனால் முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே, ஒஸ்லோ உடன்படிக்கையில் இஸ்ரேலின் இருப்பினை யாசீர் அரபாத் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை அமைப்பு அங்கீகரித்து உடன்படிக்கைகளிற் கைச்சாத்திட்டிருந்தது. சமாதானத் தீர்விலும் நம்பிக்கையோடு செயற்பட்டது. ஆனால் ஆரம்பத்திலிருந்தே சமாதான முயற்சிகளுக்கும் பாலஸ்தீனத் தனி அரச உருவாக்கத்திற்கும் எதிராகத் தீவிரமாகச் செயற்பட்டுவந்தது இஸ்ரேல். அதன் மோசமான விளைவுகளே இன்றைய நிலையாகக் காணமுடிகின்றது. சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இரு தேசத் தீர்வு என்பது மூன்றரைத் தசாப்தங்களாக எதுவித நேர்மறை விளைவுகளையும் உருவாக்கவில்லை. அடிப்படையில் அதுவொரு தோற்றுப் போன உத்தி, மூலோபாயம், அணுகுமுறை.

## ஏன் நோர்வே அங்கீகரிக்கிறது?

2014-ல் சுவீடனும் அதற்கு முன்னர் ஐஸ்லாந்தும் பாலஸ்தீனத்தினை அங்கீகரித்திருந்தன. நோர்வே ஏன் இப்பொழுது அங்கீகரிக்கின்றது என்ற கேள்வி இயல்பாக எழக்கூடியது. முன்னர் அங்காரம் தொடர்பான கேள்விகள் எழுந்த போதெல்லாம் சரியான (பொருத்தமான) நேரத்திற்காகக் காத்திருப்பதாக நோர்வேத் தரப்பிற் தெரிவிக்கப்பட்டு வந்தது. காசா மீதான தற்போதைய நிலைமைகள் மீண்டும் நோர்வே அரசியல், ஊடக மட்டங்களில் பாலஸ்தீனத் தனியரசிற்கான அங்கீகாரம் தொடர்பான விவாதங்களை உருவாக்கியிருந்தன. சில மாதங்களுக்கு முன்னர் நோர்வே நாடாளுமன்றம் பெரும்பான்மை ஆதரவுடன் அங்கீகாரத்திற்கான தீர்மானத்தினை நிறைவேற்றியது. உரிய நேரத்தில் அதிகாரபூர்வ அறிவிப்பினை வெளியிடுமாறு அரசாங்கத்தினைக் கோரியிருந்தது. உரிய தருணம் இது என்பதற்கான அரசாங்கத்தின் வாதங்கள் பின்வருவனவாக அமைந்தன:

- காசாவில் ஏற்பட்டுள்ள பேரழிவுகரமான சூழ்நிலை, பிராந்தியத்தில் நிலவுகின்ற அமைதியின்மை.
- சர்வதேச அளவில் பாலஸ்தீனக் குரலை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் சார்ந்து ஐ.நா மட்டத்தில் அதிகரித்துள்ள கருத்துநிலை
- சுதந்திர பாலஸ்தீனத் தனியரசிற்கு ஐரோப்பாவிலும் ஆதரவு பெருகி வருகின்றமை.

- பிராந்தியத்தில் அமைதியை உருவாக்குவதற்கான அரபு நாடுகளின் தொலைநோக்குப் பார்வையை ஆதரிக்க வேண்டிய அவசியம்.

1990-களில் இணக்கம் காணப்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கை யினை அடுத்து, பேச்சுவார்த்தைகள் ஊடான சமாதானத் தீர்வு எட்டப்பட்ட பின்னரே பாலஸ்தீனத் தனி நாட்டுக்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தினையே நோர்வேயும் கொண்டிருந்தது. ஆனால் அந்த உத்தி விளை வுத்தாக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை, அது தோற்றுப்




போன அணுகுமுறை என்பதாக நோர்வேயின் தலைமை அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார். சமாதான முன்னெடுப்பு மற்றும் முரண்பாட்டுக்கான அரசியற் தீர்வு எட்டப்படாத சூழ லில், நிலைமைகள் தவறான திசையில் சென்றுள்ளன. இந் நிலை தொடருமானால் பாலஸ்தீனியர்களோ அல்லது இஸ்ரே லியர்களோ தத்தமது வாழ்வைப் பாதுகாப்புடன் வாழ முடி யாது. ஆகவே நாம் புதிதாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டி யுள்ளது எனத் தனியரசுக்கான அங்கீகாரத்தினை நியாயப்ப டுத்தியுள்ளார் நோர்வேயின் தலைமை அமைச்சர் யூனாஸ் கார் ஸ்தோர.

## கூட்டு நகர்வு:

நோர்வே, ஸ்பெயின், அயர்லாந்து ஆகிய நாடுகளினது ஒருங் கிணைக்கப்பட்ட நகர்வாக இது கருதப்படுகின்றது. பாலஸ்தீ னத்தைத் தாம் அங்கீகரிப்பதற்குப் பன்முகப்பட்ட காரணங் கள் உள்ளன எனவும் நீதி, சமாதனம், நிலைபெறுதன்மை ஆகிய மூன்று சொற்களுக்குள் அவற்றை உள்ளடக்க முடி யும் எனவும் ஸ்பெயின் பிரதமர் Pedro Sanchez தெரிவித்தி ருந்தார்.

பாலஸ்தீனத்திற்கு தனிநாட்டுக்கான சட்டபூர்வ உரிமை உள் ளது என்று கூறியுள்ளார் அயர்லாந்தின் பிரதமர், Simon Harris. 'இது இரு தேசத் தீர்வுக்கான தெளிவான ஆதரவின் பாற் பட்ட அங்கீகாரம் என்பதோடு இஸ்ரேல் - பாலஸ்தீனத்தின தும் அந்நாடுகளின் மக்களுக்கான அமைதி மற்றும் பாது காப்பிற்கான ஒரேயொரு நம்பகமான பாதை' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். குறுகிய காலத்தில் மேலும் பல நாடுகள் இம்முக்கியமான நடவடிக்கையை மேற்கொள்வதில் தம்மோடு இணையுமெனத் தான் நம்புவதாகவும் அவர் குறிப் பிட்டார்.

## இஸ்ரேல் மீது ஸ்பெயின் கடும் விமர்சனம்:

'பிரதமர் நெதன்யாகு இன்னும் கண்களை மூடிக்கொண்டு மருத்துவமனைகள், பள்ளிகள், வீடுகள் மீது குண்டு வீசுகி றார். ஒரு மில்லியனுக்கும் அதிகமான அப்பாவிச் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளைத் தண்டிக்க அவர் இன்னும் பசி, குளிர் மற்றும் அச்சுறுத்தல்களைக் கருவிகளாகப் பயன்படுத்துகி றார்' என்று ஸ்பெயின் பிரதமர் Pedro Sanchez விமர்சித்துள் ளார். காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலை விமர்சிக்கும் போது Sanchez மிகவும் வெளிப்படையாகவும் துணிச்சலாக வும் செயற்படுகின்றார். ஐரோப்பியத் தலைவர்களில் அவர் போல் கூர்மையாக இஸ்ரேலை விமர்சிப்பவர்கள் இல்லை எனலாம்.

## 1990–களின் பின்<br>யூதக்குடியேற்றமும் நிலப்பறிப்பும்:

சர்வதேச சமூகம் பாலஸ்தீன மக்களின் விடுதலை, சமாதா னத்தீர்வு குறித்து நம்பிக்கை கொடுக்கக்கூடிய எவ்வித நடவ டிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை. ஒஸ்லோ உடன்படிக்கைக்குப் பிற்பட்ட காலங்களில் யூதக்குடியேற்றங் கள் எண்ணிக்கை மற்றும் நிலப்பரப்புகளின் அளவு சார்ந்து இரட்டிப்பாக அதிகரித்துள்ளன (மேற்குக் கரைப் பிரதேசங்க ளில்). காசா மீது பல தடவைகள் (காலம்: 2008, 2009, 2012, 2014, 2022) பாரிய இராணுவ நடவடிக்கைகளை இஸ்ரேல் வலிந்தும் திட்டமிட்டும் மேற்கொண்டுள்ளது. மனிதப் பேரழிவு களின் உச்சமாக ஒக்ரோபர் 2023-ல் தொடங்கி இன்று வரை கடல், வான், தரை மார்க்கமாக இஸ்ரேல் கட்டவிழ்த்துவிட் டுள்ள போர் 9 மாதங்களாகத் தொடர்கின்றது. முன்னெடுக் கப்பட்ட பேச்சுவார்த்தைகள்-சமாதான முயற்சிகள் என்பன பாலஸ்தீன மக்களைப் பொறுத்தவரை ஒரு குருட்டுத்தடம். அவர்களது விடுதலை சார்ந்து துளி முன்னேற்றமும் அற்ற, பன்மடங்கு அழிவுகளையும் பின்னடைவுகளையுமே ஏற்படுத் தியுள்ளது.

## அங்கீகார நகர்வும்<br>சாத்தியப்படக்கூடிய விளைவுகளும்:

நோர்வே உட்பட்ட நாடுகளின் தற்போதைய அங்கீகார நகர்வு இனிவரும் பேச்சுவார்த்தைகளில் பாலஸ்தீனத் தரப்பின் பேரம்பேசும் வலுவை அதிகரிக்கக்கூடியது. ஹமாஸ் - பாஃதா அமைப்புகள் இடையே முரண்பாடுகளைக் கடந்து ஒருமைப் பாட்டினை ஏற்படுத்தவும் ஒரு தேசமாகச் சிந்திக்கவும் செயற் படவுமான உந்துதலையும் நிர்ப்பந்தத்தினையும்கூட வழங் கக்கூடியது. பாலஸ்தீனத் தரப்பிற்கும் அதற்கு அங்கீகாரம் வழங்கிய இந்நாடுகளுக்குமிடையில் ஓர் இராஜதந்திர உற வினை வலுப்படுத்தக்கூடியது. அதேவேளை பாலஸ்தீனத் தரப்பு மீது இந்நாடுகள் நிபந்தனைகள், அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் வழியேற்படுத்தக்கூடியது. குறிப்பாக முரண் பட்டும் பிளவுண்டுமுள்ள பாலஸ்தீனத் தரப்புகள் மத்தியில்

ஒருமைப்பாடு சார்ந்த அழுத்தங்களை இந்நாடுகள் பிரயோகிக்க முடியும்.

அங்கீகாரத்தின் பிற விளைவுகள் என நோக்குமிடத்து, பாலஸ்தீனத்திற்கான சர்வதேச ஆதரவை அதிகரிக்கவும், இதன் உந்துதலாக ஏனைய நாடுகளும் அங்கீகரிக்க முன்வரக்கூடும். இந்த அங்கீகாரம் இன்னொரு வகையில் காசா மீதான போரை நிறுத்தவும், பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவுமான அழுத்தம் கொடுக்கும் நோக்கத்தினைக் கொண்டது. ஆனால் இஸ்ரேல் அரசு இத்தகு அழுத்தங்களுக்குச் செவிமடுக்குமா என்பது கேள்விக்குரியது. அங்கீகரித்த நாடுகளில் ஸ்பெயினும் அயர்லாந்தும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள். ஐரோப்பிய ஒன்றியத்தில் பாலஸ்தீன விவகாரத்தை நிகழ்ச்சி நிரலில் கொண்டுவருவதற்கும் அது உதவக்கூடியது.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனத் தனியரசுக்கான அங்கீகாரம் என்பது இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டும் - யூதக் குடியேற்றங்களால் பறிக்கப்பட்டதும் - வலிந்து இணைக்கப்பட்டதுமான நிலப்பரப்புகள் தவிர்ந்த எஞ்சிய பாலஸ்தீனப் பிரதேசங்களைக் குறிப்பன அல்ல. 1967-ற்கு முன்னரான (ஆறு நாள் போருக்கும் அதில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்கும் முந்தைய பிரதேசங்கள்) எல்லைகளை வரையறையாகக் கொண்ட பாலஸ்தீனத்தையே நோர்வே, ஸ்பெயின், அயர்லாந்து ஆகியன அங்கீகரித்துள்ளன என்பது முக்கியமானது.

### நோர்வேயின் நிலைப்பாட்டில் மாற்றம்:

நோர்வேயின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள இன்றைய மாற்றமும் செயலும் குறியீடு, அழுத்தக்கருவி என்பதைத் தாண்டிய சரியானதும் அவசியமானதுமான நகர்வு அல்லது படிக்கல் என்ற கருத்து நோர்வே அரசியல் மட்டத்தில் நிலவுகின்றது. 1990-களில் இஸ்ரேல் - பாலஸ்தீனத்திற்கிடையிலான பேச்சுவார்த்தைகள் தான் நோர்வேயின் சமாதான அனுசரணை முன்னெடுப்புகளின் ஆரம்பப் புள்ளியும் அடையாளமுமாகும். அந்த முயற்சியின் படுதோல்விக்கும் - மனிதப் பேரழிவை எதிர்கொண்டுள்ள பாலஸ்தீன மக்களின் இன்றைய நிலைக்குமான பொறுப்பு நோர்வேக்கும் உள்ளது. அதனை நிவர்த்தி செய்யவும் பரிகாரநீதியை நிலைநாட்டும் முதற்படியாகவும் நோர்வேயின் தற்போதைய அணுகுமுறையினைக் கருத முடியும். அதாவது தவறைத் திருத்திக் கணக்கினைச் சரிசெய்யும் முயற்சி சார்ந்த அணுகுமுறையாகவும் அதனைச் சித்தரிக்க முடியும்.

2011-ல் ஐ.நா.வில் அவதானிப்பாளர் அந்தஸ்தினைப் பாலஸ்தீனம் பெற்றபோது, நோர்வே அதற்கு ஆதரவாக வாக்களித்தது. அதிலிருந்து பாலஸ்தீனத்திற்கான முழு அங்கீகாரத்திற்கான பாதைநோக்கி நோர்வே அரசு ஏலவே பல நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தொடங்கியிருந்தது. பாலஸ்தீனப் பிரதிநிதித்துவத்திற்கான தூதரகம் நோர்வேயில் நிறுவப்பட்டதோடு, பிரதேசத்தை விளிக்கவும் விபரிக்கவும் 'பாலஸ்தீனம்' என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இஸ்ரேலியப் பிரதமர் உட்பட்ட அதன் தலைவர்கள் மீது போர்க்குற்றங்களுக்கான கைது ஆணை பிறப்பிக்கக் கோரி அதன் தலைமை வழக்கறிஞர் காரிம் கான் விண்ணப்பித்த இரண்டாவது நாள் பாலஸ்தீனத் தனியரசை அங்கீகரிக்கும் தமது தீர்மானத்தினை இந்நாடுகள் வெளியிட்டன. இது பாலஸ்தீன மக்களைப் பொறுத்த மட்டில் ஒரு வரலாற்று நிகழ்வு. அவர்களுடைய நிலவுரிமையை அங்கீகரிக்கின்ற நகர்வு. அவர்களுக்கெதிரான ஒரு பாரிய இன அழிப்பு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற சமவே



ளையில் வெளிவந்துள்ள இந்த அறிவிப்புகள் (போர்க்குற்றவாளிகள் மீதான கைது விண்ணப்பம், தனியரசாக அங்கீகாரம்) முக்கியத்துவம் பெறுகின்றன.

### இஸ்ரேலின் உண்மை முகம் உணரத் தலைப்பட்டுள்ள மேற்கு:

இஸ்ரேலின் உண்மையான நோக்கம் ஹமாஸ் இயக்கத்தைப் பூண்டோடு அழிப்பது என்பதைத் தாண்டி, பாலஸ்தீன மக்களை இன அழிப்பிற்குள்ளாக்குவது என்பதை மேற்குலக நாடுகள் உணரவும் வெளிப்படுத்தவும் தலைப்பட்டுள்ளன. நோர்வே உட்பட்ட இம் மூன்று நாடுகளின் தீர்மானம் சவுதி அரேபியா தலைமையில் அரபு நாடுகள் முன்னெடுக்கின்ற சமாதானத் திட்டத்தினை வலுப்படுத்தும் நோக்கம் கொண்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

தன் மீதான விமர்சனங்களை யூத எதிர்ப்புவாதமாக (Anti-Semitism) இஸ்ரேல் மடைதிருப்பி வருவதொன்றும் புதியதல்ல. இப்பொழுதும் அதனையே அது செய்கின்றது. பாலஸ்தீனத் தனியரசு தொடர்பான எந்தவொரு விடயத்தினையும் கொள்கை ரீதியாக அல்லது மதநிலைப்பட்டு இஸ்ரேல் எதிர்த்து வந்திருக்கின்றது. அதன் அரச கொள்கையில் ஒரு

வகையான மதவாதமே கோலோச்சுகின்றது. இத்தகைய அழுத்தங்களுக்கு மத்தியிலும் காசா மீதான போரை மிக உக்கிரமாக நடத்தி வருகின்றது இஸ்ரேல். ஐ.நா உயர் நீதி மன்றம் காசாவின் வடபகுதி நகரமான ராஃபாவில் இஸ்ரேல் முன்னெடுத்துவரும் மோசமான தாக்குதல்களை நிறுத்துமாறு கோரியிருந்தது. உலகின் உச்ச நீதிமன்றமொன்றின் கோரிக்கைக்கே செவிமடுக்கவில்லை இஸ்ரேல். எரிந்த கூடார எச்சங்களிலிருந்து குழந்தைகளைப் பாலஸ்தீனர்கள் இழுத்தெடுக்கும் பேரழிவுக் காட்சிகளின் ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்டன.

## கடும்போக்கும் பொறுப்பற்ற நிலையும்:

நோர்வேயின் இடதுசாரி நாளிதழான கிளஸ்சகம்பன் (Klassekampen) 23.05.24 வரலாற்று முக்கியத்துவம் மிக்க மாற்றம் என்ற தலைப்பில் எழுதிய ஆசிரியர் தலையங்கத்திற் குறிப்பிடப்பட்ட விடயத்தை இங்கு பகிர்வது பொருத்தமாகும்:

பாலஸ்தீனம் தொடர்பான நோர்வே அரசியல் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றமானது, இஸ்ரேலிய அரசியலில் எழுச்சி பெற்றுள்ள தீவிர வலதுசாரிப் போக்கினால் தூண்டப்பட்டதாகும். இன்றைய இஸ்ரேலிய அரசாங்கத்திற்கு பாலஸ்தீனியர்களின் உயிர்கள், சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச உறவுகள் மீது எவ்வித மதிப்பும் இல்லை. இஸ்ரேலிய அரசாங்கம் தொடர்ந்து தீவிர வன்முறையைத் தூண்டிவிட்டு, அமைதியின்மை மற்றும் மோதலை உண்டுபண்ணும் நோக்குடன் சர்ச்சைக்குரிய பகுதிகளைத் திட்டமிட்டு அணுகுகின்றனர். உதாரணமாக, 22.05.24 அன்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் Itamar Ben-Gvir ஜெருசலேமில் உள்ள அல்-அக்ஸா மசூதிக்கு விஜயம் செய்தார். பாலஸ்தீனத்தை அங்கீகரித்ததற்கான பதிலடி இந்த விஜயம் என்று அவராகவே கூறினார். பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் ஒவ்வொரு புதிய நாட்டிற்கும் பதிலடியாக மேற்குக் கரையில் ஒரு புதிய யூதக் குடியேற்றத்தைத் தாம் உருவாக்கப் போவதாக நிதி அமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச் தெரிவித்துள்ளார். இவை கடும்போக்கும் பொறுப்பற்ற நிலையினையும் வெளிப்படுத்தும் கூற்றுகளுமாகும் என அதிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்தை ஒன்றோ அல்லது பல நாடுகளோ அங்கீகரிப்பதால் நேரடியான பாரிய மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. ஆனால் பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் வழங்குவதற்கான சர்வதேச சமூகத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும், பேச்சுவார்த்தை அல்லது வேறெந்த நிறுவனமயப்பட்ட உலக நாடுகளின் கட்டமைப்புகளிலும் அதன் இராஜதந்திரிகளுக்கு கூடுதல் அதிகாரத்தையும் செல்வாக்கினையும் அளிக்க வழிகோலுகிறது. பாலஸ்தீனம் ஒரு சுதந்திர நாடாக இருதரப்பு ஒப்பந்தங்களில் நுழைவதற்கும் இத்தகைய அங்கீகாரம் பங்களிக்கக்கூடியது. 2012-ம் ஆண்டு முதல் ஐ.நா பொதுச்சபையில் உறுப்பினர் அல்லாத அவதானிப்பு நாடாக பாலஸ்தீனம் அங்கீகாரம் பெற்றுள்ளது. அந்த அங்கீகாரம் அதன் பிரதிநிதிகள் அவையில் உரையாற்ற அனுமதிக்கிறது. 2015-ம் ஆண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தன் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டது. அதன் மூலம் பாலஸ்தீனப் பிரதேசங்களில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை ஏற்கவும் உடன்பட்டது.

## இன அழிப்பிற்கும் நிலப்பறிப்பிற்கும் அங்கீகாரம் வழங்குகின்ற போக்கு:

முப்பது ஆண்டுகளுக்கு மேலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் பாலஸ்தீன மக்களின் விடுதலையை அங்குலம் கூட முன்னகர்த்தவில்லை. பாரிய பின்னடைவுகளுக்கே வழிகோலியுள்ளன. பின்னடைவுகள் எனும் போது அவை அரசியல் அர்த்தத்திலான பின்னடைவுகள் மட்டுமல்ல. பாரிய அளவிலான நில இழப்பு, பல்லாயிரக்கணக்கான உயிரிழப்பு, உரிமையிழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதும் கிடப்பில் போடப்படுவதுமாக மாறிமாறி நிகழ்ந்துள்ளன. இஸ்ரேலின் அரச பயங்கரவாத மற்றும் இன அழிப்பு நடவடிக்கைகள் பன்மடங்காகியுள்ளன. அவற்றின் உச்சமாக காசா மீதான போர் கடந்த 9 மாதங்களாகத் தொடர்கின்றது. எனவே பேச்சுவார்த்தைகளின் மூலமாகவே பாலஸ்தீனத் தனியரசு அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பது வெற்றுக்கூற்று, அல்லது இஸ்ரேலின் இன அழிப்பிற்கும் நிலப்பறிப்பிற்கும் அங்கீகாரம் வழங்குகின்ற போக்கு.

சமாதான முன்னெடுப்புகள் தொடங்கப்பட்டதிலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இஸ்ரேலின் நிகழ்ச்சித் திட்டத்திற்கும் நிபந்தனைகளுக்கும் இசைவாகவே நகர்வுகள் இடம் பெற்றுள்ளன. பாலஸ்தீனத் தரப்பில் உள்ளக வன்முறைகள் உட்பட்ட முரண்பாடுகளும் பிளவுகளும் ஏற்படுத்தப்பட்டன. பாலஸ்தீன நிலங்கள் அபகரிப்பு விரிவாக்கமும் - யூதக்குடியேற்றமும் முன்னெடுக்கப்பட்டன. காசா மீது பல தடவைகள் பெருமெடுப்பிலான போர் நடவடிக்கைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன - தற்போது இன அழிப்பு என்ற மோசமான நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் உலகப் பெரும்பான்மையும் பாலஸ்தீன மக்கள் இன அழிப்பிற்கு உள்ளாக்கப்படுவதை ஏற்றுக்கொண்டுள்ளன. பாலஸ்தீனத் தனியரசுக்கான எல்லாவித அடிப்படைகளையும் இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை பலமுனைகளில் இஸ்ரேல் கட்டவிழ்த்து விட்டுவந்துள்ளது.

இஸ்ரேலின் நடவடிக்கைகள் பாலஸ்தீன நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பு (Occupation) என்பதைத் தாண்டி வலிந்த இணைப்பு (Annexation) வகைமையைச் சேர்ந்தவை. இது உலக நாடுகள் ஆதரிக்கின்ற இரு தேசத் தீர்விற்கான புறச்சூழலையே இல்லாமற் செய்யும் இலக்கினைக் கொண்டுள்ளது. பாலஸ்தீனம் என்றொரு நிலப்பரப்பினைக் கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமற் செய்துவிட்டால் (இஸ்ரேல் தனதாக்கிக் கொண்டால்) இன்னொரு நாட்டுக்கான வாய்ப்பை இல்லாமலாக்குவதென்ற இஸ்ரேலின் இலக்குச் சாத்தியமாகும். எனவே இரு தேசத் தீர்வுக்கு அடிப்படையாகப் பாலஸ்தீன நிலங்களை இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, பறிப்பு, வலிந்த இணைப்பு, யூதக் குடியேற்றங்கள் ஆகிய பலமுனை அபகரிப்புகளிலிருந்து பாதுகாப்பது அவசியமானது.



rooban.s@thaiveedu.com




# பெற்றோ டொலர்

– ரதன்

பிறிக்ஸ் அமைப்பு ஒக்ரோபர் மாதம் அமெரிக்க டொலருக்கு மாற்றீடாக ஒரு புதிய நாணயத்தைச் சர்வதேச வணிக அடிப்படை நாணயமாக அறிவிக்கவுள்ளது. புதிய நாணய வருகை, சர்வதேச அளவில் இதுவரை காலமும் ஆட்சி நாணயமாகவிருந்த அமெரிக்கா டொலரின் வீழ்ச்சியின் ஆரம்பமா ?

1857 வரை ஸ்பானிஸ் டொலரும், மெக்சிக்கன் பெசோவுமே அமெரிக்க நாணயங்களாகவிருந்தது. 1861-ல் முதலாவது அமெரிக்க டொலர் அச்சடிக்கப்பட்டது. 1970 முதல் அமெரிக்க நாணய மதிப்பீட்டை மையமாகக் கொண்டே சர்வதேச நாணயங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டது. 1974-ஆம் ஆண்டு யூன் 8-ம் நாள் அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் ஓர் ஒப்பந்தத்தில் கைசாத்திட்டார்கள். இதனைப் ‘பெற்றோ டொலர் ஒப்பந்தம்’ எனவும் அழைப்பார்கள். உலகப் பெற்றோல் உற்பத்தியின் தலைமை நாடாகவிருந்த சவூதி அரேபியா, ஒபெக்கின் முக்கியமான அங்கத்துவ நாடு. அமெரிக்க டொலரின் பெறுமதியும், செல்வாக்கும், பலமும் இந்த ஒப்பந்தத்தினால் அதிகரித்தது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் உலகின் எண்ணெய் விலையின் மதிப்பீடு அமெரிக்க டொலர்களிலேயே தீர்மானிக்கப்படும். சவூதியின் ஒப்பந்தத்தை ஏனைய எண்ணெய் உற்பத்தி நாடுகளும் பின்பற்றின. இந்த ஒப்பந்தத்தில் சவூதி அரேபியா கையொப்பமிட்டமைக்காக, சவூதியின் பாதுகாப்பை அமெரிக்கா உறுதிப்படுத்தியது. சவூதி அரேபியாவின் எதிரி நாடான ஈரானிடமிருந்து சவூதி அரேபியாவைப் பாதுகாப்பதற்கு இராணுவ மற்றும் ஆயுத உதவிகளை அமெரிக்கா செய்துவருகின்றது. இது சவூதி அரேபியாவை ஈரானிடமிருந்து மட்டுமல்ல ஏனைய நாடுகளிடமிருந்தும் பாதுகாத்து வருகின்றது. அது மட்டுமல்ல, சவூதி அரேபியாவில் தொடர்ச்சியாக மன்னராட்சி இருப்பதற்கும் அமெரிக்கா உதவி செய்கின்றது. அங்கு நடைபெறும் மனிதவுரிமை மீறல்களைப் பார்த்தும் மௌனிக்கின்றது.

சவூதி அரேபியா பெற்றோல் விற்பனையால் பெறப்பட்ட செல்வத்தை அமெரிக்காவில் முதலீடு செய்தது. அது மட்டுமல்ல அமெரிக்க Treasury Securities-இல் முதலீடு செய்தது. ஈரான் தவிர்ந்த ஏனைய மத்திய கிழக்கு எண்ணெய் உற்பத்தி நாடுகளும் சவூதியைப் பின்பற்றின.

இந்தப் பெற்றோல் டொலர் ஒப்பந்தம் யூன் 9, 2024-ல் முடிவுக்கு வந்தது. இதனை இதுவரை சவூதி அரேபியா மீளப் புதுப்பிக்கவில்லை. சுற்றுச் சூழல் பாதுகாப்பை முன்னிட்டு எழுந்த புதிய முயற்சிகள், பற்றரி வாகனங்களை அறிமுகப்படுத்தியது. மேற்கு நாடுகள் பல இன்னமும் 15 ஆண்டுகளின் பின்னர் முற்று முழுதாகப் பற்றரியில் இயங்கும் வாகனங்களே தயாரிக்கப்படவேண்டும் என அறிவித்துள்ளன. இந்த நிலையில் சவூதியும் தனது தேசிய உற்பத்திக்குப் பல புதிய திட்டங்களைத் தயார்படுத்துகின்றது. அதே சமயம் புதிதாக உருவாக்கப்பட்ட ‘பிறிக்ஸ்’ அமைப்பின் வளர்ச்சியும், சர்வதேச அரங்கில் அதன் பலத்தையும் ஆதரவையும் சவூதி கணக்கிலெடுத்துள்ளது. சவூதி தனது எண்ணெய்யைப் பல்வேறு நாணயங்களிலும் விற்பனை செய்ய முன்வந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தியது. அமெரிக்கா மற்றும் நேட்டோவின் அழுத்தமும் இதற்குக் காரணம். ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதாரத் தடையை நாங்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்துகின்றோம் என ஐரோப்பிய நாடுகள் பெருமை பேசின. ரஷ்யாவிற்கு மாற்றீடாக இந்தியாவிடமிருந்து எண்ணெய்யைப் பெறுகின்றன. ஐரோப்பிய நாடுகளுக்கு வெறும் ஒரு வீதம் எண்ணெய்யை விற்றுக்கொண்டிருந்த இந்தியா தற்சமயம் 44 வீத எண்ணெய்யை விற்கின்றது. இந்தியா எங்கிருந்து எண்ணெய்யைப் பெறுகின்றது ? வேறு எங்குமல்ல ரஷ்யாவிடமிருந்து

பெறுகின்றது. ரஷ்யா மீதான ஐரோப்பாவின் பொருளாதாரத் தடை இவ்வாறுதான் உள்ளது.

இதனால்தான் சவூதி அரேபியா திட்டமிட்ட முறையில் தனது எண்ணெய் வணிக முறையை மாற்றீடு செய்துள்ளது. அத்துடன் தனது எதிரியான ஈரானுடன் சுமுகமான முறையில் செயற்படவும் விரும்புகின்றது. அதற்கான முயற்சிகளிலும் இறங்கியுள்ளது. இவையனைத்தும் அமெரிக்காவிற்குப் பாதகமானவை.

ஒரு நாட்டின் டொலரை மையப்படுத்திச் சர்வதேச வணிகம் நடைபெறும் பொழுது அந்த நாணயத்தை மேற்பார்வை செய்பவர்கள் அல்லது அந்த நாணயம் எந்த நாட்டிற்குரியதோ அந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்குச் சில கடமைகள் கட்டுப்பாடுகள் உண்டு. ஏனெனில் சர்வதேச நாடுகள் அந்த நாணயத்தை இருப்பில் வைத்திருக்க வேண்டிய அவசியம் உள்ளது. சர்வதேச நாடுகள் தங்களது இறக்குமதிகளுக்கான பணத்தை அந்த நாணயம் மூலமே செலுத்துவார்கள். இன்றுவரை சர்வதேச நாணயமாக அமெரிக்க டொலர் உள்ளது. இன்றுள்ள கேள்வி, சர்வதேச நாணயமாக இருப்பதற்கான தகுதிகள் இன்று அமெரிக்க டொலருக்கு உள்ளதா?

அமெரிக்க டொலரின் பெறுமதியானது பின்வரும் முக்கிய விடயங்களில் தங்கியுள்ளது. அமெரிக்காவின் பற்றாக்குறை (Deficit). இது பலபடிகளில் உள்ளது.

முதலாவது, பொதுவாகப் பலரும் கருதுவது ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்குமான இடைவெளி. உதாரணத்துக்கு ஏற்றுமதி 10 டொலராகவும், இறக்குமதி 20 டொலராகவும் இருந்தால் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமான இடைவெளி 10 டொலர்கள்.

மற்றையது, அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திலுள்ள பற்றாக்குறை. இது அரசு பெறும் வரி மற்றும் உதிரி வருமானத்தை விட, அரசு அதிகளவு செலவு செய்வதாகும். சில சமயங்களில் பொருளாதாரத் தேக்க நிலையில் இருக்கும் பொழுது அரசு இவ்வாறு திட்டமிட்டுச் செலவை அதிகரிக்கும் பொழுது, நாடு பொருளாதாரத் தேக்க நிலையிலிருந்து மீளும். இங்கு செலவு என்பது வணிக நிறுவனங்களுக்கான சலுகைகள். மற்றும் தனி நபர், சுய தொழில் செய்பவர்களுக்கான வரி உட்பட்ட சலுகைகளாகும். இவற்றை விட வேறு பல பற்றாக்குறைகளும் உண்டு. Fiscal deficits, Structural deficits, Twin deficits, Cyclical deficits போன்றன சில. Congressional Budget Office (CBO)-இன் படி தற்போதைய அமெரிக்கப் பற்றாக்குறையானது 1.5 ரில்லியனாகும்.

Current Account பற்றாக்குறை. இது மிகவும் முக்கியமானது. தற்போதைய பற்றாக்குறை ஏற்றமதி, இறக்குமதிக்குமான இடைவெளி, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகள், வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறப்படும் வருமானம், வெளிநாட்டு உதவிகளுக்குக் கொடுக்கப்படும் பணம், இவையே இந்த குறிப்பிட்ட பற்றாக் குறையைத் தீர்மானிக்கின்றன. தற்போதைய U.S. current-account deficit $237.6 billion in the first quarter of 2024 ஆகும். நேட்டோ நாடுகள் தங்களது பங்கு நிதியை நேட்டோவுக்கு வழங்கவேண்டும் என டொனால்ட் ரம்ப் காது கிழியக் கத்துவது இந்தப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காகும். நேட்டோ அமைப்பிற்கான செலவில் அதிக பங்கை அமெரிக்காவே செலவழிக்கின்றது என்பது ரம்பின் கருத்து.

அமெரிக்காவின் பற்றாக்குறை என்பது டொலரின் பெறுமதியைத் தீர்மானிக்கும் ஓர் அம்சமாகும். அதே சமயம் அமெரிக்காவின் ஏற்றுமதிப் பொருட்களை வாங்குவதற்கு வெளிநாடுக



ளுக்கு அமெரிக்க டொலர்கள் தேவை. தங்களது சொந்த நாணயங்களை அமெரிக்க டொலருக்கு மாற்றீடு செய்தே வாங்கவேண்டும். எனவே அமெரிக்க டொலருக்கான தேவை அதிகரிக்கின்றது. அமெரிக்கா தனது bond-களை விற்பனை செய்யும் போது, இதனை வாங்குவதற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றது. இதுவும் அமெரிக்க டொலர்களின் தேவையை அதிகரிக்கின்றது.

Sentiment - உணர்வு நிலை. சந்தை கொதிநிலையில் இருக்கும் பொழுது, When foreign investors buy back their local currency due to market turbulence, it dampens the dollar. Increasing unemployment may weaken the U.S. economy, and consumption may slow.

அமெரிக்கப் பொருளாதாரத்தின் நிலைபற்றிப் பல சந்தைக் குறியீடுகள் (Market Indicators) சுட்டிக்காட்டுகின்றன. payroll data, GDP data போன்றன சில. 2001-ல் ஆர்ஜன்ரீனா



வில், 2010-ல் கிரீசில் ஏற்பட்ட நிலையை நோக்கி அமெரிக்கா நகர்ந்து கொண்டிருந்தாலும், செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள மாயை நிலை அமெரிக்காவைக் காப்பாற்றிவிடும்.

இவற்றைவிட அமெரிக்காவின் உள்நாட்டுப் பணவீக்கம் என்பது அமெரிக்க வட்டி வீதத்தை அதிகரிக்கச் செய்யும். அமெரிக்க வரிவீத அதிகரிப்பு அமெரிக்க டொலரின் மதீப்பீட்டை அதிகரிக்கும். அண்மையில் கனடா .25 வீதத்தால் குறைத்த போது கனடிய டொலரின் பெறுமதி சில சதங்களால் அமெரிக்க டொலரை விடக் குறைந்திருந்தது. இது உடனடி விளைவாகும்.

இன்றைய நிலையில் அமெரிக்காவின் பொருளாதாரம் என்பது அதிகளவு கடனில் உள்ளது. பல சமயங்களில் அமெரிக்கா தனது நாட்டின் பணவீக்க அதிகரிப்பைக் குறைப்பதற்குத் தீவிரமாக முயற்சிப்பதில்லை. அதிக வட்டிவீதம் அமெரிக்க நிதிச் சந்தைக்குச் சார்பானது. வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்க உதவும்.

உலகமயமாதலின் தொடர்ச்சியாகத் தோன்றிய நவதாரளமயமாதல் அமெரிக்காவின் பொருளாதாரத்தைப் பாதித்தது. இன்று வரை அமெரிக்கா ஒரு செயற்கையான நிதித் திட்டங்களையே செயற்படுத்திவருகின்றது. பல மிகப்பெரிய நிறுவனங்கள் உற்பத்தியை மிகக் குறைந்த தொழிலாளர் ஊதியமுள்ள நாடுகளுக்கு மாற்றிவிட்டது. பல பெரிய நிறுவனங்கள் வரி குறைந்த நாடுகளுக்குத் தங்களது தலைமையகத்தை மாற்றியதாகக் குறிப்பிடுகின்றன. இதனால் வரி கட்டுவதைத் தவிர்க்கின்றார்கள் அல்லது குறைந்த வரியைச் செலுத்துகின்றார்கள். ரீகன் போன்ற குடியரசு ஜனாதிபதிகள் வரிகளையே குறைத்துள்ளார்கள். குறைப்பதற்கான அவர்களது நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. மறுபுறம் Panama Papers, Pandora Papers, Paradise Papers ஆகியவை முதலாளித்துவ சாம்ராஜ்யத்தின் ஊழல்களை வெளிப்படுத்துகின்றன.

அமெரிக்காவின் ஒரு சர்வதேச வணிக நாணயத்தால் பல நாடுகள் நேரடியாகவே பாதிக்கப்பட்டுள்ளன. உதாரணத்துக்கு அண்மைக் காலங்களில் யப்பானின் யென்னின் பெறுமதி மிகவும் குறைந்துள்ளது. யென்-இன் பெறுமதியை அமெரிக்க டொலர்களே தீர்மானிக்கின்றது. அமெரிக்காவின் வட்டி வீதம் அதிகரிக்க அதனது டொலரின் பெறுமதி அதிகரிக்கும். அமெரிக்காவின் வட்டிவீதம் 5.25 - 5.5 ஆகும். யப்பானின் வட்டிவீதம் 0.00 - 0.1 ஆகும். யப்பானின் பணவீக்கம் 2.8 ஆகும். கடந்த பல வருடங்களாக யப்பானின் பணவீக்கம் ஒரு வீதத்துக்கும் குறைவாக இருந்துள்ளது. பணவீக்கம் குறைவாக இருக்கும் பொழுது வட்டிவீதத்தை அதிகரிக்க முடியாது. இதனால் யென்னின் பெறுமதியும் குறைகின்றது. யென்னின் ஒப்பீட்டு நாணயமான அமெரிக்க டொலர், அமெரிக்க வட்டிவீத அதிகரிப்பால் அதிகரித்துச் செல்கின்றது. இதுவும் யென்னின் பெறுமதியைப் பாதிக்கின்றது. பல முதலீட்டாளர்கள் யென்னை வெறுக்கின்றார்கள். யப்பானின் யென்னின் பெறுமதி குறையும் பொழுது முதலீட்டாளர்கள் யென்னை விற்பனை செய்கின்றார்கள். பல முதலீட்டாளர்கள் யப்பானில் முதலீடு செய்யத் தயங்குகின்றார்கள்.

யப்பான் ஒரு உதாரணம். அமெரிக்கா தனது டொலரின் கேள்வியை அதிகரிக்க செயற்கையாக வட்டிவீத அதிகரிப்பு போன்றவற்றைச் செய்து வருகின்றது. அமெரிக்க நவதாராளவாத முதலாளித்துவச் சமூகம் சீனாவின் வளர்ச்சிக்கு உதவி புரிந்து வருகின்றது. மிகப்பெரிய சனத்தொகையுடன் என்ன செய்வது என்று கையைப் பிசைந்து கொண்டிருந்த சீனாவிற்கு ஹென்றி கீசிங்கர் விஜயம் செய்தார். சீனாவின் கவலை தீர்ந்தது. அமெரிக்க நிறுவனங்கள் சீனாவிற்கு நகர்ந்தன. இன்று சீனாவைத் தவிர்த்தால் அமெரிக்கச் சில்லறை விற்பனை நிலையங்கள் தொடக்கம் தொழிற்சாலைகள் வரை மூடவேண்டிவரும்.




பங்குச் சந்தை பரிமாற்றச் சந்தைகளாகவிருந்த லண்டன், நியூ யோர்க், டோக்கியோ சந்தைகளை மீறி ஹொங்கொங். டுபாய் போன்ற நகரங்களும் பங்குச் சந்தை பரிமாற்ற முக்கிய சந்தைகளாக மாறின. இங்கு முதலீட்டுக்கான பணம் பரிமாறப்படும். இங்கிலாந்திலிருந்து சீனா ஹொங்கொங்கை மீளப் பெறும்பொழுது, ஹொங்கொங் ஆசியாவில் மிகப்பெரிய பங்குகள் பரிமாற்றச் சந்தையாகத் திகழ்ந்தது. இங்கு புரளும் பணம், சீனாவின் முதலீட்டுக்கான மற்றொரு படியாக அமைந்தது. திட்டமிட்ட முறையில் 'பட்டுப் பாதை' அமைப்பு எனச் சீனா தனது வணிக எல்லையைக் கூட்டிச் செல்கின்றது. கடல் வழியாக மட்டுமல்லாமல் தரைவழிப் பாதையையும் அமைக்கின்றது. பாகிஸ்தானுக்கான தரைவழிப் பாதை ஒரு சிறந்த உதாரணமாகும். தென்சீனக் கடலில் புதிய செயற்கைத் தீவுகளை உருவாக்கித் தனது கடல் எல்லையை அதிகரிக்கின்றது. தென்சீனக் கடலிலிருந்த அமெரிக்காவின் கட்டுப்பாட்டை முழுமையாக நீக்க முயற்சிக்கின்றது.

பிறிக்ஸ் என்ற அமைப்பின் உருவாக்கத்தில் முக்கிய பங்காளியான சீனா, சர்வதேச நாணய நிதியத்தால் ஒதுக்கப்பட்ட நாடுகளுக்கு உதவி செய்கின்றது. இதன் மூலம் இந்த நாடுகளின் பொருளாதாரத்தில் தனது பங்கையும் அதிகரிக்கின்றது.

காசாவில் இஸ்ரேலின் செயற்பாடுகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிவரும் அமெரிக்காவின் செயற்பாடுகளால், அமெரிக்காவிற்கெதிரான கருத்து நிலை ஒன்று சர்வதேசத்தில் உருவாகியுள்ளது. உக்கிரைன் போரும் அமெரிக்காவிற்குச் சர்வதேச நாடுகள் மத்தியில் ஒரு வெறுப்பு நிலையைத் தோற்றுவித்துள்ளன.

அமெரிக்காவிற்கு எதிராகச் சர்வதேசத்தில் உருவாகி வரும் புதிய அலையில் மிதக்கின்றது பிறிக்ஸ் அமைப்பு. இந்தியா ரஷ்யாவிடமிருந்து வாங்கும் எண்ணெய்க்கு ரூபாயில் பணத்தைச் செலுத்துகின்றது. ரஷ்யாவைப் பொறுத்தவரை இந்தியாவிலிருந்து வாங்கும் பொருட்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. எனவே மிகுதி ரூபாயை வைத்து என்ன செய்வது? ரூபாய் சர்வதேச வணிகத்தில் முக்கிய நாணயமாக இல்லாத பட்சத்தில் ரஷ்யா ரூபாய்க்கு மாற்றீடான நாணயத்தை இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கும். பிற்காலங்களில் தனது களஞ்சியத்தில் குளிர் காயும் ரூபாயால் தனக்குப் பலனில்லை.

வேறு பல நாடுகளிடமிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கான பணத்தைச் செலுத்த சர்வதேசம் அங்கீகரிக்கும் நாணயம் அவசியம். இதனைக் கருத்திற்கொண்டு பிறிக்ஸ் அமைப்பு டொலருக்கு மாற்றீடான ஒரு நாணயத்தை நோக்கி நகர்கின்றது. ஐரோப்பிய ஒன்றியம் உருவானபோது யுரோ என்ற புதிய நாணயம் உருவாகியது. அதே போல் ஒரு நாணயத்தை பிறிக்ஸ் அமைப்பால் உருவாக்க முடியுமா? அவ்வாறு உருவாக்கப்படும் நாணயத்தால் பிறிக்ஸ் அமைப்பிலுள்ள ஏழை நாடுகளுக்கு லாபம் உள்ளதா? சீனாவிற்கும், இந்தியாவிற்குமிடையில் இல்லாத பிரச்சினைகள் இல்லை. எல்லைப் பிரச்சினை, வர்த்தகப் பிரச்சினை போன்ற பல உள்ளன. சீனாவின் நாணயமான Yuan அமைவதற்கான சாத்தியங்கள் குறைவு. அதே போன்றே ரூபாயும் உள்ளது.

Instrument in Support of Trade Exchanges (INSTEX) என்ற ஒரு பணப் பரிமாற்றத் திட்டம் 2020-ல் ஆரம்பிக்கப்பட்டது. இது ஈரானுக்கெதிரான அமெரிக்காவின் தடையால் SWIFT-ஐத் தவிர்க்கவே உருவானது. ஆனாலும் இது 2023-ல் மூடப்பட்டது. இது போன்ற அமைப்புகள் உருவாகிப் பின்னர் மறைந்து போகின்றன.

பிறிக்ஸ் அமைப்பின் எதிர்காலம் நம்பிக்கையூட்டுவதாக அமைந்தாலும், இங்கும் அதிக லாபம் பெறும் நாடாகச் சீனாவே உள்ளது. எனவே இவ்வமைப்பு பல காலத்துக்கு

நீடிக்குமா என்பது கேள்விக்குறி. சர்வதேசம் அமெரிக்காவிற்கு மாற்றீடாகச் சீனாவையும் ரஷ்யாவையும் கருதினாலும், சர்வதேச நாணயமாக ஓர் ஒற்றை நாணயத்தை அமைப்பதற்குக் கொள்கையடிப்படையில் உடன்பட்டாலும் நடைமுறையில் சாத்தியப்படாது. பிறிக்ஸ் நாடுகளுக்கிடையிலான எதிர்கால உறவு, வணிகப் போட்டிகள் போன்றவை பிறிக்சை உடையாமல் காப்பாற்றுமா ?

அமெரிக்காவைப் போன்றே ரஷ்யாவும் சீனாவும் செயற்படுகின்றன. அமெரிக்க எதிர்ப்பு என்பது டொலருக்கு மாற்றீடான நாணயத்தை உருவாக்குமா ? அமெரிக்கா அழிந்து கொண்டு சென்றாலும் இன்னமும் சில காலத்துக்குப் பச்சை டொலரை நம்பியே உலகம் உள்ளது.

சீனா தனது நாணயமான Renminbi (RMB / Renminbi is the official name of China's currency. The renminbi's principal unit is the Chinese Yuan)-ஐ சர்வதேச நாணயமாக உடனடியாக மாற்றுவதற்கு ஆர்வம் காட்டவில்லை. இது வரையில் சர்வதேச வணிகத்தில் 4.69 வீதம் RMB-இல் நடைபெற்றுள்ளது. (ஜூன் 2024). சீனா பல ஏழை நாடுகளுக்கு நிதியுதவியளித்துள்ளது. அந்நாடுகளின் பொருளாதாரக் கூறுகளை தீர்மானிக்கும் சக்தியாகவும் சீனா மாறியுள்ளது. ஆனால் சர்வதேசஅரங்கில் சீனா மீதான நம்பிக்கை அதிகரிப்பே சீனாவின் நாணயத்துக்கும் வரவேற்பை அதிகரிக்கும். HIPC (Heavily Indebted Poor Countries)-க்கு அப்பால் சீனா நிதிச் சந்தையில் முன்னேறவேண்டும். உலக மூலதனச் சந்தை இன்னமும் அமெரிக்காவின் கைகளிலேயே உள்ளது. சீனா நாட்டின் உள்ளே மூலதனம் வருவதற்கும் அதே சமயம் வெளியே மூலதனம் நகர்வதற்கும், அதாவது வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்கும் திறந்த மனதுடனேயே உள்ளது. சீனா நாணயத்தின் பெறுமதியை தீர்மானிக்கும் சக்தியான People's Bank of China இருந்தாலும் சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிலேயே சீன மக்கள் வங்கியுள்ளது.

சீனாவின் மூலதன வளர்ச்சியானது ஹொங்கொங் பங்குச் சந்தைக்கு அப்பால் நகரவேண்டும். சீன நிறுவனங்கள் நியூ யோர்க் பங்குச் சந்தை உற்பட்ட அமெரிக்க பங்குச் சந்தைக்குள் நுழைவதற்கு அமெரிக்கா தடைகளை போட்டுள்ளது. இது நேரடியாக இல்லாமல் இருப்பினும் இது நடைமுறையில் உள்ளது. உதாரணத்துக்கு Petro China நிறுவனத்தின் பங்குகள் நியு யோர்க் பங்குச் சந்தையில் விற்பனை செய்ய தடையிருந்தது. பின்னர் Warren Buffett பெற்றோ சைனாவின் பங்குகளை வாங்கிய பின்னரே நிலைமை மாறியது. இது போல் The Aluminum Corporation of China, China Life Insurance நிறுவனங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது, PetroChina Company Limited Intends to Deregister and Terminate Its Reporting Obligations Under the U.S. Securities Exchange Act of 1934.

https://finance.yahoo.com/news/petrochina-company-limited-intends-deregister-123000592.html

சீன நிறுவனங்கள் தங்களது மூலதனத்தை அதிகரிக்கவே பங்குச் சந்தைக்கு வருகின்றன. இந்த நிறுவனங்களின் பிரதான கட்டுப்பாடு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக மேற்கு நாடுகள் கருதுகின்றன. சீன நிறுவனங்களின் வளர்ச்சியையும் மேற்கு நாடுகள் விரும்பவில்லை. எனவே இந்த மூலதன முடக்கம் சீனாவின் மூலதன வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பாகவே அமையும்.

இன்றும் சீனா அதிகளவு ஏற்றுமதியை அமெரிக்காவிற்கே செய்கின்றது. (15வீதம்). சீன கம்யூனிஸ்ட் கட்சி, அதிகளவு தனியார் நிறுவனங்கள் பங்குச் சந்தையில் பங்குகளை விற்று பொது நிறுவனங்களாக மாறுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த மாற்றம் சீனா அமெரிக்கா தவிர்ந்த மற்றைய நாட்டின் மூலதனச் சந்தைகளிலிருந்து மூலதனத்தைப் பெற்று விரிவாக்க உதவும். மறு புறத்தில் சீனா குறிப்பிட்டளவு அமெரிக்க டொலர்களை தனது இருப்பில் வைத்திருக்கவும் விரும்புகின்றது. சீனாவின் இரு பிரதான சகாக்களான ரஷ்யாவும் இந்தியாவும் பிறிக்ஸ் அமைப்பின் முக்கியஸ்தர்கள். ரஷ்யா உக்ரேனின் போரின் பின்னர் இவ்வாறு மாற்றம் பெறும் என்பது சீனாவிற்கே தெரியாது. புட்டினுக்கும் தெரியாது. தென் சீனக் கடலில் சீனாவை எதிர்க்கும் நாடுகள் அதிகம் (யப்பான், பிலிப்பைன்ஸ், தாய்வான்...)

சீன மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்தை உருவாக்கி அதனை சர்வதேச அரங்கில் அதிகளவு பயன்படுத்தச் செய்து வருகின்றது. China's Cross-Border Interbank Payments System, (CIPS). இந்த வளர்ச்சிக்கு சீனா காட்டும் அதிக ஆர்வம், எவ்வாறு ட்ரோனின் சர்வதேச சந்தையை சீனா கைப்பற்றியதோ அதே போல் மாற்றம் பெற உதவலாம். ஆனால் தற்சமயம் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் கூட டிஜிட்டல் நாணயத்தில் ஆர்வம் காட்டுகின்றன.

China often wants to encourage dollar inflows because it needs dollars.

தற்போதைய நிலைமையில் சீனா மீதான அமெரிக்காவின் திட்டமிட்ட மூலதன முடக்கம், பிறிக்ஸ்ன் எதிர்காலம், பிறிக்ஸ் நாடுகளுக்கிடையிலான நீண்ட கால உறவு, உக்ரேனின் போரின் பின்னால் புட்டினின் நிலைப்பாடுகள், பாலஸ்தீனிய போரின் பின்னால் மத்திய கிழக்கில் ஏற்படும் மாற்றங்கள் அனைத்தும் அமெரிக்காவிற்கு சாதகமாகவே அமையும். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு பச்சை நாணயமே ஆட்சி செய்யும். அடுத்த ஐந்தாண்டுகளில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் பச்சையை ஐந்தாண்டுகளின்பின் பின்தள்ளச் செய்யலாம். அமெரிக்காவில் புதிய தீர்க்கமான தலைமைகள் உருவானால் டொலர் தொடர்ந்து ஆட்சிப் பீடத்தில் இருக்கலாம். இல்லையேல் டொலரின் நிலை கவலைக்கிடம்.



rathan@thaiveedu.com



# தமிழ்ப் பொதுவேட்பாளர்:
## நோக்கமும் நடைமுறையும்
### சில குறிப்புகள்

எஸ்.கே. விக்னேஸ்வரன்

இலங்கையின் 10-வது ஜனாதிபதிக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 16 வரையான கால எல்லைக்குள் நடத்தப்பட வேண்டுமென்று தேர்தல் ஆணையகம் அறிவித்ததைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் கட்சிகளது தேர்தல் தயாரிப்புக்கான நடவடிக்கைகள் வழமைபோல தீவிரமடைந்து வருகின்றன. 2019-ல் நடந்த தேர்தலில் 8-வது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த மக்களின் மாபெரும் வரலாறு காணாத 'அரகலய' என்ற போராட்டத்தின் காரணமாக, 2022-ல் கோத்தபாய பதவியை விட்டு ஓடியதைத் தொடர்ந்து, பாராளுமன்றத்தினால் எஞ்சிய காலத்துக்கான 9-வது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் தற்போது முடிவடையும் தறுவாயில் உள்ளது. இதையடுத்தே மேற்சொன்ன இலங்கையின் 10-வது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான காலமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான திகதியை அறிவிக்க வேண்டிய நடப்புக்கால ஜனாதிபதி அதை இன்னமும் அறிவிக்காத போதும், கட்சிகளிடையே இதற்கான தீவிரமான தயாரிப்பு வேலைகளும் தேர்தலுக்கான பரப்புரைகளும் அல்லது அதற்கான தயாரிப்புகளும் ஆரம்பமாகிவிட்டன. கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டுக் கிட்டத்தட்ட 41.99% வாக்குகளைப் பெற்ற சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், 3.19% வாக்குக்களைப் பெற்ற அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுமான இரண்டு 'மக்கள் சக்தி'க் கட்சிகளும் தமது தேர்தல் பிரச்சாரத்தை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன.

கடந்த தேர்தலில் சஜித் பிரேமதாச பெற்ற வாக்குகள், அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக, அப்போதைய கூட்டணியின் ஆதரவுடன் நின்று பெற்ற வாக்குகள் என்பதையும் அனுரகுமாரவின் வாக்குகள், அவரது அப்போதையக் கூட்டணியுடன் நின்றதால் கிடைத்த வாக்குகள் என்பதையும், அப்போது கோத்தபாயவுக்கிருந்த மாபெரும் எதிர்பார்ப்புடன் கூடிய வாக்களிப்பு இருந்தது என்பதையும் வைத்துக் கணக்கிலெடுத்துப் பார்த்தால் இம்முறை போட்டியிடும் அனுர, சஜித் இருவருக்குமே முன்பைவிட மிக அதிகமான வாக்குகள் கிடைக்க வாய்ப்பு இருக்கவே செய்கிறது. ஆயினும் இன்னமும் ரணில் எந்தக் கட்சி சார்ந்து தேர்தலில் நிற்பார் என்பது தெளிவாகத் தெரியவில்லை ஆயினும் எப்படி நின்றாலும் ஐ.தே.க-வின் பெரும்பாலும் ஒரு கணிசமான பகுதி அவருக்கு வாக்களிக்கும் என்று கருத இடமுண்டு. ரணில் ராஜபக்சக்களுடன் கூட்டாகச் சேர்ந்து தேர்தலில் நின்றால் அவருடைய வாக்குகள் மற்றைய இரு வேட்பாளர்களுடன் கிட்டத்தட்ட போட்டியிடும் நிலைக்கு அவர் வரலாம் என்ற அனுமானத்தை அடிப்படையாக வைத்து மிகவும் இறுக்கமான போட்டி நிலவ வாய்ப்புள்ளதென்பதை இன்றைய நிலைமையை வைத்துச் சொல்லலாம்.

ஆனால் இக்கட்டுரையில் கவனத்துக்கு எடுக்கப்படும் விடயம் இந்தத் தேர்தலில் யார் வெற்றி பெறுவார் என்பது பற்றியதல்ல. அல்லது யார் வெற்றி பெறவேண்டும், யார் வெற்றி பெறுவது நல்லது என்ற அபிப்பிராயத்தை முன்வைப்பதுவும் கூட அல்ல. இந்தத் தேர்தல் சம்பந்தமாகத் தமிழ் தரப்பால் முன்வைக்கப்பட்டிருக்கும் பொது வேட்பாளர் என்ற கருத்தும் அது தொடர்பான செயற்பாடும் பற்றிய ஓர் உரையாடலுக்கு வசதியான சில குறிப்புகளை முன்வைப்பதே இதன் நோக்கமாகும்.

இப்போது வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள 83 மக்கள் அமைப்புகள் இணைந்து 'தமிழ் மக்கள் பொதுச்சபை' என்ற பெயருடன் ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதன் சார்பாகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் ஒரு பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் அரசியற் கட்சிகளில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியும் தவிர்ந்த ஏனைய ஐந்து கட்சிகள் இந்தப் பொது வேட்பாளரை நிறுத்தும் நடவடிக்கைக்கான தமது ஆதரவுகளைத் தெரிவித்துள்ளதாக அந்தக் கூட்டமைப்பின் சார்பில் அதன் முக்கியஸ்தர்களுள் ஒருவரான சி.அ. ஜோதிலிங்கம் அவர்கள், நிமிர்வு என்ற காணொளி ஊடகத்தில் அண்மையில் வெளியான ஒரு உரையில் குறிப்பிட்டிருந்தார். இன்னமும் அந்தப் பொது வேட்பாளராக யாரை நியமிப்பது என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை என்றாலும், அந்த அமைப்பின் நோக்கங்கள் பற்றி அவர் விரிவாகப் பேசியிருந்தார். அந்தப் பேச்சில் அவர் தெரிவித்திருந்த அமைப்பின் நோக்கங்களாக முக்கியமான ஐந்து நோக்கங்களைக் குறிப்பிட்டார். அவை:

- ஜனாதிபதித் தேர்தலை, ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தல் என்ற வகையில் அதை நிராகரிப்பது.

- தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான ஒரு தேர்தலாக, அந்தத் தேர்தலை மாற்றுவது.
- அதற்காகத் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது.
- இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக, பொது அமைப்புகளையும், தமிழ் அரசியற் கட்சிகளையும் இணைத்த ஒரு கட்டமைப்பாக உருவாக்கிச் செயற்படுவது,
- எதிர்காலச் செயற்பாடுகளையும், செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆயத்தங்களையும் இதனூடாகச் செய்ய முயற்சிப்பது.

இந்த ஐந்து நோக்கங்களையும் கூர்ந்து கவனிக்கும் ஒருவருக்குத் தெளிவாகப் புரிகின்ற இரண்டு விடயங்கள் இருக்கின்றன. ஒன்று: ஜனாதிபதித் தேர்தலை அவர்கள் நிராகரிக்கிறார்கள். இரண்டாவது: ஒரு பொது வேட்பாளரை (தாம் நிராகரித்த) அதே தேர்தலில், தமிழ் மக்களது அபிலாசைகளை வென்றெடுக்கும் நோக்கிலான தேர்தலாக அதை மாற்றுவதாகக் கூறிப் போட்டியில் நிறுத்துகிறார்கள். இந்த இரண்டையும் செய்யவென ஏற்கனவே இணைப்பிலுள்ள அரசியற் கட்சிகள், பொது அமைப்புகள் என்பவற்றை ஒன்றாக இணைத்து, ஓர் அணியாக, எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக முயற்சி செய்ய உள்ளதாக வேறு அறிவித்துள்ளார்கள். ஆனால், அவர்கள் வாக்களிக்கப்போகும் மக்களிடம் சொல்ல மறந்த அல்லது சொல்லாத ஆனால் முக்கியமான விடயம் ஒன்று இருகிறது. அது இந்தத் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் ‘அபிலாசைகளை’ அவர்கள் எப்படி வென்றெடுக்கப் போகிறார்கள், அல்லது அவற்றை எப்படிச் சாதிக்கப் போகிறார்கள் என்பது. மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க அவர்கள் இதை தெளிவாக முன்வைக்கவேண்டும். ஒருவேளை வேட்பாளரைத் தெரிவுசெய்த பின்னர். அந்த விடயத்தைத் தெரிவிக்கலாம் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். ஆனால், அதை மக்கள் முன் வைக்காமல் எப்படி அவர்களை வாக்களிக்குமாறு கோரமுடியும்? அல்லது, அப்படி ஒருவருக்கு எதற்காக வாக்களிக்க வேண்டும் என்ற கேள்வியை மக்கள் எழுப்புகையில் அவர்களிடம் இருக்கும் அதற்கான பதில் என்ன?

ஒருவேளை இது ஓர் ஆரம்பக் கட்டம் தான், இனித்தான் மேற்சொன்ன விடயங்களை எப்படிச் செய்வது என்பதை அவர்கள் தம்முள் உரையாடி விவாதித்து அறிவிப்பார்கள் என்று ஒரு விவாதத்துக்காக எடுத்துக்கொள்ளலாம். அதை அவர்கள் அறிவிக்க இன்னமும் சில காலம் தேவைப்படலாம் என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

அதே வேளை எழும் முக்கியமான கேள்வி என்னவென்றால், இலங்கையின் அரசியலமைப்பின்படி சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலை நிராகரித்துவிட்டு, அந்தத் தேர்தலிலேயே, பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும்போது, தமிழ் மக்கள், குறிப்பாக இந்த தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களை ஏற்கவில்லை என்ற செய்தியே வெளித்தெரிய வரும். இந்தத் தேர்தல், தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை வென்றெடுக்க முடியுமான ஒன்றல்ல என்ற செய்தியை அது தரப்போவதில்லை. தேர்தல் பிரச்சாரத்தின் போது வேட்பாளர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்களை அவர்கள் பதவியேற்றால் செய்வார்கள் என்ற நம்பிக்கையிலேயே தேர்தல் நடப்பதும் வாக்களிப்பு நடப்பதும் நடந்துவருகிறது. தோல்வியே நிச்சயம் என்று தெரிந்து கொண்டு தேர்தலில் நிற்பதால் இதன் பயன் என்ன என்று இயல்பாகவே மக்களிடம் எழக்கூடிய சந்தேகத்தை எப்படிவிளக்குவது என்பதையும் கூட அவர்கள் குறிப்பிடவில்லை. ஒரு வேளை இனித்தான் அதையும் விளக்குவார்களோ என்னவோ. ஆனால் கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி தமிழ் காங்கிரசும் தமிழரசுக் கட்சியும் தவிர்ந்த மற்றைய தமிழ் அரசியற் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரு பொது வேட்பாளரைத் தேர்தலில் நிறுத்துவதற்கான தமது முடிவை, இக்கட்சிகள் கூட்டாகப் புளியங்குளத்தில் நடத்திய கூட்டம் ஒன்றில் முடிவு செய்து அறிவித்துள்ளனர். ஆக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கட்சியினரில் பெரும்பாலான கட்சிகள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதில் முழுமையான உடன்பாட்டுக்கு வந்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். இந்த முடிவு ஒருவிதத்திலும் விளைபயன் எதுவுமறு நிகழவிருக்கின்ற ஒரு பயனற்ற - விழலுக்கு இறைத்த நீரல்ல என்பதை எப்படி நிருபிப்பது?

ஆனால் இந்த இடத்தில் தான் ஒரு பெரிய கேள்வியே எழுகிறது. ஒருசில நாட்களுக்கு முன் இந்தப் பொது வேட்பாளர் தொடர்பான நண்பர்களுக்கிடையிலான உரையாடல் ஒன்றின் போது, தமிழ் மக்கள் தம் நிலைப்பாட்டை இப்படி ஜனாதிபதித் தேர்தலில் முன்வைத்துப் பிரசாரம் செய்வதால் என்ன தான் நடக்கப்போகிறது என்று ஒரு நண்பர் இப்படி ஒரு கருத்தை முன்வைத்திருந்தார்.

‘தமது அரசியல் நிலைப்பாடு என்ன என்பதை முதலில் தெரிவிக்காமல், ஒரு பொது அமைப்பைக் கட்டுவது எப்படி என்பது எனக்குச் சத்தியமாகப் புரியவில்லை. தேர்தலில் பொது வேட்பாளரை நியமிக்கும்போது, அவர் தமிழர்களது நலன்களை மட்டும் பேசுபவராக, முழு இலங்கையின் நிலையில் நின்று மற்றைய மக்களது நிலை பற்றி எதுவும் பேசாமல் ஜனாதிபதித் தேர்தலில் நிற்பதற்குள்ள அரசியல் நியாயப்பாடு என்ன? சிங்கள, முஸ்லிம், மலையக மக்களது தேவைகள் உரிமைகள் என்பவை பற்றி அந்த வேட்பாளருக்கு எந்தக் கரிசனையும் இல்லை என்றால், முற்று முழுதாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவிக்கான போட்டியில் இறங்குவது எந்தவகையில் நியாயமானது? மற்றைய இன மக்களது அபிப்பிராயமும், ஆதரவுமில்லாத சமஷ்டிக் கோரிக்கை வெற்றிபெற செல்வா காலத்திலேயே முடியாமற் போனமைக்குக் காரணமாக அமைந்த தவறை மீளவும் முக்கி முக்கிப் பேசுவது என்பது எவ்விதத்திலும் பொருத்தமற்றது. இது பாராளுமன்றத் தேர்தல் அல்ல ஒவ்வொரு தொகுதி மக்களும் தத்தம் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். தமது கருத்து நியாயமானால், அது முழு நாட்டுக்கும் உடனடியாகவோ, நீண்ட காலத்திலோ பயனளிக்கும் என்று கருதினால், அதை முழு நாடும் அறிய, நாடு முழுவதும் சென்று பிரச்சாரம் செய்யவேண்டும். அதற்கு இது மிக வசதியான தேர்தல், மற்றைய இன மக்கள் மத்தியில் ஏனைய இன மக்கள் முன்வைக்கும் அவர்களது பிரச்சினைகளையும் இணைத்து, ஏன் சமஸ்டி ஆட்சி முழு நாட்டுக்குமே அவசியம் என்பதைப் பரவலாக்க வேண்டும். அந்தச் சிந்தனை சிறிதளவுகூட இல்லாமல் சமஷ்டி பற்றிப் பேசுவதை மிக இலேசாகவே இனவாதம் என்று யாராலும் முத்திரை குத்திவிட முடியும். தேர்தல் காலத்தில் சும்மா மாரித் தவளை போலக் கத்துவதால் பயன்பெறப் போவது திரும்பவும் ஒருசில அரசியல்வாதிகளே. மக்களல்ல’. நண்பர் சற்றுச் சூடாகவே இருந்தார் என்பது அவரது வார்த்தைப் பிர



யோகங்களில் வெளிப்படையாகவே தெரிந்தது.

இரண்டாவது நண்பர் இதற்கு இவ்வாறு பதிலளித்தார்:

‘அரசியல் நிலைப்பாடு என்பது, இன்றைய நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிங்களத் தலைவர்களுக்கோ கட்சி களுக்கோ வழங்கக் கூடாது என்பதும், தமிழ் மக்களின் அடிப் படை அரசியல் கோரிக்கைகளும் தானே இவ்வாறான பொது அமைப்புகளின் நிலைப்பாடாக இருக்க முடியும். மாறாக ஒரு கட்சியைக் கட்டுவதைப் போல ஒரு பொது அமைப்பைக் கட்ட முடியாதல்லவா? மேலும், முதலில் வடக்குக் கிழக்கு மக்களையே ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைப்பது சவாலாக இருக்கும் நிலையில் எல்லா மக்கள் தொடர்பாகவும் இப்ப கதைக்க முடியாது தானே?. அது தவிர மலையக, முஸ்லிம் மக்கள் தமக்கான அரசியலையும் செயற்பாடுகளையும் தனி யாகக் கொண்டுள்ளார்கள். தமிழ் பொது வேட்பாளர் என்பது முழு இலங்கைக்குமான வேட்பாளர் இல்லை தானே. அவர் குறிப்பாக வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களை மட்டுமே பிரதி நிதித்துவம் செய்கின்றவர் அல்லவா? இன்றைய நிலையில் இதைத் தானே தமிழ் மக்கள் செய்யலாம்? வேறு என்னதான் செய்வது?’ விவாதம் கொஞ்சம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

முன்னவர் இதற்கு இவ்வாறு பதிலளித்தார்:

‘அதைத் தானே பாராளுமன்றத் தேர்தலில் செய்கிறோம். இது ஜனாதிபதித் தேர்தல். முழு நாட்டுக்குமானது. சமஸ்டிக் கோரிக்கை வைக்கப்பட்டுப் பல தசாப்தங்கள் கடந்த பின் னும், ஆயுதப் போராட்டம் பெரும்பான்மை மக்களது ஆதரவு டன் முறியடிக்கப்பட்ட பின்னும், அதே பழைய மொந்தை யைப் பாவிப்பதில் என்னதான் நடக்கப் போகிறது என்று நம் புகிறார்கள்? நாட்டுமக்களைத் திரட்டுவதை விட அந்நிய நாடுகளின் தலையீட்டைக் கோருவதில் ஏதாவது நியாயம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஜனாதிபதித் தேர்தல் வாய்ப்பைப் பயன்படுத்தி மற்றைய இன மக்களுடன் உரை யாடாமல் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதால் சாதிக்கப் போவது என்ன? இப்போது இவர்கள் கூட்டுகின்ற கூட்டு, தேர் தலுக்குப் பிறகும் தொடர்ச்சியான போராட்டங்களை நாடறிய நாடு முழுவதும் நடத்துமா? குறைந்த பட்சம் நாடளாவிய ரீதி யில் அதைப் பிரச்சாரப்படுத்துமா? நான் அப்படி நம்ப வில்லை. ஜனாதிபதி முழு நாட்டுக்குமான தலைவர். அதற் கான வேட்பாளர்களுடன் உரையாடுவதும் விவாதிப்பதும் முழு நாட்டினதும் வேலைத் திட்டங்களுடன் சம்பந்தப்பட்டது. அது எல்லோரும் நினைப்பதுபோல் இந்தக் குழுவிடம் இல் லவே இல்லை. தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையக மக் கள் உடனான உரையாடல்களைக் கூட இவர்கள் செய்யப் போவதாகத் தெரியவில்லை. சிங்கள மக்கள் மத்தியிலான வேலை பற்றிய சிறியளவு கவனமும் இவர்களிடம் இல்லை. அதைத் தான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இவர்கள் செய்ய வேண்டும் என்பதே எனது கருத்து. இவர்கள் கோரு வது தமது அபிலாசைகளை வெளிப்படுத்தி அதற்கு மக்கள் தயார் என அறிவித்து பிறநாடுகளிடம் அழுத்தம் தரும்படி கோருவதே. அது ஏற்கனவே பரீட்சிக்கப்பட்ட ஒன்றுதான். அவர்கள் தமக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் கையாள்வார் கள். ஏற்கனவே ஒரு பேரழிவைத் தந்த யுத்தத்தால் அது மிலேச்சத்தனமாக அடக்கப்பட்டது. இந்த அநியாயமான, தமது சொந்த மக்களையே கொன்றொழிக்கத் தயங்காத அரசு தரப்பின் யுத்தம் முழுக்க முழுக்கத் தமிழ் மக்கள்

மீதான யுத்தமாக நடத்தப்பட்டது. இதனால் தமது மக்களது விடுதலைக்காக என்று நம்பிப் போராடியவர்கள் பிரிவினை வாதிகள் என்ற பட்டத்தைப் பெற்றதைவிட அதனால் எதுவும் சாத்தியமாகவில்லை. குறைந்த பட்சம் மற்றைய இனங்கள் மத்தியிலிருந்து, கடந்த அறகலய நடந்த காலத்துக்கு முன் அரசுக்கெதிரான எத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளும் நடக் கவில்லை. அப்படிப்பட்ட ஒரு சூழலில், மீண்டும் அதே மொந் தையைத் தூக்குவதில் அர்த்தமில்லை. பரவலாக அனைத்து மக்களிடமும் இதை விரிவாக எடுத்துச் சொல்வதற்கான வேலைத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதை அடிப்ப டையாக வைத்து வேலையில் இறங்க வேண்டும். அதற்கான ஓர் ஆரம்பமாக இதுவென அறிவித்துத் தேர்தலில் இறங்கி னால் அதில் ஒரு நியாயம் இருக்கும், அப்படியல்லாது அத னால் ஆகப்போவது ஒன்றுமில்லை' என்பதே எனது அபிப்பி ராயம்.

விவாதம் இன்னமும் தொடர்ந்தது; இன்னொரு நண்பர் இவ் வாறு குறிப்பிட்டார்:

'பாராளுமன்றத் தேர்தல் கட்சிகள் தமது ஆசனங்களுக்காக வாக்கு வேட்டையில் பங்குபற்றுவார்கள். பெரும்பாலும் கட்சி சார்ந்த செயற்பாடாக அது இருக்கும். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்பது கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. குறிப்பாக அவர் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருப்பார். இது ஒரு முக்கியமான வேறுபாடு. 82-ம் ஆண்டிலிருந்து சிங்கள ஜனாதிபதிகளைத் தமிழர்களும் சேர்ந்தே தெரிவு செய்தார்கள். ஆனால் என்ன நடந்தது? ஏன் இம்முறை இப்படிச் செய்யக்கூடாது. அதுவும் எந்தச் சிங்களக் கட்சிகளும் இன முரண்பாட்டிற்கான ஒழுங் கான தீர்வுகளை முன்வைக்காத நிலையில், தமிழ் மக்கள் இவ்வாறு முயற்சிப்பதில் என்ன தவறு? பொது வேட்பாளரில் எனக்கு இருக்கின்ற ஒரே ஒரு பிரச்சினை, ஏற்கனவே அனை வராலும் விரும்பப்படுகின்ற பொதுவான ஜனரஞ்சகமான தலைவர் வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்கு இல்லை. இந்த நிலையில் யாரைத் தெரிவு செய்வார்கள்? அவர் எப்படிப்பட் டவராக இருப்பார் என்பதே எனது கவனத்திற்கும் கவலைக் கும் உரியது. மற்றும்படி சிங்கள மக்களுக்கு இனியும் எதை விளக்குவது? தீர்வொன்று கிடைக்காத போது, அல்லது முன் வைக்காத போது இனிவருங் காலங்களில் ஜனாதிபதித் தேர் தல் நடந்தால் தமிழ் மக்கள் தமக்கான பிரதிநிதியை இத்தேர் தலைப் பயன்படுத்தித் தெரிவு செய்வதே சரியான வழிமுறை யாக இருக்கும்.'

இதற்குப் பதிலாக வேறொரு நண்பர் இவ்வாறு தெரிவித்தார்:

'தவறென்று சொல்லவில்லை. ஆனால் இப்படித் தேர்தலை மையமாக மட்டும் வைத்துக் கூடுவதும் அதன்பின் எந்தச் செயற்பாடுமின்றிக் கலைந்து போவதும் ஒரு பயனற்ற முயற்சி என்பது எனது அபிப்பிராயம். தேர்தல் காலமல்லாத காலத்தில் இவர்கள் எதுவும் செய்வதில்லை; மக்களுக்குச் சொல்வதும் இல்லை. குறைந்த பட்சம் தமிழ் மக்களுடனான உரையாடலைக்கூட முன்னெடுப்பதில்லை. இங்குள்ள தமிழ் கட்சிகளிடம் தமக்கென்று ஒரு பத்திரிகையோ, அல்லது வேறு வகை ஊடகமோ மக்களுடன் உரையாடுவதற்கென்று நடத் தப்படுவதும் இல்லை.'

இதற்கு அந்த இரண்டாவது நண்பர் கவலையுடன் இவ்வாறு பதிலளித்தார்:

'இது கவலைக்கிடமான துர்ப்பாக்கியமான உண்மைதான். ஆனால் இதை எவ்வாறு கடப்பது என்பது தான் ஒருவருக்கும் தெரியவில்லை. அதனால்தான் முடிந்ததைச் செய்கின்றார் கள் போல. வேறு என்ன செய்வது?'

இப்போது முதலாவது நண்பர் திரும்பவும் பேசினார்:

'என்னால் இதை ஏற்க முடியவில்லை. அவர்களுக்கு அது தெரிய வேண்டுமென்றால் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தை ஆராயவேண்டும். எங்கே பிழை இருக்கிறது என்று அறிய முயலவேண்டும். இருக்கும் அரசி யற் கட்சிகளிடம் திட்டமென்று இருப்பதெல்லாம் பாராளு மன்ற அரசியலும் ஊரூராத் திரிந்து முறையிடுவதும் தான். அவர்களுக்கு இது ஒரு 'பார்ட் ரைம் வேலை' மாதிரி. மக்க ளுக்காக வேலை செய்ய அவர்கள் தயாரில்லை. இப்போது நடத்தப்படும் பொது வேட்பாளரை நிறுத்தும் அணி இந்தக் கட்சிகளை உதறிவிட்டு மக்கள் அணியைப் பரவலாகக் கட்டு மாயிருந்தால் மட்டுமே அது எதிர்காலத்திலாவது பயன்தரு விளைவை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உருவாகலாம். தேர்தல் முடியக் கலைந்துபோகும் அமைப்பாக அது இருக் குமென்றால் அதனால் எந்தப் பயனுமில்லை. இன்றுவரை அவர்களது போக்கு அப்படித்தான் இருந்து வருகிறது. இந் தக் குழுவிடம் குறைந்தபட்சம் மலையக, முஸ்லிம் மக்கள் மத்தியிலான உரையாடலைச் செய்யும் ஆர்வங்கூட இருப்ப தாகத் தெரியவில்லை. முடிந்ததைச் செய்ய இது என்ன சிரம தானமா? இல்லையே.' அவர் சற்றுச் சூடேறியிருந்தார் என் பது திரும்பவும் அவரது வார்த்தைகளில் வெளிப்பட்டது.

ஆயினும் இதை மற்றைய இருவரும் ஆமோதிப்பது போலத் தலையாட்டினர். இரண்டாமவர் ஒரு பெருமூச்சுடன் இப்படிக் கூறினார்:

'இதுதான் எனது நிலைப்பாடும். போர் முடிந்த காலத்திலி ருந்து நான் சந்திக்கும் அரசியல் ஆர்வமுடையவர்களிடம் எல்லாம் நான் சொல்லும் ஒரே விடயம் இதுதான். கடந்த காலத்தைப் பற்றிய மீள்பார்வை, சுயவிமர்சனம். எங்கே தவறி ழைத்தோம். இழைக்கின்றோம். எப்படி முன்னோக்கிச் செல் லப் போகின்றோம் என்பதைப் பற்றிய ஆழமான ஆய்வும் திட் டங்களும் முன்வைக்கப்பட வேண்டுமென்று. ஆனால் நான் உட்பட இதற்காக உழைப்பதற்கு ஒருவரும் தயாராக இல்லை. இப்போது இந்தத் தமிழ் கட்சிகளும் பொது அமைப் புகளும் சேர்ந்து முன்வைத்துள்ள பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும் படி கூறுவோர் சொல்வது முக்கியமற்றவை என்றா சொல்கிறீர்கள்?'

முதலாமவரது சூடு கொஞ்சம் தணிந்திருந்தது. அவர் சொன்னார்:

'முக்கியமானவை தான். ஜோதிலிங்கம் தனது உரையில் குறிப்பிட்ட முதல் மூன்று விடயங்களும் அதாவது தமிழ் மக் களை ஒரு தேசமாக ஒன்றிணைப்பது, அவர்களது தேவை யைத் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டிருப்பது, அரசை அம்பலப்படுத்துவது என்பதெல்லாம் சரிதான். ஆனால். இப் படிச் செய்வது எந்தக் குறிக்கோளை அடிப்படையாக வைத்து? தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறிவிடா மல் இருப்பதற்காகவா? அல்லது அதனால் தமிழ் மக்களின்

பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்றா? தமிழ் மக்களின் கோரிக்கையைத் திரும்பத் திரும்ப தமிழ் மக்களிடம் வைத்து அவர்களது ஆதரவைப் பெற்றதால் பெற்ற பயன் என்ன? 70-களின் இறுதிக் காலங்களில் வண்ணை ஆனந்தன் சொன்ன 'வெளவால் வரும்' என்ற அற்புத நிகழ்வுக்காகவா? உண்மையில் தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது தமது பிரச்சினைகளைத் தம்முள்ளும் நாட்டின் மற்றைய இனமக்களிடமும் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு தலைமை. அது தேர்தலில் நிற்பதைவிடத் தனது மக்கள் மத்தியிலும் நாட்டின் பிற இன மக்களிடமும் உரையாடக்கூடிய, உரையாடி அதன் நியாயத் தன்மையைப் புரியவைக்கக் கூடிய தலைமையாக இருக்க வேண்டும். தேர்தல் என்பது அரசின் நிகழ்ச்சி நிரல். அது மக்களது நிகழ்ச்சி நிரலல்ல. அரசு தன்னை நிலைநிறுத்திக் கொள்ள, தன்னிடம் ஜனநாயகத் தன்மை இருப்பதாகக் காட்டிக்கொள்ளத் தேர்தலை நடத்துகிறது. ஆனால், தேர்தலை மக்கள் தமது தேவையின் அடிப்படையிலான நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தலாம். ஆனால் அது தேர்தலுக்காக மட்டும் கூட்டுச்சேரும் ஒரு கூட்டினால் செய்யப்படக் கூடியதல்ல. இந்தக் கூட்டுத் தேர்தல் முடிந்ததும் கலைந்து போய்விடும். தேவை தேர்தலையும் கையாளக் கூடிய ஒரு மக்களின் அமைப்பு. அது மக்களின் சார்பில் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பலாம். தலைவர்கள் பாராளுமன்றம் செல்வதில்லை. அவர்கள் பிரதிநிதிகளை வழிநடத்துபவர்களாக இருக்க வேண்டும். மக்களமைப்புக்குப் பாராளுமன்றமும் ஒரு செயற்பாட்டுத் தளம் மட்டுமே. அதற்கு வெளியிலே பெரிய பணி இருக்கிறது. நாட்டின் அனைத்து இன மக்களுடனுமான உரையாடலை நடத்துவதும், அனைத்து இன மக்களது தனித்துவமானதும் பொதுவானதுமான பிரச்சினைகள் தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்துவதும் அதன் பணியாக அமைய வேண்டும். அப்போதுதான் மக்களிடையேயான பரஸ்பரப் புரிந்துணர்வும், கூட்டுச் செயற்பாட்டு ஊக்கமும் வளர்ச்சியடையும்.

இந்த முக்கியமான உரையாடலின் பின்னணியுடன் எனது குறிப்பைக் கூறி இக்கட்டுரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

'பொது வேட்பாளர் என்ற கருத்தும் செயற்பாடும் குறித்து எனக்கு உடன்பாடில்லை என்றாலும், தமிழ் மக்கள் மத்தியிலிருந்து உருவாகிய அந்தக் கருத்தும் அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும் செயற்பட வேண்டியது தமிழ் பகுதிகளில் மட்டுமல்ல. உடனடியாக முடியாவிட்டாலும் முழு இலங்கைக்குமான செயற்திட்டத்தின் அடிப்படையில் அவை மீள வடிவமைக்கப்பட வேண்டும். அந்த அடிப்படைக் குறிக்கோளுடன் அது செயற்பட வேண்டும். அதற்கான ஆரம்பமாக ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்துவது கூடத் தவறல்ல. ஆனால் இந்த ஒரு ஜனாதிபதித் தேர்தலுடன் முடிவடைகிற ஒரு விவகாரமாக அது இருக்க முடியாது. அரகலயப் போராட்டத்தை நடத்திய சக்திகளுடன் நமது கட்சிகளின் தலைவர்களுக்கு உரையாடவேண்டும் என்ற எண்ணம் எப்போதாவது இருந்தது என்று நினைக்கிறீர்களா? என்னைப் பொறுத்தவரை அவர்களிடம் அது இருக்கவில்லை; ஒருபோதும் இருக்கவில்லை. ஆனால் அத்தகைய முற்போக்கான, இனங்களுக்கிடையிலான சமத்துவத்தின் அவசியத்தைப் புரிந்துகொள்கிற, சக்திகளுடனான உறவை ஏற்படுத்தாமல் அவர்களுடன் உரையாடாமல், விவாதிக்காமல், இலங்கையில் இனரீதியான பிளவுகளை வைத்துக்கொண்டிருக்கும் அரச இயந்திரத்தினதும், அதை வைத்து அரசியல் வியாபாரம் செய்துவரும் கட்சிகளதும், அவர்களது கருத்துகளதும் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க முடியாது. அறகலயவோடு சம்பந்தப்பட்டவர்களிடமும் குழப்பங்கள், அரசியல் புரிதலோடு சம்பந்தப்பட்ட குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. அது ஒருவகையில் தவிர்க்க முடியாததும் கூடத்தான். ஆனால் உரையாடல்கள், விவாதங்கள், இணைந்த போராட்ட நடவடிக்கைகள் என்பவற்றினூடாகவே இலங்கையின் எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கும் ஒரு சக்தியாக மாற்றத்தை நோக்கிய பயனுள்ள சக்தியாக இலங்கை மக்களால் எழுந்து வரமுடியும். அத்தகைய ஒரு சூழலில் தான் இனங்களுக்கிடையான உறவு, சமத்துவ உறவாகப் பரஸ்பர அங்கீகாரமும் ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் இருக்கின்ற நிலமை உருவாகும். வெறுமனே ஒரு தமிழ் பொது வேட்பாளரைத் தேர்தலுக்காக முன்னிறுத்துவது மூலம் அது ஒருபோதும் உருவாகப் போவதில்லை.



vickneaswaran.sk@thaiveedu.com





# அரசியல் பௌத்தத்தின் கலாசாரக் காட்சிகள்

ஜிஃப்ரி ஹாசன்

அரசியல் பௌத்தம் கலாசார ரீதியாகவே கட்டமைக்கப்பட்டு வந்துள்ளதை இலங்கையின் இனமுரண்பாட்டு அரசியல் வரலாற்றிலிருந்து அறிய முடியுமாகவுள்ளது. சுதந்திரத்துக்குப் பின் இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் ஒன்றையொன்று சளைக்காத வகையில் இந்த முயற்சியைத் தீவிரப்படுத்தின. இந்த அரசாங்கங்கள் தமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி பௌத்த கலாசாரத் தேசியமொன்றை இலங்கையில் நிறுவமுயன்றன. ஏனைய கலாசாரங்களை புறக்கணிப்பதன் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த அடையாளமாகவும் சிங்கள-பௌத்த கலாசாரத்தை கட்டமைக்க முனைந்த காட்சிகளை இலங்கை வரலாற்றில் நாம் பார்த்தோம். அதனால் ஏற்பட்ட பாரதூரமான விளைவுகளையும் நாடு சந்திக்க நேரிட்டது.

அரசியல் பௌத்தத்தின் கலாசராக் காட்சிகளைப் புரிந்து கொள்வதற்கு முதலில் கலாசாரம் (culture) என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். 'ஒரு சமூகம் கொண்டிருக்கும் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதர் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்றுக்கொள்ளும் பிற திறமைகளும் பழக்கங்களுமே கலாசாரம்' என்று மானிடவியலாளர்களால் வரையறுக்கப்படுகிறது. மேலும் அவர்கள் கலாசாரத்தை பொருள்சார் கலாசாரம்(material culture), பொருள்சாரா கலாசாரம்(immaterial culture) எனப் பிரித்து நோக்குகின்றனர். இதில் பொருள்சார் கலாசாரத்துக்குள் மனிதரால் உருவாக்கப்பட்ட கலைகள், கட்டடங்கள், ஆடைகள் போன்ற பொருள்சார்ந்த விடயங்களும் பொருள் சாராக் கலாசாரத்தினுள் மதம், மொழி, நம்பிக்கை போன்ற பொருள்சாராத விடயங்களும் இடம்பெறுகின்றன. இந்தவகையில் பார்க்கும்போது மொழி, மதம், பழக்கவழக்கங்கள், கல்வி, அபிவிருத்தி, கலை இலக்கியங்கள், வரலாறு, கட்டங்கள், ஆடைகள், சினிமா மற்றும் குறியீடுகள் போன்ற அனைத்தும் கலாசாரக் கூறுகளாகவேயுள்ளன. இலங்கையில் வாழும் பிரதான இனங்கள் அனைத்தும் இவைகளில் பெரும்பாலானவற்றைத் தனித்தனியாக கொண்டுள்ள வித்தியாசமான தேசங்களாகும். ஆனால் துரதிஸ்டவசமாக இலங்கையின் அரசாங்கங்கள் இந்த வித்தியாசங்களை ஏற்றுக் கொண்டு பல்கலாசாரத் தேசமாக இலங்கையை உருவாக்கத் தவறின. மாறாக பெரும்பான்மையின கலாசார அடையாளத்தை மட்டுமே காலனித்துவத்துக்குப் பின் இலங்கை அரசு இலங்கையின் தேசிய அடையாளமாக நிறுவ முயற்சித்தது. அத்தகைய கலாசாரக் காட்சிகள் இலங்கையின் வரலாற்றுப் போக்கில் பல்வேறு தருணங்களில் அரங்கேற்றப்பட்டுள்ளன. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்ற சிங்கள ஆட்சியாளர்கள் சிங்கள பௌத்த கலாசாரத் தேசியமொன்றை உருவாக்கும் வகையில் அரசாங்க இயந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். சிங்கள-பௌத்தத்தை அரசியல் மயப்படுத்தும் முயற்சி காலனித்துவ காலத்திலேயே தொடங்கிவிட்டபோதும் அரச அதிகாரத்தின் மூலம் 1956-ம் ஆண்டே அது முதன் முதலாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1956-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசியல் பௌத்தத்தின் முதலாவது கலாசாரக் காட்சியை அரங்கேற்றியது. தனிச்சிங்கள மொழிச் சட்டத்தினை அது கொண்டுவந்தது. மொழி ஒரு முக்கிய கலாசாரக் கூறாகும்.

இலங்கையின் சுதேச மொழிகளாக சிங்களமும் தமிழும் விளங்கிய போதும், சிங்களம் மட்டும் அரசாங்கத்தினால் அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது ஒரு மொழிக் கலாசாரத் தேசத்துக்கே பொருத்தமானதாகும். இலங்கைக்கல்ல. சிங்களக் கலாசாரத்தின் மொழியாக சிங்களம் இருந்தமையாலேயே அதற்கு இந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இதற்கு வேறு வியாக்கியானங்கள், தர்க்கங்கள் முன்வைக்கப்பட்ட போதும், இந்நிகழ்வு அரசியல் பௌத்தத்தின் கலாசார வேர்களை நிதானமாக ஒரு முறை மீளாய்வு செய்வதன் அவசியத்தை வேண்டுகிறது. இந்த நிகழ்வுக்குப் பின்னால் இலங்கையை ஒரே கலாசாரத் தேசியமாக கட்டமைக்கும் அரசியல் நிகழ்ச்சி நிரல் இருக்கலாம் என்ற சந்தேகத்தை இப்போது நம்மால் எழுப்ப முடியுமாக உள்ளது. ஏனெனில் சர்வதேச அளவில் பல்வேறு வித்தியாசமான கலாசாரத் தேசங்களை ஒரே மொழிக்குள் கொண்டு வந்து ஒற்றைத் தேசமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு மொழியை அரசியல் அதிகாரத்தின் மூலம் எல்லா மக்களுக்குமானதாக்கி ஏனைய மொழிகளிலிருந்து அந்தந்த மக்களை விடுபடச் செய்து உருவாக்க விரும்பும் கலாசாரத்



தேசத்துக்கான மொழியுடன் எல்லா மக்களையும் சங்கமிக்கச் செய்யும் நடவடிக்கைகள் ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்றை நாம் அறிவோம். ஐரோப்பாவில் 17-ம், 18-ம் நூற்றாண்டுகளில் தேசிய அரசுகள் ஒரு தேசிய இனத்துக்கு ஒரு அரசு என்ற அடிப்படையில் உருவாகின. பிரான்ஸ், இத்தாலி போன்ற தேசங்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

பல்வேறு மொழிகளைப் பேசும் இனக்குழுமங்களைக் கொண்ட பிரான்ஸ் அரச இயந்திரத்தின் துணையுடன் பிரான்ஸ் மொழியை வலுக்கட்டாயமாக இணைத்து பிரான்ஸ் தேசத்தை உருவாக்கிக் கொண்டது. இத்தாலியும் இப்படித்தான் உருவாக்கப்பட்டது. வேறு மொழிகள் பேசிய பல்வேறு சமூகங்கள் இத்தாலிக்குள் இருந்த போதும் அந்த மொழிகள் புறக்கணிக்கப்பட்டு இத்தாலி மொழியை அரச அதிகாரத்தின் மூலம் கட்டாயமாக்கி இத்தாலியர்கள் இத்தாலி என்ற நாட்டுக்காக உருவாக்கப்பட்டனர். வேறு மொழிகளை பேசுபவர் தங்களது மொழி, மதம், கலாசாரம், பழக்கவழக்கங்கள் என்பன வேறாக இருந்த போதும் இத்தாலி மொழிக்கு அவர்கள் மாற்றப்பட்டதோடு அந்த மொழியின் மதத்தையும் கலாசாரத்தையும் தழுவிக் கொள்ள வைக்கப்பட்டனர். பிரான்ஸிலும் இதே நிலைமைதான் இருந்தது.

இலங்கையில் சிங்களம் அரச கரும மொழியாக்கப்பட்டதன் மூலம் சிறுபான்மைத் தேசங்கள் தமது மொழியைவிட்டு சிங்கள மொழியின் மதம், கலாசாரம், ஏனைய பழக்க வழக்கங்களுக்கு தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் பௌத்தவாதிகளிடம் எந்தளவு தூரம் இருந்திருக்கும் என்பது கேள்விதான். எனினும் குறைந்த பட்சம் பெரும்பான்மை இனத்தின் கலாசார நலன்களோடு ஒத்துப்போகும் குடிமக்களாகவேணும் தேசிய சிறுபான்மையினர் இருக்கவேண்டும் என இந்நடவடிக்கை முலம் அவர்கள் நாடியிருக்கலாம்.

1972-ன் அரசியல் யாப்பு மூலம் மற்றுமொரு அரசியல் பௌத்தத்தின் கலாசாரக் காட்சி எங்களுக்கு காண்பிக்கப்பட்டது. இந்த யாப்பில் பௌத்த மதம் அரச மதமாக பிரகடனப்படுத்தப்பட்டது. சிறுபான்மையினரின் மதங்கள் இந்த ஏற்பாட்டின் மூலம் தெளிவாகப் புறக்கணிப்புக்குள்ளாகின. இந்த ஏற்பாடு வெளிப்படையாகவே இலங்கை அரசை பௌத்த அடையாளத்துக்குள் கொண்டு வந்த ஏற்பாடாக அமைந்திருந்தது. அரசின் பல்வேறு செயல்பாடுகளில் பௌத்த அடையாளம் தூக்கலாகத் தெரிந்தது. அரச நிகழ்வுகளில் பிக்குகள் முக்கியத்துவப்படுத்தப்பட்டமை, பௌத்த குறியீடுகள் பெரும்பாலும் பிரயோகிக்கப்பட்டமை, சிங்களக் கலாசார நடைமுறைகள் பின்பற்றப்பட்டமை போன்றவற்றிலிருந்து அதன் தீவிரத் தன்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது. பிரயாணங்களின் போது பௌத்த குருமார்களுக்கு ஆசனங்கள் கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய நிலை இருக்கும் அதே வேளை சிறுபான்மை இனங்களின் மதகுருக்கள் உதாசீனம் செய்யப்படும் நிலையே இன்னும் தொடர்கிறது.

அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பெரும்பான்மை நலன்களே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் பொருளாதாரத்துறையை காலனித்துவ காலத்தின் ஆட்சியாளர்களினால் கடுமையான மேற்குச் சார்பான முதலாளித்துவப் பொருளாதாரமாக ஆக்கப்பட்டது. இலங்கையில் உருவான இடதுசாரிகள் சோஷலிசப் பொருளாதாரத்துடன் நெருக்கமாகினர். இவ்விரு வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையிலேயே இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியும் நோக்கப்பட்டது. முன்னெடுக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின்னர் அரசு மேலாதிக்கம் செலுத்தும் அரசியல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதனை காணமுடியுமாகவுள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னர் தேசியக் கொடி உருவாக்கத்தின்

போதும் தனிச்சிங்கள பௌத்த அடையாளங்களைப் பிரதிப லிக்கும் வகையில் தேசியக் கொடி உருவாக்கப்பட்டது. தேசி யக் கொடி உருவாக்கத்திற்கான ஆணைக்குழுவில் சிறுபான் மையினப் பிரதிநிதிகள் எவரும் நியமிக்கப்படாமை சிறுபான் மையினர் மத்தியில் ஒரு மனக் குறையாக வெளிப்பட்டது. இத்தேசியக் கொடியில் சிறுபான்மையினரின் அடையாளங் களை உள்ளடக்குமாறு சிறுபான்மையினரால் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டே தனிச் சிங்கள பௌத்த அடையாளங்களோடு தேசியக் கொடி உருவாக்கப் பட்டது.

பெரும்பாலான அரச விழாக்கள், பொது இட நிகழ்வுகள் என் பன சிங்கள பௌத்த அடையாளங்களையே பிரதிபலிக்கின் றன. சிறுபான்மையினரின் கலாசாரத் தன்மைகள் புறக்கணிக் கப்பட்டு சிங்கள கலாசார அம்சங்களே பெரும்பாலான அர சின் பொது நிகழ்வுகளில் பின்பற்றப்படுகின்றன. இவ்வாறான நிகழ்வுகளின் போது வன (ஜெ) ஓதுதல் பௌத்த மத குரு மார் கௌரவமளிக்கப்படல், சிங்களப் பாரம்பரிய நடனம், தனிச்சிங்கள உரைகள் போன்றவையே அரசின் இத்தகைய பொது நிகழ்வுகளை அலங்கரிக்கின்றன. இது ஒரு வகை யான அரசியல் பௌத்தத்தின் குறியீடு சார்ந்த பரிமாணமா கும். இலங்கையின் தேசிய கலாசாரமாக சிங்களப் பண் பாட்டை முன் கொண்டு வரும் நடவடிக்கையாகவே இன்று சிறுபான்மையினர் இதனை நோக்குகின்றனர்.

உள்நாட்டு நகழ்வுகளில் மட்டுமன்றி எமது நாட்டை வெளிநா டுகளில் பிரதிநித்துவப்படுத்தும் போதும் பௌத்த அடையா ளமே பெரும்பாலும் பிரதிபலிக்கப்படுகிறது. இது பிற அரசுக ளின் பொதுப்புத்தியில் இலங்கையை ஒரு தனியான பௌத்த தேசமாக பதிவுசெய்துவிடும் என சிறுபான்மைத் தேசங்கள் கருதுகின்றன.

நாணயத்தாள்களில் கூட பௌத்த அடையாளச் சின்னங்க ளின் பிரதிபலிப்பைக் காணக்கூடியதாகவுள்ளது. சந்திரவட் டக்கல், பௌத்த விகாரைகள், பெரஹராக்கள் போன்ற பாரம் பரிய சிங்கள பௌத்த அடையாளங்கள் இலங்கையின் நாண யத்தாள்களில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. நாணய அலகு ஒரு அரசின் அடிப்படையான மூலக்கூறுகளில் ஒன்று என்ற வகை யில் அதில் ஒற்றைக் கலாசார அடையாளத்தைத் தவிர்த்து விடுவதே பொறுப்புள்ள அரசின் பணியாகும். அல்லது பல்க லாசாரத்தை அது பிரிதிபலிக்க வேண்டும்.

இலங்கையின் கடந்த கால மற்றும் சமகால அரசியல் போக்கு களில் அரசியல் பௌத்தத்தின் கலாசாரக் காட்சிகளை நாம் கண்ணுற்றவண்ணமே உள்ளோம். இன்றைய நாட்களில் அர சின் இந்தப் போக்கில் மிகநுண்ணிய அளவில் மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதையும் மறுக்க முடியாது. இச்சிறு மாற்றங்கள் பெருந்தளங்களிலும் நிகழ வேண்டும் என்பதே நமது எதிர் பார்ப்பாகும். ஓரளவு தற்போது அரசு மேற்கொள்ளப்போகும் புதிய அரசியல் மாற்றங்களில் இத்தகைய கலாசார மேலா திக்கப்போக்குகள் களையப்பட்டு சிறுபான்மைத் தேசங்களி னதும் கலாசார ஒருங்கிணைவுடன் ஒரு புதிய இலங்கை கட்டி யெழுப்பப்படுவதே இன்றை இலங்கையின் அவசியத் தேவை யாகும்.



jiffry.hassan@thaiveedu.com



# மூத்த அரசியலாளர் இரா. சம்பந்தன் மறைந்தார்

ஈழத்தின் மூத்த அரசியலாளர் திரு இரா. சம்பந்தன் அவர்கள் மறைந்தார்.

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் மூத்த அரசியலாளர் எனக் கருதத்தக்க திரு. இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள் யூன் 30-ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை தனது 91-வது வயதில் மறைந்தார்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் மொரட்டுவ சென்.



செபஸ்தியான் கல்லூரியிலும் உயர்கல்வியையும் பின் சட்டக் கல்வியையும் நிறைவுசெய்து வழக்கறிஞராகத் திகழ்ந்தவர்.

தமிழரசுக் கட்சியோடு இணைந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்ட இரா. சம்பந்தன், அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையில் இயங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் 1977-இல் நடைபெற்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றார்.

1977-இல் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாடுக் கோரிக்கையை முன்வைத்தே போட்டியிட்டது. இலங்கையின் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின்படி தனிநாடுக் கோரிக்கைக்கு ஆதரவளிக்க மாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் யாவரும் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும். இதை மறுத்து நாடாளுமன்றம் செல்லத் தவறியதால் கூட்டணி உறுப்பினர்கள் அனைவரும் பதவியிழந்தனர். இதனால் சம்பந்தன் அவர்களும் 1983 செப்டம்பர் 7-இல் பதவியை இழந்தார்.

இக்காலகட்டத்தில் ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றதாலும் இலங்கை அரசியல் இனவழிப்பு முயற்சிகள் தொடர்ந்ததாலும் சம்பந்தன் அவர்கள் தமிழகத்திலும் கொழும்பிலும் வாழ்ந்தார். ஆயுதப் போராட்டத்திலிருந்து அறவழி அரசியலுக்குத் திரும்பிய ENDLF, EPRLF, TELO என்பவற்றோடு தமிழர் விடுதலைக் கூட்டணியும் இணைந்து 1989-இல் தேர்தலில் போட்டியிட்டது. அன்றைய போர்ச் சூழலில் தமிழர் வாக்குப்பதிவு மிகக் குறைந்திருந்ததால் சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

ஆயுதப் போராட்டத்தில் உயர்ச்சி பெற்றிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின், அரசியல் பிரிவின் ஆதரவோடு மேற்குறித்த கட்சிகள் எல்லாம் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற புதிய அரசியல் தளத்தைக் கட்டமைத்தன. இக்கூட்டமைப்பின் தலைவராக திரு. இரா. சம்பந்தன் 2001-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவுபெறாத காரணத்தினால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயருக்குக் கீழ் கூட்டமைப்பு இயங்கியது. இக்காலத்தில் கூட்டமைப்பு, விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவோடு நெருக்கமாக இணைந்து பணி செய்தது.

அவ்வேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இயங்கிய திரு. ஆனந்தசங்கரி, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளோடு முரண்பட்ட நிலையில், கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரின் கீழ் இயங்க முடியாது எனத் தொடர்ந்த வழக்கில் வெற்றி பெற, கூட்ட



மைப்பு, தமிழரசுக் கட்சி என்ற பெயரின் கீழ் இயங்கியது. இவ்வேளை, தந்தை செல்வாவுக்கு அடுத்து தமிழரசுக் கட்சியின் தலைவராக இரா. சம்பந்தன் தெரிவுசெய்யப்பட்டார். அதையடுத்து 2004-இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற சம்பந்தன், மறைவடையும் வரை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக 24 ஆண்டுகள் பதவி வகித்தார்.

2009-இல் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு யுத்தத்தோடு, ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தபின்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரிதும் கொழும்பைத் தளமாகக் கொண்டே இயங்கியது. அப்போது ஆட்சியிலிருந்த ராஜபக்சர்களின் ஆட்சியில், சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இந்நிலையில் பெரிதும் மௌனமாக இயங்க வேண்டிய நிலை எஞ்சியிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டது.

சம்பந்தன் அவர்கள் அவ்வப்போது நாடாளுமன்றத்தில் தமிழர் நலனை முன்வைத்துச் சிறந்த உரைகளை ஆற்றியிருக்கின்றார். எனினும், பெரும்பான்மைத் தமிழர்களின் பிரதிநிதியாக இயங்கிய கூட்டமைப்புத் தமிழர்கள் முகாம்களில் வாடியபோதும், ஆயிரக் கணக்கானோர் சிறைகளில் அடைபட்டபோதும் சம்பந்தர் தலைமையிலான கட்சி குறிப்பிடும்படியான பணிகளைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.

2015-இல் இலங்கையில் இரு சிங்களத் தேசிய அரசியற் கட்சிகளும் இணைந்து, தேசிய அரசாங்கத்தை அமைத்தபோது, 19 உறுப்பினர்களோடு இருந்த தமிழர் தேசியக் கூட்டமைப்பு எதிர்க் கட்சியானது. திரு. சம்பந்தன் இலங்கையின் இரண்டாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றார். ஏறக்குறைய இரு ஆண்டுகள் இவர் இப் பொறுப்பிலிருந்தார்.

இவர் திருகோணமலைத் தமிழர்களால் பெரிதும் விரும்பப்பட்ட தலைவராகத் திகழ்ந்தார். திருகோணமலைத் தொகுதியில் தமிழ் மக்களின் எண்ணிக்கை குறைவுற்றுவரும் சூழலில் தமிழ் வாக்குகளைத் திரட்டி வெற்றிபெறுவது கடைசிக் காலங்களில் எளிதாக இருக்கவில்லை. எனினும் தன் செல்வாக்கில் குறைவுற்றிராத சம்பந்தன் அவர்கள், திருகோணமலையில் ஓர் ஆசனத்தைத் தமிழர்களுக்காகத் தக்கவைத்திருந்தார்.

தமிழ் மொழியிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்த இவர், சட்ட நுணுக்கங்களும் அறிந்தவர். வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் உரையாடுவதிலும் தமிழர் இன்னல்களை எடுத்துரைப்பதிலும் சிறப்பாகச் செயற்பட்டிருந்தார் என்றே கருதலாம். குறிப்பாக 2009-க்கு முன்பான காலத்தில் இவர் கொண்டிருந்த வெளியுறவுத் தொடர்புகள் முக்கியமானவை.

இலங்கை நாடாளுமன்றத்தில் வயது முதிர்ந்த அரசியல்வாதி என்ற பெருமையும் இவருக்கு உண்டு. கடந்த 15 ஆண்டுகால அரசியற் செயற்பாட்டில் இவர் மீதான விமர்சனங்கள் பல எழுந்தாலும் 50 ஆண்டுகால அரசியல் வாழ்வில் இவரது இருப்பும் தொடர்ச்சியும் தமிழர் தலைமை என்ற உயர் பொறுப்பை இவருக்கு வழங்கியிருந்தன.

விக்னேஸ்வரன், சுமந்திரன், குகதாசன் போன்ற அரசியலாளர்களைக் கட்சிக்குள் வரவைத்து கட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர். இன்றளவில் தமிழரிடையே வாழ்ந்த மூத்த அரசியலாளர் என்ற சிறப்புக்குரியவர்.

திரு. இரா. சம்பந்தன் அவர்களின் மறைவையிட்டுத், தாய்வீடு இதழ் தனது இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

info@thaiveedu.com



# ஐரோப்பிய, அமெரிக்கக் காற்பந்துப் போட்டிகள் 2024

—குரு அரவிந்தன்

காற்பந்தாட்ட ரசிகர்களை மகிழ்விக்கக் காத்திருந்த யூன், யூலை மாதங்கள் வந்துவிட்டன. இதற்காகக் காத்திருந்த பலரும் ஆவலோடு எதிர் பார்த்த யூரோ-2024 என்று அழைக்கப்படும் ஐரோப்பா காற்பந்தாட்டப் போட்டியும், கோபா அமெரிக்கக் கிண்ணப் போட்டியும் ஆரம்பமாகிவிட்டன. யூரோ-2024 இம்முறை ஜெர்மனியில் நடைபெறுகின்றது. இது ஜெர்மனியில் நடக்கும் மூன்றாவது போட்டியாகும். ஜெர்மனியில் 2006-ம் ஆண்டு நடந்த FIFA போட்டிக்குப் பின் நடக்கும் பெரிய போட்டியாகும். 2020-ம் ஆண்டு நடக்க வேண்டிய போட்டி கோவிட் காரணமாக 2021-ம் ஆண்டு தான் நடந்தது. அந்தப் போட்டியில் இங்கிலாந்துக்கெதிரான இறுதிப் போட்டியில் பனால்ட்டி அடித்ததன் மூலம் இத்தாலி வெற்றி பெற்றது. யூன் மாதம் 14-ம் திகதி தொடங்கிய இந்தப் போட்டி யூலை மாதம் 14-ம் திகதி வரை நடைபெற இருக்கின்றது. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 24 அணிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றுகின்றன. உக்ரேனுடன் நடத்தும் யுத்தம் காரணமாகப் போட்டிகளில் பங்கு பற்றுவதிலிருந்து இம்முறை ரஸ்யா விலக்கப்பட்டிருக்கின்றது.

அல்பேனியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், குரோஸியா, செக்குடியரசு, டென்மார்க், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜோர்ஜியா, ஜெர்மனி, ஹங்கேரி, இத்தாலி, நெதர்லாந்து, போலாந்து, போர்ச்சுக்கல், ருமேனியா, ஸ்கொட்லாந்து, சேர்பியா, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, துருக்கி, உக்ரைன் ஆகிய 24 நாடுகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருக்கின்றன. இதில் போட்டியை நடத்தும் நாடான ஜெர்மனி தானாகவே தெரிவானது. ஜெர்மனியின் 10 நகரங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறயிருக்கின்றன.

யூன் 14-ம் திகதி நடந்த போட்டியில் ஜெர்மனி - 5, ஸ்கொட்லாந்து - 1 என்ற அடிப்படையில் ஜெர்மனி வெற்றி பெற்றது. 15-ம் திகதி நடந்த போட்டியில் ஸ்பெயின் - 3, குரோஸியா - 0 என்ற அடிப்படையில் ஸ்பெயின் வெற்றி பெற்றது. அதே தினம் இத்தாலிக்கும் அல்பேனியாவுக்கும் நடந்த போட்டியில் இத்தாலி 2-1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. யூன் 19-ஆம் திகதி நடந்த போட்டியில் ஜெர்மனியும், 20-ம் திகதி நடந்த போட்டியில் ஸ்பெயின், 21-ம் திகதி நடந்த போட்டியில் ஆஸ்திரியா, 22-ம் திகதி நடந்த போட்டியில் போர்த்துக்கல் போன்ற நாடுகள் வெற்றியீட்டின. ஆஸ்திரியாவுடன் யூன் 17-ம் திகதி நடந்த போட்டியில் பிரான்ஸ் வீரர் எம்பாப்வேக்கு மூக்கில் பலமாக அடிபட்டிருந்தாலும் பிரான்ஸ் வெற்றி பெற்றது.

யூரோ காற்பந்தாட்டப் போட்டியில் சிறந்த காற்பந்தாட்ட வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவைப் பற்றிக் குறிப்பிடும் போது, யூரோ வரலாற்றில் 11 கோல்கள் போட்டு அதிக மதிப்பெண் பெற்றவர், போர்ச்சுக்கலின் 106 கோல்கள் போட்ட வீரர், தொடர்ந்து 5 யூரோ இறுதிப் போட்டிகளில் கோல் அடித்த வீரர் போன்ற சாதனைகள் அவருக்கே சேரும்.

இந்தப் போட்டிகளின் முடிவில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அணிகளின் புள்ளிகள் சமமாக இருந்தால், அப்போது குறிப்பிட்ட போட்டிகளின் போது பெற்ற அதிக புள்ளிகள், கோல் வேறுபாடுகள், அதிக கோல் அடிக்கப்பட்டவை போன்ற அளவு கோல்கள் அப்போது பயன்படுத்தப்படும்.

உத்தியோகபூர்வ யூரோ - 2024 சின்னமாக 'ஆல்பேர்ட்' என்ற டெடிபியர் கரடியின் சின்னம் அறிவிக்கப்பட்டது. இந்தப் போட்டிக்காக அறிமுகமான பந்தில் ஜெர்மன் மொழியில் 'காற்பந்தாட்டத்தின் காதல்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது, இது சிவப்பு, நீலம், ஆரஞ்சு மற்றும் பச்சை விளிம்புகள் மற்றும் வளைவுகளுடன் கூடிய கருப்புச் சிறகு வடிவங்களைக் கொண்டுள்ளது. யூரோ போட்டியில் இணைக்கப்பட்ட இந்தப் பந்து மின்னணு உணரியின் தொழில்நுட்பம் கொண்டது. நடுவர்கள் இறுதி முடிவு எடுப்பதற்கு இது உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளின் காற்பந்தாட்டம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க அமெரிக்கச் சூழல் நாடுகளின் காற்பந்தாட்டப் போட்டி 20-ம் திகதி அமெரிக்காவில் ஆரம்பமானது. அமெரிக்க மாகாணமான ஜோர்ஜியாவின் அட்லாண்டா நகரத்திலுள்ள மெர்சிடிஸ் பென்ஸ் மைதானத்தில் நடந்த முதல் நாள் போட்டியில் ஆர்ஜன்ரீனாவும் கனடாவும் போட்டியிட்

டன. சென்ற போட்டிகளில் வெற்றி பெற்ற ஆஜன்ரீனாவிடம் தான் உலகக் காற்பந்தாட்ட வெற்றிக் கிண்ணமும், கோபா அமெரிக்கக் கிண்ணமும் தற்போது இருக்கின்றன. இந்தப் போட்டியில் ஆஜன்ரீனா - 2, கனடா - 0 என்ற அடிப்படையில் ஆஜன்ரீனா வெற்றி பெற்றது. அமெரிக்கக் கிண்ணத்தைத் தக்க வைப்பதற்கான லயோனல் மெஸ்ஸியின் தலைமையி



லான ஆஜன்ரீனாவின் முதல் வெற்றியாக இது இருந்தது. தங்கப் பந்து விருதை எட்டு முறை தனதாக்கிய மெஸ்ஸி தனது அணிக்காகக் கோபா அமெரிக்கா - 2021, உலகக் கோப்பை -2022 ஆகிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றி தேடிக் கொடுத்திருந்தார். லயோனல் மெஸ்ஸி 2023-ம் ஆண்டு, காற்பந்தாட்ட சிறந்த வீரருக்கான விருதைப் பெற்றவர்.

பல போட்டிகளில் வெற்றி பெற்ற கொலம்பியாவும் இம்முறை ஆர்ஜன்ரீனாவை எதிர்கொள்ளக் காத்திருக்கின்றது. இந்தப் போட்டியில் 16 நாடுகள் பங்கு பற்றுகின்றன. அவையாவன:

- குழு ஏ-இல் ஆர்ஜென்ரீனா, பெரு, சிலி, கனடா
- குழு பி-இல் மெக்சிக்கோ, ஈக்வடோர், வெனிசூலா, ஜமேக்கா
- குழு சி-இல் அமெரிக்கா, உருகுவே, பனாமா, பொலிவியா
- குழு டி-இல் பிறேஸில், கொலம்பியா, பரகுவே, கோஸ்ராரிக்கா.

அமெரிக்காவின் 14 நகரங்களில் நடைபெற இருக்கும் இந்தப் போட்டியில், தென்னமெரிக்காவிலிருந்து 10 நாடுகள் பங்கு பற்றுகின்றன. அமெரிக்கக் காற்பந்தாட்டக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டி யூலை 14-ம் திகதி நடைபெற இருக்கின்றது. இதே தினம்தான் ஐரோப்பிய இறுதிச் சுற்றுப் போட்டியும் நடக்க இருக்கின்றது. தாயகத்தில் எமது கல்லூரி நாட்களில் நாங்கள் பங்குபற்றிய காற்பந்தாட்டப் போட்டிகளையும், எப்போதும் விளையாட்டை விளையாட்டாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எமது பெரியோரின் போதனையையும் இவை மீண்டும் நினைவூட்டுகின்றன.

யூ.ஈ.எவ்.ஏ என்று அழைக்கப்படும் Union of European Football Associations 1954-ம் ஆண்டு உதயமானது. இதன் தலைமையகம் சுவிச்சலாந்திலிருக்கின்றது. அடுத்த யூரோ - 2028 காற்பந்தாட்டப் போட்டி இங்கிலாந்து, அயர்லாந்தில் யூன், யூலை மாதங்களில் நடைபெற இருக்கின்றது. கோபா அமெரிக்கக் கழகம் (COPA) 1916-ம் ஆண்டு தென்னமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டு, பின் விருந்தினர்களாக வடஅமெரிக்காவும் இணைந்து கொண்டது. 2016-ம் ஆண்டு அமெரிக்காவில் இந்தப் போட்டி நடைபெற்றது. 1916-ம் ஆண்டு உருகுவே வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றது. 1919-ம் ஆண்டு பிரேசில் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றது. இதுவரை நடந்த ஆட்டங்களில் ஆஜன்ரீனா 9 தடவையும், உருகுவே 7 தடவையும், சிலி 7 தடவையும் பிரேசில் 6 தடவையும், பெரு 6 தடவையும் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டன.

16 சுற்றுப் போட்டியில் 29-ஆம் திகதி சுவிட்சர்லாந்தும் இத்தாலியும், ஜெர்மனியும் டென்மார்க்கும் மோதுகின்றன .30-ஆம் திகதி இங்கிலாந்தும் ஸ்லோவாக்கியாவும், ஸ்பெயினும் ஜோர்ஜியாவும் போதுகின்றன. யூலை 1 ஆம் திகதி பிரான்சும் பெல்ஜியமும், போர்த்துக்கலும் ஸ்லேவெனியாவும் மோதுகின்றன. யூலை 2 ஆம் திகதி ருமேனியாவும் நெதர்லாந்தும், ஆஸ்திரியாவும் துருக்கியும் மோதுகின்றன. யூலை 5, 6 ஆம் திகதிகளில் காலிறுதி ஆட்டங்கள் இடம் பெறும். யூலை 9-ஆம் 10-ஆம் திகதிகளில் அரையிறுதி ஆட்டங்கள் இடம் பெறும். 14-ஆம் திகதி 3 மணிக்கு யூரோ வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டி இடம் பெறும்.



kuruaravindan@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***




இன்றைய சமகால உலகில் கல்வியே மிகக் கூரான ஆயுதமாக மாறிச் சமூகத்தை மாற்றுவதாக முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா குறிப்பிடுகிறார். அதே நேரம் கல்வி குறித்துச் சமூகத்துக்கு விழிப்பூட்டினால் அதனை அடைந்துகொள்ளும் அளவு அவ்வளவு இலகுவான ஒன்றாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பொருளாதார நெருக்கடிகளும் வாழ்வியல் சிக்கல்களும் அப்படியாகியுள்ளன. இன்றைய கல்வி முறைகளும் முறைமைகளும் மிகக் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றன. கல்விக்கு ஒதுக்கப்படும் பிரமாண்டமான பணம் வீணாவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. கல்வி மூலம் தேசத்தின் விருத்தி மேம்படவில்லை. வாழ்க்கைத்தரம் உயரவேயில்லை என்பதெல்லாம் உண்மையான அம்சங்கள்.

இன்று கல்வியும் வகுப்பறைகளும் மிகுந்த அவதானத்தைப் பெறுகின்ற அம்சங்கள். ஒரு நாட்டின் எதிர்காலமும் தலைவிதியும் தீர்மானிக்கப்படும் இடங்கள் அவை. குறிப்பாக ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையான இலவசக் கல்வியை வழங்கும் நாடுகள் இது குறித்த அதி கூடிய கரிசனையை வெளிப்படுத்தியே ஆகவேண்டும். இங்கே இந்த ஆக்கம் வழியாகக் கற்றலுடன் கல்வி உளவியல் இணைக்கப்படும் புள்ளிகள் உளவியல் கோட்பாடுகளுடன் மாத்திரம் அமையாமல் அவற்றையும் தாண்டிய இயல்பு வாழ்வுடனும் நடைமுறை சார் தேவைகளுடனும் நோக்கப்படுகிறது.

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் முன்னேறிச் செயற்கை நுண்ணறிவு உச்சந் தொட்டு உடனே உதவிக்கு வரும் நிலை உருவாக்கப்பட்டிருந்தாலும் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத உரிமைகளைப் பகிர்ந்து கொடுக்காத தலைமுறைகள் தோன்றி உலகை அழித்துக்கொண்டிருக்கிறது. பிறரைச் சாடவும் தரந் தாழ்த்தவும் எழுத்தைப் பயன்படுத்துகின்றனர் கற்றவர். ஏழையின் பணத்தைச் சுரண்டுகிறது ராட்சத நிதி நிறுவனங்களும் பெரும் பணக்கார முதலைகளும். திறன்கள் சுரண்டப்படுகிறன. கொலை, கொள்ளை, இன அழிப்பும் ஒழிப்பும் விண்ணைத் தொடுகின்றன. இந்தக் கல்வி எதனைத்தான் இதுவரை வழங்கியுள்ளது என்பது மாபெரும் வினா.

இன்றைய கல்வி முறைமை ஒட்டுமொத்தமாகவே மாணவர்களை அழுத்தங்களுக்கு ஆளாக்குவதோடு ஒரு தரப்பு மட்டுமே பயன் பெறும் அம்சமாகவுள்ளது. சகலருக்கும் கல்வி, கல்வியில் ஜனநாயகம், சமத்துவம் என்பனவெல்லாம் அழகிய கோட்பாடுகளாக, வார்த்தை ஜாலங்களாக அமைவதைக் காணலாம். அறிவு சார் பொருளாதார உலகில் உயர் கல்வி உச்சந்தொட்டுள்ள நிலையில் கல்வி மீதான விமர்சனப் பார்வைகள் எமக்கு அவசியம்.

Paulo ferrori போன்றவர்கள் நவீன கல்வி முறைமைகளை எதிர்க்கவும், மாற்றுக் கல்வி முறைமைகளின்பால் ஒட்டு மொத்த உலகுக்குமே தேவையுள்ளதை உணர்த்தவும் முன் வந்தாலும் அவை இன்றளவும் எந்தளவு நடைமுறையில் உள்ளது என்பது கேள்விக்குரியதே.

விடுதலைப் போராளிகள் சமூக சீர்திருத்தவாதிகளின் முன்னெடுப்புகள் காரணமாக முன்னரை விடவும் உலகளாவிய அளவில் கல்வியைப் பெறும் சிறார்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது எனலாம். எனினும் பிள்ளைகளின் இயல்பாற்றல், உளவியல் பின்புலம், பொருளாதாரம் போன்றவை கருத்தில் கொள்ளப்பட்டு, உலகின் சவால்களுக்கு அமைவான கல்வி முறைமையும் மதிப்பீடுகளும் கணிப்பீடுகளும்தானா இடம்பெறுகின்றன? அல்லது டார்வினின் பரிணாமக் கோட்பாட்டின் கூறான 'தக்கன பிழைத்துக்கொண்டு உயிர்வாழும்' நிலை உள்ளதா என வினவினால் அங்கு தான் சிக்கலும் சீர்குலைவும் தோன்றுகிறது.

கல்வித்துறையில் இன்றளவும் ஜனநாயகமோ, சமத்துவமோ, சமவாய்ப்போ சொல்லிகொள்ளும் அளவில் இல்லை. பரீட்சை மையக் கல்வி முறைமையும் அதற்கான ஆர்வமூட்டலும் வெகுமதியளிப்புமே மேலோங்கியுள்ளன. அத்தகைய மீத்திறன் கொண்டவர்கள் கொண்டாடப்படுகின்றனர். அவர்களுக்கு மட்டுமே வாய்ப்புகளும் வாயில்களும் அகலத்திறந்து கொள்கின்றன.

கல்வி முறைமை, பரீட்சை முறைமை, சமூக அந்தஸ்து, தொழில் வாய்ப்புப் போன்றன ஒரு தரப்பை ஒடுக்கி மறு தரப்பை முன்னோக்கி நகர்த்தி விடுவதாக உள்ளது.

Paulo ferrori சொல்வது போல எடுத்துச் சொல்லும் முறையாகவே இன்றைய கல்வி முறைமையும் கலைத் திட்டமும் பாடத் திட்டமும் பரீட்சைகளும் ஏன் நேர்முகத் தெரிவுகளும் உள்ளன. நினைவாற்றல் மட்டுமே கூர்மையாகப் பரீட்சிக்கப்படுகின்றது. ஒரு பக்கத்தில் ஆசிரியர் தன் பேராற்றலைச் செப்பிடு வித்தை போலக் கொட்டித்தீர்க்க, உள்வாங்கிக் கிரகிக்கும் மாணவர் அவற்றைச் சீராக ஜீரணிக்கும் முன்பே பரீட்சை வினாத்தாளில் வாந்தியாகக் கொட்டிவிட வேண்டும்.

ஆசிரியர் பேராற்றல் படைத்த சர்வ வல்லமை பொருந்தியவர். மாணவர்கள் அடங்கி ஒடுங்கிச் செவியும் சிரமும் தாழ்த்திப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். எதிர்க்க முடியாது. தன் கருத்தைச் சொல்ல முடியாது. வினாத் தொடுக்க முடியாது. மாற்றுப் பார்வைகளை முன்வைக்க முடியாது. இந்தச் சட்டங்களை மீறுவது மாபெரும் வரலாற்றுக் குற்றம், அத்துமீறல், கலாசாரத்துக்கு எதிரான செயல், அங்கீகரிக்க முடியாத அம்சம் எனும் பார்வை இன்னும் மங்கியதாகவோ மறைந்தாகவோ இல்லை.

இது நேற்று இன்று தோன்றிய கருத்துகளோ, மாற்றுப் பார்வைகளோ அல்ல. இவை காலத்தால் முந்தியவை. உலகக் கல்வி முறைமை ஆரம்பத்தில் எகிப்தில் தோன்றியதாகச் சொல்லப்படுகிறது எனின், இது 'மம்மி'யைப் போலப் பழைமை வாய்ந்தது. இதனால் தான் பண்டைய கிரேக்க நாகரீகத்தின் பிதா மகன்களாகக் கருதப்பட்ட சோக்ரடீஸ், அரிஸ்டோடல், பிளேடோ முதல் இன்று வரை மாற்றுக் கருத்துகள்,

> **மாணவர்களின் இயல்பான ஆற்றல்களைப் பெற்றோர் இனங்காணவும் பிள்ளைகளின் இயல்புக்கும் ஆற்றல்களுக்கும் அமைவாக சுய கற்றலை மேம்படுத்தவும் உதவும் உண்மையான நபர்களாகப் பெற்றோர் திகழவேண்டும். மாணவர் மையக் கல்வி என்பது பெற்றோரின் வீட்டுச்சூழல் சார்ந்த ஈடுபாடுகள் வழியாகவே சாத்தியமாகும்.**

பார்வைகள் முன்வைக்கப்படுகின்றன. இதனால் தான் நவீன உலகிலும் ஆசிரியர்களே தேவையில்லை என ரூசோவும் பள்ளிக்கூடமே தேவையில்லை என ஜோன் ஹோல்டும் பள்ளிகள் குழந்தைகளுக்கு நல்லதேயில்லை (Schools are bad places for kids) என குரூஸ் போன்றவர்களும் குறிப்பிட நேர்ந்தது.

தத்தமது சமூக அரசியல் சமயப் புவியியல் நிலைமைகளைக் கருத்தில் கொள்ளாது யாரோ ஒரு தரப்பின் மேம்பாட்டுக்கும் வசதிக்கும் சுரண்டலுக்கும் ஆளாகும் ஒன்றாகக் கல்வி ஆக்கப்பட்டுள்ளது. அதற்கு முதலிடப்படுகிறது. வேலை உலகு ஒன்றை உருவாக்கி அதற்குத் தோதுவான கற்கைகள் உருவாக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகின்றன.

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு என்பது கல்விக்கான செலவிடலுடன் மட்டுப்படும் ஒன்றல்ல. அதனையும் தாண்டிய ஆத்மார்த்த உறவு கொண்டது. பிள்ளைகளுடன் நெருக்கமாகவிருந்து ஆரத்தழுவி அரவணைத்து வழிகாட்ட வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும் தத்தமது நாடுகளின் கலைத்திட்டம், கல்வி, வரலாறு, பாடத்திட்டம் போன்றவை குறித்துத் தெரிந்திருக்க வேண்டும். சமகாலக் கல்வி உலகு தத்தமது நாடுகளின் நிலைமைகள் குறித்துத் தெளிவு பெற வேண்டும். அப்போது தான் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் கட்டிறுக்கமான நேர்த் தன்மை வாய்ந்த தொடர்பை அறுபடாமல் பேணி வர முடியும். இது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் ஈடுபாட்டைப் பாடசாலைச் சமூகத்துடன் இணைப்பதற்கு வழியமைக்கும். வீட்டுச் சூழலில் கற்றலை மேற்கொள்ளவும் அவதானிக்கவும் வழிகாட்டவும் சந்தர்ப்பங்களை உருவாக்கும். பிள்ளைகளின் கற்றலைப் பாடசாலைகளிடம் மாத்திரம் ஒப்படைத்து ஒதுங்கி விடுவது கல்வி சார்ந்த உளவியல் வழிகாட்டல்களாக அமையாது. மாணவர்களின் இயல்பான ஆற்றல்களைப் பெற்றோர் இனங்காணவும் பிள்ளைகளின் இயல்புக்கும் ஆற்றல்களுக்கும் அமைவாக சுய கற்றலை மேம்படுத்தவும் உதவும் உண்மையான நபர்களாகப் பெற்றோர் திகழ வேண்டும். மாணவர் மையக் கல்வி என்பது பெற்றோரின் வீட்டுச்சூழல் சார்ந்த ஈடுபாடுகள் வழியாகவே சாத்தியமாகும்.

பிள்ளையின் பாடசாலை, வகுப்பறைகள், பௌதீக சூழல், நிர்வாகம், ஆசிரியர்கள், பாடங்கள் குறித்தும் நண்பர்கள் குறித்தும் பெற்றோர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவ்வாறே பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் வாகன சாரதிகள் குறித்தும் அறிந்திருக்க வேண்டும்.

வகுப்பறைகள் எல்லா வகையிலும் ஆரோக்கியமாக இருந்தால் மாணவர்கள், கற்றலுக்கான எல்லாச் சந்தர்ப்பங்களையும் தாமே உருவாக்கிக் கொள்வார்கள். அங்கு இறுக்கமோ திணிப்போ இருக்காது. மாணவர்கள் சௌகரியமான மனக் கட்டமைப்புடன் தளர்வான சிந்தனைகளுடன் தமது கல்வியைத் தொடர்வார்கள். எதிர்காலம் குறித்த பார்வையுடன் இலட்சியக் கனவுகளுடன் அது இறுதி வரை நீளும். கற்றலின் துடிப்பு மிகு பங்காளர்களாக மாணவர்கள் தம்மைக் கருத வேண்டும். முழுமையாகப் பங்கேற்றுக் கற்கும் போது தான் உணர்வுகளும் அனுபவங்களும் வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக மாறும். அதுவே உயிர்ப்புள்ள கல்வியாக அமையும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. அது புள்ளிகளாகவோ தண்டனைகளாகவோ வழங்கப்படும் வாய்ப்புகளாகவோ அமையலாம். இந்த அமைப்பில் நின்று பிள்ளைகளுக்காக வழங்கப்படும் கல்வியே நிலையான கல்வியாக அமையும்.



bisthamy.ahamed@thaiveedu.com

# இடர்களைத் தவிர்க்கும் பத்து வழிமுறைகள்

– செந்தூரன் புனிதவேல்

கோடை கால ஆரம்பத்துடன் மக்களின் பயணங்களும் தொடங்கிவிட்டது. பனிக்காலத்தில் வீட்டினுள் அடைந்திருந்த மக்கள் அதிகமாகவே பயணங்களில் ஈடுபடுவது இயல்பாகும். இந்நிலையில் எப்படி வரக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்க்கலாம் என்பதற்குப் பத்து வழிமுறைகளை இங்கு நாம் கவனிப்போம்.

### முதலாவது வழிமுறை:

உங்கள் வாகனங்களைத் தயார் செய்வது. உதாரணமாக: வாகனத்தை ஒரு நல்ல வாகனம் திருத்தும் இடத்தில் விட்டு வாகனத்தில் சில்லுகள், இயக்கக் கருவிகள் மற்றும் Brake எனப்படும் தடுப்புக் கருவி, அதில் விடப்படும் எண்ணெய் என்று அனைத்தையும் அவதானித்துத் சீர்செய்து வைத்துக் கொள்வதவசியம். நல்ல சுவர் இருந்தால் தான் அழகிய சித்திரம் வரைய முடியும் அல்லவா ?

### இரண்டாவது வழிமுறை:

வாகனத்தைச் செலுத்துகையில், செலுத்துவதில் பூரண அவதானத்தையும் செலுத்துங்கள். துரோணாச்சாரியாருக்கு அருச்சுனனில் மிக்க விருப்பம். அவனே தனது சிறந்த மாணவன் என்று குறிப்பிடுவார். மற்றைய மாணவர்களுக்கு இதனால் அவரிடம் கொஞ்சம் கோபம். அதுபற்றி அவரிடம் கேட்ட போது, அவர் தனது மாணவர்கள் அனைவரையும் அழைத்து அங்கு மரத்தில் காய்த்திருந்த மாங்காயைக் குறிவைக்கச் சென்னார். ஒவ்வொருவரிடமும் என்ன தெரிகிறது எனக் கேட்ட வேளை அருச்சுனனைத் தவிர அனைவருக்கும் மரம் தெரிந்தது, கிளை தெரிந்தது, மாங்காயும் தெரிந்தது. அருச்சுனனுக்கு மட்டும் அவை ஒன்றுமே தெரியவில்லை. அவனுக்குத் தெரிந்தது மாங்காயின் காம்பு மட்டுமே. அம்பை எய்யவேண்டிய இலக்கு மட்டுமே அவன் கண்களுக்குத் தெரிந்தது. அதனால் தான், தனக்கு அவன் மேல் விருப்பு என்றார். நீங்களும் வாகனம் செலுத்தும் வேளை உங்கள் கவனம் அனைத்தும் செலுத்துவதில் இருப்பதவசியம். செல்போன், கணினி எல்லாம் நிறுத்தப்பட்டிருப்பது அவசியம். செல்போன் கதைக்க வேண்டுமானால் வாகனத்தை அருகில் நிறுத்தி விட்டுக் கதையுங்கள்.

### மூன்றாவது வழிமுறை:

நீண்ட பயணம் மட்டுமல்ல, பயணம் இலக்கை அடையும் வரை சலிப்பைத்தரும். சலிப்பைத் தவிர்ப்பதற்காக உடன் பயணிகளுடன் அரட்டையில் ஈடுபடுவதை எப்போதும் தவிர்ப்பதவசியம். ஒருவர் பேச்சுத் துணைக்கு இன்னொருவரை அழைத்துச் செல்வதாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படிப் பேசவேண்டுமானால் வாகனத்தை நிறுத்திவிட்டுக் கதைப்பது தான் சிறப்பாகும். வாகனச் செலுத்துனராக இருக்கும் வேளை, உங்கள் தலையாய பங்களிப்பு வாகனத்தைச் செலுத்துவதுதான் என்பதை மறக்க வேண்டாம்.

### நாலாவது வழிமுறை:

பொதுவாக மனதில் ஓர் எண்ணமுண்டு. அதாவது, வாகனத்தில் செல்லும் வேளை அந்த நேரம் வீனாகிறது என்றும், அந்த நேரத்தை வீணாக்காமல் உணவருந்துவதைச் செய்து முடிக்கலாம் என்று எண்ணுவதுதுண்டு. தயவு செய்து வாகனம் செலுத்துவது நேரத்தை வீணடிப்பதல்ல. அந்த நேரத்தில் உங்கள் சக பயணிகளையும் உங்களையும் ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்குப் புலம்பெயரச் செலவழிக்கிறீகள். எனவே நீங்கள் நேரத்தை வீணடிக்கவில்லை. அந்த நேரத்தில் உணவை உண்ணச் செலவிடாதீர்கள். வீணாக ஆபத்தை விலைக்கு... இல்லையில்லை, ஆபத்தை இலவசமாக வாங்குபவராகாதீர்கள். எக்காரணம் கொண்டும் செலுத்துனர், வாகனம் செலுத்துகையில் உணவு உண்பதை, தேனீர் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.

### ஐந்தாவது வழிமுறை:

நெடும் பயணம் மேற்கொள்ளும் வேளையில் போதியளவு இடையில் நிறுத்தி ஓய்வெடுங்கள். குறிப்பாக நெடுஞ்சாலைகளில் அதற்கான இடங்கள் இருப்பதனை நீங்கள் அறிவீர்கள். அவற்றில் சிறிது இளைப்பாறி இருந்துவிட்டுப் பயணத்தைத் தொடருங்கள். இத்தகைய ஓய்வு உங்களுக்கும் உங்கள் வாகனங்களுக்கும் நன்மை பயக்கும்.



## ஆறாவது வழிமுறை:

வாகனங்களைச் செலுத்துகையில் குழந்தைகள் குறுக்கிடு கின்றனவா என்று அவதானமாயிருப்பது மிக்க அவசியம். அதுவும் கோடை விடுமுறையில் பள்ளிக்கூடங்கள் மூடி இருப்பதனால் குழந்தைகள் வீட்டில் விளையாடிக் கொண்டி ருக்கையில் நாய்க்குட்டியையோ அல்லது பந்தையோ கலைத்துக் கொண்டு பாதையின் குறுக்கே குழந்தைகள் பாயலாம். அக்குழந்தையுடைய மரணத்துக்கு நீங்கள் காரண மாய் இருப்பதைவிட பெரும் கொடுமை வேறு கிடையாது.

## ஏழாவது வழிமுறை:

நீங்கள் பயணிக்கும் பதையில் பெரும் தீ பரவியுள்ளதா அன் றிப் பெரும் புயல் குறுக்கிடுமா என்பதில் அவதானமாய் இருப்பதவசியம். இணையத்தளங்களில் தீ பற்றிய விபரத்தை Canadian Wildland Fire Information System-இல் பெற்றுக் கொள்ளலாம். இயற்கையை நாம் மாற்ற முடியாது. ஆனால், எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளலாம் அல்லவா ?

## எட்டாவது வழிமுறை:

அவசர தேவைப் பொதி (Emergency Kit) ஒன்று வாகனத்தில் இருப்பதவசியம். அதில், கீழ்க்கண்ட பொருட்கள் இருக்க வேண்டும்.

- செல்போன் மற்றும் அதனை மின் ஏற்றுவதற்குரிய கருவி.
- முதலுதவிப் பெட்டி.
- கைவிளக்கு (Torch Light).
- வேறு வாகனத்திலிருந்து மின் ஏற்றும் கருவி (Jumper Cable).
- மெழுகு திரியும் தீப்பெட்டியும்.
- நீர்.
- போர்வை.

மேற்கூறிய அனைத்துமே நெடும் பயணங்கள் செல்லும் வேளையில் மட்டுமல்ல, எப்பவும் தேவைப்படலாம்,

## ஒன்பதாவது வழிமுறை:

பயணக் காப்புறுதி. பலரும் எண்ணுவதுண்டு கனடா முழுவ தும் எமக்கு வேண்டிய வைத்தியப் பராமரிப்பை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று. ஆனால், வைத்தியப் பராம ரிப்பு கனடாவின் தேசிய அரசாங்கத்தில் அல்லாமல் மாகா ணப் பராமரிப்பில் பெறப்படுகிறது. எனவே, கனடாவுக்குள் ளும் பயணம் செய்கையிலும் உங்களுக்குத் தெரிந்த பய ணக் காப்புறுதி முகவருடன் கலந்தாலோசித்துப் பயணக்காப் புறுதியை பெற்றுக்கொள்ளுங்கள். உதாரணத்திற்கு நீங்கள் நோவா ஸ்கோசிய மாகாணத்திற்குச் செல்வதானால், உங் கள் ஒன்ராறியோ மாகாணக் காப்புறுதி பயன்படுமா என்பதை அறிந்து செயற்படுங்கள்.

## பத்தாவது அறிவுரை:

பலரும் நெடிய பயணத்திற்கு வாகனங்களை வாடகைக்குப் பெற்றுச் செல்வது வழக்கம். ஆனால் உங்கள் சொந்த வாக னக் காப்புறுதி அவற்றிற்குச் செல்லுபடியாகாமல் போகலாம், அல்லது வாடகை வானத்துக்கும் காப்புறுதி செய்வதாக இருக்கலாம். உங்கள் வாகனத்தைக் காப்புறுதி செய்தவரிடம் இது பற்றி விசாரித்து தகுந்த வாகனக் காப்புறுதியைப் பெற் றுக்கொள்ளுங்கள்.

இந்தக் கோடைகாலம் மகிழ்ச்சியாக நிலைப்பதற்கு வாழ்த்து களுடன் விடைபெறுகிறேன்.



senthuran.p@thaiveedu.com




கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மின்சாரப் பாவனைக்காக (Smart Meter) ஸ்மாட் மீற்றர் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதும் அதன் அடிப்படையில் ஒன்ராறியோ மாகாணம் முழுவதும் மாதாந்த மின்சாரக் கட்டணம் அறவிடப்படுவதும் சகலரும் அறிந்ததே. பூகோள ரீதியாக ஏற்பட்டிருக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பில் மின்சாரக் கட்டணச் செலவும் கணிசமான இடத்தைப் பிடித்துள்ளது. சற்று ஆழமாக உற்று நோக்கினால் கடந்த 10 வருடத்தில் மின்சாரச் செலவு சராசரியாக இரண்டு மடங்கிற்கு மேலாக அதிகரித்திருப்பதை அவதானிக்க முடியும். எனவே இத்தகைய செலவினைக் கட்டுப்படுத்த எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றலாம் என்பது பற்றி ஒவ்வொரு வரும் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஒன்ராறியோ மின்சார சபை (OEB) எதிர் வரும் ஆண்டிற்குரிய புதிய மின்சாரக் கட்டணத்தை நிர்ணயம் செய்கின்றது. அந்த வகையில் 2023 நவம்பரில் ஏற்கனவே இருந்த இரண்டு விலைத்திட்டங்களுடன் (Price Plan) புதிதாக மூன்றாவது விலைத் திட்டத்தையும் அறிமுகம் செய்துள்ளது. அத்திட்டங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- TOU (Time - Of - Use)
- Tiered
- ULO (Ultra - Low Overnight) (New)

நீங்கள் ஒரு குடியுரிப்பாளராகவோ அல்லது சிறுதொழில் (Small Business) செய்பவராகவோ இருந்தால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும். ஆனால் நீங்கள் ஏற்கனவே ஒரு சில்லறை விற்பனையாளருடன் மின்சார விநியோகத்திற்காக ஒப்பந்தம் செய்திருந்தால் இத்தகைய தெரிவுகளைச் செய்ய முடியாது என்பதைக் கவனத்திற் கெள்ளவும்.

**TOU – Price Plan:**

TOU Plan with Price




படம்: 1

பாவனைக் காலத்திற்கான விலைத் திட்டம் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நடைமுறையில் உள்ளது. நீங்களாக ஒரு தெரிவையும் செய்யாதிருந்தால் இயல்பு நிலையில் (Default) இத்திட்டமே அமுலில் இருக்கும் இத்திட்டம் கோடை காலம், மாரிகாலம் என இரண்டாக பிரிக்கப்பட்டு பருவகால அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2023 நவம்பரில் வெளியிடப்பட்டுள்ள நடப்பு ஆண்டிற்கான விலைப் பட்டியல் படம்: 1-இல் தரப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறுவதானால் மாலை 7மணி முதல் காலை 7மணி வரையும் உள்ள உச்சமற்ற காலப் பகுதியிலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களுக்கான காலப்பகுதியிலும் பாவிக்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணமே மிகக் குறைவான கட்டணமாக அலகிற்கு 8.7 சதமாக இருப்பதை அவதானிக்க முடியும்.

பொதுவாகக் கூறுவதனால் மின்சாரத்தோடு தொடர்புடைய அதாவது அதிகளவு மின்சாரத்தை நுகரக் கூடிய Baking, Dish Washing, Cloth Drying போன்ற செயற்பாடுகளை இக் காலப் பகுதியில் மேற்கொள்வதன் மூலம் மின்சாரச் செலவைக் கணிசமான அளவு குறைத்துக் கொள்ளலாம். குறிப்பாக மின்சாரத்தில் இயங்கும் கார்களை வைத்திருப்பவர்கள் தமது வாகனங்களை சார்ஜ் செய்வதற்கு இக்காலப் பகுதியைப் பாவிப்பதே சாலச் சிறந்தது. உச்சமற்ற (OFF Peak) காலப்பகுதியைக் கவனத்திற் கொள்ளாது உச்சமான (ON Peak) காலப்பகுதியில் இச்செயற்பாடுகளை மேற்கொண்டால் உங்கள் மாதாந்த கட்டணம் 49% அதிகமாகக் காணப்படும் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

உங்களது மின்சாரப் பாவனைக்கான கணக்கை Online-ஆகவோ அல்லது Monthly Bill-ஐயோ உற்று நோக்கினால் கடந்த 30 நாட்களுக்கான பாவனை விபரம் நாளாந்த பாவனைக் கால அடிப்படையில் விளக்கப்படத்துடன் (Chart) இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதனைச் சற்று உற்று நோக்கினால் ஒரு நாளில் எந்த நேரத்தில் எவ்வளவு அலகுகளை பாவித்திருக்கிறோம் என்பதை இலகுவில் அறிந்து கொள்ளலாம். இதனைப் பார்த்து அதற்கேற்ப உங்கள் செயற்பாடுகளை திட்டமிட்டு அமுல் படுத்துவதன் மூலம்




படம்: 2

அதிக நன்மை அடையலாம். (மாதிரி விளக்கப்படம்: 2-இல் இணைக்கப்பட்டுள்ளது.)

## Tiered Price Plan அடுக்கு விலைத் திட்டம்:

அடுக்கு விலைத் திட்டத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு பாவிக்கப்படும் காலத்தைத் தவிர்த்து ஒரு நாளில் எந்த நேரம் பாவித்தாலும் ஒரு நிலையான விலையில் மட்டும் கட்டணம் அறவிடப்படும். இந்த விலை, உச்சமற்ற காலத்திற்கு அறவிடப்படும் விலையைவிட சற்று அதிகமாக இருக்கும். அத்துடன் ஒரு மாதத்துக்கு என வகுக்கப்பட்டிருக்கும் எல்லையைக் கடந்து பாவிக்கும் பட்சத்தில் அத்தகைய மேலதிக அலகிற்கு சற்று அதிக விலை செலுத்த வேண்டியிருக்கும். இந்த எல்லை Tier ஒன்றை தெரிவு செய்யும் குடியிருப்பாளருக்கு கோடை காலத்தில் 600 KWH ஆகவும், மாரிகாலத்தில் 1000 KWH ஆகவும் இருக்கும். சிறுதொழில் செய்பவர்களுக்கு பருவகாலக் கட்டுப்பாடின்றி ஆண்டுமுழுவதும் 750 KWH ஆக இருக்கும்.

(மாதிரி விளக்கப்படம்: கீழே தரப்பட்டுள்ளது.)




படம்: 3

தாங்கள் நினைத்த நேரங்களில் நினைத்தவற்றை செய்ய வேண்டும் என எண்ணுபவர்களுக்கும், வேலைப்பழு காரணமாகவோ அல்லது செலவு பற்றி அலட்டிக் கொள்ளாமலோ இருப்பவர்களுக்கும் இத்திட்டம் பொருத்தமானது. உங்கள் மாதாந்த மின்சார Bill-களை பார்த்து எந்தத் திட்டம் பொருத்தமானது என நீங்களே முடிவுகளை மேற்கொள்வது புத்திசாலித்தனமானது என்பது எனது கருத்து.



velasubramaniam@thaiveedu.com

# தசை நினைவாற்றல்

- நிரேஷ் ரட்ணம்

கிளிக், கிளிக். யாழினியின் விரல்கள் விசைபலகையைத் தாக்கின. 'உன் மூளைய உன் உடம்போட கண்ட்ரோல் சென்டரா நினைச்சு பாரு' அவள் ஆரம்பித்தாள், 'என்ன பண்றதுன்னு உன் தசைக்கு மெசேஜ் அனுப்பும். நீ முதல் தடவ கார் ஓட்டக் கத்துகிறதோ' எனத் தொடர்ந்தாள்.

எனது மைக்புக் கணினி விசைப்பலகையில் நேர்த்தியாக எழுதியபடி, வெறிச்சோடிய படுக்கையில் அமர்ந்தபடி தலையசைத்தேன். யாழ்னி தரையில் குனிந்து, அவளது கணினியை தன் தொடையில் வைத்து, சுவரில் தன் முதுகை முட்டுக் கொடுத்துக் கூறினாள். 'எல்லாத்தையும், ஒவ்வொரு படிப்படியா சொல்லிக் கொடுக்குமாம்'.

நான் கணினித் திரையை பார்த்துக் கொண்டிருக்க, பேபி, என்ன பாரு. என்றாள் யாழ்னி, உன் மூளை உன் தசைக்கு எவ்வளவு நகரனும், எவ்வளவு வேகமா நகரனும், எத்தன தடவை நகரனும், எந்த வரிசையில் நகரனும்னு எல்லாம் சொல்லுமாம். உன் மூளை தான் ஒவ்வொரு தசைக்கும் கட்டளை கொடுக்கிறதாம்.

'இதோ, நீ எனக்கு பண்ற மாதிரியா'? நான் கேட்டேன். சரி, உனக்கு நான் எதுவும் சொல்லல... அவள் முணுமுணுத்து விசைப்பலகையை மேலும் கடினமாக அழுத்தினாள்.

எனது படுக்கையில் தனியாக உணர 'இங்க வா பேபி' என்று அவள் கையை இழுத்து, 'சரி, இங்க வந்து எல்லாத்தையும் சொல்லு' என்றேன். அவள் என்னைப் புறக்கணித்தாள். கிளிக்-கிளாக்கும் மூர்க்கத்துடன் வளர்ந்தது.

கிளிக், கிளிக். 'நீ இல்லாம இங்க ரொம்ப தனிமையாக இருக்கு. நான் செல்லம் பொழிய'. அவள் மேலும் கடினமாக விசைப்பலகையை அழுத்தினாள். 'அப்படி வேணும்னா நீ இங்க வா' என்று உரையாடலுக்கு முற்றுப் புள்ளி வைத்து அவள் வேலையைத் தொடர்ந்தாள்.

காகிதங்களை புரட்டும் சலசலப்பு, எங்கள் அறையின் அமைதியை குலைக்க, அவளின் விசைப்பலகையின் சத்தத்தின் வேகமும் அதிகரிக்க, இன்னும் மௌனம் எஞ்சியிருந்தது.

'ஓ, நோ நோ நோ!' அவள் உரக்க முணுமுணுத்தாள். அவளின் குரல் சுவரில் பட்டுத் தெறிக்க, உதிர்ந்த இலைகளாய் காகிதங்கள் அவளைச் சுற்றி சிதற, தரையில் சாய்ந்து, ஒரு புத்தகத்திற்குள் முகம் புதைத்து, கத்தினாள் 'அது சாகுது சாகுது, நோ, என் பேட்டரி!' இட்ஸ் டையிங்! சார்ஜ் இல்லை!

பதில் தெரிந்திருந்தும் அவளிடம் கேட்டேன், 'உன் சார்ஜர் எடுத்துட்டு வரலையா?'

அவளின் முனகல் புத்தகத்தின் வழியே வந்தது, 'என்னென்னு நினைக்கிற?' தொடர்ந்து பெருமூச்சையும் விட்டாள். விரத்தி முகத்தை நிரப்பியது. அவள் காலடியில் சிதறிக்கிடந்த காகிதங்களை சேகரித்தாள்.

அவளைக் கிண்டல் செய்வதை நிறுத்த முடியாமல், 'பேபி, சுவிட்சர்லாந்து தானே? சட்டுனு ஒரு பத்து மணி நேரத்தில போய் எடுத்து வரவா?' என சிரித்தேன்.

முறைத்தாள். 'ஹா ஹா, ரொம்ப சிரிப்பு வருது' என்று கோபத்தில் புத்தகத்தை அடித்து மூட, நான் சற்று அடக்கி வாசிக்க வேண்டும் என உணர்ந்தேன்.

இருந்தாலும் விடாமல் 'இதுக்கு தான் மைக்புக் வாங்கனும்னு சொல்றது', என்று விளையாட்டுப் பிள்ளையாக தொடர்ந்தேன், 'எல்லாரையும் மாதிரி நீயும் மைக்புக் வச்சிருந்தா ஒரு பிரச்சனையும் இல்லை'.

'என்னமோ என் ஸ்டூடண்ட் காசுல மைக்புக் வாங்க முடியும் மாதிரிப் பேசுற?' அவள் பதிலடி கொடுத்தாள். அவளது குறிப்புப் பக்கங்களை ஆக்ரோஷத்துடன் புரட்டினாள். 'இரண்டு மணி நேரத்துல டெட்லைன்!'

அவள் கண்களில் கவலை, அப்பாவி முகம், என் கை என் மைக்புக்கை படுக்கையில் இருந்து எடுத்து அவளை நோக்கி தள்ளியது. 'ப்ளீஸ் ஜாக்கிரதையா பாத்துக்கோ' முணுமுணுத்தேன்.

யாழினி என்னை பார்த்தாள் 'நோ நோ' என் போன்ல எழுதிக்கிறேன். எதுக்கு உனக்கும் உன் அருமையான மைக்புக்குக்கும் பாரமா'.

நான் அவள் அருகில் அமர்ந்து அவள் கன்னத்தில் ஒரு முத்



தம் கொடுத்தேன். 'எடுத்துக்கோ' என்றேன். 'ஆனா மெதுவா எழுது' செல்லத் தட்டோடு முத்தமிட்டாள்.

மெதுவாக, கவனமாக, எழுதத் தொடங்கினாள். முன்பு போல் விசைப்பலகையை விரல்களால் அறையவில்லை. ஒவ்வொரு எழுத்தையும் தேர்ந்தெடுத்த மென் அழுத்தத்துடன் கட்டுப் பாட்டுடன் தட்டியது, அவள் எழுத்துக்களை தட்டச்சு போலில் லாமல் மண்ணில் குழைப்பது போல் இருந்தது. இதைக் கண் டிருந்திருந்தால் அவளது கணினியின் விசைப்பலகை பொறா மையுடன் பெருமூச்சு விட்டிருக்கும். ஆனால், ஒரு வித இறுக் கம் அவள் தோள்களில் ஒட்டிக்கொண்டது. அவள் விரல்கள், தப்புத்தாளம் போட்டன. அவள் அசைவுகள் கடினமாய், அவ ளுடைய தசைகள் பழக்கப்பட்ட அசைவுகளுக்கு ஏங்கின.

முந்திய எழுத்து முறையிலிருந்து முற்றிலும் எதிராக யாழினி எழுத ஆரம்பித்தாள். ஒவ்வொரு எழுத்தும், சுயநினைவோடு, கட்டுப்படுத்தப்பட்ட அழுத்தலோடு திரையேறியது.

சிறிது நேரம் கழிய, அவள் தோள்களில் படர்ந்த இறுக்கம் தணிந்தது. அவள் விரல்கள் விசைபலகையின் குறுக்கே பாயத்தொடங்கியது. அவளுடைய தசைகள் புத்துணர்ச்சிய டைந்தன. அவளுள்ளே ஒருவித திருப்தி. அது அவளின் விரல்கள் மீண்டும் விசைபலகையை தாக்கிய தருணம். நானும் அவளைப் பார்க்க, அவள் எல்லாவற்றையும் நிறுத்தி, 'உன் காதலி நானா ? இல்ல மைக்புக்கா ?' எனச் சீறினாள்...

## நினைவு ஆன்மாவின் செயலாளர் அரிஸ்டாட்டில் (பொ.மு 384–322)

அரிஸ்டாட்டில் இரு வகை அறிவு பற்றிக் குறிப்பிடுகிறார். ஒன்று, ஓர் உண்மையை அல்லது தகவல்களை அறிவது (என்னவென்று அறிவது). போக்குவரத்து சட்டங்களின் கோட் பாட்டை கற்றுகொள்வதைப் போல். அதாவது, தசைகளுக் குக் கட்டளைகளை அனுப்பும் மூளையின் ஒட்டுமொத்த செயல்முறையை பற்றி யாழினி எனக்கு விளக்கியது - என்ன வென்று அறிவது. பொதுவாக ஒன்றைப் பற்றிய தத்துவார்த்த புரிதல்.

மற்றது, திறன்களை பாவனை மூலம் அறிந்துகொள்வது (எப் படி என அறிவது). மகிழுந்தை மெதுவாக ஓட்டுதல், பதட்ட மின்றி நிறுத்துதல், ஒன்றிணையும் சாலை அல்லது சுற்றுவட்ட சாலை போன்ற பல்வேறு போக்குவரத்து சூழ்நிலைகளை கையாள்தல். அதாவது, யாழினி வழக்கம்போல் தீவிரத்துடன் விசைபலகையை கையாள முடியாத போது, அவளின் சீர் தடுமாறியது, அவள் இயல்பாக செயல்பட சிரமப்பட்டாள். மீண்டும் அவள் தனது இடி போன்ற அழுத்தும் வழகத்தினுள் நுழையும் போது, அவள் விரல்கள் விசைபலகையில் பறந் தன. அவளின் தசை நினைவு (muscle memory) நிம்மதிய டைந்தது.

பல தலைமுறைகளாக, இந்த இரண்டாம் அறிவான 'எப்படி அறிவது' என்பது மர்மமாகவே இருந்தது, குறிப்பாக நரம்புக ளுக்கும் தசைகளுக்கும் இடையிலான உறவு முடிச்சு அவிழ்க்கப்படாமலேயே இருந்தது. பழைய கோட்பாடுகள் தசைகள் சுயாதீனமாக செயல்படுவதாகக் கூறியது. ஆனால் 18-ம் நூற்றாண்டில் இத்தாலிய மருத்துவரும் இயற்பியலாளரு மான லூய்கி கால்வானி நடத்திய ஆய்வுகள் இந்தக் கருத்தை மறுத்தன. அவர் இறந்த தவளை கால்களில் மின் சாரம் ஏற்ற, அவை கொஞ்சம் நெளிந்தது. தசைகளை நகர்த் துவதில் நரம்பு மண்டலம் ஒரு பங்கைக் கொண்டிருக்கிறது என்பதை கால்வானி சுட்டிக்காட்டினார்.

18-ம் நூற்றான்டில், கிளாட் பெர்னார்ட் என்ற பிரெஞ்சு விஞ் ஞானி, க்யூரே என்ற விஷத்தை வைத்து ஒரு பரிசோதனை செய்தார். இது தசைகள் வேலை செய்வதைத் தடுக்கும் திற

னைக் கொண்டுள்ளது. க்யூரேயைப் பயன்படுத்தும்போது, நரம்புகள் வழியாக செய்திகளை அனுப்ப முயற்சித்தாலும், தசைகள் பதிலளிக்காது என்பதை பெர்னார்ட் கவனித்தார். நரம்புகள் தசைகளை நகர்த்துவதற்கு ஏதோவொரு விதத்தில் உந்துகிறது என்பதை பெர்னார்ட் காட்டினார். ஒரு தனித்துவமான சந்திப்புப் புள்ளியையும் குறிப்பிட்டார்.

1920-களின் முற்பகுதியில் ஜெர்மன் மருந்தியல் நிபுணர் ஓட்டோ லோவி ஒரு பிரபலமான தவளை இதய பரிசோதனையை நடத்தினார், இது நரம்புகளும் தசைகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதில் ஒரு முக்கிய கண்டுபிடிப்பாகும். ஓட்டோ லோவி இரண்டு துடிக்கும் தவளை இதயங்களை தனிமைப்படுத்தினார்: ஒன்று நரம்புகளுடனும் மற்றொன்று நரம்புகள் இல்லாமல். இரு இதயங்களையும் உப்புக் கரைசலில் வைத்திருந்தார். பின்னர் அவர் முதல் இதயத்தின் நரம்பை மின்சாரம் மூலம் தூண்ட, அது மெதுவாகத் துடித்தது. பிறகு, அந்த இதயத்தைச் சுற்றியிருந்த உப்புக் கரைசலை இரண்டாம் இதயத்தில் ஊற்றினார். இரண்டாவது இதயமும் மெதுவாக துடிக்க ஆரம்பித்தது! இந்த எதிர்பாராத முடிவுக்கு அசிடைல்கொலின் (ACh) எனப்படும் ஒரு இரசாயனமே காரணம். முதல் இதயத்தின் நரம்பை மின்சாரம் தாக்க, அது அசிடைல்கொலின்னை உப்புக் கரைசலில் வெளியேற்றியது. அந்த உப்புக் கரைசலை இரண்டாம் இதயத்தில் ஊற்ற, முதல் இதயத்தில் ஏற்பட்ட விளைவுகள் இதிலும் நிகழ்ந்தது. இதுவே நரம்புகளுக்கும் தசைகளுக்கு இடையிலான இரசாயன தொடர்புக்கு முக்கியமான ஆதாரமாகியது.

20-ம் நூற்றாண்டில், எதிர்மின்னி நுண்ணோக்கி (Electron Microscopy) போன்ற நவீன தொழில்நுட்பங்களின் கண்டுபிடிப்பின் உதவியால், மூளை தசைகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறது என்பதை விஞ்ஞானிகள் புரிந்துகொண்டனர்.

மூளை ஒரு தசையை நகர்த்த வைப்பதற்கு, அது அசிடைல் கொலினை (ACh) அனுப்புகிறது, இது தசைகளுக்குள் மின்சார சமிக்ஞையை தூண்டித் தசைகளை நகர்த்துகிறது. நரம்புகளுக்கும் தசைகளுக்கு இடையிலான இந்த தகவல்தொடர்பு சந்திப்பு 'தசை நரம்பு இணைப்பு' (neuromuscular junction) என்று அழைக்கப்படுகிறது. 1960-களில், பிரிட்டிஷ் நரம்புசார் உளவியலாளர் பிரெண்டா மில்னர் நினைவக ஆராய்ச்சித் துறைக்கு ஓர் அற்புதமான பங்களிப்பை வழங்கினார். அவரது பிரபலமான நோயாளிகளில் ஒருவரான ஹென்றி மொலைசன் (எச்.எம். என குறிப்பிடப்படுபவர்), வழக்கமான மருந்துகளால் கட்டுப்படுத்த முடியாத கடுமையான வலிப்பு நோயால் அவதிப்பட்டார். 1953-ல், எச்.எம் வலிப்பை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தும் அறுவை சிகிச்சைகளை செய்து கொண்டார், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அது ஒரு பக்க விளைவுடன் வந்தது. அவருக்கு ஒரு வகையான மறதி நோய் உருவானது. எச்.எம்-மின் மறதி அசாதாரணமானது. அவர் சந்தித்த புதிய நபர்கள், அவர் சென்ற புது இடங்கள் அவரின் காலை உணவு போன்ற புதிய வெளிப்படையான நினைவுகள் எதையும் அவரால் நினைவு வைத்துக் கொள்ள முடியவில்லை. இருப்பினும், எச்.எம்-மால் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

கண்ணாடியில் ஒரு நட்சத்திரத்தின் பிரதிபலிப்பை பார்த்து எச்.எம் வரையவேண்டும். ஆரம்பத்தில், அவர் கஷ்டபட்டார், அவரது கையையும் பிரதிபலிக்கும் படத்தையும் ஒரே நேரத்தில் அவரால் பார்க்க முடியவில்லை. தினசரி பயிற்சியுடன், எச்.எம் மெதுவாக மேம்பட்டார். அவரது கோடுகள் சீராகி, மிக வேகமாக வரைந்து முடித்தார். குறிப்பாக, எச்.எம்-இன் கண்ணாடி பார்த்து வரைதல் பயிற்சி அவர் நனவான நினைவகத்தில் இல்லை.

பிரெண்டா மில்னர் தனது அவதானிப்பை முன்வைத்தார். புதிய வெளிப்படையான நினைவுகளை உருவாக்க முடியாத ஒரு நோயாளியால், ஒரு புதிய செயல்முறைத் திறனை எப்படி கற்றுக்கொள்ள முடியும். இது மூளையில் இதற்கென்று தனி நினைவக அமைப்புகள் இருப்பதை உறுதிசெய்தது. ஒன்று, அறிவிப்பு நினைவாற்றல் (declarative memory), நிகழ்வுகளின் வெளிப்படையான நினைவுகளை சேமிப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் பொறுப்பாகும். புதிதாக பிரெண்டா மில்னர் கண்டது, நடைமுறை நினைவாற்றல் (procedural memory), திறன்களையும் பழக்கவழக்கங்களையும் கற்றுக்கொள்வதற்கு பொறுப்பாகும்.

நடைமுறை நினைவாற்றல் 'எப்படி அறிவது' என்ற சாரத்தை உள்ளடக்கியது. இது ஒரு விரிவான மூல வரைபடமாக செயல்படுகிறது. ஒரு திறமையை எவ்வாறு செய்வது என்பது பற்றிய சிக்கலான விவரங்களை நடைமுறை நினைவாற்றல் சேமித்து வைத்திருக்கும். பிறகு தசை நரம்பு இணைப்புகள் மூளைக்கும் தசைகளுக்கும் இடையே பாலமாக செயல்படும். மீண்டும் மீண்டும் பயிற்சி செய்வதன் மூலம், செயல்முறை நினைவற்றலுக்கும் தசை நரம்பு இணைப்புகளுக்கும் இடையிலான தொடர்பு மிகவும் திடமாகிவிடும். தசை நரம்பு இணைப்பு அசிடைல்கொலின்க்கு (ACh) இணைய ஒவ்வொரு அசைவும் வேகமாகவும் துல்லியமாகவும் செயல்படும். காலப்போக்கில், சமையல் குறிப்பை பின்பற்றுவதில் இருந்து அனுபவமிக்க சமையல்காரரின் சிரமமற்ற திறமையாக மாற்றுகிறது. இதைதான் தசை நினைவாற்றல் என்று அழைக்கிறோம். எந்தவொரு திறமையையும் கற்றுக்கொள்வதற்கு தசை நினைவாற்றல் அவசியம். பைக் ஓட்டுவது, கார் ஓட்டுவது, சமைப்பது, வெங்காயம் வெட்டுவது, வாத்தியம் வாசிப்பது எந்தவித திறமையையும் திறம்பட செய்ய தசை நினைவாற்றல் அவசியம்.

***உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே***
***இடுக்கண் களைவதாம் நட்பு.***

திருக்குறள் - 788

இங்குதான் பயனர் அனுபவ வடிவமைப்பாளர்களாகிய நாங்கள் உங்கள் தசை நினைவாற்றலை பயன்படுத்திக் கொள்கிறோம். கணினி நம் வாழ்வில் நுழைந்த நாட்களில் இருந்தே இதை செயல்படுத்தி வருகிறோம். இன்று நம் வாழ்வில் அதிகமாக மாறியுள்ள கைத்தொலைபேசியிலும், அதில் உள்ள செயலிகளிலும் (applications) வலைத்தளங்களிலும் இதை பயன்படுத்துகிறோம். டிஜிட்டல் உலகத்தில் பல மணி நேரங்கள் ஒவ்வொரு நாளும் மக்கள் செலவிடுகிறார்கள். நாம் அறியாமலே நம் விரல்களும் கைகளும் பல அசைவுகளை மேற்கொள்கின்றன. இதற்கும் தசை நினைவாற்றலே காரணம். இது திரையைப் பார்க்காமலோ என்ன செய்வது என்பதை பற்றி சிந்திக்காமலோ உங்களை செயல்பட அனுமதிக்கிறது. அதனால்தான் உங்கள் முந்தைய தலைமுறையை விட உங்களால் வேகமாக கைத் தொலைபேசியிலோ விசைப்பலகை

யிலோ எழுத முடிகிறது.

## ஃபேஸ்புக் (Facebook):

சுமார் 7-8 ஆண்டுகளுக்கு முன்பு, ஃபேஸ்புக் ஒரு நிலையான வடிவமைப்பு முறையைப் பின்பற்றியது. நீல பொத்தான் 'ஆம் /ஏற்றுக்கொள்கிறேன்' என்பதையும், வெள்ளை பொத்தான் 'இல்லை/ ரத்துசெய்கிறேன்' என்பதையும் பொருள்படுத்தியது. காலப்போக்கில், பயனர்கள் இந்த தளவமைப்பிற்கான தசை நினைவாற்றலை உருவாக்கினர். நண்பர் கோரிக்கையை உறுதிப்படுத்துவது, மாற்றங்களைச் சேமிப்பது போன்ற செயல்களுக்கு நீல பொத்தான் ஆம் என்றும், வெள்ளை பொத்தான் இல்லை என்றும் படிக்க வேண்டிய அவசியம் இல்லாமலேயே புரிந்தது. 2019-ல், ஃபேஸ்புக் கணக்கை நீக்குவதற்குப் பின்வரும் படிகளை தொடரவேண்டும், நீக்கு பக்கத்திற்குச் சென்று 'எனது கணக்கை நீக்கு' என்பதை அழுத்தவேண்டும்.

இந்த பக்கம் உறுதிப்படுத்துவதாகவும் தற்செயலான அல்லது தானாகவே நீக்குதல்களுக்கு எதிராக ஒரு பாதுகாப்பு பக்கமாக உருவாக்கப்பட்டிருந்தது. இங்கு, மீண்டும் உங்கள் கடவுச்சொல்லை உள்ளிட்டு CAPTCHA குறியீட்டை நிரப்ப வேண்டும். பின்னர் நீக்குவதற்கு 'ஆம்' என்றதை அழுத்த வேண்டும்.

பேஸ்புக் பொத்தான் நிறங்களை மாற்றியதை கவனித்தீர்களா? 'இல்லை' என்பதற்கு நீல நிறமும், 'ஆம்' என்பதற்கு வெள்ளை நிறமும் திடீர் என்று தோன்றியது. இந்த எதிர்பாராத மாற்றத்தினால் தங்கள் தசை நினைவாற்றலை உபயோகப்படுத்தாமல், பொத்தானில் எழுதியிருப்பதைப் படித்து அழுத்த வேண்டும். தந்திர வடிவமைப்பிற்கு (Dark pattern) இது ஒரு நல்ல உதாரணம். பயனர் அனுபவத்தை விட நிறுவனத்தின் இலக்குகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் (தற்செயலான நீக்குதல்களைத் தவிர்த்தல்) வடிவமைத்துள்ளோம். இது தசை நினைவாற்றலை உடைத்து பாவனையாளரின் ஒவ்வோரு செயலிலும் சிந்தனையைச் செலவிட கட்டாயப்படுத்துகிறது.

## இன்ஸ்டாகிராம் (Instagram):

2020-ல், இன்ஸ்டாகிராம் ரீல்ஸ், ஷாப்பிங் என்ற இரு அம்சங்களை அறிமுகப்படுத்தியது. இதற்காக தனி இடங்களை உருவாக்காமல் எற்கனவே இருந்த அம்சங்களை இன்ஸ்டாகிராம் மாற்றியது.

மெனுவில் அடிக்கடி பயன்படுத்தப்படும் 'உருவாக்கு' அதாவது '+' பொத்தான் மேலே புது இடத்தில் மாற்றி, அதற்குப் பதிலாக 'ரீல்ஸ்' (குறும் காணொளி) எனப் புது அங்கத்தை இன்ஸ்டாகிராம் அறிமுகப்படுத்தியது. இது பாவனையாளரின் தசை நினைவாற்றலை சீர்குலைக்கிறது. 'உருவாக்கு' பொத்தானை எண்ணி அழுத்தும் பயன்பாட்டாளருக்கு, ரீல்ஸ்கிடைக்கும். இது பயன்பாட்டாளின் தசை நினைவாற்றலை விட, 'ரீல்ஸ்'சை முன்னுரிமையிட்டு விளம்பரப்படுத்தும் யுக்தி.

மற்றொரு கேள்விக்குரிய வடிவமைப்பு, நன்கு அறியப்பட்ட 'லைக்' பொத்தானுக்கு பதிலாக 'ஷொப்பிங்' பொத்தானை இன்ஸ்டாகிராம் அறிமுகப்படுத்தியது. இந்த எதிர்பாராத மாற்றம் தசை நினைவாற்றலை சீர்குலைத்து, 'லைக்' பொத்தானை அழுத்தும் பழகத்தில் 'ஷொப்பிங்' பொத்தானை அழுத்துவார்கள். இது இன்ஸ்டாகிராமின் 'ஷொப்பிங்'கை முன்னிலைப்படுத்துவது மற்றுமன்றி நிதி ஆதாயத்திற்காக பயன்படுத்துவோரின் தசை நினைவாற்றல் சுரண்டப்படுகிறது.

இந்த மாற்றங்கள் சிறியதாக தோன்றினாலும், இவை தந்திர வடிவமைப்பின் (dark pattern) எடுத்துக்காட்டுகள். தளத்தின் வடிவத்தையும் தசை நினைவாற்றலையும் தந்திரமாக வடிவமைப்பதினால், இன்ஸ்டாகிராம் புதிய அம்சங்களை மேம்படுத்தி, ஈடுபாட்டை அதிகரிப்பதையும், விற்பனையை அதிகரிக்கச் செய்வதையும் இன்ஸ்டாகிராம் குறிக்கோள் ஆக்கிக் கொண்டது.

## டூ டாஸ் (Two dots):

சமூக ஊடகங்கள் மட்டுமல்ல, கேமிங்கிலிலும் தசை நினைவாற்றல் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. விரைவாக முடிவெடுப்பது கேமிங்கில் ஒரு முக்கியமான திறமை, இந்த திறமைக்கு தசை நினைவாற்றல் முக்கிய பங்கு வகிக்கிறது.

'டு டாஸ்' (two dots) என்ற விளையாட்டு, சில வருடங்களுக்கு முன்னால், தசை நினைவாற்றலை மிகச்சரியாக உபயோகபடுத்தியுள்ளது. ஒரு விளையாட்டைத் தொடங்க, பச்சை பொத்தானைத் அழுத்த வேண்டும். அதிக நகர்வுகளை வாங்க 'டூ டாட்ஸ்' அதே போல் அதே இடத்தில் உள்ள பச்சை பொத்தானை அழுத்த தூண்டுகிறார்கள். மீண்டும் மீண்டும் விளையாட்டை மறுதொடக்கம் செய்வதக்கு அதே பச்சை பொத்தான், இது பயன்பாட்டாளர்களின் தசை நினைவாற்றலில் பதிவாகிவிடும். 'டூ டாட்ஸ்'இன் குறிக்கோள், பயன்பாட்டாளர்கள் தற்செயலாக 'மேலும் நகர்வுகளை வாங்கவும்' என்ற பச்சை பொத்தானை அழுத்துவதே.

உடுக்கை இழந்தவன் கையே தசை நினைவாற்றல், நாங்கள் (பயன்பாட்டாளர் வடிவமைப்பாளர்கள்) ஒரு தந்திரமான கருவியாக இதனை மாறியுள்ளோம். வேகமாக அழுத்துவது என்பது யாழினியின் செயல்முறை நினைவாற்றலில் ஆழமாக பதிந்துள்ளது. அவள் கட்டுப்படுத்தப்பட்ட மைக்புக்கைப் பயன்படுத்தும் போது, அவளது தசைகள் தடுமாறின. நரம்புத்தசை சந்திப்பு (NMJ) அவளுக்குக் கை கொடுக்கவில்லை. சிறிது நேரம் கழித்து, அவளது செயல்முறை நினைவாற்றல் மீண்டும் வேலைசெய்யும் பொழுது, அவளது விரல்கள் விசைப்பலகையில் பறந்தது, இடி போல் விழுந்தது. பயன்பாட்டாளர்களுக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, தசை நினைவாற்றலை நிறுவனங்கள் அவர்கள் தேவைக்கு வழிநடத்துகிறார்கள். செயல்முறை நினைவாற்றல், நரம்புத்தசை சந்திப்பு (NMJ), தசை நினைவாற்றலில் உறவைப் புரிந்து கொள்வதன் மூலம், நீங்கள் (பயன்பாட்டாளர்கள்) இந்த வடிவமைப்புத் தந்திரங்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.



niresh.ratnam@thaiveedu.com



# காற்றுக் கொந்தளிப்பு

- சுப்ரமணியம் ஜெயசீலன்

மனிதரின் மிகவும் பாதுகாப்பான போக்குவரத்துச் சாதனங்களில் ஒன்றாக விமானங்கள் கருதப்படுகின்றன. அதனால் எப்போதாவது ஏற்படும் விமான விபத்துகள் உலகளாவிய ரீதியில் கவனத்தை ஈர்த்துக் கொள்கின்றன. இவ்வாறு ஏற்படக்கூடிய விபத்துகளின் அழிவுகளும் மோசமாகவே காணப்படுகின்றன என்பது மறுப்பதற்கில்லை. பயணம் செய்யும் விமானங்களுடன் ஒப்பீடு செய்யும் போது விமான விபத்துகளின் எண்ணிக்கை குறைவானதேயாகும். அந்த வகையில் அடிக்கடி நீண்டதூரம் விமானப் பயணங்களை மேற்கொள்வோர் சில சந்தர்ப்பங்களில் விமானம் குலுங்குவது போன்றோ அல்லது கீழே வீழ்வது போன்றோ உணர்ந்திருக்கக் கூடும். இவ்வாறான நிலைமைகளை நாம் காற்றுக் கொந்தளிப்பு என்று குறிப்பிடுகின்றோம்.

அண்மையில் பிரித்தானியாவின் லண்டனிலிருந்து சிங்கப்பூர் நோக்கிப் பயணம் செய்த விமானம் காற்றுக் கொந்தளிப்பு நிலைக்குள்ளாகி இருந்தது. இந்தக் காற்றுக் கொந்தளிப்பில் சிக்கிய விமானத்தில் பயணம் செய்த ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்தில் மேலும் பலர் படுகாயம் அடைந்திருந்தனர். பிரித்தானியாவைச் சேர்ந்த 73 வயதான ஜெப் கிச்சன் (Geoff Kitchen) என்ற நபர் இந்த விபத்தில் உயிரிழந்திருந்தார்.

காற்றுக் கொந்தளிப்பு ஏற்பட்ட போது விமானம் திடீரெனக் கீழே இறங்கியதாகவும் விமானத்திற்குள் பயணிகள் மற்றும் பொருட்கள் அங்குமிங்கும் வீசி எறியப்பட்டதாகவும் பயணிகள் தெரிவித்தனர். இந்த அவசர நிலைமையினால் விமானம் தாய்லாந்தின் பாங்கொக் நகர விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

மேலும், கட்டார் விமான சேவை நிறுவனத்திற்குச் சொந்தமான விமானமொன்றிலும் காற்றுக் கொந்தளிப்புக் காரணமாக 12 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களுள் விமானத்தின் ஆறு பணியாளர்களும் அடக்கம். கட்டாரின் டோஹாவிலிருந்து அயர்லாந்தின் டப்ளின் நோக்கிப் பயணித்த விமானமே இவ்வாறு காற்றுக் கொந்தளிப்புக்கு உள்ளாகியுள்ளது.

## காற்றுக் கொந்தளிப்பு என்றால் என்ன அதற்கான காரணங்கள் என்ன?

விமானமொன்று காற்றுக் கொந்தளிப்பில் சிக்கும் போது திடீரென ஏற்படக்கூடிய விமானத்தின் குலுங்கல் நிலைமை அடிக்கடி பயணம் செய்யும் பயணிகளுக்குப் பழக்கப்பட்டதாக இருக்கலாம். காற்றுக் கொந்தளிப்பின் போது விமானம் குலுங்குவதுடன் அப்போது பயணம் செய்யும் உயரத்திலிருந்து திடீரெனக் கீழிறங்கக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. காற்றின் சீரற்ற நிலைமையினால் வானில் ஏற்படக்கூடிய கொந்தளிப்பு நிலைமையே காற்றுக் கொந்தளிப்பு எனப்படுகின்றது.

காற்றுக் கொந்தளிப்பு வளியோட்டத்தின் மேலும் கீழும் பயணிக்கும் மேகக் கூட்டங்களினால் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான காற்றுக் கொந்தளிப்பு நிலைமையானது சிறிய அளவானவையாகக் காணப்படுகின்றது. எனினும் பெரிய மேகக் கூட்டங்கள் குறிப்பாக இடி மின்னலை ஏற்படுத்தக்கூடிய மேகக் கூட்டங்களுக்குள் ஏற்படக்கூடிய வளியோட்டம் அல்லது மாற்றங்கள் நடுத்தர அளவிலான அல்லது பாரதூரமான கொந்தளிப்பு நிலைமையை உருவாகக்கூடும்.

தெளிவான வானத்தில்க் கூட காற்றுக் கொந்தளிப்பு நிலை உருவாகும். இது பெயரைப் போலவே தெளிவான வானத்தில் அதாவது மேகக் கூட்டமற்ற தெளிந்த ஆகாயத்தில் ஏற்படக் கூடியது. இதனை முன்கூட்டியே அடையாளம் காணவோ எதிர்வுகூறவோ முடியாது என்பது மிகவும் ஆபத்தான நிலைமை ஆகும்.

பொதுவாக 40 ஆயிரம் முதல் 60 ஆயிரம் அடி உயரத்தில், வேகமாகப் பாயும் நதியைப் போன்று வாயு பயணிக்கும் போது இவ்வாறான வளியின் ஒரு கொந்தளிப்பு நிலை காணப்படுமென ட்ரெயின் ஃபீல்டு பல்கலைக்கழகத்தின் விமான சேவை மற்றும் சுற்றாடல் துறை தொடர்பான துணைப் பேராசிரியரான கய் கிரேட்டன் (Dr. Guy Gratton) தெரிவிக்கின்றார்.

அதிவேகக் காற்றுப் புனல் (jet streams) நிலைமையானது வளிமண்டலத்தின் உயர்ந்த பகுதியில் குறுகலாக வேகமான வளியோட்டத்தைக் குறிக்கின்றது. காற்றுப் புனலின் வாயு மற்றும் அதனை அண்டிய பகுதியில் காணப்படும் வாயு ஆகியனவற்றிற்கிடையில் மணிக்கு 100 மைல் வேக வித்தியாசம் காணப்படலாம் என அவர் குறிப்பிடுகின்றார்.

மெதுவானதும் வேகமானதுமான வளி ஒன்றுடன் ஒன்று மோதும் போது அதிவேகக் காற்றுப் புனலைச் சுற்றி ஏற்படக் கூடிய ஓர் நிலைமை கொந்தளிப்பாக மாறும் இது எல்லா நேரமும் ஏற்படக்கூடிய ஒன்றாகும். ஓரிடத்தில் இருந்து வேறொரு இடத்திற்கு இது நகர்ந்து செல்லக்கூடியது, எனவே இதனைத் தடுத்து நிறுத்த முடியாது.

உதாரணமாக நீங்கள் ஐரோப்பாவிலிருந்து வட அமெரிக்கா



விற்குப் பறக்கும் போது இதனை முழுமையாகத் தவிர்த்துக் கொள்ள முடியாது எனக் கிரேட்டன் கூறுகின்றார். இது கடுமையான கொந்தளிப்பு நிலைமைகளைக் கொண்ட சந்தர்ப்பங்களை உருவாக்கக்கூடும் என அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

## காற்றுக் கொந்தளிப்பு நிலைமை எவ்வளவு ஆபத்தானது?

காற்றுக் கொந்தளிப்பு எவ்வளவு ஆபத்தானது என்பது குறித்து நிபுணர்கள் விளக்கியுள்ளனர். காற்றுக் கொந்தளிப்பு நிலைமைகளினால் ஏற்படக்கூடிய மோசமான நிலைமைகளை எதிர்கொள்ளக் கூடிய வகையில் விமானங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் காற்றுக் கொந்தளிப்பு நிலைமையானது விமானத்தைச் சேதப்படுத்தக் கூடிய சாத்தியங்கள் குறைவு எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

மறுபுறத்தில் கொந்தளிப்புகளால் விமானங்களுக்கு எந்த நன்மையையும் ஏற்படப்போவதில்லை. இதன் காரணமாகவே விமானிகள் இந்தக் காற்றுக் கொந்தளிப்பினைத் தவிர்ப்பதற்கு அல்லது வேகத்தைக் குறைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றனர். மேலும், இருக்கைப் பட்டிகளை அணிந்து கொள்ளுமாறு எச்சரிக்கை விடுகின்றனர்.

குறிப்பாகக் காற்றுக் கொந்தளிப்பு நிலைமைகளின் போது காற்றின் வேகத்தின் அடிப்படையில் விமானமொன்றுக்கு அமைப்பு ரீதியான சேதங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகளை மறுப்பதற்கில்லை.

காற்றுக் கொந்தளிப்பு நிலைமைகளின் போது விமானமொன்றின் குலுங்கல் நிலைமை காரணமாக விமானப் பயணிகளுக்கு ஆபத்தான நிலைமைகள் உருவாகக் கூடும், குறிப்பாக இருக்கைப்பட்டி அணியாத எந்த ஒரு பயணியும் விமானத்தின் உட்கூரைப் பகுதி வரையில் வீசியெறியப்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

எனினும், காற்றுக் கொந்தளிப்பு நிலைமைகளின் போது பயணிகள் அல்லது விமானப் பணியாளர்கள் மரணிக்கவோ அல்லது காயங்களுக்கு உட்படவோ கூடிய சந்தர்ப்பங்கள் மிகவும் அரிது என விமானப் பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

வானில் பறக்கும் பில்லியன் கணக்கான விமானங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிம்போது காற்றுக் கொந்தளிப்புகள் காரணமாக ஏற்படக்கூடிய காயங்கள் மிகவும் அரிதானவை என விமான சேவை நிபுணரான ஜோன் ஸ்டிரிக்லேண்ட் (John Strickland) தெரிவிக்கின்றார்.

கடந்த 2009-ம் ஆண்டு தொடக்கம் 2022-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் காற்றுக் கொந்தளிப்பு நிலைமைகள் பதிவாகியுள்ள எண்ணிக்கை

163 என அந்நாட்டுத் தேசியப் போக்குவரத்துப் பாதுகாப்பு சபை தகவல் வெளியிட்டுள்ளது. இதன்படி ஆண்டொன்றுக்கு 12 காற்றுக் கொந்தளிப்புச் சம்பவங்கள் பதிவாகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது

## விமானிகள் காற்றுக் கொந்தளிப்பு நிலைமைகளின் எவ்வாறு செயற்படுகின்றனர்?

விமானிகள் விமானப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாக வானிலை முன்னறிவித்தல் உள்ளிட்ட வளிமண்டலத்தின் நிலைமை பற்றிய எதிர்வு கூறல்கள் மற்றும் குறித்த தரவுகள் வழங்கப்படும்.



இதன் மூலம் தாங்கள் மேற்கொள்ளவுள்ள பயணம் குறித்த திட்டமிடல்களை மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

உதாரணமாக: இடி, மின்னல் ஏற்படுத்தக் கூடிய மேகக் கூட்டங்களைத் தவிர்த்து விமானத்தைச் செலுத்த முடியும். எனினும், தெளிவான வானத்தில் ஏற்படக்கூடிய காற்றுக் கொந்தளிப்பு நிலைமையைத் தவிர்ப்பது சற்றே சவால் மிக்கதாகும்.

இவ்வாறு குறித்த பயணப் பாதையில் முன்னால் செல்லும் விமானங்கள் ஏதேனும் கொந்தளிப்பு நிலைமைகளை அவதானித்தால், அது குறித்துத் தகவல்களை மற்றைய விமானங்களுக்குப் பரிமாறிக் கொள்ளும் என கலாநிதி கிரேட்டன் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் விமானப் பயணிகள் மற்றும் விமானிகள் குறித்த பாதையைத் தவிர்த்துப் பயணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார், அல்லது காற்றுக் கொந்தளிப்பினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளும் நோக்கில் வேகத்தைக் மட்டுப்படுத்தி விமானம் செலுத்துவார்.

காற்றுக் கொந்தளிப்பு நிலைமையின் போது பயணிக்க வேண்டிய விதம் தொடர்பில் விமானப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

## பாதுகாப்பாக இருப்பதற்குப் பயணிகள் என்ன செய்ய வேண்டும்?

பாதுகாப்பாக இருப்பதற்குப் பயணிகள் இருக்கைப் பட்டிகளை அணிந்திருக்க வேண்டும் என்பதுடன் எடை கூடிய பொருட்கள் எதனையும் பயணப் பொதிகளிலிருந்து வெளியே எடுத்துப் பயன்படுத்தாதிருக்க வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

காற்றுக் கொந்தளிப்பு நிலைமையானது எதிர்பாராத விதமாக ஏற்படும் ஒரு நிகழ்வு என்பதனால், எல்லா நேரங்களிலும் இருக்கைப் பட்டிகளை அணிந்திருக்குமாறு பயணிகளுக்கு விமானிகள் அறிவுறுத்தல் வழங்குகின்றனர்.

## காற்றுக் கொந்தளிப்பு அடிக்கடி ஏற்படுகின்றதா ?

அடிக்கடி காற்றுக் கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்துவதற்கு காலநிலை மாற்றம் ஓர் ஏதுவாகின்றது எனச் சில ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பொதுவாக அதிகமான விமானப் போக்குவரத்துக் காணப்படக்கூடிய வடக்கு அட்லாண்டிக் விமானப் பாதைகளில் 1979-ஆம் ஆண்டு தொடக்கம் 2020-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் காற்றுக் கொந்தளிப்புச் சம்பவங்களின் எண்ணிக்கையானது 55 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக ஐக்கிய இராச்சியத்தின் ரீடிங் கல்லூரி (Reading College) ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கார்பன் வெளியேற்றத்தின் அளவு அதிகரிப்பின் எதிரொலியாக, உயர்ந்த பகுதிகளில் வளியின் ஓட்ட வேகமானது மாறுதல் அடைவதாகவும் இதனால் காற்றுக் கொந்தளிப்பு ஏற்படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகளவு விமானப் பயணங்களை மேற்கொள்வதனால் அதிகளவு காற்றுக் கொந்தளிப்பு நிலைமைகளை எதிர்நோக்க நேரிடுவதாகக் கிரேட்டன் தெரிவிக்கின்றார்.

மனிதரின் அசகாயத் தொழில்நுட்ப வளர்ச்சிப் பரிணாமங்களின் அடிப்படையில், விரைவில் இந்தக் காற்றுக் கொந்தளிப்பு நிலைமைகளைச் சமாளிக்கக்கூடிய நுட்பங்கள் அறிமுகம் செய்யப்படக்கூடும், எனினும் தற்போதைக்குச் சில ஆபத்தான காற்றுக் கொந்தளிப்புகளை விமானப் பயணங்களின் போது கடந்து செல்லவேண்டி நேரிடலாம் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.



jeyaseelan.s@thaiveedu.com



# சீனாவின் நிலவை நோக்கிய சாதனை

- குரு அரவிந்தன்

சமீபகாலமாக விண்வெளி சார்ந்த முயற்சிகளில் சீனா அதிக கவனஞ் செலுத்தி வருவதால், சீனா உலகநாடுகளின் முக்கியமான பேசுபொருளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. மேலை நாடுகளுடன் போட்டியாக ஆசிய நாடுகளில் ஒன்றான இந்தியாவும் சீனாவும் இந்த விடயத்தில் தற்போது அதிக கவனஞ் செலுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாகச் சீனாவின் தேசிய விண்வெளி நிர்வாகம் நிலவு ஆய்வுத் திட்டமொன்றை உருவாக்கியிருந்தது. இந்தத் திட்டத்தின் படி நிலவுக்குச் செல்வதற்கு மனிதருக்குப் பதிலாக முதலில் ரோபோக்கள் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த உள்வாங்கப்பட்டன. இந்தத் திட்டம் நான்கு கட்டங்களாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

இதன்படி நிலவை நோக்கி ஏவப்படும் விண்கலங்களுக்குச் சீன நிலவுத் தெய்வமான ‘சாங்’ என்ற பெயர் சூட்டப்பட்டது. நிலவின் சுற்றுப் பாதையை வெற்றிகரமாகச் சென்றடைவதே இத்திட்டத்தின் முதற்கட்டமாக இருந்தது. 2007-ம் ஆண்டு நிலவை நோக்கி அனுப்பப்பட்ட சாங் - 1 அந்தச் சாதனையை வெற்றிகரமாகச் செய்தது. அதைத் தொடர்ந்து 2010-ம் ஆண்டு ஏவப்பட்ட சாங் - 2 அந்தத் திட்டத்தை நிறைவு செய்தது.

இரண்டாவது கட்டமாக நிலாவில் ரோபோக்கள் தரை இறங்கவும், நிலாவின் தரையில் உலாவவும் கூடிய வகையில் திட்டமிடப்பட்டது. இந்தத் திட்டம் 2013-ம் ஆண்டு அனுப்பப்பட்ட விண்கலம் சாங் - 3 மூலமும் அதைத் தொடர்ந்து 2019-ம் ஆண்டு அனுப்பப்பட்ட விண்கலம் சாங் - 4 மூலமும் நிறைவேற்றப்பட்டது.

மூன்றாவது கட்டம் நிலாவின் தரையிலுள்ள மாதிரிகளை ரோபோக்கள் மூலம் சேகரித்து அவற்றைப் பூமிக்குக் கொண்டு வந்து ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டது. இதில் 2020-ஆம் ஆண்டு விண்கலம் சாங் - 5 ஈடுபட்டது. சாங் - 5 நிலாவின் வடக்கு அரைக் கோளத்திலிருந்து 3.82 இறாத்தல் நிறையுள்ள சில மாதிரிகளைச் சேகரித்து பூமிக்கு அனுப்பியிருந்தது.

இதன் தொடர்ச்சியாக 2024, மே மாதம் 3-ம் திகதி, நிலவை நோக்கி சாங் - 6 அனுப்பப்பட்டது. யூன் மாதம் 1-ம் திகதி நிலவின் தொலைவில், அதாவது மறுபக்கத்திலுள்ள தெற்கு அரைக் கோளத்தில் தரையிறங்கியது. இந்தப் பகுதியை அப்பலோ பள்ளத்தாக்கின் தென்பகுதி என்று அழைப்பார்கள். நிலாவின் நிலப்பரப்பில் இந்த இடத்தைச் சரியாகக் குறிப்பிடுவதானால் 41.63839°S 153.98545°W என்ற பகுதிக்குள் இது அடங்கும்.

தரையிறங்கிய ரோபோ நிலவின் தரைமேற்பரப்பிலிருந்து தேவையான மாதிரிகளைச் சேகரித்தது. இதில் 4.4 இறாத்தல் எடையுள்ள நிலாத்தரையின் மண், சிறு கற்கள் போன்றவை அடங்கும். கற்களை எடுப்பதற்காக நிலாத் தரையில் ரோபோ



துளையிட்டபோது அதன் வடிவம் சீனாவின் பெயரிலுள்ள முதல் சீன எழுத்தான ‘யாங்’ என்ற எழுத்தின் வடிவத்தில் இருந்தது. சேகரித்த பொருட்களோடு மீண்டும் நிலவின் சுற்றுப் பாதைக்குள் யூன் 3-ம் திகதி நுழைந்தது. நிலவின் சுற்றுப் பாதையில் சுற்றிய தரையிறங்கி யூன் 6-ம் திகதி மேலே சுற்றிக் கொண்டிருந்த தாய்க் கலனுடன் இணைந்து கொண்

டது. நிலவில் தரையிறங்கிய ரோவர் நிலவின் மேற்பரப்பில் தொடர்ந்தும் அறிவியல் சோதனைகளை நடத்தி வருகின்றது. அதே சமயம் சீனாவின் தேசியக் கொடியையும் நிலாவின் தரைப்பரப்பில் பறக்கவிட்டது. சுமார் 53 நாட்கள் வரை இந்தப் பணி நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் சரிவர நடக்குமானால், நிலாவில் தொலைதூரத்திலிருந்து ஆய்வுக்கான பொருட்களை ரோபோக்கள் மூலம் கொண்டு வந்த முதல் நாடு சீனா என்ற பெயர் நிலைநாட்டப்படும்.

நான்காவது கட்டமாக நிலவின் தென்துருவத்திற்கு அருகில் ஒரு ரோபோ ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்கும் திட்டமுள்ளது. 2030-ம் ஆண்டளவில் நிலவின் மறுபக்கத்தில் மனிதர் கால் பதிப்பதற்கு இது உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரை அமெரிக்கா மட்டும்தான் நிலவில் மனிதரைத் தரையிறக்கி இருக்கின்றது. அமெரிக்காவின் தரையிறக்கும் நிகழ்வுகள் எல்லாம் நிலாவின் வட பகுதியிலேயே நடைபெற்றன. ஆனால் வித்தியாசமாக, கண்ணுக்குத் தெரியாத நிலாவின் தென் பகுதியில் சீனாவின் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது வியப்பிற்குரியது.




நிலாவின் தரையில் இரும்பு, டைட்டானியம் போன்ற உலோகங்கள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதைவிட ஹீலியம் போன்ற கனிமங்களும் இருக்கின்றன. தண்ணீரும் அங்குள்ள உறைந்த பனிப்படிவங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டால், வெகுவிரைவிலேயே குடியேற்றங்கள் ஆரம்பமாகிவிடலாம். நிலா எல்லா நாடுகளுக்கும் பொதுவானது என்று ஐ.நா. சாசனம் குறிப்பிட்டாலும், அங்கும் நாடுகளுக்கிடையே எல்லைச் சண்டைகள் ஆரம்பிக்கலாம். சீனாவின் இந்தத் திட்டம் வெற்றியளித்தால் நிலவில் மனிதரைத் தரையிறக்கிய இரண்டாவது நாடாகச் சீனா இருக்கும். நீண்டகாலத் திட்டங்களுக்கேற்ப சீனா செயற்படுகின்றது. நிலாவில் ரோபோக்களின் ஆய்வு மையம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம், செவ்வாய்க் கிரகம் நோக்கிய பயணத்திற்கும் சீனா தன்னைத் தயார்படுத்துகின்றது.

சீனா ஒரு பக்கம் நிலவை நோக்கி ரோபோக்களை அனுப்பிக் கொண்டிருக்க, அமெரிக்காவின் போயிங் நிறுவனத்தினர் 2024 யூன் மாதம் 5-ம் திகதி புதன்கிழமை முதல் முறையாக விண்வெளிக்கு வீரர்களைக் கொண்டு செல்லும் திட்டத்தைச் செயற்படுத்தியிருந்தார்கள். இது நாசா நிறுவனத்தின் இரண்டாவது டாக்ஸி சேவையாக ஸ்பேஸ் எக்ஸில் (SpaceX)-ல் போயிங் இணைந்து கொண்டது. இந்த முதற் பயணத்தில் விண்வெளி வீரர்களான புட்ச் வில்மோர் மற்றும் சுனி வில்லியம்ஸ் ஆகியோர் விண்வெளி நிலையத்திற்குப் போயிங்கின் ஸ்டார் லைனரில் பயணித்தார்கள். அவர்களது பயணம் யூன் 6-ம் திகதி வியாழக்கிழமை எதிர்பார்த்ததை விடச் சற்று அதிக நேரம் எடுத்திருந்தது. ஆனாலும் அந்த விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தையடைந்து அங்கு பாதுகாப்பாக இருக்கிறார்கள். ஏற்கனவே விண்வெளி நிலையத்திலிருந்த ஏழு விண்வெளி வீரர்களும் இவர்களை வரவேற்றார்கள். பயணத்தின் போது, விண்கலத்தின் உந்துவிசை அமைப்பில் ஒரு சிறிய ஹீலியம் கசிவும் தாமதத்தை ஏற்படுத்தியது, ஆனால் அதன் பாதிப்பு மிகவும் குறைவாக இருந்ததால், அதைச் சமாளிக்கக்கூடியதாகவும் இருந்தது.

போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் மற்றும் ஸ்பேஸ் எக்ஸ்

நிறுவனத்தின் டிராகன் ஆகியவற்றின் விண்கலங்கள் முழுமையாக மீண்டும் பயன்படுத்தக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. வில்மோர் மற்றும் வில்லியம்ஸ் விண்வெளிப் பயணத்திற்குமுன் விண்வெளிக் கட்டுப்பாட்டு நிலையத்திற்குச் சென்று ஸ்டார்லைனரின் கைமுறை கட்டுப்பாட்டைப் பற்றிய விபரங்களையும், விண்கல அமைப்புப் பற்றியும் ஆய்வு செய்திருந்தனர்.

சர்வதேச விண்வெளி நிலையம் 2000-ம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது. கடந்த 24 வருடங்களாகப் பல நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் அங்கு சென்று தங்கிப் பூமிக்குத் திரும்பியிருக்கிறார்கள். தொடர்ந்தும் பலவிதமான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் இந்த நிலையத்தில் இதுவரை தங்கியிருந்த சிலர் விண்வெளியில் நடந்து சாதனை படைத்திருக்கிறார்கள். இப்போது சீனாவும் தங்கள் பாவனைக்காகப் புதிதாக விண்வெளி நிலையம் ஒன்றை உருவாக்கியிருக்கின்றது.

சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்ற வில்மோர் மற்றும் வில்லியம்ஸ் ஆகியோர் கடற்படையில் கப்டன்களாகச் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்கள். இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட பெண் விண்வெளி வீரரான வில்லியம்ஸ் கடற்படை விமானியாகப் பணியாற்றியவர். 1987-ம் ஆண்டு நாசாவுடன் இணைந்து சேவையாற்றியதால், ஏற்கனவே மேற்கொண்ட இரண்டு பயணங்கள் மூலம் 322 நாட்கள் விண்வெளியில் இருந்திருக்கின்றார். 7 தடவைகள் விண்வெளியில் நடந்திருக்கின்றார்.

இதுவரை இந்திய வம்சாவழியினரான ராகேஸ் சர்மா, கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ், சிரிஸா பண்டலா ஆகிய நால்வர் விண்வெளிக்குச் சென்றிருக்கின்றார்கள். இதில் இந்த மூன்று பெண்களும் அடங்குவர். இவர்களில் கல்பனா கொலம்பியா விண்வெளி விபத்தில் 2003-ம் ஆண்டு மரணமானது நினைவிருக்கலாம்.

சமீபத்தில் நாசா நிறுவனம் விண்வெளி வீரர்களை விண்வெளி நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்குப் புதிய நிறுவனங்களுக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்தது. அந்த வகையில் தான் எலோன் மஸ்க்கின் ‘ஸ்பேஸ் எக்ஸ்’ உடன் போயிங் நிறுவனமும் பணியமர்த்தப்பட்டது. இந்தத் தனியார் நிறுவனங்களோடு ஒப்பிடும் போது, நாடுகள் என்று பார்த்தால் ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் மட்டுமே மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பியிருந்தன. இதில் ஸ்பேஸ் எக்ஸ் என்ற தனியார் நிறுவனம் முதன் முதலாக விண்வெளி வீரர்களை 2020-ம் ஆண்டு விண்வெளி சுற்றுப்பாதையில் அறிமுகப்படுத்தியது. ஸ்பேஸ் எக்ஸ் அதிபர் எலோன் மஸ்க்கின் கனவு செவ்வாய்க் கிரகமாக இருக்கின்றது. அங்கே மரணிப்பதைத் தான் விரும்புவதாகவும் அவர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்காவின் ஆர்ட்டிமிஸ் திட்டத்தின்படி 2026-ம் ஆண்டு மீண்டும் மனிதர்கள் நிலாவில் கால்பதிக்க இருக்கிறார்கள். நிலாவின் வடதுருவத்தில் அமெரிக்காவும், தென் துருவத்தில் சீனாவும் இடம்பிடிக்கத் தொடங்கலாம். பொருளாதாரச் சூழல் காரணமாக இந்தப் போட்டியில் தற்காலிகமாக ஒதுங்கியிருக்கும் ரஷ்யா மீண்டும் தனது முயற்சியைத் தொடரலாம். தற்போது இதுபோன்ற விண்வெளி சார்ந்த தொழில்நுட்ப வசதிகள் இந்த மூன்று நாடுகளிடமும்தான் இருக்கின்றன. எனவே கிரகங்களைப் பிடிப்பதில் போட்டி என்று வந்தால் இந்த மூன்று நாடுகளும்தான் போட்டியில் இறங்கும் என்று எதிர்பார்க்கலாம். சொந்தம் கொண்டாடுவதில் சீனா எப்படி நடந்து கொள்கிறது என்பதை, தென்சீனக் கடலில் அந்நியர் யாராவது நுழைந்தால் விசாரனையின்றி 6 மாதங்களுக்குத் தடுத்து வைக்கும் சட்டத்தைச் சீனா சென்ற மாதம் நிறைவேற்றியிருப்பதில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

விண்வெளி வீரர்களான புட்ச் வில்மோர் மற்றும் சுனி வில்லியம்ஸ் ஆகியோர் விண்வெளி நிலையத்தில் ஒரு வாரம் மட்டுமே செலவிடுவதாக முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் விண்வெளி நடைப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருந்ததாலும், காப்ஸ்யூலில் கண்டறியப்பட்ட மூன்று சிறிய ஹீலியம் கசிவுகளைக் கண்காணித்துத் திருத்த வேண்டியிருந்ததாலும், சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து ஸ்டார்லைனர் பூமிக்குத் திரும்பும் திகதி ஜூன் மாதம் 18-ம் திகதி பின்னுக்குத் தள்ளப்பட்டது. ஆனால் தற்போது ஸ்டார்லைனரிலுள்ள திருத்தங்கள், மற்றும் தரையிலிறங்கப் போவதால் காலநிலை பற்றிய கணிப்புகளைக் கவனத்தில் கொண்டு பூமிக்குத் திரும்பும் திகதியை யூன் 22 என்று அறிவித்திருக்கிறார்கள். திட்டமிட்டபடி எல்லாம் சரிவர நடந்தால், தென்மேற்கு அமெரிக்காவில் பாரசூட்டின் உதவியுடன் தரையிறங்குவதை இலக்காகக் கொண்டிருக்கிறார்கள். இம்முறை கடலில் இறங்காமல் தரையில் இறங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்திய முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் சிறுநீர் குடித்தார் என்றும், ‘மொரார்ஜி கோலா’ என்றும் ஒரு காலத்தில் கேலியும் கிண்டலும் செய்தவர்களுக்கு, சர்வதேச விண்வெளி நிலையத் தகவல் ஒன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். விண்வெளி நிலையத்திற்குச் சென்ற ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஒரு முக்கியமான மாற்று பம்பையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இந்தப் பம்ப்பின் செயற்பாடு என்னவென்றால், விண்வெளி நிலையத்தில் சேகரிக்கும் சிறுநீரைக் குடிக்கக்கூடிய தண்ணீராக மாற்ற உதவுவதுதான். கடந்த வாரம் விண்வெளி நிலையத்திலுள்ள பம்ப் செயலிழந்ததால், மாற்று பம்பிற்காக அங்குள்ள பணியாளர்கள் காத்திருக்க வேண்டி வந்தது. குடிநீராக மாற்றுவதற்காகச் சுத்திகரிக்க வேண்டிய சிறுநீர் இதுவரையும் விண்வெளி நிலையத்தில் பைகளில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கிறது. இதைப்போல, அறிவியல் இன்னும் என்னென்னவோ செய்யக் காத்திருக்கின்றது.


**உசாத்துணை:**

- https://www.cnn.com/2024/06/01/china/china-change6-moon-landing-intl-hnk-scn/index.html
- https://www.cnn.com/world/live-news/boeing-starliner-launch-06-05-24-scn/index.html





kuruaravindan@thaiveedu.com

# அம்மா காலம் ...

- வேதநாயகம் தபேந்திரன்

'என்னை மூன்றாவது முறையும் இந்தியாவின் பிரதமராக்குங்கள். இந்தியாவை உலகில் முதல் மூன்று நாடுகளில் ஒன்றாக உருவாக்கிக் காட்டுவேன்...'

எமது அண்டை நாடான இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது பிரதமர் நரேந்திர மோதி கூறிய கூற்றுத் தான் இது.

இச்சொல்லைக் கேட்கும் போது இலங்கைத் திருநாட்டில் வாழும் எமக்கும் ஒரு ஏக்கப் பெருமூச்சு வருகின்றது.

எமது தாய்த்திருநாடு இவ்வாறு எப்போது மாறும்? மாற்றக் கூடிய ஒரு தலைவர் கிடைக்கமாட்டாரா?

அப்படியொரு காலம் இருந்தது. அது தான் அம்மா காலம். யார் அந்த அம்மா? உலகினதும் இலங்கையினதும் முதலாவது பெண் ஆட்சித் தலைவராக வரலாற்றில் பெயரைப் பொறித்த சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் தான் அந்த அம்மா. 1960-ம் ஆண்டு யூலை மாதம் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பிரதமராகப் பதவியேற்றார்.

அப்போது இடதுசாரிகளின் கொள்கைப் பிடிப்பில் இலங்கை திளைத்திருந்த காலம். 1974-ம் ஆண்டில் சீன அரசாங்கத்தின் நன்கொடையில் பண்டாரநாயக்க நினைவுச் சர்வதேச மகாநாட்டு மண்டபம் கட்டிக் கொடுக்கப்பட்டது.

இடதுசாரித் தலைவர் கலாநிதி எம்.என். பெரேரா நிதி அமைச்சராக இருந்தார். இறக்குமதிகள் யாவற்றையும் நிறுத்தி உள்நாட்டில் உற்பத்தியை மேற்கொள்ளும் இறக்குமதிப் பதிலீட்டுப் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.

1970 முதல் 1977 வரையிலான அண்ணளவாக 07 ஆண்டுகள் சிறிமாவோ அரசாங்கம் ஆட்சிக் கட்டிலில் இருந்தது.

அப்போது உள்நாட்டு விவசாயத்துறை உண்மையான அடித்தளத்துடன் கட்டியெழுப்பப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து சீனி இறக்குமதி செய்வது மிகப் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டது. குறைந்த தொகையில் இறக்குமதி செய்யப்பட்ட சீனி, உள்ளூர் மக்களுக்கு 'சங்கக்கடைகள்' என அழைக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலமாக விநியோகிக்கப்பட்டன. அதனால் அந்தக் கொஞ்சச் சீனியை வாங்கியோர் பலர் சேர்ந்து சீனிச் சீட்டுப் பிடிக்கத் தொடங்கினார்கள்.

தேநீர் அல்லது பால் தேநீர் குடிப்பவர்கள் உள்ளங்கையில் சிறிதளவு சீனியைப் போட்டு நக்கிக் குடிக்கத் தொடங்கினார்கள். இந்தப் பழக்கத்தை இப்போதும் கடைப்பிடித்தால் எமது நாட்டில் நீரிழிவு அல்லது சலரோகம் (சர்க்கரை வியாதி) நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாக இருந்திருக்கும்.

அக்காலத்தில் சங்கக் கடைகள் மூலமாகவே தட்டுப்பாடான பொருள்கள் எல்லாம் விநியோகிக்கப்பட்டன. அதனால் கல்யாணச் சந்தையில் அரச உத்தியோக மாப்பிள்ளைகளை விடச் சங்கக்கடை 'மாப்'பிள்ளைகளுக்கு மவுசு அதிகம். வரிசையில் நிற்காமல் 'மருமோன்' தேவைப்பட்டதையெல்லாம் பின் கதவால் வீட்டுக்குக் கொண்டு வந்து தருவார் அல்லவா?

அதைவிட கறுப்புச் சந்தையில் சீனி உட்படப் பல சாமான்களைப் பணக்காரர்களுக்கு விற்றுப் பணம் ஈட்டலாம் அல்லவா?

சீனி இறக்குமதி பெருமளவில் நின்று போனதால் உள்நாட்டில் பனங்கட்டி, கித்துள் வெல்லம் போன்றவற்றின் உற்பத்திச் சாலைகள் நாடெங்கும் உருவாகின.

வட பிரதேசத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பனங்களுச் சீவும் தொழிலாளிகள் கருப்பணிச் சீவுதலைப் பெருமளவில் செய்யத் தொடங்கினார்கள். தனியார்கள் கருப்பணி காய்ச்சி பனங்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளைப் பரவலாக உருவாக்கத் தொடங்கினார்கள்.

அதனால் சீவல் தொழிலாளர்கள் பெரியளவில் பணம் உழைக்கும் வல்லமை படைத்தவர்களாக மாறினார்கள்.

வீட்டுக்கு வீடு கருப்பணி காய்ச்சிப் பனங்கட்டிக் குட்டான்



இழைத்து பனங்கட்டி செய்து விற்கும் குடிசைக் கைத்தொழில் பரவலாக உருவாகியது. பனைகள் அதிகமுள்ள பிரதேசங்களில் காசுப் புழக்கம் அதிகமாகியது. ஆடி மாதத்தில் வரும் மடுமாதா பெருநாளுக்குப் போய் பனங்கட்டி, புழுக் கொடியல், பெட்டி, பாய், கடகம், நீத்துப் பெட்டி விற்றுப் பணம் ஈட்டினார்கள். கிறிஸ்தவ சமயச் சிங்களப் பக்தர்கள் இவற்றை வாங்குவதனால் நல்ல வருவாயைப் பெற்றார்கள்.

இதன் விளைவு வட பிரதேசத்தில் சின்னதாகவோ பெரிதாகவோ கல்வீடுகள் எழுந்தன. 1950-களில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில், கடற்றொழில் அமைச்சராக இருந்த காலத்தில் உருவான காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் முதல் தரமான சீமெந்து கட்டுமானத்திற்கு உதவியது.

கந்தளாயில் அமைக்கப்பட்ட சீனித் தொழிற்சாலை மிகவும் வெற்றிகரமாக இயங்கியது. பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களில் காடழிக்கப்பட்டு கரும்பு பயிரிடப்பட்டது.

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்திலும் பலநூறு ஏக்கர் காடழிக்கப்பட்டுக் கரும்புத் தோட்டமும், சர்க்கரைத் தொழிற்சாலையும் உருவானது.

மிளகாய்த் தோட்டங்கள் வட பகுதியில் உருவாகின. அந்த நாளில் ஒரு இறாத்தல் (அண்ணளவாக அரைக்கிலோ) செத்தல் மிளகாயின் விலை 40 ரூபாவாக இருந்தது.

அதனால் சொந்தமாகத் தோட்ட நிலங்கள் இருந்த பலர் அரச உத்தியோகம், தனியார்துறை உத்தியோகங்களை விடுத்து மிளகாய்த் தோட்டச் செய்கையில் ஈடுபட்டார்கள்.

மிளகாய் விற்றுக் கல்வீடு கட்டியோர், நகை நட்டு வாங்கியோர், ட்ராக்ரர் வாங்கியோர், பொம்பிளைப் பிள்ளைக்குக் கொழுத்த சீதனம் கொடுத்துப் பெரிய பதவியிலுள்ள மாப்பிளை எடுத்தோர், காணி பூமி வாங்கியோர் எனப் பெரும் தொகையான விவசாயிகள் இருந்தார்கள்.

அது மட்டுமா ஏபோட்டி கார், மொறிஸ்மைனர் கார், றலி சைக்கிள், ஹம்பர் சைக்கிள், குரூண்டிக் றேடியோவென வாங்கிய பொருள்கள் அதிகம்.

மிருசுவிலில் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம், விசுவமடுவில் விவசாயிகள் - படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம் எனத் தொடர்ந்தது.

கிளிநொச்சி - திருவையாறு உட்படப் பல வளமான மண்ணுள்ள பிரதேசங்கள் விவசாயத்தில் கொடிகட்டிப் பறந்தன.

கிளிநொச்சிச் சந்தை இலங்கையின் மிகப் பெரும் மரக்கறிச் சந்தை ஆகியமை எல்லாம் நிகழ்ந்தன.

கோதுமை மாவின் இறக்குமதி பெருமளவில் குறைக்கப்பட்டது. உள்நாட்டில் மரவள்ளிச் செய்கை ஊக்குவிக்கப்பட்டது. மரவள்ளிக் கிழங்கை ஒரு நேரமோ அல்லது இரு நேரமோ உணவாக உட்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

ஒவ்வொரு வீட்டிலும் செவ்வந்தியும் குறோட்டனும் செவ்வரத்தையும் இருந்த இடங்களை, மிளகாய்க் கண்டும் மரவள்ளியும் எடுத்துக்கொண்ட காலமது.

பருப்பு இறக்குமதி பெருமளவில் நிறுத்தப்பட்டது. உள்நாட்டில் உழுந்து, பயறு போன்றவற்றின் உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட்டன.

குறைந்த தொகையில் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா பேக்கரிகளுக்குக் குறைந்த எண்ணிக்கையில் பங்கீடு செய்யப்பட்டது. அதனால் பாண் உற்பத்திக்கு குறைந்த தொகை மா மூடைகளே வழங்கப்பட்டன. பாண் வாங்குவதற்குப் பெரும் வரிசை முறை இருந்தது. தகப்பன் பிள்ளைகள் என ஆள்மாறி ஆள்மாறி ஒரு நாள் முழுவதும் நின்று பாண் வாங்கினார்கள்.



பாணுக்கும் பருப்புக்கும் நாக்கை அடிமைப்படுத்திப் பழக்கப்பட்ட சிங்கள சமூகம் 1977-ல் சிறிமாவின் ஆட்சியை முற்றாகத் தூக்கி எறிவதற்கும், தமிழரான அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகவும் வருமளவுக்கு நிலைமை வந்தது.

பாணுக்கும் பருப்புக்கும் பழக்கப்படுத்தி மரவள்ளிக் கிழங்கு யுகத்திற்கு மாறிய வாழ்க்கைக்கு இன்னுமொரு 05 வருடங்கள் பொறுத்திருந்தால் உள்நாட்டுப் பதிலீட்டுப் பொருளாதார முறையில் ஏற்படுத்தப்பட்ட அடித் தளங்கள் மூலமாக இலங்கை ஆசிய வட்டகையில் மாபெரும் பொருளாதார சக்தியாக உருவாகி இருக்கும்.

'சிங்கள மக்களது கன்ன, பொன்ன, நிதாகன்ன' (சாப்பிடுதல், குடித்தல், நித்திரை கொள்ளல்) வாழ்க்கை முறை 1980-களின் முற்பகுதியில் ஆசியாவின் ஆச்சரியமாக மாறக் கூடிய வளமான இலங்கைத் திருநாட்டைப் பெற்றுத் தராமல் போனது. விளைவு! ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன, தாராள இறக்குமதிப் பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு வந்து நாட்டை நாசமாக்கினார்.

நல்ல நல்ல உத்தியோகங்களையெல்லாம் விட்டு தோட்ட விவசாயத்திற்கும் குறிப்பாக மிளகாய்ச் செய்கையிலும் ஈடுபட்ட விவசாயிகளின் கனவை, 1977-இல் தேர்தலில் வென்று பிரதமராகி, பின்னர் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜே.ஆர். ஜெயவர்த்தன... கலைத்தே விட்டார்.

யாரும் எப்போதும் எந்தப் பொருளையும் தாராளமாக இறக்குமதி செய்யலாமென்ற தாராள பொருளாதாரக் கொள்கை சிறிமா போட்ட அடித்தளத்தைக் கொள்ளையடித்துச் சென்றது.

அது மட்டுமா, சிறுபான்மைத் தமிழ் மக்களது வாழ்வை நாசமாக்கினார். 1983 யூலை 25-ல் நாடெங்கும் தமிழ்களுக்கு எதிராகத் திட்டமிட்டு கட்டவிழ்க்கப்பட்ட வன்முறையும் உயிர்ப் பலிகளும் ஆசியாவின் ஆச்சரியமாக அல்ல ஆசியாவின் வெடிகுண்டாக அழகிய இலங்கைத் திருநாட்டை ஆக்கியது.

சிறிமா அம்மையார் பிரதமராக இருந்த போது உழைத்து வளமாக வாழ்ந்த விவசாயிகள் அவரை அம்மா என அழைத்தார்கள். ஜனாதிபதி தேர்தல் வரும் போதெல்லாம் எங்களது வாக்கு அம்மாவின் கட்சிக்குத் தான் என்றார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அம்மாவின் கட்சி என்ற பெயர் மூத்த விவசாயிகளால் இன்றளவும் சொல்லப்பட்டு வருகின்றது.

போர் நடந்த காலத்தில் கூட அம்மாவின் கட்சிக்குத் தான் எமது வாக்கு என மிக இரகசியமாக வாக்களித்தார்கள்.

அம்மா சிறிமாவின் காலத்தில் விவசாயிகளால் கட்டப்பட்ட வீடுகள் பல, 1996 ஏப்பிரல் மாதத்திற்குப் பின்னராக அவரது மகளின் ஆட்சிக்காலத்தில் - மகளால் கூறப்பட்ட சமாதானத்திற்கான போர்க் காலத்தில் அழிக்கப்பட்டன.

அம்மாவும் போய்விட்டார். மகள் சந்திரிகாவும் ஆட்சிக் கதிரையில் இருந்து இறங்கி நிற்கின்றார்.

உலக நாடுகள் பல வளரும் வேகத்தை, உயரும் வாழ்க்கைத் தரத்தைப் பார்க்க எமக்கும் ஆசையாக உள்ளது. எமக்காக எந்த மீட்பர், எப்போது வருவார் ?



thabendran.v@thaiveedu.com



# ‘முரளி’ எனும் இசைப் படைப்பாளியைக் கொண்டாடுதல்

— ரூபன் சிவராஜா

நம் மத்தியில் வாழும் கலைஞர்களில் ஆர்ப்பாட்டமில்லாமல் காத்திரமான படைப்புகளைத் தொடர்ச்சியாக உருவாக்கி வருபவர்களுளர். அத்தகு படைப்பாளிகளில் நோர்வேயில் வாழ்ந்து வரும் இசையமைப்பாளர் முரளிதரன் முத்துலிங்கம் (முரளி) முக்கியமானவர். அவருடைய இசைப் பயணம் 35 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கின்றது. அதனை 13.06.24 அன்று ஓர் ஒன்றுகூடல் மூலம் ஒழுங்குபடுத்தி, அடையாளப்படுத்தியிருந்தனர்.

அவருடைய உறவினர், நண்பர்கள், இசைப் பயணத்தில் இணைந்து பணியாற்றியவர்கள், கலை, இலக்கியம் சார்ந்தவர்கள் இந்நிகழ்விற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவரின் இசைபங்களிப்புக் குறித்த தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தனர். கலைஞர் முரளி போன்றவர்கள் சமூகத்தால் கொண்டாடப்படவேண்டியவர்கள். குடும்பத்தினர் எடுத்த இந்நிகழ்வு, சமூகமாக முன்னெடுத்திருக்க வேண்டியது என்ற சுயவிமர்சனம் இங்கு அவசியமாகுகின்றது. நல்ல கலைஞர்கள், படைப்பாளிகளைக் கொண்டாடுவது சமூகப் பொறுப்பில் உள்ளடங்கும் விடயம்.

எனது வரிகளில் அமைந்த பாடல்கள், அரங்க ஆற்றுகைகள் உட்பட்ட படைப்புகளுக்கு அவர் இசை வழங்கிய சில அனுபவங்கள் பற்றிய சில தகவல்களுடன் அவரின் இசைப் படைப்புகளின் பரிமாணம் குறித்த ஒரு அறிமுகத்தினையும் இப்பதிவின் ஊடாகப் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

### பல்வகைமை இசைப் படைப்புகள்:

குட்டி மாஸ்ரரிடம்(கணேசன் சுந்தரமூர்த்தி) கீபோட் இசைக் கக் கற்றவர். குட்டி மாஸ்ரர் நோர்வேயில் பல இசைத் தலைமுறைகளை உருவாக்கியவர். தொடர்ந்தும் உருவாக்கி வருகின்ற இசை ஆசிரியர். நோர்வேயில் அவரிடம் கற்ற முதல் மாணவர்களில் ஒருவர் முரளி.

முரளி அவர்களுடைய இசைப் படைப்புகளின் பரிமாணம் பன்முகப்பட்ட. சுயாதீனமான தனிப்பாடல்கள், இசைப் பாடற் தொகுப்புகள்(ஒலி நாடா, இறுவெட்டு), நடனங்கள், அரங்க ஆற்றுகைகள் மற்றும் நடன நாடகங்களுக்கான பாடல்கள், பின்னணி இசை(நாடகம், குறும்படம்), கவிதைகள், காட்சிப் படிமங்களுக்கான பின்னணி மற்றும் இசைக் கோர்வைகள் எனவாகப் பல்வகைமையானவை. பாடல்களை கிளாசிக்கல், கிராமியம், மெலோடி, மேற்கத்தியப் பாணி எனவாக வெவ்வேறு தன்மையுடைய பாடல்களை உருவாக்கியிருக்கின்றார்.

### இசைப் பாடற் தொகுப்புகள்:

‘புதுராகம் அரங்கேற்றம்’ இவரது இசையமைப்பில் 1993-ல் வெளிவந்த முதலாவது இசைப் பாடற் தொகுப்பு. தொடர்ச்சியாக ‘சிறகு’(1994), ‘விம்பங்கள்’(1996) ஆகிய தொகுப்புகள் வெளிவந்தன. நோர்வேத் தமிழ்ச் சூழலில் முதன்முதலில் இசைப்பாடற் தொகுப்பினை வெளியிட்ட பெருமை இவரையே சாரும். சிறுவர் பாடல்கள் மற்றும் தமிழ்ப் பாடசாலை சார்ந்த கலைத்துறை முன்னெடுப்புகளிலும் தன்னை ஈடுப




டுத்தியவர். கீபோட், தாளவாத்திய இசை கற்பித்தலிலும் சில காலம் ஈடுபட்டவர். இப்பொழுதும் தொடர்ச்சியாகப் பல தனிப்பாடல்களை உருவாக்கி வருவதோடு அவற்றைக் காணொளிகளாக்கி வலையொளித் தளத்தில் வெளியிட்டு வருகின்றார்.

இவருடைய இசையிலமைந்த பாடல்களுக்கான வரிகளைப் பல மூத்த கவிஞர்களிலிருந்து இளைய கவிஞர்கள் பலர் எழுதியுள்ளனர். அதேபோல் சங்கீதத்தில் வித்துவம் நிறைந்த மூத்த பாடகர்கள் மற்றும் வளர்ந்து வரும் இளைய பாடகர்கள் வரை பலரும் இவரது இசையில் பாடியுள்ளனர்.



### படைப்புத் தோழமை:

குட்டி மாஸ்ரர், வே. இரவிக்குமார், நாதன் கிறிஸ்தோபர், திரு கணேசன், விக்னகுமார் மகேசன், முரளி ஆகிய ஆறு இசைய மைப்பாளர்கள் இணைந்து தத்தமது பாடல்களை உள்ள டக்கி 'ராகம்-2000' என்ற தொகுப்பினையும் அடுத்த ஆண்டு 'ராகம்-2001' என்ற தொகுப்பினையும் வெளியிட்டனர். அவ் விரு இறுவட்டுகளும் நோர்வேயில் வாழும் இசையமைப்பா ளர்களுக்கிடையிலான கூட்டுணர்வினையும் படைப்புத் தோழ



மையினையும் வெளிப்படுத்தி நின்றது. இன்றுவரை அத்தகு பண்பின் அடையாளமாக அவை விளங்குகின்றன.

எனது வரிகள், எழுத்துகள், கவிதைகளும் அவரது இசை யோடு இணைந்திருக்கின்றன. 2005-ம் ஆண்டு முதன்முறை யாக நான் எழுதி நெறியாள்கை செய்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 'புலர்வின் பூபாளம்' நிகழ்வில் மேடையேறிய 'வெளிச்சம்' நாடகத்திற்கான பாடல்களுக்கு இசை அமைத்தி ருந்தார். அந்தப் பாடல்களை ஏ.எஸ். ரூபன் மற்றும் ஆதித் தன் ஆகியோர் பாடியிருந்தனர். 2006-ல் எனது எழுத்துருவில் (அரங்கப்பிரதி), ஆதவன் மாஸ்ரர், சர்வே அண்ணை மற்றும் நான் இணைந்து நெறியாள்கை செய்து மாவீரர் நாள் நிகழ் வில் மேடையேறிய 'மலை' அரங்க ஆற்றுகைக்கான சில பாடல்களும் அவரது இசையில் உருவாக்கப்பட்டவை. இறு திப் பத்தாண்டுகளில் பல தனிப்பாடல்கள், அரங்கப்பாடல் கள் எமது கூட்டிணைவில் உருவாகியிருக்கின்றன.

### அரங்கப் பாடல்கள்,<br>காட்சிப் படிம இசைக் கோர்வைகள்:

நோர்வே அரங்கச் செயற்பாட்டுக்குழுவின் படைப்புகளான 'விடமேறிய கனவு, ஒட்டகங்களின் பயணம், உடல் முழுதும் இறக்கைகளோடு ஆகியவற்றின் பாடல்கள், குறிப்பிட்ட நடன மற்றும் ஆற்றுகைக் காட்சிகளுக்கான இசைக் கோர்வை களை இப்படைப்புகளில் முரளி அவர்கள் உருவாக்கியிருக் கின்றார். இப்படைப்புகளுக்கு அரங்கில் நேரடிப் பின்னணி இசையை குட்டி மாஸ்ரர், அதிசயன், மற்றும் தேவகி காண்டீ-பன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

அரங்கத்திற்கான அவரது இசைப் பங்களிப்பு இரண்டு வகைப்பட்டது. ஒன்று அரங்கப் பாடல்கள், மற்றையது அரங் கின் காட்சிகள், படிமங்கள், நடனப் பகுதிகளுக்கான இசைக் கோர்வையை வடிவமைப்பது. அத்தகைய காட்சிகளுக் கான இசை மூலம் வெளிப்பாட்டினதும் ஆற்றுகையினதும் சூழலையும் உணர்வுகளையும் தத்ரூபமாகப் பார்வையாளர்க ளுக்குக் கடத்தும் வகையில் உயிர்ப்பான இசைக் கோர்வை களை உருவாக்கியிருக்கின்றார். அவரோடு பணியாற்றுவது மனதுக்குத் திருப்தி தருகின்ற அனுபவம்.



## மெனக்கெடலும் தனித்துவமும்:

பாடல்களுக்கு அப்பால் இவரிடம் என்னை கவர்ந்த ஒரு விடயம், ஒரு படைப்பை உருவாக்குவதற்கான மெனக்கெடலும் தனித்துவமாக அப்படைப்பு அமையவேண்டும் என்பதில் அவர் கொண்டிருக்கின்ற கரிசனையுமாகும். திருப்தி வரும் வரை திரும்பத்திரும்ப அதனை மெருகூட்டியபடியே இருப்பார்.

அரங்கப் பாடல்கள், இசைக் கோர்வைகளைப் பொறுத்தமட்டில் எமக்கு எது வேண்டும் என்று கேட்கின்றோமோ அது வரும்வரை உழைப்பதற்குத் தயாராக இருப்பார். எமக்கும் அவருக்கும் திருப்தி வரும்வரை குறித்த படைப்பிற்காக உழைப்பது அவரது இயல்பு. இசை சார்ந்து தன்னைப் புதுபித்துக்கொண்டிருப்பவர்களில் ஒருவர். குறிப்பாக அவருடைய ஒலிப்பதிவு, ஒலிக்கலவை, ஒலித்தன்மை, மற்றும் மாஸ்ரறிங் தரம் வாய்ந்ததாக இருக்கும்.

அவர் Oslo Rommen அரங்கத்தில் தொழில்நுட்பப் பிரிவில் பணியாற்றுகின்றார். அந்த அரங்கில் இடம்பெறும் நோர்வேஜிய நாடகங்களைப் பார்ப்பதற்காக என்னையும் அரங்கத்துறையில் இயங்குகின்ற நண்பர்களை அழைப்பார். அவற்றைப் பார்ப்பதன் ஊடாக நிகழ்த்துகை மற்றும் அரங்க அமைப்பு சார்ந்து தமிழ் நாடகத்துறை புதிய பரிமாணங்களை எட்ட வேண்டுமென்ற பெருவிருப்பு அவரிடம் உள்ளது.

கவிதைகளில் ஈடுபாடு கொண்டவர். கவிதைகளை நடனம் மற்றும் காணொளி வடிவிற் காட்சியாக்கம் செய்யப்பட்ட எனதும் கவிதாவினதும் படைப்புகளுக்குரிய பின்னணி இசையை அமைத்துத் தந்துள்ளார். எனது 'எழுதிக் கடக்கின்ற தூரம்' கவிதைத் தொகுப்பிலிருந்து இரண்டு கவிதைகளிலிருந்து வரிகளைத் தேர்ந்தெடுத்து, மெட்டமைத்துப் பாடலாக்கியிருக்கின்றார். மௌன முடிச்சுகளில் என்ற தலைப்பில் அப்பாடல் காணொளியாகவும் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

## நோர்வே அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் மதிப்பளிப்பு:

13.06.24 அன்று, அவருடைய இசைப் பயணத்தினை அடையாளப்படுத்தும், பொருட்டு ஏற்பாடு செய்த நிகழ்வில், அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் சார்பில் அவருக்கான மதிப்பளிப்பினை வழங்கியிருந்தோம். அம்மதிப்பளிப்புக் கேடயத்தில் பின்வரும் குறிப்பினைப் பதிவுசெய்திருந்தோம்

*இசைத்துறையில் தொடர்ச்சியாக இயங்கிவரும் கலைஞன். தனித்துவமான இசைப் படைப்புகளை உருவாக்கி வரும் இவரது இசைப் பயணம் மூன்றரைத் தசாப்தங்களை நிறைவு செய்கிறது.*

சுயாதீனமான பாடல்கள், அரங்க மற்றும் நடன ஆற்றுகைகளுக்கான பாடல்கள், பின்னணி இசை, காட்சிப் படிமங்களுக்கான இசைக் கோர்வைகள் எனவாகப் பல்வகைமை இசைப் படைப்பாளராக மிளிர்பவர் திரு. முரளிதரன் அவர்களின் இசைப் பங்களிப்பு மற்றும் படைப்பாளுமைக்கு மதிப்பளிப்பதில் பெருமகிழ்வும் நிறைவும் அடைகின்றோம்.

**ஒளிபடங்கள்:** தீபன் (Theepan Ganesh)



rooban.s@thaiveedu.com



# ஊழி

-ரதன்

போருக்குப் பின்னர் தமிழ் மக்களின் வாழ்வியலை மையப்படுத்திப் பல திரைப்படங்கள், குறும்படங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. உலக சினிமா வரலாற்றில் இரண்டாம் உலகப் போரின் பின்னால் நவ-யதார்த்தவாத சினிமா, நியுவேவ் சினிமா (பிரான்ஸ்) போன்ற பல புதிய திரைவடிவங்கள் தோன்றின. Roberto Rossellini-இன் போரை மையப்படுத்திய முத்தொகுதி (trilogy) திரைப்படங்களான Roma, città aperta (1945 Open City), Paisà (1946 Paisan) and Germania, anno zero (1947 Germany, Year Zero) உருவாகின. பெலினி, டிசிகா, குரோசாவா போன்ற பல சிறந்த இயக்குனர்கள் இரண்டாம் உலகப் போரின் பின்னரே தோன்றினார்கள். பைசிக்கின் தீவ்ஸ் உட்பட பல சிறந்த படங்கள் உருவாக்கப்பட்டன. ஐரோப்பா, யப்பானில் மட்டுமல்லாது போர் நடைபெற்ற பல நாடுகளில், போரின் பின்னர் புதிய திரைப்பட இயக்கங்கள், வடிவங்கள் தோன்றின.

இலங்கையிலும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலங்களில் விடுதலைப் புலிகள் பல குறும்படங்களையும், முழுநீளத் திரைப்படங்களையும் தயாரித்திருந்தார்கள். மிகக் குறைந்த தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட காலத்தில் இப் படங்கள் உருவாக்கப்பட்டிருந்த போதும், இவை தரமான படங்கள் என்பது மறுப்பதற்கில்லை. அதே காலத்தில் சுய முயற்சிகளாகப் பல குறும்படங்கள், முழுநீளத் திரைப்படங்கள் வெளியாகியிருந்தன. மறுபுறத்தில் சிங்களத் தேசியத்தை வலியுறுத்தும் ஏராளமான சிங்களப் படங்கள் வெளியாகியிருந்தன. மாற்றுச் சிங்கள இயக்குனர்கள் பிரசன்னா விதானகே, அசோக ஹங்கம போன்றோர் போரை விமர்சித்துத் திரைப்படங்கள் எடுத்திருந்தனர்.

2009-ல் போர் முடிவுக்கு வந்த பின்னர் பிரசன்னா விதானகே வித்யு வித்தவுட்யு (Oba Nathuwa Oba Ekka) என்ற படத்தை 2012-ல் வெளியிட்டார். பிரசன்னாவின் இயக்கத்தில் வெளிவந்த இரு மொழிப் படமான இது. போருக்குப் பின்னர் வெளிவந்த ஒரு குறிப்பிடத்தக்க படம், அசோக ஹங்கமவின் இனி அவன் திரைப்படம் ஒரு தமிழ் மொழிப்படமாகும். போருக்குப் பின்னரான தமிழ் சமூகச் சிக்கல்களை முன்வைத்திருந்த போதும் சிங்கள தேசியத்தை மீண்டும் வலியுறுத்தியது. போர் முடிந்து மூன்றாண்டுகளின் பின்னர் இப்படம் வெளியாகியிருந்தது.

போர் முடிந்த பின்னர் பல முழுநீளத் தமிழ் படங்கள் வெளியாகியிருந்தன. மதிசுதா, லெனின் சிவம் எனப் பல இயக்குனர்களின் படங்கள் வெளியாகியுள்ளன. இதுவரை வெளிவந்த படங்கள் எதுவும் இலங்கைத் தமிழ்ச் சினிமாவிற்கான புதிய வடிவத்தை உருவாக்கவில்லை. குறும்படங்கள் விதிவிலக்கு. குறும்படங்கள் ஏற்படுத்தியுள்ள மாற்றத்தையும் தாக்கத்தையும் முழுநீளத் திரைப்படங்கள் வெளிப்படுத்தத் தவறிவிட்டன.

போர் தந்த வலிகளையும், போர் மீதான விமர்சனங்களையும் ஒரு புதிய வடிவச் சினிமாவாக அல்லது ஒரு தரமான படைப்பாக உருவாக்கவில்லை. புலம்பெயர் படைப்பாளிகளும் புலம்பெயர் தமிழ் படங்களுக்கான புதிய வடிவத்தை உருவாக்க தவறிவிட்டார்கள். மாறாகச் சதா பிரணவனின் Friday and Friday போன்றவை விதிவிலக்கு.

றோபெட்டோ றோசிலினியின் Paisà திரைப்படம் 1946-ல் வெளியாகிய படம். இரண்டாம் உலகப் போரின் பாதிப்பை, அவலங்களை, வலியை வெளிப்படுத்த அவர் ஆறு கதைகளைக் கொண்ட படமாக இயக்கியிருந்தார். இப்படத்தில் இரு வேறு உலகங்கள் உள்ளதாகக் காட்டியிருப்பார். இதனை அவரே கூறியுள்ளார். Rossellini said of the film: 'In Paisá there were two worlds which came into contact, each with a different psychology and mental structure. அண்மையில் வெளியாகியிருந்த ஊழி திரைப்படத்திலும் இயக்குனர் ரஞ்ஞித் யோசப்-இன் திரைப்படக் களமானது, இரு வேறு பிரதேசங்களில் நடைபெறுவது போல் உருவகப்படுத்தியுள்ளார். ஒரு பிரதேசம் கண்களுக்கு முன்னால் விரிந்துள்ளது. மறு பிரதேசம் கண்களுக்கு புலப்படாவிட்டாலும், உணரக் கூடியதாகவுள்ளது. பைசா படம் போன்று ஒரு பாத்திரத்தின் மூன்று வெவ்வேறு காலங்கள் காட்டப்படுகின்றன. ஆனால் இந்த மூன்று காலங்களும் திரையில் மாறி, மாறி வருகின்றன. 2009-2024-க்கும் இடைப்பட்ட பதினைந்து வருட காலத்தில் காசி என்ற பாத்திரத்தின் வெவ்வேறான பரிமாணங்களை இயக்குனர் வெளிப்படுத்தியுள்ளார். சிறுவன், பதின்ம வயது பாடசாலை மாணவன், இளைஞன் ஆகியவற்றினூடாகக் காசி வளர்கின்றான். ஒவ்வொரு பருவத்துக்கும் ஐந்து வருட காலத்தை ஒதுக்கலாம்.

காசி என்ற பாத்திரத்தினூடாக 'ஊழி' படத்தைப் படைத்துள்ள ரஞ்ஞித் யோசப் 'துரோகம்' குறும்படம் உட்பட பத்துக்கும் மேற்பட்ட குறும்படங்களை இயக்கியுள்ளார். இக்குறும்படங்கள் பல சர்வதேசத் திரைப்பட விழாக்களில் விருதுகளைப் பெற்றவை. ரொரன்ரோவிலுள்ள திரைப்படக் கல்லூரியில் திரைப்படவியலைக் கற்ற ரஞ்ஞித் யோசப், தமிழ்நாட்

டில் ‘பூ’ படத்தில் இணை இயக்குனராகக் கடமையாற்றியுள்ளார். வேறு பல தமிழகப் படங்களிலும் பங்காற்றியுள்ளார். ‘9.50’ அவரது முதலாவது முழுநீளத் திரைப்படம். அதன் பின்னர் ‘சினம் கொள்’, தற்போது ‘ஊழி’ திரைப்படம் என மூன்று முழுநீளத் திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

ஒரு புலம்பெயர் படைப்பாளியான ரஞ்ஜித் யோசப் 2009-ல் போர் முடிவுற்ற பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தனது பார்வையில் சினம் கொள், ஊழி திரைப்படங்களினூடாக முன்வைக்கின்றார். இவ்விரு படங்களும் ஒரு கால வரலாற்றை முன்வைக்கின்றன. இதனை நிகழ்காலம் எனலாம். நிகழ்காலமே பின்னர் வரலாறாக மாறுகின்றது.

ஒரு தேசத்தை அழித்து மற்றொரு தேசத்தைப் புதிதாகக் கட்




டியெழுப்ப முயற்சிக்கும் அரசுக்கு எதிரான ஒரு படைப்பாளியின் குரலே ஊழி. வரலாறு தவறாக முடியாது. தொன்மை வரலாறுகளைச் சிதைத்து, கடந்த கால வரலாற்றின் படிமக்களை அழித்து, நினைவுகளை அழிக்க முற்படும் அரசுக்கு எதிராகவே ஊழியின் ஆரம்பத்தில் இராவணன் நாடகம் திரையில் ஆடப்படுகின்றது. இராவணன் தமிழனா என்ற கேள்வி எனக்குள்ளும் உள்ளது. இராமாயணம் எங்கு நடைபெற்றது என்பதற்கு ஆய்வாளர்களே பல பதில்களைக் கூறுகின்றார்கள். ஆனாலும் தென் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இராவணனை சிங்களவராகச் சித்தரிக்கின்றார்கள். செப்ரம்பர் 23, 2007 ஹின்டுஸ்ரான் ரைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையின் தலைப்பு இது Ravana is a hero for Sinhala nationalists. தொன்மையான பல தமிழ் கோயில்கள் புத்த கோயில்களாக மாற்றப்படுகின்றன. இராவணனை தமிழனாக சித்தரித்து அவனது வீழ்ச்சியிலிருந்து காசியின் வாழ்க்கையை ஆரம்பிக்கின்றார் ரஞ்ஜித் யோசப்.

அற்றம் எகோயனின் கலண்டர் திரைப்படத்தில் ஆர்மேனியாவிற்குக் கனடாவிலிருந்து செல்லும் புகைப்படக்காரர் தனது புதிய ஆண்டின் நாட்காட்டிக்காக அங்குள்ள தேவாலயங்களைப் படம் பிடிக்கின்றார். துருக்கியிடம் தோல்வி கண்ட ஆர்மேனியா இன்று ஒரு தனிநாடு. புகைப்படக்காரரின் நோக்கம் தொன்மைகளைத் தனது நாட்காட்டியினூடாக நினைவுகூரச் செய்வதாகும். இலங்கை அரசு திட்டமிட்டுத் தொன்மைகளை அழிப்பதன் காரணமும் இந்த நினைவுகளை மீட்டலுமாகும். வேர்களை அழிப்பதன் மூலம், வேர்களைத் தேடும் முயற்சிகளைத் தடை செய்யலாம்.

காசியின் வாழ்வினூடாக மூன்று முக்கிய விடயங்களை இயக்குனர் முன்வைக்கின்றார். தமிழர்களின் கல்வியை அரசு அழிக்க முற்படுகின்றது. இரண்டாவதாக இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருட்கள் மற்றும் மதுவின் பாவனையை அதிகரிக்கச் செய்கின்றார்கள். பாலியல் செயல்பாடுகள் அதிகமாகவுள்ளன. மூன்றாவதாகப் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகளும் இன்றைய தமிழ்ச் சூழல் அழிவிற்குக் காரணமாகவுள்ளது. இவை மூன்றும் சமூகத்தின் மன இயல்பை மாற்றுகின்றன. சமூக வறுமையை உருவாக்குகின்றன. உலகின் பல நாடுகளில் மேற்கு நாடுகள் போதை பொருள் விற்பனையை ஊக்கப்படுத்திப் பல நாடுகளை அழிவுப் பாதைக்குக் கொண்டுசென்றுள்ளன. கொலம்பியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள பல நாடுகளை உதாரணமாகக் கூறலாம்.

அரசின் பண்பாட்டு ஊடுருவல் என்பது இராணுவ அழிப்பைவிட மோசமானது. ஒரு புதிய அடிமைத்தனத்தை உருவாக்கும். இந்த அடிமைத்தனத்தை அரசு நிறுவனமயமாக்கும். இது உங்கள் மண்ணில் உங்களை அந்நியமாக்கும். இதற்கெதிராகப் படைப்பாளி எழுச்சி காண்பது இயல்பு. அந்த வகையில் காசியினூடாகச் சமூகத்தை நோக்கி முன்வைக்கும் கேள்விகளே ஊழி.

ஊழியில் தமிழ் பண்பாட்டில் ஊறியிருக்கும் சாதிய மனோபாவமும் விமர்சிக்கப்படுகின்றது. போரின் போதும் பின்னரும் தோன்றியுள்ள மத ஊடுருவல்களையும் இயக்குனர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. குன்றின் மீதுள்ள முருகன் கோயிலுக்குப் புத்த பிக்கு செல்லும் காட்சி ஒரு குறியீட்டுக் காட்சி. இது இன்றைய இலங்கையில் தமிழ் கோயில்கள் புத்த கோயில்களாக மாற்றப்பட்டு வரும் வரலாற்றைக் கூறுகின்றது.

புலம்பெயர் சமூகத்துக்கும், இலங்கையில் வாழும் தமிழர்களுக்குமிடையிலான இடைவெளியை உருவாக்குவதில் அரசுக்கும் பங்குண்டு என்பதனை ஒரு சில காட்சிகள் மூலம் இயக்குனர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஊழியில் பாத்திரங்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் புறக் காட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. crane shot மூலம் அப்பிரதேசமே காட்டப்படுகின்றது. இவ்வாறான தன்மையை நவ-யதார்த்தவாதப் படங்களில் காணலாம். அகமும் புறமும் இணைந்தே தனி மனித வாழ்வியலின் செயற்பாடுகளைத் தீர்மானிக்கின்றது. இப்படத்தில் இசைக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார் இயக்குனர். சிறந்த இசையும் புறக்காட்சிகளுடன் இணைந்து பயணிக்கின்றது.

போர் நடைபெறும் காலங்களைவிட, போருக்குப் பின்னரான

காலமே ஒரு சமூகத்துக்கு முக்கியமானதாகும். ஏனெனில் இக்காலகட்டத்திலேயே போர் தோற்றுவித்த சமூக அழிவுகள், தனிப்பட்ட அழிவுகள் (கணவன் அல்லது மனைவி இழப்பு, குழந்தைகள் இழப்பு), விரக்தி, வேலையில்லாத் திண்டாட்டம், உள உடல் ரீதியிலான பாதிப்புகள், மூன்று - நான்கு சந்ததிகளின் கல்வியறிவு பாதிக்கப்பட்டிருத்தல், கலாசாரக் குழப்ப நிலைகள் போன்றனவற்றினைத் தோல்வியடைந்த அல்லது ஒடுக்கப்பட்ட சமூகம் சந்திக்க வேண்டும். இவற்றிலிருந்து சமூகத்தை மீளக் கட்டமைக்கவேண்டும். இவற்றைவிட புதிதாகத் தோன்றியுள்ள சமூகச் சக்திகளை எதிர்கொள்ள வேண்டும், புதிய சுரண்டல்களைச் சந்திக்க வேண்டும்.

சமூகத்தை மீளக் கட்டமைப்பதை அரசு புறந்தள்ளவே செய்யும். சமூக மக்களுக்கும், சமூகத்தை மீளக் கட்டமைக்கும் கடமையுண்டு. போதைப் பொருள் நுகர்வால் பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுக்கும் கடமை சமூகத்துக்கும் உண்டு. அங்கு இயங்கும் சமூக இயக்கங்கள், அமைப்புகள் போன்றனவும் மீள் கட்டமைப்பில் முக்கிய பங்காற்றவேண்டும். ஒன்றுமற்று இயங்கும் சமூகத்தை இப்படம் விமர்சிக்கத் தவறிவிட்டது.

கட்டற்ற வெளியோ சுதந்திரமோ ரஞ்ஜித் யோசப்பிற்கு இலங்கையில் இல்லை. இப்படத்தின் திரைக்கதையாசிரியர் தீபச்செல்வன் இரு தடவைகள் இலங்கை அரசினால் விசாரிக்கப்பட்டுள்ளார். அப்படியிருந்தும் இயக்குனர் இப்படத்தில் தான் கூற விரும்பிய விடயங்களை நேர்மையுடன் பதிவு செய்துள்ளார். சுதந்திரமற்ற தனது வெளியை கடல், நிலம், வானம் எனக் காட்சிப்படுத்தியுள்ளார் இயக்குனர்.

ஊழி திரைப்படத்தில் மூன்று வெவ்வேறு காலகட்டங்கள் மாறி, மாறிவரும். ஒரு திரைப்படத்துக்கான திரைக்கதை வடிவத்தைத் தேர்வு செய்யும் சுதந்திரம் இயக்குனருக்கு உண்டு. ரஞ்ஜித் யோசப் தேர்வு செய்துள்ள நொன்லீனியர் முறையானது 2009-2024 காலகட்டத்தை மீள மீள நினைக்கவைக்கின்றது. காசியின் பால்ய காலத்தைப் படம் முடியும் போதும் பார்வையாளரை மீட்டவைக்கின்றது. தமிழில் இதுவரை இவ்வாறான நொன்லீனியர் படங்கள் வெளிவந்தது மிக மிகக் குறைவு. தாய் வீட்டிற்கு தனிப்பட்ட முறையில் அளித்த செவ்வியில் நொன்லீனியர் முறையைத் தேர்வு செய்தமைக்கான காரணத்தைக் கூறினார் ரஞ்ஜித் யோசப். அவரது பதிலிது,

*'ஊழி திரைப்படத்தின் திரைகதை வடிவம் என்ன என்பதை எழுதிய பின்பு அதைச் சார்ந்து யோசிக்கும்போது. இந்தக் கதையின் மூன்று கதாபாத்திரங்கள் வாழ்வியல் சார்ந்து அந்தந்தக் காலங்களில் நிகழ்ந்த ஒரு சம்பவங்கள், அதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள், அவர்கள் என்ன நிலையை அடைந்தார்கள் என்பதாகவே வடிவமைத்திருந்தேன். ஒவ்வொரு கதைகளாக நேர்கோட்டு வடிவத்தில் சொல்லிமுடிக்கும் போது அந்தக் கதையால் ஏற்படும் பாதிப்பை என்னால் உணர முடியவில்லை. எனவே தான் non linear மூலம் திரைப்படத்தில் வரும் கதாபாத்திரங்களின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் ஒரே நேரத்தில் திரைப்படத்தில் காட்டும்போது அவர்களுக்கு ஏற்படும் பாதிப்பை என்னால் உணரமுடிந்தது. எனவே தான் இந்த யுக்தியை நான் ஈழச் சினிமாவில் ஒரு பரீட்சார்த்த முயற்சியாக மேற்கொண்டேன். ஒரு கதாபாத்திரமாக இல்லாமல் அது வெவ்வேறு கதாபாத்திரமாகப் பார்வையாளரக்குத் திரையில் காட்டி கடைசியில் அந்த மூன்று கதாபாத்திரமும் ஒன்றுதான் எனப் பார்வையாளர்களுக்கு உணர வைக்கவே இந்த யுக்தியைப் பயன்படுத்தினேன்.'*

ஊழி படத்தில் நடித்த நடிகர்கள் தொழில்முறை நடிகர்களல்ல. பலருக்கு இதுவே முதல் படம். நடிகர்கள் அனைவரும் இலங்கைத் தமிழ் நடிகர்கள். பொதுவாக இவ்வாறான அரசியல் படங்கள் எடுக்கப்படும் பொழுது, அந்தச் சமூகம் சாராத நடிகர்கள் நடிக்கும் பொழுது, பிரதிநிதித்துவமற்றுப் போகின்றது. முதல் குடிகளின் பாத்திரத்தில் ஆங்கிலேய நடிகர்கள் நடித்துள்ளனர். இது ஒரு அந்நியத் தன்மையையும் ஏற்படுத்திவிடுகின்றது.

படத்தில் இயக்குனர் முன்வைக்கும் மேற்கூறிய கருத்துகளுக்கப்பால் பின்னொலிக்கும் கருத்துகள் சில எனக்கு உடன்பாடற்றவை. அவற்றிலொன்று பற்றித் தாய்வீட்டுக்கு அளித்த செவ்வியில்... 'போருக்குப் பின்னரான படங்களில் ஈழக் கோட்பாடு அவசியமானது எனக் கருதுகின்றீர்களா?' எனக் கேட்கப்பட்ட போது இயக்குனர் அளித்த பதிலில்:

*'தமிழர்களுடைய பாரம்பரிய தேசம் என்பது தமிழீழமாகத்தான் இருக்கும். அந்தத் தேச விடுதலைக்காக 40 ஆண்டுகளாகப் பாரிய யுத்தம் நிகழ்ந்தது. தமிழீழ மக்களின் விடுதலை அபிலாசைகளுக்காகப் லட்சக்கணக்கான மக்களும், போராளிகளும் உயிரை அளித்திருக்கிறார்கள். தமிழர்கள் தங்களது தேசத்தில் முழுமையான சுதந்திரத்துக்கு, உரிமையோடு வாழ்வதற்கு தான் ஈழவிடுதலைப் போராட்டம் நடந்தது. ஈழவிடுதலைப் போராட்டம் குறித்தும், ஈழவிடுதலை சார்ந்தும், ஈழ வாழ்வியல் சார்ந்தும், பேசப்படும் படங்கள் தான் ஈழச் சினிமாவாகும். தமிழீழத்திலிருந்து உருவாக்கப்படும் திரைப்படங்களின் அடிப்படையே ஈழப் போராட்டம் சார்ந்து பேசக்கூடிய ஓர் ஊடக வழிமுறையாகத்தான் நான் பார்க்கிறேன். இலங்கை இனவாத அரசுகள் மக்களைக் கொன்று குவித்ததும், போராட்டம் என்ற பெயரில் மனித உயிர்கள் அழிக்கப்பட்டதையும் இச்சமூகத்துக்கு எடுத்துச் சொல்வதற்குத் திரைப்படங்கள் என்ற மிகப்பெரிய ஊடகத்தின் ஊடாக அடுத்த தலைமுறைக்குச் சர்வதேசச் சமூகத்துக்கும் எமது விடுதலைப் போராட்டத்தைப் பற்றிச் சொல்லக்கூடியதாக எமது ஈழத்திலிருந்து உருவாகக்கூடிய படங்கள் இருக்க வேண்டும். ஈழச் சினிமா தமிழ் தேசியத்தின் அடையாளம், தமிழீழத் தேசியத்தின் குரலாகத் தொடர்ந்து செயற்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.'*

அண்மைக் காலங்களில் வெளிவந்த விசாகேச சந்திரசேகரம் மணல் படத்தில் ஒரு மாதிரிப் போராளியையே உருவாக்கியுள்ளார். சுமதி சிவமோகனின் The Single Tumbler வரலாற்றையே மாற்றி எழுதியுள்ளது. இவர்களிலிருந்து ரஞ்ஜித் யோசப் மாறுபட்டுள்ளார். அழிந்து கொண்டு போகும் ஒரு சமூகத்தினைக் காட்சிப்படுத்தும் இயக்குனர், தான் சார்ந்த சமூகத்தின் சக்திகளை விமர்சிக்கத் தவறிவிட்டார். ஆனாலும் அண்மைக் காலங்களில் வெளியான குறிப்பிடத்தக்க ஈழ அரசியல் சினிமா என்பது மறுப்பதற்கில்லை.

ஒரு படைப்பாளியால் அழிவைக் காட்சிப்படுத்த முடியும். அழிவிலிருந்து சமூகத்தைக் காப்பது எம் அனைவரதும் கடமையுமாகும். ஊழி என்றால் அழிவு.



rathan@thaiveedu.com




***'... காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து***
***வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்***
***ஓசைப்படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?....'***

- ஆண்டாள்

ஷியாம் பெனகல் புதிய அலை திரைப்பட இயக்குனர்களில் மிக முக்கியமானவர். விளம்பரப் படங்கள் எடுத்துக்கொண்டிருந்த பெனகல், முதன் முதல் இயக்கிய முழுநீளத் திரைப்படம் 'அங்குர்'. இதனை அவருடைய விளம்பரப் படத் தயாரிப்பாளர்களான Blaze நிறுவனமே தயாரித்தது. அவர்களுக்கும் இது முதல் தயாரிப்பு. வெளியானபோது பெரும் சலசலப்பை இந்தப் படம் ஏற்படுத்தியது. ஷபானா ஆஸ்மி, அனந்த் நாக், சாது மெஹர் போன்ற நடிகர்களை அறிமுகப்படுத்திய படம். 'சரண்தாஸ் சோர்' என்ற குழந்தைகளுக்கான திரைப்படத்தை இயக்கிய பிறகு வெளிவந்தது 'நிஷாந்த்' என்ற அற்புதத் திரைப்படம். அட்டூழியஞ் செய்யும் நான்கு பணக்காரச் சகோதரர்களை ஊரே அடக்கும் கதை. அம்ரிஷ் பூரி, நசீருத்தின் ஷா, அனந்த் நாக், மோகன் ஆகாஷி, கிரிஷ் கர்னாட், ஷபானா, ஸ்மிதா பாட்டில், குல்பூஷண் கார்பாண்டா என்று மீண்டும் ஒரு அற்புத நடிகர் கூட்டம். இதில் பலருக்கு இது அறிமுகப்படம்!

இவை இரண்டுமே சிறந்த படத்துக்கான தேசிய விருதைப் பெற்றவை, அதைத் தொடர்ந்து வந்த 'மத்தன்' (மத்தால் தயிர் கடைதல்) இதே விருதைப் பெற்றது. ஒரு 'தொப்பித் தந்திரம்!' இந்தப் படத்திற்குப் பல சிறப்புகள் உண்டு. அந்தச் சிறப்புகள் 48 வருடங்கள் கழித்து 2024-ம் வருடமும் வருவது மேலும் ஒரு சிறப்பு. பால் உற்பத்தி தொடர்பான 'வெண்மைப் புரட்சி' இந்தியாவில் பெரும் வெற்றியடைந்த ஒரு திட்டம். பால் உற்பத்தியாளர்களுக்கான கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டு, தனியார் கொள்ளையைத் தடுக்கும் முயற்சிகள் செய்யப்பட்டன. இப்படி உருவானதுதான் Gujarat Co-operative Milk Marketing Federation Ltd. இவர்களுடைய புகழ் பெற்ற பிராண்ட் தான் 'அமுல்'. பால் பவுடர் முதல் ஐஸ்கிரீம் வரை தயாரித்து விற்பவர்கள். இந்த அமைப்புத்தான் 'மந்த்தன்' படத்தின் தயாரிப்பாளர்கள். இந்தத் தயாரிப்புக்கு முதலீடு போட்டவர்கள் இந்தக் கூட்டுறவு அமைப்பில் அங்கம் வகிக்கும் 5 லட்சம் சிறு பால் உற்பத்தியாளர்கள். ஆளுக்கு இரண்டே ரூபாய் பங்கைச் செலுத்தினார்கள். இந்தியாவின் முதல் குழு நிதி (crowd funded) திரைப்படம் இதுதான் என்பது மற்றொரு சிறப்பு.

### திரைப்படத்தின் சாரத்தைப் பார்ப்போம்:

இளம் கால்நடை மருத்துவரான டாக்டர் ராவ், குஜராத் மாநிலத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்துக்கு ஒரு புதிய பணி நிமித்தமாக வந்து சேர்கிறார். அவருடைய சிறிய குழுவும் பின்னர்



வந்து அவருடன் சேர்ந்து கொள்கிறது. அந்தக் குக்கிராமத்தில் பெரும்பாலானோரின் பணி மாடு, எருமைகள் வளர்ப்பதும், பால் கறந்து விற்பதும்தான். படிப்பறிவற்ற இந்தப் பாம



ரர்களை அங்குள்ள பால் மொத்த வியாபாரி மிஷ்ரா, குறைந்த விலை கொடுத்துப் பாலை வாங்கி ஏமாற்றுகிறான். அவன் வெளியில் விற்பது கொள்ளை விலைக்கு. ராவ் குழுவின் முக்கிய நோக்கம், அங்குள்ள ஏழை பால் உற்பத்தியாளர்களை ஒன்றிணைத்து ஒரு கூட்டுறவுச் சங்கம் உருவாக்கி, அனைவரையும் அதில் உறுப்பினர்களாக இணைத்து, அவர்களை நேரடி லாபம் பார்க்க வைப்பது... பின்னர் அவர்களையே அதை நிர்வகிக்க வைப்பது. இங்கு எதுவும் சுலபமல்ல என்பதை அவர்கள் நேரிடையாக அனுபவிக்கிறார்கள். கிராமத்து அரசியல், சாதிவெறி, இவர்கள் மீது நம்பிக்கையின்மை என்று நிறையப் பிரச்சினைகள். போதாததற்கு அங்குள்ள தலித் இளைஞன் போலாவிற்கு இவர்கள் மீது கடும் சந்தேகமும் அவநம்பிக்கையும். உள்ளூர்ப் பெண்களை வழி நடத்துபவள் பிந்து என்ற கணவனால் கைவிடப்பட்ட இளம் பெண். ஒரு குழந்தைக்குத் தாயார். சற்றுக் கடுமையாகப் பேசக் கூடியவள்.

மிஷ்ராவின் தலையீடுகள், தொந்தரவுகள் இருந்தாலும் ராவ் கொஞ்சம் கொஞ்சமாக அனைவரின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகிறார். கால்நடை மருத்துவராக இருந்தபோதும், மிக உடல் நலிவுற்றிருக்கும் ஒரு குழந்தைக்கும் மருத்துவ நெறியை மீறி வைத்தியம் கூடப் பார்க்கிறார். கிராமவாசிகள் கையிருப்பில் இருக்கும் பாலைச் சோதனை செய்து அதில் அதிக கொழுப்புச் சத்து இருப்பதைக் கண்டறிந்து அதற்கான நியாய விலையையும் தருகிறார். மிஷ்ராவுக்கு இதெல்லாம் எரிச்சலைத் தருகின்றன. ஊரில் நிலவும் சாதி வேறுபாட்டு வெறுப்பு நிலை குறித்து, கூட இருக்கும் அதிகாரி தேஷ்முக், ராவை எச்சரிக்கிறார். கவனமாக இருக்கும்படியும், சார்பு நிலை எடுக்கக்கூடாது என்றும் வலியுறுத்துகிறார்.

கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேர்தல் என்ற பேச்சு வந்தவுடனேயே, சர்பஞ்ச் (ஊர்த்தலைவர்) இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார். ஊருக்குத் தலைவராக இருப்பது போலச் சங்கத்திற்கும் தானே தலைவராக இருக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார். இன்னொருவருடன் தேர்தலில் மோதுவதே தன் கௌரவத்திற்கு இழுக்கு என்பது அவருடைய வாதம். அந்தச் சங்கத்தில் சேர்ந்தால், அங்கு சர்பஞ்சும் அவருடைய ஆட்களும் அதிகாரம் செலுத்துவார்கள் என்று பயந்து தாழ்த்தப்பட்டவர்களும் தயங்குகிறார்கள். ராவ் மற்றும் அவருடைய சக அலுவலர்களும் அனைவரிடமும் பேசித் தேர்தலுக்கு ஒத்துக் கொள்ள வைக்கிறார்கள். இதற்கிடையில் உள்ளூர் இளம் பெண்ணிடம் நெருங்கிப்பழகி மக்களின் விரோதத்தைச் சந்தித்ததால் சந்தர்வார்க்கர் என்ற இளம் ஊழியர் தயவு தாட்சண்யமின்றி டாக்டர் ராவினால் வெளியேற்றப்படுகிறார். ரவுடித்தனமாக நடந்துகொண்டான் என்று போலா மீது சர்பஞ்ச் பொய்ப் புகார் தர, அவனும் கைது செய்யப்படுகிறான். அவனையும் மீட்டு வருகிறார் ராவ். இந்தச் செயல்களினால் போலாவுக்கு அவர் மீது நம்பிக்கை பிறக்கிறது.

படம் நெடுக, டாக்டர் ராவுக்கும் பிந்துவுக்கும் இடையே மலரும் மெல்லிய ஈர்ப்பு நமக்குப் புலப்படுகிறது. ஆனால் ராவின் மனைவி கணவனுடன் வாழ இந்த ஊருக்கே வந்துவிடுகிறாள். பிந்துவின் குடிகாரக் கணவனும் திரும்ப வந்து ராவை எச்சரிக்கிறான். கூட்டுறவுச் சங்கத் தேர்தலும் நடக்கிறது. சம வாக்குகள் பெற்ற நிலையில் குலுக்கலில் போலா நிறுத்திய தலித் வேட்பாளர் வெற்றி பெறுகிறார். சர்பஞ்ச் அவமானத்தினால் குமைந்து போகிறான். தன் மானம், தன் சாதியின் மானம் எல்லாம் போய்விட்டது என்று சொல்லித் தீர்ப்பை மாற்றிவிடும்படி கெஞ்சுகிறான். முடியாதபோது மிஸ்ரா, பிந்துவின் கணவன் ஆகியோருடன் சதியில் ஈடுபட்டு டாக்டர் ராவ், பிந்துவை வன்புணர்ச்சி செய்ததாக அவளிடம் சொல்லாமல் ரேகை பெற்றுப் புகாரையும் அளித்துவிடுகிறான். அவமானத்தினால் நொந்து போன டாக்டரும், கடமை முடிந்ததால் தன் நோயாளி மனைவியுடன் ஊரை விட்டே போகிறார்.

நொறுங்கிப்போன கூட்டுறவு இயக்கத்தைப் போலாவும் பிந்துவும் மீண்டும் முனைந்து மலரச்செய்வதோடு படம் ஒரு நம்பிக்கை ஒளியைத் தந்து, முடிகிறது.

திரைப்படத்தின் ஒளிப்பதிவாளர், பின்னர் புகழ் பெற்ற இயக்குனரான கோவிந்த் நிஹ்லானி. இதற்கு முன் வந்த பெனகலின் படங்களுக்கும் இவரேதான். அதே போல இசையமைப்பாளரும் அதுவரை ரெகுலராக வன்ராஜ் பாட்டியா தான். இந்தத் திரைப்படத்தின் டைட்டில் பாடலான ‘மேரோ காம் காதா பாரே’-வை பாடகி ப்ரீத்தி சாகர் பாடியிருந்தார். அற்புதமான கிராமிய மெட்டில் உருவான பாடல் இது. இதன் திரைக்கதையை எழுதியவர் புகழ் பெற்ற நாடகாசிரியர் விஜய் டெண்டுல்கர். இதில் டாக்டர் ராவாக நடித்தவர் கிரிஷ் கர்னாட், பன்முகம் கொண்ட இவர் அந்த ஆதர்ச இளைஞர் வேடத்தில் மிகப் பொருந்தியிருந்தார். அவருடைய குழுவைச் சேர்ந்தவர்களாக வந்தவர்களில் நமக்குத் தெரிந்தவர்கள் மோகன் ஆகாஷி, அனந்த் நாக் மற்றும் பின்னர் தமிழ்ப் படங்களில் வில்லனாக நடித்த சலீம் கவுஸ். பால் வியாபார முதலை மிஷ்ராவாக நடித்தவர் அம்ரிஷ் புரி. குல்பூஷன் கார்பாண்டா தான் சர்பஞ்ச். போலாவாக அசத்தியவர் நசீருத்தின் ஷா.- உடை, பார்வை, உடல்மொழி அனைத்திலும் ஒரு கோபக்கார இளைஞனாக மிளிர்ந்தார். ஸ்மிதா பாட்டில் அசல் கிராமத்துத் தலித் பெண்ணாகத் தோற்றமளித்து, தன் அசாத்திய நடிப்பால் பிந்து கதாபாத்திரத்தை உயரத்திற்குக் கொண்டு சென்றுவிட்டார்.

இந்த வருடம் ‘மந்த்தன்’ திரைப்படம் இன்னொரு சாதனையின் அடையாளமாகத் திகழ்ந்தது. திரைப்படக் கலைக்குத் தன்னை அர்ப்பணித்துவிட்ட பிலிம் ஹெரிடேஜ் பௌண்டேஷன் (FHF) என்ற அமைப்பு பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறது. அவற்றில் ஒன்று பழைய அற்புதமான திரைப்படங்களின் பிரதிகளைப் புதுப்பித்து மேம்படுத்துதல். இந்தப் பணியின் மூலமாக இயக்குனர் அரவிந்தனின் ‘தம்பு’, ‘கும்மாட்டி’ மலையாளப் படங்களையும், அரிபம் ஷியாம் ஷர்மா இயக்கிய மணிப்புரிப் படமான ‘இஷானவ்’ படத்தையும் புதுப்பித்து இருக்கிறார்கள். கிரிஷ் காசரவள்ளியின் ‘கடசிரார்த்தா’, பிரதீப் கிஷன் இயக்கத்தில் அருந்ததி ராய் நடித்த ‘ In Which Annie Gives It Those Ones’, நிராத் மொஹாபாத்ரா இயக்கிய ‘மாயா மிரிகா’ போன்ற படங்கள் புதுப்பித்தலில் இருக்க, அந்த வரிசையில் இப்போது வெளிவந்திருக்கும் திரைப்படம் ‘மந்த்தன்’.

இந்தப் புதுப்பித்தல் செய்முறை என்பதை இந்தியாவில் புதிதாக முயற்சிக்கிறார்கள். சத்யஜித் ராயின் ‘அப்பு ட்ரைலாஜி’-யைக் கூட வேறு ஒரு குழுவினர் இதற்கு முன் செய்திருக்கிறார்கள். ஷபானா ஆஸ்மியின் திரைப்படப் பொன்விழாவை முன்னிட்டு அவருடைய அறிமுகப்படமான ‘அங்குர்’ அல்லது ‘நிஷாந்த்’-தைத்தான் முதலில் புதுப்பிக்க எண்ணியிருக்கிறார்கள். ஆனால் படத்தின் உரிமையை வாங்கியவர்கள் ஒத்துழைப்பு இல்லாததால் ‘மந்த்தன்’ தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான அனுமதியைத் தயாரிப்பாளர்களான அமுல்பால் நிறுவனத்திடம் கேட்கப்பட்டபோது, அவர்களுக்கு இதன் முக்கியத்துவம் புரியவில்லையாம். எதற்குப் புதுப்பிக்கவேண்டும், அதுதான் யூரியூப் தளத்தில் இருக்கிறதே என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரதியைப் பெரிய திரையில் திரையிடமுடியாது என்றெல்லாம் விளக்கி ஒப்புக்கொள்ள வைத்திருக்கிறார்கள். இயக்குனர் தன் வசமிருந்த ஒரு பாசிட்டிவ் பிரதியையும், படம் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் தந்திருக்கிறார். பல திரையரங்குகளில் ஓடித் தேய்ந்த இந்தப் பிரதி, அடிபட்டு, பல இடங்களில் வெட்டப்பட்டு ஒட்டப்பட்டுத் தொடர்பிழந்து, வண்ணங்கள் மங்கி, பல இடங்களில் பச்சைக் களிம்பு போல சாயம் தோய்ந்து... என்று பல பிரச்சினைகள். பின்னர் நெகட்டிவ் பிரதியை இந்தியத் திரைப்பட ஆவணக் காப்பகத்தில்



பெற்று, அதிலிருந்து ஒலியை எடுத்துப் பல வேலைகள் புரிந்திருக்கின்றனர். வண்ணங்களின் ஒருங்கிணைவுக்காக, படத்தின் புகைப்படங்களிலிருந்து வெவ்வேறு வண்ணங்களைத் தேர்ந்தெடுத்துக் கணினியில் மேம்படுத்தியிருக்கிறார்கள்.

முதிர்ந்த வயதிலும் தொழில்நுட்ப நிபுணர்களுடன், இயக்குனர் ஷியாம் பெனகலும், ஒளிப்பதிவாளர் கோவிந்த நிஹலானியும் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். கான் திரைப்பட விழாவில் இந்தப் பிரதி சென்ற மாதம் திரையிடப்பட்டது. மேடையில் தோன்றிய நசீருத்தின் ஷா மற்றும் திரைப்படக் குழுவினரைப் பலத்த கையொலிகளுடன் பார்வையாளர்கள் வாழ்த்தியிருக்கின்றனர். ஜூன் 1 மற்றும் 2 தினங்களிலும் இந்தியா முழுவதும் 50 நகரங்களில் 100 திரையரங்குகளில் இந்தப் படத்தைத் திரையிட்டுக் கொண்டாடினார்கள்.

படத்தைத் திரையரங்கத்தில் 48 ஆண்டுகளுக்கு முன் பார்த்த பிறகு, மீண்டும் இப்போது பார்த்து மகிழ்ந்தேன். வழக்கமாக நல்ல முயற்சிகளுக்குக் கிடைக்கும் வரவேற்பைப் போல திரையரங்கத்தில் 12 பேர் மட்டும் இருந்தோம் என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சிக்கிடையில் வருத்தமும் தோன்றுகிறது!



jeeva@thaiveedu.com



# ஒற்றை நட்சத்திர உலா
# 'ஈழக்கூத்தன் ஏ.சி. தாசீசியஸ்'

— பொன்னன்

ஈழத்து தமிழ் நாடகக் கலைஞனின் முழுநீள ஆவணத்திரைப்படம் முதன் முதலில் சுவிற்சலாந்திலும் பின்னர் பிரித்தானியாவிலும் திரையேற்றம் கண்டது. 'ஈழக்கூத்தன் ஏசி. தாசீசியஸ்' ஆவணத்திரைப்பட வெளியீடும், திரையிடலும் சுவிசில் மே 05, 2024 காலை 10.30 மணிக்கு தலைநகர் பேர்ன் திரையரங்கு Cine ABC-யிலும் லண்டனில் மே 11, 2024 சனி பிற்பகல் 3 மணிக்கு அல்பேட்டன் பாடசாலை (Alperton Community School) மண்டபத்திலும் நிகழ்ந்து, நிறைவுற்றது.



நாம் வாழும் காலத்து தனிப்பெரும் ஆளுமை பேராசான் ஏ.சி. தாசீசியஸ் அவர்களின் நெடுங்கலை பயணத்தின் நாடக பதிவுகள் திரையேற்றம் கண்டன. ஈழம், தமிழ்நாடு, புலம்பெயர்ந்த நாடுகள் என அவர் பயணித்த பயணத்தின் தொகுப்பு மிகவும் சிறப்பாக திரைக்குள் கொண்டுவரப்பட்டிருந்தன. குறிப்பாக மேலை நாட்டவருடன் இணைந்த, தொழில்முறை நாடகச் செயற்பாடுகளும் அவர்களின் அனுபவப் பகிர்வும் தமிழ் நாடக வரலாற்றிற்கு புதிய வருகையாக இருந்தது. சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரியின் தயாரிப்பிலும், ஆவணத் திரைப்படத்துக்கான இந்திய தேசிய விருது பெற்ற அம்ஷன் குமாரின் இயக்கத்திலும் ஆவணத் திரைப்படம் - கரு, உருக் கொண்டிருந்தது.

திரையிடலின் சிறப்பு விருந்தினர்களாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நவதர்ஷினி கருணாகரன் அவர்களும் சிங்கப்பூர் கலாச்சார அமைச்சின் முன்னாள் செயல் அதிகாரி நாடகர் இளங்கோவன் அவர்களும் சிறப்புரையாற்றி சிறப்பித்திருந்தார்கள்.

சுவிஸில் இடம்பெற்ற வெளியீட்டில் முதல் பிரதியை,











இரண்டாம் தலைமுறையின் குறியீடும் ‘தமிழர் பொருளாதார நடுவம்’ நிறுவுனர் விவேகானந்தன் பிரகாஸ் அவர்களும், இரண்டாவது பிரதியை ‘எம் தமிழ்’ காணொலி நிறுவுனர், ஒலி பரப்பாளர் லண்டனிலிருந்து வருகைதந்த எஸ்.கே. இராஜென் அவர்களும், மூன்றாவது பிரதியை 'எழுமின்- Rise 'அமைப்பின் சுவிற்சலாந்தின் தலைவரும் வர்த்தகருமான சிறி. ராசமாணிக்கம் அவர்களும் பேராசான் தாசீசியஸ் அவர் களிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

லண்டனில் நிகழ்ச்சியை எஸ்.கே. இராஜென் அவர்கள் சிறப்புற அறிவித்து வழிநடத்தினார். ஏசி. தாசீசியஸ் அவர்களை மூத்த நாடகக் கலைஞர்கள், சமூக செயற்பாட்டா ளர்கள், கவிஞர்கள், அவரின் மாணவர்களான ஐ.பி.சி, ஐ.எல்.சி வானொலிக் கலைஞர்கள், களரி நாடகக் குழுக் கலைஞர்கள் புடைசூழ்ந்து மாண்பேற்றி, வாழ்த்தி வணங்கி னார்கள். பத்மநாப ஐயர், K. கிருஷ்ணராஜா, பேராசிரியர் நித் தியானந்தன், க. பாலேந்திரா, ஆனந்தராணி, நற்குணம், கந்தையா ராஜமனோகரன், சிவா சிவாப்பிள்ளை, புலவர் சிவநாதன், குகன், கோபி போன்ற இன்னும் பல கலை, இலக்கிய, சமூக ஆர்வலர்கள் ஆவணத்திரைப்பட திரையிட லுக்கு ஒன்று திரண்டது, நெஞ்சை நெகிழ வைத்து. பெரு மைப்படுத்தியது. 20 வயதிலிருந்து 85 வயதிலானவர்ளின் வருகை, அங்கு தமிழ்ச் சமூகத்தைப் பிரதிபலித்து நின்றது. ஆவணத்திரைப்பட வெளியீட்டில் முதல் பிரதியை K. கிருஷ் ணராஜா அவர்களும், இரண்டாவது பிரதியை தனாஞானி சிங்கம் அவர்களும், மூன்றாவது பிரதியை தனம் அவர்களும் பேராசான் தாசீசியஸ் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண் டனர்.

சுவிஸிலும் லண்டனிலும் திரையிடலுக்குப் பின் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றத்தில் தாசீசியஸ் அவர்களின் நாடகர், ஊடகர், ஏடகர் என்ற முப்பரிமாணத்தின் ஊடகர், ஏடகர் பரிமா ணங்கள் குறைவாகப் பதிவு செய்ப்பட்டிருப்பதை சுட்டிக்காட் டினார்கள். அதற்காகவும் ஆவணப்படம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினர்.

ஈழக்கூத்தன் ஏ.சி. தாசீசியஸ் அவர்கள் தமிழ் நாடகத்துக்கு புதிய வடிவத்தைக் கொடுத்தவர். இவர் எழுதி, இயக்கிய ஒவ்வொரு நாடகங்களும் வெவ்வேறு வடிவங்களைக் கொண்

டுள்ளன. அத்தனை நாடகங்களும் தனித்தனியே ஆவணப்ப டுத்தப்பட வேண்டும். இவ்வாறு பல்வேறு ஆதங்கங்கள் முன் வைக்கப்பட்டன.

ஒரு சமூக சிந்தனையாளனை வாழும்போது வாழ்த்திப் பெருமை கண்டது சுவிற்சலாந்தும் பிரித்தானியாவும். இதற்கு சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி வழிசமைத்தது.

ponnan@thaiveedu.com

















# மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் சமூகப் பணிகள்

– பொ. திராவிடமணி

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருவாரூர் மாவட்டம் கீரனூருக்கு அருகில் உள்ள பாலூரில் கி.பி. 1883-ல் கிருட்டிணசாமி, சின்னம்மாள் இணையருக்கு மகளாகப் பிறந்தார். இவர் இசைவேளாளர் குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் பிறந்த காலத்தில் இவரது குடும்பம் வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்தது. இவர் தந்தை குடும்ப பாரத்தைச் சுமக்க முடியாமல் குடும்பத்தை விட்டுவிட்டுச் செல்ல, மகன் சென்ற ஏக்கத்தில் அவரது தாயாரும் இறக்க, தாயும் மகளும் தனித்து விடப்பட்டனர். கைக்குழந்தையாக இருந்த இராமாமிர்தத்தைத் தூக்கிக்கொண்டு சின்னம்மாள் தன் தாய் ஊரான மூவலூருக்குச் சென்றார். அங்கும் வறுமைத் தாண்டவமாட தான் துன்பப்பட்டாலும் தன் குழந்தை சுகமாக வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் தன் குழந்தையை விரும்பி ஏற்பவருக்குக் கொடுத்துவிட எண்ணினார். அவ்வூரில் ஆச்சிக்கண்ணு என்னும் தாசி இராமாமிர்தத்தை வளர்க்க முன்வந்தார். அவரிடம் ரூபாய் பத்தையும், ஒரு பழைய புடவையையும் பெற்றுக்கொண்டு தன் மகளை விற்றார். இதனை,

*‘கடைசியில் அந்த அம்மையார் தன் குழந்தையை யாருக்காவது கொடுத்துவிடலாம். நாம் சுகப்படவில்லையென்றாலும் குழந்தையாகிலும் சுகப்படட்டும் என்று தீர்மானித்துவிட்டாள். இந்த எண்ணம் காரணமாக தன் குழந்தையுடன் மூவலூர் சென்றார். அங்கே ஒரு தாசி அம்மாள் குழந்தையைக் காப்பாற்ற முன்வந்தார்கள். அந்த அம்மையாரிடம் தான் குழந்தையை - பத்துமாதம் சுமந்து பெற்ற, பாலூட்டிச் சீராட்டி வளர்த்த குழந்தையை விற்று விட்டார்கள். குழந்தையைப் படிக்க வைத்துப் பார்க்கவேண்டும் என்று இருந்த ஆசையைக் கொன்று, குழந்தை பெரிய பெண்ணான பின்பு அதன் திருமணக் கோலத்தைக் கண்டு இன்புறவேண்டும் என்று எண்ணியிருந்த எண்ணக் கோட்டையை இடித்துத் தள்ளிவிட்டு, தாய் உள்ளத்தை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு விற்று விட்டார்கள் ரூ. 10-க்கும் ஒரு பழைய புடவைக்கும்’ (கலைமன்றம், நமது தலைவர்கள், 10-4-54)*

## இளமைப்பருவம்:

இராமாமிர்தத்திற்கு ஏழு வயது நிறைவுபெற்ற பின் தாசித் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்னர் தாசிக்குல வழக்கப்படி தண்டியம் பிடித்து (உலக்கைப் பிடித்தல்) கெஜ்ஜா பூஜை (சலங்கை பூஜை) செய்தனர். இச்சடங்குகள் செய்யப்பட்ட பெண் பருவமடைந்த பின் பொட்டுக்கட்டி தேவதாசியாக்கப்படுவாள். அவள் யாரையும் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. இராமாமிர்தம் மூவலூரில் உள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பயின்றார். இசைவேளாளர் குடும்பத்தில் பிறந்து தாசிக் குலத்துப் பெண்ணினால் வளர்க்கப்பட்டதால் தொடக்கக் கல்வியுடன் இசையும் நாட்டியமும் பயின்றார். அக்காலத்தில் கர்நாடக இசை கற்றுத் தருவதில் புகழ் பெற்றவராக விளங்கிய நாட்டுவனார் சுயம்பு பிள்ளையிடம் முறைப்படி இசை, நாட்டியம் போன்றவற்றைக் கற்று பத்து வயதில் இவ்விரு கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராக விளங்கினார்.

## திருமணம்:

இராமாமிர்தத்திற்கு 17-வயது ஆனபோது கோயிலில் பொட்டுக்கட்ட ஆச்சிக்கண்ணு முடிவு செய்தார். இதற்கு அனுமதி கேட்டு பஞ்சாயத்திடம் மனுசெய்தபோது கோயில் தாசிகள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். காரணம் இராமாமிர்தம் தாசி வளர்த்தப் பெண்ணாக இருந்தாலும் வெளியூரைச் சேர்ந்தவள். அதுமட்டுமின்றி அவர் ஆண்வாரிசு வயிற்றுப் பெண் என்பதால் (பெண் வாரிசுகள் மட்டுமே தாசிகள் ஆகமுடியும்) பொட்டுக் கட்ட அனுமதிக்கக் கூடாது என்றும், சமூகப் பழக்கத்தை மாற்றக் கூடாது என்றும் கூறினர். மீறினால் வழக்குத் தொடருவோம் எனவும் எச்சரித்தனர். மேலும் இதனை உள்ளூர் தாசிகளின் உரிமைப் பிரச்சினையாகவும் கருதினர். இதனால் இராமாமிர்தத்திற்கு பொட்டுக்கட்ட முடியவில்லை. இந்நிகழ்வு ஆச்சிக்கண்ணுக்கு மிகுந்த வருத்தத்தையும் இராமாமிர்தத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியையும் தந்தது. இந்நிலையில் அறுபது வயது மதிக்கத்தக்க செல்வந்தர் ஒருவர் இராமாமிர்தத்தைப் பார்த்து காதல் வயப்பட்டு அவரை மணம் செய்துகொள்ள விரும்பினார். இதனை அறிந்த ஆச்சிக்கண்ணு அந்த வயோதிகரை மணந்துகொள்ளும்படி இராமாமிர்தத்தை வற்புறுத்தினார். ஆனால் துணிவுடன் இதனை இராமாமிர்தம் ஏற்க மறுத்தார். மேலும், வீட்டை விட்டுச் சென்ற தந்தையுடன் தாய் சின்னம்மை சேர்ந்து வாழ்ந்து வந்த நிலையில் இராமாமிர்தத்தை அவர் தந்தையிடம் தாசியாக்கும்படி தன் அத்தையும் மாமாவும் வற்புறுத்தியதாக இராமாமிர்தத்தம்மையார் குறிப்பிட்டுள்ளார்.

‘நான் பிறந்தது இசை வேளாளர் சாதியில்தான். ஆனாலும் எனது பரம்பரையினர் தேவதாசிகளாவது இல்லை. என்னுடைய மாமாவும் அத்தையும் எனது தந்தையாரிடம் கூறி தேவதாசியாக மாறி என்னை விபச்சாரத் தொழிலில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்தினார்கள். எனக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டாம். கோயிலில் தேவதாசியான பிறகு விபச்சாரத்தில் ஈடுபடுத்தினால் குடும்பத்துக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்று எனது தந்தையிடம் அவர்கள் வலியுறுத்தியதை எனது பெற்றோர்களும் ஏற்றுக்கொண்டு என்னைக்

கட்டாயப்படுத்தினர். எனக்கு நடனம் மற்றும் இசையில் நல்ல தேர்ச்சி இருந்தது. அந்தக் காலகட்டத்தில்தான் நான் இந்த தேவதாசி முறையின் இழிவை உணர்ந்தேன். இது ஒழிக்கப்பட வேண்டும் என்று விரும்பினேன். இந்த தேவதாசி முறையை வலியுறுத்தும் மத நூல்களைப் படித்தேன். பெண்களைக் கேவலப்படுத்தக்கூடிய இந்த தொழிலில் சில ஆண்கள்தான் அவர்களின் காம இச்சைக்கும் சுயநலத்துக்கும் பெண்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குப் புரிந்தது' (குடியரசு இதழ் 1925 டிசம்பர்-13) என்று தெரிவித்துள்ளார்.



வயோதிகரை மணக்க மறுத்ததால் தன் வளர்ப்புத் தாயின் அன்பையும், தேவதாசியாக மறுத்தால் பெற்றோர் ஆதரவையும் இழக்கும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இராமாமிர்தம் ஒரு முடிவுக்கு வந்தார். தனக்கு இசை ஆசிரியராக இருந்த சுயம்புப் பிள்ளையிடம் தான் அவரை மணக்க விரும்புவதாகக் கூறினார். அவர் 'பொட்டுக் கட்டாவிட்டாலும் நீ தண்டியம் பிடித்துவிட்டவள் சங்கீதத் தொழிலும் செய்துவிட்டாய். எப்படி உன்னைத் திருமணம் செய்யமுடியும்? அப்படி மீறி திருமணம் செய்தாலும் சமூகம் நம்மை ஒதுக்கி வைக்கும்' (மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். ப-10) என்று சுயம்புப் பிள்ளை கூறினாலும் துணிந்து இராமாமிர்தத்தை மணக்க முன்வந்தார். இருவரும்' ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதில்லை என்று சத்தியம் செய்து விளக்கை அணைத்து மணந்து கொண்டனர். இச்செயல் அக்காலத்தில் மாபெரும் துணிச்சல் மிக்க செயலாகக் கருதப்பட்டது. அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய ஒரு நிகழ்வாகவும் கருதப்பட்டது.

இராமாமிர்தத்தின் இத்துணிச்சல் மிக்க செயலால் தாசி வகுப்பினர் மிகுந்த அச்சத்திற்கு உள்ளாகினர். இது தன் சமூகப் பழக்கத்திற்கு முரணானது எனக் கருதினர். இதனால் இராமாமிர்தத்தைப் பழிவாங்க, அவரது இல்லற வாழ்வைச் சிதைக்கத் திட்டமிட்டனர். ஒரு பெண்ணைக் கொலை செய்ததாகக் கூறி இவர் மீது வழக்கு தொடர்ந்தனர். தான் கொலை செய்ததாகக் கூறப்பட்ட பெண் உயிருடன் இருப்பதை அறிந்து, புத்திக் கூர்மையுடன் அப்பெண்ணைக் கண்டுபிடித்து அப்பெண்ணைச் சாட்சியாக வைத்து தன்னைக் குற்றமற்றவர் என நிரூபித்தார். மேலும், தன்மீது வழக்கு தொடர்ந்த பெண்கள் கொலை செய்ததாகக் கூறப்பட்ட அப்பெண்ணுக்கு இழைத்தக் கொடுமைகளை எடுத்துக் கூறி அவர்கள் மீது அப்பெண்ணின் மூலம் வழக்குத் தொடரச் செய்தார். இராமாமிர்தத்தின் துணிவுக்கு இந்நிகழ்வும் ஒரு சான்றாக அமைந்தது.

### வளர்ப்புத் தாய்க்கு நன்றிக்கடன்:

இராமாமிர்தம், தன் வளர்ப்புத் தாய் ஆச்சிக்கண்ணு தாசியாக இருந்தபோதிலும் தன்னை வளர்த்து ஆளாக்கியவர் என்பதால் அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் தன் பெயருக்கு முன்னால் ஆ என்று தலைப்பெழுத்திட்டு (ஆ. இராமாமிர்தம்) என்று எழுதினார். உலகியல் வழக்கப்படி ஆணின் (தந்தையின்) பெயரை முன் எழுத்தாக எழுதுவதுதான் வழக்கம் இம்முறையை மாற்றியதுடன் தன் வளர்ப்புத் தாய்க்கும் இதன்மூலம் தன் நன்றிக்கடனை செலுத்தினார்.

### தேவதாசி முறையை எதிர்த்தல்:

சமுகத்தில் எழுதப்படாத சட்டங்களாக சில பழக்கவழக்கங்கள் அக்காலகட்டத்தில் பின்பற்றப்பட்டன. அவ்வாறு இருந்த பழக்கவழக்கங்களில் ஒன்றுதான் தேவதாசிமுறை. இம்முறையை மறுத்து ஒருவரை மணம் செய்துகொண்டு இல்வாழ்க்கையை மேற்கொண்ட இராமாமிர்தம் தன்னைப்போல் இக்குலத்தில் உள்ள பிற பெண்களும் மணம் செய்துகொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபடவேண்டும் எனக் கருதினார். இச்செயலை முன்னெடுக்கும் பொழுது பல்வேறு இன்னல்களுக்குத் தான் ஆளாவோம் என்பதை அறிந்திருந்தும் இக்கொடிய பழக்கத்தை ஒழிக்கவேண்டும் எனப் போராடினார். பல்வேறு திருமண நிகழ்ச்சிகளிலும் தேவதாசி முறையை ஒழிப்பது குறித்துப் பேசினார். இதனால் தேவதாசிகளின் எதிர்ப்பையும் எதிர்கொண்டார். இந்நிகழ்வு குறித்து குறிப்பிடுகையில்,

'தேவதாசி முறையை ஒழிப்பதற்காக கடந்த ஏழு அல்லது எட்டு ஆண்டுகளாக நான் கடுமையாகப் போராடிக்கொண்டிருக்கிறேன். நமது பெண்களை சீர்திருத்துவதற்கும் பல மாநாடுகளை நடத்தியுள்ளேன். பல திருமணங்களில் நானே அழைப்பிதழ் இல்லமலே நுழைந்து, எளிமையாகத் திருமணம் நடத்த வேண்டும் என்று தேவதாசி முறையிலிருந்து விடுபட வேண்டும் என்றும் பேசினேன். அதன் கேவலங்களை அம்பலப்படுத்தினேன். சக பெண்களை தேவதாசிகளாக வேண்டாம் என்று வற்புறுத்துங்கள் என்று கட்டாயப்படுத்தினேன். இதனால் சில ஆண்கள் என்மீது கடுமையாக ஆத்திரப்பட்டார்கள். எனக்கு எதிராக இடைவிடாத பிரச்சாரத்தை நடத்தினார்கள். திருமணங்களில் தேவதாசி முறையை நான் எதிர்த்துப் பேசினால் எனது மண்டையை உடைத்துவிடுவதாக மிரட்டினார்கள்' (குடியரசு 1925 டிசம்பர் 15) என்று இதனால் தனக்கு நேர்ந்த இன்னல்களையும் இடையூறுகளையும் குடியரசு இதழில் இராமாமிர்தம் பதிவுசெய்துள்ளார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபொழுது அவரை சந்தித்து பேசியதையும் அவருடைய முயற்சிக்கு தான் உறுதுணையாக இருந்ததையும் இராமாமிர்தம் 'என்

வாழ்க்கை சரித்திரம்' என்ற கையெழுத்துப் பிரதியில் குறிப்பிட்டுள்ளார்.

'தேவதாசி விவாகம், விவாகரத்து விவாகம், கலப்பு விவாகம், இவைகளைச் செய்துகொண்டிருந்தேன். பொட்டறுப்பு சங்கம் வைத்து இப்பெண்களின் நன்னிலை கண்டு களித்தேன். டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் சட்டசபை வைஸ்பிரசிடண்ட்டாய் வந்தார்கள். மாயவரத்தில் சுயமரியாதைப் பொதுக் கூட்டம் நடந்தது. டாக்டர் முத்துலட்சுமி அம்மாளைப் பற்றிப் பேசும்படி ஈ.வே.ரா. தெரிவித்தார். அவர்கள் யார் என்றேன் விவரம் தெரிவித்தார். நான் அடைந்த சந்தோஷம் அளவிடற்பாலது. வெகுநேரம் பேசினேன். காலையில் அம்மையாருக்குத் தந்தி கொடுத்தேன். பிறகு எனக்கு லெட்டர் எழுதினார்கள். உடன் சென்னை சென்றேன் இருவரும் கலந்து பேசினோம். நான் இரண்டு பெண்களைக் கண்டு சந்தோஷமடைந்தேனோ அதைப்போல் - இரு பெண் என்னைக் கண்டு சந்தோஷமடைந்தார்கள். 'வேலை செய். வேண்டிய உதவி செய்கிறேன்' என்றார்கள். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதை அடுத்தடுத்து கண்டேன். முத்துலட்சுமி அம்மாள் வனஜா காலேஜ் என்று வைத்தார்கள். அப்பள்ளியில் தாலிப் பெண்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டேன். பிறகு தேவதாசி சீர்திருத்த சட்டம், சட்டசபையில் டாக்டர் முத்துலட்சுமி அம்மாளால் கொண்டுவரப்பட்டது. அதற்கு ஆதரிப்புக் கூட்டங்கள் பல நடத்தி அனுப்பினேன்.' (மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். பக் 81-82) என்று குறிப்பிட்டுள்ளார்.

## காங்கிரஸ் இயக்கத்தில் சமூகப்பணி:

1919-ம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்திற்கு காந்தியடிகள் தலைமையேற்றபோது அது மக்கள் இயக்கமாக மாறியது. காந்தியடிகளின் கொள்கையில் ஈர்க்கப்பட்ட பெண்கள் பலர் அவ்வியக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்ற முன்வந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் இராமாமிர்தம். இவர்கள் பொதுப் பிரச்சினைகளான கடவுள், மதம், கல்வி, மூடநம்பிக்கை, சாதிக்கொடுமை, தீண்டாமை, குழந்தை மணம், விதவைக் கொடுமை போன்ற பல்வேறு சமூக அநீதிகளை அகற்றும் நோக்குடன் பொது மேடைகளில் சொற்பொழிவாற்றினார். அக்காலத்தில் டாக்டர் முத்துலெட்சுமி, டாக்டர் எஸ். தர்மாம்பாள், இராஜேஸ்வரி, இந்திராணி பாலசுப்பிரமணியன், விசாலாட்சி சுப்பையா போன்ற பல பெண்கள் சமூக முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டனர் என்றாலும் அவர்களுக்கும் இராமாமிர்தத்திற்கும் இடையே பெருத்த வேறுபாடு இருந்தது.

காந்தியடிகள் இசைவேளாளர் சமூகப் பெண்களை 'வழுக்கி விழுந்த சகோதரிகள்' என்று பரிவுடன் அழைத்தார். மேலும், அவர்களை முன்னேற்றப்பாதையில் அழைத்துச்செல்ல பல முயற்சிகளை மேற்கொண்டார். இவை இராமாமிர்தம் அவர்களை மிகவும் கவர்ந்தன. காங்கிரஸில் தன்னை இணைத்துக் கொண்டு சமூக சீர்திருத்தப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். பல்வேறு மேடைகளில் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்ட முதல் பெண் பேச்சாளராகவும் இவர் திகழ்ந்தார்.

ஆங்கில அரசு இந்திய தேசியக் கொடியைப் பிடிக்கக்கூடாது எனத் தடைவிதித்தபோது, அக்கொடியை சேலையாகக் கட்டிக்கொண்டார். காந்தியடிகள் என் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள் குடிசையில் வாழவேண்டும் என்று கூறியபோது, தான் வாழ்ந்த ஓட்டு வீட்டிற்கு அருகில் ஒரு குடிசை போட்டு அதில் வாழ்ந்தார். 1930-ல் சட்டமறுப்பு இயக்கம் அனைத்திந்திய போராட்டமாக அறிவிக்கப்பட்டது. காந்தியடிகள் உப்பு சத்தியாகிரகத்தைத் தொடங்கிவைத்து தண்டியில் யாத்திரை சென்றபோது, இராஜாஜியின் தலைமையில் உப்பு எடுப்பதற்காக வேதாரண்யம் நோக்கி சென்ற தொண்டர்களில் இவரும் ஒருவர்.

'விடுதலைப் போராட்ட தியாகி திரு. கே. மார்க்சாயம் (மயிலாடுதுறை) இராமாமிர்தம் அம்மையாரைப் பற்றி குறிப்பிடுகையில், வைக்கம் போராட்டம், உப்பு சத்தியாகிரகம், நீல்சிலை அகற்றும் போராட்டம், சட்டமறுப்பு போராட்டம் போன்ற போராட்டங்களில் இராமாமிர்தம் அம்மையார் கலந்துகொண்டார் என்று கூறியுள்ளார்' (மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ப-25) ஆனால் அதற்கான பதிவுகள் எங்கும் கிடைக்கவில்லை.

## சுயமரியாதை இயக்கத்தில் இராமாமிர்தம்:

இராமாமிர்தம், சுயம்புப்பிள்ளை தம்பதிகளுக்கு சீனிவாசன், செல்லப்பா என்ற இரு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. மூத்த மகனும், மகளும் நன்கு வளர்ந்து வந்த நிலையில் திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்தனர். இதுநாள் வரை தீவிர கடவுள் பக்தியுடையவராக விளங்கிய அம்மையார், இந்நிகழ்வினால் மனமுடைந்து கடவுள் மறுப்பாளராக மாறினார். பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகள் மற்றும் சுயமரியாதை இயக்க நடவடிக்கைகள் இவரை ஈர்க்க சுயமரியாதை இயக்கத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்றத் தொடங்கினார். திராவிடர் கழக மாநாடுகளில் கலந்துகொண்டு விழிப்புணர்வு பிரச்சார நாடகங்களிலும் நடித்து வந்தார்.

'குழந்தைமண ஒழிப்பு, சுயமரியாதைத் திருமணம், சாதிமத ஒழிப்புத் திருமணம், கருத்தடை செய்தல், தேவதாசி ஒழிப்பு, சொத்துரிமை, வகுப்புரிமை, இட ஒதுக்கீடு என பெண் சமுதாயம் விழிப்புற்று சுயமரியாதை வாழ்வு பெறும் வேலைத் திட்டத்தை மையமாக்கியது. சுயமரியாதை இயக்கத்தின் வேகமான செயல்திட்டங்களை நிறைவேற்றும் முக்கிய தொண்டராக முன்னணி வீராங்கனையாக தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.'(மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பக் 32-33).

இராமாமிர்தம் அம்மையார் சுயமரியாதை இயக்க மாநாடுகளுக்கு பெரும்பான்மையான தாசிப் பெண்களை அழைத்துச் சென்றார். ஏனெனில் அம்மாநாட்டில் நிகழ்த்தப்படும் உரைகளைக் கேட்டாவது அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் திருத்தியமைத்துக்கொள்வார்கள் என்ற அவர் கருதினார். 1947-ம் ஆண்டில் நாடு சுதந்திரம் அடைந்தபொழுது அதனை பெரியார் 'சுதந்திர நாள் துக்கநாள்' என அறிவித்தார். இக்கருத்தையும் வலியுறுத்தி பிரச்சாரத்தில் ஈடுபட்ட அம்மையார், அறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தபொழுது அக்கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு 13 ஆண்டுகள் பல முற்போக்கு சிந்தனையுடைய போராட்டங்களில் தம்மை முன்னிலைப்படுத்திக் கொண்டு தம் இறுதிக்காலம் வரை அவ்வமைப்பிலேயே இருந்து சமூகத் தொண்டாற்றினார்.



thiravidamani.p@thaiveedu.com



# தமிழ் அறிஞர் 'வித்தியாரத்தினம்' நவாலியூர் சோ. நடராஜன்

**- வே. விவேகானந்தன்**

யாழ்ப்பாணக் குடா நாட்டிலே, கல்விச் சான்றோர்கள் நிறைந்த நவாலியூரில் வன்னியசேகர முதலியார் பரம்பரை யில் வாழ்ந்து வந்த சோமசுந்தரப் புலவர், சின்னம்மை இணையருக்கு இரண்டாவது மகனாக, 1910-ம் ஆண்டு ஜுலை மாதம் பத்தாம் திகதி சோ. நடராஜன் பிறந்தார். சோ.-இளமுருகனார் இவரது சகோதரனாவார்.

தந்தையார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர், சகோதரன் இள முருகனார் கல்விச் சான்றோர்களாக விளங்கியமையால் சோ. நடராஜனும் இளமையிலேயே தமிழ் மொழியில் ஆர்வமும் திறமையும் கொண்டவராக விளங்கினார். உயர் கல்வியை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைக் கல்லூரியில் நிறைவு செய் தார். பின்னர், லண்டன் பல்கலைக்கழகப் பரீட்சையில் தமிழ் மொழியை விசேட பாடமாகக் கற்று, இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் சித்தியடைந்தார். 1937-ம் ஆண்டு இலங்கை வானொலியில் இணைந்து முதலாவது நிரந்தர தமிழ் அறிவிப் பாளராகவும், தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாகவும் பணியாற்றிய பெருமை இவரைச் சாரும்.

இலங்கை வானொலியில் மிகக் குறுகிய காலமே பணியாற் றிய அவர், இரண்டாம் உலகமகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த அக்கால கட்டத்தில், சேர். கந்தையா வைத்தி யநாதன் அவர்கள், அவர் நடத்தி வந்த 'யுத்தமுனை' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க அதில் இணைந்து கொண்டார். பின்னர் 1945-1948 காலப் பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழகத் தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். கொழும்பு சாஹிராக் கல்லூரியில் திரு. டி.பி. ஜாயா (T.P.-Jayah) அதிபராகப் பணியாற்றிய போது நடராஜன் ஆசிரியரா கப் பணியாற்றி மாணவர் மத்தியிலும் சக ஆசிரியர்களிடமும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். கொட்டாஞ்சேனை செயின்ற் பெனடிக்ற் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்த இவர், பின்னர் கண்டி, கம்பளை போன்ற மலையக நகரங்களில் பாடசாலைப் பரிசோதகராகவும் (Inspector of Schools) பணி புரிந்து, 1950-களில் பரீட்சைத் திணைக்கள அதிகாரியாகவும் பின்னர் ஓய்வு பெறும் வரை அரசகரும மொழித் திணைக்க ளத்தில் மொழிபெயர்ப்புப் பிரிவின் அதிகாரியாகவும் (Super-intendent of Translations) பணிபுரிந்தார். எந்தவொரு தொழி லையும் மிக இலகுவில் லாவகமாகக் கையாளும் ஆற்றல் (Versatile) இயல்பாக இருந்தமை நடராஜனுக்குகேயுரிய தனித்துவமாகும்.

நடராஜனின் தமிழ்ப் பணி தந்தையார் 'தங்கத் தாத்தா' நவா-லியூர் சோமசுந்தரப் புலவர், தமையனார் இளமுருகனார் ஆகியோரின் வழித் தடத்தில் ஆரம்பித்தாலும், அவர் கடந்து வந்த பாதை வேறாக அமைந்தது. தமிழ் மொழியுடன் ஆங்கி லம், சிங்களம், சஸ்கிருதம், பாளி போன்ற மொழிகளில் பாண் டித்தியம் பெற்றிருந்ததனால் அவரது படைப்புகள் பெரும்பா லும் மொழிபெயர்ப்புடன் சார்ந்ததாகவே வெளிவந்தன. இவர் 'வைகறையிலே', 'மருதக் கலம்பகம்' ஆகிய இரு காவியங் களை எழுத ஆரம்பித்த போதிலும் அவை முற்றுப் பெறாமை துரதிஸ்டமாகும்.

இளமையிலேயே ரவீந்திரநாத் தாகூர், காளிதாசன் ஆகியோ ரின் கவிதைகள் நடராஜனைக் கவர்ந்தன. பாரதியார், கவி-மணி தேசிக விநாயகம் பிள்ளை போன்றவர்களின் கவிதை கள் இவரைக் கட்டிப் போட்டன. நடராஜனின் கவிதைகளில் இவர்களின் செல்வாக்கை அவதானிக்கலாம். கவிஞர் ரவீந்-தி ரநாத் தாகூர் எழுதிய 'கீதாஞ்சலி'-யைத் தமிழில் மொழிபெ யர்த்து, 'மேக தூதம்' என்னும் பெயரில் வெளியிட்டார். சமஸ் கிருத மொழியிலிருந்த, 'இதோபதேசம்' என்னும் பெரும் காப் பியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இக்காப் பியம் 1961-ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசி னைப் பெற்றுக் கொண்டது. தொட்டகமுவே ஸ்ரீ ராகுல தேரர் 1447-ம் ஆண்டு எழுதிய, 'செல லிகினி சந்தேசய' என்னும் சிங்களக் காப்பியத்தை தமிழில் மொழிபெயர்த்து, 'பூவை விடு தூது' என்னும் பெயரில் எழுதினார். அதனை 1962-ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலமே வெளியிட்டது. சமஸ்கிருதத்தில் பல விருதுகளைப் பெற்ற, 'மிருச்ச கடிகம்' என்னும் நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து, 'பொம்மை வண்டி' என்னும் பெயரில் வெளியிட்டார்.

இந்த மொழிபெயர்ப்பு நாடக நூலும் 1964-ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக் கொண் டது. நாடகத் துறையில் ஆர்வங்கொண்ட நடராஜன் நடிகனா கவும் விரும்பினார். 1972-ம் ஆண்டு திரு. வி.எஸ். துரைராஜா அவர்கள் தயாரித்த, 'குத்துவிளக்கு' என்னும் திரைப்படத்தில் நடித்து, நடிகராகவும் தன்னைப் பதிவு செய்து கொண்டார். கலாயோகி ஆனந்த கே. குமாரசாமி 1917-ம் ஆண்டு எழுதிய

‘Dance of Shiva’ என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்தார். அதனை இந்திய அரசாங்கமே பிரசுரித்தது. இவரது இலக்கிய முயற்சிகளைப் பாராட்டி இந்திய கலைக் கழகம், ‘வித்தியா ரத்தினம்’, ‘பண்டித ரத்தினம்’ ஆகிய பட்டங்களை வழங்கிக் கௌரவித்தது.

நடராஜன் அவர்கள் எழுதியும், மொழிபெயர்த்தும் வெளியிட்ட பல ஆக்கங்கள் இலங்கை, இந்தியப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. குறிப்பாக 1967-ம் ஆண்டு வெளிவந்த காரைநகர் சைவ மகா சபை, பொன் விழா மலரில், ‘தன்னை அறிதல்’ என்னும் தலையங்கத்தில் அருமையான கட்டுரையை எழுதியுள்ளார். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறிய குட்டிக் கதையொன்றினை லாவகமாகக்



கையாண்டு, ஒருவர் எவ்வாறு தன்னை அறிந்து கொள்தல்? என்பதனை விளக்கியிருப்பது வியக்கத்தக்கதாகும். இவர் எழுதிய மற்றும் மொழிபெயர்த்த நூல்களுள், இலங்கையின் பூர்வ சரித்திரம், இந்து சமுத்திரத்தைச் சேர்ந்த தேசங்கள், உலக ஐக்கியத்துக்கு அத்திவாரம், சித்தார்த்தர், புத்த பகவான் அருளிய போதனைகள், செய்மதி, விநோதனின் சாகசங்கள், பிங்கலன் கதை என்பன குறிப்பிடத்தக்கனவாகும். அவர் எழுதிய மற்றும் மொழிபெயர்த்த பல படைப்புகள் அச்சில் வெளிவரவில்லை எனவும் கூறப்படுகிறது.

காலப்போக்கில் பௌத்த மதக் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் ஆர்வங்கொண்டு, கௌதம புத்தர் அருளிய, ‘தம்ம பதம்’ என்னும் நூலையும் கற்று, அதனைத் தமிழிலும் மொழி பெயர்த்தார். பௌத்த மதக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கடைப்பிடித்து வாழவும் ஆரம்பித்தார். 1983-ம் ஆண்டு சைவசமய அடையாளங்களைத் துறந்து, பௌத்த மதத் துறவியாக வாழத் தொடங்கினார். பெயரையும், ‘யாப்பனே தம்ம ரத்ன தேர’ என மாற்றிக் கொண்டார்.

நடராஜன் பல நூல்களைத் தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கும், சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும் மொழிமாற்றம் செய்துள்ளார். கம்பஹா வித்யா ரவீந்திர விஸ்வ வித்தியாலய மகா பிரிவேனாவிலுள்ள இளம் பௌத்த பிக்குகளுக்கு மகிழ்ச்சியுடன் தமிழ் போதித்தார். இலங்கை வானொலி தேசிய சேவையிலே, காலையில் ஐந்து நிமிடங்கள் சைவ நற்சிந்தனை, கிறீத்தவ நற்சிந்தனை, இஸ்லாமிய நற்சிந்தனை, பௌத்த நற்சிந்தனை என்ற நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். அதில் பௌத்த நற்சிந்தனையை, ‘சங்கைக்குரிய யாப்பனே தம்ம ரத்ன தேர’ என்ற பெயரில் நடராஜன் வழங்கி வந்தார்.

பின்னாளில் சாகித்திய மண்டலத் தமிழ் கவிதைக் குழுவின் தலைவராகவும், இலங்கைச் சங்கீத நாட்டிய சங்கத்தின் தலைவராகவும், இலங்கைக் கல்வி ஆலோசனைச் சபை அங்கத்தவராகவும் பணி புரிந்தார். கலை, இலக்கியம், கவிதை, ஊடகம், மற்றும் மொழிபெயர்ப்புத் துறைகளில் இவர் ஆற்றிய சேவை அளப்பரியதாகும். 1976-ம் ஆண்டு மெய்கண்டான் நிறுவன உரிமையாளர் திரு இ. குமரகுருநாதன் அவர்களின் வேண்டுகோளுக்குக் கிணங்க அந்நிறுவனத்தின் மாத வெளியீடான ‘கலாவல்லி’ சஞ்சிகையின் ஆசிரியராக ஆறு மாதங்கள் பணிபுரிந்தார்.

ஒலிபரப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, பத்திரிகை ஆசிரியராக, எழுத்தாளராக, திறமை மிக்க மொழிபெயர்ப்பாளராக, ஆசிரியராக, பல்கலைக்கழக விரிவுரையாளராக, நடிகராக, பேச்சாளராக, A VERSATILE MAN என வர்ணிக்கப்பட்ட பன்முக ஆளுமை கொண்ட நடராஜன் 1988-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் திகதி அமரத்துவம் அடைந்தார். தந்தையார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் போல் தமிழ் பணியில் உச்சந்தொட்ட போதிலும் அன்பு, சாந்தி, சமாதானம், அஹிம்சை, தன்னடக்கம் போன்ற தத்துவங்களை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தவர் நவாலியூர் சோ. நடராஜன். தனது இறுதிக் காலம் வரை கலை இலக்கியத் துறை வளர்ச்சிக்கும், சமயங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கும் ஆடம்பரமின்றி அயராது செயற்பட்ட
ஓர் உன்னத மனிதர் அவர்.



vivekananthan.v@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com     Fax: 1-416-849-0594     Tel: 1-416-857-6406***

# மறைந்தும் மறையாத ஆசான்

– த. சிவபாலு

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் முன்னாள் அதிபர் கதிர்காமர் பாலசுந்தரம், கடந்த ஜுன் 02-ம் நாள் இயற்கையெய்தினார். ஆசிரியராக, அதிபராக, எழுத்தாளராக பல்வேறு திறன்களையும் ஆளுமையும் கொண்டவர் அவர். தன்னை முதனிலைப்படுத்தாமல் அமைதியாக இருந்து பல்வேறு செயற்திட்டங்களை நிறைவேற்றியுள்ள இவரது பதவிக்காலம் யூனியன் கல்லூரியின் பொற்காலம் எனப்படுகின்றது. தனியாள் ஆய்வுகள், சிறுகதைகள், நாவல்கள் என்பன இவரது எழுத்தாற்றலுக்குக் கட்டியம் கூறுவதோடு ஆங்கிலம் கற்பதற்கான நூல்களையும் ஆக்கியுள்ளார்.

அவரோடு பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது கனடாவில்தான். 'ஆழ்கடலான்' பரமநாதனின் நூல் வெளியீடு எனது தலைமையில் நடந்தவேளை, அதில் பங்குகொண்டு பாராட்டுக் கவிதையையும் தந்திருந்தார். அவரது நூலான 'வன்னி' நாவலை வெளியிட்டு வைக்கும் பொறுப்பை என்னிடம் துணிந்து ஒப்படைத்திருந்தார். அத்தோடு அவரது வேறு சில நூல்களுக்கு உரையாற்றவும் அழைத்திருந்தார். யூனியன் பொற்காலம் நூலுக்கு பேராசிரியர் நா. சுப்பிரமணியன், சட்டத்தரணி விக்னேஸ்வரன், முனைவர் பார்வதி கந்தசாமி உட்பட நானும் அந்த நூல் வெளியீட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் வாய்ப்பை தந்துள்ளமை என்மீது அவர் கொண்டுள்ள மதிப்பைக் காட்டி நின்றது.

ஆசிரியராக நியமனம் பெறுவதற்கு முன்னர் பிரித்தானிய விமானப் படை அலுவலகத்தில் தனது 12-வது வயதில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றியதோடு இரண்டே ஆண்டுகளில் நிர்வாகப் பகுதியில் பணியில் பதவி உயர்வு பெற்றுப் பொறுப்போடு பதவியைத் தொடர்ந்தார். 1948-ல் இலங்கை சுதந்திரமடைந்ததை தொடர்ந்து பிரித்தானிய அரசாங்கம் தனது படைகளை மீளப் பெற்றுக்கொண்டமையால் பாலசுந்தரம் அதுவரை வகித்துவந்த அலுவலகப் பணியில் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. வேலையை இழந்தமையால், மீண்டும் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் அப்போதைய அதிபராக இருந்த திரு. வீரசிங்கம் அவர்கள் இவரை அழைத்துச் சென்று அங்கு கல்வியைத் தொடரவைத்தார். அதிபரின் மகன் வீ. ஆனந்தசங்கரியும் இவரது வகுப்புத் தோழராக கல்வியை மேற்கொண்டார். அங்கிருந்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை 1958-களில் முடித்துக்கொண்டு வெளியேறினார். வேறு வேலைகளுக்கு விண்ணப்பித்து காத்திருந்தவேளை பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். போதிய ஊதியம் கிடைக்காமையால் அந்தப் பணியை விட்டுவிட்டு 'இந்து போர்ட்' இராசரத்தினம் அவர்களை நாடி ஆசிரியர் தொழிலில் காலடி வைத்தார். அதன் காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள 'ஆயிலடி' என்னும் கிராமத்தில் உள்ள இந்துப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக தனது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார். ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட காரணத்தால் தனது தொழில் வாண்மையை உயர்த்திக்கொள்ள ஆசிரியப் பயிற்சிக்காக மீண்டும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். அங்கு Dip.in.Ed. கல்வி நெறியைத் தொடர்ந்தார். அதன்பின்னர் கண்டியில் உள்ள யகலத்தன முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக 1966-ல் பணியைத் தொடர்ந்தார்.

ஆங்கில மொழி ஆசானாக தனது பணியை வன்னியில் தொடங்கிய அவர், யூனியன் கல்லூரி அதிபராக இருந்து ஓய்வு பெறுகின்றார். ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மேலதிக வகுப்புக்களை தனது வீட்டில் வைத்தே மாணாக்கருக்குப் புகட்டியவர். 80 விழுக்காட்டிற்கு மேற்பட்ட சைவ சமயத்தவர்களைக் கொண்ட யூனியன் கல்லூரியில், அவர்கள் வழிபடுவதற்கு ஒரு ஆலயம் இல்லாமையை உணர்ந்து அந்தக் குறையை நிவர்த்தி செய்ய ஓர் ஆலயத்தையும் நிறுவினார். யூனியன் கல்லூரியின் வரலாற்றில் முதன்முதலாக இந்து ஆலயம் அமைக்கப்பட்ட வரலாறாக இது பதிவாகியுள்ளது. ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மேலதிக வகுப்புக்களை தனது வீட்டில் வைத்தே மாணாக்கருக்குப் புகட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிதாகக் காணியைப் பெற்று அதில் ஒரு திறந்தவெளி அரங்கத்தை நிறுவியதோடு, க.பொ.த. (சா/தா) மற்றும் க.பொ.த உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைத் பெற்றுத்தந்த அதிபராக யூனியன் கல்லூரி பழைய மாணவர்களாலும் பெற்றோராலும் அதிபர் கதிர் பாலசுந்தரம் அவர்கள் நினைவு கூரப்படுகின்றார்.

உரோம, கிரேக்க இலக்கியங்களைப் போன்று தமிழுக்கும் தொன்மை வாய்ந்த பண்பாட்டு மரபு இருந்த போதிலும் தமிழின் வரலாறோ அன்றித் தமிழரின் வரலாறோ ஒரு ஒழுங்குமுறையில் பதிந்து வைத்திருக்கப்படவில்லை. அந்தக் குறையை நிவர்த்தி செய்யும் பணியில் ஒரு எழுத்தாளராகவும் தன்னை நிலைப்படுத்திக்கொண்டவர் அதிபர் கதிர் பாலசுந்தரம் அவர்கள். அவர் எழுதிய நூல்கள் அவற்றிற்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

அவரது நூல்கள் சிறுகதைகள், நாவல் இலக்கியங்களோடு, வரலாற்று ஆவணங்களாகவும் பாட நூல்களாகவும் காலத்

தின் தேவை கருதி எழுதப்பட்டவை. அவர் சிந்தனா ஓட்டம், அவரது சமகாலத்தின் நிகழ்வுகளின் ஆழ்ந்த நுண்மாண் நுழைபுல அவதானிப்புகள் என்பன அவற்றில் இழையோடிக் கிடக்கின்றன.

கல்வியையும் அதன்வழி மாணவர்களையும் பாடசாலையை யும் சமுதாயத்தையும் மண்ணையும் மைந்தர்களையும் ஆழ மாக நேசித்த ஒருவரால்தான் அவற்றை உள்ளடக்கிய படைப் புக்களை வெளிக்கொண்டுவர முடியும். அமிர்தலிங்கம் ஒரு சகாப்தம், வன்னி நாவல் என்பன அவரது சமுதாய, அரசியல் பார்வையினை படம்பிடித்துக் காட்டுகின்றன. போராட்ட கால வன்னி பற்றி அவ்வளவு துல்லியமாக அவதானித்து, கேட்டு அறிந்து வைத்துள்ளார் என்பதனை அவரது நாவல் எடுத்துக் காட்டுகின்றது. ஆவரங்காலில் பிறந்த அவர் தனது ஊரி லுள்ள சிவன் ஆலயத்தைப் பற்றிய வரலாற்றுப் பதிவையும் ஆக்கியுள்ளார். பாடசாலை நிருவாகியாக, சமூகத் தொண்ட னாக மட்டுமன்றி சிறந்த கவிஞனாகவும் தன்னை ஆக்கிக் கொண்டார்.

திரு. கதிர் பாலசுந்தரம் அவர்களின் நிருவாகக் கட்டமைப் பைப் பற்றி சண்டே ஸ்ரார் 1986-ல் ஒரு கட்டுரையை எழுதியி ருந்தது. யாழ்ப்பாண மாவட்டத்திலேயே தலைசிறந்த நிர்வாகி எனத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதே அந்தச் செய்தியின் சுருக்கமாகும்.

அவரிடம் நான் அவதானித்த பண்பியல்புகளில் அவரிடம் குடி கொண்டுள்ள துணிவு, விவேகம், ஆளுமை என்பன அசாதார ணமானவை என்பதே! எதற்கும் பின்வாங்காத, துணிந்த சுபா வம் கொண்டவர் அவர் என்பதனை அவர் எழுதிய நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. உண்மையை அப்படியே பதிவு செய் யவேண்டும் என்பது அவரது உள்ளக்கிடக்கை. அவர் ஒரு சில நூல்களைக் கனடாவில் பதிப்பித்த பதிப்பகத்திற்கு நான் அடிக்கடி செல்வேன். அந்தப் பதிப்பாசிரியர் முன்னைநாள் பாடசாலை அதிபர், இலங்கை கல்விச்சேவைப் பரீட்சையில் தேறி கல்வி நிர்வாகியாகப் பதவி வகுத்தவர். அவர் கதிர் பாலசுந்தரத்தின் துணிகரமான எழுத்தாற்றலையும் எழுத்து நடையையும் குணவியல்புகளையும் போற்றிப் புகழ்வதை நான் செவிமடுத்துள்ளேன். ‘இந்த மனிதன் ஒன்றுக்கும் பயப்ப டாதவர் போல இருக்கின்றார். அரசியலில் உள்ளவற்றை உள்ளபடி துணிவோடு கருத்துகளை எழுதுகிறார், இது இவ ருக்கு பிரச்சினையைக் கொடுக்கப் போகின்றதே’ என்றும் ஆதங்கப்பட்டதை நான் கேட்டுள்ளேன்.

‘வரலாற்றை உருவாக்குபவன் ஒடுக்குமுறையாளன்தான். அவன் எழுதுகின்ற வரலாறு அவனால் ஒடுக்கப்பட்டவர்களின் வரலாறாக இருப்பதில்லை. அது சூறையாடுகின்ற, வன்பு ணர்ச்சி செய்கின்ற, வறுமையை உருவாக்குகின்ற அவனது சொந்த வரலாறே. இதற்கு மாறாக, ஒடுக்கப்பட்டவர்களால் வேறொரு வரலாறு உருவாக்கப்படுகிறது. ஆனால் இந்த வர லாற்றை உருவாக்குபவர்கள் நாவலாசிரியர்களும் கவிஞர்க ளும்தானே தவிர, தொழில் ரீதியான அல்லது கல்வித்துறை சார்ந்த வரலாற்றாளர்களல்ல’ என்று (Frances Furnen) ஃபிரான்ஸ் ஃபனான் குறிப்பிடுவார். சமூகத்தின் நெருக்க டியை முதலில் உணர்ந்து கொள்வது சிறுகதை மற்றும் புனை விலக்கியமாகத்தான் இருக்கின்றது. இலக்கியம் என்பது ஆதிக்கமயமாக்கலுக்கும், சட்டங்களுக்கும் தணிக்கைகளுக் கும் வெளியே சதா தன்னிலையைப் பேசி மிச்சமிருக்கும் நம் பிக்கைகளைத் திரட்டிக்கொண்டேயிருக்கிறது என்பதற்குத் தகைசான்ற ஒரு படைப்பாளியாக எனது பெருமதிப்பிற்குரிய அதிபர் கதிர் பாலசுந்தரம் அவர்களைக் நான் காண்கின் றேன்.

யூனியன் கல்லூரியால் மிகவும் ஆகர்சிக்கப்பட்ட அதிபர் திரு. கதிர் பாலசுந்தரம் அவர்கள் அக்கல்லூரியின் வரலாறு பதியப்பட்டுப் பேணப்படாதமை கண்டு தனது வாழ்நாளில் பெரும் பொழுதை இக்கல்லூரியின் வரலாற்றாதாரங்களைத் தேடிப் பெற்றுக்கொள்ளுவதில் செலவிட்டவர். மிகவும் நுணுக் கமாக ஆராயப்பட்ட ஓராண்டு முயற்சியின் பின்னர் ‘தங்கத் தாரகை’ எனும் நூலை வெளியிட்டார். ‘விழுமியது பயத்தல், விளங்குதாரணத்தா தாகுதல்...’ என்னும் தொல்காப்பிய சூத் திரத்திற்கமைவாக இந்த நூல் யாக்கப்பெற்றுள்ளது.



‘தங்கத் தாரகை’ 45 விடயங்களைப் பதிவாக்கியுள்ளது. எடுத்த எடுப்பிலேயே தேயிலைத் தோட்டத்தில் ஆடிப்பாடி வேலை செய்யும் இளம் யுவதிகளின் படம் நுழைவாயிலாக ஆவலைத் தூண்டும் பாணியில் அமைந்துள்ளது. ‘கட்டியம்’ என்னும் நுழைமுகம், மலையக மாணவர் ஒருவரின் அனுபவத் தைப் பதிந்துள்ளமை அக்காலத்துப் பல்வேறு நிலைமை களை அறிய வைக்கின்றது. ‘யூனியன் உதயத்திற்கு வழி திறந்த சாமுவேல் நீவெல்’ என்னும் கட்டுரையில் யூனியனின் வராற்றின் பின்புலமும் அமெரிக்க சிலோன் மிசனின் பணிகள் பற்றிய பதிவுகளும் உள்ளடக்கப்படுகின்றன. 1813-ல் அங்கு நடைபெற்றுக்கொண்டிருந்த தமிழ்ப் பாடசாலையைத் தமது அதிகாரத்தால் ஆக்கிரமித்து தேவாலயத்தைக் கட்டிக் கொண்ட வரலாறும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது.

1813-ல் பாடசாலையை ஆரம்பித்த சாமுவேல் நீவெல் அத னைத் தொடர்ந்து டானியல் பூவர், மற்றும் வர்ணர் என பாட சாலை ஆரம்பித்தது தொடக்கம் அங்கு பணியாற்றிய அனைத்து அதிபர்கள் உப அதிபர்கள் மட்டுமன்றி முக்கிய

மான ஆசிரியர்களின் பணிகளையும் அவர் பதிவாக்கியுள்ளார்.

இப்பாடசாலையில் 1939-ம் ஆண்டிற்கு முன்னர் பணியாற்றிய Rev B.U. Rice, Rev.S. Veerakathy, Mr.S.M. Kandaiapillai Mr. Taylor, Thuraiappapillai, Mr.J.V Chellappah, Mr.S. M. Veluppillai, Mr.G.A. Ratnavarararathar, Mr.C.C. Kanapathipillai, Mr.S.K. Rasiah ஆகியோரது பணியும் அதன் பின்னர் பணியாற்றிய I.P. Thurairatam, K. Krishnapillai, T. Nadarajah, Kathir Balasundaram, N. Kamalanathan, S. Punniysnlan, V.K. Radnakumar என்பவர்களின் பணிகளும் பதிவாக்கப்பட்டுள்ளன.

இவர்களுள் ஐ.பி. துரைரட்ணம் மிகவும் முக்கியமான பணிகளை ஆற்றிய அதிபராக புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளார். அவர் காலத்தில் சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் வகுப்பு, லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்கான வகுப்பு, பல்கலைக்கழகப் புகுமுகத்திற்கான உயர்கல்விச் சான்றிதழ் கற்கை நெறி, இல்ல போட்டி முறைகள், மாணவர்களின் கிறிஸ்தவ அமைப்பு, பழைய மாணவர் ஒருங்கமைப்பு, சாரணர் இயக்கம், துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் என்பனவற்றோடு மலேசிய கட்டடத் தொகுதி, குழாய்நீர் விநியோகம், இரண்டாவது விளையாட்டு மைதானம், உயிரியல், பௌதிகவியல் ஆய்வு கூடங்கள் என்பனவற்றோடு ஐக்கிய காணிவெல் களியாட்ட விழா, பொருட்காட்சி, யூனியனின் செயற்பாட்டுப் படங்கள் என்பன ஆரம்பிக்கப்பட்டன. இதனால் 1947-ல் இது 1-ம் தரப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

திரு.ரி. நடராசா அவர்களின் காலத்தில் 1961-ல் பாடசாலை அரசாங்க மயமாக்கப்பட்டது. சரிவு நிலையில் இருந்த பாடசாலையை மீளவும் கட்டியெழுப்ப அரும்பாடுபட்டு உழைத்தவர் என்பதனைப் பதிவாக்கியுள்ளார்.

இவருக்குப் பின்னரான போர்க்காலத்தில் அதன் பின்னர் வந்த அதிபர்களான திரு. கந்தசாமி மற்றும் புண்ணிய சீலன் ஆகியோர் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டனர். அவர்கள் எதிர்கொண்ட சிரமங்கள் சிக்கல்கள் பற்றிய கருத்தேற்றமும் அவரது உள்ளத்தில் பதிந்திருந்தமையை நூல் வெளிக்கொண்டு வந்துள்ளது.

யூனியன் கல்லூரியின் பழைய மாணவரான சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் பத்திரிகைப் பணியும் பதிவாக்கப்பட்டுள்ளது. ‘உதயதாரகை’, ஹென்றிமாட்டின் மற்றும் செத்பேயிசன் ஆகியோர் பதிப்பாசிரியர்களாகத் தொடங்கியமையும் அவர்கள் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்தமையும் பதிவாகியுள்ளது. Morning Stare என்ற ஆங்கிலப் பதத்திற்கு அவர்கள் உதய தாரகை எனக் கொடுக்கப்பட்ட தலைப்பே இன்று நாம் பேசும் நூலுக்கு அத்திவாரம் இட்டுள்ளது என ஊகிக்க முடிகின்றது.

வாசகர்களை ஈர்த்துக் கொளத்தக்க ஆற்றொழுக்குப் போன்ற எழுத்து நடையினை அவரது நூல்களில் காணமுடிகின்றது. அவ்விதமே ஆங்கிலத்தில் அவர் எழுதிய ‘வன்னி’ நாவல் தான் முதன்முதலில் ஆசிரிய நியமனம் பெற்ற குக்கிராமமான ஆயிலடியைச் சுற்றிச் சுற்றி வருவதைக் காணமுடிகின்றது. இராணுவத்தின் அட்டூழியங்களையும், போர்க்காலத்தில் கைதுசெய்யப்பட்ட போராளிகள் பற்றிய கதைகளையும் விபரிக்கும் போர்க்கால நாவலாக வன்னிப் பிரதேசத்தின் நிலைமையும் இந்நாவலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

யூனியன் கல்லூரியில் கல்வி கற்று பெருமை தந்தவர்கள் வரிசையில் சட்டத்தரணியும் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவராகவும் இருந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தராகப் பணியாற்றிய சு. வித்தியானந்தன், கே. குணரத்தினம், கல்வியியலாளரும் விஞ்ஞானியுமான அலன் ஆபிரகாம் அவர்கள், கணினித்துறையில் விற்பன்னராகவும் மலேசிய நான்யாங் பல்கலைகழகத்தில் பொறியியல் பேராசிரியராக திகழும் பி.என். சுகந்தன், முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவமகாராஜா, அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வரும் எழுத்தாளர் கே.எஸ். சுதாகர், முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உயர்நீதி மன்ற நீதிபதியுமான தெல்லிப்பளை இராஜரட்ணம் போன்றோர் யூனியன் பெற்றெடுத்தவர்கள் என்பது கதிர் பாலசுந்தரம் அவர்களால் வரலாற்றுப் பதிவாக்கப்பட்டமை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அவர் எழுதிய சிறுகதைகள் சமூக நலம் சார்ந்தவை என ‘அந்நிய விருந்தாளி’ என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது. ‘மறைவில் ஐந்து முகங்கள்’ என்னும் நூலுக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் க. பஞ்சாங்கம் ‘நம்பிக்கைத் துரோகங்களும், காட்டிக் கொடுத்தல்களும், அவநம்பிக்கைகளும், சூழ்ச்சிகளும், வஞ்சகங்களும், பொறாமைகளும், கூட இருந்தே குழி தோண்டல்களும், காரணம் காண முடியாத சாவுகளும், தப்பிப் பிழைத்து ஓடிவிடுவதற்காகப் பின்பற்றப்படும் எல்லாவிதமான தகுடுதத்தங்களும், பொய்களும், பொறாமைகளும் எந்த அளவிற்கு ஒரு இனத்தை நாசப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதை உருவக மொழியில் பலவாறு பல கோணத்தில் சொல்லிக் கொண்டு போகிறது நாவல்’ எனக் குறிப்பிட்டுள்ளது, அவரது நாவல் எழுத்துக்கு கட்டியம் கூறி நிற்பதைக் காணலாம்.

இலங்கை தமிழரசுக்கட்சியில் அதீத ஈடுபாடும் அமிர்தலிங்கம் மீது மிகுந்து பற்றும் கொண்டவர் கதிர் பாலசுந்தரம். அவரது மூத்த சகோதரர் ஆவரங்கால் சின்னத்துரை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் உயர் பதவிகளை வகித்தவரும் ஆவார். அமிர்தலிங்கம் போன்றே தமிழ் செயற்பாட்டாளர்களும் அரசியல்வாதிகளும் ஆயுதக் குழுவினரால் சுடப்பட்டதை ஏற்றுக்கொள்ளாதவராக கதிர் பாலசுந்தரம் இருந்துள்ளார். இவற்றை அவர் எழுதிய ‘சத்தியங்களின் சாட்சியம்’, ‘அமிர்தலிங்கம் சகாப்தம்’ என்னும் நூல்களில் சாடியுள்ளமையைக் காணமுடிகின்றது.

பல்வேறு துறைகள் சார்ந்து எழுதி வந்த கதிர் பாலசுந்தரம் தனது 96-வது வயதில் கனடாவில் காலமானார். அவருக்கு Dr. கயல்விழி மற்றும் யாழ்கோவன் என்னும் இரு பிள்ளைகள் உள்ளனர். யாழ்கோவன் கனடாவிலும் கயல்விழி அவுஸ்திரேலியாவிலும் வாழ்ந்து வருகின்றனர். எழுத்தால் தனக்கென ஓர் இடத்தை தமிழ் மக்கள் மத்தியிலும் பிற மொழியாளர்களிடத்தும் இடம்பிடித்துள்ள அவர், யாழ். யூனியன் கல்லூரியின் மறுசீரமைப்பாளராக இன்றும் நினைவு கூரப்படுவது கருத்திற் கொள்ளத்தக்கது.

sivapalu@thaiveedu.com



## மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

# நாளெந்த நாளோ...?

## கவிஞர் மு. துரைசாமியின் கவிதைத் தொகுப்பு

**- மல்லியப்புசந்தி திலகர் -**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டக் கவிஞர்களின் வரிசையில் மு. துரைசாமி குறிப்பிடத்தக்கவர். பதுளை - தெளிவத்தை - மொறகொல்லைத் தோட்டத்தில் 1941-ம் ஆண்டு பிறந்தவர் கவிஞர் மு. துரைசாமி. 'பிறந்த மண்ணையும், வாழ்வு தேடிப் புகுந்த மண்ணையும் அடையாளப்படுத்திப் பெருமைகொள்ளச் செய்பவரே எழுத்தாளர்' எனத் தெளிவத்தை ஜோசப் குறிப்பிட்டுள்ளதைப் போல, அதே பதுளை மாவட்டத்தின் எல்ல, சதர்லேன்ட் பகுதிக்கு வந்துசேர்ந்த 'மு. துரைசாமி அவர்களால் 'எல்ல' மண் பெருமை கொள்கிறது' என்று எழுதுகிறார் நிவ்பேர்க வித்தியாலய அதிபர் எஸ். ராஜமாணிக்கம்.

பிந்திய அறுபதுகளில் இந்தப் பிரதேசத்தில் எழுந்த தமிழ் எழுச்சியின் உந்துதலால் கவிதை எழுதத் தொடங்கியுள்ளார் மு. துரைசாமி. பள்ளிநாட்களில் கவிஞர் எம்.சி.எம். சுபைர் அவர்களிடம் தமிழ் பயின்றிருக்கிறார். கவியரங்கங்கள் பலவற்றில் பங்குபற்றியிருக்கிறார்.

***குட்டக் குட்டக் குனிந்தே நீ***
***கோழையாக வாழ்வதால்***
***முட்டந்தட்டி உனை நாளும்***
***மகிழ்ந்து வசங் கண்டதால்***
***எட்டி உதைத்து விரட்டுகின்றார்***
***ஏனோ பொறுத்து வாழ்கிறாய்***
***வட்டியும் முதலுமாய்க் கொடுத்திடடா***
***வந்தது வரட்டும் மலைத் தமிழா !***

எனும் அவரது வரிகளில் தெறிக்கும் துணிச்சல் அவரது மேடைக் கவியரங்கங்களுக்குக் கட்டியங் கூறுவன.

***வெட்டிக் கதை கதைத்து சும்மா***
***வெறுங்கை முழம்போட்டு - நம்மை***
***மட்டம் தட்டிவிட்டார் - இளைய***
***மலையகமே - இதை***
***உணர்ந்து உயர்ந்திடுவீர் !***

என இளைய சமூகத்துக்குத் தெம்பூட்டுவதாகவும் அமைகிறது.

'சேர்ந்தே இருப்பது வறுமையும் புலமையும்' எனும் திருவிளையாடல் வசனம் போலக் கவிதை எழுதும் ஆற்றல் பெற்றபோதும் வறுமையிலேயே வாழ்ந்த கவிஞர் மு. துரைசாமி எழுதிய கவிதைகள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்த போதும், அவரது கவிதைகள் நூலுருப் பெற்றிருக்கவில்லை. அந்தக் குறையை நிவர்த்திக்கும் வகையில் 2010-ம் ஆண்டு எல்ல, நிவ்பேர்க் 'குறிஞ்சிப் பேரவை'-யின் அனுசரணையுடன் 'நாளெந்த நாளோ..?' எனும் தொகுதி பாக்யாப் பதிப்பகத்தின் உதவியுடன் வெளிவந்தது. இது குறித்துக் குறிஞ்சிப் பேரவைத் தலைவர் எஸ். இராஜமாணிக்கம் எழுதியிருக்கும் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.




'ஆழமான சமூகப்பார்வை கொண்ட மனிதராக நாங்கள் இவரைக் காண்கின்றோம். சமூகத்தில் நடக்கும் விடயங்களில் எப்போதும் அக்கறை கொண்ட ஒரு மனிதராக, நற்குருவாக இவர் புரியும் சேவை, புலன்களால் உணரமுடியாதவையாக இருக்கின்றன. நூலை உருவாக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றி எவ்வளவோ நாட்களாகிவிட்டன. உண்மையில் எமது ஏக்கமும் கூட 'நாளெந்த நாளோ..?' என்ற நிலையிலேயே காணப்பட்டது. இப்போது விடிவு கிடைத்தது'

ராஜமாணிக்கத்தின் இந்த மகிழ்ச்சிக்கு அழகு சேர்ப்பதாக அட்டைப்படத்தினை வரைந்துள்ளார் புசல்லாவை எஸ்.பி. மூர்த்தி. ஆழமான ஓர் அணிந்துரையைத் தந்துள்ளார் தெளிவத்தை ஜோசப்.

'தன்னைச் சுற்றிய சூழலில் சுரண்டலிலும் வறுமையிலும் பட்டினியிலும் சமூகக் கொடுமையிலும் சகோதர மனிதர் கருகிக் காயும் போது, கவிதை விடுதலைக்கு விமோசனம் தேடுகிறது. அப்போது தான் பார்வையுள்ள கவிஞர் படை வீரராகிப்

போர்க் குரல் எழுப்புவதுடன் இன்ப கீதத்தையும் இதய ராகத்தையும் மீட்டுகிறார். அந்த வகையில், யார் காலிலும் மிதிபடத் தயாரில்லாமல் வேரோடு எங்கும் பிடுங்கியெறியப்பட அனுமதிக்காமலும் போரின் வேராயிருந்து சமூகப் போர் நடத்திவரும் மலையகப் பெருந்தோட்ட மக்களிடையே கொதித்தெழுந்து கொப்பளித்த ஒருவர்தான் ஆசிரியர் சதலன்ட் துரைசாமி அவர்கள். தேயிலைத் தேசத்திற்குப் பெருமை சேர்த்த பதுளை தெளிவத்தை மொரகொல்லையில் பிறந்தவர் கவிஞர் துரைசாமி. தெளிவத்தை பேனையை நேசித்த பலரைப் பெருமைப்பட வைத்துள்ளது. அவரின் எழுத்துகள் 50-களின் இறுதியில் முளைவிட்டு இன்றுவரை மலர்களாய் மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது. அந்த மலர்களில் சில இதழ்களைத்தான் இன்று அவரிடம் 'நாளெந்த நாளோ..?' முதற் கவிதை நூல் பாக்யாவுடன் கைகோர்த்து வெளிவந்துள்ளது'.

பதுளை தெளிவத்தைத் தோட்டத்தை உலகத் தமிழ் இலக்கியத்தின் ஓர் அடையாளமாக்கிய தெளிவத்தை ஜோசப்பின் மேற்படி வரிகள் நிதர்சனமானவை. மேலும் மு. துரைசாமியின் கவிதை நூல் வெளியீட்டு விழா எல்ல, நிவ்பேர்க் குறிஞ்சிப் பேரவையினரால் 2010-ம் ஆண்டு நடைபெற்ற பொழுது கவிஞர் சக்தீ பால அய்யாவுடன் தெளிவத்தை ஜோசப் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்.

கவிஞர் மு. துரைசாமியின் 'நளெந்த நாளோ..?' எனும் தலைப்பிலமைந்த கவிதை இவ்வாறு அமைகிறது.

***உழைப்பதனை நாட்டிற்கு உரமாய் ஈந்து***
***உழுது பயிர் விளைத்திந்த உலகு வாழ்வோர்***
***நிலையுயர பாடுபடும் உழைக்கும் மக்கள்***
***நெஞ்சங்கள் குளிர்கின்ற நாளெந்த நாளோ !***

***...***

***இடுப்பொடியப் பாடுபடும் எங்கள் வாழ்வில்***
***இளவசந்தம் என்றென்றும் பூத்ததுண்டா ?***
***அடிமையென வடுநிலை அகன்று நாமும்***
***அறிவென்னும் செல்வமதைப் பெற்று இங்கே***
***நெடிதுயர்ந்த மலையகத்தின் நெஞ்சம் போலே***
***நிம்மதியாய் வாழ்கின்ற நாளெந்த நாளோ ?***

இவ்வாறு மலையகம் எப்போது உயர்வு காணும் என்ற ஏக்கத்துடனேயே வாழ்ந்த கவிஞர் மு. துரைசாமி 2013-ம் ஆண்டு காலமானார்.

ஊவாவின் இன்னொரு பக்கமான வெளிமடைப் பிரதேசத்தில் உருவான கவிஞர் ரபீக். சரிநிகர், யாத்ரா, கொழுந்து போன்ற இதழ்களில் எழுதிவந்த இவரின் கவிதைகளைத் தொகுத்து புரவலர் புத்தகப் பூங்காவின் வெளியீடாக 'மேகவாழ்வு' எனும் தொகுப்பினைத் தந்துள்ளார். பொதுவான பாடுபொருள்களைக் கொண்ட இந்தத் தொகுப்பில் மலையகம் குறித்த கவிதையொன்று இவ்வாறு அமைகிறது.

**ஒரு அம்மாவின் கல்லறையில்...**

***காமாட்சி***
***தோட்டத் தொழிலாளி***
***பிறப்பு 1929.02.09***
***இறப்பு 1986.01.19***



***அம்மா...***
***வெந்நீர் நதியில்***
***விழுந்த ரோஜாவாய்***
***வேதனை அக்கினியில்***
***தினம்***
***வெந்து கருகியவளே !***

***கண்ணீர் ஊற்றை***
***கண்களில் ஏந்திக்***
***கிடந்தவளே***
***மரணத்தின்***
***முரட்டு விரல்கள்***
***கிழிந்து போய் கிடந்த***
***கொழுந்து உன்னை***
***கிள்ளிப் போய்***
***ஆண்டும் மூன்றாச்சு***

***நீ உழைத்ததோட்டத்தில்***
***வியர்வையைச் சிதைத்து***
***அறுவடை செய்ததில்***
***அரைவாசியை***
***என் கல்விப் பயணச்***
***செலவுக்குக் கையளித்தாய்***

***...***

***வெள்ளையர்கள்***
***கட்டித் தந்துபோன***
***லயக்கூட்டுக்குள் சிறகுகளை***
***சுருட்டிக் கொண்டு***
***சீவித்தோம்...***

***தேசம்...***
***சில ரூபாய்களைத் தந்து***
***உன் உழைப்பை வாங்கிப்***
***பல கோடிகளுக்கு***
***விற்று லாபமடைந்தது.***
***நீ உள்நாட்டில் தினம்***
***உழைப்பதற்குத் தருவிக்கப்பட்ட***
***இயந்திரமாய் உழைத்தாய்***
***அந்திம மூச்சு அடங்கும்வரை..***

***பிஞ்சுக் கொழுந்தைப்***
***பிய்த்துப் பிய்த்துத்***
***தேசத்தை வளர்த்த***
***உன் வீர விரல்களுக்கு***
***எந்த விருதுகளும்***
***வழங்கப்படவில்லை***

இவ்வாறு தனது ஏக்கத்தைப் பதிவு செய்யும் வெளிமடை ரபீக் போல இன்னும் பல கவிஞர்கள் பதுளை மாவட்டத்தில் இருந்து வந்துள்ளனர்...

(தொடரும்)



thilagar@thaiveedu.com



## அறிஞர் ஆ. சபாரத்தினத்தின்

# ‘ஒரு விளக்கிலிருந்து ஏற்றிய பல விளக்குகள்’

### – நா. நவராஜ்

எனது இனிய நண்பர் ஆறுமுகம் சபாரத்தினம் அவர்களுக்கு மறக்க முடியாத சில அனுபவங்களுக்காக நன்றி கூற விரும்புகிறேன். போர்க்கஷ்டங்களைப் பொருட்படுத்தாது யாழ்ப்பாணம் முழுவதும் திரிந்தோம். குண்டுகள் வெடிக்கும் ஒலிகளுக்கு மத்தியில், ஒன்றும் நடக்காதது போல அவர் மிர்சியா எலியாடாவின் கருத்துக்கள் பற்றிய தமது மதிப்பீட்டை உணர்த்திக்கொண்டிருந்தார். யாழ்ப்பாணக் கலாசாரத்தின் முக்கிய காவலராகிய பண்டிதர்களுக்கு பௌத்தம் பற்றி விரிவுரைகள் ஆற்றினோம். எல்லாவற்றுக்கும் மேலாகச் சபா தனது சொந்த உதாரணத்தின் மூலம் சைவத்தின் மிகச்சிறந்த அம்சங்களை எனக்கு உணர்த்தினார். அவற்றை அவர் தமது நீண்ட வாழ்க்கையினூடாகத் தம் உள்ளத்தில் ஒன்றிணைத்திருக்கிறார். என்று மூதறிஞர் ஆ.ச-பாரத்தினம் அவர்கள் பற்றி ‘குடியேற்ற காலத்துக்கு முற்பட்ட தமிழகத்திலும் ஈழத்திலும் பௌத்தம்’ என்ற நூலின் முகவுரையில் சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீற்றர்ஷால்க் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடுவது போல தனது வாழ்க்கையினூடாகத் தம் உள்ளத்தில் சைவத்தின் மிகச்சிறந்த அம்சங்களை மட்டுமல்லாது பல துறைகளின் மிகச்சிறந்த அம்சங்களையும் அவர் ஒன்றிணைத்திருந்தார். அவற்றின் வழியிலேயே தனது வாழ்வினையும் அவர் இட்டுக்கொண்டார். அதனால் செயற்கரிய செய்கின்ற பெரியவராக அவர் எம் முன்னே விளங்கினார். எமது பிள்ளைகளுக்குக் காட்டுவதற்கு நல்ல முன்மாதிரிகள் இல்லை எனப் பலரும் ஏக்கத்தோடு கூறிநிற்கும் இக்காலத்தில் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக, முன்மாதிரியாக எம்மிடையே இருந்த ஒரு நல்ல மனிதர், 01.05.2020 அன்று காலமாகி விட்டார் அவர் நினைவாக இன்றைய தலைமுறைக்குச் சில குறிப்புக்கள்.

மூதறிஞர் ஆ. சபாரத்தினம் அவர்கள் நராந்தனையில் பிறந்தவர். தந்தையார் ஆறுமுகம், தாயார் அன்னம்மா. தந்தையார் நாவலர் பெருமான் காலஞ்சென்ற இரண்டு ஆண்டுகளின் பின் அவரது பாடசாலையில் படித்தவர். அதனால் சைவாசாரம் மிகுந்து முதியவயதில் தேவாரம், ஞானக் கோவை படித்துப் பொழுதைக்கழித்தவர். தந்தையின் ‘ஞானக்கோவை’யை இடம்பெயரும்வரை தம்முடன் வைத்திருந்ததாய்க் கவலையுடன் கூறும் அவர், பின்னர் அந்நினைவாக ஒரு பழைய புத்தகக்கடையில் ‘ஞானக்கோவை’ ஒன்றை வாங்கி வைத்திருந்தார். தந்தையாரால் உருவாக்கப்பட்ட சமயச் சூழல் இளைஞர் சபாவின் உள்ளத்தில் சமயப்பற்றை வளர்த்ததோடு புகழை விரும்பாது, குடத்துள் விளக்காய் இருக்கும் எண்ணங்களையும் அவருள் விதைத்தது.

ஆரம்பக்கல்வியை 1933-ல் நாரந்தனை கணேசவித்தியாசாலையிலும் அதனைத் தொடர்ந்து ஆங்கிலபாடத்தைக் கற்பதன் பொருட்டு 1938-ல் யாழ்ப்பாணம் பெருமாள்கோயில் சன்மார்க்க போதனாப் பாடசாலையிலும் தனது கல்வியைத் தொடர்ந்தார். இங்கு திருமதி பொன்னம்மா குலசேகரத்திடம் ஆங்கிலத்தை ஆரம்பம் முதல் படித்து ஆங்கிலக் கவிதைகளை நயக்கும் பேறு பெற்றார். மீண்டும் 1941-ல் இடைநிலைக் கல்வியைத் தொடர்வதற்காக கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தார். Junior School Certificate எனப்படுகின்ற கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்கான கல்வி வரை மூன்று ஆண்டுகள் அங்கு படித்தார். அரசாங்கப் பரீட்சைக்கு உரிய காலத்தில் விண்ணப்பம் அனுப்ப முடியாமல் போனதால் மீண்டும் 8ம் வகுப்பை 1944-ல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தொடர்ந்தார். 1945-ல் S.S.C பரீட்சை எழுதினார். பரீட்சை முடிவு வரும் வரை மேற்படிப்பினை 1946-சித்திரை வரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கற்றார். அக்காலத்தில் (1946-ல்) துறவியாக வேண்டும் என்ற மனப்பாங்கு வளர்ந்துவந்தது. 1946-சித்திரையில் பரீட்சை முடிவுகள் வெளியாகின இவர் அதில் சித்திபெறவில்லை. இந்துக்கல்லூரியில் இருந்து இந்தியாவிற்குச் சென்றார். அங்கு பலஇடங்களில் அலைந்து, துறவு மனப்பான்மை இருந்தால் பட்டதாரியாகிய பின் வந்து சேரலாம் என்ற நினைப்பால் மீண்டும் இலங்கைக்கு வந்து புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து மீள 1947-மார்கழி மாத S.S.C பரீட்சை எழுதினார். 1948-பங்குனியில் பரீட்சைமுடிவுகள் வெளிவந்து சித்தியடைந்த அடுத்த நாளே நாரந்தனை கணேச வித்தியாசாலையில் மேலதிக ஆங்கில ஆசிரியனாகப் படிப்பிக்க இந்துபோர்ட் இராசரத்தினம் இடம் கொடுக்க, நாரந்தனை கணேச வித்தியாசாலையில் ஆங்கில ஆசிரியர் நியமனம் பெற்றுப் படிப்பித்தார்.

படிப்பிக்கும் காலத்தில் கார்த்திகை, மார்கழியில் நடைபெற்ற தமிழ், ஆங்கில பரீட்சையில் சித்தி எய்தி 1949-தை 15-ல் கொழும்பு சென்று இரண்டு ஆண்டுகள் மகரகம தேசிய பயிற்

சிக் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்தார். அங்கு கா.பொ. இரத்தினம், கலாநிதி வ. பொன்னையா ஆகியோரி டம் தமிழைச் சிறந்த முறையில் கற்றார். தொடர்ந்து 1951-ல் சன்மார்க்க போதனா ஆங்கிலப் பாடசாலையில் ஆசிரிய நிய மனம் பெற்றுப் படிப்பித்தார். பின்னர் 1952-ல் புனித அந்தோ னியார் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1964-ல் B.A பட்டத்தினை வெளிவாரியாகப் பெற்று 33 ஆண்டுகள் ஆசிரியராகவும் தொடர்ந்து 1984-88 காலப்பகுதியில் கரம்




பொன் சண்முகநாத வித்தியாலயத்தில் அதிபராகவும் பணி யாற்றி ஓய்வு பெற்றார்.

இவர் புனித அந்தோனியார் கல்லூரியில் படித்தபோது நிறைய வாசிக்க வேண்டும் என்ற எண்ணத்தை அரசன் (அரச ரத்தினம்) என்பவர் இவருக்கு ஊட்டினார். அதனால் நூலகங் களே இவருக்குப் பொழுது போக்கிடங்களாயின. இதனால் நூலகத்தில் என்ன புத்தகம் எங்கேயிருக்கிறது என்ற விடயத் தோடு அது பற்றிய விடயங்களையும் அதன் எழுத்தாளர்கள் பற்றிய விலாவாரியான கதைகளையும் அவர் கூறுவதில் வல் லவராக இருந்தார். அக்காலத்தில் புனித அந்தோனியார் கல் லூரியில் படிப்பித்த சில்லாலையைச் சேர்ந்த ஜோசப் அடிக ளார் தான் லண்டனில் கற்றுத்திரும்பிய காலம் முதல் அப்பா டசாலையில் வரலாறு கற்பித்து, இவரது இலக்கியக்காதலை வரலாற்றுத்துறைக்குத் திருப்பிவிட்டார். அதனால் பின்னா ளில் பேராதனை பட்டப்படிப்புக்கு வரலாற்றுப் பாடத்தைக் கற்றதுடன் 'புதுமுறைச் சரித்திரம்' என்ற வரிசை நூல்களை எழுதி இவர் பிரபலமடைய வாய்ப்புக்கிடைத்தது. 1965-72-ல் இவரது வரலாற்றுப் பாடப்புத்தகங்கள் பற்பல பதிப்புகள் வெளிவந்து இலங்கை முழுவதிலும் பயன்பட்டன. அத்தோடு படிக்கும் காலத்தில் (1945-ல்) க.பொ.த (சாதாரண) பரீட் சைக்கு பௌதிகவியல், கணிதம் கற்றாலும் விஞ்ஞானத்தில் நாட்டமில்லாதிருந்த இவர், வீரகேசரி வாரப் பத்திரிகை ஆசிரி யர் தமது பிள்ளைகள் A/L விஞ்ஞானப் பிரிவில் படிக்கிறார் கள் என்றும் அவர்களுக்கு ஏற்ற வாசிப்பு விடயங்கள் வீரகே சரி வார இதழில் கட்டாயம் வெளியிட வேண்டும் என்று கேட்ட தற்கிணங்க தான் எடுக்கும் 'ரைம்' அமெரிக்க வார சஞ்சிகை களில் வரும் விஞ்ஞானம் சார்ந்தவற்றைப் படித்து அவற்றுள் மாணவர்களுக்குப் பொருத்தமானவற்றை தேர்ந்தெடுத்துச் சுருக்கியும் விளக்கியும் விஞ்ஞான, கணித வரலாறுகள் சார்ந்த பற்பல கட்டுரைகளை எழுதினார். மேலும் யாழ் நூல கத்தில் இருந்த சற்றுப் பழைய ஆங்கிலச் சஞ்சிகைளை வீட் டுக்கு எடுத்துச் செல்லும் வசதி இருந்தது இவர் அவற்றை எடுத்துச்சென்று படித்து மொழி பெயர்த்தும் எழுதினார். இவ ரது இச்செயலை இவரது மகன் படிப்பிக்கும் வட்டுக் கோட்டை தொழிநுட்பக் கல்லூரியின் ஆசிரியர் அறையில் அவரது நண்பர்கள் 'யாரப்பா இந்த மனிசன்! முதல் வாரத் தில் ரைம், நியூஸ் வீக்கில் வருகின்றவை அடுத்த வாரத்தில் வீரகேசரியில் வந்து விடுகின்றனவே' என்று (தமது நண்பனின் தகப்பனார் தான் அது என்பதை அறியாது) பேசிக் கொண் டார்களாம். மகன் மௌனமாக இருந்தார்.இக்காலப்பகுதியில் இங்கிலாந்தின் 'கார்டியன்' சஞ்சிகைகளில் வரும் கருத்துக் களை உள்வாங்கித் தினகரனிலும் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார். 1980-ற்குப் பின் தினகரனிலும் வீரகேசரி வார இதழின் விஞ்ஞான மஞ்சரியிலும் சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு இவரது கட்டுரைகள் வெளிவந்தன.

ஓய்வு பெற்ற பின்னர் மருத்துவ வரலாற்றை லங்கா ஆயுர்வே தக் கல்லூரியில் கற்பித்ததோடு வடமொழியான சம்ஸ்கிரு தத்தை சீதாராம சாஸ்திரியிடம் நன்கு கற்று அவரது அபிமா னமுள்ள மாணவராக இருந்து பேராதனை மற்றும் லண்டன் பரீட்சைகளிலும் வடமொழியை ஒரு பாடமாக எடுத்து சித்திய டைந்து அம்மொழியிலும் பாண்டித்தியம் உடையவராக விளங்கிய படியால் ஆரிய-திராவிட-பாஷா அபிவிருத்திச் சங் கப் பரீட்சைகளுக்கு வடமொழியையும் கற்பித்தார்.

இவர் தன்வாழ்நாளில் பல பொதுப்பணிகளில் ஈடுபட்டமை யும் இங்கே குறிப்பிடத்தக்கது. பள்ளி மாணவனாயிருந்த போதே நாரந்தனை இளைஞர் சங்கத்தை அமைத்து இந்தி யாவிலிருந்து சஞ்சிகைகளை எடுப்பித்து அரிய வாசிக சா லையை 10 ஆண்டுகள் நடத்தினார். அக்காலத்தில் வெளி வந்த கலைமகள், கிராம ஊழியன், சிந்தனை போன்ற இலக் கிய சஞ்சிகைகளில் எழுதிய பலருடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ளார். சர்வோதய இயக்கத்தில் மனம் பதிந்து அது பற்றிய நூல்களை எடுத்துப் பலருக்கும் வழங்கினார். 'வினோபாஜியின் கீதைப் பேருரைகள்' படித்துப் பண்டிதமணி தம் கருத்துக்களை எழுதி வைத்திருந்த பிரதியைத் இவர் தமது பொக்கிஷமாகப் போற்றிவைத்திருந்தார். நீர்வேலியில்

நிகழ்ந்த சாவோதய மகாநாடு தொடர்பான ஆர்வம், சின்னம டுவில் அகில இலங்கை ஹரிஜனசேவாசங்கசெயலாளராயி ருந்து ஆண்டுவிழாவை ஏற்பாடு செய்வதற்கு இவரைத் தூண் டியது. அத்துடன் நாரந்தனை, கரம்பன் கிராமங்களில் கிராம முன்னேற்றச் சங்கம் சனசமூகநிலையம், இந்துசமய வளர்ச் சிக்கழகம் போன்ற அமைப்புகளிலும் தனது பங்களிப்பை வழங்கினார்.

Saturday Review, திசை போன்ற வார சஞ்சிகைகளின் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து அவற்றின் செயற்பாடுகளில் பெரிதும் கவனம் செலுத்தினார். அக்காலத்தில் சுவீடன் நாட் டுப்பேராசிரியர் பீற்றர்ஷால்க்கின் தொடர்பு ஏற்பட்டது. அவர் வேண்டுகோளுக்கியைந்து யாழ்ப்பாணத்துச் சமயங்கள் பற் றிய விளக்க நூலோதி ஒன்றுக்கான அத்திவார வேலைகளை மேற்கொண்டார். ஆங்கிலத்தில் அவை எழுதப்பட்டன. சைமன் காசிச்செட்டியின் 'தமிழ் புளூற்றாக்' போன்ற நூலாக அது பரிணமிக்கவேண்டும் என்ற விருப்புடன் அதனை அவர் மேற்கொண்டார். அதற்காகச் சுவீடன் உப்ஸாலா பல்கலைக ழகத்தில் சமயங்களின்வரலாற்றுத் துறையில் மூன்றுமாதம் தங்கியிருந்து பேராசிரியரின் தொகுப்புகளை நூலகவிஞ் ஞான முறையில் வகைப்படுத்தினார். அவ்வாறு அவரால் மேற்கொள்ளப்பட்ட அவ்வாக்கங்களைத் தான் நூலாக்குகின் றேன் என்று நூலகர் ஒருவர் வாங்கிச்சொன்றார். அது கிடப் பில் கிடக்கிறது போலும். ஸ்ரொக்ஹோம் உப்ஸாலா பல்க லைக்கழகங்களில் இறையியல், பின்பட்டப் படிப்பு மாணவர் களுக்குச் சைவசித்தாந்தம், தமிழர் வாழ்வும் பண்பாடும் பற் றிய விரிவுரைகளை நிகழ்த்தினார். சுவிடன் கிறிஸ்தவ திருச்ச பையின் ஆதரவில் சிக்ருனா என்னும் இடத்தில் நடந்த ஐந்து நாள் மகாநாட்டில் கலந்து கொண்டார். போராட்டம் நிகழும் இஸ்ரேல் அயர்லாந்து, சூடான், இலங்கை போன்ற நாடுக ளில் சமாதானம் தோன்ற என்ன செய்யவேண்டும் என அங்கு ஆராயப்பட்டது அதில் யாழ்ப்பாணத்தில் 'இந்து - கிறிஸ்தவ எதிர்ப்பாடு இன்று' என்னும் பொருள் பற்றிக் கட்டுரை வாசித் தார். அது கொழும்பு Sunday Times இலும் சுவீடன் 'லங்கா' சஞ்சிகையிலும் வெளிவந்தது.

மூன்று மாதம் அங்கிருந்து நோர்வே, சுவீடன், பின்லாந்து நாடுகளில் கீழ்த்திசை மதங்கள் கற்பிக்கும் பல்கலைக்கழ கங்கள், உயர் நிறுவனங்கள் போன்றவற்றின் நூலகங்களில் தங்கி இறையியற் கல்வி, சமய வரலாறு, சமயங்களின் ஒப்பீடு பற்றிய ஆய்வுகள் அங்கு எப்படி வளர்கின்றன என்பதை அவ தானித்தார். ஓராண்டு அங்கு தங்கும் படி வற்புறுத்தியும், நாட்டு மற்றும் வீட்டு நிலைகளால் தாயகம் திருப்பினார். 1994-ல் மீண்டும் அங்கு பணிபுரியும் வாய்ப்பினைப் பெற்றும் அதனை பயன்படுத்த அவர் நினைக்கவில்லை. இங்கு அத னிலும் முக்கியமான, பண்டிதமணி கணபதிப்பிள்ளையால் 32 கொப்பிகளில் எழுதி வைக்கப்பட்டிருந்த உப அதிபர் கைலா சபதியின் சிந்தனைகளைத் தேடிப் பாதுகாக்கும் பணியில் பேராசிரியர் சுசீந்திரராசவுடன் ஈடுபடவேண்டியிருந்தது. அப்ப ணியில் முழுவதும் தம்மை ஈடுபடுத்தினார். இதற்காக 1991 முதல் 1994 வரை சுசீந்திரராஜாவின் அறையில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இருந்து 32 கொப்பிக ளையும் நூலாக்க உதவி செய்தார். அது நூல்வடிவம் பெற்று 700 பக்கங்களுடன் பல்கலைக்கழக வெளியீடாக மலர்ந்தது.

1980-களில் காவலூர் இலக்கிய வட்டம் தொடங்கிய பின் காவ லூர் ஜெகநாதனின் தூண்டுதலால் மல்லிகைக்கு இலக்கிய வட்டத்தில் பேசுவதற்கு ஆயத்தப்படுத்திய குறிப்புக்களைக் கட்டுரைகளாக எழுதினார்.ஏ.ஜே. கனகரத்னாவல் 'காவல்நக ரோன்' எனப் புனைபேர் இடப்பட்டு மல்லிகையில் அக்கட் டுரை வெளிவந்தது. அதன் பின் சுமார் 25 கட்டுரைகள் வரை மல்லிகையில் எழுதினார். ஜூலை-1993-ல் மல்லிகை இதழ் இவரது அட்டைப்படத்தைத் தாங்கி வெளிவந்தது. உள்ளே இவர் பற்றிய அறிமுகத்தைக் காரைசுந்தரம் பிள்ளை வரைந் திருந்தார். அதில் வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய சமயதத்து வத் துறைகளிலும் ஈடுபாடு கொண்ட இவர், சமயம் ஒரு வாழ்க்கைநெறியாக அமைய வேண்டும் எனும் சமரசக்கொள் கையுடையவராக உள்ளார். இவர் சுத்த சைவர், எளிமையான வர், காந்திய சிந்தனையிலும் அகிம்சையிலும் நம்பிக்கையு டையவர். சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து காட்டிவரும் பெரியவர். மிகவும் சிறிய வயதிலிருந்தே தீண்டாமையை எதிர்த்தது மட்டுமன்றி எல்லா மாணவர்களையும் வீட்டுக்க ழைத்து இலவசமாகக் கல்வியளித்து வருபவர்.இவர் மேடை யிலேறிப் பிரசங்கம் செய்வதில்லை. ஆனால் வாழ்ந்து காட்டு வதன் மூலம் சமுதாயத்தைத் திருத்தலாம் எனும் அசைக்கமு டியாத நம்பிக்கையுடையவர். இவர் போன்றவர்கள் ஆயிரத்தி லொருவரே இருக்கமுடியும்.' என்று கூறியிருப்பது முழுதும் உண்மை.

மல்லிகையில் மட்டுமன்றி அலை, திசை போன்ற சஞ்சிகைக ளிலும் கட்டுரைகளை எழுதியுள்ள இவர் மொழி பெயர்ப்புத் துறையிலும் சிறப்புற்று விளங்கினார். உதாரணமாகத் தீவிர லங்கா சமாஜக்கட்சியின் செயலாளரான லெண்ஸ்லி குண வர்த்தனாவின் மைத்துநரும் இடதுசாரிப் போக்கினரும் ஆகிய W.M.A. வர்ணசூரிய, அவரிடம் பட்டப்பின் படிப்பு ஆசி ரிய மாணவியாய் இருந்த செல்வி. குமாரசுவாமி, இராமநா- தன் கல்லூரியில் வரலாற்று ஆசிரியையாக அமர்ந்த போது வேண்டிக் கொண்ட படி, 'சிங்கள தமிழ் கலாசாரத் தொடர்பு' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை மொழி பெயர்த்து 'ஈழ கேசரி' வார இதழுக்கு அனுப்ப அது அவ்வாரமே பிரசுரமா கிப் பலரது பாரட்டையும் பெற்றதனை இங்கு குறிப்பிடலாம். மாணவர்களின் தேவைகருதி, எந்தவித சன்மானத்தையும் எதிர்பாராமல் அவரால் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப் புக்கள் எண்ணிலடங்காதவை. உதாரணமாக ஒரு மாணவருக் காக ஒரு மெய்யியல் புத்தகத்தை முழுமையாக மொழிபெ யர்க்கத் தொடங்கினார். பின்னர் தேவையில்லை என்று மாண வர் கூறியமையால் அது 50 பக்கங்களுடன் நிறுத்தப்பட்டது. (அம்மொழிபெயர்ப்புப் பக்கங்களை வைத்து ஒரு கட்டுரை கலைமுகம் (ஜூலை-செப்ரெம்பர்-2020) இதழ்-69 ல் என்னால் எழுதப்பட்டு வெளிவந்தது.)

அவர் தேகவியோகமடைந்து மூன்று வருடங்கள் (01.05.2023) பூர்த்தியான நிலையில் அவர் எழுதிய குறிப்புக்களை வைத்து அவர்தம் வரலாற்றினை எழுதி முடிக்கும் முயற்சி யில் ஈடுபட்டிருந்த எனக்கு ஓரிரு வருடங்களில் முடிக்கும் ஒரு பணியாக அது அமைந்து விடவில்லை. இருநூறு பக்கங்க ளைக் கடந்தும் அது தொடர்ந்து செல்கின்றது. எனினும் அவர் பொருட்டு ஒரு நூலையாவது வெளியிடவேண்டும் என்ற சிந்தனை ஆழ்மனத்தில் இருந்து அடிக்கடி மேலெ

ழுந்த வண்ணம் இருந்தது. அவர்தம் வரலாற்றை எழுதுதலோடு அவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்துப் பகுதி பகுதியாகப் பதிப்பிக்கும் முயற்சியை மேற்கொள்ளுவோம் என்ற எண்ணமும் எழுந்தது. அதற்குச் செயல்வடிவம் கொடுத்து, ஆ. சபாரத்தினம் என்னும் ஆழங்காண முடியாத அமைதி மிக்க ஒரு பாற்சமுத்திரத்தினுள் இருந்து ஒரு துளியை பூனை தன் நகக்கண்ணால் எடுத்துத் தெளித்தது போல அவர்காலமாகிய மூன்றாவது வருடநிறைவில் ஜீவநதி வெளியீடாக அவரது முதலாவது கட்டுரைத் தொகுதியாகப் பதிப்பித்தேன். அது வெளிவந்து ஒருவருடம் ஆகிவிட்டது. அதில்

***மல்லிகைக் கட்டுரைகள்:***

- ஸ்பானியக் கவிபற்றி ருஷ்யக் கவிஞன்
- ஸ்பானியக் கவிபற்றி ருஷ்யக் கவிஞன்
- லோ(ர்)க்காவின் துன்பியல் நாடகங்கள்
- மாயகோவ்ஸ்கி
- பொப்பரும் மார்க்ஸீயவாதிகளும்
- டோஸ்ரோயேவ்ஸ்க்கி
- சார்த்தர் இருப்புவாத இலக்கியப் படைப்பாளி
- ஒரு தென் அமெரிக்க இலக்கிய கர்த்தா
- அரசியலும் இலக்கியமும் இலத்தின் அமெரிக்க எழுத்தாளரின் பங்களிப்பு
- சாமுவேல் பெக்கெற்
- நவீன ஜேர்மன் நாடகாசிரியர் பிறெஃக்ற் ஓர் அறிமுகம்
- கஃப்கா ஒரு அறிமுகவுரை
- கார்ள் பொப்பர்
- சீமோன் பூவாவும் சார்த்தரும்
- ஜோர்ஜ் ஓவெல்
- கற்பனை மன்னன்
- மலாமுட் உலகளாவிய எழுத்தாளர்
- கண்ணாரக் காண ஒரு காவலூர்க் கவிஞர்
- கபிரியேல் மா(ர்)சல் பிறஇருப்புவாதிகளுடனான தொடர்பு
- காலஞ்சென்ற 'சுவீடி' எழுத்தாளர் ஐவர்லோ - ஜொஹான்ஸன்
- ஆந்த்ரே மால்றோவின் ஆரம்பகால நாவல்கள்
- கிழக்கும் மேற்கும் சந்திக்கிறது
- சாமுவேல் பெக்கெற்
- இலக்கியம் பழமையைப் புதுமை விழுங்கிவிடுமா ?

**அலைக் கட்டுரைகள்:**

- அலை விமர்சனக் கூட்டம்
- ரொம் ஸ்ரொப்பட்
- எலையாஸ் கனெற்றி
- பண்டிதமணி

**திசைக் கட்டுரைகள்:**

- ஒரு விளக்கிலிருந்து ஏற்றிய பல விளக்குகள்.
- மாசலின் சிந்தனை பற்றி நம்மவரின் புதிய நூல்
- சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்
- மரணம் பற்றிய நினைவுகள்

**காலக் கட்டுரைகள்:**

- ஏ.ஜே. கனகரத்னா ஒரு பார்வை

போன்ற கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றைப் படிக்கும்போது ஒரு பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் என்ற அடையாளப்படுத்தலோடு இருக்கும் அந்த மனிதரின் சிந்தனைத் திறனும் அறிவின் ஆழமும் எம்மை வியக்க வைப்பதை நாம் உணரலாம். நான் 1998-ம் ஆண்டில் அறிஞர் ஆ. சபாரத்தினம் அவர்களைக் கண்டறிந்து பழகிவந்தேன். ஆசிரியர் அல்லது குரு என்ற சொல்லுக்குரிய மிகப்பொருத்தமான ஓர் உதாரணமாக அவர் இருந்தார். அவர் கற்பிப்பவராக மட்டுமன்றி எம்மோடு சேர்ந்து கற்பவராகவும், எம்மிடம் இருந்து கற்பவராகவும் விளங்கினார். தயக்கமின்றி அணுகக்கூடியவராகவும், மனந்திறந்து உரையாடக் கூடியவராகவும், எந்நேரமும் மகிழ்வுடன் அரவணைப்பவராகவும் அவர் காணப்பட்டார். விளம்பரம் இல்லாதவராகவும் புகழை விரும்பாதவராகவும் அறிவுக்கர்வம், தன்முனைப்பு போன்றன இல்லாதவராகவும் அவர் நடமாடினார். 'நம்மையும் ஓர் பொருளாக்கி' தன் மீது விருப்பத்திற்குரியவனாகவும் தன்விருப்பத்திற் குரியவனாகவும் என்னை ஆக்கினார். அவரோடு இருபத்திரண்டு ஆண்டுகள் கழிந்தன. அருகிருந்ததால் நல்லறிவுபெற்றேன் 'பெற்றது யாது நீ ஒன்று என்பால்' அவருக்குக் கைம்மாறு எதனையும் நான் கொடுக்கவில்லை. கொடுத்துக் கல்விக்குக் கைம்மாறு பெறுவதில்லை என்ற அவர்தம் வாழ்வின் விரதத்தை, அவர்தம் புனிதத்தைக் கெடுக்க நான் விரும்பவில்லை. கடைசிவரை அவர் அவராகவே இருந்தார். நான் நானாகவே இருந்தேன். ஆசிரியர் என்பவர் மாணவனின் சுயத்தை நன்கு வளர்ப்பவராக இருக்கவேண்டும். ஆ.ச-ஆசிரியர், அவரது சுயம் என் சுயத்தை நன்கு வளர்த்தது.

வெளிநாட்டில் இருந்து வந்த ஓர் இருதய வைத்திய நிபுணர் ஆ.ச-வில் ஈடுபாடு கொண்டவர். சிறுவயதில் அவரிடம் கற்றவர். அவர் 'சபாரத்தினம் சேர் மாணவர்களுக்கு எழுதிக்கொடுத்து அதில் கிடைக்கும் வருமானத்தில் தான் தன் இறுதிக் கால வாழ்வைக் கொண்டு நடத்தினாரா...? தனக்கு ஒருவர் இவ்வாறு சொன்னார். தனக்குத் தெரிய அவர் அவ்வாறான இயல்புடையவர் இல்லை எனக் கூறினேன் என்றார்'. நீதி வழுவாநெறிமுறையில் தம்மை இட்டுக் கற்றதனால் ஆய பயன் விளங்கித் தம்நலம்பாராது வாழ்ந்து காலமாகிநிற்கும் மனிதர்கள் பற்றி, காலவழுக்களாகத் திகழ்ந்து கல்வியைக் கற்று 'கற்ற கயவர்' களாய்க்; கரந்துறைந்து காலைவாரிக் கற்ற பயன் மறந்து தம்மைக் 'காலமாக்க' முனையும் தன்னலவிரும்பிகள் தம்நிலைநின்று மற்றவர்களை மதிப்பிட்டுத் தம்மியல்பை அவர்கள்மீது ஏற்றிக் கதைபேசும் 'புறத்தெறிதல்' நிகமும் இக்காலம் இந்தவாறுதான் இருக்கும்போலும். சிறுமதி கொண்டோர் தெளிக்கும் சிறுநீர் சுடர்விடும் சூரியனை நூத்த

ழிக்க முடியுமோ ? ஆ.ச- சூரியன்.

இன்று அத்தகைய ஆசான் கண்முன் இல்லை, கருத்திலும் கனவிலும் ஆழ்மனத்திலும் உறைகின்றார். 'இறப்பது என்பது இருப்பவர்களின் இரை ஆவதே' என்கின்றார் சார்த்தர். இதற்குப் பல அர்த்தங்களை நம்புரிதலின் அடிப்படையில் நாம் உருவாக்கலாம். ஆ. சபாரத்தினம் அவர்கள் நமது இரையாக இன்று ஆகிவிட்டார். அந்த இரையை மீட்கும் ஒரு செயற்பாடாகவே அவர்தம் கட்டுரைகளைத் தொகுத்துப் பதிப்பிக்கும் இம்முயற்சியை நான் மேற்கொள்கின்றேன். நன்னூலில் மாணவர் இலக்கணத்தில் நன்மாணாக்கருக்கு உரிய உதாரணத்தில் 'ஆ' (பசு) இடம் பெறுவது. இரைமீட்கும் தன்மையால் அன்றோ. அவருக்கு நன்மாணாக்கனாக இருக்கவே என் மனம் விரும்புகின்றது. அவரை இரைமீட்பதில் மனதிற்கும் வாழ்விற்கும் ஒரு சுவை இருக்கின்றது.

ஆ.ச-வினுடைய எழுத்துக்களை, படைப்புக்களை வைத்து அவரது அறிவின் விசாலத்தை, ஆழத்தை அளவிடமுடியாது. ஏனெனில் அவர்தம் வாழ்வில் தன்னை அளவிடக்கூடிய வெளிப்படுத்தல்களை அவர் செய்யவில்லை என்பதே எனது கருத்தாக இருக்கின்றது. அதற்கான தேவைப்பாடும் விருப்பமும் அவருக்கு இருந்ததில்லை. அதனால் இலைமறைப் 'பழமாக' அவர் இருந்து, தனது அறிவின் வெளிச்சத்தை ஒடுக்கி ஒரு குடத்திற்குள் சொல்லப்போனால் இன்னும் கீழிறக்கி ஒரு செம்புக்குள் வைத்துக்கொண்டார் என்றே சொல்லத்தோன்றுகின்றது. அவர் நினைத்திருந்தால், விரும்பியிருந்தால் அதனை உலகளவில் விரித்துப் பிரகாசிக்கச் செய்திருக்க முடியும். வாலியின் முன் அவனைவிடப் பலவான் வருகின்ற போது அவனது பலம் அதிகரிப்பதைப்போல ஆ.ச-வின் அறிவின் பலம் அவர் முன் வந்திருப்பவரைப் பொறுத்து அதிகரித்துச் செல்லும். வருபவர் தனக்குரியதைப் பெற்றுச்செல்வார். வருபவர்களுக்கு அந்தச் செம்புக்குள் உள்ளதே போதும். வருபவர்களில் பலர் அவரது அறிவைச் செம்புக்குள் வைத்தே தரிசிக்க நினைத்தார்கள். தாம் கருதி வரும் வேலை விரைவில் முடியவேண்டுமே, தமது கற்றல் இலக்கை அவர்கள் அடையவேண்டுமே அதற்காக. எனவே அதனை வெளியில் எடுத்துப் பார்க்க அவர்கள் அஞ்சினார்கள். ஆ.ச-விற்கும் அது புரியும் தன்னை அவர் அடக்கிக் கொள்வார். எனக்கு அதனை வெளியில் இழுத்துவிடுவதுதான் வேலையாக இருந்தது. இதற்கு இது வேண்டும் என்று நான் அவரிடம் கேட்பதில்லை. அதனால் அவர் எனக்கு முன்னர் சௌகரியமாக இருந்து உரையாடத் தொடங்குவார். அது எல்லைகள் அற்று விரியும் தாவிப் பரந்து செல்லும் எவ்வளவு தோயமுடியுமோ அவ்வளவு தோயலாம். ஒரு கட்டத்தில் எமது கொள்ளளவு போதாமையால். நாம் நிரம்பி வழிந்து செவிமடுக்க முடியாது சோர்ந்து போவோம். 'செவிக்குணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' என்பது எமக்கு எட்டாது போலும். இது அவர் தவறன்று எம்தவறு என்றே எனக்கு தோன்றுகின்றது.

அவரால் பல விளக்குகள் இவ்வுலகில் ஏற்றிவைக்கப்பட்டுள்ளன. எனினும் ஏ.ஜே கனகரத்தினா பற்றி அவர் எழுதிய (இத்தொகுதியில் உள்ளது) கட்டுரையில் 'ஏ.ஜே சஞ்சரிக்கும் உயர்ந்த சிகரத்தைச் சிந்தனை ஏணிவழி எட்டக்கூடியவர்கள் எத்தனை பேர் ? அவருடைய ஆயிரக்கணக்கான மாணவரில் அவரது பூரண திறமையை உணர்ந்தவர்கள் எத்தனை பேர் ? தாமரை மலரின் கீழ் சஞ்சரித்த தவளை, பூச்சி புழுக்கள் போல, அவரை ஒரு வெறும் ஆங்கிலப்போதனாசிரியராக, ஆரம்ப மாணவர்களுக்கு உபமொழி கற்பிப்பவராகக் கண்டவர்களே அதிகம். அவருடன் ஆங்கில போதனையில் ஈடுபட்டவர்களுள் எத்தனை பேர் அவரின் இலக்கிய சாமர்த்தியத்தின் விரிவை விளங்கியிருந்தனர்' என்று ஆ.ச-அவர்கள் எழுப்பும் கேள்விகளை நாம் அவர்பொருட்டும் முன்வைக்க வேண்டிய அபத்த நிலையிலேயே இருக்கின்றோம் என்ற



நினைப்பே என்னுள் முகிழ்த்து நிற்கின்றது.

தன்னை மறைத்துத் தன்னிலைப்பட்டுச் செயற்பாடாதிருப்பது அவர்தம் இயல்பாக இருந்தாலும் அவரது ஆளுமையை உலகிற்குக் காட்ட எதுவும் இல்லையே என்பதை நினைக்கும் போதும் புற்கள் எல்லாம் தம்மைப் பெருமரங்களாய்க் காட்டிப் புளகாங்கிதம் அடைந்து இறுமாந்து நிற்பதைப் பார்க்கும் போதும் அவ்வியல்பு அவரது பலவீனமாகவே எனக்குத் தோன்றுகின்றது. எனினும் இக்கட்டுரைத் தொகுதியில் தொகுக்கப்பட்டிருக்கும் கட்டுரைகளைப்பார்க்கும் போது அவரது ஆளுமையின் ஒரு கூறு வாசகர்களுக்கு வெளித்தெரியலாம். இணயத்தளங்களின் உதவியோடு இருக்கும் இக்காலங்களில் இவை சிறிய விடயங்களாகச் சிலருக்குத் தெரிந்தாலும் இணையத்தளங்களின் உதவி இல்லாத அக்காலங்களில் மேலைத்தேயத்து அறிஞர்கள் பற்றிய அவரது வாசிப்பும் அது தொடர்பான சிந்தனையும் அவற்றை எழுத்தில் பதிவு செய்தபாங்கையும் பார்க்கின்றபோது அதனது அளப்பரும் தன்மையை அவர்களாலும் வியக்காமல் இருக்கமுடியாது என்றே நான் கருதுகின்றேன்.

தனது வாழ்நாளில் ஆ.ச-அவர்கள் பல இதழ்களில், பத்திரிகைகளில் தனது கருத்துக்களைக் கட்டுரைகளாகப் பதிவு செய்துள்ளார். அவற்றில் மல்லிகை, அலை, திசை, காலம் போன்ற சஞ்சிகைகளில் வந்த கட்டுரைகளையே இங்கு தேடித்தொகுத்துள்ளேன். மல்லிகையில் காவலூர் இலக்கிய வட்டம் தொடங்கிய பின் அவ்விலக்கிய வட்டத்தில் பேசிய பேச்சுக்களை அவற்றின் குறிப்புகளை வைத்துக் கட்டுரைக

ளாக எழுதினார். முதல் கட்டுரையை மல்லிகைக் காரியால யத்தில் கொண்டு போய் டொமினிக் ஜீவா இல்லாததால் அங்கு நின்ற அச்சுக்கோப்பாளர் சந்திரசேகரம் என்பவரிடம் கொடுத்துவிட்டு ஊர்காவற்றுறைக்குப் போகும் கடைசிப் பஸ் ஸைப் பிடிக்கவேண்டும் எனக்கூறிச் சென்றார். கட்டுரை அங்கு சஞ்சிகை வெளியீட்டில் உதவிய ஏ.ஜே. கனகரத்தினா வின் கைகளுக்குச்சென்றது, அதில் எழுதியவர் பெயரில்லை, கட்டுரையைத் தந்தவரிடம் கேட்க அவர் நடந்ததைச் சொல்ல ஏ.ஜே 'காவல்நகரோன்' எனப் பெயர் இட்டு அதனை வெளி யிட்டார். மல்லிகையில் கட்டுரைகள் இப்பெயரிலேயே கடை சிவரை பிரசுரமாகியது. இந்தவாறு தொடங்கி மல்லிகையில் பதினெட்டுக்கட்டுரைகளை அவர் எழுதினார். அவர் பற்றி ஆய்வுகள் செய்தவர்களும் அதனைக் குறிப்பிட்டிருந்தனர். எனினும் அதனைச் சரிபார்க்க முயன்று நூலகம். கொம்மில் உள்ள மல்லிகை இதழ்களை அதன் ஆரம்ப இதழ்களில் இருந்து பார்வையிட்டேன். அதன் பயனாக மல்லிகையில் அவர் இருபத்தியைந்து கட்டுரைகளை எழுதியிருப்பதைக் கண்டறிந்தேன். இதுபோலவே ஏனைய இதழ்களான அலை, திசை போன்றவற்றையும் பார்வையிட்டேன். அலையிதழில் மூன்று கட்டுரைகளையும் திசையில் நான்கு கட்டுரைகளை யும் காலம் இதழில் ஒரு கட்டுரையையும் அவர் எழுதியிருந் தார். 33 கட்டுரைகள் தேறின. இச்செயற்பாட்டினை மேற் கொண்டிருக்கும் வேளையில் இவ்விடயங்கள் தொடர்பாக அ. யேசுராசாவுடன் கதைத்தபோது அவர் அலை விமர்சனக் கூட்டத்திற்கு (13.12.1980) ஆ. சபாரத்தினம் அவர்கள் தலைமை வகித்து ஆற்றிய உரையின் எழுத்துவடிவம் தன்னி டம் இருப்பதாகக் குறிப்பிட்டு அதனைத் தந்தார். அதனைப் பார்த்தபோது அக்கூட்டத்தில் பங்குபற்றிய பின்னரே அலை இதழில் தனது மூன்று கட்டுரைகளையும் ஆ.ச-அவர்கள் எழுதியுள்ளார் என்பது புரிந்தது. அவ்வுரையின் எழுத்துவடி வத்தையும் இத்தொகுப்பில் சேர்த்து 34 நான்கு கட்டுரைக ளாக இத்தொகுப்பை அமைத்துள்ளேன். வேறு இதழ்களிலும் பத்திரிகைகளிலும் பலகட்டுரைகள் இன்னும் இருப்பதனால் ஒரு எல்லைப்படுத்தலை மேற்கொண்டு முதல்தொகுதியாக இது வெளியிடப்படுகின்றது. மிகுதி தொடர்ந்துவரும்.

இவற்றைத் தொகுக்கும்போது சில நடைமுறைகளைப் பின் பற்றியிருந்தேன். அவற்றை மல்லிகை, அலை, திசை, காலம் என்ற பிரிப்பில் பகுத்துக் கட்டுரைகளில் குறிப்பிடப்படும் அறிஞர்களின் படங்களையும் இணைத்துக் கட்டுரையில் உள்ள விடயங்களுக்குரிய ஆங்கிலப் பதங்களையும் அவை தொடர்பான விபரங்களையும் பதிப்பாசிரியர் குறிப்புக்கள் என்ற பெயரில் தந்துள்ளேன். குறிப்புக்களைப் பொதுவாக இடாமல் பதிப்பாசிரியர் குறிப்புக்கள் எனக் குறிப்பிட்டது இக் குறிப்புக்களுக்கும் ஆ. ச-விற்கும் எத்தொடர்பும் இல்லை என்பதை வெளிப்படுத்தவே. அவ்வாறு வெளிப்படுத்துவதன் நோக்கம் இதில் ஏற்படும் தவறுகள் முழுமையாக என்னையே சாரும் என்பதை வாசகர்கள் விளங்கிக்கொள்வதற்கேயாம். அவர் இருந்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது, குறிப்புக் கள் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். என் அறிவுக்கு எட் டிய வகையில் இணையத்தளங்களைப் பயன்படுத்தி இவ்வே லையைச் செய்திருக்கின்றேன். என்னால் இடப்படும் இக்கு றிப்புக்களும் அவரது ஆளுமையைக்காட்டும் சிறுவேலை யாக முன்னிற்கும் என நம்புகின்றேன்.

தனது வாழ்க்கையினூடாகத் தம் உள்ளத்தில் பல துறைக ளின் மிகச்சிறந்த அம்சங்களை ஒன்றிணைத்து அவற்றின் வழியிலேயே தனது வாழ்வினை இட்டுச் செயற்கரிய செய் கின்ற பெரியவராக அவர் எம் முன்னே விளங்கினார். எமது பிள்ளைகளுக்குக் காட்டுவதற்கு நல்ல முன்மாதிரிகள் இல்லை எனப் பலரும் ஏக்கத்தோடு கூறிநிற்கும் இக்காலத் தில் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக, முன்மாதிரியாக எம்மி டையே இருந்த ஒரு நல்ல மனிதர் அவர்.

அவரைப் பற்றிய ஆய்வுகளை மாணவர்கள் மேற்கொண்ட போதிலும் அவர் பற்றிய தகவல்களை, மூளை அடுக்குகளில் அவர் வைத்திருந்த எண்ணற்ற தரவுகளை வெளிப்படுத்திவி டமுடியாது. அவை தொட்டனைத்தூறும் மணற்கேணிபோல ஊறிக்கொண்டிருப்பவை. 'கடமையைச் செய் பலனை எதிர் பாராதே' என்பதைக் கற்றறிந்தவர்கள் நாங்கள். அவரோ அதற்குச் செயல்வடிவம்கொடுத்தவர். தான் செய்த செயல்க ளுக்காக அவர் மாணவர்களிடம் எதையுமே எதிர்பார்த்து நிற் கவில்லை. தன்னை நாடிவரும் மாணவர்களிடத்தில் சினந்தோ, அவர்கள் கேட்பதற்கு மறுப்புச்சொல்லியோ, தன் னைப் பயன்படுத்துகிறார்கள் என்று புலம்பியதையோ நான் அவரோடு பழகிய 22 வருடங்களில் கேட்டதுமில்லைக் கண்ட துமில்லை. மாணவர்கள் கேட்பதற்கு மேலாகவே கொடுத்த பெருவிருட்சம் அவர். கடைசிவரை கொடுத்துக் கொண்டேயி ருந்தார். அவரது ஆனந்தம் அதுவே. நலிந்து கிடக்கும் இக்க லங்களை வெறுமையாக்கிப் புத்துயிரால் அதை நிரப்பினார். தனது கரங்களின் அழிவற்ற தொடுகையால் எமது சின்ன இத யங்களை பேரானந்தத்தில் திளைக்கவைத்தார். எமது சின் னஞ்சிறிய கைகளில் தமது அருங்கொடைகளை தந்து எம் இதயத்தை தனது எல்லையற்ற வலைப்பின்னலில் கைதி யாக்கிவிட்டார்.

***பரந்து படர்ந்த***
***என் பாடல் இறக்கையின் முனைகொண்டு***
***என்றுமே அடைய விழைய முடியாத***
***உன் பாதங்களைத் தொடுகிறேன்.***

- தாகூர்

பண்புடையோர் தம்மை அறிவுடையோர் ஆக்குங்கள்.



navaraj@thaiveedu.com

***தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.***
***விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

***E-mail: info@thaiveedu.com  Fax: 1-416-849-0594  Tel: 1-416-857-6406***



# பீ. மரியதாஸ்:
## அட்டனில் எழுந்த மார்க்ஸியக் குரல்

- மு. நித்தியானந்தன்

அமரர் இர. சிவலிங்கம் அவர்கள் அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றிய காலத்தில், அக்கல்லூரி மலையக எழுச்சியின் சங்கநாதமாக ஒலித்தது. இர. சிவலிங்கம், திருச்செந்தூரன், பி.ஏ. செபஸ்டியான் போன்ற அர்ப்பணிப்பு மிக்க மலையகக் கல்விமான்களின்



அரவணைப்பில், எழுச்சிகொண்ட மாணவ அணியின் சிந்தனைப் பட்டறையாக ஹைலன்ஸ் கல்லூரி கோலங்கொண்டது. மலையகத்தின் கல்லூரிகளில் தன்னிகரற்ற தலைமை இடத்தை அது தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

மலையகத்தின் தொழிற்சங்க இயக்கத்தில் இடதுசாரிச் சிந்தனையின் தோற்றத்திற்கு நீண்ட வரலாறுண்டு. ஐம்பது, அறுபதுகளில் மலையகத்தில் முகிழ்த்த படித்த இளைஞர்களின் சிந்தனையில் பெரியாரின் தாக்கமும், திராவிடக் கருத்தியலின் செல்வாக்கும், திராவிடத் தலைவர்களின் பாதிப்பும், பாரதிதாசனின் ஆளுமையும் ஆழப் பதிந்திருந்தன. மலையகத்தின் முக்கிய நகர்களில் திராவிட ஏடுகள் குவிந்தன. விடுதலை, குடியரசு, திராவிட நாடு ஆகிய ஏடுகள் எங்கும் கிடைத்தன. இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், சி.பி. சிற்றரசு, ரா.சு. தங்கப்பழம், கண்ணதாசன் போன்றோரை மலையகத்திற்கு வரவழைத்து அவர்களின் உரைகளை ஆர்வத்துடன் கேட்டனர். தி.மு.க. பாணியிலான மேடைப் பேச்சுகளுக்கு மவுசிருந்தது. பத்திரிகைகள், எழுத்து என்பன திராவிடப்பாணியிலமைந்தன. கலைஞர் கருணாநிதி, அண்ணாதுரை ஆகியோரின் நாடகங்கள் மலையகத்தில் அடிக்கடி மேடையேறின. மலையகத்தில் ஐம்பதுகளில் படித்த இளைஞர்களிடையே இந்தப் போக்கினை அவதானிக்க முடியும். பல்வேறு மலையக நகர்களிலும் தோட்டங்களிலும் வாழ்ந்த இளைஞர்கள் இந்த இயக்கப்போக்கில் இணைந்தனர்.

அறுபதுகளில் இர. சிவலிங்கம் அவர்களின் 'மலை நாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம்' இளைஞர் மத்தியில் பெரும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அமைப்பாக மலையக நகர்களில் அவர்கள் இயங்கினர். இர. சிவலிங்கம் அவர்களின் வழிகாட்டலில் ஹைலன்ஸ் கல்லூரியில் முகிழ்த்த அறிவு ஜீவிகளில் பீ. மரியதாஸ் தனியிடம் வகிக்கிறார். அறுபதுகளில் இலங்கைப் பல்கலைக்கழகம் புகுந்த பட்டதாரி மாணவர்கள் மார்க்சிய சிந்தனை கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். மா ஓ-வின் சிந்தனைகளின் வழி நின்றனர். நா. சண்முகதாசனின் அரசியல் தலைமையை ஏற்றவர்களாகத் தம்மை அடையாளப்படுத்தினர். இந்த இடதுசாரி அரசியல் சிந்தனயில் பூத்த செம்மலராகத் திகழ்ந்தவர் மரியதாஸ்.

இர. சிவலிங்கம், பாரதி ராமசாமி அவர்களின் முயற்சியில், ஏ. அசீஸ் பாராளுமன்றத்தில் நியமன அங்கத்தவராக இருந்தபோது, முதல் தடவையாக ஆசிரிய நியமனம் பெற்ற பதினொரு மலையகப் பட்டதாரிகளில் மரியதாஸும் ஒருவர். மரியதாஸ் மன்னார், விடத்தல்தீவுக்கு ஆசிரியராக முதல் நியம

னம் பெற்றுச் சென்றபோது, அது அவருக்குக் கஷ்டப் பிரதேசமாகத் தெரியவில்லை. அன்றிலிருந்து மீண்டும் மலையகத்திற்கு மாற்றம் பெற்று, ஒரு கால்நூற்றாண்டுக் காலம் தன்னை ஆசிரியப் பணிக்கு அர்ப்பணித்திருக்கிறார். பாட சூசிகையைப் பார்த்து, வகுப்பறைக்குச் சென்று, பாடம் நடத்தி, மாதச் சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியராகத் தன்னை ஒருபோதும் அவர் கருதியதில்லை. ஆசிரியத் தொழில் அவருக்கு ஊழியம்; அர்ப்பணம்; சமூகப்பணி; நிறைவுதரும் சமூ




கச் செயற்பாடு; காத்திரமான மாணவ சமூகத்தை உருவாக்கும் வேள்வி. நல்லாசிரியனாக அவரைக் கௌரவிக்கும் ஆயிரக்கணக்கான மாணவர் அணி அவரின் பின்னால் நிற்கிறது.

மார்க்சியராக ஆரம்பம் கண்ட அவரது அரசியல் வாழ்வு இடையறாது தொடர்ந்தது. மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலையக இளைஞர் முன்னணி, மலையக எழுத்தாளர் மன்றம், அட்டன் மக்கள் இலக்கிய வட்டம், மக்கள் நூலகம், மலையக மக்கள் இயக்கம், ராகலை கல்வி, கலை இலக்கிய வட்டம் ஆகிய அமைப்புகளில் அவர் இயங்கியிருக்கிறார். பரந்த அரசியல், இலக்கிய வட்டத்தைக் கொண்டவர் அவர். அரசியல் எழுச்சி, வீழ்ச்சிகள் எவ்வாறு அமைந்தபோதும் நிதானமான இடதுசாரி அரசியல் போக்கை அவர் தொடர்ந்திருக்கிறார். வரலாற்றைப் புரட்டிப்போட்ட அரசியல் மாற்றங்களை அவர் வாழ்நாளில் பார்த்திருக்கிறார். திசை மாறிப்போன அரசியல் இலக்குகளை அவர் அவதானித்திருக்கிறார். வர்க்க அரசியல், தேசியம் என்ற கருத்தாடல்களுக்கூடாக அவர் பயணித்திருக்கிறார். பரந்த வாழ்வனுபவம் அவரைப் புடம் போட்டிருக்கிறது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் கம்கருவ என்ற பத்திரிகையில் பணியாற்றிய ஆனந்த குணதிலக்கவுடன் இணைந்து மா ஓ வாத கம்யூனிசக் கட்சி வேலைகளில் உழைத்திருக்கிறார். பின்னர் காமினி யாப்பாவின் தலைமையில் இயங்கிய கீழைக்காற்று இயக்கத்திலும் செயற்பட்டு, மலையக இளைஞர் மத்தியில் அரசியல் வகுப்புகளை மேற்கொண்டிருக்கிறார். தோட்டத் தொழிலாளர்கள் ரூபா.17.50 பஞ்சப்படி கேட்டு நடத்திய போராட்டத்திலும் பங்கெடுத்திருக்கிறார். 1977-ல் நடைபெற்ற வன்செயலின்போது பாதிப்புற்ற மக்களுக்கு நாவலப்பிட்டி, கம்பளை ஆகிய இடங்களில் நிவாரணம் வழங்கும் பணியிலும் மரியதாஸ் தன்னை ஈடுபடுத்தியுள்ளார்.

இந்தப் போராட்ட அனுபவங்களுக்கூடாக வளர்ந்த மரியதாஸ், மார்க்ஸிய அரசியல் பரப்புரை செய்வதையும் தனது மனதிற்குகந்த சேவையாகவே செய்துவந்திருக்கிறார்.

மரியதாஸ் மலையகத்தின் இடதுசாரிப் பேச்சாளர்களில் முதன்மை இடத்தை வகிப்பவர். சொல்லாட்சிக்கலை(Rhetoric)யில் மலையகத்தின் கல்விமான் இர. சிவலிங்கம் அவர்களுக்குத் தலைமை இடம் உள்ளது. ‘சொல்லின் செல்வர்’ என்றே அவர் அழைக்கப்பட்டார்.

‘சொல்லாட்சிக்கலை’, ‘மேடைச் சொற்பொழிவுத்தன்மை’ என்னும்போது, அதன் வழிமுறைகளை, யுக்திகளை வெற்றிகரமாகப் பிரயோகிக்கும்போது ஒரு சிறந்த பேச்சு உருவாகிறது; ஒரு தேர்ந்த சொற்பொழிவாளர் உருவாகிறார். இந்தச் சொல்லாட்சிக்கலையின் வழிமுறைகளை, அறிவுப்போதனைகள் மூலம் கையகப்படுத்தியதாக இருக்கலாம். ஆனால், அநேகமாக பேச்சாளரே கருதியிராதவகையில் சொல்லாட்சித்திறன் என்பது, புலப்படாத தூண்டுதல் நொய்மை மட்டத்திலிருந்தும் (subliminal level) எழுகிறது. சொல்லாட்சிக் கலை ஒரு விவாதத்தின் மீது தன் முத்திரையைப் பதிக்கிறது; பொருத்தமான விவகாரங்களை அது தெரிவு செய்து கொள்கிறது; மக்களிடம் அதனைக் கொண்டு சேர்க்கும் வகையில் அந்தக்குறிப்புகளை ஒழுங்கு செய்து கொள்கிறது. பேசும் பாணியில், அதன் சொற்றொடர் அமைப்பில் அது செல்வாக்குச் செலுத்துகிறது; மொழியியல் கூறுகளை ஒழுங்குபடுத்தி, அவற்றை அர்த்தமுள்ளதாக்கவும், ஒரு இலக்கை நோக்கியதாயும் உரையாற்றுவதற்கு வழிகோலுகிறது’ என்று பிரெடெரிக், ரெட்பீல்ட் ஆகிய அறிஞர்கள் சொல்லாட்சிக் கலை பற்றி வரையறை செய்துள்ளனர். மரியதாஸ் சிறந்த மேடைப் பிரசாரகராகத் திகழ்ந்திருக்கிறார். கொள்கைப் பிடிப்பும், மக்களை அரசியல்மயப்படுத்தும் உத்வேகமும், சிந்தனைத் தெளிவும், பேசும் பொருள்சார்ந்த தவல்களைச் சீராக ஒழுங்குபடுத்தும்

கூர்மையும் அவரது மேடைப் பேச்சுக்கு பலம் சேர்த்திருக்கின்றன.

1964-ல் ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு எதிராக அட்டனில் மரியதாஸ் ஆற்றிய உரையும், 1977-ல் இடம்பெற்ற வன் செயல்களின் பின்னர், இந்த வன்முறைக்கெதிரான அணியினரை ஒழுங்குபடுத்தி, தோழர் ஜெயரட்ன மல்லியாகொட, முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியாக் கிளை அமைப்பாளர் ஜினதாச ஆகியோரோடு கண்டி போகம்பரைத் திடலில் ஆற்றிய எழுச்சியுரையும், 1987-ல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் குறித்த கூட்டத்தில் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான், வழக்கறிஞர் கருணாகரன் ஆகியோரோடு ஆற்றிய விமர்சன உரையும் வரலாற்றுப் பதிவுக்குரியவை.

பல்கலைக்கழகக் காலத்திலேயே அவர் எழுத ஆரம்பித்துவிட்டாரெனினும், ஆசிரியப்பணி அவரது நேரத்தை விழுங்கிய நிலையில், அவரின் எழுத்துப்பணி தொடரவில்லை. ஆயினும், அண்மைக் காலத்தில் அவரது எழுத்தாக்கம் மிகுந்த உற்சாகத்துடன் தொடர்வது மகிழ்ச்சி தருகிறது. மலையக இலக்கியத்திற்கு அவரது மீள்வரவு புத்துணர்ச்சி தருவது. செழுமையான மார்க்சிய ஞானம் கொண்ட மரியதாஸின் எழுத்துகள் மலையக எழுத்தில் தனி முத்திரை பதிப்பவை. தன்னை முன்னிலைப்படுத்தாத மாண்பு அவருடையது. தொடர்ந்த, அயராத, ஆழ்ந்த அவரது வாசிப்பு அவரின் எழுத்திற்குக் கனதி சேர்க்கிறது.

மலையகம் அவரது சுவாசம். அந்த மக்களின் வாழ்வும் வளமும் அவரது இரத்த நாளத்தோடு உறைந்தது. அந்த மண்ணின் சோக இராகத்தை அவர் நெஞ்சில் சுமந்து திரிபவர். மலை முகடுகளில் நம்மவர் படும் அவலம் அவர் நெஞ்சக்கணப்பறையில் என்றும் கனன்று கொண்டிருப்பது. முதலாளித்துவம் எங்கள் ஈரலைப் பிடுங்கி வைத்தாலும் திருப்தி கொள்வதில்லை என்பதை அவர் கண்கூடாகக் கண்டவர். முதலாளித்துவ சுரண்டலும் இன வன்முறையும் நம் சமூகத்தைச் சூறையாடி வருவதை உணர்பவர். இந்த அநியாயத்தை எதிர்க்கும் சின்ன முனகலையும் அவரால் கேட்க முடிகிறது. அற்ப ஜீவிகளின் சந்தை இரைச்சலிலிருந்து வெகுதொலைவில் நிற்பவர்.

'மலையகம்: இங்கிருந்து எங்கே ?' என்ற மரியதாஸின் நூலின் கட்டுரைகள் அனைத்திலும் அவரது பரந்த வாசிப்பும், நுணுகிய பார்வையும், சமகால அநுபவத்துடனான கிரகிப்பும் துலாம்பரமாகத் தெரிகிறது. வரலாற்று ஆவணங்கள், ஆராய்ச்சி நூல்கள், கள ஆய்வு முடிவுகள், அரசாங்க அறிக்கைகள், அனைத்துலக நாடுகளின் அமைப்புகளின் ஆய்வறிக்கைகள் என்று தேடி வாசித்து, சான்றுகளின் துணையுடன் கட்டுரைகளை வரையும் பாங்கு பாராட்டிற்குரியது. மலையக சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் மரியதாஸின் பார்வை குவிந்திருக்கிறது. ஒன்றோடு ஒன்றை இணைத்தும் பிரித்தும் தொகுத்தும் அசலான எழுத்தை அவர் தந்திருக்கிறார். அனைத்தையும் வரலாற்றுப் பின்புலத்தில் அணுகும் அவரின் ஆய்வு நோக்கு அவரது கட்டுரைகளுக்கு ஆழத்தைச் சேர்க்கிறது.

இருநூற்றாண்டுகால மலையக மக்களின் வாழ்வு அவரது சிந்தனைத் தளத்தில் எதிரொலித்திருக்கிறது. தனது சரித்திரகதியின் இடத்தை மரியதாஸ் உணர்கிறார். நடைமுறை அரசியலையும் மலையகத்தின் புதிய அரசியல் தேவைகளையும் எழுச்சிகளையும் தனது மார்க்ஸிய தரிசனத்தில் பரிசீலித்து மரியதாஸ் தந்திருக்கும் இந்த நூல் நமக்குக் கிடைத்திருக்கும் சிறந்த அரசியல், சமூகக் கையேடு.

மரியதாஸ் வாசிப்பில் மட்டுமே கருத்தூன்றி நின்ற காலத்தில், 'நீங்கள் எழுதவேண்டும்' என்று அவருக்கு உற்சாகம் ஊட்டி, இக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்து, அவற்றைத் தொகுத்து நூலாக்கும் பணியில் முழுமூச்சுடன் உழைத்த எச்.எச். விக்ரமசிங்கவிற்கு நன்றி கூறவேண்டும்.

'இங்கிருந்து எங்கே ?' என்று மரியதாஸ் எழுப்பும் கேள்வி நம் சமூகத்தின் கூட்டுக்குரல். நிகழ்கால அவலத்திலிருந்து நம் சமூகம் எழுந்து நிமிர்ந்து, ஒளியை நோக்கி நகரும் எழுச்சியின் எக்காளம் அது.



nithiyananthan.m@thaiveedu.com






# வி. மைக்கல் கொலினின்
# 'பரசுராம பூமி'
## ஓர் அதிர்ச்சி வைத்தியம்

– அருட் பணி. பெனி யே.ச.

**வி.** மைக்கல் கொலின் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் நன்கு அறியப்பட்ட ஓர் எழுத்தாளர். கிழக்கு மாகாணத்தில் முத்திரை பதித்த ஓர் படைப்பாளி, கவிஞர், நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், வெளியீட்டாளர், பத்திரிகையாளர், சிற்றிதழ் ஆசிரியர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். அவரது கவிதைத் தொகுதிகளின் வடிவமைப்பைப் பார்த்து வியந்து போயிருக்கிறேன். மட்டக்களப்பிற்குப் போகும் போதெல்லாம் அவரைச் சந்திக்க வேண்டுமென எண்ணியிருந்தேன். அந்த எண்ணம் கடந்த மார்ச் மாதம் 9-ம் திகதி மட்டக்களப்பில் சார்ள்ஸ் மண்டபத்தில் கைகூடியது.

புலம் பெயர்ந்த எழுத்தாளர் கலையுலகன் எஸ். லோகநாதன் எழுதிய 'மனநலம்' என்ற உளவியல் நூலுக்கு ஆய்வுரை நிகழ்த்துவதற்காகச் சென்றிருந்தேன். நிகழ்ச்சி நிரலில், 'உள நலம் ஒரு சமூகப் பார்வை' திரு. வி. மைக்கல் கொலின் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. பக்கத்தில் அமர்ந்திருந்த மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகு தயானந்தனிடம், 'மைக்கல் கொலின் வந்திருக்கிறாரா?' எனப் பேச்சுக் கொடுத்தேன். 'இவர் தான் மைக்கல் கொலின்' என அவர் பக்கத்தில் அமர்ந்திருந்தவரைச் சுட்டிக்காட்டினார். இப்படித்தான் எங்கள் சந்திப்பு ஆரம்பமாகியது.

அடுத்த நாள் மைக்கல் கொலின் அவர் எழுதிய சில புத்தகங்களுடன் வந்தார். அதில், 'பரசுராமபூமி' என்ற சிறுகதைத் தொகுதி என் கவனத்தை ஈர்த்தது. அதற்கொரு விமர்சனக் குறிப்பு எழுத வேண்டும் என எண்ணினேன். அதுதான் இந்த விமர்சனக் குறிப்பு.

இந்தப் புத்தகத்தை வாசிக்கும் போது சுமார் 40 வருடங்களுக்கு முன்பு பொகவந்தலாவ ஹோலிறோசரி பள்ளிக்கூடத்தில் க.பொ.த. சாதாரணதரம் பயின்ற காலத்தில் கற்ற கம்பராமாயணமும், மகாபாரதமும் அதற்கு பின்னால் நிகழ்ந்த வாசிப்பு அனுபவங்களும் நினைவிற்கு வந்தன.

கம்பராமாயணத்தில் கம்பனின் கவித்துவத்தைக் கற்பதற்காகச் சில படலங்களைப் பாடமாக வைத்திருக்கலாம். ஆனால் மகாபாரதம் ஏன்? அது ஒரு மொழிபெயர்ப்பு நூல் தானே! தமிழ் படிக்கும் மாணவர்கள் புராண இதிகாசங்களைக் கற்று, நீதி நெறிகளைப் பின்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அவற்றைப் பாடநூலாக வைத்திருக்கலாம். அந்தப் புராண இதிகாசங்களும் ஏனைய புனித நூல்களும் அவை சொல்லும் நீதி நெறிகளையும்தான் கொலின் பரசுராம பூமியில் கேள்விக்குட்படுத்துகின்றார்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலன், மாதவி என உயர்தரம் பயில்கையில் சிலாகித்துக் கொண்டிருந்தபோது தான் சிந்தாமணி வாரமஞ்சரியில், 'சிந்தாமணி ஆரம்' என்ற பகுதியில் கவிஞர் செ. குணரெத்தினம் எழுதிய ஒரு கட்டுரை சற்றே திகைக்க வைத்தது அதன் தலைப்பு இதுதான்: 'கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிந்து செல்வதற்குக் காரணம், கண்ணகியிடம் காணப்பட்ட தாம்பத்திய 'வீக்னஸ்சே.'

அக்கட்டுரையை படித்தவுடன் ஓஹோ பழம்பெரும் இலக்கியங்களைப் புரட்டிப் பார்க்கலாம். மீள் வாசிப்புச் செய்யலாம். புதிய விளக்கங்கள் தரலாம் என்ற புரிதல் ஏற்பட்டது. அக்கட்டுரை அடுத்தடுத்து வந்த ஞாயிறுகளில் ஒரு விவாதப் பொருளாக மாற, கவிப்பேரரசு வைரமுத்துவின் 'வைகறை மேகங்கள்' கவிதைத் தொகுப்பிலிருந்து, 'கறுப்பு நிலா' என்ற கவிதையைப் பிரசுரித்திருந்தார்கள். எதுகை மோனையுடன் சொற்சித்திரங்களாகப் புகுந்து விளையாடும் அக்கவிதை இன்றும் ஒப்புவிக்கும் அளவிற்கு எனக்கு மனப்பாடம் ஆகியது. அதில் வரும்...

***'கட்டில் சுகங்காண காளையவன் சென்றபோது***
***தட்டிக் கேட்டிருந்தால் தவறியிருப்பானா***
***பெட்டிப் பாம்பாக பேசாதிருந்ததுதான்***
***கட்டழகே நீ செய்த கடுங்குற்றம், முதற்குற்றம்***
***பல்லுடைந்து போனதிற்கும் பதறித் தவிப்பதற்கும்***
***எள்ளுருண்டை காரணமா...?'***

இந்தக் கவிதை, இதிகாசங்களையும் புராணங்களையும் இலக்கியங்களையும் மீள் பரிசீலனை செய்யும் சிறுபொறியைத் தூண்டிவிட்டது. வைரமுத்துவின் திருத்தியெழுதிய தீர்ப்புகளைப் படித்த போது இயேசுவின் முன்னால் தோன்றும் ஒரு விலைமகள், 'பாவிகளை மன்னிப்பதாய் பரிந்துரை செய்தவன் நீதானே!' என்று கூறியவுடன் கர்த்தர் மறுபடியும் உயிர்க்காமல் மரித்துப் போனான் என்ற வரிகள் விவிலியத்தையும் மூன்றாவது கண் கொண்டு வாசிக்கத் தூண்டியது.

இதிகாசப் புராணங்களை மட்டுமல்ல, வரலாற்றையும் மீள் வாசிப்புச் செய்து அதை மீட்டுருவாக்கம் செய்யவேண்டிய அவசியத்தை அமரர். இரா. சிவலிங்கம் ஞாபகார்த்த நினைவுப் பேருரைகளின் தொகுப்பில் (2017) பேராசிரியர் சி. மௌனகுரு குறிப்பிட்டுள்ளார். 'தமிழர் வரலாறும் பண்பாடும் என்ற கட்டுரையில் ஜெர்மனிய நாட்டு நாடகாசிரியரான பெட்டோல் பிரக்ட் எழுதிய கவிதையைத் தழுவிப் பேராசிரியர் இப்படி எழுதுகிறார்.

***தஞ்சை இராஜராஜேஸ்வரப்***
***பெரும் கோயிலைக் கட்டியது யார்?***
***வரலாற்றுப் புத்தகங்களில் உள்ளன***
***ராஜ ராஜ சோழன் பெயர்***
***அவனா சுமந்து வந்தான்***
***கட்டட வேலைகளுக்கான***
***கற்களை?***

(மலையகம் பல்பக்கப் பார்வை, பக்கம்: 87)

வாசிப்பு உலகில் சஞ்சரிக்கும் ஒருவர் தான் வாசிப்பவற்றை விசாரணைக்குட்படுத்தும் போதுதான் கேள்விகளும் அதற்கான விடைகளும் புதிய புரிதல்களும் புதிய பார்வைகளும் கிட்டுகின்றன. வெகுஜன வாசகர் என்ற நிலையைக் கடந்து தீவிர வாசகர் தேடிப்பிடித்துப் படிப்பவர் என எழுத்தாளர் பரிணமிக்கும் போதுதான் இலக்கியத்தை மீள்கட்டமைத்தல் என்ற முயற்சி தோற்றம் பெறுகின்றது.

மைக்கல் கொலினின் பரசுராமபூமி அப்படி இதிகாசம், புராணம் மற்றும் புனித நூல்களின் சில சம்பவங்களை அவற்றில் சரியான நேரத்தில் முறையான கேள்விகளைத் தொகுத்து வாசகரை வியப்புக்குள்ளாக்கும் இலக்கிய முயற்சியாக இச் சிறுகதைத் தொகுப்பு அமைகின்றது.

இத்தொகுப்பில் மொத்தம் ஒன்பது கதைகள் இடம் பெறுகின்றன. இராமாயணத்திலிருந்து மூன்று கதைகளும் (வரம், இராவணாபுரி, ஓர்மம்), மகாபாரதத்திலிருந்து (குருஷேத்திரபுரம், பரசுராமபூமி) என்ற கதைகளும், பைபிளிலிருந்து (புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள், யாருமிங்கே தீர்ப்பிடலாம், எல்லாம் நிறைவேற்று) என்ற கதைகளும், ஜாதகக் கதைகளிலிருந்து (ஞானம்) என்ற சிறுகதையையும் படைத்துள்ளார்.

இந்நூலிற்கு கவிஞர் அ.ச. பாய்வா, பேராசிரியர் சி. மௌனகுரு, பேராசிரியர், அமரர் செ. யோகராசா, எழுத்தாளர் ஜிஃப்ரி ஹாசன் ஆகியோர் பதிப்புரை, நயவுரை என வழங்கி நூலை அணி செய்கிறார்கள்.

தொன்மங்களைத் தொட்டு எழுதும் கொலினின் மொழிநடை வாசகரைக் கட்டிப்போடுகின்றது. அவர் ஒரு கவிஞர். கதை சொல்லும் நேர்த்தியில் கவித்துவம் மிளிர்கின்றது. ஒவ்வொரு கதைகளின் முடிவிலும் அவர் தொடுக்கும் கடைசி வரிகள் வாசகரின் நெற்றிப் பொட்டில் சம்மட்டியால் அடிப்பதைப் போல் அமைகின்றது.

இத்தொகுப்பைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் தொன்மக் கதைகள் குறித்த ஒரு சில புரிதலும், சமகால உலக நடப்புகளும், குறிப்பாகத் தமிழ் மக்களின் அரசியலும் ஓரளவிற்கேனும் புரிந்திருந்தால்தான் நூலாசிரியர் என்ன சொல்ல வருகிறார் என்பதை விளங்கிக்கொள்ள இயலும். ஒரு குருஷேத்திரத்தை, ஒரு ராவணாபுரியை, ஒரு பரசுராம பூமியைக் கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இணைத்துப் பார்க்கும் போதுதான் கொலினின் எழுத்துத் தத்துவம் புரிகிறது. சான்றாகப் பின்வரும் கதைகளைப் பார்ப்போம்.

### புதிய குருஷேத்திரம்:

குருஷேத்திரத்தைத் தனது பாணியில் விபரித்துச் சொல்லும் கொலின் போரின் தொடர்ச்சியை இப்படி எழுதுகின்றார்.

'உலக வல்லரசு முதல், தம் நலன்களை மட்டுமே முக்கியத்துவப்படுத்தும் சிறிய நாடுகள் வரை கரங்களை இணைத்து வானவீதியெங்கும் ஏவுகணைச் சோதனை நடத்திக்கொண்டி




ருந்தன. புதிய நவீன ஆயுதங்களின் பரிசோதனைக் களமாக, காலாவதியான ஆயுதங்களின் விற்பனைத்தளமாக வெள்ளோட்டப் பவனி, முல்லை மண்ணின் மூலை முடுக்கெல்லாம் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது.'

இந்த வரிகளை வாசிக்கும் போது 2009 முள்ளிவாய்க்கால் மனத்திரையில் விரிந்து அடுத்தவரிகளை வாசிக்க முடியாமல் கண்கள் அணைபோடுகின்றன.

அர்ச்சுனனின் பாசுபதாஸ்த்திரம் திசைகளை மறந்து காலங்களைக் கடந்து, தீப்பொறிகளைக் கக்கியப்படி வன்னி மண்ணின் மீது விழுந்து வெடித்தது.

‘ஆக்கியதும் நானே! அழித்ததும் நானே! என்ற புன்னகையுடன் தனது விஸ்வரூபத்தைக் காட்டி நின்ற கண்ணன் மீது எங்கிருந்தோ பறந்துவந்த கல்லொன்று தாக்க, அவனது நெற்றிப் பொட்டிலிருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது.’ என்று முத்தாய்ப்பு வைத்து நிறைவு செய்கின்றார்.

மேற்குறிப்பிட்ட கருத்தோட்டத்தை வாசித்து, யோசித்துப் பார்க்கையில் போராளிகளை உருவாக்கியதும் நானே அழிப்பதும் நானே என இறுமாப்புடன் கொக்கரிக்கும் பாரதம், நம் மனக்கண்ணில் தெரிகிறது. இங்கு கல்லெறிந்தவர் யார்? பாதிக்கப்பட்ட மக்களா? தப்பிப் பிழைத்தவர்களா? கண்ணனின் கபட நாடகத்தைக் கண்டுணர்ந்த போராளிகளா? அல்லது போதும் உன் வேலை. இனிப் புறப்பட்டுவிடு என விரட்டும் இராணுவமா? எனச் சிந்தனையைக் கிளறிவிட்டு வாசகரையும் ஒரு கூட்டுப் படைப்பாளியாக்குகின்றார் மைக்கல் கொலின்.

## பரசுராமபூமி:

பரசுராம பூமி சிறுகதையிலும் முள்ளிவாய்க்கால் சம்பவத்தை நெஞ்சுருகச் சித்தரிக்கிறார் கொலின். ‘ஓலம்... ஓலம்... எங்கும் ஓலம் என ஒப்பாரிகளின் தேசமாக மாறிப்போகிறது வன்னி மண். ஆனால் மோன நிலையில் துயில் கொண்டிருக்கும் பரசுராமனின் செவிகளில் அவ்வோலங்கள் ஒலிக்க அவரும் அவரது புரவியும் அசையத் தொடங்குகின்றன. யுத்த களத்தில் அவர் பங்கேற்கின்றார். கேள்விகள் அவருக்குள் வேள்வி செய்கின்றன.

இது யாருடைய யுத்தம்?
எந்த இரண்டு அரசுகள் தமக்குள் மோதுகின்றன?
இதுவும் ஒரு குருஷேத்திரப் போரின் நிகழ்ச்சியா?
எனது தேசமே முன்னின்று போர் தொடுப்பதா?
இது பாரத தேசத்தினதும், எனதும் சாபக்கேடா?
சத்திரியர்களின் தலைமுறைகளை எனது தேசம் வெறுக்கிறதா?
என்று, இன்னும் பல கேள்விகள் நெஞ்சைத் துளைக்க அவருக்கு யுத்த களத்தில் ஞானம் கிட்டுகிறது. அவர், ‘தனது பரசுவை எடுத்துக் காறித்துப்பிவிட்டு தூரத்தே எறிந்தார். அது நந்திக் கடல் பெருவெளியில் சங்கமமாகியது. அவரது புரவி அவரையும் சுமந்து கொண்டு வெள்ளைக் கொடி போர்த்திய உடல்களின் நடுவே பாய்ந்தோடி வன்னிக் காட்டுக்குள் காணாமல் போனது’ என்று நிறைவு செய்யும் போது நம் நெஞ்சமும் குமுறுகிறது.

## இராமாயணத்திலிருந்து இரண்டு கிளைக் கதைகள் மற்றும் ஜாதகக் கதைகளில் ஒன்று:

இராமாயணத்திலிருந்து இரண்டு கிளைக் கதைகளையெடுத்து அதற்கொரு கட்டுடைப்பும், ஜாதகக் கதைகளிலிருந்து பிரதான கதையையெடுத்து அதற்கொரு கட்டுடைப்பையும் செய்கிறார் கொலின்.

‘வரம், ஓர்மம்’ என்ற இராமாயணம் சார்ந்த கதைகளையும் ‘ஞானம்’ என்ற ஜாதகக் கதையையும் ஒரே தட்டில் வைத்து யோசிக்கத் தோன்றுகின்றது. இந்த மூன்று கதைகளிலும் முறையே அகலிகை, ஊர்மிளை, யசோதரை என்ற கதை மாந்தர்களைச் சித்தரிக்கும் விதமும் அவர்கள் முறையே கௌதம முனிவர், இலக்குவன் மற்றும் சித்தார்த்தன் என்ற ஆடவர்களால் கையாளப்படும் விதம், அதனால் அவர்களின் உள்ளத் தவிப்பு, அன்புத் தேவைகள் பூர்த்தியாகாத பட்சத்தில் எரிமலையாய்க் குமுறும் மன அதிர்வுகள், இவற்றைக் கொலினின் மொழிநடையில் வாசிக்கும் போது கொலின் ஒரு, ‘ரொமான்டிக் ரைட்டராகத்’ தெரிகிறார்.

இந்த மூன்று கதைகளும் ஏனைய கதைகளைப் போலவே அவற்றின் கடைசி வரிகள் வாசகரைச் சம்மட்டியால் அடிக்கின்றன.

## வரம்:

கதையில் அகலிகையின் அழகில் மயங்கிய அதேவேளை துறவு வாழ்க்கைக்கும் லௌகீக வாழ்க்கைக்குமிடையே இரு தலைக் கொள்ளி எறும்பாகச் சிக்கித் தவிக்கின்றார் அவளது கணவர் கௌதம மாமுனி. அகலிகையின் எழிலில் சிக்குண்ட இந்திரன் கௌதம முனியின் வேடம் பூண்டு அகலிகையை இன்புறுகிறான்.

இதைக் கேள்விப்படும் கௌதம மாமுனி அகலிகையைக் கல்லாகச் சபித்து விடுகிறார். அயோத்திக்கு இராமர் திரும்புகையில் அவர் பாதம்பட்டு அகலிகை உயிர்ப்பெறுகிறாள். தவறையுணர்ந்த மாமுனி அவளிடம், ‘உனக்கு வரம் தருகிறேன்! என்ன வரம் வேண்டும் கேள்’ என்கிறான்.

‘நாதா நீங்கள் ஒரு முறை இந்திரன் வேடங்கொண்டு என்னோடு வந்து சுகித்திருக்க வேண்டும்.’

‘வரம் தருகிறேன் கேள்’ என்ற ஆணாதிக்கத் திமிரோடு கேட்கும் முனிவரைச் சாட்டையால் அடிக்க வேறென்ன வரிகள் வேண்டும்?

## ஓர்மம்:

பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடித்து அயோத்திக்குத் திரும்பும் இராமன், சீதை, இலக்குமனனின் வருகையும் அதன் நிமித்தம் அயோத்தி காணும் திருவிழாக் கோலத்துடனும் கதை தொடங்குகிறது. நகரமே ஆச்சரியமான ஓர் உலகில் மூழ்கியிருக்க அரச அந்தப்புரத்தில் ஊர்மிளை என்ற பெண் நெஞ்சின் ஓசை கண்ணீரின் வெப்பத்தால் காய்ந்து சருகாகிப் போகிறது. காரணம் அவள் இலக்குமணனின் மனைவி.

ஓரிரண்டு ஆண்டுகளா... சமாதானம்கொள்ள? பதினான்கு ஆண்டுகள் அல்லவா? அண்ணன் விதி வசத்தால் வனவாசம் போகிறான். சரி !, தம்பியும் ஏன் போக வேண்டும். அதுவும் சரி !, அதற்காக மனைவியிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல்... அல்லது மனைவியின் அபிப்பிராயம் கேட்காமல்... இது என்ன இல்லறம்? இது ஆண் அகம்பாவத்தின் அப்பட்டமான வெளிப்பாடல்லவா?

அந்த நீண்ட வருடங்களுக்குப் பின்பு நாடு திரும்பும் இலக்குமணன் கொஞ்சங்கூட வெட்கமில்லாமல் அவளைத் தொட்டுச் சுவைக்கப் போகும் போது இலக்குமணனைப் பார்த்து ஊர்மிளை சொல்கிறாள், ‘அன்பே! இந்த பதினான்கு ஆண்டு

களும் இரவும் பகலும் உங்கள் நினைப்பில் வாழ்ந்த நான் ,உங்களை நினைத்துத் தவமியற்றத் தொடங்கிவிட்டேன். இன்று நான் எதுவித ஆசாபாசங்களுமற்ற பெண். தவமே எனது வரம். இனிமேல் நாம் இல்லற இன்பத்தில் சேர்ந்திருப்பது முடியாத காரியம். நாம் இருவருமே ஞானத்தின் உச்ச நிலையை அடைவோம்.'

இந்த வரிகளைக் கேட்டு விக்கித்து நிற்பது இலக்குமணன் மட்டுமல்ல வாசகரும் தான்.

### ஞானம்:

ஞானத்தைத் தேடி அரண்மனை வாழ்வையும் கட்டிய மனைவியையும் விட்டு விட்டு புறப்பட்டு போகும் சித்தார்த்தன், பன்னிரண்டு மாதங்களுக்குப் பின் ஊனமுற்ற மனைவியைத் தோளில் சுமந்து செல்லும் ஒரு பிச்சைக்காரனை வழியில் பார்க்கிறான். அவனைப் பின்தொடர்ந்து அவன் குடிசையை அடைகிறான். அங்கு அந்த ஏழைக் குடியானவனுக்கும், சித்தார்த்தனுக்கும் நடக்கும் உரையாடல் சித்தார்த்தனுக்கு ஞானத்தைக் கற்றுத் தருகிறது.

ஒவ்வொரு கணவனுக்கும் மனைவிதான் போதிமரம், ஒவ்வொரு மனைவிக்கும் கணவன்தான் போதிமரம். இருவரது வாழ்க்கைதான் அவர்கள் கண்டு திளைக்கும் ஞானம் என்ற உண்மையைக் குடியானவன் உணர்த்த, சித்தார்த்தனின் கால்கள் கபில வஸ்துவை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது என நிறைவு செய்கிறார்.

### ராவணபுரி:

கதையிலும் ஒரு புதுமையான யுத்த களத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் கொலின். அங்கு மாற்றானின் மனைவி மீது மையல் கொண்டு சீதையை அடையத்துடிக்கும் பத்துத்தலை வீரனாக இராவணன் சித்தரிக்கப்படவில்லை. சீதையை மகளாகவும் இராமனை மருமகனாகவும் வார்த்துக் கெண்ட ஒரு பாசம்மிகு தந்தையாகவும் மாமனாகவும் இராவணன் சித்தரிக்கப்படுகிறார்.

### பைபிள் கதைகள்:

பைபிளிலிருந்து மூன்று அழுத்தமான சம்பவங்களை எடுத்து, அதைத் தனது பாணியில் கதையாகப் படைக்கிறார் கொலின். அவையாவன:

புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள்.

யாருமிங்கே தீர்ப்பிடலாம்.

எல்லாம் நிறைவேறிற்று.

முதல் கதையான புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்களில் நாம் இதுவரை அறிந்திராத அல்லது சொல்லப்படாத யூதாஸ் ஸ்காரியோத்தின் மனவுணர்வுகள் இயேசுவிற்கும் யூதாசுக்குமிடையில் நடைபெறும் ஓர் ஆத்மார்த்தமான உரையாடல் மூலம் துல்லியமாக வெளிப்படுத்தப்படுகிறது. பைபிள் திருவசனங்களைப் போலவே அதிகாரம் ஒன்று, இரண்டு எனப் பிரித்து ஒவ்வொரு வசனத்திற்கும் இலக்கமிட்டு இக்கதையை நகர்த்திச் செல்கிறார். காட்டிக்கொடுத்த கயவனாக அறியப்படும் யூதாஸ் இக்கதையின் மூலம் வாசகர்கள் மனதில் உயிர்த்தெழுகிறார். வரலாற்றில் மறைந்து போன பக்கங்களாக இவற்றைக் கொள்ளலாம். தன்னைக் காட்டிக்கொடுக்க இயேசுவே தூண்டுகிறார்.

'யூதாஸ் கவலைப்படாதே...' இயேசுவைக் காட்டிக் கொடுத்தவன் என்ற இழிப்பெயர் உனக்கு என் பொருட்டு ஏற்பட்டாலும் எம் மக்களுக்காய் நீ பெற்ற இந்த இழிப்பெயரின் காரணமாகவே சரித்திரத்தின் பக்கங்களில் எனது பெயரைப் போலவே உனது பெயரும் உயிர் வாழும்' என்று இயேசு சொல்வது போல் கொலின் எழுதுவது ஓர் இறையியல் சிந்தனைக்கு வித்திடுகிறது.

யாருமிங்கே தீர்ப்பிடலாம் கதையில் பாலியல் தொழில் செய்து பிடிபட்ட பெண்ணை கல்லால் எறிந்து கொலை செய்ய வேண்டும் என யூதர்கள் துரத்துவதும், இயேசு அவர்களுடன் வாதிடுவதும் சொல்லப்படுகிறது. வழக்கம் போல இக்கதையிலும் இறுதி வரிகள் நமக்கு அதிர்ச்சியைத் தருகின்றன.

குற்றம் சாட்டுபவர்கள் அவ்விடத்தைவிட்டு அகல, எங்கிருந்தோ எறியப்படும் இரண்டு கற்கள் அப்பெண்ணின் நெற்றிப் பொட்டையும் இயேசுவின் கபாலத்தையும் பதம் பார்க்கிறது. கற்களை எறிந்து தீர்ப்பிடத் தயாராகிக் கொண்டிருந்தவர்கள் யாரென்றால் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடிகளில் ஒரு சிலர் என நிறைவு செய்கையில் ஒவ்வொரு தமிழரின் நெற்றிப் பொட்டிலும் கல்லெறிவது மாதிரித் தெரிகிறது.

நிறைவாக,
எல்லாம் நிறைவேறிற்று என்ற கதையில் இயேசுவின் சிலுவை மரண சம்பவத்தை, 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது...' என்ற பகவத் கீதை வாசகத்துடன் தொடங்கி, எல்லாம் நிறைவேறிற்று என்று இயேசு தலை சாய்ந்து உயிர்துறப்பதைத் தனது பாணியில் வெளிக்கொணர்கிறார். பொதுவாகப் பெரிய வெள்ளிக்கிழமையன்று (Good friday) புனித யோவான் நற்செய்தியிலிருந்து இயேசுவின் பாடுகள் மரணம் குறித்து மிக உருக்கமாக ஒரு நீண்ட விபரிப்பு ஆலயங்களில் வாசிக்கப்படும். இக்கதையைப் படிக்கும் போது அந்த ஆன்மீக அனுபவத்திற்குள் நுழைய முடிகிறது.

மேலும், இத்தொகுப்பில் பார்வைகள், பதிவுகள் என்ற தலைப்பில் மூவரின் மன அதிர்வுகள் பதிவு செய்யப்படுகிறது.

மொத்தத்தில் வரலாற்று நூல்களை மீள் வாசிப்பிற்குட்படுத்திப் புதிய கோணத்தில் புராண இதிகாசங்கள் மற்றும் வேதாகமக் கதைகளில் அதிகம் பேசப்படாத பாத்திரங்களை மீட்டுருவாக்கம் செய்வது வரவேற்கத்தக்க முயற்சியாக மைக்கல் கொலின் செய்துள்ளார். அவரது பேனாவிலிருந்து மேலும் பல அரிய முயற்சிகள் இப்படி வெளிவரட்டும்.



benny@thaiveedu.com

# மொழியும் மொழியும்!

## - ஜெயஸ்ரீ சதானந்தன் -

'சொற்கள் வனையும் உலகம்': மிக ஆழமான உணர்வுடன் கூடிய கருத்தில் இந்தத் தலைப்பு அமைந்துள்ளது. ஒரு கணம் சொற்கள் இல்லாத உலகத்தை எண்ணிப் பார்த்தோமானால் அது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத உலகமாக இருக்கின்றது. நூலாசிரியர் நடராசா சுசீந்திரன் அவர்கள் தனது சொற்கள் மூலம் வனைந்தது என்ன என்று எனது இந்த ஆய்வில் நோக்குவோம்.

இந்தியாவில் உள்ள சுவடு வெளியீட்டகம் மூலம் இந்நூல் டிசம்பர் 2023-ல் முதற் பதிப்பாக வெளிவந்துள்ளது. இதன் அணிந்துரையில் 'உயிர்நிழல் லட்சுமி' அவர்கள் '...சுசீந்திரன் அவர்களை நன்கு அறிந்த தோழி என்ற வகையில் அவர் இன்னும் நிறையவே எழுதி இருக்க வேண்டும் என்ற ஆதங்கம் எனக்குள் எப்போதும் இருக்கிறது...' என்று நூலாசிரியரின் இலக்கியப் புலமையை எமக்குத் தொடக்கத்திலேயே புலப்படுத்திவிடுகின்றார். நூலாசிரியர் தனது முன்னுரையில் '...நாற்பது வருடங்களுக்கு முன் எழுதியவை தொடக்கம் மிக அண்மையில் முகநூல் வழி எழுதியவை வரை இப் புத்தகத்தில் காணப்படுகின்றன...' என்கின்றார். ஆக இவரின் நாற்பது வருடப் புகலிட வாழ்வின் அனுபவங்கள், இலக்கியத் தேடல்கள் எனப் பலவிதமான படைப்புக்களை இவர் வனைந்த சொற்களின் மூலம் இந்த நூலிற் காண்கின்றோம்.

'என் பற்றிக் கட்டி எழுப்பிய கற்பனைகளை என் சின்ன வயதிலிருந்து ஊட்டியும் உணர்த்தியும் வந்தபோதும் அவற்றை நான் ஒவ்வொன்றாகச் சுக்கு நூறாக்கிய போது ஒரு தந்தையாய் எத்துணைக் கவலைகளைச் சுமந்து இருப்பார் என்று இன்று எண்ணியபடி, என் பலத்தின் பாதியாய் இருந்த என் அப்பா திரு. சின்னத்தம்பி நடராசா அவர்களுக்கு இந்த நூல் சமர்ப்பணம்' என்று தன் தந்தைக்குக் காணிக்கையாக்கியிருக்கின்றார்.

சுமார் இருபத்திமூன்று கட்டுரைகள், அவை ஜெர்மன் மொழி இலக்கியங்கள், ஆங்கில மொழிப் படைப்புகள், அம் மொழிகளில் இருந்து தான் மொழி பெயர்த்தவை, வேறு இலக்கியவாதிகளால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இலக்கியங்கள், தமிழ்ப் படைப்புகள் போன்றவற்றை எமக்கு ஆரோக்கியமாக அறிமுகப்படுத்தி இருக்கின்றார். அத்தோடு இவரின் ஒரு மிக நீண்ட, சுமார் முப்பது பக்கங்கள் கொண்ட ஆய்வுக் கட்டுரையும் இதில் அமைந்துள்ளது.

இவர் பெரும்பாலும் தான் வாசித்த வேற்று மொழி இலக்கியங்களையோ அல்லது தமிழ் இலக்கியங்களையோ ஒப்பீட்டு முறையில் திறனாய்வு செய்து அறிமுகம் செய்கின்றார். ஒரு இலக்கியத்தைப் பற்றிக் கூறும்போது அதற்கு இன்னொரு மொழி இலக்கியத்தை ஒப்பிடுவது இவரது இயல்பாக இருக்கின்றது. நேரடியாக மூல நூல்களை வாசிப்பதை விட இவரின் இந்தப் பன்னாட்டு இலக்கியங்களின் அறிமுகக் கட்டுரைகள் கூடிய பயனைத் தருகின்றன. நம்மை மூல நூல்களைத் தேடித் தேடி வாசிக்கத் தூண்டுகின்றன. இந்தப் புத்தகம் மூலம் பிற மொழி இலக்கியங்களை நாம் அனுபவித்து உணரத் துணை செய்திருக்கின்றார்.

என் மனதைத் தொட்ட ஒரு சில கட்டுரைகளையே எனது இந்த ஆய்வுரைக்கு எடுத்துக்கொண்டேன். செல்லத்தம்பி சிறீக்கந்தராசாவின் 'ஆங்கிலம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும்' என்ற நூலை ஒரு கட்டுரையில் அறிமுகம் செய்கின்றார். '...ஆங்கிலத்தின் இனமானப் பண்பிலால் ஈர்க்கப்பட்டேன். அதனால் இதனை எழுதுகிறேன்...' என்று 'ஆங்கிலம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும்' நூலின் ஆசிரியர் சிறீக்கந்தராசா அவர்கள் கூறியதைக் குறிப்பிடுகின்றார். 'ஆங்கிலம் கடன் பெற்று வளர்ந்துள்ளது' என்று ஒரு இடத்தில் நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். இந்த இரு வாக்கியங்களும் எங்கேயாவது இந்தப் புத்தகத்தைத் தேடி வாசிக்க வேண்டும் என்ற ஆவலை உடனே கொண்டு வந்தன. அந்த அளவுக்கு இவரது நூல் அறிமுகம் அமைந்துள்ளது.

### தனித்த மனிதரின் எளிய சாட்சிகளாய்:

அடுத்ததாக 'அவலங்களின் காட்சியறை குந்தவையின் சிறுகதைகள்' என்ற பதிவில் இவர் எடுத்துக்கொண்ட குந்தவையின் சிறுகதைகள் பல என்னைப் பாதித்தன. குறிப்பாக 'இடப்பெயர்வு' என்ற கதை. குந்தவையின் அக் கதையினையும், 'பாண்' என்ற வேறு மொழிக் கதையினையும் ஒப்பிடுகின்றார். இரண்டுமே பசி உணர்வு பற்றியவை.

☐

மேலும் நமது இனத்துக்கு எதிராக நடக்கும் அடக்குமுறையினை ஒரு சம்பவத்தின் மூலம் இங்கு கூறிச் செல்கிறார். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி இவரும் இவரது மாமாவும் செல்கின்றனர். இவர்களது அதே இரயில் பெட்டியில் இருந்த ஒரு தமிழரைச் சிங்களப் பயணி ஒருவன் 'பறதெமுளு' எனக் கூறி கன்னத்தில் அறைகின்றான். பயணிகள் எல்லோரும் எதுவுமே நடக்காதது போல அந்தப் பெட்டியில் அமர்ந்திருக்கின்றார்கள். 'நீயும் பேசாமல் இரு அப்போதுதான் ஊர் போய்ச் சேரலாம்' என்கிறார் இவரது மாமா.

இப்படியான சம்பவங்களை எமது சிறு பராயங்களிற் கேட்டதுண்டு. சிங்களப் பயணிகளுக்குப் பயந்து எழுந்து இடம் கொடுத்தவர்கள் எத்தனையோ பேர் எம்மில் உண்டு. இச்சம்பவம் உலகில் நடந்த ஒரு பெரும் போராட்டத்தை ஞாபகப்படுத்துகின்றது.

அமெரிக்காவில் ரோசா பாக்ஸ்- Rosa Parks (1913-2005) என்னும் கறுப்பினப் பெண்மணி 1955-ல் பஸ் ஒன்றில் பயணம்

செய்கின்றார். இனப் பாகுபாட்டின் உச்சகட்டக் காலம் அது. காத்திருக்கும் அறைகள் மற்றும் பேருந்துகளில் எல்லாம் கறுப்பினத்தவர்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்கப்பட்டி ருந்தது. ரோசா பாக்ஸ் பேருந்தில் கறுப்பினத்தவருக்கு என்று ஒதுக்கி இருக்கும் இடத்தில் அமர்ந்திருக்கின்றார். வெள்ளை இனத்தவரின் இடங்கள் எல்லாம் நிறைந்து விட் டன. இருக்கையில் இருக்கும் கறுப்பினத்தவர்கள் எழும்பி வெள்ளையர்களுக்கு இடம் கொடுக்குமாறு நடத்துனர் கூறு கின்றார். மற்றைய கறுப்பினத்தவர் எல்லோரும் எழுந்து இடம் கொடுக்க ரோசா பாக்ஸ் மட்டும் எழும்ப மறுக்கின்றார். அத னால் கைதாகின்றார். இதை அடுத்துப் போராட்டம் பல நாட் கள் நடக்கின்றது. பின்னர் ஒரு வருடத்திற்கு மேலாக எந்தக் கறுப்பினத்து மக்களும் பஸ்களிற் பயணம் செய்யவில்லை. கடைசியாக இவர்களுக்கு சாதகமாகத் தீர்ப்பு வருகின்றது.

நூலாசிரியர் சுசீந்திரன் அவர்கள் போகிற போக்கில் ஒரு சிறு குறிப்பாக மட்டுமே தனது இந்த அனுபவத்தை ஒரு சாட்சியா கக் கூறி இருக்கின்றார். ஆனால் இதை ஒரு தனிப் பதிவாக அவர் தனது நடையில் விரிவாக எழுத வேண்டும் என்பது எனது ஆதங்கமாக இருக்கின்றது.

'தனித்த மனிதர்களின் எளிய சாட்சிகளை எங்காவது ஒரு இலக்கியப் பதிவுகளில் சொன்னால் மட்டும் உண்டு' என மிகச் சுருக்கமாக ஏதாவது ஒரு பதிவில் கூறினால் எப்படி எம் பின்னைய சந்ததிக்கு இனி வரும் நாட்களில் ஆவணங்கள் கிடைக்க பெறும் ? என்பது என் கேள்வி.

இந் நூலில் அதிக பக்கங்களை எடுத்துக் கொண்ட ஆய்வுக் கட்டுரையினை.

***'...நாங்கள் நடந்த நகரத் தெருக்களில்***
***காக்கி உடையில் துவக்குகள் திரிந்தன...'***

எனக் கவிஞர் எம்.ஏ. நுஃமான் அவர்களது கவி வரிகளோடு ஆரம்பித்து, 80-களில் ஜெர்மனியில் வாழ்ந்த அகதிகளின் வாழ்வை, அவல நிலையை படம் பிடித்துக் காட்டுகின்றார். அகதி முகாம்களில் மக்களின் மனநிலை, அங்கு இருக்கும் போது நடந்த இலக்கிய முயற்சிகள், இலக்கியச் சந்திப்புக் கள், செயற்பாடுகள் விரிவாக்கம் பெற்றதையும் அறியத்தரு கின்றார். அக்காலப் புகலிட எழுத்தாளர்களை எமக்கு அறிமு கம் செய்கின்றார். குறிப்பாகப் ஜெர்மனியில் வாழும் பார்த்தி-பன் அவர்களின் படைப்புகளைத் தேடி வாசிக்க தூண்டுகின் றார்.

பிரான்சில் ஜெர்மன் போல அகதி முகாம்கள் இல்லாதபடி யால் ஒரு அறையில் பல பேர் தங்குவர். பகலில் தூங்குபவர் இரவு தூங்குபவருக்கு இடம் கொடுக்க வேண்டும். இந்த அனுபவத்தை பலமுறை பிரான்சில் வாழ்ந்த எனது தந்தை யும் எனக்குச் சொன்னதுண்டு. எண்பதுகளில் எம்மவர்கள் அகதிகளாக வாழ்ந்த வாழ்வை இப்போது அறிந்து, ஆய்ந்து எழுத வேண்டும் என்பதைக் கூட இந்த கட்டுரை எம்மை உந் தவைக்கின்றது. இதுவரை சுமார் நாற்பது இலக்கியச் சந்திப் புகள் நடந்ததாகவும் 1989-ல் நடந்த ஆறாவது இலக்கியச் சந்திப்பு முதன்முதலில் ஒரு இலக்கிய மாநாடாகவே இருந் தது என்றும், மிக நேர்த்தியாக அதனை நூலாசிரியர் சுசீந்தி-ரன் அவர்கள் ஒழுங்கமைத்திருந்தார் எனவும் பேராசிரியர் நித் தியானந்தன் அவர்கள் ஒரு இடத்தில் குறிப்பிடுகின்றார்.

### ஒப்பிட்டு இருத்தலால்:

இலக்கிய சந்திப்புகளின் போது, சங்க காலத்தில் மக்கள் வேறு இடங்களில் சென்று வாழ்ந்த காலங்களில் படைத்த இலக்கியங்களைத் தேடி இருக்கின்றனர். சமகாலத்தோடு ஒப் பிட்டும் இருக்கின்றனர்.

***'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்***
***எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்***
***இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின்***
***வென்றெறி முரசின் வேந்தர் எம்***
***குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே'***

அற்றைத் திங்கள் அவ்வெண்நிலவில் எமது தந்தை இருந் தார். நாம் பிறந்த மண் ஆன பறம்பு மலை எம்மிடம் இருந் தது. அதே போல இன்றும் அங்கே நிறைமதி உலா வருகின் றது. ஆனால் இன்று நமது தந்தையும் எம்முடனில்லை. எமது மண்ணும் எம்முடன் இல்லை என பாரி மன்னனின் மகள்கள் பாடுவதாக இப் புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.

புகலிட வாழ்வில் இருக்கும் நம் எல்லோருக்கும் இந்த சங்க இலக்கிய அடிகள் பொருந்தும் என்பது உண்மை.

***'...முல்லையும் திருவாதிரையும்***
***வில்வமும் நெல்லியும்***
***தெய்வ மரங்களும், தெய்வீக மனிதரும்***
***எங்கோ இருக்க***
***கார்ட் ஆரஞ்சு மனிதனாய் எனது இயக்கம்***
***கார்ட் ஆரஞ்சுகளோடு மனிதர்கள் சந்திக்கின்றனர்***
***கார்ட் ஆரஞ்சுகளோடு மனிதர்கள் சிரிக்கின்றனர்***
***கார்ட் ஆரஞ்சுகளோடு மனிதர்கள் தூங்குகிறார்கள்***
***பூங்காவனத் திருவிழாவும் கோயிற் கடவுளரும்***
***என்றோ தொலைத்தேன்...'***

எனப் பிரான்ஸ் நாட்டில் வாழும் கவிஞர் சுகன் (நுகத்தடி நாட் கள்) பாடுவதாக இதில் குறிப்பிடுகின்றார். எனக்கு இந்த வரி கள் முக்கூடற்பள்ளு இலக்கித்தில் வரும் சொர்க்கம் போன்ற இயற்கை வளத்தை ஞாபகப்படுத்துகிறது.

***'மீது உயர்ந்திடுந் தெங்கிள நீரை***
***மிடைந்த பூகம் சுமந்து தன் காயைச்***
***சூத மொன்றிச் சுமக்கக் கொடுக்கும்***
***சூதம் தன்கனி தூக்கும் பலாவில்***
***ஓதும் அந்த பலாக்கனி வாழை***
***உளுக்கவே சுமந்து ஒண்குலை சாய்க்கும்***
***மாதுளங் கொம்பு வாழைத் தாங்கும்***
***வளமை ஆசூர் வடகரை நாடே.'***

'உயரமாக வளர்ந்து இருக்கும் தென்னை மரங்களின் இள நீர்க் காய்களை அருகில் வளர்ந்திருக்கும் பாக்குமரக் குலை கள் தாங்கிக் கொள்ளும். பாக்குமரக் குலைகளை அவற்றின் அருகில் வளர்ந்திருக்கும் மாமரக் கிளைகள் தாங்கிக் கொள் ளும். மாங்கனிகளை அவற்றின் அருகில் வளர்ந்திருக்கும் பலாமரம் தாங்கிக் கொள்ளும். பலாக்கனிகள் அருகில் வளர்ந்திருக்கும் வாழையைச் சார்ந்திருக்கும். வாழைக் குலைகளை அருகில் இருக்கும் மாதுளை மரத்தின் கிளைக ள் தாங்கிக் கொள்ளுமாம்.' என்பது மேலது உரை.

அந்த சொர்க்கம் போல் உள்ளது இக்கவிஞர் கூறும் ஊரின்

இயற்கை வளம். அப்படியான ஒரு சொர்க்கத்தை விட்டு வந்து கார்ட் ஆரஞ்சை-Carte Orange (பிரான்சின் மாதாந்த அல்லது வாராந்த பயணச்சீட்டு கார்ட் ஆரஞ்சு எனப்படும்.) வைத்துக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கின்றோம் என வேத னையான இந்த வரிகள் புகலிடக் கவிஞனிடம் வருவதை அதே உணர்வோடு எமக்கு அறிமுகம் செய்கின்றார் கட்டுரை யாளர்.

'மரண முகாமிற்கு நேரம் தவறாது ரயில் அனுப்பிய அடல்வ் ஐஸ்மான்' என்ற கட்டுரை மனித குலத்தை உலுக்குவது.




இதை வாசித்தவுடன் என் நினைவுக்கு வந்தது குமுதினிப் பட குப் படுகொலை.

1985 மே மாதத்தில் மக்கள் நெடுந்தீவில் இருந்து நைனாதீ வுக்குச் செல்கின்றனர். இடையிற் கடற் படையினர் கடலில் இடைமறித்து ஏறுகின்றனர். படகின் கீழ்ப் பகுதிக்கு ஒவ்வொ ருவராக அழைக்கின்றனர். அவர்களை அழைத்து உள்ளே வெட்டிக்கொலை செய்கின்றனர். வெளியில் இருப்பவர்க ளுக்கு உள்ளே நடப்பது ஒன்றும் தெரியாது. ஒவ்வொருவரும் உள்ளே கொண்டுபோகப்படுகின்றனர்; கொலை செய்யப் செய்யப்படுகின்றனர்.
இதேபோலத்தான் ஹிட்லரின் பணியாள் அடொல்வ் ஐஸ்மான் ரயில் அதிகாரியாக இருக்கின்றான். அக்காலத்தில் யூதர்க ளுக்கென உருவாக்கிய மரண முகாம்களுக்கு நேரம் தவ றாது யூத மக்களை ரயில் வண்டியில் அனுப்பி வைக்கின் றான். அந்த மக்களுக்கு எங்கே போகிறோம் என்று தெரி யாது. அந்த மக்களும் ரயிலில் சென்று மரண முகாமில் கொலை செய்யப்படுகின்றார்கள். மனித குலத்தையே உலுக்கி உருக்கும் வரலாறுகளாக இந்த இரண்டும் இருக் கின்றன.

ஒரு திறனாய்வாளர் என்பவன் நடுநிலையில் இருந்து ஒரு நூலைப் பார்கக வேண்டும். வெறுமனே இந்தப் படைப்பு சிறந் தது என்று சொல்லிவிட்டு போவது திறனாய்வுக்குரிய பண் பல்ல. பேராசிரியர் கைலாசபதி அவர்களின் 'பாரதி ஆய்வு கள்' கட்டுரைத் தொகுப்பை எமக்கு அழகாக அறிமுகம் செய்யும் சுசீந்திரன் அவர்கள் அவற்றை தேடி வாசிக்க தூண் டுகின்றார். ஒரு இடத்தில் 'நெட்டை மரங்களென நின்று புலம் பினார்-நெட்டை மரங்களாக நிற்பார் பயனின்றி' என பேராசிரி யர் கைலாசபதி அவர்கள் ஒரு இடத்தில் கூறியதைக் குறிப்பி டுகின்றார். 'தோற்றத்தினை நையாண்டி செய்யும் இந்த போக் கினை இன்றைய நிலையில் என்னால் ஏற்றுக் கொள்ள முடிய வில்லை என்பதையும் இங்கே கூறி வைப்பது ஆரோக்கியமா னது என்று நம்புகிறேன்' என சுசீந்திரன் அவர்கள் இடித்து ரைக்கின்றார்.

கவிஞர் இரா ரஜீன்குமார் அவர்களின் '20-ம் நூற்றாண்டின் ஈழத்துப் புறநானூறு' என்ற கவிதை நூலை அறிமுகம் செய் யும் இவர் 'ரஜீன்குமார் அவர்களின் கவிதைகளிற் சொற் சிக்க னம் இன்னும் ஏற்படுவதாக இல்லை' என்றும், கவிதை என் றால் எப்படி இருக்க வேண்டும் என்றும் காட்டுகின்றார். இவர் ஜெர்மன் மொழியை, அதன் இலக்கியங்களின் மீது ஏற்பட்ட காதலால் கற்றிருக்கின்றார் என்பது இவரின் பல இலக்கியப் படைப்புகளின் வழி தெரிகின்றது. மூலமொழியும் இலக்கு மொழியும் அவற்றின் வெவ்வேறு கலாசாரங்களில் வெளிப்ப டும். இவர் இந்த இரண்டு கலாசாரங்களும் தெரிந்த சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்பது இவரது படைப்புகளில் தெரிகி றது. இவரின் மொழி நடை என்பது பொருட்செறிவும், பொருள் ஆழமும் நிறைந்தவை. ஆனால் வாசிக்கும் போது என்னைப் போன்ற சாமானியருக்கு சில சொற்பிரயோகங்கள் விளங் காது போக கூகுலைத் (GOOGLE) தேட வேண்டிய நிலையும் வந்தது. ஒரு நூலை சாதாரண மக்கள் சுவைப்பதற்கும் இலக் கிய வல்லுனர்கள் சுவைப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. இருந்தாலும் கூட எல்லோருக்கும் சுவைக்கும் வண்ணம் எமது படைப்புகள் இருந்தால் நன்றாக இருக்கும் என்பது எனது கருத்து.

பாரதியார் கூறியது போல 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் செல் வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்பதில் தமிழ் அன்னைக்கு எட்டு திக்கும் உள்ள இலக்கியங்களை மொழி பெயர்த்துத் தமிழில் கொண்டு வா என்ற கருத்தில் பாரதியார் கூறுகின்றார். அந்த வகையில் இவர் தமிழ் அன்னைக்குக் கொண்டு வந்த செல்வங்களாக இந்த நூலில் தமிழ், ஜெர்-மன், பிரெஞ்சு, ஆஸ்திரியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், ரஷ்ய மொழி இலக்கியங்களைக் காண்கின்றேன். கிட்டத்தட்ட 100 எழுத்தாளர்களை, இலக்கியவாதிகளை எமக்கு அறிமு கம் செய்கின்றார். இந்த நூலின் தாக்கத்தால் அவர்களை கூகுளில் தேட வேண்டிய நிலையும் வந்தது. மொத்தத்தில் இந்த நூல் 'இலக்கியப் படைப்புகள் பற்றிய ஓர் இலக்கியம்' என நாம் கொள்ளலாம். இந்த நூலை வாசியுங்கள். இதன் தாக்கத்தால் தேடுங்கள். தேடத் தேடிக் கொண்டே போக லாம். அந்த ஆர்வத்தை கடைசிவரையும் இந்த நூல் தரும் என்று நிச்சயம் நம்புகின்றேன்.



jeyasri@thaiveedu.com

# இரு நிலைகளில் உழல்தல் வெளியேற ஒரு வெளிச்சம்

**– கருணாகரன்**



‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று உலகளாவிய விரிந்த பார்வையைக் கொண்ட பாடலை கணியன் பூங்குன்றன் சங்க காலத்திலேயே பாடிவிட்டார். தமிழ்ச் சமூகமும் அதைத் தலைமுறை தலைமுறையாகப் பெருமையுடன் கொண்டாடுகிறது. இப்போது அது தமிழ்ப் பரப்பிற்கு அப்பால், அமெரிக்காவின் டர்ஹாம் சிம்பொனி உள்ளிட்ட பல பன்னாட்டு இசைக் கலைஞர்களால் பாடப்பட்டு, இசையமைப்பாளர் இராஜன் சோமசுந்தரத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது. அதோடு அமேசான் பன்னாட்டு இசைப்பட்டியலில் இடம்பிடித்துப் பெரும்புகழும் பெற்றுள்ளது. 2019-ல் சிகாகோவில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் கீதமாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தளவு முக்கியத்துவத்துக்கும் பெருமைக்கும் காரணம், எல்லா ஊரும் எம் ஊரே, எல்லா மக்களும் எம் உறவினரே என்ற உலகளாவிய பரந்த மனதைக் கொண்ட வாழ்க்கையை கணியன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பாடியிருக்கிறார். அதைத் தமிழர்கள் பின்பற்றியிருக்கிறார்கள்(?) என்பதாகும். எனவேதான் அதைக் கொண்டாடுதல், அதில் பெருமை கொள்ளுதல், தமிழர்கள்தான் இத்தகைய பார்வையை மிகத் தொன்மையான காலத்திலேயே முன்வைத்தவர்கள் என வலியுறுத்துதல், அடையாளப்படுத்துதல் எல்லாம் நிகழ்கின்றன.

இது ஒரு பக்கம். மறுபக்கம் வேறு விதமானது.

அங்கே ‘சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல வருமா..? நம்மூரைப் போல எந்த ஊரும் இல்லை’ என்ற இளையராஜாவின் பாடல் உள்ளது. அதுவும் புகழ் பெற்றிருக்கிறது. காரணம், ஊரை விட்டு, நிலத்தை விட்டுப் பெயர்ந்தவர்களுடைய உளநிலையை இளையராஜாவின் பாடல் பிரதிபலிக்கிறது என்பதேயாகும். இதனால் தங்களுடைய தாய்ப்பாடலைப்போல இந்தப் பாடலைக் கொள்கிறார்கள். ஊரைப் பிரிந்த பிரிவேக்கமும் புதிய சூழலில் ஒன்றிக் கொள்ள முடியாத ஒவ்வாமையும் இணைந்து இந்த Nostalgic-ஐ உருவாக்குகிறது.

புலம்பெயர் இலக்கியத்தின் பெரும்பகுதி அல்லது அதனுடைய பெருங்கால வெளிப்பாடு, ‘சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல வருமா...?’ என்ற Nostalgic தான். ‘பரதேசிகளின் பாடல்’ கவிதைத் தொகுதி இதற்குச் சிறந்த அடையாளம். மேலும் ‘பாரிஸ் கதைகள்’ தொடக்கம் பல நூறு தனிக்கதைகளும் நாவல்களும் இந்த வகையில் உண்டு. கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனின் புகழ்பெற்ற ‘இலையுதிர்கால நினைவுகள்’ என்ற கவிதை இதைச் சிறப்பாகச் சொல்கிறது. அதிலிருந்தொரு பகுதி -

***... உலகெங்கும் உதிர்க்கும்***
***வாழ்வை இழந்து வசதி பொறுக்குகின்ற***
***மனிதச் சருகுகளாய் புரள்கின்றோம்.***
***என்ன நம் தாய்நாடு***
***ஓயாமல் இலை உதிர்க்கும்***
***உயிர்ப்பிழந்த முது மரமா?***

***யாழ்நகரில் என் பையன்***
***கொழும்பில் என் பெண்டாட்டி***
***வன்னியில் என் தந்தை***
***தள்ளாத வயதினிலே***
***தமிழ்நாட்டில் என் அம்மா***
***சுற்றம் பிராங்போட்டில்***
***ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்***
***நானோ***
***வழிதவறி அலாஸ்க்கா வந்துவிட்ட ஒட்டகம்போல்***
***ஒஸ்லோவில்***
***என்ன நம் குடும்பங்கள்***
***காற்றில் விதிக் குரங்கு கிழித்தெறியும்***
***பஞ்சுத் தலையணையா?***

***பாட்டனார் பண்படுத்தி***
***பழமரங்கள் நாட்டி வைத்த***
***தோப்பை அழியவிட்டு***
***தொலை தேசம் வந்தவன் நான்.***
***என்னுடைய பேரனுக்காய்***
***எவன் வைப்பான் பழத் தோட்டம்.***

எனச் செல்கிறது. இந்தக் கவிதை தமிழ்ச் சூழலில் பரவலாக அறியப்பட்டதற்குக் காரணம், தாய்நிலத்தை, சொந்த உறவுகளை, அந்தச் சூழலைப் பிரிந்த துயரமும் - வேறொரு திணையில் பொருந்த முடியாத அவலமும் எனக் கொந்தளிக்கின்ற அக வெளிப்பாடாக இருப்பதாகும்.

நமக்கு நம்முடைய ஊரும், நம்முடைய உறவும் நம்முடைய மொழியும் பண்பாடும்தான் முக்கியம் என்று கொள்ளும் ஏக்க



மும் சமநேரத்தில் அதுவே உயர்ந்தது கொள்ளும் உயர்வு நவிற்சியின்பாற்பட்ட உளநிலையும் பொதுவாகவே தமிழ்ச் சூழலில் உண்டு. எனவே இந்த இரு நிலையிலும் இளையரா ஜாவின் பாடலையும் புலம்பெயர்ந்தோரின் Nostalgic எழுத்து களையும் தமிழ்ச்சமூகம் கொண்டாடுகிறது.

ஆனால், இங்கே கணியனின் பாடலுக்கும் இளையராஜாவின் பாடலுக்கும் அதையொத்த Nostalgic எழுத்துகளுக்கும் இடையில் வெவ்வேறு அடிப்படைகள், பார்வைகள், உளநி லைகள் இருப்பதைக் காணலாம். இவை ஒன்றுக்கொன்று முர ணானவை. எதிர்நிலையுடையவை.

ஒன்று, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பெருவிரிவென் றால், மற்றது 'சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப்போல வருமா?' என அதை மறுதலித்து, சொந்த நிலத்துக்குள் அடங்க முற்படுவது.

அப்படியென்றால் எது உண்மை? எது பொய்? எதற்காக இந்த இரண்டக நிலை? இந்தக் கேள்விகள் முக்கியமானவை. ஆனால், இவை கேட்கப்படுவதில்லை. அப்படிக் கேள்வி எழுப்பப்பட்டால், அதை அறிவு நிலையில் அணுகாமல், விலத்தி வைக்கும் போக்கே உண்டு.

இது தமிழ்ச் சமூகத்திற்குள் தொடர்ந்து காணப்படும் முரண் நிலையும் அதன்பாற்பட்ட வழமை அல்லது இயல்புமாக நீடிக்கிறது. சில எளிய உதாரணங்கள் - 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு', 'ஒற்றுமையே பலம்', 'ஐக்கியம் அவசியம்' என்று சொல்வோரே தமக்குள் ஆயிரத்தெட்டுப் பிரிவினைக ளைக் கொண்டிருப்பதும் ஊக்குவித்துக் கொள்வதும் உண்டு. இன்னொரு உதாரணம், 'சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்' என ஔவையார் பாடிப் பல நூறாண்டுகள் கடந்து விட்டன. இன்றும் பள்ளிக்கூடங்களிலிருந்து பொது அரங்குகள் வரையில் இதைச் சொல்லிக் கொண்டிருக்கி றோம். சாதி ஒழியவே இல்லை. அது வெவ்வேறு ரூபங்களில் வடிவெடுத்துக் கொண்டுதானுள்ளது.

இன்னொன்று, யாழ்ப்பாண நூலகம் 1981-ல் சிங்கள அரசியல் தரப்பினரின் ஏற்பாட்டில் படையினரால் எரிக்கப்பட்டது. ஆண் டுதோறும் அந்த எரிப்பை நினைவு கொள்கிறோம். கண்டிக்கி றோம். நிச்சயமாக இது அவசியமே. அதே அளவுக்கு முக்கிய மானது, நூலகப் பண்பாட்டை, நூல்களை வாங்குவதை, வாசிப்பதை, நூலகங்களுக்குச் செல்லும் வழக்கத்தைக் கொள்வதுமாகும். நூல்களை வாங்காத, வாசிக்காத, நூலகத் தின் பக்கமே செல்லாத ஒரு சமூகம் எதற்காக நூலகத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதைப்பற்றி அழுது மூக்குச் சிந்த வேணும்?

இப்படியே இந்த முரண் நிலை தமிழ் வாழ்க்கை, தமிழ்ப் பண் பாடு நீளத்துக்கும் உள்ளது. 'நெற்றிக் கண்ணைத் திறப்பி னும் குற்றம் குற்றமே' 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையும் அஞ்சோம்' என்ற பரம்பரையை, உயர்ந்த விமர்சனப் பண் பாட்டைக் கொண்டவர் நாம் என்று சொல்லிக் கொள்கின்ற நமக்கு, நம்மைப் பற்றிய சிறிய அபிப்பிராயத்தை யாரேனும் சொன்னால் தாங்கிக் கொள்ள முடியாதிருக்கிறது. இப்படி இந்த முரண்போக்குப் பல நிலைகளிலும் தொடர்ந்து கொண் டேயுள்ளது.

சொல்லுக்கும் செயலுக்கும் வலியுறுத்தும் கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையிலான வெளியைத் தமிழ்ச் சமூகம் தன்னுள் கொண்டுள்ளது. ஒரு பக்கத்தில் மிகச் சிறப்பான விரிந்த சிந்தனை. மறுபக்கத்தில் மிகக் கீழ்மையான நடத்தை கள் - நடவடிக்கைகள். இந்த இருநிலைகளுக்குள் இழுபடு வது அறிவார்ந்த இந்த யுகத்திற்கு பொருத்தப்பாடுடைய தில்லை.

இந்த யுகம் எல்லாவற்றையும் நேர் செய்ய முற்படுகிறது. பிழையானவை, பொருத்தமற்றவை என்பதைக் கழித்து விடு கிறது. முன்னரைப்போல நல்லது - கெட்டது என எல்லாவற் றையும் தனக்குள் கொண்டிழுக்கும் சூழல் இன்றில்லை. ஏனெனில் அறிவும் வாழ்கையும் இணைந்த வாழ்க்கையே இன்றைய வளர்ச்சியாகும். வளர்ச்சியடைந்த சமூகங்களிலும் நாடுகளிலும் இதனைத் தெளிவாகக் காணலாம். ஜனநாயகச் செழிப்பு, சமூக வளர்ச்சியின் அடிப்படைகளில் ஒன்று. அது உண்மைக்கு மிக நெருக்கமானது.

கணியன் பூங்குன்றனின் கனவை, உள நிலையை, வலியுறுத் தலின் நவீன வடிவத்தைக் கொண்ட கவிதை ஒன்று ஆகாச மூர்த்தியினுடையது.

***வேறொரு ஊருக்கு இடம்பெயர்ந்தவன்***<br>
***கொஞ்சம் கொஞ்சமாக பழக்கப்படுகிறான்.***

***இருளா பனி மூட்டமா***<br>
***விலக விலகத்***<br>
***துலங்கும்***<br>
***புதிய ஊரின் அனைத்தும்.***

***மண்ணுக்கு ஒரு மொழியுண்டு***<br>
***எந்த மண்ணிலும் மெய்மைக்கான தேடல் உண்டு***

***மண்ணோடு***
***உரசும் காற்றோடு***
***சுடும் வெயிலோடு***
***செந்தளிரோடு***
***பேசத் தெரிந்தவனுக்கு***
***யாதும் ஊரே.***

இது புலம்பெயர்ந்து வேற்றுச் சூழலில் வாழ்தலின் நிலையை, அதனுடைய யதார்த்தத்தை, உண்மையைச் சொல்கிறது. ஆனால், வழமையான Nostalgically ஆக இல்லாமலிருப்பதே இதனுடைய அழகும் முக்கியத்துவமுமாகும். புலம்பெயர் இலக்கியத்தில் - அதனுடைய உளநிலையில் மாற்று இதுவெனலாம். ஆகவே இதுவொரு மாற்றுக் கவிதையே.

தம்முடைய சொந்த ஊரையோ நிலத்தையோ விட்டுப் பெயர்ந்தவர்கள், தொடக்கத்தில் சற்றுக் கடினமாக இருந்தாலும் மெல்ல மெல்ல இன்னொரு நிலத்தில் இணைந்து கொள்கிறார்கள். புலம்பெயர் தமிழர்கள் இதற்கு உதாரணம். பதியமாகிய அந்தப் புதியநிலத்தை விட்டு அவர்களால் எளிதில் சொந்த ஊருக்கு - தாய் நாட்டுக்குத் திரும்ப முடியாது. அப்படித்தான் கிராமங்களிலிருந்து நகரகங்களை நோக்கிச் சென்றவர்கள், பின்னர் கிராமங்களுக்கு வாழத் திரும்புவதில்லை. விரும்பினாலும் அவர்களால் அப்படிச் சொந்த ஊருக்குத் திரும்பச் செல்ல முடியாது.

'சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப்போல வருமா?' என்று இளையராஜா கூட பாடுவாரே தவிர, அவரால் பண்ணைப்புரத்துக்குத் திரும்பிச் செல்ல முடியாது. ஏனென்றால் இது காப்பறேற் யுகம். இன்றைய அரசியல், சமூக பொருளாதார அடிப்படைகள் மக்களை பல விதங்களிலும் இடம்பெயரவும் புலம்பெயரவும் வைத்துக் கொண்டே உள்ளன. இந்த நிலையை எதிர்கொண்டே ஆகவேண்டும். பேரலையில் தள்ளிச் செல்வதைப்போல மக்கள் தள்ளப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இதுதான் யதார்த்தம். ஆனால், இப்படி நிலத்தை விட்டும் வாழ் களத்தை விட்டும் பெயரப் பெயர அகநிலையில் ஒரு ஏக்கம் உள்ளூர இருந்து கொண்டேயிருக்கும். அதைப் பாடியும் எழுதியும் தீர்த்துக் கொள்ளலாம். அதற்கப்பால் புறநிலையின் யதார்த்தம், ஆகாசமூர்த்தியின் கவிதையைப்போலவே இருக்கும். இந்த இருநிலையை எதிர்கொண்டு கடப்பதற்கே கணியன்பூங்குன்றனும் ஆகசமூர்த்தியும் ஒன்றிணைகிறார்கள். ஆகசமூர்த்தி இதைச் சிறப்பாக - எளிமையாகச் சொல்லி விடுகிறார்.

***எந்த மண்ணிலும் மெய்மைக்கான தேடல் உண்டு***
***மண்ணோடு***
***உரசும் காற்றோடு***
***சுடும் வெயிலோடு***
***செந்தளிரோடு***
***பேசத் தெரிந்தவனுக்கு***
***யாதும் ஊரே.***

என.

ஆகாசமூர்த்தி சொல்வதைப்போல எல்லா மண்ணிலும் மெய்மைகளும் சிறப்புகளும் உண்டு. அதைப் புரிந்து கொள்கின்றவர்களுக்கே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது புரியும். எதனோடும் எவரோடும் பேசத் தெரிந்தவர்களுக்கு உலகம் திறந்தது. அது தெரியாதோருக்கு உலகம் இருண்டது. ஆகவே மனதை யதார்த்த நிலைக்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். அப்படி ஒழுங்குபடுத்திக் கொள்ளும் போது நீங்கள் கணியனாகி விடுவீர்கள்.

ஆகாசமூர்த்தியின் கவிதை ஒரு வெளிச்சம். கணியன் சங்கத்தில் ஏற்றிய அகலைத் தூண்டி இந்த நவீன யுகத்தில் ஒளியைப் பாய்ச்சுகிறார் ஆகாசமூர்த்தி.



karunagaran@thaiveedu.com



## பண்டாரநாயக்க முதல் ஜே.வி.பி. வரை...

# பௌத்தமும் சிங்களத் தேசியவாதமும்

**எஸ்.கே. விக்னேஸ்வரன்**

இந்த நூல் பற்றி, எனது பார்வையிலான ஒரு சிறிய அறிமுகத்தை, இங்கு கனடாவில் நடக்கவிருக்கும் அதன் வெளியீட்டு விழாவில் செய்யுமாறு சமூகம் இயல் பதிப்பகத்தினை நடத்திவரும் நண்பர் பௌசர் என்னிடம் கேட்டிருந்தார். கொழும்பிலிருந்து 'சரிநிகர்' பத்திரிகையை நாங்கள் நடத்தி வந்த அதே காலத்தில்தான் அவர் தனது 'மூன்றாவது மனிதன்' இதழையும் நடத்தி வந்தார். பெரிதும் கலையிலக்கியம் சார்ந்து இலங்கையில் வெளிவந்த மிகவும் கவனிப்புக்குரிய இதழ்களில், முக்கியமான இதழ் அது. அதே வேளை சரிநிகர் பத்திரிகையில் அவரும் தொடர்ச்சியாக அன்றைய அரசியல் நிலைமைகள் சார்ந்த கட்டுரைகளை எழுதத் தொடங்கியிருந்தார். அதன் மூலமாக அவருடன் ஏற்பட்ட தொடர்பு, வளர்ந்து மிக நெருக்கமான குடும்ப அளவிலான நட்பாக மாறிவிடக் காரணமாக இருந்தது. அவரது மூன்றாவது மனிதன் இதழில் நானும் தொடர்ந்து பல்வேறு விடயங்களை எழுதி வந்தேன். அவர் அந்த இதழை வெளியிடுவதுடன் மட்டுமல்லாது ஒரு பதிப்பகத்தையும் தொடங்கி, முக்கியமான கவனத்துக்குரிய பல நூல்களை வெளியிடத் தொடங்கியிருந்தார். அந்த நூல்களுள் ஒன்றாக, நான் சரிநிகரில் தொடராக எழுதிவந்த 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற மொழிபெயர்ப்புத் தொடர் முடிந்ததும், அந்நூலை அவர் தனது மூன்றாவது மனிதன் பதிப்பகத்தினூடாக வெளியிட்டு வைத்தார். ஈழத்துத் தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில், இளம்பிறை ரஹ்மான் அவர்களது பதிப்பு நேர்த்திக்குப் பின்பான தமிழ் நூல் பதிப்புகளில், அதேவகையில் அழகும் நேர்த்தியும் கொண்ட பதிப்புகளாக வந்த நூல்களுடன் ஒப்பீடு செய்வதாயின் நான் அறிந்தவரை, அவரது மூன்றாவது மனிதன் பதிப்பகம் வெளியிட்ட நூல்களைத்தான் சொல்ல முடியும். தற்போது அவர் வதியும் இலண்டனிலிருந்து நடத்திவரும் சமூகம் இயல் பதிப்பகத்தினூடு பதிப்பித்து வரும் நூல்கள் அனைத்தும் அவருக்கேயுரிய அதே மூன்றாவது மனிதன் பதிப்பிலிருந்த அழகும் நேர்த்தியும் வாய்ந்த விதத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இப்போது என் கைக்குக் கிடைத்திருக்கும் 'பண்டார நாயக்க முதல் ஜே.வி.பி. வரை' என்ற நூலும் பௌசரின் அதே அழகிய முத்திரையுடன் வெளிவந்திருப்பதை நீங்கள் காணலாம்.

இந்த நூலின் ஆசிரியர் க. சண்முகலிங்கம் அவர்கள், அவ்வப்போது அலை சஞ்சிகையில் எழுதும் கட்டுரைகள் மூலம் என்னைக் கவர்ந்த ஒரு முக்கியமான எழுத்தாளராக- அவரை நேரில் சந்திக்காத காலத்திலிருந்தே - எனக்கு அறிமுகமாகியிருந்தார். அவர் எழுதும் கட்டுரைகளின் ஒவ்வொரு வார்த்தைகளும் மிகக் கவனமாகவும் செட்டாகவும் எழுதப்பட்டிருக்கும். தேவைக்கதிகமாக ஒரு சொல் இருக்காது. அவரது வரிகள் ஒவ்வொன்றையும் நான் அப்போதிருந்தே விரும்பிப் படித்திருக்கிறேன். அவர் எழுத்தில், குறுகத் தறித்த குறள் போல தேவைக்கதிகமான ஒரு சொல்லைக்கூட காணமுடியாது. பெரும்பாலும், தமிழுக்கு வராத, ஆனால் தமிழுக்கு அவசியமானதென அவர் கருதும் கட்டுரைகளையும் நூல்களையும் தேவை கருதி எங்கெங்கோ இருந்தெல்லாம் தேடி வந்து, தமிழில் மொழிபெயர்த்து ஈழத்துத் தமிழ் நூற் பரப்பினுள் கொண்டுசேர்க்கும் பணியை அவர் தனக்கென வரித்துக் கொண்ட பணியாக இன்றுவரை தொடர்ந்து செய்துவருகிறார். ஆறுமுக நாவலர் மறைந்தபோது, அவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் எழுதிய 'நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல், சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும் ஏத்து புராண ஆகமங்கள் எங்கே, பிரசங்கம் எங்கே ஆத்தன் அறிவு எங்கே...' என்று, கவி எழுதி வியந்தது போல, தமிழில் சுயமாக இல்லாத, அம்மொழிக்கு வலுவூட்டக் கூடிய, நவீனகாலத்துக்குரிய அல்லது தேவைப்படுகின்ற ஆய்வுகள், சிந்தனைகள், வரலாறுகள் போன்ற பல விடயங்களை, காலப் பொருத்தம் கருதித் தன் பிரதான பணியாகக் கொண்டு, தமிழில் மொழிபெயர்ப்பாகவும் தழுவலாகவும் தொடர்ச்சியாக எழுதியும் நூல்களாகப் பதிப்பித்தும் வரும் பெரும்பணியை ஆற்றி வருபவர் சண்முகலிங்கம் அவர்கள்.

இந்த நூல் பற்றியும், நூலாசிரியர் பற்றியும் தனது மிகச் சிறப்பான அறிமுகவுரையில் அல்லது அணிந்துரையில் மு. நித்தியானந்தன் அவர்கள், அவரை 'அறிவுலகின் கைவிளக்கு' என்று குறிப்பிட்டிருப்பார். மிகப் பொருத்தமான படிமம். எனது பாடசாலைக் காலம் ஊருக்கே மின்சாரம் வராத காலம். கும்மிருட்டுக்குள் கைவிளக்கின் உதவியுடன் படிக்கிற அல்லது தேவைப்படும் பொருட்களைத் தேடியெடுக்கின்ற அனுபவத்தோடு படித்து வளர்ந்தவன் நான் என்ற முறையில், சண்முகலிங்கம் அவர்களது சமகாலத் தேவையறிந்து, அதற்கேற்ற நூல்களையும் கட்டுரைகளையும் தேடியெடுத்து எம்முன்

வைத்துள்ள அரிய செயற்பாட்டுக்கு மிகப் பொருத்தமான படிமம் இதுவாகத்தான் இருக்க முடியும் என்று கருதுகிறேன். தமிழ் மொழி மூலம் உயர்தர வகுப்புவரை படித்த எனது பரம்பரையினருக்கு இத்தகைய, ஆங்கிலத்தில் வெளிவந்த பல அரிய நூல்கள் இருக்கின்றன என்பதை அறிமுகப்படுத்தியவையும் தமிழிலேயே அவற்றை வாசிக்கும் வாய்ப்பை அளித்தவையும் பெரிதும் அவரது மொழிபெயர்ப்பு நூல்கள்தான் என்பது ஒன்றும் மிகச் சாதாரண பணியல்ல. அது விளக்கேந்திய சீமாட்டியின் பணியையொத்த ஒரு பணி. இது தவிர மதிப்புக்குரிய சண்முகலிங்கம் அவர்கள் பல கவனத்துக்குரிய முக்கியமான ஆய்வு நூல்கள் தொடர்பாக விதைக் குழுமத்தின் அனுசரணையுடன் தொடர்ச்சியாகச் செய்துவந்த 'ஸூம்' வழி உரையாடல்களும் மிகவும் முக்கியமானவை. அந்த வகையில் எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய இவர்கள் இருவரும் சம்பந்தப்பட்ட இந்த நூல் பற்றிய சிறிய அறிமுகக்




குறிப்பாக ஒரு சில வார்த்தைகள் எழுதக் கிடைத்த சந்தர்ப்பத்தை, நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன்.

இந்த நூல், நமது சமகாலத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற சிந்தனையாளர்களான றெஜி சிறிவர்த்தன, பேராசிரியர் நிர்மால் றஞ்ஜித் தேவசிறி, பேராசிரியர் ஜி.பி. கீரவல்ல, கலாநிதி சரத் அமுனுகம, பேராசிரியர் எச்.எல். செனவிரத்ன ஆகியோரது எழுத்துகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து கட்டுரைகளின் தொகுப்பாகும். இத்தொகுப்பினைக் கொண்டுவருவதற்கான அவசியம் பற்றி ஆசிரியர் குறிப்பிடும் காரணம் முக்கிய கவனத்துக்குரியது: 'இக்கட்டுரைகள் ஆங்கிலத்தில் வெளிவந்ததால், பெருமளவிலான தமிழ் மொழி வாசகர்களை, இவற்றின் கருத்துகளும் உள்ளடக்கங்களும் சென்றுசேர வாய்ப்பில்லை. இவற்றினை தமிழ்மொழி வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற பேராவல் தான், இந்தப் பணியைச் செய்ய என்னைத் தூண்டியது'.

உண்மையில், இலங்கையில் தாய்மொழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட வேளையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கில மொழி கற்பித்தல் மீதான கவனம் எமது பாடசாலைகளில் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. நாட்டு மக்களுக்கான அரச மொழிக் கொள்கை கொண்டுவரப்பட்டபோது, மாற்று மொழி பேசும் சாதாரண மக்கள் தங்களுக்கிடையேயான புரிதல்களுக்கான கருத்துப் பரிமாறல்களைச் செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதன் அவசியத்தைப் பற்றி அரசதரப்பு எந்தக் கவனமும் எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாகவே, இம்மக்கள் ஒரு தீவுக்குள் வாழும் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற இரண்டு தீவுமக்கள் போல வாழத் தள்ளப்பட்டனர். இந்த நடைமுறையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டின் அடிமட்டத்தவரான சாதாரண மக்களே. இம்மாற்றத்தின் பின்னான காலம் இனங்களுக்கிடையிலான முறுகல்களை ஏற்படுத்தவும் பெரும் இனக்கலவரங்களை ஏற்படுத்தவும் அதன் மூலமாக ஆளும் வர்க்கங்கள் நாட்டைத் தமது நலனுக்கேற்றவகையில் சீரழிக்கவும் வாய்ப்பாக அமைந்தது என்பது எமது இன்றைய வரலாறு.

அடுத்ததாக இந்தத் தொகுப்பிலுள்ள நூல்களின் தமிழாக்கம் பற்றி ஆசிரியர் சண்முகலிங்கம் அவர்கள் குறிப்பிடுகையில், இவை உண்மையில் நேரடி மொழிபெயர்ப்புகள் அல்ல. மாறாக, *'மூலத்துக்கு விசுவாசமாக இருந்து மீள எடுத்துச் சொல்லுதல்'* என்ற முறையிலேயே இவை செய்யப்பட்டுள்ளன என்று குறிப்பிடுகிறார். அதாவது, *'மீள எடுத்துச் சொல்லுதல் என்பது மொழிபெயர்ப்புப் பணியிலிருந்து வேறுபட்டது. இதில் சுருக்கித் தருதல், தழுவி எழுதுதல், சிக்கலான கருத்துகளை எளிமைப்படுத்திக் கூறுதல், விளக்கியுரைத்தல், இடையிடையே எனது கருத்துகளையும் கூறுதல் என இதன் உள்ளடக்கத்தை நான் கையாண்டுள்ளேன்'* என்று அதை அவர் விரிவாகக் குறிப்பிடுகிறார். இதிலுள்ள முக்கியமான விடயம், அவர் சொல்லும் 'மூலநூலுக்கு விசுவாசமாக இருத்தல்' என்பது. உண்மையில் நானும் சிறியளவில் அவ்வப்போது சில மொழிபெயர்ப்புகள் செய்திருக்கிறேன் என்ற வகையில், இப்படிச் செய்வது, நேரடி மொழிபெயர்ப்பை விடக் கடினமானதும் மேலதிக உழைப்பைக் கோருவதுமாகும் என்பது மட்டுமல்ல, அதற்கு அதிகபட்சமான மூலமொழிப் புலமையும், மொழியாற்றலும் அசாத்தியப் பொறுமையும் அவசியம் என்று நம்புகிறேன். உண்மையில் இவை மூன்றையும் தன்னகத்தே கொண்டவர் அவர் என்ற காரணத்தினாலேயே மிக அமைதியாக இருந்து செயற்படும் ஒரு முக்கியமான ஆளுமையாக அவர் விளங்கி வருகிறார். அந்த வகையில், நாட்டின் அரசியற் போக்கில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய பண்டாரநாயக்கவின் அரசியற் பிரவேசத்தில் தொடங்கி றோகண விஜேவீரவின் மறைவு வரையான 60 ஆண்டுகால வரலாற்றின் மிக முக்கியமான வரலாற்று நிகழ்வுகளையும், அவற்றோடொட்டிய சிந்தனைப் போக்குகள், செயற்பாடுகள் அவற்றின் தாக்கங்கள் என்பவற்றையும் எடுத்

துச் செல்வதாக இந்நூல் அமைகிறது என்று சொல்லலாம்.

நூலின் முதலாவது கட்டுரையாக அமைந்திருப்பது மறைந்த மதிப்புக்குரிய பேரறிஞரும், கலையிலக்கிய வாதியும், சமூகச் செயற்பாட்டாளரும், இலங்கை மனித உரிமைகளுக்காக நிறுவப்பட்ட முதலாவது அமைப்பான இலங்கை மனித உரிமைகளுக்கான இயக்கம் (Civil Rights Movement of Sri Lanka) என்ற அமைப்பின் ஸ்தாபகருமான றெஜி சிறிவர்த்தன அவர்களது கட்டுரை. றெஜி சிறிவர்த்தன அவர்கள் புனைவுகள், சுயசரிதைக் குறிப்புகள், திரைக்கதைகள் என்று கலையிலக்கியம் சார்ந்த கட்டுரைகளை மட்டுமல்லாது பல அரசியல் வரலாறு சார்ந்த விமர்சனக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது எழுத்துகளது தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய நண்பரும் ஆசானுமான ஏ.ஜே. கனகரத்ன அவர்களால் இரண்டு பெரும் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன. (இவ்விடத்தில் ஒரு தகவலுக்காக: றெஜி சிறிவர்த்தன அவர்களது சுயசரிதைக் குறிப்புகளாகச் சொல்லப்படும் Living underground என்ற நூல், தமிழில் என்னால் மொழிபெயர்க்கப்பட்டு சரிநிகர் இதழில் 'தலைமறைவு வாழ்க்கை' என்ற தலைப்புடன் தொடராக வெளிவந்தது.)

இந்த முதலாவது கட்டுரை ஜேம்ஸ் மனர் என்பவர் எழுதிய இலங்கையின் முன்னாள் பிரதமரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களது வாழ்க்கை வரலாறு என்ற நூல் பற்றி, றெஜி சிறிவர்த்தன அவர்கள் ஆங்கிலச் சஞ்சிகையான Thatched Patio-வில் எழுதிய நீண்ட விமர்சனக் கட்டுரையின் தழுவல் மொழிபெயர்ப்பாக அமைகிறது. பண்டார நாயக்கவின் தனிமை நிறைந்த இளமைக்காலம், அதன் காரணமாக அவரில் உருவான பலவீனமான ஆளுமை, அவரிடமிருந்த மிகுந்த தற்புகழ்ச்சி நாட்டம் என்பவற்றை ஜேம்ஸ் மனரது வரலாற்றிலிருந்து எடுத்து விரிவாக விளக்கும் இந்தக் கட்டுரையின் ஆசிரியர் றெஜி சிறிவர்த்தன, பண்டாரநாயக்க பற்றிய பல கவனத்துக்குரிய தனது அவதானங்களையும் கூட விரிவாகத் தருகிறார். நூல் ஆசிரியர் ஜேம்ஸ் மனர் சொன்ன தகவல்களுடன் சேர்த்துத் தனது அவதானங்களையும் இணைத்து அவர் குறிப்பிடும் இக்கட்டுரையிலுள்ள பல தகவல்கள் மிக முக்கியமானவை. உதாரணமாக ஒன்றைச் சொல்வதானால், காலிமுகத்திடலில் நடந்த தமிழ் சத்தியாக்கிரகிகள் மீதான தாக்குதலை நடத்தியவர்கள், பொலிசார் வந்ததும் விட்டு விட்டு ஓடியதும், பின்னர் பொலிசாரை அதில் தலையிடாமல் இருக்கும்படி பண்டார நாயக்க சொன்னதையடுத்து, இன்னும் அதிகமாகச் சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டதும் போன்ற தனக்குக் கிடைத்த பல தகவல்களூடு பண்டார நாயக்கவின் உறுதியற்ற போலித்தனமான பெருமித நடத்தைகள் பற்றியும் உதாரணங்களுடன் விளக்குகிறார் றெஜி. பண்டார நாயக்கவிடமிருந்த உறுதியற்ற தன்மையும் சரியான கொள்கைகளை அவர் அறிந்திருந்தாலும் நெருக்கடிகளின் போது அவற்றை விட்டுக்கொடுக்கும் அவரது பலவீனமான ஆளுமையின் தன்மையும் அவருக்கு இறுதியில் ஆபத்தாக முடிந்தது என்று அவர் இக்கட்டுரையில் பதிவுசெய்கிறார். பண்டார நாயக்கா, இனவாதம், சீர்திருத்தம் என்ற ஒன்றுக்கொன்று முரணான இரண்டு விடயங்களையும் நிறுவனமயப்படுத்தினார் என்று மனர் சொல்வதை றெஜி தனது கட்டுரையில் ஆமோதிக்கிறார். இறுதியாகத் தனது கட்டுரையை இப்படி முடிக்கிறார் றெஜி:

'பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்தல் பண்டார நாயக்கவிடம் நீண்ட நாள் கனவாக இருந்த திட்டம். இதன் மூலம் உள்ளூர் மட்டத்தில் ஜனநாயகத்தை வளர்த்து முன் செல்ல அவர் விரும்பினார். ஆனால் நடந்தது என்ன? இனக் குழும மோதல் அதைச் சிதறடித்தது. அவர் இலங்கைச் சமூகத்தை இரண்டாகப் பிளவுபடுத்திய மோதல்களைக் கட்டுப்படுத்தாததன் விளைவாகக் கட்டுக்கடங்காத இராணுவமயமாக்கல், அரசாங்கத்தின் சர்வாதிகாரப் போக்கு என்பன எல்லை மீறிச் சென்றன. அவருக்குப் பின்வந்த ஆட்சியாளர்கள் இவை இரண்டையும் முழு நிறைவான வடிவில் செயற்படுத்தினர், பண்டார நாயக்க இப்படி நிகழும் என நினைத்திருக்க மாட்டார். ஆனால் அது நிகழ்வதற்குரிய வழியை அவர் வகுத்துவிட்டுச் சென்றார் என்று முடிகிறது இந்தக் கட்டுரை.

நூலிலுள்ள இரண்டாவது கட்டுரை போருக்குப் பின்னான சிங்களப் பௌத்தர்களின் உணர்வுநிலை என்ற நூல் பற்றியது. பேராசிரியர் நிர்மால் றஞ்சித் தேவசிறி அவர்களால் இணையத்தளத்தில் எழுதப்பட்ட ஒரு கட்டுரையின் விரிவாக்கப்பட்ட வடிவமாக இந்த நூல் அமைந்துள்ளது. சரிநிகர் பத்திரிகையை நாங்கள் வெளியிட்டு வந்த ஆரம்ப காலத்தில் X group என்ற பெயரில் இயங்கத் தொடங்கியிருந்த இளைஞர்களில் ஒருவராக எனக்கு இவர் அறிமுகமாகினார். அதன் செயலாளராக இவர் இயங்கி வந்தார் என்று நினைக்கிறேன். அப்போது அவர் கொழும்புப் பல்கலைக்கழக மாணவராக இருந்தார். பின்னாளில் அந்த அமைப்பு உடைந்து போனபோதும், சரிநிகர் தொடங்கிய காலத்து முக்கியமான இடதுசாரியச் சிந்தனை கொண்ட, தமிழ் மக்களது போராட்டம் பற்றிய ஓரளவு தெளிவான புரிதல்களைக் கொண்ட, அதுபற்றி எம்மோடு உரையாடல்களில் ஈடுபட்டு வந்த சிங்கள இளைஞர்களில் இவரும் ஒருவராக இருந்தார். இவர் எழுதியுள்ள, வடக்குக் கிழக்கு என்ற தமிழர் வாழும் பிரதேசங்களைச் சிங்களப் பௌத்தர்களது மரபுரிமைப் பிரதேசங்களாக முன்வைக்கும் நோக்குடன் எழுந்த சிங்களப் பௌத்த வாதத்தைக் கேள்விக்குள்ளாக்கும் இந்த நூலில் பேசப்படுபவை, மரபுரிமைக் கருத்தியல், வரலாறு என்பவை பற்றிய முயற்சி போலத் தென்பட்டாலும், அதில் உள்ளடங்கியிருப்பது முழுக்க முழுக்க அரசியல் சார்ந்தது என்று சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகின்றன. இது தொடர்பாக நூலாசிரியர் தேவசிறி விளக்குகையில், 'தம்பதிவவில் உள்ளடங்கிய பௌத்த மரபுரிமை இடங்களின் நியாயாதிக்கம் இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் உரியது. அதைத் தட்டிக் கேட்கும் எண்ணம் சிங்கள மக்களிடம் கிடையாது. ஆனால் வடக்குக் கிழக்கில் இருக்கும் மரபுரிமை இடங்கள் என சிங்களப் பௌத்தர்கள் கருதும் இடம், உண்மையில் ஒரு கற்பனை செய்யப்படும் இடமாக உள்ளபோதும், அது கற்பனை என்ற எல்லைக்கோட்டையும் கடந்து அரசின் நியாயாதிக்கத்தை உபயோகித்து தமதாக்கிக் கொள்ள கூடியவை என்று அவர்களால் கருதப்படும் இடமாக மாறியுள்ளது என்று அவர் குறிப்பிடுகிறார். தேவசிறி அவர்களது இந்த நூல் சமகாலச் சிங்களப் பௌத்த மேலாதிக்கப் போக்கைக் கேள்விக்குள்ளாக்கும் ஒரு முக்கியமான நூல்.

மூன்றாவது கட்டுரை, வரலாற்றுத் துறைப் பேராசிரியர் ஜி.பி. கீரவல்ல அவர்களது மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) 1971-ல் நடந்த ஆயுதக் கிளர்ச்சி பற்றிய சற்று நீண்ட, எனது பார்வையில் மிக முக்கியமான, விமர்சனக் கட்டுரையாகும். ஜே.வி.பி-யின் இந்தக் கிளர்ச்சி நடப்பதற்கான பின்னணியில் நடந்த இடதுசாரிக் கட்சிகளின், படித்த மேற்

தட்டைச் சேர்ந்த நபர்களைக் கொண்ட தலைமைத்துவத்தின் போக்கு, அவர்களுக்கும் சாதாரண தொழிலாளர்களுக்கும் இடையிலான உறவின் தன்மை, தொழிலாளர் அணியை அவர்கள் வெறும் தொழிற்சங்கப் போராட்டங்களுக்காக மட்டும் பயன்படுத்தி வந்தமை, பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் அரசியலில் கூட்டுச் சேர்ந்தமை மூலம் அதற்கு முற்போக்குச் சாயம் பூசியமை, நாட்டில் நிலவிவந்த படித்த வாலிபர்களுக்கான வேலையில்லாத் திண்டாட்டமும் அதன் காரணமாக அவர்களிடையே எழுந்த விரக்தியும் என்று பல்வேறு பின்னணிக் காரணங்களின் அடிப்படையில் அவற்றிலிருந்து வெளியேறிய முழுக்க முழுக்க இளைஞர்களைக் கொண்ட ஓர் அமைப்பாக உருவாகிய ஜே.வி.பி-யின் 1971 ஏப்ரல் கிளர்ச்சிக்கான சமூகப், பொருளாதார, பின்னணிகளை விளக்குவதுடன், அதற்கான நியாயத்தையும் அதன் போதாமைகளையும் மிகவும் விரிவாக ஆராயும் ஒரு நூல் இது. 70-களில் நாட்டில் நிலவிய பிரதான சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களைப் பற்றிய போதிய புரிதல்கள் இன்றி, நாட்டில் உருவாகி வந்த வர்க்கங்களையும் அவற்றின் அணிசேர்க்கையையும் பற்றிய விரிவான பார்வைகளுமின்றி - குறிப்பாகப் புரட்சிகர சக்தியாக, அவர்களுக்கு இருந்திருக்கக் கூடிய தோட்டத் தொழிலாளர்களையும் புறமொதுக்கி - போராடத் தொடங்கியது ஜே.வி.பி. அது மட்டுமன்றி, கியூபப் புரட்சியின் பாதிப்புக் காரணமாக மக்களோடிணைந்த ஒரு மக்கள் போராட்டமாகத் தமது ஆயுதமேந்திய போராட்டத்தை நடத்துவதற்குப் பதிலாக, வெறும் அர்ப்பணிப்புள்ள இளைஞர்கள் மட்டுமே போராடி ஒரு புரட்சியை நடத்திவிட முடியும் என்ற நம்பிக்கையுடன், அது போராட்டத்தில் குதித்தது. அதன் காரணமாகவே, அந்தப் போராட்டத்தில் அது பேரிழப்புகளுடன் தோல்வியைத் தழுவியதை விரிவாக விளக்குகிறது இந்த நூல். அது மட்டுமன்றி அதன் தோல்விக்கான காரணம் அவர்களது அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளிலேயே இருந்தது என்பதைத் தெளிவாக விளக்குகிறார் நூலாசிரியர் பேராசிரியர் கீரவல்ல அவர்கள். நூலின் இறுதியில் அவர்களது தோல்விகளுக்குக் காரணமான விடயங்களை அவர் சுருக்கக் குறிப்பாகப் பதிவு செய்கிறார். அவற்றில் மூன்றாவதும் இறுதியானதுமான பகுதியை எனது இக்குறிப்புடன் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது என்று கருதுகிறேன்.

அவர் எழுதுகிறார்: *'மக்கள் விடுதலை முன்னணியின் 1971-ம் ஆண்டுக் கிளர்ச்சி முதலாளித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கிளர்ச்சி என்பதில் ஐயமில்லை. அம்முன்னணியினர் சோசலிசச் சமுதாயத்தை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடையவர்களாய் இருந்தனரேனும், தாம் அமைக்கப்போகும் சோசலிசம் பற்றி அவர்களிடம் தெளிவான திட்டம் எதுவும் இருக்கவில்லை. சோசலிசச் சமுதாயத்தை நிர்மாணிக்கும் 'தெய்வீக உரிமை' தமக்கு இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணி நம்பியது. ஆயினும் குட்டி முதலாளித்துவக் கிளர்ச்சிவாதிகளான இவ்வியக்கத்தினரிடமிருந்த தியாகமும், ஆற்றல்களும், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையும் நெறிப்படுத்தலும் இல்லாமையினால் வீணாக விரயம் செய்யப்பட்டன'.*

உண்மையில் ஜே.வி.பி-யின் 1971 எழுச்சி பற்றிய இந்தக் கட்டுரை இன்னொருவகையில், தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கட்டுரை. அன்று அந்தச் சிங்கள இளைஞர்கள் நாடு முழுவதிலும் பொலிஸ் நிலையங்கள் மீது நடத்திய திடீர்த் தாக்குதலால் இலங்கை அரச இயந்திரத்தை ஒரு சில நாட்களுக்கு ஆட்டங்காண வைத்தனர் என்பது ஒன்றும் சாமானிய விடயமல்ல. ஆனால், அது வடக்குக் கிழக்கில் வெறும் 'சேகுவராக் கலவரம்' என்ற ஒரு கலவரமாகவே அப்போது பதின்ம வயதிலிருந்த என் போன்ற இளைஞர்களால் புரிந்துகொள்ளப்பட்டது. ஜே.வி.பி-யில் இணைந்து போராடிய அந்த இளைஞர்களுக்குக் கிடைத்த ஆரம்ப வெற்றியைத் தக்கவைக்கத் தேவையான தயார் நிலைக்கு நகர்வதற்கான எந்தத் திட்டமும் அவர்களிடம் இல்லாதிருந்ததும், அடுத்ததாக என்ன செய்வது என்பதைப் பற்றிய புரிதல் எதுவும் இல்லாதிருந்தமையும் ஒருசில நாட்களுக்குள் அவர்களது போராட்டம் வெறும் தீவிரவாத இளைஞர் கிளர்ச்சியாக முத்திரை குத்தப்பட்டு முற்றாக அடக்கப்பட்டதுடன் பெருந்தொகையான போராளிகள் கொல்லப்பட்டும் இன்னும் பலர் சிறையில் அடைக்கப்பட்டதுமாக நடந்து முடிந்தது. ஆனால் துயரம் என்னவென்றால், தமிழ் இளைஞர்களால் கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலத்துக்குப் பின்னால் தொடங்கப்பட்ட ஆயுதப் போராட்ட வடிவிலான விடுதலைப் போராட்டம் என்ற பேரெழுச்சியுடன் நம் காலத்தில் வடக்குக் கிழக்கில் இளைஞர்கள் ஆயுதத்தைத் தூக்கிய போது, ஆயுதத்தைத் தூக்கினால் அதுவும் இளைஞர்கள் ஆயுதம் தூக்கினால் மட்டுமே போதும் என்ற நினைப்புடன், அதே விதத்திலான தாக்குதல் வடிவிலமைந்த (அவர்கள் அதுவே கெரில்லா யுத்தம் என்று நம்பினர்) போராட்டத்தில் இறங்கியபோது, அவர்களில் யாருக்குமே ஜே.வி.பி-யின் ஆயுதமேந்திய போராட்டம் ஏன் தோற்றுப் போனது என்ற கேள்வியைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருக்கவில்லை. 1980-ல் வெளியான இந்த நூல், 1983 கலவரம் முடிந்த கையோடு பெருந்தொகையான தமிழ் இளைஞர்களுக்கு, இந்திய அரசு ஆயுதப் பயிற்சியை வழங்கிய போதோ, அதற்குப் பின்னரோ தமிழில் வருவது நல்லது என்பது பற்றி யாருமே சிந்தித்துப் பார்க்கவுமில்லை. அப்போது இப்படியான விடயங்களைத் தேடி வாசித்த என் போன்ற சில இளைஞர்களுக்குக்கூட இப்படி ஒரு கட்டுரை வெளிவந்தது தெரிந்திருக்கவில்லை. இப்போது கிட்டத்தட்ட மூன்று தசாப்த காலத்துக்குப் பிறகு இந்தக் கட்டுரையின் மொழிபெயர்ப்பைப் பார்க்கும் போது, இந்தக் கட்டுரை அந்தக் காலத்திலேயே தமிழில் வெளிவந்திருக்குமானால், அன்று தோன்றிய பல விடுதலை இயக்கங்களுக்குள், போராட்டத்துக்கு வெறும் ஆயுதங்கள் மட்டும் போதாது என்ற புரிதல் ஏற்படுவதற்குச் சிறிதளவாவது பயன்பட்டிருக்கும் என்று எனது சொந்த அனுபவத்திலிருந்து நான் நம்புகிறேன். அதே வேளை இரண்டாவது தடவையாக அதே ஜே.வி.பி-யினர் மீண்டும் 80-களின் பிற்பகுதியில் களத்தில் இறங்கி மாபெரும் பேரழிவுக்குள்ளான அவர்களது போராட்டத்தின் போதும் கூட, அவர்களும் தம்மீதான இந்த விமர்சனத்தைக் கணக்கில் எடுத்திருக்கவில்லை என்பதுவும் கூடக் கவனத்துக்குரிய ஒன்றாகும். அப்போது அவர்கள் ஒருவகை இன ஒதுக்கல் கோட்பாட்டைத் தம்மகத்தே கொண்டிருந்ததால் அவர்களிடமும் அரசுக்கெதிரான போராட்டத்தை வடக்குக் கிழக்கின் போராட்டத்துடன் கோட்பாட்டளவில் அல்லது கொள்கையளவில் இணைந்த ஒரு ஐக்கியப்பட்ட போராட்டமாக நடத்துவதன் அவசியம் பற்றிய சிந்தனை சிறிதளவேனும் இருந்திருக்கவில்லை என்பதும் கவனத்துக்குரிய ஒன்றாகும்.

நான்காவது கட்டுரை, கலாநிதி சரத் அமுனுகம அவர்களுடைய மாற்றத்துக்கான கனவுகள்: (Dreams of Change) என்ற நூலின் 7-வது அத்தியாயமாகும். சரத் அமுனுகம ஒரு மூத்த

அரசியல் வாதியாகவும், இலங்கை நிர்வாக சேவையில் பணி யாற்றிய, அமைச்சுகளின் செயலாளராக இருந்த ஒரு சிவில் சேவை அதிகாரியும் ஆவார். இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ள இந்த அத்தியாயத்தின் தலைப்பு: 'அரசாளும் தொழில்: மத ஒழுக்கமும் மண் பற்றும்' என்பதாகும். இலங்கை அரசியலில் பௌத்த மதப் பீடங்கள் பங்கேற்கும் நிலைக்கு எவ்வாறு வந் தன? அதற்கான அவர்களது கருத்தியற் தளம் எங்கிருந்து உருவானது, அதன் விளைவுகளாக நாட்டில் உருவான அரசி யற் போக்குகள் என்ன என்பவை பற்றி விபரிப்பதாக இக்கட் டுரை அமைந்துள்ளது. நூலாசிரியர் அமுனுகம அவர்கள் தனது இந்தக் கட்டுரை எத்தகைய விடயங்களைப் பேசுகிறது என்பதைச் சுருக்கமாக இப்படிக் கூறுகிறார்: *'இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாகத் தீவிரவாதப் பௌத்த துறவிகள் குறிப்பாக 'மவ்பிம சுறக்கிறீனம வியாபாரய' (அதாவது தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்கான செயலணி) என்ற இயக்கத்தி னர் என்ன கருத்தினையுடையவர்களாக இருந்தார்கள்? உடன்படிக்கையின் இனக்குழு அரசியற் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களது நிலைப்பாடு யாது? என்பதை நான் இக்கட்டுரையில் ஆராயவுள்ளேன். இக்கட்டுரை, பௌத்த துறவிகளின் நோக்கு நிலையை எவ்வாறு மாற்றியது, தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக சங்க (பௌத்த) அமைப்பின் நிலைப்பாடு யாது?, அரசியலில் சங்க அமைப்பு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதால் குறிப்பாகத் துறவி கள் ஆயுதமேந்திய போராட்டத்தில் தம்மைப் பிணைத்துக் கொள்வதால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் யாவை? இவ் வாறு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டபோது முதன்மைப்ப டுத்தப்பட்ட பௌத்த கருத்தியற் கூறுகளும் பௌத்த சமயக் குறியீடுகளும் எவை? என்பன இக்கட்டுரையில் ஆராயப்பட வுள்ளன'* என்று தெரிவித்திருக்கின்றார். அந்த வகையில் அவர் தனது கட்டுரையின் முதலாவது பகுதியில் தாய்நாட் டைக் காக்கும் இயக்கத்தின் அரசியற் கொள்கைகள், புனிதத் தலங்களான பௌத்தர்களின் முதுசம்கள், இவை பற்றிய அர சியற் கட்சிகளின் நிலைப்பாடு, இந்தியா பற்றிய மனப் பிம் பம், அரசியற் செயற்பாட்டாளர்களாகத் துறவிகள் என்ற தலைப்புகளிலும் இரண்டாவது பகுதியில், கத்தோலிக்க இயக்கத்துக்கு எதிர்ப்பு, அரசியல் அதிகாரத்தைப் பலாத் கார வழியில் பெறல், பிக்குகளின் ஒழுங்கமைப்பு என்ற தலைப்புகளிலும் தனது கருத்துகளை விமர்சன ரீதியாக விளக்குகிறார். மிகக் கவனத்துக்குரிய - தமிழில் ஏற்கனவே வாசித்திருக்கக் கிடைத்திராத இன்னொரு முக்கியமான கட் டுரை இது.

அடுத்ததும் நூலின் இறுதியானதுமான கட்டுரை, அமெரிக்க வேர்ஜினியப் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்ற மானுடவியற் துறைப் பேராசிரியர் எச்.எல். செனிவி-ரத்ன அவர்களது கட்டுரையாகும். இதுவும் பௌத்த மதத் தோடு சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான கட்டுரையே. 'பௌத் தமும் இலங்கையின் சமூக இலக்கிய மாற்றமும்' என்ற உபத லைப்புடன் வெளிவந்த அவரது Religion in Context என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட மிக முக்கியமான கட்டுரை இது. இக்கட்டுரை பௌத்தமதம் எவ்வாறு பாரம்பரிய பௌத்த நெறிமுறையிலிருந்து - அதாவது, மக்களுக்கு ஆன்மீக வழி காட்டலில் ஈடுபடுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட நெறிமுறையிலிருந்து - மாறி, சமூக சேவை என்ற கடப்பாடும் அவர்களுக்கு உண்டு என்ற புதிய விளக்கங்களை முன் வைக்கும் ஒன்றாக எழுந்தது என்பதையும், அது எவ்வாறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும், ஆட்சி அதிகா ரத்தில் தலையீடு செய்தலையும் அவர்களது கடப்பாடுகளில் ஒன்றாக வரித்துக் கொண்டது என்பதையும் விளக்குவதாக அமைகின்றது. மரபுச் சமூகத்தில் பௌத்தத்தின் வகிபாகம், புத்த பிக்குகளும் 'சமூக சேவையும்', அதன் வழியாக வித்தி யோதய, வித்தியலங்கார பிரிவேனாக்கள் பௌத்த மறும லர்ச்சி மையங்களாக அமைந்திருந்ததையும், குறிப்பாக அந காரிக தர்மபாலவின் தேசிய மறுமலர்ச்சித் திட்டத்துக்குப் பங் களிப்பவையாக அவை ஆகியதும் பற்றி விரிவாக விளக்குகி றது இந்தக் கட்டுரை. வித்தியோதய பிரிவேன கிராமிய அபி விருத்தி என்ற வழிமுறையில் இயங்கிய அதே வேளை வித்தி யாலங்கார தர்மபாலவின் பண்பாட்டு மறுமலர்ச்சி என்ற வழி முறையில் அதிக கவனஞ் செலுத்தியது. தமிழர்களும் ஏனைய சிறுபான்மை இனங்களும் சம உரிமையோடு வாழ் வதை மறுக்கும் முறையிலான செயற்பாடுகளை (களனிய) வித்தியாலங்கார பிரிவேன பிக்குகள் முன்னெடுத்தனர். தர்ம பாலவின் நாடு தேசியம் மதம் என்ற கோட்பாடுகளை முன் னெடுத்த வித்தியாலங்கார பிக்குகளின் கருத்தியல்களிலி ருந்தே தமிழர்களுக்கும் ஏனைய சிறுபான்மையின மக்களுக் கும் குடியுரிமையை மறுக்கும் கோட்பாடு வளர்த்தெடுக்கப் பட்டதென்பதை கட்டுரை தெளிவாக முன்வைக்கிறது. 1956-இல் இவையிரண்டும் பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்ட தும் சமூகத்தில் பெரும் மாற்றங்களுக்கு வித்திட்டன என்கி றார் கட்டுரையாளர். இதிலிருந்தே பிக்குகள், சம்பளம் பெறும் உத்தியோகங்களைத் தேடிக்கொண்டதும், சாதாரண குடிமக் களில் தங்கியிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டதும் அவர்க ளது சமய நெறி ஒழுக்கங்களிலிருந்து விலகி உலகியல் வாழ் விலும் அரசியலிலும் ஈடுபடத் தொடங்கியதும் நடந்தன என்று குறிப்பிடும் கட்டுரையாளர், இவ்வாறான போக்குகள் வெறு மனே மதப் பீடங்களின் உள்ளகப் பிரச்சினை என்ற எல்லை யைத் தாண்டி, தர்மபாலவின் கருத்துகளின் நீட்சியாக 'இலங்கை சிங்களப் பௌத்தர்களின் நாடு; அதில் சிறுபான் மையினருக்குச் சமத்துவமான உரிமைகளுக்கு இட மில்லை, என்ற சிங்களப் பௌத்த, இனவாத மேலாண்மையை, அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி நிலை நிறுத்தும் அரசியல் இயக்கமாக அது வளர்ந்திருப்பதன் ஆபத்தைத் தெளிவாக முன்வைக்கிறார். இதன் காரணமாக இந்த அரசியல் இலங்கை ஒரு பல்லின, பன்மொழி, பல்கலாசாரத் தன்மையு டைய நாடு என்பதை நிராகரிக்கின்றது என்று உறுதியாக நிறு வுகிறார்.

மொத்தத்தில், மிக முக்கியமான, காலப் பொருத்தம் மிக்க அரசியல் சமூகச் செயற்பாடு மற்றும் வரலாறு சம்பந்தப்பட்ட வர்கள் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல் இது. மேலதிகத் தேவைக்காக மூல நூல்களையும் ஆங்கில மொழி யில் தேடி வாசிக்கலாம். இவ்வாறான முக்கிய விடயங்களைத் தமிழ்ச் சூழலில் அறிமுகஞ் செய்துவைக்கும் விதத்தில் தொடர்ச்சியாக இயங்கிவரும் மதிப்புக்குரிய சண்முகலிங்கம் அவர்களது பணி, மிகக் கவனத்துக்குரிய முக்கிய பணியா கும். அவருக்கும், இந்த நூலை வெளியிட்டுள்ள சமூகம் இயல் பதிப்பகத்திற்கும் அதன் முழுநேரச் செயற்பாட்டள ரான நண்பர் பௌசர் அவர்களுக்கும் என் மனமார்ந்த பாராட் டுகளும் அன்பு நிறைந்த நன்றியும்.



vickneaswaran.sk@thaiveedu.com




# நுஃமானின் ‘உதயப் பொழுதும் அந்தி மாலையும்’ ஓர் அறிமுகம்

– க. நவம்

ஈழத்து நவீன கவிதை முயற்சிகள் குறித்து, ஒரு நம்பிக்கை மிகுந்த காலகட்டத்தில் நாங்கள் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்நாட்களில் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் காத்திரமான பல புதிய நவீன கவிதைகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இந்நாளைய இளங்கவிஞர்களின் கவிதைகளில் காணப்படும் நுண்ணுர்வுடன் கூடிய புத்துலகும், வாழ்வு குறித்த புதுப்புது அனுபவங்களும், நடைமுறை வாழ்வின் நுண்ணிதமான சாரம் சங்களும் கவிதா இரசிகர்களை வியப்பில் ஆழ்த்துகின்றன.

இத்தகைய ஓர் ஆரோக்கியமான புதிய தலைமுறையின் வரவுக்கு வித்திட்டவர்களுள் முக்கியமான ஒருவராக மதிக்கப்படும் மூத்த கவிஞர், நண்பர் நுஃமானின் ‘உதயப் பொழுதும் அந்தி மாலையும்’ என்னும் கவிதைத் திரட்டினை அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஓய்வுநிலைப் பேராசிரியரான நுஃமான் அவர்களது பல கவிதைகளையும் மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் நூல்களாகவும் உதிரிகளாகவும் அவ்வப்போது படித்து வந்திருக்கின்றேன். அவரது பெரும்பாலான கவிதைகளை ஒட்டுமொத்தமாகப் படிக்கும் வாய்ப்பு ஒன்று அண்மையில் எனக்குக் கிடைத்திருந்தது.

‘உதயப் பொழுதும் அந்தி மாலையும்’ என்ற பெயருடன் வெளிவந்திருக்கும் இந்த 456 பக்க நூலானது, 5 பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

18 வயது முதல் 20 வயது வரை நுஃமான் எழுதிய ஆரம்பகாலக் கவிதைகள் ‘உதயம்’ என்ற முதலாம் பகுதியிலும், 21 வயது முதல் 25 வயது வரை அவர் எழுதிய கவிதைகள் ‘முற்பகல்’ என்ற இரண்டாம் பகுதியிலும், 26 வயது முதல் 35 வயதுவரை எழுதிய கவிதைகள் 'நண்பகல்' என்ற மூன்றாம் பகுதியிலும், 36 வயது முதல் 55 வயதுவரை எழுதிய கவிதைகள் ‘பிற்பகல்’ என்ற நான்காம் பகுதியிலும், 56 வயது முதல் 78 வயது வரை எழுதிய கவிதைகள் ‘அந்திமாலை’ என்ற ஐந்தாம் பகுதியிலுமாக, மொத்தம் 156 கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இவர் எழுதிய சுமார் 300 கவிதைகளில், 72 கவிதைகள், ‘தாத்தாமாரும் பேரர்களும்,’ ‘அழியா நிழல்கள்,’ ‘மழைநாட்கள் வரும்,’ ‘துப்பாக்கிக்கு மூளை இல்லை’ எனும் பெயர்கள் கொண்ட நான்கு தொகுதிகளில் ஏற்கனவே வெளிவந்துள்ளன. இவற்றுடன், எஞ்சியுள்ள 228 கவிதைகளில் இருந்து மேலும் 84 கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மொத்தம் 156 கவிதைகளாக இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

பொதுவாக எமது ஆரம்பகாலக் கவிதைச் செயற்பாடுகளும் அவற்றின் தோற்றமும் வடிவக் கட்டமைப்பும் பதின்மவயது முகப்பருக்களையும் - அப்பருவத்து இரகசிய சுயமைதுன சுகத்தையும் ஒத்தவை என்பதை ஒப்புக்கொள்வதில் வெட்கப்பட ஒன்றுமில்லை. பிற்காலங்களில் அவை குப்பைக் கூடைகளில் போய் ஒளிந்துகொள்வதே வழக்கம்!

ஆனால் நுஃமானது ஆரம்பகாலக் கவிதைகளும் பெரும்பாலான பிற்காலக் கவிதைகளும் யாப்புவழி மரபுக் கவிதைகளாகக் காணப்படுகின்ற போதிலும், இலகுவில் புறக்கணிக்க முடியாத கவிதாம்சங்களைத் தம்மகத்தே கொண்டனவாக அமைந்திருப்பதை அவதனிக்க முடிகின்றது.

அதேநேரம் இந்த மரபு, இடைக்காலப் புலவர் மரபு அல்ல. பாரதி, பாரதிதாசன் வழிவந்த - மகாகவி, நீலாவணன், முருகையன் வழிவந்த நவீன செய்யுள் மரபுதான் என்பதை அவரே ஒப்புக்கொள்கின்றார்.

கவிதை எனும்போது வடிவம் முக்கியமல்ல; கவித்துவம்தான் முக்கியமானது; இக்கவித்துவம் முற்றிலும் கவிதையின் உருவம் சார்ந்ததல்ல; அதன் உள்ளடக்கம் - அதன் பொருள் உணர்வு, வெளிப்பாட்டு முறை சார்ந்தது என்ற தெளிவு அவரிடம் இருந்துள்ளது. அவரது பதின்மவயதுக் கவிதைகள்கூட, மிகுந்த கவனிப்புக்குரியனவாகக் காணப்படுகின்றமைக்கு இதனைப் பிரதான காரணமெனலாம்.

நுஃமான் தமது 18 முதல் 25 வயதுவரை எழுதிய கவிதைகளில் இயற்கை, காதல், பெண்ணழகு, அன்பு, ஆன்மீகம், இரக்கம், உழைப்பு, உறக்கம் போன்ற இன்னோரன்ன பல்வேறு விடயங்களை உள்ளடக்கிக் கவிதைகள் புனைந்திருக்கின்றார். உதாரணமாக,

*... எச்சிற்பட்ட / இடத்தின் சுவைதான் என் தேவை*
*கொச்சுப்பழ இதழ் / பதித்த இடத்திதழ் குவித்துப் பின்*
*அச்சா இதுதான் / அமிர்தம் என்று அளக்கின்றேன்*
*சீச்சீ நரகல் / என்றே அவளும் சிரிக்கின்றாள்*

என்று ஒரு காதல் கவிதையிலும்

*... பொன்னின் மணிகள் பொலிந்து சொரிவதுபோல்*
*செந்நெல் விளையும் திறங்கண்டு - கன்னியர்கள்*
*நாவசைத்து பாடுகின்ற*
*நல்லகுரல் கேட்டால்*
*கூவாமல் ஓடும் குயில்*
*எல்லாம் இருக்கும் இனிய மனம் இருக்கும்*
*கல்லாரும் பாடும் கவியிருக்கும் - எல்லாரும்*
*எங்கென்று கேட்பீர் இதுதான் கரைவாகு*
*பொங்கிவரும் இன்பப் பொழில்*

என 'ஊர்வளம் கரைவாகு' என்ற இன்னொரு கவிதையிலும் அழகாகப் பாடியிருக்கின்றார்.

உண்மையில், 1970 முதல் 2022 வரையிலான காலப் பகுதியில் - அதாவது அவரது நண்பகல், பிற்பகல், அந்திமாலைக் காலப் பகுதியில் - எழுதிய கவிதைகளில்தான் நுஃமானின் கவிதா ஆளுமையின் விஸ்வரூபத்தினைக் காணமுடிகின்றது. மார்க்ஸிய, இடதுசாரி அரசியல், முற்போக்கு கருத்து நிலைச் சார்பு அவரது கவிதைகள் பலவற்றில் வெளிப்பட்ட காலமது.

இக்காலகட்டத்தில்தான் மகாகவியின் மரணம் குறித்து 'நான் வளர்ந்த கருப்பை' எனும் படிப்பவர் மனதை அல்லாட வைத்து அலைக்கழிக்கும் அந்தக் கவிதையை எழுதினார்.

*நான் வளர்ந்த கருப்பையை*
*நான் இழந்து போனேன் காண்...*

*நீ இறந்துபோனாய் / நெருக்கென்றதென் நெஞ்சு*
*புள்ளியளவில் ஒரு பூச்சியினைத் தற்செயலாய்*
*சாகடித்துவிட்டுத் தவித்துக் கலங்கிய*
*நீ இறந்து போனாய்*
*என் நெஞ்சம் பதறியது...*

*... என்னை அரும்புகின்ற காலத்தே*
*கண்டுபிடித்தவன் / காணாமல் போனதனால்*
*என்னை மதித்த / இதயம் மறைந்ததனால்*
*என்னுடைய ஊக்கிகளில் / ஒன்றை இழந்ததினால்*
*இன்று கலங்கிக் கசிகின்றேன்...*

செய்நன்றி மறவாத கவிஞர் பாடிய, உச்சபட்ச சோகக் கவிதையின் ஒரு பகுதியிது!

இவ்வாறான தனிமனித உறவுகளும் பிரிவுகளும்தான், சிறந்த கவிதைகளாகின்றன. இதுபோன்ற அக உணர்வுகளாக இருக்கலாம்; சமூக வாழ்வில் எதிர்கொள்ளும் அனுபவங்களாக இருக்கலாம். சொற்களைச் சரிவரக் கையாளும் கலை தெரிந்தால் அவை உன்னதமான கவிதைகளாகலாம்!

இந்நூலின் கடைசி இரு பகுதிகளுமே நுஃமானின் அதியுன்னத கவித்துவத்தைச் சுமந்துவந்த காலப் பகுதியாகும்; 'சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம்' எனும் சனநாயகக் கோட்பாடு தூக்கிலிடப்பட்ட காலம்; இனமுரண்பாடு தாண்டவமாடிய காலம்; துப்பாக்கிகள் குருதி குடித்து வீதியெங்கும் வெறி




கொண்டலைந்த காலம். மானுடத்தை முழுமனதோடு நம்பிய கவிஞரின் மனதில் விரக்தியை விதைத்த காலம்

*மகிழ்ச்சியைப் பாடவே விரும்பினேன்*
*அழுகையின் குரலே / என் செவிகளில் மோதின*

*காதலைப் பாடவே விரும்பினேன்*
*கோபமும் குரூரமும் / என் வழிகளை மறைத்தன*
*வாழ்தலைப் பாடவே விரும்பினேன்*
*மரணமே எனது வாசலில் நின்றது*

*நன் நம்பிக்கையைப் பாடவே விரும்பினேன்*
*அவநம்பிக்கை / என் எதிர் / பாலையாய் நீண்டது*

இவ்வாறாக, அருமருந்தன்ன கவிஞரை அறம்பாடவைத்த காலமது!

விளைவாக, நுஃமான் தனது இறுதி வாக்குமூலத்தை இப்படி முன்வைத்து, முடித்துவைக்கின்றார் -

*எனது கவிதையில் / ஒரு மர்மமும் இல்லை*
*அதுவும் வார்த்தைகள்தான்*
*அது என் உணர்வின் குரல் / அல்ல*
*என் உணர்வின் நிழல்*

*சிலவேளை அது இரங்கி அழும்*
*சிலவேளை அது கோபித்துக் குமுறும்*
*சிலவேளை அது நேசத்துக்காய்*
*இரங்கி ஏங்கும்*
*சிலவேளை அது விரக்தியில்*
*சோர்ந்து துயிலும்*

*கவிதை எனக்கு முகமூடியல்ல*
*அதுவே என் முகம்!*

உண்மையில், நுஃமானின் தன்வரலாற்றுப் பதிவின் கவிதை வடிவமே இந்நூலாகும் என்பது எனது எண்ணமாகும்!

மொழி என்பதும் கவிதை என்பதும் சமூகம் சார்ந்தவைதான். இந்த மொழியைச் செவ்வனே பயன்படுத்தவல்ல கவிஞன் சமூகத்தை ஒருபோதும் விட்டு வெளியேற முடியாதவன்.

அது மட்டுமன்றி, இடதுசாரிச் சிந்தனையத் தனது சித்தாந்தமாக வரித்துக்கொண்டவன், நம்பிக்கையை இலகுவாக இழக்க மறுப்பவன். அவன் ஒளி என்னும் நம்பிக்கையைப் பின்தொடர்பவன். அத்தகைய ஒரு கவிஞனாகவே நான் நுஃமானைப் பார்க்கின்றேன்.

அந்தவகையில், வயதுக் கிரமத்தில் வடிவமைக்கப்படுள்ள இக்கவிதைத் திரட்டினை, அவரது தன்வரலாறாகவும் - வெறுமனே metamorphosis எனப்படும் உருமாற்றமாக அன்றி, Evolution எனப்படும் அவரது கவிதைப்போக்கின் பரிணாம வளர்ச்சியினைப் புலப்படுத்தும் ஒரு பயன்மிக்க ஆவணமாகவும் நான் காண்கின்றேன்.

'இன்று இருப்பதைவிட, மனிதர்கள் நிம்மதியாக, மகிழ்வுடன் வாழக்கூடிய ஒரு உலகத்தை - மோதலும் முரண்பாடுகளும் வன்மமும் போரும் அற்ற ஒரு உலகத்தை - நேர்மையும் அன்பும் கருணையும் மிக்க உலகத்தைத்தான் அவர் கனவு காண்கின்றார். அந்தக் கனவும் எதிர்பார்ப்பும் அவரது பெரும்பாலான கவிதைகளில் வெளிப்படுகின்றன' என்பதில் எந்தவித ஐயமும் இல்லை!

முடிவாக, இந்த நூலில் என்னை வெகுவாகக் கவர்ந்த பல கவிதைகளில் ஒன்றினைப் பகிர்ந்துகொண்டு இச்சிறு அறிமுகப் பதிவினை முடித்துவைக்க விரும்புகின்றேன்.

*பாரதியும் நானும்*
*ஒருநாள் கடற்கரையில்*
*மாலை கழிந்து நிலவு கிளம்புகின்ற*
*நேரத்தில் நினையாப் பிரகாரம்*
*சந்தித்துக்கொண்டோம்.*
*சனங்கள் மிகக் குறைந்த*
*ஓரிடத்தில் போய் அமர்ந்தோம்.*

*உண்மை நிகழ்ச்சி இது*
*நெட்டைக் கனவில் நிகழ்ந்ததன்று*
*நம்பினால் நம்புங்கள்*
*நடந்ததைத்தான் சொல்கின்றேன்.*

*நீலக் கடலில் நிலவு முலாம் பூசும்*
*கோலத்தைக் கண்டு மகிழ்ந்தோம்,*
*குதூகலித்தோம்.*

*பாரதியோ தன் தலைப் பாகையினைக் கழற்றி*
*ஓரத்தில் வைத்தான்*
*முண்டாசு இல்லாமல் அவனின்*
*முழுமுகத்தைக் கண்டேன் நான்.*
*காற்று வந்து இன்பக் கதை சொல்லிச் சென்றது*
*பாரதியின் கேசத்தைப் பதமாய்த் தடவியது.*

*பாரதிக்குக்*
*கஞ்சாப் பழக்கம் இருந்ததுதான்*
*ஆனாலும் அன்றைக்கோ*
*அப்படி ஏதுமில்லை*
*நிலவு சுமந்துவந்த காற்றில்*
*கவிதை வெறியேறக் / காற்றோடு பேசினான்.*

*'காற்றே வா, / மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு*
*மனதை மயலுறுத்துகின்ற / இனிய வாசனையுடன் வா!*
*இலைகளின் மீதும், / நீரலைகளின் மீதும் உராய்ந்து,*
*மிகுந்த ப்ராண ரஸத்தை*
*எங்களுக்குக் கொண்டு கொடு.*

*காற்றே வா*
*எமது உயிர் நெருப்பை*
*நீடித்து நின்று / நல்லொளி தருமாறு நன்றாக வீசு.*
*சக்தி குறைந்துபோய்*
*அதனை அவித்துவிடாதே*
*பேய்போல வீசி / அதனை மடித்துவிடாதே.*
*மெதுவாக நல்ல லயத்துடன்*
*நெடுங்காலம் நின்று வீசிக்கொண்டிரு*
*உனக்குப் பாட்டுக்கள் பாடுகிறோம்*
*உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்*
*உன்னை வழிபடுகிறோம்' என்றான்.*

*காற்றுக்கோ புல்லரிப்பு*
*கடலில் நிலவைக் குழைத்து வந்து*
*வீசிற்று இன்ப வெறியோடு.*
*காற்றோடு பேசுங் கவிஞனே*
*நான் உன்னைப் போற்றுகிறேன் என்றேன்.*

*நீதான் முதன் முதலாய் / கோயில் குளங்களிலும்*
*குபேரர் சபைகளிலும் / கூனிக் குறுகிக் கிடந்த*
*தமிழ்க் கவியைக் கொண்டுவந்து,*
*இம் மண்ணில் உலவ விட்டாய் / மக்களிடை வைத்தாய்,*
*நேராக்கி நெஞ்சை நிமிர்த்தி / நடக்க வைத்தாய்*
*போராட வைத்தாய் / சமூகத்தின் புன்மைகளினோடு.*
*பாராட்டுகிறேன் அதற்காக*
*நீ பிறந்து / நூறாண்டு ஆயிற்று / நூறுவயசுனக்கு*
*இந்த வயசிலும் / இளமைத் துடிப்போடு*
*கடற்கரைக்கு வந்திருந்து / காற்றோடு பேசுகிறாய்!*

என்றாலும் / நாற்பதிலே நீ செத்தாய்
என்றெல்லோ கூறுகிறார் ஊரார்,
அவர்கள் உண்மை தெரியாதோர் என்றேன்.

ஓம் என்று சொன்னான் / இன்னும்
நானூறு ஆண்டுகள் நடந்து முடிந்தாலும்
நான் சாக மாட்டேன்
சகாதிருக்கும் வரம் பெற்ற / ஓர் கவி நான்
செத்த தமிழ்க் கவியை
மீண்டும் உயிர்ப்படைய வைத்தவன் நான்
அது மீண்டும் சாகாதிருக்க
வழிசமைத்து வைத்தவன் நான்.
ஆகையினால் / தமிழ்க் கவிதை சாகும் வரைக்கும்
நான் செத்துப் போவதற்கு / சந்தர்ப்பம் இல்லை
என்று சிரித்தான்.

ஓம் என்று நான் சொன்னேன்
உண்மை அதுவேதான் / உன்னுடைய வாரிசுகள்
நாங்கள் இருக்கின்றோம்.
நீ பாடிவிட்ட கவியின் மறு அடியை
நாம் பாடுகின்றோம்
நீ பாடாவிட்ட கவியின் புது வரியை
நாம் பாடுகின்றோம். / பாடல் தொடர்கிறது.

கவி ஓர் தொடர்ச்சிதான் / எங்கள் கவிதையிலும்
நீ தொடர்ந்து வாழுகிறாய்
நாற்பதிலே நீ செத்தாய்
என்பதொரு நகைச்சுவைதான்.
என்றேன் நான்.

இவ்வாறு
ஆளையாள் தட்டிக் கொடுத்தோம்
முதுகு சொறிந்துகொண்டோம்
மீண்டும் ஒரு நாள்
இதே இடத்தில் சந்திப்போம்
என்று பிரிந்து சென்றோம்

சிலவேளை நாளைக்குச் சந்திப்போம்
நாங்கள் கவிஞர்கள் அல்லவா?
சாகாதிருக்கும் சங்கதியைக்
கண்டவர்கள் அல்லவா?
நம்பினால் நம்புங்கள்
நடந்ததைத்தான் நான் சொன்னேன்!

navam.k@thaiveedu.com





# ஈழத்தவரின் சமகால நூல் வெளியீடுகள்

## ஒரு நூலியல் சார்ந்த பார்வை

**என். செல்வராஜா**

ஒரு நூலில் இடம்பெறும் நூலியல் தரவுகளில் 'நூலின் தலைப்பு' பற்றிய புரிதலை கடந்த இதழில் ஆராய்ந்திருந் தோம். இந்த இதழில் ஒரு நூலினை ஆக்கிய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர், பதிப்பாளர் ஆகியோருக்கு இடையிலான சில வேறுபாடுகளைக் கவனிப்போம்.

ஒரு நூலை எழுதியவரை 'ஆக்கியோன்' என்ற பதத்தால் குறிப்பிட்டமை இன்று வரலாறாகிவிட்டது. ஒரு நூலின் உரு வாக்கத்திற்குக் காரணமான ஒருவருக்குத் தேவைக்கேற்ப இப்போது பல பெயர்களைச் சூட்டவேண்டியதாயுள்ளது.

இன்று பொதுவாக ஒரு நூலை எழுதியவரை ஆசிரியர் அல் லது நூலாசிரியர் என்றே குறிப்பிடுகின்றோம். ஒருவர் முன்னர் எழுதிய நூலை பின்னாளில் அவரின் மறைவின் பின்னர் மற் றொருவர் அச்சிட்டு மறுபதிப்பாக வெளியிடும்போது மூல நூலாசிரியரை 'மூல நூலாசிரியர்' என்றும், மீள்பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபடுபவர் தன்னைப் 'பதிப்பாசிரியர்' என்றும் குறிப்பிடுகின்றார். பின்னவர் என்று குறிப்பிடும் வேளையில் அவர் மூல நூலாசிரியரின் பிள்ளையாகவோ, பேரன் பேர்த்தி யாகவோ, அவரது மாணவனாகவோ, நண்பராகவோ இருக்க லாம். ஆனால் இத்தகைய மீள்பதிப்புகளின் போது மூல நூலாசிரியரின் பெயருக்கு எப்போதும் முக்கியத்துவம் அளிக் கப்பட வேண்டியது அவசியமாகும். தம்மை முன்னிலைப்ப டுத்தும் நோக்கில் நூலாசிரியரின் பெயரை நூலுடன் சேர்த்து விடுவதால் மூல நூலின் தலைப்பு மாறிவிடுகின்றது. அத னால் முழுமையான மீள்பதிப்பு என்ற மதிப்பும் கூடவே போய் விடுகின்றது. மூலநூலாசிரியர் உயிருடன் இல்லாதவிடத்து அவரது நூலை தான் விரும்பியவாறு திருத்தியும் புதுக்கியும் உட்சேர்க்கைகள் செய்தும் அந்நூலை மூல நூலாசிரியரின் பெயரிலேயே வெளியிடுவதென்பது 'மீள்பதிப்பு' என்ற வரைய றைக்குள் வருவது தார்மீக நியாயமாகுமா என்பதையிட்டு நாங்கள் சிந்திக்கவேண்டும். மூல நூலாசிரியரின் நூலை மீள் பதிப்புச் செய்யும் ஒருவர், அந்நூல் பற்றி ஒரு முன்னுரை / பதிப்புரை எழுதுவதால் மாத்திரம் மூலநூலுக்கு உரிமை பாராட்ட முடியாது.

'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூல் தெல்லிப்பழையில் வசித்த சுவாமிநாதபிள்ளையின் மகனான நொத்தாரிசு மண்ட லநாயகம்பிள்ளை அவர்களின் வேண்டுகோளின் பேரில் வைபவமாலை போன்ற நூல்களின் உதவியுடன் தெல்லிப் பழை போதனாசக்தி வித்தியாசாலை (Tellippalai Training School) தலைமை ஆசிரியராகவிருந்த எஸ். ஜோன் அவர்க ளால் 1878-ல் ஆக்கப்பட்டது. இந்த நூலின் ஆசிரியர் எஸ். ஜோன் அவர்கள். 1882-ல் வெளிவந்த இந்நூலின் இரண்டாம் பதிப்பு அவரது புதல்வர் டானியல் ஜோன் ஆ.டீ. அவர்களால் பரிசீலிக்கப்பட்டுப் பிரசுரமானபோது, மூல நூலாசிரியராக எஸ். ஜோன் குறிப்பிடப்பட்டதுடன், டானியல் ஜோன் தன் னைப் பதிப்பாசிரியராகவே அடையாளப்படுத்தியிருந்தார். நூலின் மூன்றாவது பதிப்பு 1929-ல் வெளிவந்தது.

இந்நூல் பற்றிய மீள்வாசிப்பு பின்னாளில் க. குணராசா (செங் கைஆழியான்) அவர்களால் 2002-ல் மேற்கொள்ளப்பட்டது. அந்த நூலின் தலைப்பை செங்கை ஆழியான் தெளிவாக 'எஸ். ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம்: 1878: ஒரு மீள்வா சிப்பு' என்று குறிப்பிட்டிருந்தார். அந்த நூல் மூல நூலாசிரிய ரல்லாத ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட 'மீள்வாசிப்பு' என்ப தால், நூலாசிரியராக செங்கை ஆழியானின் பெயர் குறிப்பி டப்பட்டிருந்தமை ஏற்புடையதாகும்.

'திருக்கோணாசல வைபவம்' என்ற நூல் வே. அகிலேச பிள்ளை அவர்களால் எழுதப்பட்டதென்பதை எவரும் அறி வார்கள். திருக்கோணேஸ்வரத் திருத்தலத்தின் வரலாற் றினை விளக்கும் இவ்வரிய நூல், திருக்கோணமலை மண் ணின் மைந்தரான வே. அகிலேசபிள்ளை அவர்களால் 1889-ஆம் ஆண்டில் இயற்றப்பெற்றது. அச்சேற்றும் வாய்ப்பின்றி மூல ஆசிரியர் 1910-ல் சிவபதமடைந்த பின்னர் 1950-ல் அவ ரது மகன் திரு.அ. அளகக்கோன் அவர்களால் தந்தையின் பெயரிலேயே நூலுருவில் வெளியிடப்பெற்றது. நூலில் மாற்ற மேதும் செய்யப்படாதவிடத்தில் அ. அளகக்கோன் பதிப்பாசி ரியராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளவில்லை. இந்நூல் இரண்டாவது பதிப்பை 1999-ல் கண்டது. இதே நூல் பின்னர், 3-வது பதிப்பாக கொழும்பு, தத்துவஞானத் தவச்சா லைப் பிரசுரமாக வெளிவந்தபோது, இப்பதிப்பில் பண்டிதர் ச. சுப்பிரமணியம் அவர்களின் பொழிப்புரையுடன் கூடிய கோணேசர் கல்வெட்டும், பண்டிதர் இ. வடிவேலு அவர்களின் திருக்கோணாசல நாகதம்பிரான் பற்றிய கட்டுரையும் சேர்க் கப்பட்டிருந்தன. இத்தகைய பிற்சேர்க்கைகளைச் சேர்த்த பின்னரும் கூட அமரர் வே. அகிலேசபிள்ளையின் பெயர் தாங்கி அந்நூல் வெளிவந்திருப்பது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றே கருதுகின்றேன். மூலப்பதிப்பில் பின்னா ளில் மாற்றத்தை ஏற்படுத்திய பின்னரும், மூல நூலாசிரியரை மாத்திரம் குறிப்பிடுவது தவறாகும். இப்பதிப்பில், மூல நுலா சிரியரின் பெயருடன் மற்றைய இருவரையும் உள்ளீர்த்து அந் நூலைப் பதிப்பித்தவர் தனது அடையாளத்தை பதிப்பாசிரிய ராகக் குறிப்பிட்டிருத்தல் அவசியமானதாகும்.

ஒரு நூலின் தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் என்போருக்கிடையேயான வேறுபாட்டை விளங்கிக்கொள்ளாமல் வெளியிடப்பட்ட மேலும் பல நூல்களை இனம்காட்ட முடியும். இவ்விரு பதங்களுக்குமிடையேயான வேறுபாட்டை உதாரணங்களின் வழியாக இனிக் காண்போம். இவ்வுதாரணங்கள் எவையும் குற்றச்சாட்டுக்களல்ல. சிக்கலானவொரு பதப்பிரயோகத்தை விளங்கிக்கொள்வதற்கான வழிமுறைகளே. எதிர்காலத்தில் இத்தகைய படைப்பாக்கங்களை மேற்கொள்ள முனைவோரின் சிந்தனைக்கும் தீர்மானத்திற்கும் வழிகளைத் திறந்துவிடுவோம்.

ஒரு நூலாசிரியர் தனது நூலின் ஆக்கத்திற்கு, அதன் உள்ளடக்கத்திற்கு உரித்தானவர். அவர் அந்நூலின் முழுமைக்கும் பொறுப்பானவர். ஒரு தொகுப்பாசிரியர் என்பவர், ஏற்கெனவே




பரந்து கிடக்கும் பல்வேறு தகவல்களையும் தேடி ஒழுங்குபடுத்தி தனது நூலைத் தொகுப்பவராகக் காணப்படுகிறார்.

‘இணைப் பழமொழிகள்’ என்ற நூலை ஆக்கிய தம்பிஐயா தேவதாஸ் அந்நூலின் தொகுப்பாசிரியர். அவர் இந்நூலில் தமிழ்-சிங்கள மொழிகளில் ஒத்த கருத்துடைய பழமொழிகளைத் தேடி எடுத்துப் பட்டியலிட்டுள்ளார். சிங்களப் பழமொழிகளை சிங்கள மொழியிலேயே வழங்கி அதன் கருத்தை தமிழில் தந்து அந்தக் கருத்துக்கு நிகரான தமிழ்ப் பழமொழியையும் தந்திருக்கிறார். மொத்தம் 369 பழமொழிகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மிகுந்த காலநேரத்தைச் செலவிட்டு இத்தொகுப்பினை மேற்கொண்டிருந்த போதிலும், தன்னை நூலாசிரியர் என்று குறிப்பிடுவதைவிட தொகுப்பாசிரியர் என்று குறிப்பிடுவதே பொருத்தமாக இருந்திருக்கும். ஏற்கெனவே உலகில் காலங்காலமாக உருவாகிக் கிடக்கும் கர்ண பரம்பரை ஆக்கக் கூறுகளைத் தேடித் தொகுக்கும் பணியை மேற்கொள்பவர் தொகுப்பாசிரியர் என்ற பெயரின் மூலமே அவர் தேடித்தொகுத்த ‘நூலுக்கு’ உரிமையாளனாகின்றார். அதிலுள்ள பழமொழிகளுக்கல்ல. இவ்விடத்தில் ஆசிரியருக்கும் தொகுப்பாசிரியருக்கும் இடையில் காணக்கிடைக்கும் மெல்லிய இடைவெளியை நாம் அவதானிக்க முடியும்.

மற்றுமொரு உதாரணமாக வரலாற்று முக்கியத்துவமான ஒரு நூலைக் குறிப்பிடலாம். ‘திருட்டாந்த சங்கிரகம் or A Collection of Proverbs in Tamil with their translation in English’ என்பது பேர்சிவல் பாதிரியாரால் தொகுக்கப்பட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து Jaffna Book Society என்ற அமைப்பின் மூலம் 1843-ல் வெளியிடப்பட்ட நூல். யாழ்ப்பாணம், அமெரிக்க மிஷன் அச்சகத்தில் அச்சிடப்பெற்று வெளியாகிய இந்த நூல் இலங்கையில் அச்சிட்டு வெளியான ஆரம்பகால நூல்களில் குறிப்பிடத்தக்கதொன்று. இந்நூல் ஈழத்துத் தமிழ்ப் பழமொழிகளின் முதலாவது தொகுப்பு என்று கருதப்படுகின்றது. யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் அமைந்த 1873 தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து அவற்றுக்கான ஆங்கில விளக்கத்துடனும் ஆங்கிலத்திலான முன்னுரையுடனும் பேர்சிவல் பாதிரியார் இந்நூலை உருவாக்கியுள்ளார். தொகுப்பாசிரியராகவே பேர்சிவல் பாதிரியார் அந்நூலுக்கு உரித்தாளராகின்றார். ஆசிரியராகவல்ல. அதுவரை வாழ்மொழி வழக்கிலிருந்துவந்த அப்பழமொழிகளுக்கும் அல்ல. இவ்விரு உதாரணங்களின் வாயிலாகவும் தொகுப்பாசிரியர் (Compiler) யார் என்றும், ஆசிரியர் (Author) யார் என்றும் வேறுபாடு தெளிவு பெறுகின்றது.

‘பதிப்பாசிரியர்’ (Editor) என்பவர் யார் என்ற கேள்வி இப்பொழுது எமக்கு எழுகின்றது. பதிப்பாசிரியர் என்ற பதம் தமிழ் நூலியல் சூழலில் மிகவும் சிக்கலானதொரு அர்த்தத்தைத் தரும் பதமாகும். ஆங்கிலத்தில் தெளிவாக இதனை ‘Editor’ என்கிறோம். இங்கே நாம் தமிழில் பதிப்பாசிரியர் என்ற பதத்தை எங்கெங்கெல்லாம் பிரயோகித்திருக்கிறோம் என்று ஒரு நூறு வெளியீடுகளிலிருந்து தெரிந்தெடுத்துத் தொகுத்துத் தருகின்றேன்.

- அறிவுசார் ‘பதிப்பாசிரியர்’ என்பவர் சக துறைசார் அறிஞர்களின் படைப்புக்களைப் பெற்று அவற்றைப் பரிசோதித்து கூட்டுப் படைப்பாக்கி தனி ஒரு நூலாகத் தலைப்பிட்டு வெளியிடுகின்றார்.

குறித்ததொரு துறைசார்ந்த பல்வேறு வல்லுநர்களின் ஆக்கங்களைப் பெற்று அத்துறையில் பாண்டித்தியம் பெற்ற மற்றொருவர் அக்கட்டுரைகளை வாசித்து நெருடலானவற்றை ஆசிரியருடன் விவாதித்து அவற்றுக்கு மெருகூட்டி, முரண்பாடான தகவல்களை கட்டுரையின் மூல அசிரியருடன் தொடர்பு கொண்டு விவாதித்து, அவரது அனுமதியுடன் நீக்கியோ திருத்தியோ, அவ்வாக்கங்களை ஒரு தனி நூலாக, அல்லது ஒரு வெளியீட்டுத் தொடரின் ஒரு அங்கமாக (Series Title) சேர்த்து வெளியிடுவாராயின் அந்தப் பாண்டித்தியம் பெற்ற வல்லுநர் அந்நூலின் பதிப்பாசிரியராவார். ஆங்கிலத்தில் இவரை Editor என்போம்.

பத்திரிகை சஞ்சிகைகளின் ஆசிரியர்களையும் ஆங்கிலத்தில் Editor என்ற ஒற்றைப் பதப் பிரயோகத்தில் அழைப்பதுண்டு. தமிழில் நாம் சஞ்சிகை ஆசிரியர்களை இதழாசிரியர், மலராசிரியர், பிரதம ஆசிரியர், நிர்வாக ஆசிரியர், பொறுப்பாசிரியர் என பல்வேறு பெயர்களில் மனம் விரும்பியவாறு அழைத்துக்கொள்வோம். நான் முன்னர் குறிப்பிட்ட பதிப்பாசிரியருக்கும், சஞ்சிகை ஆசிரியருக்கும் இடையிலான செயற்பாட்டு ரீதியான பொறுப்புக்கள் வித்தியாசமானவை.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட 'இந்து கலாசாரம்' என்ற வெளியீட்டுத் தொடரில் 'நடனங்களும் ஓவியங்களும்' என்ற ஒரு நூல் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இலங்கையின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2002-ல் இதனை வெளியிட்டிருந்தது. இந்து கலாசாரம் தொடர்பாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிடும் ஒரு வெளியீட்டுத் தொடரின் 2-வது தொகுதி இதுவாகும். இந்து சமுதாயத்தில் வளர்ச்சி பெற்ற நடனம், ஓவியம், என்னும் கலைகளைப் பற்றிய புரிந்துணர்வையும் தெளிவான விளக்கத்தினையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்த 19 கட்டுரைகள், வி. சிவசாமி, சி. பத்மநாதன், இரா. கலைக்கோவன், குடவாயில் பாலசுப்பிரமணியன், ந. வேல்முருகு ஆகிய துறைசார் பகைப்புலம் கொண்ட ஐவரால் எழுதப்பட்டவை. இத்தகைய பதிப்பாக்கத்தை பேராசிரியர் சி. பத்மநாதன் மேற்கொண்டிருந்தாலும், அதிலுள்ள கட்டுரைகளின் பதிப்புரிமை தனித்தனியாகக் கட்டுரையாளர்களுக்கே உரித்தாகும். தனி நூலாசிரியரைப் போலன்றி, இங்கு பதிப்பாசிரியருக்கு அந்த நூலுக்கான ஒட்டுமொத்தப் பதிப்புரிமை கிடையாது. (தமிழில் பதிப்பாசிரியர் பதிப்புரிமை ஆகிய இரு பதங்களும் ஒரே வேரடியான 'பதிப்பு' என்ற சொல்லிலிருந்து வருவதால், இரண்டுக்கும் தொடர்பிருப்பது போல் ஒரு மாயை காணப்படலாம். ஆங்கிலத்தில் இதனையே பதிப்பாசிரியர் (Editor), பதிப்புரிமை (Copy Right) ஆகிய இருவேறு பதங்களின் வழியாகக் குறிப்பிடலாம்.

- ஒரு படைப்பாளியின் ஆக்கங்களை அவருக்கு அணுக்கமான மற்றொருவர் தேடித் தொகுத்துப் பதிப்பிப்பது.

'மு. தளையசிங்கம் படைப்புகள்' என்ற நூல் தமிழ்நாடு, காலச்சுவடு பதிப்பகமும், கனடா, மறுமொழி ஊடக வலயமும் இணைந்து 2006-ல் வெளியிட்ட ஒரு பெருந் தொகுப்பாகும். இந்நூலின் 'பதிப்பாசிரியராக' அவரது இளைய சகோதரரான மு. பொன்னம்பலம் என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளார். ஈழத்தின் இலக்கியச் சிந்தனையாளர்களுள் ஒருவரான மு. தளையசிங்கம் புங்குடுதீவில் 20.10.1935-ல் பிறந்து 02.04.1973-ல் மறைந்தவர். இவரது படைப்புக்களின் தொகுப்பாக இப்பாரிய வெளியீடு பதிவாகியுள்ளது. தொகுதி 1- புனைவியல் என்ற தலைப்பில் இவர் எழுதிய சிறுகதை, ஓரங்க நாடகம், நாவல், குறுநாவல்கள், கவிதைகள் என்பனவற்றையும், தொகுதி 2- மெய்யியல், இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் என்ற தலைப்பில் மு. தளையசிங்கத்தின் இலக்கிய விமர்சனக் கட்டுரைகள், போர்ப்பறைக் கட்டுரைகள், மெய்யியல் இலக்கிய விமர்சனம், மெய்யுள் கட்டுரைகள் ஆகியவற்றையும் கொண்டுள்ளன. பின்னிணைப்புகளாக பதிப்புரைகளும், மு. தளையசிங்கம் படைப்புகள் பற்றிய கி. ராஜநாராயணன், சுந்தர ராமசாமி, மு. தளையசிங்கத்தின் வாழ்க்கைக் குறிப்புகள் என்பன பதிவாகியுள்ளன. இங்கு மு. தளையசிங்கத்தின் சகோதரரான மு. பொன்னம்பலம் அவர்களைத் தொகுப்பாசிரியராகக் குறிப்பிடப்படக்கூடிய சகல லட்சணங்களும் பொருந்தி வருகின்றன. இருப்பினும், தமிழ்ப் படைப்புலகச் சூழலில் அவர் தொகுப்பாசிரியராகவன்றி, பதிப்பாசிரியராக்கப்பட்டுள்ளார்.

இதே போன்று மற்றொரு வெளியீட்டையும் இங்கு குறிப்பிடலாம். 'வித்தகர் தரிசனம்' என்ற நூல் திரு.க. இரகுபரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் குறிப்பிட்டு வெளியிடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம்: பாலர் ஞானோதய சபை, 2000-ம் ஆண்டில் இந்நூலை வெளியிட்டிருந்தது. இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் அவர்களது ஆக்கங்களின் தொகுப்பினை அவரது நன்மாணாக்கர்களுள் ஒருவரும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறை விரிவுரையாளருமான க. இரகுபரன் அவர்கள் தொகுத்திருந்தார். 'தெய்வ தரிசனம்' என்ற பிரிவில் பிரபந்தங்களும், 'ஞான தரிசனம்' என்ற பிரிவில் அவரது தத்துவ விசாரணைகளும், 'வித்தியா தரிசனம்' என்ற பிரிவில் கல்விச் சிறப்பு, இலக்கண ஆராய்ச்சி என்பனவும், 'சான்றோர் தரிசனம்' என்ற பிரிவில் நாவலர், கணேசையர், பொ. கைலாசபதி, போன்றோர் பற்றிய இ. நமசிவாய தேசிகர் அவர்களது கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றிருந்தன. இங்கு திரு.க. இரகுபரன் அவர்களைத் தொகுப்பாசிரியர் என்பதே பொருத்தமாக இருந்திருக்கும்.

- ஒரு வெளியீட்டின் இணைப்பாளராகச் செயற்படுபவர் பதிப்பாசிரியராவது.

'மத்தாப்பு' என்ற பரிசோதனைக் குறுநாவல் பற்றி அறிவோம். 1962-ல் குரும்பசிட்டி சன்மார்க்க சபை வெளியீடாக வெளிவந்தது. இ. நாகராஜன், கனக. செந்திநாதன், சு. வேலுப்பிள்ளை, குறமகள், எஸ். பொன்னுத்துரை ஆகிய ஐவரும் இணைந்து எழுதிய இக் குறுநாவல், வீரகேசரியில் தொடர்கதையாக வெளியிடப்பட்டு பின்னர் நூலுருவாக்கப்பட்டது. இந்த நூலிலுள்ள குறுநாவலை எழுதிய ஐவருள் ஒருவரான கனக. செந்திநாதன் பதிப்பாசிரியர் என்ற அந்தஸ்தினை நூலில் பெற்றிருக்கிறார். இந்தக் குறுநாவல் திட்டத்தின் உருவாக்கத்தில் முக்கிய பங்காளியாகச் செயற்பட்டவர் என்ற வகையில் இவர் பதிப்பாசிரியராக்கப்பட்டுள்ளார் என்றே நாம் கருதவேண்டியுள்ளது. இன்று இவரை திட்ட இணைப்பாளர் (Project Co-ordinator) என்றே அழைத்திருப்போம். ஈழத்துப் பதிப்புலகச் சூழலில் திட்ட இணைப்பாளர் ஏது?

அண்மைக்காலத்தில் செப்டெம்பர் 2023-ல் தெல்லிப்பழை: சோலைக்குயில் அவைக்காற்றுக் கள வெளியீடாக, 'திருப்பங்கள்' என்ற தலைப்பில் ஒன்பது பெண் எழுத்தாளர் இணைந்தெழுதிய குறுநாவல் ஒன்று வெளிவந்திருக்கிறது. மண்டூர் அசோகா, கோகிலா மகேந்திரன் ஆகியோர் இக்குறுநாவலின் தொகுப்பாசிரியர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். மேலதிகமாக கோகிலா மகேந்திரன் இந்நூலின் பதிப்பாசிரியராகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறார். இந்நாவல் திருமதி இந்திராணி தாமோதரம்பிள்ளை (திருமதி. இந்திராணி புஷ்பராஜா), மாவை பாரதி (திருமதி. பாகீரதி கணேசதுரை), திருமதி. நயீமா சித்தீக், சாரதா சண்முகநாதன் (திருமதி. சாரதா-பரநிருபசிங்கம்), ஆனந்தி (திருமதி. மாதினியார் ஆனந்த நடராசா), மண்டூர் அசோகா (திருமதி. அசோகாம்பிகை யோக-ராஜா), கோகிலா மகேந்திரன் (திருமதி. கோகிலாதேவி மகேந்திரராஜா), அருண் விஜயராணி (திருமதி. அருண்விஜ-

யராணி செல்லத்துரை), தேவமனோகரி (திருமதி. தேவமனோகரி ராஜன்) ஆகிய ஒன்பது படைப்பாளிகளின் கூட்டு முயற்சியாக வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணத்துக் கிராமத்தில் தொடங்கி, மலையகத்தில் சஞ்சரித்து மீண்டும் யாழ்ப்பாணத்தில் நிறைவுகொள்ளும் இக்கதை. 13.07.1980-ல் தொடங்கி 07.09.1980 வரையிலான காலப்பகுதியில் ஒன்பது வாரத் தொடராக மித்திரன் வாரமலரில் வெளிவந்திருந்தது.

திருமதி. கோகிலா மகேந்திரன் மண்டூர் அசோகாவுடன் இணைந்து ஒன்பது பெண் படைப்பாளிகளையும் ஒருங்கிணைத்து மித்திரன் வாரமலரில் 1980-ல் தொடராக இந்நாவல் வெளிவரத் தமது உழைப்பினை நல்கியிருப்பார்கள் என்று கருதுகின்றேன். அவ்வகையில் அவர்கள் தம்மை தொகுப்பாசிரியர்களாக உரிமைகோரியிருக்கக்கூடும்.

'பதிப்பாசிரியர்கள்' என்றும் 'பதிப்பாளர்கள்' என்றும் ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகச் சூழலில் பயன்படுத்தப்படும் பதப்பிரயோகங்கள் பற்றிய வரலாற்றுத் தடங்கள் தொடர்பாக அடுத்த இதழில் விபரமாகப் பார்ப்போம்.

(இன்னும் வரும்)



selvarajah.n@thaiveedu.com






உலகம் புறநிலை மெய்மையாகும். அது எம்மில் இருந்து வேறாகச் சுதந்திரமாக இயங்குகிறது. புறநிலை உலகம் மனிதர் இவ்வுலகில் தோன்றுவதற்கு முன்பே இருந்து வந்துள்ளது. புறநிலை உலகு + சடப்பொருள் ஒரு பக்கமாகவும், மனித உள்ளம் & உணர்வுநிலை (Consciousness) இன்னொரு பக்கமாகவும் பிரிந்து, தனித்துச் சுதந்திரமாக இயங்குவன.

**புறநிலைவாத அறிவாராய்ச்சியியல்:**

அவதானித்தல், அளவிடுதல் (Measurement) என்ற இரு வழிகளில் புறநிலை மெய்மை அறியப்படுகிறது. இவ்வாறாக உற்பத்தி செய்யப்படும் அறிவு, மதிப்பீடுகள் சாராதது (Value-free). அவதானிக்கக்கூடியனவும் அவதானித்தனவுமான நேர்வுகள் (Facts) அறிவின் அடிப்படைகளாகும். அறிபவர் அறியப்படும் உலகத்திற்கு வெளியே நிற்பவர். அறிபவரின் உள்ளம் ஒரு வெண்மை நிறமுடைய சேலைத்துண்டுக்கு ஒப்பானது. சேலைத்துண்டு போன்ற உள்ளத்தில் பௌதிக உலகின் புலன் தரவுகள் நேரடியாகப் பதிவாகின்றன.

**புறநிலைவாத முறையியல்:**

தூய்மையான, கலப்பற்ற நேர்வுகள் (Facts) மூலம் புற உலகை அறியலாம். சரி, பிழை, உண்மை, பொய், நீதி, அநீதி போன்ற மதிப்பீடுகளும் (Value Judgements), நியம அளவுகோல்களும் (Norms) கலப்புறாத நேர்வுகளே நம்பகத்தன்மையுடைய அறிவைப் பெறுவதற்கான அடிப்படைகளாகும். அனுபவவாத/நேர்காட்சிவாத முறையியலே அறிவைப் பெறுவதற்கான பொருத்தமுடைய சாதனமாகும்.

**புறநிலைவாத முறை:**

புள்ளிவிபர மதிப்பீடுகள், வினாக்கொத்து முறை, தரவுகளை எண்களால் அளவிடுதல் மூலம் திரட்டுதல் (Quantitative data Collection) ஆகிய உத்திகளும் உபாயங்களும் புறநிலை மெய்மையை அறிவதற்கு உதவுகின்றன. இவ்வாறான புறநிலை நுட்பமுறைகள் மூலம் திரட்டப்பட்ட தரவுகளை புறநிலையான நுட்பமுறைகளான, புள்ளிவிபர ஆய்வு நுட்பங்கள், கணினி மாதிரிகள் (Computer Modelling) என்பன மூலம் பகுப்பாய்வு செய்யலாம்.

## அகநிலைவாதம் (Subjectivism):

**அகநிலைவாத உள்ளதன் இயல்:**

மெய்மையை மனித அறிகை உருவாக்குகிறது; அது மனித அறிகையின் விளைபொருள் (Product of Human Cognition). மனிதர்களே மெய்மையை உருவாக்குகிறார்கள். மனிதர்கள் உருவாக்கும் இந்த மெய்மைக்கு அப்பால் வெளியே மெய்மை இருப்புக்கொண்டுள்ளது என்று கூறுதல் தவறு, மனிதர்களே மெய்மையையும், தமது சொந்த உலகத்தையும், தமது அகநிலை மூலம் உருவாக்குகிறார்கள். மெய்மை மனிதர்களுக்கு முன்பு தோற்றம் பெற்றதன்று. மனிதர்களில் இருந்து தனித்துள்ள மெய்மை என ஒன்று இல்லை. மனிதர்கள் தமது உலகத்தை உருவாக்கும்போது, தமது சொந்தப் பண்பாட்டு - சமூக மனச் சித்திரத்திற்கு ஏற்பவே அவ்வுலகத்தை உருவாக்குகிறார்கள். உலகு பற்றிய ஒருமைத் தன்மையுள்ள மெய்மை என ஒன்று இல்லை. பல மெய்மைகள் உள்ளன. ‘When people produce their world, they do it in terms of their own Cultural - Social Imagination. There is no single uniform reality in the world. There are many Realities’.

**அகநிலைவாத அறிவாராய்ச்சியியல்:**

அறிவு அகநிலைப்பட்டது. அது மனித உள்ளம் சார்ந்தது, செயல்முகவர் மையமானது (Agent Centric). அறிபவரை (The knower) அறியப்படு பொருளில் (Knowing object) பிரித்துப் பார்க்கமுடியாது. மனிதர்களே மெய்மை (Reality), வரலாறு என்ற இரண்டையும் தீர்மானிக்கிறார்கள். மனிதர்கள் எத்தகைய கருத்து வகைமைகளின் (Conceptual categories)

உதவியுடன் தமது உலகைக் கட்டமைக்கிறார்களோ அக்க ருத்து வகைமைகள் அவர்கள் கட்டமைத்த உலகத்தைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோலாக அமைகின்றன.

**அகநிலைவாத முறையியல்:**

மனிதர் கட்டமைக்கும் / உருவாக்கும் உலகத்தைப் புரிந்து கொள்வதற்கு தோற்றப்பாட்டியல் (Phenomenology) 'எத்னோ-மெடோலொஜி' அல்லது 'இனத்துவ முறையியல்' (Ethnomethodology) என்னும் முறையியல்கள் உதவுகின்றன. இவையிரண்டும் உலகைப் புரிந்துகொள்வதற்து மிகவும் பயனுள்ள முறையியல்களாகும்.




**அகநிலைவாத முறை:**

அகநிலைவாத நோக்கிலான ஆராய்ச்சிக்குப் பண்புத்தரவுகளைப் பெறக்கூடிய ஆராய்ச்சிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும். இம்முறைகள் ஆங்கிலத்தில் 'Qualitative research methods' என அழைக்கப்படும். பங்கேற்பு அவதானம் (Participant observation), விரிவான நேர்காணல்கள், குழு உரையாடல், தனிநபர் அனுபவங்கள், வாய்மொழி வரலாறு (Oral history), நினைவுகள் (Memories) தனிநபர்களின் கதைகளும் தன்னிலை விளக்கங்களும், இலக்கியப் பனுவல்களை விளக்கியுரைத்தல், கலை பண்பாட்டுப் பொருட்களை (Artefacts) விளக்கியுரைத்தல் என்பன இவ்வகை ஆராய்ச்சி முறைகளுக்கு உதாரணங்களாகும்.

## மெய்யியலுக்கும் சமூகவிஞ்ஞானங்களுக்கும் இடையிலான தொடர்பு:

இதுவரை நாம் விபரித்துள்ள எண்ணக்கருக்கள் கோட்பாடுகள் என்பனவற்றின் வெளிச்சத்தில் மெய்யியலுக்கும் சமூக விஞ்ஞானங்களுக்கும் இடையிலான தொடர்பைப் புரிந்து கொள்ள முடிகிறது.

அறிவின் உற்பத்தியில் பிரயோகிக்கப்படும் எண்ணக்கருக்களை மெய்யியல் தெளிவுபடுத்துகிறது; கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் மெய்யியலால் விளக்கியுரைக்கப்படுகின்றன. அதனைவிடக் கோட்பாடுகள், அணுகு முறைகள் என்பனவற்றின் பொருந்தாமைகளையும் கேள்விக்குட்படுத்துகிறது; விசாரணை செய்கிறது.

மெய்யியலின் எண்ணக் கருக்களைத் தெளிவாக்கும் பணி (Concept clarifying task of Philosophy) முக்கியமானது. யோன் லொக் (John Locke) என்னும் ஆங்கிலநாட்டு அனுபவவாத மெய்யியலாளர் (Empiricist philosopher) இதுபற்றிக் கூறும்போது விஞ்ஞானிகளினதும் மெய்யியலாளர்களதும் பணிகளை ஓர் உவமை மூலம் விளக்கினார். ஒரு பெரும் கட்டடம் ஒன்றைக் கட்டவேண்டும். அக் கட்டடப் பணியை நிறைவேற்றும் பொறுப்புடைய பொறியியலாளர்களும், தொழில் நுட்பவியலாளர்களும், மேசன்களும் தமது வேலையை தொடங்குவதற்கு முன்னர், கட்டடம் கட்டுவதற்கான காணியைத் துப்புரவு செய்யவேண்டும்; பற்றைகளை வெட்டி அகற்றவேண்டும்; குப்பை கூளங்களையும், இடிபாடுகளையும் அகற்ற வேண்டும். இந்த முக்கியமான வேலைகளை சிற்றூழியர்களான தொழிலாளர்கள் நிறைவேற்றுகிறார்கள். அதன் பின்னரே கட்டட நிர்மாணக்குழு தன் வேலையைத் தொடங்குகிறது. விஞ்ஞானம் என்ற பிரமாண்டமான கட்டடமும் இப்படித்தான் சம காலத்தில் கட்டப்படுகிறது என்கிறார் யோன் லொக். பொறியியலாளர்களும், தொழில்நுட்பவியலாளர்களும், மேசன்களும் விஞ்ஞானிகள் குழுவிற்கு ஒப்பானவர்கள். விஞ்ஞானம் என்ற மாளிகை கட்டப்படுவதற்குரிய ஆரம்ப வேலைகளைச் செய்யும் மெய்யியலாளர்கள், துப்புரவுப் பணியைச் செய்யும் சிற்றூழியர்களுக்கு ஒப்பானவர்கள் என யோன் லொக் விபரிக்கிறார்!

விஞ்ஞானம் என்ற மாளிகை கட்டப்படுவதற்கு, அறிவாராய்ச்சியில் முறையியல், கருத்தாக்கங்கள் என்ற விடயங்கள் சார்ந்த குழப்பங்களை நீக்குதல் என்ற சுத்திகரிப்புப் பணி அவசியம் என்பது லொக்கின் கருத்து. லொக் மெய்யியலின் முக்கியத்துவத்தை கூறப்புகுந்து, அதன் பணியை சிற்றூழியர் (Under-Labourer) நிலைக்கு தரம் தாழ்த்திவிட்டார். பீட்டர்

விஞ்ச் (Peter Winch) என்னும் மெய்யியலாளர் லொக்கின் 'சிற்றூழியர் கருத்தை' (Under-labourer thesis) கண்டனம் செய்து நிராகரிக்கிறார். நவீன காலத்தின் தருக்கவியல் நேர்க் காட்சிவாதம் (Logical positivism) என்ற சிந்தனைப் பிரிவைச் சேர்ந்த மெய்யியலாளர்கள் 'தருக்கவியல் அணுவாதம்' (Logical atomism) என்ற கருத்தை முன்வைத்தனர். விஞ்ஞா னிகளது பணிக்கு அத்தியாவசியமான பணி மொழி தொடர் பான குழப்பத்தை (Language confusion) நீக்குதல் என்று கூறிய இம் மெய்யியலாளர்கள் மொழியாராய்ச்சியிலும் சொல்லாராய்ச்சியிலும் ஈடுபட்டு விஞ்ஞானத்திற்கான தூய மொழியைக் கண்டு பிடிக்கும் வேலையில் ஈடுபட்டபோது, தமது பணியை சிற்றூழியர் (Under-labourer) வேலைக்கு ஒப் பானதாகவே கருதினார்கள் என பீட்டர் விஞ்ச் குறிப்பிடுகின் றார். யோன் லொக் உலகு பற்றிய ஆழமான அறிவைப் பெறு வதற்கு மெய்யியல் உதவ முடியாது என்ற கருத்தையே கெண்டிருந்தார். அவரது வாதத்தின் படி 'விஞ்ஞானம்' மட் டுமே 'அறிவை' (Knowledge) உற்பத்தி செய்ய முடியும். அதுவே உலகு பற்றிய அறிவை உருவாக்கக்கூடியது. லொக் கின் இந்த வாதம் விஞ்ஞானத்தையும் மெய்யியலையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பதோடு, மெய்யியலை சிற்றூ ழியர் நிலைக்குத் தரம் தாழ்த்துவதாக பீட்டர் விஞ்ச் கண்ட னம் தெரிவிக்கிறார். விஞ்ச் அவர்களின் கருத்துப்படி மெய்யி யலின் அடித்தளத்தில் கட்டப்படுவனவே சமூக விஞ்ஞானங் கள்.

### றோய் பாஸ்கரின் விமர்சன யதார்த்தவாதம்:

றோய் பாஸ்கர் (Roy Bhasker) என்ற அறிஞர் யோன் லொக்-கின் உவமையைப் பிரயோகித்து புதிய விளக்கத்தைத் தரு கிறார். இவர் விமர்சன யதார்த்தம் (Critical Realism) என்ற சிந்தனையை முன்வைத்தவராவர் (Reclaiming Reality: A Critical Introduction to Contemporary Philosophy (1989) அவரது நூல்களில் ஒன்று). றோய் பாஸ்கர் மார்க்சீய மெய்யி யலால் ஆதர்சம் பெற்றவர். அவர் லொக்கின் உவமையை பிரயோகித்து, சமூக விஞ்ஞானங்களின் அறிவு என்ற கட்டடம் கட்டப்படுவதற்கு முன்னர் 'கருத்தியல் துப்புரவுப் பணியைச் செய்தல்' (Clearing of the ideological ground) அவசியமா னது என்று கூறினார். 'உலகை விளக்குதல் மட்டுமல்லாது விடுதலைக்கான வழியையும்' காட்டும் பணி சமூக விஞ்ஞா னங்களுக்கு உள்ளது என றோய் பாஸ்கர் கூறுகிறார். ஆங்கி லத்தில் Explanatory - emancipatory Science (விளக்கமும் விடுதலை வழியையும் காட்டும் விஞ்ஞானம்) என்ற தொடர் அவர் கருத்தை விளக்குவதாக உள்ளது. சமூக விஞ்ஞானம் சமூக மெய்மையை / யதார்த்த நிலையை விளக்கிக் கூறுவ தோடு அமையாது, சமகாலத்தில் இருந்து வரும் சமூக ஒழுங் கமைப்பு என்ற சமூக மெய்மையை மாற்றியமைக்கும் மானிட விடுதலைப் பயணத்திற்கு உதவுவது எனவும் றோய் பாஸ்கர் குறிப்பிடுகிறார்.

அவரின் மெய்யியல் நிலைப்பாட்டையும், கொள்கை உறுதி யையும் 'கருத்தியல் துப்புரவுப் பணியைச் செய்தல்' (Clearing the ideological ground) என்னும் தொடர் தெளிவாக வெளிப் படுத்துகிறது. இத்தொடர் மைய நீரோட்ட மெய்யியல் சிந்த னையையும், நேர்க்காட்சிவாத சமூகவிஞ்ஞான எழுத்துக்க ளையும் கூர்மையான விமர்சனத்திற்கு உட்படுத்தும் அவரது நோக்கு முறையின் பண்பை உணர்த்துவதாகும். மெய்யிய லின் வேலை எண்ணக்கருக்களின் குழப்பங்களைத் தீர்வு செய்வதும், புதிர்களை விடுவிப்பதும் மட்டுமல்ல, சமூகத்தை விமர்சனத்திற்கு உட்படுத்துவதுமாகும் என்பதே பீட்டர் விஞ்ச், றோய் பாஸ்கர் என்னும் இரு அறிஞர்களும் வற்பு றுத்த விரும்பும் கருத்தாகும்.

### மெய்யியலும் சமூகக் கோட்பாடுகளும்:

சமூகக் கோட்பாடுகள் (Social theories) என அழைக்கப்ப டும் சமகாலத்துச் சமூகவிஞ்ஞானக் கோட்பாடுகள். வர லாற்று ரீதியாக மெய்யியலின் வளர்ச்சியோடு இணைத்து, மெய்யியலின் பின்புலத்தில் உருவாக்கம் பெற்றன என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் அவசியம். இப்புரிதல் எமக்குச் சமூக விஞ்ஞானத்திற்கும் மெய்யியலுக்கும் இடையில் உள்ள தொடர்பையும் பொருத்தப்பாட்டையும் விளங்கிக் கொள்வதற்கு உதவும். மெய்யியல் சிந்தனையின் வளர்ச்சிப் போக்குகள், புதிய சமூகக் கோட்பாடுகள் தோற்றம் பெறக்கா ரணமாயின. மார்க்சிய பொருளாதார சமூகக் கொள்கை 19-ம் நூற்றாண்டின் பின்னைய ஹெகலிய மெய்யியல் விவாதங்க ளின் (The Post-Hegelian Philosophical debates) பின்புலத் தில் தோற்றம் பெற்றவை. மார்க்சின் கோட்பாடுகளும் அவ ரது முறையியலும் ஐரோப்பாவில் அவர் வாழ்ந்த காலத்தில் உருவான மெய்யியல் சிந்தனையின் பின்புலத்தில் உருவான சமூகக் கோட்பாடுகளில் வேர் பதித்திருந்தன. இவ்வாறே மக்ஸ் வெபரின் (Max Weber) சமூகவியல் சிந்தனையும் அவர் வாழ்ந்த காலத்தின் கோட்பாட்டு வளர்ச்சிகளின் பின்பு லத்தில் தோற்றம் பெற்றது. 19-ம் நூற்றாண்டின் முறையியல் விவாதங்கள் (Methodological debates) மக்ஸ் வெபரின் சமூ கவியலின் தோற்றத்திற்கு வழியமைத்தன. அக்காலத்தில் மனிதாநேயச் சிந்தனையாளர்களும் (Humanist thinkers) நேர்க் காட்சிவாதிகளும் (Positivists) கருத்து மோதலிலும், விவா தங்களிலும் ஈடுபட்டனர். மக்ஸ் வெபர் மனிதாயச் சிந்தனை யாளர்களின் பொருள்கோடலியல் மரபின் (Hermeneutical tradition) சார்புடையவராக, அதனால் கவரப்பட்டவராக இருந்தார். ஆயினும் தனது சமூகவியல் ஆய்வுகளில் மக்ஸ் வெபர் 'புறநிலைத் தன்மை' (Objectivity) இருத்தல் வேண் டும் என்பதில் கவனம் செலுத்தினார். மக்ஸ் வெபரின் 'இலட் சிய மாதிரி' (Ideal type) என்னும் எண்ணக்கரு சமூகவியல் ஆய்வில் புறநிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான முறையியல் உத்தியாக அமைந்தது. மக்ஸ் வெபருக்குப் பின்னர் இருபதாம் நூற்றாண்டில் யக்குவஸ் தெரிதா (Jacques Derrida) மிக்கேல் பூக்கோ (Michel Foucault) பிராங்கோய்ஸ் லியோற்றாட் (Francois Lyotard) ஆகியோர் புதிய கோட்பாடுகளையும் புதிய முறையியலையும் புகுத்தி னர்.

இம்மூவரது சிந்தனைகளும் நீட்சே (Nietzsche) மார்ட்டின் சீட்கர் (Martin Heidegger) ஆகியோரின் மெய்யியல் சிந்த னைகளின் வழி வந்தவையாகும். ஆங்கிலத்தில் 'Post - Nietzschean, Post - Heideggerian philosophy' என இவை

அழைக்கப்படுவதையும் இங்கு குறிப்பிடலாம்.

### சுருக்கம்:

ஆய்வாளர் முறை ஒன்றைத் தெரிவு செய்தல் குறித்த முறை சார்ந்த பிரச்சினை மட்டுமன்று அவரது தெரிவு முறையியல் (Methodology) சார்ந்தது. அத்தெரிவின் போது அவர் முறையியல் சார்ந்த வினாக்களை எழுப்பி அவற்றுக்கு விடை தேடுகிறார். அவ்வினாக்களுக்கான விடைகள் அறிவாராய்ச்சியியல் (Epistemology) நிலை நின்று கண்டடையப்படுகின்றன. அவரது முறை பற்றிய தெரிவுக்கான நியாயப்பாடு (Justification) அறிவாராய்ச்சியியல் விசாரணை மூலம் கிடைக்கிறது. அறிவாராய்ச்சியியல் நியாயப்பாடும், முறையியல் தெரிவும் உலகைப் புரிந்து கொள்வதற்கான வழியைத் திறந்து விடுகின்றன. அதன் மூலம் ஆய்வாளர் ஒரு உலக நோக்கை (World view) வரித்துக் கொள்கிறார். உலக நோக்கு என்பது உள்ளதன் இயல் நிலைப்பாடு ஆகும். இவ்வாறாக ஆய்வு முறைகள் மெய்யியலோடு ஆழமான பிணைப்பை உடையனவாய் விளங்குகின்றன.

முறைவேறு, முறையியல் வேறு என்பதையும் அவை இரண்டையும் வேறுபடுத்தி அறிந்து கொள்ள வேண்டும் என்பதையும் இக்கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது.

இறுதியாக, சமூக விஞ்ஞானங்களில் முறையியல் பற்றிய விவாதங்களின் பயனாக, மெய்யியல் அடிப்படையில் அமைந்த இரு சிந்தனை மரபுகள் தோன்றின என்பதை அறிந்து கொண்டோம். இச்சிந்தனை மரபுகளாவன அ) அகநிலைவாதம் (Subjectivism) ஆ) புறநிலைவாதம் (Objectivism). இவை இரண்டும் ஒன்றோடொன்று முரண்படும், போட்டியிடும் நோக்கு நிலைகளாகும். இந்நோக்கு நிலைகள்

- உள்ளதன் இயல் (Ontology)
- அறிவாராய்ச்சி இயல் (Epistemology)
- முறையியல் (Methodology)

என்ற மூன்று மெய்யியல் பிரிவுகளுடன் நெருக்கான பிணைப்பை உடையனவாய் உள்ளன என்பதையும் இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொண்டோம்.

### மேலதிக வாசிப்புக்குரிய உசாத்துணை நூல்கள்:

- Peter Winch எழுதிய The Idea of a Social Science and its relation to philosophy என்னும் நூல் சமூக விஞ்ஞானங்களிற்கும் மெய்யியலுக்கும் இடையிலான தொடர்புகளை விளக்கும் சிறந்த நூல். இது 1958-ல் எழுதப்பட்டது. இதன் மறுபதிப்பு (2008) Routledge பதிப்பக வெளியீடாக வந்துள்ளது.
- சமூக விஞ்ஞானத்தின் நேர்க்காட்சிவாத நோக்கு பற்றிய விளக்கத்திற்கு படிக்க வேண்டியது Social Inquiry Scientific Inference in Social Research எனும் நூலின் முதலாவது அத்தியாயம். இதன் தலைப்பு ‘Science in social science’ இந்நூலினை எழுதியோர் King, Keohane and verba என்போராவர்.
- அலக்சான்டர் ரொசன்பேர்க் எழுதிய Philosophy of Social Science என்னும் நூல் மெய்யியலுக்கும் சமூக விஞ்ஞானங்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றி விவாதிக்கும் சிறப்பான நூல் இந்நூலின் முதலாவது அத்தியாயம் ‘What is the Philosophy of Social Science?’ மிகுந்த பயனுடையது.
- Philosophy of the social sciences (2009) என்ற நூலின் ஆசிரியர் Mantzavinos. இந்நூலின் மூன்றாவது பாகம் ‘How Philosophy and social Sciences can enrich each other? ‘Three examples’ என்ற தலைப்பினை உடையது. இக்கட்டுரை சமூக விஞ்ஞானங்களும் மெய்யியலும் பரஸ்பர நன்மையை பெறக்கூடிய தொடர்புடைய கல்வித்துறைகள் என்பதை விளக்குவது. இக்கட்டுரைகளில் மூன்று நோக்குமுறைகள் எடுத்துக்காட்டப்பட்டு விளக்கம் தரப்பட்டுள்ளது.
- Norman Blaikie எழுதிய Approaches to social Inquiry (1993) என்ற நூல் மெய்யியலும், சமூக விஞ்ஞானங்களும் எவ்வாறு பரிணாம வளர்ச்சியுற்றன என்ற வரலாற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறுவது.

### இந்நூலின் முதலிரு அத்தியாயங்களினதும் தலைப்புக்கள் பின்வருவன:

Chapter I: What kind of science is social cience? Classical responses. ‘சமூக விஞ்ஞானம் ஒரு விஞ்ஞானம் எனக் கூறத்தக்கதா? அவ்வாறாயின் அது எத்தகைய விஞ்ஞானம்? என்ற பொருளுடைய இம் முதலாவது அத்தியாயம் செவ்வியல் காலத்து (Classical) சிந்தனையாளர்கள் இவ்வினாவிற்கு என்ன பதில் கூறினர் என்பதை ஆராய்கிறது.

Chapter II: What kind of science is social science? Contemporary Responses என்ற தலைப்பில் அமைந்துள்ளது. இவ்விரண்டாவது அத்தியாயம் முன்னைய அத்தியாயம் எழுப்பிய அதே வினாவிற்கு சமகாலச் சிந்தனையாளர்கள் என்ன பதில் கூறுகின்றனர் என்பதை ஆராய்கிறது.


**உசாத்துணை:**

- King, Garry, Robert O, Keohane and Sidney Vebra, 1994, Designing Social Inquiry, Scientific Inference in Social Research, Princeton, NJ. Princeton University Press
- Mantzavinos .C, Ed., 2009, Philosophy of the Social Sciences, New York and Oxford: Basil Blackwell
- Blaikie, Norman, 1993 Approaches to Social Inquiry, Cambridge: Polity Press
- Rosenberg, Alexander, 2012 Philosophy of Social Science, Boulder: West view press.
- Winch, Peter (1958), 2009, The Idea of a Social Science and its Relation to philosophy, Newyork and London: Routledge.





shanmugalingam@thaiveedu.com




மகாவம்சத்தின் 6-வது தொகுதியானது 1978-2010 வரையான காலத்தைப் பற்றி பேசும் தொகுதி. இறுதியாக வெளிவந்த 6-வது தொகுதி ‘மகாவம்சம்’, 1978-2010 காலத்தைப் பற்றியது. ஜே.ஆர் காலம் தொடக்கம் மகிந்த ராஜபக்ச காலம் வரையானது அது. அதாவது ஈழப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக உரு வெடுத்து முள்ளிவாய்க்கால் முடிவு வரையிலானது. இதில் தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியப்படும் பகுதி ‘பயங்கர வாதம்’ என்கிற தலைப்பில் எழுதப்பட்டுள்ள பகுதியாகும். இந்த காலப்பகுதியில் ஆட்சி செய்த ஜே.ஆர். பிரேமதாச, டி.பி. விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ச ஆகியோர் காலத்து ‘பாதுகாப்பு’ அத்தியாயங்கள் மட்டும் இங்கே தொடராக வெளிவருகின்றன.

தமிழர்களின் அரசியல் அபிலாசை, அதற்கான போராட்டம், பற்றிய அரசின் கொள்கை என்ன? வியாக்கியானம் என்ன? இதற்கு அரசு வினையாற்றிய விதம் என்பவற்றை அறிவதற்கு இந்த தொகுதியில் பயங்கரவாதம் என்கிற பகுதி தமிழில் வெளிவருவது முக்கியம்.

இதில் உள்ள தகவல் பிழைகள்கூட அதில் உள்ளபடியே விடுகிறோம். இம் மகாவம்சம் கூறும் அரசியல் வியாக்கியா னங்களைப் பற்றியும் முடிவெடுப்பதை வாசகர்களிடம் விடு கிறோம். நம் கடமை அதில் உள்ளதை உள்ளபடி வெளியி டுவதே. முதற்தடவை ‘மகாவம்சம்’ உள்ளதை உள்ளபடி அப்படியே மொழிபெயர்க்கப்படுவது இதுவே முதற்தடவை யாகும்.

ஜூன் மாத இதழில் ஜே.ஆர். ஜெயவர்த்தன காலத்து ‘பயங்க ரவாதம் - பிரிவினைவாதம்’ நிலைமைகள் பற்றிய பகுதி மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. பிரேமதாச காலத்து ‘பயங்கரவாத’ நிலை பற்றி பகுதி இம்மாதம் வெளியாகிறது. ஓகஸ்ட் மாத இதழில் சந்திரிகா காலம் வெளியாகும்.

- IPKF இலங்கையை விட்டு வெளியேற காலக்கெடு
- வரதராஜ பெருமாளின் தமிழீழ பிரகடனம்
- புலிகள் - பிரேமதாச பேச்சுவார்த்தை
- ‘விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி’ அரசியல் கட்சியாக பதிவு
- யாழ் கோட்டை கைப்பற்றல்
- காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை
- ஒரே மாதத்தில் கொல்லப்பட்ட உமா மகேஸ்வரனும் பத்ம நாபாவும்
- ராஜீவ் காந்தி படுகொலை
- பிரேமதாச படுகொலை

---

46 02 ஜனவரி 1989 அன்று ரணசிங்க பிரேமதாச இலங்கை யின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றபோது, நாட்டில் நிச்சயமற்ற தன்மையும் குழப்பமும் இருந்தது. வடக்கு கிழக்கு பகுதி களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் (எல்.ரி.ரி.ஈ) பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந் ததுடன் இந்திய அமைதி காக்கும் படை அந்த பகுதி களில் இயங்கி வந்தது. ஏனைய பிரதேசங்களில், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அரசுக்கு எதிரான நாச வேலையில் ஈடுபட்டு வந்தது.

47 1987 ஜூலை-இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெ ழுத்தானதைத் தொடர்ந்து, இந்நாட்டுக்கு வரவழைக்கப் பட்டிருந்த இந்திய அமைதி காக்கும் படை, எல்.ரி.ரி.ஈ இயக்கத்துடன் சண்டையிட்டுக்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டிலும் முகாமிட்டிருந்ததன் காரண மாக நிலைமையை ஏற்றுக்கொள்ளாத புதிய ஜனா திபதி, அந்த இராணுவத்தை வெளியேற்றுவது குறித்து அதிக கவனம் செலுத்தினார். இலங்கையின் ஓர் அங் குல நிலப்பரப்பை கூட எவருக்கும் வழங்க மாட்டேன் என்று உறுதியளித்த அவர், இதை நிறைவேற்றும் முதற் படியாக, இந்திய அமைதி காக்கும் படை நாட்டை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுத்தார்.

இந்திய அமைதி காக்கும் படையின் வருகையை யொட்டி வடக்கு மாகாணத்தில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட இலங்கை அரசாங்கப் படைகள் தெற் குப் பகுதிகளில் ஜே.வி.பி-யினரால் மேற்கொள்ளப்பட்டி ருந்த அரச விரோத மற்றும் நாசகார நடவடிக்கைகளை

ஒடுக்குவதற்காக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. வடக்கு மாகாணத்தில் எஞ்சியிருந்த படையினர் இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் படி முகாம்களில் மட்டுப்படுத் தப்பட்டிருந்த அதேவேளை, சில படைப் பிரிவு கள் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் வசிக்கும் கிராமங்களுக்கு எல்.ரி.ரி.ஈ அமைப்பின் தாக்கு தல்களை அடக்க முறியடிப்பதற்காக பயன்படுத்தப் பட்டன.

48 ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச பதவிப் பிரமாணம் செய்து கொண்ட போது நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், குறிப்பாக ஜே.வி.பி மற்றும் எல்.ரி.ரி.ஈ அமைப்புகளைப் பற்றிக் குறிப்பிட்டு இதுவரை ஜன நாயக நீரோட்டத்தில் நுழையாத அனைவரையும் ஜனநா



யகப் பாதையில் வரும்படி அழைப்பு விடுத்தார்.12 ஜனவரி 1989 அன்று, அவசரகால நிலை நீக்கப்பட்ட துடன் எல்.ரி.ரி.ஈ அமைப்பின் மீதும் ஜே.வி.பி மீதும் இருந்த தடையும் நீக்கப்பட்டது. தடுப்புக் காவலில் இருந் த சுமார் 1,800 ஜே.வி.பி சந்தேக நபர்கள் விடுவிக்கப் பட்டனர்.

49 புதிய ஜனாதிபதியின் தலைமையின் கீழ் பிரிவினைவாத மற்றும் வன்முறை அரசியல் மோதல்களைத் தீர்ப்ப தற்காக ஆரம்பிக்கப்பட்ட கொள்கையானது, 1977-இல் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) அரசு கடைப் பிடித்து வந்த கொள்கையில் இருந்து அதிகம் மாறுபட்டி ருந்தது. ஜனாதிபதித் தேர்தலின் போது முன்வைக்கப் பட்ட கொள்கைத் தொடரில் ஒரு புதிய உடன்பாடாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த கொள்கையின் பிரகாரம் பேச்சுவார்த்தைகள், சமரசங்கள் மற்றும் ஒருமித்த கருத் தின் மூலம் அமைதியை உறுதிப்படுத்த எதிர்பார்க்கப் பட்டது. இலங்கையின் இடம்பெறும் மோதல் நிலைமை உள்நாட்டு விடயம் என்பதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, இந்த விடயத்தில் வெளிச்சக்திகள் தலையிட வேண்டாம் என்றும் அறிவித்தார். அக்காலப் பகுதியில் இந்திய அமைதி காக்கும் படையானது ஜே.வி.பியுடனும் எல்.ரி.ரி.ஈ அமைப்பினதும் எதிர்ப்புக்கு ஆளாகியிருந்தது.

50 எல்.ரி.ரி.ஈ இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப் பதற்கான முதற்படியாக 12 ஏப்ரல் 1989 அன்று, தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கம் ஒருத லைப்பட்சமாக போர் நிறுத்தத்தை அறிவித்தது. எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கும் ஜே.வி.பி இயக்கத்துக்கும் பொது மன்னிப்பையும் புனர்வாழ்வுத் திட்டத்தையும் முன்வைத்தது. இந்திய அமைதிப்படையின் தாக்குதலை அடுத்து, எல்.ரி.ரி.ஈ இயக்கம் வன்னிக் காடுகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அப்போது ஜனநாயக நீரோட்டத்தில் பிரவேசித்திருந்த 'ஈரோஸ்' அமைப்பின் ஊடாக ஜனாதிபதியுடன் நல்லுறவை கட்டியெழுப்புவ தற்காக செயற்பட்டது. எல்.ரி.ரி.ஈ. இயக்கம் அரசாங் கத்தின் போர் நிறுத்த அழைப்பை நிராகரித்து இந்திய அமைதி காக்கும் படை நாட்டை விட்டு வெளியேறும் வரை போர் நிறுத்தம் ஏற்படாது என்று ஜனாதிபதிக்கு பகிரங்க கடிதத்தின் மூலம் அறிவித்தது.

எல்.ரி.ரி.ஈ இயக்கம் பேச்சுவார்த்தைக்கான கதவுகளைத் திறப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதை அக்கடிதம் தெளிவுபடுத்தியது.எல்.ரி.ரி.ஈ அமைப்புடன் பேச்சுவார்த் தைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்யும் பொறுப்பு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் படி, அமைச்சர் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை அரசாங்கத் துடன் பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுத்ததுடன் 15 ஏப்ரல் 1989 அன்று, லண்டனில் எல்.ரி.ரி.ஈ. தலைமை யகத்திலிருந்து ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட தொலை நகல் செய்தியில், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவ் அமைப்பு தயாராக இருப்பதாகவும், அதற்குத் தேவையான வசதிகளை அரசாங்கம் வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சாதகமான சூழலை உருவாக்குவதற்காக ஜனாதிபதி எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் தலைமைக்கு தனிப்பட்ட முறை யில் உதவவும் முன்வந்தார். லண்டனில், எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் கோட்பாட்டாளரான அன்டன் பாலசிங்கமும் அவரது மனைவி அடேலும் அரசாங்கத்தின் செலவில் விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்து வரப்பட்ட துடன் அங்கிருந்து இராணுவ பாதுகாப்புடன் ஹெலி கொப்டர் மூலம் வவுனியாவுக்கு பயணிக்க வசதிகள் செய்யப்பட்டன. எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் தலைவர் பிரபா கரனின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து அரசாங்கத்தின் செலவில் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு பாதுகாப்பாக வன்னி யில் இருந்த பிரபாகரனிடம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

51 வன்னியில் இருந்து இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம் கொழும்புக்கு அழைத்துவரப்பட்ட அன்ரன் பால சிங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் 27 ஏப்ரல் 1989 அன்று உத்தியோகபூர்வமற்ற சந்திப்பொன்று நடைபெற்றது. இதற்கிடையில், மே03 அன்று, எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களான யோகி எனப்படும் யோகரட்ணம், பர மூர்த்தி, லோரன்ஸ் ஆகியோரும் பாதுகாப்பாக கொழும் புக்கு அழைத்து வரப்பட்டனர். கண்டியில் உத்தியோக பூர்வமற்ற ஒரு கூட்டம் நடைபெற்றதுடன் அவர்கள் தலதா மாளிகைக்குள் நுழையவும் ஏற்பாடுகள் செய்துகொடுக் கப்பட்டன. 04 மே 1989-ஆம் திகதி ஜனாதிபதியின் தனிப் பட்ட இல்லமான கொழும்பின் சுச்சரிதவில் இடம்பெற்ற மற்றுமொரு உத்தியோகபூர்வமற்ற சந்திப்பின் பின்னர், இரு தரப்பினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ

பேச்சுவார்த்தைகள் மே 05-ஆம் திகதி ஆரம்பமாகின.

எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் தூதுக் குழுவினர் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் பாதுகாப்பாக தங்குவதற்கு அரசாங்கம் வசதி செய்து கொடுத்தது. அத்தூதுக்குழு பாதுகாப்புக்காக ஆயுதங்களை எடுத்துச் செல்ல மட்டுமல்லாமல், ஆயுதமேந்திய தனிப்பட்ட பாதுகாவலர்களையும் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

52 அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் தலைமையிலான அரசாங்க தூதுக்குழுவுடன், அமைச்சர்களான ரஞ்சன் விஜேரத்ன, ரணில் விக்ரமசிங்க மற்றும் சிறிசேன குரே ஆகியோரும் எச்.ஜே. விஜேதாச, பேர்னாட் திலகரத்ன, ஜெனரல் சிறில் ரணதுங்க, டபிள்யூ.டி. ஜயசிங்க மற்றும் பீலிக்ஸ் டயஸ் அபேசிங்க ஆகிய அதிகாரிகளும் தூதுக்குழுவில் அங்கம் வகித்தனர். ஒன்பது கூட்டங்களைக் கொண்டிருந்த முதல் கூட்டத்தில், இந்திய அமைதி காக்கும் படையினால் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கும் கொடுமைகள் குறித்து எல்.ரி.ரி.ஈ அமைப்பின் பிரதிநிதி அன்ரன் பாலசிங்கம் விரிவாக எடுத்துரைத்தார். அரசாங்கத்தின் ஆதரவுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்களை குடியேற்றி அங்கே குடியேற்றங்களை நிறுவுவதாகவும், முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் இராணுவத்தை பலப்படுத்த இந்திய அமைதிப்படை ஆயுதங்களை வழங்குவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். இந்திய அமைதிப்படையை விரைவில் திருப்பி அனுப்ப வேண்டும் என்று அவர் உறுதியாகக் கூறினார். பிரபாகரன் இந்த எந்தப் பேச்சுவார்த்தையிலும் பங்கேற்காததுடன் அவரது பிரதிநிதிகளின் மூலம் தகவல்களை அறிந்து கொண்டார்.

11 ஜூன் 1989-இலிருந்து 16 ஜூலை வரை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்ற எல்.ரி.ரி.ஈ தூதுக்குழுவில் பாரிசிலிருந்து கலந்துகொண்ட திலகர், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஹசன், கரிகாலன், இப்ராஹிம், மாத்தையா என்றழைக்கப்பட்ட மகேந்திரராஜா ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குவர். இந்த பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய அரசாங்க பிரதிநிதிகள் ஜனாதிபதியின் விருப்பப்படி அவ்வப்போது மாற்றப்பட்டனர்.

இந்தப் பின்னணியில் 1989-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி பத்தரமுல்லை ஜெயவடனகம சித்த விவேகாசிரமத்தில் வைத்து இந்திய அமைதி காக்கும் படை ஜூலை 31-ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்றும், இல்லாவிட்டால் அந்த இராணுவம் மலைப்பகுதிக்குள் மட்டுப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

53,
54 இலங்கையில் இருந்து இந்திய அமைதி காக்கும் படையை துரிதமாக வெளியேற்றுமாறு ஜனாதிபதி இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் லக்ஹோன் மஹோத்ராவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் பல கடிதங்களை அனுப்பினார். 1989-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2-ஆம் திகதி பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில், அமைதி காக்கும் படையின் பங்களிப்புக்கு நன்றி தெரிவித்ததுடன், இலங்கையில் இருந்து இராணுவத்தை முழுமையாக வெளியேற்றினால், தன்னால் நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்று அவர்களுக்கு அமை தியை ஏற்படுத்த முடியும் என்று விளக்கினார். தமது விருப்பத்தை ஜூலை 31-ஆம் தேதிக்குள் அமைதி காக்கும் படைகளை திரும்பப் பெறவேண்டும் என்றும் அவர் இந்தியாவிடம் கேட்டுக் கொண்டார். மேலும், ஜனாதிபதியின் கோரிக்கையை வலியுறுத்துவதற்காக தூதுக்குழுக்களும் இரண்டு தடவைகள் இந்தியவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

எல்.ரி.ரி.ஈ தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது முதலமைச்சர் வரதராஜ பெருமாளின் தமிழ்த் தேசிய இராணுவத்தை முடக்க வேண்டியதன் அவசியம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. எல்.ரி.ரி.ஈ அமைப்புக்கு எதிராக செயல்படுவதற்காக கொண்டுவரப்பட்ட அமை தி காக்கும் படையும், இந்திய புலனாய்வுப் பணியும் இணைந்து எல்.ரி.ரி.ஈ அமைப்புக்கு எதிராக செயற்படுவதற்காக ஒரு மாற்றுத் தமிழ் அமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுத்துவருவதையும், அமைதி காக்கும் படை வாபஸ் பெறப்பட்டதன் பின்னர் இரு தமிழ் இயக்கங்களுக்கிடையில் மோதல்கள் ஏற்படலாம் என்பதையும் அவதானித்த ஜனாதிபதி தமிழ்த் தேசிய இராணுவத்தை முடக்க வேண்டியிருந்தது. ஜனாதிபதியின் பிரதிநிதியாக. ஏ.சி.எஸ். ஹமீத், ரஞ்சன் விஜேரத்ன ஆகிய இரு அமைச்சர்களுக்கும் மற்றும் அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையிலான இரகசிய சந்திப்பை அடுத்து, தமிழ்த் தேசிய இராணுவத்தை அழிப்பதற்காக எல்.ரி.ரி.ஈ ஆதரவளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயாவில் 75 மில்லியன் ரூபா ஆயுதங்களும் பொருட்களும் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டது.

இந்திய அமைதி காக்கும் படையை திரும்பப் பெறுமாறு ஜனாதிபதி கோரியிருந்தபோதும் நிலவிய நிலைமை குறித்து இந்தியப் பிரதமரின் கருத்து வேறுவிதமாக இருந்ததால் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இருதரப்பு உடன்படிக்கையான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்தும் வரை அமைதி காக்கும் படையை திரும்பப் பெற முடியாது என்றும், இராணுவத்தை ஒருதலைப்பட்சமாக வெளியேற்ற முடியாது என்றும் பிரதமர் ராஜீவ் காந்தி கருதினார். இலங்கையின் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் நாட்டின் பாதுகாப்பு படைகள் இருக்க வேண்டும் என்பதால் அவரின் கோரிக்கைக்கு இணங்க அமைதி காக்கும் படையை திரும்பப் பெற இந்தியா கடப்பாடு கொண்டுள்ளது என்பது ஜனாதிபதி கருத்தாகும். அந்த இராணுவம் வெளியேறுவதற்கும் இலங்கையில் முழுமையாக அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படுவதற்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என்று ஜனாதிபதி கருத்து தெரிவித்தார். எனவே, 31 ஜூலை 1989 அன்று, அமைதி காக்கும் படைகளை முழுமையாக வெளியேற்றுவதே தனது விருப்பம் என்று ஜனாதிபதி இந்தியப் பிரதமரிடம் தெரிவித்தார்.

55 அன்றைய நிலைமை குறித்து கலந்துரையாடுவதற்காக





இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவரை சந்திக்க இந்தியப் பிரதமர் தயாராக இருக்கிறார் என்பதை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஊடாக அறிந்த ஜனாதிபதி, சுமார் எட்டு ஆண்டுகளாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக பணியாற்றிய பெர்னாட் திலகரத்னவை தனது பிரதிநிதியாக பிரதமர் ராஜீவ் காந்தியிடம் அனுப்பி வைத்தார்.

அப்பிரதிநிதியுடனான சந்திப்பின் போது கூட, இந்திய அமைதிப்படை திரும்பப் பெறப்படுவது குறித்த பிரதமரின் கருத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. தமிழ் மக்களின் தாயகமாக சித்தரிக்கப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதன் மூலம் அந்தப் பிரதேசங்களில் இன விகிதாசாரத்தை செயற்கையாக மாற்றியமைத்து தமிழ் மக்களின் இயல்பான உரிமைகளை இலங்கை அரசு மீறி வருவதாகவும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கு ஏற்ப இந்த நிலைமையை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதும் அவரின் நிலைப்பாடாக இருந்தது.

1989-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14-ஆம் திகதி தென்னிந்தியாவின் பெங்களூரில் இந்தியப் பிரதமர் வெளியிட்ட அறிக்கையில், இலங்கையின் அதிகாரப் பகிர்வு செயல்முறைக்கும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கும் இடையில் நேரடித் தொடர்பு இருப்பதை வலியுறுத்திய இந்தியப் பிரதமர் இரு தரப்பு ஒப்பந்தமான அதனை ஒரு தலைப்பட்சமாக மீற முடியாதென பகிரங்கமாக அறிவித்தார். இதனை விளக்கும் கடிதமொன்றை ஜூன் 20-ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

56 இறைமை கொண்ட சுதந்திர நாடு என்ற வகையில் இலங்கைக்கு உரித்தானதொரு காரியமாக விளங்கும் அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்தை மட்டுமன்றி, இந்தியப் பிரதமரின் கடிதத்தின் தொனியையும் ஜனாதிபதி கடுமையாக எதிர்த்தார். மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் மக்களை குடியேற்றுவதாக பிரதமர் முன்வைக்கும் குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும். எனினும், எல்.ரி.ரி.ஈ. அமைப்புடனான பேச்சுவார்த்தைகள் ஒரு குறிப்பிட்ட இலக்கை எட்டும் வரை பிரதமரின் கடிதத்திற்கு பதில் எழுதுவதை ஜனாதிபதி தாமதப்படுத்தினார்.

57 எல்.ரி.ரி.ஈ அமைப்புடனான அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகளின் விளைவாக, 28 ஜூன் 1989 அன்று, இந்த அமைப்பு இலங்கை அரசாங்கத்துடன் போர் நிறுத்தத்தை அறிவித்தது. அந்த நிலைமை பற்றி இந்தியப் பிரதமருக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி அப்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையின் கீழ் இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய எதையும் மேற்கொள்ளக் கூடாது என்றும் குறிப்பாக அமைதி காக்கும் படையினரால் எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு எதிரான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது என்றும் அறிவித்தார்.

ஜூன் 30-ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து மேலும் விரிவாக விளக்கிய ஜனாதிபதி, இலங்கை மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வுக்கும் அமைதி காக்கும் படையை திரும்பப் பெறுவதற்கும் இடையில் நேரடித் தொடர்பு இருப்பதாக இந்திய பிரதமர் வெளிப்படுத்திய கருத்துக்களுடன் தான் உடன்படவில்லை என்றும் அக்கடிதத்தின் மூலம் அறிவித்தார். மாகாண சபைகளை ஸ்தாபித்தலும் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அனைத்து விடயங்களும் இலங்கை அரசாங்கத்துக்குரிய அரசியல் செயல்முறைகள் என்றும் அதில் இராணுவ ரீதியிலான செயற்பாடுகள் எதுவும் இல்லை என்றும், அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட நிர்வாகக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதே நீண்ட கால செயற்பாடு என்பதால் அது தொடர்பான இலங்கை ஜனாதிபதியின் தலைமையிலான அமைச்சரவையும் மாகாண சபைகளின் அமைச்சர்களுக்கும் இடையில் கலந்துரையாடி மேற்கொள்ளப்படுவதாக தெளிவுபடுத்தினார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன விகி

தாசாரத்தை சிதைக்கும் வகையில் மக்களை குடிய மர்த்தும் திட்டத்தை இலங்கை அரசு நடைமுறைப்ப டுத்தி வருவதாக கூறப்படும் குற்றச்சாட்டை வன்மை யாக நிராகரிப்பதாகவும் அறிவித்தார்.

அமைதி காக்கும் படைகளை திரும்பப் பெறுவதற்கு கொடுக்கப்பட்ட கால அவகாசம் விரைவில் முடிவுக்கு வரும் ஜூலை நடுப்பகுதி வரை இந்தியா அத்தகைய நடவடிக்கையை எடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரி யவில்லை. 1989 யூலை 21-ஆம் திகதி லெப்டினன்ட் ஜெனரல் கல்கட் இந்தியப் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த அறிக்கையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத் தின்படி வடகிழக்கு மாகாணங்களில் உள்ள முகாம்க ளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் இலங்கை இராணு வம் அம்முகாம்களில் இருந்து வெளியே வந்தால் அவர் களின் மீது தாக்குதல் நடத்த தயாராக இருப்பதாகவும் அறிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் ஏற்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகத் தோன்றும் இந்த சூழலில் ஒரு தந்திரோபாய அணுகுமுறையைப் பின்பற்றி, ஜூலை 31-ஆம் திகதிக்குள் அமைதி காக்கும் படையினர் திரும்பப் பெறப்பட வேண்டும் அல்லது முகாம் களில் அடைக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று இலங் கையின் முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனா திபதி ஜூலை 22 அன்று இறுதி அறிவிப்பை வெளியிட்டார்.

ஜனாதிபதியின் இறுதி அறிவிப்பின் பிரகாரம் அமைதி காக்கும் படை வெளியேற வேண்டிய ஜூலை 31-ஆம் திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அமைச்சர வையைக் கூட்டிய ஜனாதிபதி, தற்போதுள்ள நிலை மையை கருத்திற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு தயாராக இருக்கும் தனது திட்டம் குறித்தும் விளக் கினார். வெளிவிவகார அமைச்சர்கள் இருவருக்குமிடை யிலான கலந்துரையாடலின் ஊடாக இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் நர சிம்மராவ் தயாராக இருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன அமைச்சரவையில் தெரிவித்தார். 1989 யூலை 28-ஆம் திகதி 'சுச்சரித'வில் ஜனாதிபதி, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோ ருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் முடிவில் ஒரு கூட் டறிக்கை வெளியிடப்பட்டது.

58 அவ்வறிக்கையின்படி அமைதி காக்கும் படைகளை ஜூலை 31-ஆம் திகதி திரும்பப் பெறத் தொடங்குவதற் கும், அது தொடர்பான மேலதிக செயற்பாடுகள் குறித்து அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தலைமையிலான தூதுக் குழுவுடன் ஒரு முடிவை எட்டுவதற்கும் இந்தியா ஒப்புக் கொண்டது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் படிய விடயங் களைப் போன்று அமைதி காக்கும் படையின் எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றியும் அங்கே கலந்துரையாடு முடிவெடுக்கப்படும் என்று அந்த அறிக் கையில் கூறப்பட்டது. ஜனாதிபதி எதிர்பார்த்தது போல வே அமைதி காக்கும் படையை திரும்பப் பெறுவதற் கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஜூலை 31-ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு மெதுவாக நடந்து கொண்டிருந்த வேளை. 1989 ஓகஸ்டில் இந்தியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ராஜீவ்காந்தியின் காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டு ஜனதாதளம் வெற்றி பெற்றதுடன் ஸ்ரீவிஸ்வநாத் பிரதாப்சிங் பிரதமரானார்.

59 பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்து வந்த மற்றும் அவ்வாறு பிரதிநிதித்துவம் செய்யப்படாத அனைத்து கட்சிகளும், கூடவே எல்.ரி.ரி.ஈ அமைப்பின் பங்கு பற்றச் செய்து நாட்டின் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் அவர்களின் கருத்துக்களை



நேரடியாக அறியும் நோக்கில் ஜனாதிபதி 1989 ஆகஸ்ட் 12-ஆம் திகதி பண்டாரநாயக்க, பண்டாரநாயக்க சர்வ தேசமாநாட்டு மண்டபத்தில் சர்வகட்சி மாநாட்டை கூட்டினார்.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில், எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் அரசியல் பிரிவாக 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' என்ற பெயரில் ஒரு அரசியல் கட்சி பதிவு செய்யப்பட்டு, அக்கட்சியின் பிரநிதிகளும் இந்த மாநாட்டில் பங்கேற்க செய்யப்பட்டது. எல்.ரி.ரி.ஈ அமைப் புடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஈரோஸ் அமைப் பின் பாலகுமார் தலைமையிலான குழு ஏற்கனவே ஜனநாயக நீரோட்டத்தில் நுழைந்து பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த மாநாட்டில் பங்கேற்றது. முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலை மையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீ.ல.சு.க) உள்ளிட்ட 26 அரசியல் கட்சிகள் இந்த மாநாட்டில் பங்கேற்று, நாட்டின் 20 முக்கிய பிரச்சினைகள் குறித்து கட்சிகள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த இடம ளிக்கப்பட்டது. இருப்பினும் எல்.ரி.ரி.ஈ. தனி நாடு என்ற எண்ணத்தைக் கைவிட கொஞ்சமும் தயாராக இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தவுடன் ஜனாதிபதியின் முயற்சிகள் முறிந்தன.

60 இந்தியாவின் புதிய பிரதமரின் கீழ், 24 மார்ச் 1990 அன்று, அமைதிப்படை திரும்பப் பெறும் பணிகள் நிறைவடைந் தன. அப்போது, இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 49 அதிகாரிகளும் 1555 வீரர்களும் கொல்லப்பட்டிருந்த துடன் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்திருந்தனர். இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் தங்கியி ருந்த காலத்தில், இந்திய அரசு சுமார் 1.25 பில்லியன் டொலர் செலவிட்டிருந்தது. இக்காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அமைதிப்படைக்கும் எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்குமிடையிலான மோதல்களில் 2,592 எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களும் ஏராளமான பொதுமக்களும் கொல்லப் பட்டிருந்தனர்.

61 1987-ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக நாசகார நடவடிக்கைகளை ஜே.வி.பி ஆரம்பித்திருந்ததுடன், 1989-இல் ஜனாதிபதி தனது பதவிக்காலத்தின் ஆரம்பத்திலேயே, ஜனநாயகப் பாதையில் நுழைவதற்கான அழைப்பை விடுத்தும் அதனை ஏற்காமல் 1990-களின் நடுப்பகுதியில் தமது நடவடிக்கைகளை ஜே.வி.பி தீவிரப்படுத்தியிருந்தது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் ஜே.வி.பி உறுப்பினர்களைக் கொண்ட 'போராட்டக் குழுக்களை' உருவாக்கி, ஊழியர்களை அச்சுறுத்தி வேலைக்கு வருவதை தடுத்ததோடு அதிகாரபூர்வமற்ற ஊரடங்கு சட்டங்களை அமுல்படுத்தியது. மேலும் சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் வழிநடத்திக் கொண்டு தனியார் வர்த்தக நிறுவனங்களினதும் அரச நிறுவனங்களினதும் செயற்பாடுகளுக்கு இடையூறு செய்யும் சூழ்நிலையை உருவாக்கினார். 1987 முதல் 1990 வரை பல்கலைக்கழகங்கள் முற்றிலுமாக செயலிழந்ததோடு பாடசாலை மாணவர்களை அச்சுறுத்தியும் பாடசாலை முறைமையையும் முடக்கியதோடு அல்லாமல் வைத்தியசாலைகளின் செயற்பாடுகளும் சீர்குலைக்கப்பட்டன. வங்கி, மின்சாரம், தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளையும், அனைத்து வகையான போக்குவரத்து சேவைகளையும் சீர்குலைத்து, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை சீர்குலைந்தது. இந்தியப் பொருட்களைப் புறக்கணிக்க மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் அக்கட்டளையை மீறி இந்தியப் பொருட்களை விற்கும் வியாபாரிகளையும், அவற்றை வாங்கியவர்களையும் கொல்லவும் துணிந்தனர். சுற்றுலாப் பயணிகளை நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டாயப்படுத்தியதுடன் அரசுக்கு அந்நிய செலாவணி வருமானத்தை ஈட்டித் தந்த முக்கிய ஆதாரங்களில் ஒன்றான சுற்றுலாத்துறையும் முடக்கப்பட்டது.

பாதுகாப்புத்துறை மற்றும் பொலிஸ் சேவையில் இருந்தவர்களை அரச சேவையை விட்டு விலகுமாறு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவங்களும், அத்தகைய பாதுகாப்பு சேவையில் இருந்தவர்களும் அவர்களது உறவினர்களும் கொல்லப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்தன. ஜே.வி.பி இந்த கொடூர செயலுக்கு எதிராக போராடும் வலிமை கொண்டிருந்த பிக்குகள், அறிஞர்கள், வெகுஜன தொடர்பாடல் ஊடகங்கள் மற்றும் தொழிற்சங்கங்களையும் மௌனிக்க செய்வதற்காகவே பல மனித படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. மேலும் ஜே.வி.பியை எதிர்த்த பல்வேறு தரப்பைச் சேர்ந்த பலரும் கொல்லப்பட்டதுடன், இறுதிச் சடங்குகள் நடத்தப்பட வேண்டிய விதத்தில் கூட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கொல்லப்பட்டவர்களின் உடல்கள் தெருக்களில் எரிப்பது போன்ற செயல்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலைமையின் காரணமாக 1990-களின் நடுப்பகுதியில், சட்டபூர்வமான அரச இயந்திரம் பலவீனமுறும் நிலை ஏற்பட்டது.

62 ஜே.வி.பி-யின் வன்முறைகளுக்கு எதிராக நேரடியாக செயற்பட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் உதவியுடன் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவால் பயங்கரவாத நடவடிக்கையை முறியடிக்க பலமான ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, ஜே.வி.பி-யின் பயங்கரவாத நடவடிக்கைகள் பரவியிருந்த மாகாணங்களுக்குப் பொறுப்பாக இராணுவத் தளபதிகளை நியமித்தும், நிர்வாக மாவட்டங்களுக்கு இராணுவக் கட்டளைத் தளபதிகளைக் கொண்டு ஒரு விரிவான புலனாய்வு வலைப்பின்னல் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

தென்மாகாணத்திற்குப் பொறுப்பான பிரிகேடியர் லக்ஷ்மன்அல்கமவும் கொழும்பில் இருந்து முன்னெடுக்கப்படும் கூட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்னவும் நியமிக்கப்பட்டதோடு நாடு பூராகவும் படைப்பிரிவுகள் நிலைநிறுத்தப்பட்டன. தாமும் தம் உறவினர்களும் மரண அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட நிலையில், இராணுவத்தினர் மிகவும் உற்சாகமாக செயற்பட்ட நிலையில் ஜே.வி.பி-யின் நடமாட்டமும் பகிரங்க நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவால் ஜே.வி.பி-யின் கொழும்பு மற்றும் சப்ரகமுவ பகுதிகளுக்கான அரசியல் பிரிவை இயக்கிய டீ.எம். ஆனந்தவின் கைதானது அந்த அமைப்பை ஒடுக்குவதற்கான முக்கிய திருப்பு முனையாக அமைந்தது. கைது செய்யப்பட்ட ஜே.வி.பி உறுப்பினர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையின் போது, அத்தநாயக்க என்ற பெயரில் ஒரு தோட்ட உரிமையாளராக மாறுவேடமிட்டு தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் உலப்பனில் ஒளிந்திருந்த ரோகண விஜேவீர 1989 நவம்பர் மாதம் மேஜர் காமினி ஹெட்டி ஆராச்சி தலைமையிலான குழுவால் கைது செய்யப்பட்டார். ரோகண விஜேவீர கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற பின்னர் இராணுவக் காவலில் இறந்தார்.

உடனடியாக செயலில் இறங்கிய அரச படை ஜே.வி.பி-யின் அரசியல் குழு உறுப்பினர்களை பிடிக்க முடிந்ததுடன் அவ்வாறு கைது செய்யப்பட்ட முக்கியத் தலைவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர். சோமவன்ச அமரசிங்க மட்டும் பாதுகாப்பாக நாட்டை விட்டு தப்பினார்.

63 இந்திய அமைதி காக்கும் படையால் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த முடிந்தபோதும் காடுகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அவ் அமைப்பின் உறுப்பினர்கள், ஜனாதிபதி பதவியேற்ற ஆரம்ப காலங்களிலும், அமைதிப் பேச்சுவார்த்தை காலப் பகுதியிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் முதியவர்கள், இளைஞர்கள், கைக் குழந்தைகள் மற்றும் பெண்கள் என அனைத்துப் தரப்புகளையும் சேர்ந்த அப்பாவி மக்களையும் மனிதாபிமானமற்ற முறையில் வெட்டிக் கொல்வதை தொடர்ந்து மேற்கொண்டனர். 1989 பெப்ரவரி முதல் 1990 ஜூன் மாதம் இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமாகும் வரை, அம்பாறை அரலகங்விலவைச் சேர்ந்த 8 பேரும், வவுனியா மஹாரம்பக்குளத்தைச் சேர்ந்த 9 பேரும், அம்பாறை போகமுயாயவைச் சேர்ந்த 11 பேரும், வெலிஓயா துடுவெவையைச் சேர்ந்த 37 பேரும், சிங்கபுரவைச் சேர்ந்த 6 பேரும், பொலன்னறுவையைச் சேர்ந்த 8 பேரும், திருகோணமலையில் மஹிந்தபுரவைச் சேர்ந்த 5 பேரும் திருகோணமலையில் ஒன்பது பேர் என

கொல்லப்பட்டனர். சரியான புள்ளிவிபரங்கள் கிடைக்காத இன்னும் பல கிராமங்களில், பொது மக்கள் வெட்டி மனிதாபிமானமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டதுடன் அவர்களது அசையும் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டதுடன் அவர்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

சிங்கள மக்களை மட்டுமல்ல, தமக்கு இணங்காத தமிழ்த் தலைவர்களையும் படுகொலை செய்த புலிகள், 13 யூலை 1989 அன்று, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தையும் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் ஆகியோரையும் கொழும்பில் வைத்து கொன்றதுடன் 'முறிந்தபனை' நூலை எழுதி எல்.ரி.ரி.ஈ இயக்கத்தைப் பற்றிய உண்மைகளை உலகுக்கு வெளிக்கொணர்ந்த ராஜனி திரானகம 21 செப்டம்பர் 1989, அன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் படுகொலை செய்யப்பட்டார். 1990-ஆம் ஆண்டு மே மாதம் 7-ஆம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாம். தம்பிமுத்துவும் அதே ஆண்டு யூன் மாதம் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி.கே. யோகசங்கரியும், ஜுலை 7-ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் கிருபாகரன் உள்ளிட்ட 13 பேரும், யூலை15 அன்று அம்பாறையில் பொத்துவில் உறுப்பினர் கே.கனகரத்தினமும் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

64 சர்வகட்சி மாநாடு தோல்வியடைந்த போதிலும், அரசாங்கத்திற்கும் எல்.ரீ.ரீ.ஈ-க்கும் இடையிலான மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. 1989 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஜனாதிபதிக்கும் மகேந்திரராஜா எனப்படும் மாத்தையாவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சுச்சரிதவில் இடம்பெற்ற அதேவேளை, ஜனாதிபதியின் பிரதிநிதியான அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட், யாழ் பலாலி முகாமில் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தமது இயக்கத்தின் பலத்தை அதிகரிக்கவும், பாதுகாப்புப் படைகளின் அதிகாரத்தை பலவீனப்படுத்தவும் சூட்சுமமாக செயற்பட்ட எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் தமிழீழ அரசு என்ற தமது நோக்கத்தை எவ்வகையிலும் மாற்றிக் கொள்ளவில்லை. அமைதி காக்கும் படை வாபஸ் பெறப்பட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தாத நிலையில் அமைதி காக்கும் படை வெளியேறியதன் மூலம் தமது இயக்கத்துக்கு இருந்த நெருக்கடிகள் தணியும் என்பதை எல்.ரி.ரி.ஈ. இயக்கம் உணர்ந்து கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கான கதவுகளைத் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த பாலசிங்கம், தமது அமைப்புக்கும் அரசுக்கும் இடையிலான போர்நிறுத்தத்தை மேலும் உறுதி செய்வதற்காக பிரபாகரனின் பிறந்த இடமான வல்வெட்டித்துறையில் உள்ள இராணுவத்தளத்தை விலக்கிக் கொள்ளுமாறு கோரினார். ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய வல்வெட்டித்துறையிலும் பருத்தித்துறையிலும் இருந்த இராணுவ முகாம்களை அகற்றுமாறு பாதுகாப்பு செயலாளர் உத்தரவிட்டார். அந்த இராணுவ தளங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து பருத்தித்துறை முகாமில் இருந்த பொலிஸ் பிரிவு பொதுமக்களைக் கொண்டு சுற்றி வளைத்த எல்.ரி.ரி.ஈ இயக்கம் அப்பொலிஸ் பிரிவு அப்பகுதிமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கத்திடம் முறையிட்டது.

ஜனாதிபதியின் விருப்பத்தின் பேரில், பருத்தித்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை விடுதலைப் புலிகளின் வாகனங்களில் ஏற்றி யாழ்ப்பாணக் கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்ல அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது. இவ்வாறு, வடக்கில் பாதுகாப்புப் படையினரின் அதிகாரம் வீழ்ச்சியடைந்துவந்த நிலையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவத் தளங்களின் எண்ணிக்கை பலாலி, யாழ்ப்பாணக் கோட்டை, ஆனையிறவு முகாம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் ஆகியவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டது. வன்னிப் பகுதியில் கிளிநொச்சி, மாங்குளம், கொக்குவில் மற்றும் முல்லைத்தீவில் உள்ள பாதுகாப்புப் படைகளின் தளங்கள் பாதுகாப்பற்றவையாக ஆனதுடன் அம்முகாம்களை ஹெலிகொப்டர்கள் மூலம் மட்டுமே அவற்றை அடைய முடிந்தது.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் கலைக்கப்படுவதை சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது எல்.ரி.ரி.ஈ அமைப்பு ஒரு கோரிக்கையாக முன்வைத்திருந்த போதும் அதற்கான அரசியலமைப்பு ஏற்பாடுகள் சாதகமாக இராததால் அரசால் எதுவும் செய்ய இயலவில்லை. அதேவேளை அரசாங்கத்தின் உதவியுடன் விடுதலைப் புலிகள் தமது ஆயுதப் படைகளை அழித்த நிலையில் தமக்கு ஆதரவாக இருந்த அமைதி காக்கும் படையும் வெளியேறியதைத் தொடர்ந்து முதலமைச்சர் வரதராஜ பெருமாள் 1990 மார்ச் 1-ஆம் தேதி ஒரு தலைப்பட்சமாக தமிழீழ அரசை பிரகடனப் படுத்திவிட்டு இந்தியாவுக்கு தப்பிச் சென்றார். இதன் விளைவாக 1990-ஆம் ஆண்டின் 27-ஆம் இலக்க மாகாண சபை திருத்தச் சட்டத்தில் ஏற்பாடுகளை செய்து வடக்கு கிழக்கு மாகாண சபையை ஜனாதிபதி கலைத்ததனால் அந்த மாகாணங்களில் தமது பலத்தை விரிவு படுத்துவதற்கு எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு வாய்ப்புகள் திறக்கப்பட்டன. 1990 மார்ச்சில் இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து, எல்.ரி.ரி.ஈ அமைப்பு அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் போர் நிறுத்த ஒப்பந்தங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு தமது வழக்கமான வன்முறைப் பாதைக்குத் திரும்பினர்.

65 இந்திய அமைதி காக்கும் படையின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை எல்.ரீ.ரீ.ஈ-யின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக அரசாங்கத்திற்கு எதிராக தொடங்கப்பட்ட இரண்டாவது ஈழப் போர் என்றழைக்கப்பட்ட தொடர் சமர்கள் 1990-ஆம் ஆண்டு ஜுன் 11-ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டன. அம்மாவட்டத்தின் களவாஞ்சிக்குடி, வெள்ளாவெளி, கல்முனை ஆகிய பொலிஸ் நிலையங்களின் மீதும், திருகோணமலை மாவட்டம் மூதூர் பொலிஸ்

நிலையத்தின் மீது நடத்திய தாக்குதலின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இந்த தாக்குதல்களுக்கு எதிர் தாக்குதல் நடத்தக் கூடாது என்று கட்டளையிடப்பட்டிருந்த நிலையில் அந்தப் பொலிஸ் நிலையத்தை சுற்றி வளைத்து தக்குதல் நடத்திய எல்.ரி.ரி.ஈ ஒரு சில மணி நேரங்களில் அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் அனைவரையும் தமது பிடிக்குள் கொண்டு வரமுடிந்தது. உதவி போலீஸ் அதிகாரி ஐவன் பொத்தேஜு தலைமையில் கல்முனை போலீஸ் அதிகாரிகள் எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு பதிலடி கொடுத்து, பொலிஸ் நிலையத்தைப் பாதுகாக்க மேலதிக இராணுவ ஆதரவைக் கோரியிருந்த நிலையில் எல்.ரி.ரி.ஈ அமைப்பிடம் சரணடையுமாறு பொலிஸ் மா அதிபரிடமிருந்து வந்த உத்தரவுக்கு அமைய, உதவி பொலிஸ் அதிகாரி ஐவன் பொத்தேஜு தனது அதிகாரிகளுடன் எல்.ரி.ரி.ஈ அமைப்பிடம் சரணடைந்தார். இவ்வாறு சரணடைந்த சுமார் 600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒன்று திரட்டப்பட்டு காடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு புலிகளால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

66 மூதூர் பொலிஸ் நிலையத்தையும் கிராண் இராணுவ முகாமையும் விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து தாக்கிய நிலையில் படையினரும் பொலிசாரும் பதிலடி கொடுக்கும் வகையில் இணைந்து போராடி, தமது இடங்களைத் தக்கவைத்துக் கொள்ள முடிந்தது. இந்த நிலைமையைப் புரிந்து கொண்ட பாதுகாப்பு அமைச்சு, பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இராணுவத்திற்கு கட்டளையிட்டதுடன் அரசாங்கம் தெற்கில் நிலைகொண்டிருந்த இராணுவப் பிரிவுகளை கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி இரண்டாம் ஈழப் போரில் இறங்கியது.

திருகோணமலை மாவட்டத்திற்கு பொறுப்பாக இருந்த பிரிகேடியர் லக்ஷ்மன் விஜயரத்ன தென் பிரதேசங்களில் இருந்து வந்து மூதூர் பொலிஸாரை மீட்பதற்காக 5-வது கெமுன ஹேவா படைப்பிரிவையும் கொமாண்டோ குழுக்களையும் கடற்படை படகுகளில் மூதூர் இறங்குதுறைக்கு அனுப்பி வைத்தார். அப்பயங்கரவாத தாக்குதல்களுக்கு மத்தியில் 5-வது கெமுனு ஹேவா படையணியும் மூதூர் இறங்குதுறையில் கரையிறங்கியது. மேலதிக கொமாண்டோ குழு தெற்கு வழியாக படகில் வந்து பொலிஸ் நிலையத்தை அடைய திட்டமிட்டிருந்த போதும் அவர்கள் செல்லும் பாதை குறித்த செய்திப் பரிமாற்றங்களை இடைமறித்து அறிந்துகொண்ட பயங்கரவாதிகள் கட்டைபரிச்சானில் அவர்கள் சென்ற பாதையில் இடைமறித்து தாக்கியதில் 54 கமாண்டோக்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் பணயக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர் கொமாண்டோக்கள் எவராலும் மூதூர் பொலிஸ் நிலையத்தை அடைய முடியாத போதும் 5-வது கெமுனுஹேவா படையணியால் மூதூர் பொலிஸ் நிலையம் மீட்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரிகேடியர் ஏ.எம்.யு. சேனவிரத்னவின் கட்டளையின் கீழ், 3-வது இலங்கை காலாட் படையும் 4-வது கெமுனு ஹேவா படையணியும் புனானையிலிருந்து புறப்பட்டு வாழைச்சேனை வரையான பாதையைக் கைப்பற்றி பாதுகாப்பை உறுதிபடுத்த நாவலடி மற்றும் வாழைச்சேனை பகுதிகளில் இராணுவக் காவலரன்கள் நிறுவப்பட்டன. வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு வரை புறப்பட்ட படையணி கிரான் பகுதியை மீட்டெடுத்து மட்டக்களப்பு வரையான தமது பலத்தை உறுதிபடுத்தினர். மேலும் கிரான் நிலையை உறுதிபடுத்திக் கொண்டு சித்தாண்டி மற்றும் செங்கலடியில் புதிய முகாம்களும் நிறுவப்பட்டன.

பிரிகேடியர் சேனவிரத்ன தனது படைப்பிரிவின் தலைமையகத்தை மட்டக்களப்பு நகரில் நிறுவியதோடு, அதுவரை பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கியிருந்த கல்லடி முகாமை முதலாவது கெமுனு ஹேவா படையணியின் மூலம் பலப்படுத்தினார். இவ்வாறு ஒரு சில வாரங்களுக்குள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது பலத்தை நிறுவி சிவில் நிர்வாகத்தை பாதுகாப்புப் படையினரால் மீட்டெடுக்க முடிந்தது. மட்டக்களப்பின் தெற்குப் பகுதியில் உள்ள கல்முனை மற்றும் சம்மாந்துறை நகரங்களில் பொலிஸ் விசேட 7-வது சிங்க படையணியை மகா ஓயா, மட்டக்களப்பு பாதையை பாதுகாப்பதற்காக நிலைநிறுத்திவிட்டு பயங்கரவாதிகளை இராணுவத்தினர் வெளியேற்றினர். பொலிஸ் விசேட அதிரடிப்படை மட்டக்களப்பின் தெற்குப் பகுதியில் உள்ள கல்முனை மற்றும் சம்மாந்துறை நகரங்களில் தமது பலத்தை நிலைநிறுத்தியது.

மீண்டும் எதிர்ப்புகளையும் தாக்குதல்களையும் ஆரம்பித்து சுமார் ஒரு மாதத்தின் பின்னர், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹெமில்டன் வனசிங்க, வடக்கில் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவை நியமித்தார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் படி அரச படைகள் முகாம்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது மட்டுமல்லாமல், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது ஒப்புக்கொள்ளப்பட்டவாறு அரசாங்கப் படைகளின் வசமிருந்த இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை முகாம்களையும் அரசாங்கம் கைவிட்டிருந்தது. அமைதிப்படை வெளியேறிய பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஒப்புக்கொள்ளப்பட்டபடி பல துருப்புக்கள் நிலைகொண்டிருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, கொக்குவில், மாங்குளம் மற்றும் யாழ்ப்பாணக் கோட்டையில் இராணுவ பலத்தை மீட்டெடுக்க உடனடி நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. அன்ரன் பாலசிங்கமும் அவரது பிரநிதிகள் குழுவும் கொழும்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டே புலிகளின் தலைமை வடக்கிலும் அதே போல் வன்னியிலும் உள்ள ஒவ்வொரு பிரதான அரச இராணுவத் தளங்களையும் சுற்றி வளைக்க தேவையான ஏற்பாடுகளை செய்துகொண்டது. இந்திய அமைதிப்படை வெளியேறியதன் பின்னர் எல்.ரி.ரி.ஈ அமைப்பை எதிர்த்து இயங்குவதற்கு எந்த சக்தியும் இருக்கவில்லை. அத்துடன் இந்திய அமைதி காக்கும் படை வெளியேறிய சகல முகாம்களைச் சூழ்ந்த சகல மையங்களிலும் எல்.ரி.ரி.ஈ. இயக்கம் தனது பலத்தை நிறுவுவதன் மூலம் அவ்அமைப்பின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

67 எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் நடவடிக்கைகளை அடக்குவதற்கு ஒரு விரிவான ஒழுங்கமைக்கப்பட்ட திட்டம் தேவை என்பதை இராணுவத்தின் உயர் அதிகாரிகள் புரிந்து கொண்டிருந்த போதும், அதிகாரிகள் இராணுவத்தின் வலிமையையும், ஆயுதபலத்தையும், மன உறுதியையும் மேம்படுத்த சில வருடங்களாக அலட்சியப்படுத்தி இருந்தனர். ஒரு சில அரசாங்கப் படையினர் வடக்கில் உள்ள முகாம்களுக்குள் மட்டுப்படுத்தப் பட்டிருந்ததோடு ஏனையோர் தெற்கில் ஜே.வி.பி-யின் அரசாங்க விரோத நடவடிக்கைகளை நசுக்குவதற்காக பயன்படுத்தப்பட்டனர். அதேவளை எந்த பயிற்சியும் ஊக்கமும் மனவலிமையும் இல்லாதவர்கள் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுவது ஒரு சாதாரண நிகழ்வாக இருந்தது. இதன் காரணமாக காலாட்படை தரப்பிலும் பலவீனங்கள் இருந்தன.

விடுதலைப் புலிகள் அமைதி காக்கும் படையினருடன் மோதிக் கொண்டும், தமிழ்த் தேசிய இராணுவத்தை அழிக்கத் தாக்குதல்களை நடத்தியது மட்டுமன்றி, பல்வேறு பிரதேசங்களில் படுகொலைகளையும் தாக்குதல்களையும் நடத்தியதன் மூலமும் நல்ல பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்றிருந்தனர். புலம்பெயர் தமிழர்கள் உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகளிடமிருந்து நிதி உதவிகளைப் பெற்றனர். வெளிநாடுகளில் இருந்த சில எல்.ரி.ரி.ஈ தலைவர்களால் ஆரம்பத்தில் இருந்தே எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு படகுகள் உள்ளிட்ட ஆயுத உபகரணங்கள், வாகனங்கள், ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டு வந்தன. தென்னிந்திய மாநிலமான சென்னையில் உள்ள பல அரசியல் கட்சிகள் விடுதலைப் புலிகளுக்கு உதவியதுடன், வடக்கிற்கு அனுப்ப தடை செய்யப்பட்டிருந்த சீமெந்து, முட்கம்பி, இரும்பு ஆணிகள் உட்பட பதுங்கு குழிகளையும் கண்ணிவெடிகளையும் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்களை கொண்டு செல்வதற்கான தடையை ஜனாதிபதியின் அனுமதியுடன் நீக்கியதன் மூலம் அவற்றை வடக்குப் பகுதிக்கு பெருமளவில் கொண்டு செல்லவும் வாய்ப்பாக ஆகியிருந்தது.

இந்த நிலையில் எல்.ரி.ரி.ஈ அமைப்பு கடற்புலிகள் பிரிவை பெரிதும் மேம்படுத்தியதுடன், கடற் கரும்புலிகள் பிரிவையும் உருவாக்கியிருந்தது. இதன் மூலம் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கை கடற்படைக்கு சொந்தமான பெரிய கப்பல்களை சிறிய படகுகள் மூலம் தகர்க்கும் திறன் எல்.ரி.ரி.ஈ. அமைப்பிடம் இருந்தது.

68 வவுனியாவுக்கு வடக்கே ஏ-9 பாதையில் பல இராணுவத் தளங்கள் நிறுவப்பட்டன. கிளிநொச்சி அதில் பிரதானமானது. கிளிநொச்சிக்கு வடக்கே ஆனையிறவு, யாழ்ப்பாணக் கோட்டை, பலாலி முகாம், கிளிநொச்சி முகாமுக்குத் தெற்கே மாங்குளம் முகாம், கொக்குவில் முகாம் ஆகியன இருந்தன. வடக்கில் உள்ள இந்த இராணுவத் தளங்கள் அனைத்தும் பயங்கரவாதிகளால் முற்றுகையிடப்பட்டதோடு காயமடைந்தவர்களை ஏ-9 பாதை வழியாக தரை மார்க்கமாக கொண்டு செல்ல முடியவில்லை. நோய்வாய்ப்பட்ட படையினரை கொண்டு செல்வதற்கும், தேவையான உணவு மற்றும் எரி பொருளை விநியோகிப்பதும் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. முல்லைத்தீவு மற்றும் சிலாவத்துறை தளங்களை கடல் வழியாக அடைய முடிந்த போதும் பலாலி விமான நிலையத்தின் நுழைவாயில்கள் கனரக ஆயுதங்கள் மற்றும் விமான எதிர்ப்பு ஆயுதங்களைப் பயன்படுத்தி பயங்கரவாதிகளால் தடுக்கப்பட்டதால், 'Y12' என்ற பெயரிடப்பட்ட 17இருக்கைகள் கொண்ட சிறிய விமானங்களும் ஹெலிகொப்டர்களும் மட்டுமே அங்கு நுழைய முடிந்தது. பிரதான தரைவழிப் பாதையான ஏ-9 பாதை தொடர்ந்தும் இராணுவத்தால் பயன்படுத்த முடியாதபடி எல்.ரிரி.ஈ-யின் கட்டுப்பாட்டில் இருந்தன.

இவ்வாறான நிலையில் கடல் எல்லையில் இருந்து பலாலி விமான நிலையத்திற்கு விமானங்கள் நேரடியாக தரையிறங்குவதற்கு விமானப் பாதையொன்று (கோரிடோ) அமைக்கப்படவிருந்ததால் லெப்டினன்ட் கேர்ணல் காமினி ஜயசுந்தரவின் கீழ் இருந்த 3-வது இலங்கை காலாட் படையணியைப் பயன்படுத்தி பலாலி விமான நிலையத்தின் எல்லையை மயிலிட்டி கடற்கரை வரை விரிவுபடுத்தி பெரிய விமானங்களை தரையிறக்கக் கூடிய விமான அணுகல் பாதை அமைக்கப்பட்டது. மயிலிட்டி கடற்கரை ஆழமற்றதாக இருந்ததால், உலர் உணவுப் பொருட்களையும் அத்தியாவசிய வெடிமருந்துகளையும் கடல் வழியாக கொண்டு வர முடியவில்லை. லெப்டினன்ட் கேர்ணல் சுசில் சந்திரபாலவின் வழிகாட்டுதலின் கீழ் 110 மீட்டர் நீளமான இறங்குதுறையை நிர்மாணிப்பதற்காக இராணுவத்தின் பொறியியல் படை ஒன்று ஈடுபடுத்தப்பட்டது. இதன் மூலம் பலாலி முகாம் மீதான புலிகளின் தாக்குதல்களை குறைக்க முடிந்தது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையமும் இராணுவப் பிரிவும் இணைந்து பாதுகாப்பை பலப்படுத்தியதுடன் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் பயன்பாட்டுக்காக இருந்த 100 தொன் வெடிமருந்துகளும் வெடிபொருட்களும் விடுதலைப் புலிகளின் கைகளில் சிக்குவதை தடுப்பதற்காக, பொறியியல் படையணியின் உறுப்பினர்கள் ஒரு இரகசிய நடவடிக்கையின் மூலம் அழிக்கப்பட்டன. இலங்கை சிங்க படையணியின் இரண்டாவது கட்டளை அதிகாரி மேஜர் லலித் புத்ததாசவின் தலைமையில் இது நிறைவேற்றப்பட்டது. எல்.ரி.ரி.ஈ-யின் மிகவும் மோசமான தாக்குதல்களுக்கு இலக்காகி இருந்த யாழ்ப்பாணக் கோட்டை கிளிநொச்சி, மாங்குளம் முகாம்களும், கொக்குவில் முகாமும் மீட்கப்பட வேண்டியிருந்தது. பலாலி முகாம் ஸ்திரமடைந்த பின்னர், வடமாகாணத்தின் பிரதம கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும் பிரிகேடியர் ஜாலிய நம்முனியும் பலாலி முகாமில் தங்கியிருந்து அடுத்த நடவடிக்கைகளைத் திட்டமிடத் தொடங்கினர்.

69,
70 யாழ்ப்பாணத்தின் பிரதான இராணுவத் தளமான யாழ்ப்பாணக் கோட்டைக்குள் 1990 யூன் 2-ஆம் திகதியாகியும் இராணுவத்தினரையும் பொலிசாரையும் சுற்றிவளைத்து கொண்டு அம்முகாமைக் கைப்பற்றுவதற்காக எல்.ரி.ரி.ஈ இயக்கம் குண்டு துளைக்காத தகடுகள் பொருத்தப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தி மேற் கொண்ட தாக்குதல் மிகவும் கொடூரமானது. பலாலி ராணுவ தளத்துக்கும் கோட்டைக்கும் இடையிலான தொடர்பு பாதிக்கப்பட்டதால், கோட்டைக்குள் இருந்த இராணுவ வீரர்க

ளுக்கு உணவுப்பொருட்கள் மருந்துகள் மற்றும் பிற தேவைகளை விநியோகிப்பதற்கோ காயமடைந்த வர்களை அங்கிருந்து அகற்றுவதற்கும் ஹெலிகோப் டரைப் பயன்படுத்தி மேற்கொள்வது மிகவும் கடினமாக இருந்தது. இதனை தந்திரோபாய திட்டமிடல் மூலம் மட்டுமே சரிசெய்ய முடியும். விமானப்படையின் நடவ டிக்கை ஒன்று திட்டமிடப்பட்டதுடன் அதற்கு ஈகிள் இராணுவ நடவடிக்கை என்று அழைக்கப்பட்டது. விங் கொமாண்டர் ஜயலத் வீரக்கொடியால் மேற்கொள்ளப் பட்ட இந்த நடவடிக்கையில் விமானமோட்டித் தலைவர் லசந்த வைத்தியரத்னவால் இயக்கப்பட்ட ஹெலிகொப் டரின் மூலம் கோட்டைக்குள் நுழைந்து. அங்கு சிக்கியி ருந்த ஆபத்தான நிலையில் காயமடைந்தவர்களை மீட்க முடிந்தது.

லெப். கேணல் நியோமால் பலிபான கட்டளையின் கீழ், கஜபா ரெஜிமென்ட்டின் இரண்டு ரைபிள் அணிகளின் மேலதிக துருப்புக்களை மாங்குளம் தளத்திற்கு அனுப் புவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. மேலதிக படைகளின் வருகையை அடுத்து மாங்குளம் முகாம் ஸ்திரப்படுத்த முடிந்தது.

சிங்க ரெஜிமென்ட்டின் லெப்டினன்ட் சாலிய அலதெனி யவின் கட்டுப்பாட்டில் இருந்த கொக்குவில் படையணி எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகளின் கடுமையான தாக்குதல்க ளுக்கு தொடர்ச்சியாக இலக்காகி வந்தது. தொலைக் காட்சி ஒலிபரப்பு கோபுரத்திற்கு பாதுகாப்பு வழங் குவதே அம்முகாமில் உள்ள இராணுவத்திற்கு வழங்கப் பட்டிருந்த விசேட கடமையாகும். 10 ஜூலை 1990 அன்று, புலிகள் இயக்கம் குண்டு துளைக்காத வகையில் புல்டோசர்களைப் பயன்படுத்தி கொக்குவில் இராணுவ பிரிவைத் தாக்கியதில் பல இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். இதற்கி டையில், லெப்டினன்ட் அலதெனிய படைப்பிரிவை விட்டு வெளியேறி மாங்குளம் முகாமுக்கு பின்வாங்குவ தற்கு அனுமதி கோரியபோதும், மேலதிக துருப்புக்கள் வரும்வரை முகாமைப் பாதுகாக்குமாறு அவருக்கு அறி வுறுத்தப்பட்டது. தொலைதொடர்புக் கோபுரத்தின் எரி பொருள் தொட்டி எல்.ரி.ரி.ஈ இயக்கத்தால் வெடிக்கச் செய்யப்பட்டபோது படையினர் கொல்லப்பட்டனர். அப் படையணியை மீட்க மேலதிக துருப்புக்களை அனுப்ப முடியாது. என்று இராணுவத் தலைமையகம் உணர்ந்த போது, லெப்டினன்ட் அலதெனிய படைப்பிரிவை விட்டு வெளியேறி மாங்குளம் முகாமுக்கு பின்வாங்குமாறு கட் டளையிடப்பட்டார். ஆனால் படுகாயமடைந்த தனது சக படையினரை கைவிடுவது சாத்தியமில்லை என்பதால் கடைசி தோட்டா உள்ள வரை உறுதியாக போராடு வதாக லெப்டினன்ட் அறிவித்தார். தொலைத்தொடர்பு கோபுரத்தின் மீது ஏறி தமது படையணி மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் மீது லெப்டினன்ட், பீரங்கி களால் சுட்டு அவர்களில் ஏராளமானோரைக் கொன்றபடி, தான் உறுதிகொண்டபடி கடைசி தோட்டா உள்ள வரை போராடி மரணித்தார். அன்றிரவு முகாம் மீது மோட்டார் மழையை வீசி தாக்குதலை துரிதப்ப டுத்திய புலிகள், கோபுரத்தை தகர்த்து அந்த முகாமைக் கைப்பற்றினர். லெப்டினன்ட் அலதெனிய அவரது மரணத்தின் பின்னர் கப்டன் பதவிக்கு பதவி உயர்வு பெற்று உயரிய வீர விருதான 'பரம வீர விபூஷண' விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

71 யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்கில் உள்ள கிளிநொச்சி முகாமை மீட்பதற்காக வடக்கு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ அவர் களால் 13 ஜூன் 1990-ஆம் திகதி கஜசிங்க இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை இராணு வமும் விமானப்படையும் கூட்டாக தொடங்கிய இந்த நட வடிக்கையால், ஆனையிறவு முகாமுக்கு படையினர் அணிதிரட்டப்பட்டு அம்முகாம் பலப்படுத்தியது. இந்த நடவடிக்கையில் விமானப்படை பெரும் பங்களிப்பை வழங்கியது. வட மாகாண கட்டளை அதிகாரி விங் கொமாண்டர் சுனில் கப்ரால் உதவியுடன் கேணல் காமினி அங்கம்மன அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கஜசிங்க நட வடிக்கையின் போது கிளிநொச்சி முகாமில் இருந்து படையினர் மற்றும் அனைத்து உபகரணங்களும் சாதுர் யமாக ஆலிமன்கடை முகாமுக்கு கொண்டு செல்லப் பட்டு கிளிநொச்சி முகாம் கைவிடப்பட்டது.

பயங்கரவாதிகளின் அடுத்த இலக்கு ஒரு சிறிய பகுதியில் உள்ள முல்லைத்தீவு முகாமைக் கைப்பற்று வதாகும். லெப்டினன்ட் கேர்ணல் எம்.பி.ஜே. மஹிபா லவின் கட்டுப்பாட்டில் இருந்த அந்த முகாமை அழிக்க அவர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்திய போதும் அவை அனைத்தும் முறியடிக்கப்பட்டன. ஓகஸ்ட் 1990-இல், ஜெனரல் கொப்பேகடுவவின் திட்டமிடப்பட்ட 'சீப்ரிஸ்' இராணுவ நடவடிக்கையின் மூலம் மேலதிக இராணு வத்தைக் கொண்டு முகாமின் எல்லையை விரிவுபடுத்தி பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

72,
73 யாழ்ப்பாணக் கோட்டை முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களை முறியடிப்பதற்காக, லெப்டி னன்ட் கேர்ணல் கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் 1-வது கஜபா படையணியும் லெப்டினன்ட் கேர்ணல் சரத் பொன்சேகாவின் கீழ் 1-வது சிங்க படையணியும் வடக்கு தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் வழிகாட்டுதலின் பேரில் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் 'முப்படைகளின் பலம்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான களப்பைக் கடக்க சுமார் 200 கடற்படைப் படகுகள் ஈடுபடுத்தப்பட்டன. எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் கடும் தாக்குதல் நடந்துகொண்டிருந்த போது படைகள் வெற்றிகரமாக கோட்டைக்குள் நுழைந்தன. இதன்போது பல வீரர்கள் கொல்லப்பட்டதுடன் பல படகுகள் அழிக் கப்பட்டபோதும் கோட்டையில் உள்ள வீரர்களை மீட் பதை நோக்கமாகக் கொண்ட இந்த நடவடிக்கை வெற்றி யடைந்தது. இதனால் கோட்டைக்குள் சிக்கியிருந்த ராணு வத்தினரும் போலீசாரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இதற்கிடையில், விடுதலைப் புலிகள் பலாலி பகுதி யையும் விமான நிலையத்தில் அமைந்துள்ள பலாலி ராணுவ முகாமையும் சுற்றி வளைத்து ராணுவத்திற்கு கடும் நெருக்கடி கொடுத்தனர். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பிரிகேடியர் ஜாலிய நம்முனி அவர்களின் வழி காட்டலில் ஒக்டோபர் 1990-ஆம் திகதி 'ஜயசக்தி' இரா

ணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. எல்.ரி.ரி.ஈ இயக்கம் கைப்பற்றியிருந்த கட்டுவான், வசாவிளான், தோலகட்டி, புத்தளை, குரும்பசிட்டி, மல்லாகம் போன்ற பிரதேசங் களை மீள கைப்பற்றிக்கொண்டு வெற்றிகரமாக முன்னேறி ஒக்டோபர் 21-ஆம் திகதிக்குள் விடுதலைப் புலிகளின் முகாம்கள் அமைக்கப்பட்டிருந்த மாவிட்டபுரம் மற்றும் காங்கேசன்துறை ஆகிய நகரங்களைக் ஜெயசக்தி நட வடிக்கையால் வெற்றிக்கொள்ள முடிந்தது. இந்த நடவ டிக்கையின் போது, விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் பதுங்கு குழிகளை அழிப்பதில் விமானப்படை தீவிர பங்களிப்பை வழங்கியது.

சில காலமாக எல்.ரீ.ரீ.ஈ போராளிகளால் ஆக்கிரமிக்கப் பட்டிருந்த காங்கேசன்துறை துறைமுகம், 1987-இல் ஆபரேஷன் வடமராட்சியின் போது அரசாங்க பாது காப்புப் படைகளின் கைகளில் விழுந்தது, ஆனால் அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் படி கைவிடப்பட வேண்டியிருந்தது, எனவே அது 1990-வரை எல்.ரீ.ரீ.ஈ-யிலேயே இருந்தது. ஆபரேஷன் ஜயசக்தி-யின் போது இலங்கை கடற்படையின் உதவியுடன் காங்கேசன்துறை துறைமுகம் கையகப்படுத்தப்பட்டமை இராணுவத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். வெற்றிபெற்ற அரசாங்க பாதுகாப்புப் படைகளால் பலாலி விமான நிலையத்தைப் பாதுகாக்க முடிந்ததுடன், விமான ஓடுதளத்திற்கு அருகில் சுமார் 300 மீட்டர் தூரத்தில் பதுங்கு குழிகளை அமைத்து தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த பயங்கரவாதிகளை விரட்டியடிப்பதன் மூலம் சுமார் 40 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் ஒரு உயர் பாதுகாப்பு வலயத்தை ஜயசக்தி நிறுவ முடிந்தது.

74, 75 ஆனையிறவிலிருந்து தெற்கே 28 கிலோமீட்டர் தொலை விலும் வவுனியா முகாமுக்கு வடக்கே 30 கிலோமீட்டர் தொலைவிலும் வன்னியின் மத்தியில் ஒதுக்குபுறமாக இருந்த மாங்குளம் முகாம் 1990 யூனிலிருந்து புலி களால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. கஜபா ரெஜி மென்ட்டின் படையைச் சேர்ந்த ஒரு பகுதியினரின் கட் டுப்பாட்டில் இருந்த இந்த முகாமுக்கு உணவு, மருந் துகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்க விநி யோகிக்க முடியாமல் போனது. அதனால் முகாமில் இருந்த படையினர் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் முகாமை கைவிட்டு வெளியேறியபோது அது விடுத லைப் புலிகளின் வசமானது. மாங்குளம் முகாமை விட்டு வெளியேறிப் பின்வாங்கிய படையினர் பயங்கரவாதி களின் முகாம் பகுதிகளான கனகராயன்குளம், புளியங் குளம், ஓமந்தை, பெரியகுளம், நெடுங்கேணி ஊடாக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. மிகுந்த கவனத்துடன் பின்வாங்கியபோதும் இடைநடுவில் தாக் குதல்களுக்கு இலக்காகி படையினர் சிலர் கொல்லப்பட் டதுடன் இன்னும் பலர் காயமடைந்தனர். 1990 நவம்பரில் இப்படையினரில் கணிசமானவர்கள் இராணுவத்தின் பாதுகாப்பு முகாம்களுக்கு வந்தடைந்தனர்.

அதுவரை மிகத் தீவிரமாக தாக்குதல்களை முன்னெ டுத்து வந்த எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு சொந்தமான எம்.பி. சன்வேர்ட் என்கிற கப்பலின் மூலம் ஆயுதங் களைக் கொண்டு சென்றபோது 13 டிசம்பர் 1990, அன்று, கடற்படையால் கைப்பற்றப்பட்டது. 1990 டிசம்பர் இறுதி யில் மலாக்கா நீரிணை பகுதியில் உள்ள 'பினாங்கு' தீவுக்கு அருகிலுள்ள கடலில் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான மூன்று படகுகளில் ஏற்றப்பட்ட ஆயு தங்களை மலேசிய சுங்கவரி அதிகாரிகள் கைப்பற் றினர். கொழும்பில் உள்ள மலேசிய தூதரகமும் அச்சம் பவத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

18 டிசம்பர் 1990-ஆம் திகதி அனுராதபுரம் திருகோ ணமலை வீதியில் இடம்பெற்ற கண்ணிவெடி விபத்தில் திருகோணமலைக்குப் பொறுப்பான 22-வது படையணி யின் தளபதி கேணல் லக்கி விஜேரத்னவும் அவருடன் வாகனத்தில் பயணித்த திருகோணமலை பொலிஸ் அத் தியட்சகர் ரிச்சர்ட் விஜேசேகர ஆகியோர் கொல்லப்பட் டனர்.

1991 ஆரம்பத்தில், பிரிகேடியர் ஜாலிய நம்முனிக்குப் பதிலாக பிரிகேடியர் விஜய விமலரத்ன யாழ்ப்பாணத் தளபதியாக நியமிக்கப்பட்டார். 01ஜனவரி1991-ஆம் திகதி அவர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததுடன், எல்.ரி.ரி.ஈ இயக்கம் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்ததோடு யுத்த நிறுத்தத்தில் இணையுமாறு அரசாங்கத்துக்கும் அழைப்பு விடுத்தனர். எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் ஆனையிறவை முற்றுகையிட்ட நிலையில் யுத்த நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும்போது அந்த அமைப்பு ஒரு பலமான நிலை யில் இருப்பதாகக் காட்டுவதன் மூலம் தமது பிரே ரணையை ஏற்றுக்கொள்ளச் செய்ய எதிர்பார்த்தது. வடக்கில் உள்ள கடற்படை முகாம்களில் இருந்து ஸ்ரீலங்கா கடற்படை வெளியேற வேண்டும் என்றும் வட கடலில் பாதுகாப்பு ரோந்துகளை மேற்கொள்வதை தவிர்க்கும் படியும் பலாலி விமானத்தளத்தில் படை விமா னங்கள் தரையிறங்குவதை நிறுத்த வேண்டும் என்றும் எல்.ரி.ரி.ஈ இயக்கம் முன்நிபந்தனைகளாக முன்வைத்தது. ஆனால் யாழ்ப்பாணத்துக்கான ஏ-9 பாதை இரண்டாம் ஈழப்போரின் தொடக்கத்திலிருந்தே எல்.ரி.ரி.ஈ இயக் கத்தின் தாக்குதல்களின் காரணமாக, பாதுகாப்புப் படை யினரின் பாவனையை தவிர்த்து வருவதுடன் விமானப் படை மற்றும் கடற்படையின் சேவைகள் இல்லாமல், பலாலி - காங்கேசன் துறை உயர் பாதுகாப்பு வலயங் களையோ அல்லது வடக்கில் உள்ள பிற தளங்களை யோ பராமரிக்க முடியாத நிலையே உருவாக்கி இருந்தது. அதனால் தான் எல்.ரி.ரி.ஈ அமைப்பின் முன்மொழிவுக்கு இராணுவத் தளபதிகள் உடன்படவில்லை.

போர் நிறுத்தம் பற்றி விவாதிக்க விரும்பிய ஜனாதிபதி, ஆரம்பத்தில் 72 மணி நேரத்திற்குள் தாக்குதல்களை நிறுத்துமாறு உத்தரவிட்டதுடன் பின்னர் அதை 9 ஜனவரி 1991 நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டது. ஆனால் யுத்த நிறுத்தம் பற்றி கலந்துரையாடுவதற்கு முன்னதாக, எல்.ரி.ரி.ஈ இயக்கம் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்ற முன்நிபந்தனையை முப்படைகளின் தளபதிகள் விதித்தனர். அப்பொழுது அரசாங்கத்துடன் இணைந்து எல்.ரி.ரி.ஈ.க்கு எதிரான தாக்குதல்களை நடத்திக் கொண் டிருந்த புளொட், டெலோ, ஈ.பி.டி.பி போன்ற ஏனைய தமிழ் அமைப்புகளும் இவ்வாறான தாக்குதல்களை நிறுத்துமாறு ஜனாதிபதி பணித்தார். புலிகள் ஆயுதங் களை கீழே வைக்கும் வரை யுத்தநிறுத்த பேச்சு வார்த்

தை நடத்துவதில் உள்ள ஆபத்து குறித்து ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் சுட்டிக்காட்டினார். அறிவிக்கப்பட்ட தற்காலிக யுத்த நிறுத்தத்தை மீறிய தாக புலிகளும் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்த அந்த பத்து நாட்களுக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்து அம்முகாம்களுக்கு பொறுப்பான அதிகாரிகளை சந்தித்து போர்க்களத்தின் நிலைமையை உணர்ந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன எல்.ரி.ரி.ஈ. இயக்கம் தமது ஆயுதங்களை கீழே வைக்கும் வரை பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கூடாது என்று ஜனாதிபதிக்கு விளக்கினார்.

77 அஸ்கிரி மற்றும் மல்வத்தை இருதரப்பு தேரர்களும் தியவதன நிலமே ஆகியோரின் பங்குபற்றுதலுடன் ஜனவரி 8-ஆம் திகதி தந்திரிமலையில் நடைபெற்ற கூட்டத்தில் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ விடுதலைப் புலிகளின் முன்மொழிவுகள் மற்றும் அவர்களால் முன் வைக்கப்பட்ட முன்நிபந்தனைகள் பற்றியும் அரசாங்கப் படைகள் எதிர்கொள்ளும் நிலைமைகள் குறித்தும் விளக்கினார். அப்போதும் கூட ஆயுதங்களை கீழே போட எல்.ரி.ரி.ஈ இயக்கம் தயாராக இல்லை என்று அறிவிக்கப்பட நிலையில் அரச படைகள் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பிக்கும் என தந்திரிமலை கூட்டம் முடிந்தவுடன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அறிவித்தார்.

78 எதிர்பார்த்தபடி, தரையில் பாதுகாப்புப் படைகளின் பலத்தை தகர்க்கத் தவறிய எல்.ரீ.ரீ.ஈ கடலில் தனது பலத்தை வளர்த்தெடுப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் உதவியை நாடியது. எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக் காக அப்போது வெளிநாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த அவ்வமைப்பின் விசுவாசிகள் பல கப்பல்களைக் கொள்வனவு செய்து சர்வதேச அளவில் ஆயுதங்கள் மற்றும்போதைப்பொருட்கள் கடத்தல் வியாபாரத்தை நடத்திக் கொண்டு எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்குத் தேவையான நிதியையும் ஆயுதங்களையும் தொலைத்தொடர்பு சாதனங்களையும் வேகமாக வழங்க அவர்கள் தயாராக இருந்தனர். அவர்கள் வெளிநாட்டு உதவியுடன் மலேசியாவுக்கு அருகில் உள்ள ஒரு தீவில் எல்.ரி.ரி.ஈ இயக்கப் போராளிகளுக்கு கடற்போர் பயிற்சியை வழங்கினர். இவ்வாறு பயிற்சி பெற்ற பயங்கரவாதிகள் 'கடற்புலிகள்' என்ற பிரிவை உருவாக்கி இலங்கை கடற்படைக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தினர்.

கடற்புலிகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், இலங்கை கடற்படையும் தனது படைகளை மறுசீரமைத்து, இரவு நேரத்தில் செயல்படக்கூடிய வகையில் பயிற்சி மற்றும் உபகரணங்களின் தரத்தை மேம்படுத்தியது. 50 கடல் மைல் வேகத்தில் 20 மி.மீ ஓர்லிகன் மற்றும் 30 நிலையான பீரங்கி துப்பாக்கிகளுடன் மேம்படுத்தப்பட்ட ஆயுதம் பொருத்திய இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட டோவ்ரா விரைவு தாக்குதல் படகுகள் அப்போது ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. 'அபீத', 'எடிதர', 'விக்ரம' என்ற மூன்று தேடுதல் படகுகளும் கடற்படைப் படகுகளுடன் சேர்க்கப்பட்டன. படையினரை ஏற்றிச் செல்லக்கூடிய பல தரையிறங்கும் படகுகள் இணைக்கப்பட்டமையினால் படை நடவடிக்கைகளின் போது எதிரிகளின் தாக்குதல்களுக்கு மத்தியில் எதிரி இலக்குகளை நோக்கி படையினரை கொண்டு செல்ல முடிந்தது. இந்தப் படகுகள் 'பலவேகய' இராணுவ நடவடிக்கையிலும், அலம்பில் மற்றும் பூநகரி முகாம்களை மீட்பதில் இப்படகுகள் மிகவும் பயன்பட்டன. அத்துடன், கடற்படையானது தரையிலும் சண்டையிடக்கூடிய ஒரு தரைப் படை போர்ப்பிரிவுக்கு பயிற்சி அளித்து விசேட படகுப் பிரிவு என்ற தாக்குதல் பிரிவொன்றும் உருவாக்கப்பட்டது.

தரைவழிச் சண்டைகளில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகளைக் கடந்து பலத்தை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் முன்மொழியப்பட்ட யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் நிராகரித்து மீண்டும் தாக்குதல்களை ஆரம்பித்ததோடு 2மார்ச்1991 அன்று, கொழும்பில் தும்முல்ல சந்திக்கு அருகில் வெடிக்கவைக்கப்பட்ட குண்டுக்கு, பாதுகாப்புக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொல்லப்பட்டார். அதன்போது 18 பேர் கொல்லப்பட்டனர். அதே வருடம் யூன் 22-ஆம் திகதி எல்.ரி.ரி.ஈ அமைப்பு கொழும்பில் உள்ள கூட்டு நடவடிக்கை தலைமையகத்தின் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியதில் 21 படையினரும் பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினரின் பலம் அதிகரித்து வருவதை உணர்ந்த எல்.ரி.ரி.ஈ இயக்கம் இந்தப் படைகளின் கவனத்தை திசை திருப்ப சிலாவத்துறை பகுதியில் பல தாக்குதல்களை நடத்தினர். இதற்குப் பதிலடியாக, லெப்டினன்ட் கேர்ணல் காமினி ஜயசுந்தரவின் கீழ் இலங்கை காலாட் படையணியைக் கொண்டு சிலாவத்துறை முகாம் ஸ்திரப்படுத்திக் கொண்டு வன்னிப் பகுதியில் 'வன்னி விக்கிரம' நடவடிக்கைகள் மூன்று தொடரப்பட்டன.

புலிகள் தமது பலத்தைக் கட்டியெழுப்பப் பயன்படுத்திய படைப்பலத்துடனான வன்னி முகாம்களைத் தாக்கி அங்குள்ள பாதுகாப்பு கட்டமைப்பையும் ஆயுதங்களையும் அழிப்பதை 'வன்னி விக்கிரம' இராணுவ நடவடிக்கைகள் இலக்காகக் கொண்டிருந்தன. மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ இந்த நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கியதுடன் சாந்த கோட்டேகொட, லொஹான் குணவர்தன ஆகிய கேர்ணல்கள் அவருக்கு உதவியாக இருந்தனர். 1991-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் திகதி வவுனியா முன்னரங்க பாதுகாப்பு வலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட 'வன்னி விக்கிரம' வின் முதலாவது நடவடிக்கையின் போது பாதுகாப்பு படையினர் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் தாண்டிக்குளம் முன்னரணை முழுமையாக அழித்ததுடன் மே மூன்றாம் திகதி மாமடு இராணுவ முகாமின் ஒரு பிரிவினரின் உதவியுடன் யாழ்ப்பாண பிரதான வீதியில் உள்ள நொச்சிமோட்டை பிரதேசத்தையும் கைப்பற்றினர்.

பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கொக்எலிய கிராமத்தை கைப்பற்றிய பாதுகாப்புப் படையினர், அங்கிருந்த 20-க்கும் மேற்பட்ட பதுங்கு குழிகளை அழித்து விட்டு அங்கிருந்து முன்னேறி, நீண்ட காலமாக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஓமந்தை பகுதியையும் கைப்பற்ற முடிந்தது. இந்த சமர்களின் போது, ஷியாமா

ஷெட்டி என்ற குண்டு வீசும் விமானங்களையும் தாக்குதல் ஹெலிகாப்டர்களையும் பயன்படுத்தி காயமடைந்த போர் வீரர்களை போர்க்களத்திலிருந்து வெளியேற்றவும், உணவு மற்றும் இராணுவ உபகரணங்களை உரிய இடங்களுக்கு விநியோகிக்கவும் விமானப்படைக்கு அவை உதவின. 'வன்னி விக்ரம' முதல் நடவடிக்கை முன்னேறிக்கொண்டிருந்த போது எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை தோற்கடித்துக் கொண்டு அவர்களின் வசம் இருந்த ஓமந்தை பிரதேசத்துக்கு மேலதிகமாக, தாண்டிக்குளம், கோண்டான்குளம், புலுமடியகுளம், இரமத்தான்குளம் போன்ற பிரதேசங்களில் இருந்து புல்டோசர்கள் மற்றும் இன்னும் பல ஆயுதங்கள் மற்றும் இயந்திரங்களை பாதுகாப்புப் படையினரால் கைப்பற்ற முடிந்தது.

1991-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் திகதி ஏ-9 வீதியில் உள்ள கிளிநொச்சி - ஆனையிறவு பாலத்தை எல்.ரி.ரி.ஈ இயக்கம் குண்டுவைத்துத் தகர்த்ததோடு பாதுகாப்புப் படையினர் அவ்வழியாக யாழ்ப்பாணம் நோக்கி செல்வதைத் தடுத்தனர். மே 11, அன்று எல்.ரீ.ரீ.ஈ-யின் இரண்டாம் மட்டத் தலைவரான மகேந்திரராஜா எனப்படும் மாத்தையா தங்கியிருந்த ஆடம்பர வசதிகளுடன் கூடிய 'ஜானகி தளம்' என்கிற முகாமை ராணுவம் முழுமையாகக் கைப்பற்றியது. இதன் மூலம் 'வன்னி விக்ரம முதல்' நடவடிக்கை நிர்ணயித்திருந்த இலக்குகளை அடைந்து நிறைவடைந்தது.

எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் அதிகாரத்தின் அடித்தளமாக விளங்கிய வன்னிப் பகுதிகளில் மேலும் பலவீனப்படுத்தும் நோக்கில் 'இரண்டாவது வன்னி விக்கிரம' இராணுவ நடவடிக்கை 1991-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14-ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் வவுனியா - மன்னார் பிரதான வீதி பயங்கரவாதிகளிடமிருந்து விடுவிப்பதையும் விடுதலைப் புலிகளின் பலமான முகாமான பண்டிபறிச்சான் முகாமை அழிப்பதையும் இலக்காகக் கொண்டிருந்தது. இரு தரப்பும் நேருக்கு நேர் போரிட்டுக்கொண்ட இந்த நடவடிக்கையில் 3-வது கஜபா படையணியும் 3-வது காலாட் படையணியும் எதிரிகளைத் தாக்கி 60-க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகளைக் கொன்றதுடன் மேலும் எதிரிகளை பின்வாங்கச் செய்ததன மூலம் அந்நடவடிக்கை வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

வன்னி விக்கிரம இராணுவ நடவடிக்கை நடந்து கொண்டிருக்கும் போது 1991-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி எல்.ரி.ரி.ஈ இயக்கம் காரைநகர் கடற்படைத் தளத்தின் மீது பாரிய தாக்குதலை நடத்தினர். ஆனால் 5-வது கெமுனு படைப்பிரிவை அனுப்பி அம் முகாமை முற்றுகையிட்டிருந்த பயங்கரவாதிகளை விரட்டியடித்து பாதுகாப்பை உறுதிப்படுத்த முடிந்தது. இதன் போது நிகழ்ந்த உக்கிரமான சமரில்கேம் கெமுனு ஹேவா படையணியின் லெப்டினன்ட் ஆர்.பி.எஸ். டபிள்யூ. எம்.ஜே.பி. கொக்வெவ உட்பட 10 இராணுவ வீரர்கள் உயிரிழந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் கட்டளைத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்ன எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகளை தோற்கடிப்பதற்கான ஒரு தந்திரோபாயத்தை மேற்கொண்டு 4-வது சிங்க மற்றும் 4-வது கஜபா ஆகிய இரு படையணிகளுடன் கடற்படைப் படகுகளைக் கொண்டு காங்கேசன் துறை மற்றும் காரைநகர் வரை 'ஹைடைட்' இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார். இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட படையினரால் ஊர்காவற்துறை மற்றும் மண்டைதீவு தீவுகளில் ஏராளமான பயங்கரவாதிகளை கொன்று ஊர்காவற்துறை தீவில் முகாமை அமைத்துக்கொண்டனர்.

79,

80 பாதுகாப்புப் படையினரின் முன்னேற்றத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஆனையிறவு இராணுவ முகாமை அழிக்க புலிகள் தங்கள் முழு பலத்தையும் கொண்டு ஒரு தாக்குதலைத் தொடங்கினர். ஆனையிறவு முகாமில் நிலைகொண்டிருந்த சிங்க படையணியின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் கேர்ணல் சனத் கருணாரத்ன, தாக்குதலை எதிர்கொள்வதற்காக தனது அணியின் இரண்டாவது கட்டளை தளபதி மேஜர் லலித் புத்ததாசவுடன் ஒரு கடினமான ஆனால் முறையான நடவடிக்கையைத் திட்டமிட்டார். அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அணியின் கப்டன்களான ஜயந்த பெர்னாண்டோ, மைத்திரி டயஸ், லக்சிறி அமரதுங்க, டி. வடுகே மற்றும் சரத் அல்விஸ் ஆகியோர் மட்டுப்படுத்தப்பட்ட வெடிமருந்துகள், தோட்டாக்கள் மற்றும் ஏனைய அத்தியாவசிய இராணுவ உபகரணங்களைப் பயன்படுத்தி துணிச்சலுடன் எதிர்கொண்டனர். 10ஜூலை 1991 அன்று, எல்..ரி.ரி.ஈ இயக்கம் வெடிமருந்துகளை நிரப்பிய டோசர் ஒன்றையும் ஒரு டிராக்டரையும், சுமார் 500 உறுப்பினர்களையும் பயன்படுத்தி நடத்திய தாக்குதலில் முகாமின் முன்னரங்க பாதுகாப்பு வலயங்களை அழித்துக் கொண்டு பல இராணுவத்தினரையும் கொன்றனர். 9ஓகஸ்ட்1991-வரை கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் நீடித்த இந்த நடவடிக்கையானது பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் நிகழ்ந்த கடுமையான போர்களில் ஒன்றாகும். இந்த சமரில் உயிரிழந்த இராணுவ வீரர்களதும் மேஜர் லலித் புத்ததாசவின் சடலமும் ஆணையிறவில் புதைக்கப்பட்டதுடன் முகாமைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பும் லெப்டினன்ட் கேர்ணல் சனத் கருணாரத்னவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜூலை 14 அன்று, எல்..ரி.ரி.ஈ இயக்கம் தமது தாக்குதலை உக்கிரப்படுத்தி, முன்னரங்க பாதுகாப்பு வலயங்களை அழித்தபடி இறுதி பாதுகாப்பு வலயத்தை நெருங்கியபோது, அம் பாதுகாப்பு வலயங்களில் காத்திருந்த துப்பாக்கி வீரர் காமினி குலரத்ன குண்டு நிரப்பப்பட்ட டோசரை நோக்கி விரைந்து சென்று அதன் மீது குண்டை வீசினார். இதன் மூலம் டோசரை அழித்து முகாம் பாதுகாக்கப்பட்ட போதும் துப்பாக்கி வீரர் காமினி குலரத்ன உயிரிழந்தார். 'ஹசலக வீரர்' என்று அழைக்கப்படும் அவரது தைரியமான செயலுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மிக உயர்ந்த வீரச் செய்கைக்காக 'பரமவீரவிபூசன்' பதக்கம் அவரின் மரணத்திற்குப் பிறகு வழங்கப்பட்டது.

ஆபத்தான சூழ்நிலையிலிருந்து ஆனையிறவை மீட்பதற்காக உடனடியாக செயற்பட்ட மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மற்றும் பிரிகேடியர் விஜய விம

லரத்ன ஆகியோர் 3-வது இலங்கை காலாட்படை, முதலாவது செனிசிங்க மற்றும் முதலாவது கஜபா ஆகிய மூன்று படையணிகளைப் பயன்படுத்தி கடற் படைப் படகுகளில் வெற்றிலைக்கேர்னி கடற்கரையில் தரையிறங்குவதற்காக 'பலவேகய' முதலாவது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டது. கடற்படை நடவ டிக்கைக்கு பொறுப்பாக கெப்டன் எச்.ஆர்.அமரவீர செயற்பட்டதுடன் 'விக்கிரம கண்டுல', 'எடிதர மற்றும் பப்பத', ஆகிய தாய் படகுகளும் 'சுரயா', 'ரணகாமி மற்றும் 'வீரயா' ஆகிய தாக்குதல் படகுகளும் கடற்ப டையில் உள்ளடக்கப்பட்டன. முதலாவது தாக்குதலுக்கு 3-வது இலங்கை காலாட்படையைச் சேர்ந்த மேஜர் அஞ்சலோ பீரிஸ் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட போதும் அவர் ஆரம்பத்திலேயே சுட்டுக் கொல்லப் பட்டார். இதன்போது கடுமையான சண்டை இடம்பெற்ற துடன் கேணல் தேவிந்த களுபான தலைமையில் வெற்றி லைக்கேணியில் பாதுகாப்பு பிரதேசம் ஒன்று உருவாக் கப்பட்டதுடன், ஆகஸ்ட் முதல் வாரத்தில் எதிரிகளைத் தாக்குவதற்கு மேலதிக படையைப் பயன்படுத்தி 'பல வேகய' முதல் இராணுவ நடவடிக்கையை வெற்றிக ரமாக முடித்துகொண்டு ஆணையிறவு முகாமைப் பாதுகாத்து பலப்படுத்த இராணுவத்தால் முடிந்தது. இந்த சண்டையில் ஏராளமான பயங்கரவாதிகளும் பாதுகாப்பு படையினரும் கொல்லப்பட்டனர்.

1991-ஆம் ஆண்டின் முற்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட ஜெனரல் சிசில் வைத்தியரத்ன அதே ஆண்டு நவம்பரில் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அதற்குள் கிழக்கு மாகா ணம் எதிரிகளிடமிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டி ருந்தது. வான்படைத் தளபதி தளபதி எயார் மார்ஷல் டெரன்ஸ் குணவர்தன, கடற்படைத் தளபதி லென்சி பெர்னாண்டோ மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக் கிடையில் ஒருகிணைந்த தொடர்பை வலுப்படுத்திக் கொண்டு கூட்டு நடவடிக்கைகளை மிகவும் திறமையாக மேற்கொள்ள வழிகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

83, 84 இந்த நிலையில், கேணல் வசந்த பெரேராவின் கீழ் முல் லைத்தீவில் ஒரு புதிய படையணித் தலைமையகம் நிறு வப்பட்டு முதல் முறையாக பீரங்கி டாங்கிகளைக் கொண்டு 1992 ஜூன்-இல் 'சத்பல' இராணுவ நடவ டிக்கை ஆரம்பிக்கப்பட்டது. போர் தாங்கிப் படையின் கப்டன் அருண பெரேராவின் கட்டளையின் கீழ், 5-வது விஜயபா படையணியை பயன்படுத்தி எல்.ரி.ரி.ஈ இயக் கத்தின் அலம்பில் கடற்படைத் துறைமுகத்தை கைப் பற்றி அங்கு ஒரு இராணுவத் தளத்தை நிறுவ 'சத்பல' இராணுவ நடவடிக்கையால் முடிந்தது. ஆயுத நடவடிக் கைகள் முடிவடைந்தவுடன் அதில் பங்குபற்றிய 7-வது சிங்க படையணி மற்றும் கெமுனு ஹேவா படையணி ஆகியவற்றைக் கொண்டு வெற்றிலைக் கேணி மற்றும் ஆனையிறவு ஆகிய இடங்களில் 'பலவேகய இரண் டாவது' படை நடவடிக்கை ஒரு பெரிய பாதுகாப்பு பகுதியை கட்டியெழுப்பியது.

வன்னிப் பிரதேசத்தில் எஞ்சியிருந்த எல்.ரி.ரி.ஈ இயக் கத்தின் பலத்தை முறியடிப்பதற்காக சுமார் 3000 படை யினரைக் கொண்டு 28 பெப்ரவரி 1992-ஆம் திகதி 'வன்னி விக்கிரம'வின் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப் பட்டது. இந்த நடவடிக்கைக்கு விமானப்படையின் ஒத்து ழைப்பை பெற்றதுடன் காலாட் படைப்பிரிவின் 6-வது சிங்கப் படையணியும், கொமாண்டோ படையணியும், கஜபா படையணியும் பீரங்கிப் படைபிரிவும் 6-வது இலங்கை காலாட்படையும் பங்கேற்றன. இந்த நடவடிக் கையில், அரசுப் படைகள் நெருங்கியவுடன் அங்கிருந்து எல்.ரி.ரி.ஈ இயக்கத்தினர் தப்பி ஓடினர். அவ் அமைப்பின் முக்கிய படைத்தளங்களில் ஒன்றான 'விக்கி பேஸ்' முகாமை கைப்பற்றிய பாதுகாப்புப் படையினர், அங்கி ருந்து வெடிகுண்டுகள், இராணுவ சீருடைக்கு சமமான சீருடைகள், இராணுவ உபகரணங்கள் உள்ளிட்ட பல வற்றையும் கைப்பற்றியதுடன், புகையிரத தண்டவாளங் களைக் கொண்டு கட்டப்பட்ட நிலத்தடி பதுங்கு குழியை யும் கண்டுபிடித்தனர்.

முன்னேறி வந்த இராணுவம் குண்டுகள் பொருத்தப்பட் டிருந்த பதுங்கு குழிகளைக் கொண்ட ஒரு பாடசாலை யையும், அருகிலிருந்த அவர்களின் வலுவான முகா மான 'பெய்ரூட்' முகாமையும் 1992-ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதியன்று கைப்பற்ற முடிந்தது. வடக்கின் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக டுவவும் போர்க்களத்தில் இருந்து அறிவுறுத்தல்களை வழங்கிகொண்டு 'வன்னி விக்கிரம' இராணுவ நடவடிக் கையின் மூன்றாம் கட்டத்தில் இவுக்சாஸ்திரிக்குளம், கன்னியாங்குளம், ஈச்சங்குளம் தமாசிகுளம் ஆகிய பகுதிகளை எல்.ரி.ரி.ஈ.யின் பிடியில் இருந்து விடுவிக்க முடிந்தது. அதுவும் வவுனியாவிலிருந்து அரச பாதுகாப் புப் படைகளால் 12 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பாம்பைமடு, பெரியத்தம்பனை மற்றும் குமரேசகுளம் என்பவற்றைக் கைப்பற்றி, பெருந்தொகையான புலி பயங்கரவாதிகளைக் கொன்று எஞ்சியவர்களை விரட்டி அந்தப் பிரதேசங்களில் பலத்தை நிலைநாட்ட முடிந்தது.

பாதுகாப்புப் படைகளின் அடுத்த இலக்கு யாழ்ப்பாண நகரைக் கூட்டு நடவடிக்கையின் மூலம் கைப்பற்றுவ தாகும். யாழ்ப்பாண படைப்பிரிவின் தளபதி ஜெனரல் கொப்பேகடுவ, யாழ்ப்பாண படைப்பிரிவின் தளபதி பிரி கேடியர் விஜய விமலரத்ன மற்றும் வடக்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் மொஹான் ஜயமஹா ஆகியோர் ஊர்காவற்துறை தீவை ஆராயச் சென்றிருந்த வேளை புலிகளால் வைக்கப்பட்ட குண்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தில், எச்.ஆர். ஸ்டீவன், பி.எச். ஆரியரத்ன, நியோமால்பலபான, நளின் அல்விஸ், ஆகிய கேணல்களும் கடற்படை லெப்டினன்ட்களான டி.சி.டபிள்யூ. விஜயபுர, ஏ. லங்காதிலக, ஆகியோரும் லாஸ்கோப்ரல் விக்ரமரத்னவும் கொல்லப்பட்டனர். வெற் றிகரமாக முன்னேறிக்கொண்டிருந்த இராணுவ நடவடிக் கையானது இந்த சம்பவத்துடன் ஸ்தம்பித்ததுடன் இரா ணுவத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக ஆனது. 1992 நவம்பரில், இலங்கை கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ, கொழும்பில் காலி முகத்திடல் வீதியில் ஒரு தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டார்.

போர்க்களத்தில் இருந்த சக்திவாய்ந்த தலைவர்களை இழந்த பின்னர், முப்படைத் தளபதிகள் தங்கள்

தாக்குதல் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவது கடினமாக இருந்ததுடன் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையாக மன்னார் பிரதேசத்தில் இருந்து 'எடிபல' என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து அடம்பன், முருங்கன், சிலாவத்துறை ஆகிய பிரதேசங்களில் பலத் தை உறுதிபடுத்தினர். ஒக்டோபரில் எடிபல இராணுவ நடவடிக்கை நடந்து கொண்டிருந்தபோது, எல்.ரி.ரி.ஈ இயக்கம் வெற்றிலைக்கேணியில் முதலாவது கெமுனு ஹேவா படையணியின் பாதுகாப்பு முன்னரண்களை உடைத்துக் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலை நடத்தியதில் பத்து படையினர் கொல்லப்பட்டனர். அதே வேளை, ஜனகபுர முகாம் மீதான தாக்குதல்களில் ஏழு படையினர் கொல்லப்பட்டதோடு 1992-இல் அடுத்த சில மாதங்களுக்குள், எல்.ரி.ரி.ஈ வெலிஓயா மற்றும் புனானை பிரதேசங்களில் பல தாக்குதல்களை நடத்தி நூற்றுக்கணக்கான படையினரைக் கொன்றனர்.

இந்த ஆட்சியின் போது மேற்கூறிய பெரிய கொடூரமான தாக்குதல்களையும் எதிர் தாக்குதல்களையும் நடத்தியமைக்கு மேலதிகமாக, எல்.ரி.ரி.ஈ அமைப்பு நடத்திய தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் விதமாக பாதுகாப்புப் படைகள் பல சிறிய அளவிலான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தன. எல்.ரி.ரி.ஈ.அமைப்பின் மீது எதிர்த் தாக்குதல் நடத்தி அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளிலிருந்து அவர்களை வெளியேற்றுகிற பல இராணுவ நடவடிக்கைகளையும், அவ் அடக்கி வைப்பதற்கான நடவடிக்கைகளும் எதிரியின் பலம் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளும் இவற்றில் அடங்கும்.

85 நாட்டில் இந்திய அமைதி காக்கும் படை இருந்த போதும், அரசாங்கத்திற்கும் எல்.ரீ.ரீ.ஈ-க்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போதும், அதன் பின்னரும், பயங்கரவாதிகள் பொது மக்களின் வாழ்க்கையை சீர்குலைப்பதையும் தேசிய பொருளாதாரத்தை பலவீனப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட பல படுகொலைகளை மேற்கொண்டனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் சில இடங்களிலும் குண்டுகளை வெடிக்க வைத்தும், வெட்டிக் கொலைகள் செய்தும், வாகன குண்டு வெடிப்புகளைச் செய்தும், தற்கொலைக் குண்டுதாரிகளைக் கொண்டு பொதுமக்களையும், அரசியல்வாதிகளையும் மட்டுமன்றி ஏனைய தமிழ்த் தலைவர்களைக் கொன்று கொண்டிருந்தனர்.

தமது அமைப்புடன் தொடர்பில்லாத தமிழ்த் தலைவர்களை தொடர்ந்து அழித்து வந்த புலிகள் 16 யூலை 1989-ஆம் திகதியன்று புளொட் இயக்கத்தின் தலைவர் உமா மகேஸ்வரனையும், அதே மாதம் 19-ஆம் திகதியன்று ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபாவையும் கொன்றனர்.

தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை அடைவதற்காக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் புலிகள் கொன்றனர் அல்லது வெளியேற்றினர். ஆரம்பத்திலேயே யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த அனைத்து சிங்கள மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர். இந்த காலகட்டத்தில வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1990-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அக்கரைப்பற்று பகுதியில் 14 முஸ்லிம் விவசாயிகளை படுகொலை செய்த எல்.ரி.ரி.ஈ இயக்கம் அதே மாதத்தின் மூன்றாம் நாள் கிழக்கு மாகாணத்தில் காத்தான் குடியில் உள்ள ஜும்மா மற்றும் ஹுஸ்தியா இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களில் மத அனுஷ்டானங்களில் ஈடுபட்டிருந்த 140 முஸ்லிம்களை படுகொலை செய்தனர். அந்த மாதத்தின் ஏழாம் நாள் அட்டாளைச்சேனையில் 17முஸ்லிம்களையும், 13-ஆம் திகதி ஏறாவூரில் 122 முஸ்லிம்களையும் கொன்றனர்.

1990 ஒக்டோபரில், யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியாவில் போன்ற பிரதேசங்களில் வாழ்ந்துவந்த 75,000 முதல் 100,000 வரையிலான முஸ்லிம்கள் அப்பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்பட்டதோடு அவர்களின் சொத்துக்கள் அனைத்தும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இந்த மக்கள் அரசாங்கப் படைகளின் பாதுகாப்பின் கீழ் உள்ள அகதி முகாம்களிலும் புத்தளம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள முஸ்லிம் உறவினர்களின் தயவை நாடி தமது ஊர்களைக் கைவிட்டுச் சென்றனர்.

26 ஜூலை 1990 அன்று, பயங்கரவாதிகள் தெகிவளையில் ஒரு ரயிலை வெடிக்கச்செய்து 55 பயணிகளைக்



கொன்ற பயங்கரவாதிகள் ஓகஸ்ட் 29 அன்று, மகாதிவுல் வெவவில் ஒரு பஸ்ஸை வெடிக்கச் செய்ததில் 27 பயணி கள் கொல்லப்பட்டனர். 29 ஜூன் 1991-ஆம் திகதி லாஹூ கல என்ற இடத்தில் தனியார் பேருந்து ஒன்றை பயங்கர வாதிகள் குண்டு வைத்து தகர்த்ததில் 18 பயணிகள் கொல்லப்பட்னர். 11 ஏப்ரல் 1992 அன்று, சிங்கள-தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது, பயங்கரவாதி கள் அம்பாறை நகரில் ஒரு பஸ்ஸை வெடிக்கச் செய்த தில் 25 பயணிகள் கொல்லப்பட்டனர். அதே ஆண்டு ஜூலை 26 அன்று, மட்டக்களப்பு - களவாஞ்சிக்குடிக்கு இடையில் கிராங்குளத்தில் பொதுமக்களை ஏற்றிச் சென்ற வேன் மீது குண்டெறிந்ததில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

21 மே 1991-ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியுடன் இணைந்து எல்.ரி.ரி.ஈ இயக்க பயங்கரவாதத்தை அமை தியான முறையில் தீர்த்து வைக்க முயன்ற இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதம ருமான ராஜீவ் காந்தி தமிழ்நாட்டின் ஸ்ரீபெரும்புதூரில் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தால் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரின் மூலம் படுகொலை செய்யப்பட்டார்.

29 ஏப்பிரல் 1992-ஆம் திகதி பொலன்னறுவை மாவட் டத்தில் அலஞ்சிபொத்தானை மீது எல்.ரி.ரி.ஈ இயக்க உறுப்பினர்கள் நடத்திய தாக்குதலில் 56 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன் 15 ஜூலை 1992 அன்று மட்டக்க ளப்பு காத்தான்குடியில் இருந்து கல்முனை நோக்கிச் சென்ற பஸ் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 19 முஸ்லிம் பொதுமக்களும் கொல்லப்பட்டனர். 21 யூலை 1992-ஆம் திகதி மட்டக்களப்பு பரங்கிய மடுவவில் கொழும்பு - மட் டக்களப்பு புகையிரதம் நிறுத்தப்பட்டு அதில் இருந்த பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டு அதிலிருந்து ஏழு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 01 செப்ரெம்பர் 1992 அன்று கல்முனை சாய்ந்தமருதுவில் உள்ள சந் தையில் சைக்கிளில் பொறுத்தப்பட்டிருந்த குண்டு வெடித் ததில் 22 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 15 ஒக்டோபர் 1992 அன்று, பொலன்னறுவ மாவட்டத்தின் அஹமத்புர, பள்ளிய கொடல்ல, அக்போபுர மற்றும் பனுராக ஆகிய முஸ்லிம் கிராமங்களுக்குள் புகுந்த எல்.ரி.ரி.ஈ இயக்க உறுப்பினர்களால் முஸ்லிம்கள் வெட்டியும், சுட்டும் 172 பேர் கொல்லப்பட்டனர்.

86, 87 யாழ்ப்பாணத்தை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்ப தற்காக 1987 மே-ஜூன் மாதங்களில் வடமராச்சி இரா ணுவ நடவடிக்கையை ஒழுங்கமைத்த பாதுகாப்பு அமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான லலித் அத்துலத் முதலி, 23 ஏப்ரல் 1993 அன்று கிருலப்பனையில் ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட் டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த போது எல்.ரீ.ரீ.ஈ. துப்பாக்கிதாரியால் கொல்லப்பட்டார்.

நட்புறவுப் பேச்சுவார்த்தைகளின் மூலம் பயங்கரவா தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் உறுதியாக இருந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு அதிகபட்ச வசதிகளையும் அவர்கள் கோரியதையும் வழங்கியிருந்த போதும் அவர் 01 மே 1993 அன்று கொழும்பு ஆமர் வீதியில் நடந்த மே தின அணிவகுப்பில் பங்கேற்றவேளை எல்.ரி.ரி.ஈ இயக்கத்



தால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார். ஜனாதி பதியின் நெருங்கிய நட்புக்குரியவராக சேவையாற்றுவது போன்று வேடம் தரித்திருந்த 'பாபு', எல்.ரி.ரி.ஈ-யால் நடத்தப்பட்ட இந்தப் படுகொலைக்கு மனித வெடிகுண் டாக பயன்படுத்தப்பட்டார். இத்தாக்குதலில் ஜனாதிபதி யுடன் மேலும் 24 பேர் கொல்லப்பட்டனர்.

88 ஜனாதிபதி ரணசிங்கபிரேமதாசவின் மரணத்தின் பின்னர், அப்போதைய பிரதமராக இருந்த டி.பி. விஜேதுங்க ஜனாதிபதியானார். எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் பயங்கர வாதம் தொடர்பில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கொண்டிருந்த கருத்திலிருந்து அவர் மாறுபட்ட கருத் தைக் கொண்டிருந்ததுடன், அவர் மேற்கொண்ட நடவடிக் கைகளும் வேறுபட்டவையாக இருந்தன. புதிய ஜனாதிபதி எல்.ரி.ரி.ஈ இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பு என்று கருதியதுடன் அதை இராணுவ ரீதி யிலேயே எதிர் கொள்ள வேண்டும் என்று நம்பினார். இவ்வாறு, சுமார் ஒன்றரை ஆண்டு பதவிக் காலத்தில், ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க எல்.ரி.ரி.ஈ அமைப்புக்கு எதிராக பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் அவ் அமைப்புடன் எந்தவிதமான பேச்சுவார்த்தையையும் நடத்தவில்லை.

89, 90 23 யூலை 1993-ஆம் திகதி வெலி ஓயா ஜனகபுர இராணுவ முகாம் மற்றும் மூன்று முகாம்கள் மீது புலி கள் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தினர். 1983-ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையின் 10-வது ஆண்டு நினைவாக நடத்தப்பட்ட அத்தாக்குதலில் அரசாங்கப் படைகளிடமி ருந்து 50 மில்லியன் டொலருக்கும் அதிக மான மதிப் புள்ள இராணுவ உபகரணங்களை எல்.ரி.ரி.ஈ இயக்கம் கைப்பற்றியது. இத்தகைய சூழ்நிலையில், பயங்கரவாத சக்தி வலுப்பெறுவதை தடுக்க அரசு உடனடியாக பல நட வடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது.

ஜனகபுர இராணுவ முகாமில் நடந்த சம்பவத்தின் பின்னர், ஆனையிறவைக் கைப்பற்றுவதற்கான தாக்கு தலை நடத்த எல்.ரி.ரி.ஈ இயக்கம்கள் தயாராகிக் கொண் டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இதற்கு பதிலடி

கொடுக்கும் வகையில், பிரிகேடியர் வசந்த பெரேராவின் கட்டளையின் கீழ் 29 செப்டம்பர் 1993 அன்று தொடங் கப்பட்ட 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை, ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள் ளப்பட்ட மற்றொரு நடவடிக்கையாகும். கடற்படையும் விமானப்படையும் இணைந்து இந்த நடவடிக்கையை ஆரம்பித்தன. போரின் தொடக்கத்தில், திறந்த வெளியில் நேருக்கு நேர் புலோப்பளையில் நடத்தப்பட்ட தாக்கு தலை கேணல் சரத் பொன்சேகா தலைமை தாங்கினார். போர்க்களத்தில் படையினருடன் சேர்ந்து சண்டையை வழிநடத்திய கேணல் காயமடைந்ததன் காரணமாக போர்க்களத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது டன் அவருக்குப் பதிலாக கேணல் சுசில் சந்திரபால நிய மிக்கப்பட்டார். எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் மீது பதிலடி கொடுப்பதற்காக வடக்குக்கான விமானப்படைத் தளபதி ஜெயலத் வீரக்கொடியின் தலைமையில் போர் விமானங் களும் ஹெலிகொப்டர்களும் பலாலி, கட்டுநாயக்க மற் றும் வவுனியா விமானத் தளங்களில் இருந்து புறப்பட்டன.

கடற்படை நடவடிக்கைகளுக்காக இலங்கை கடற்படை யின் வடக்கு தளபதி சரத் வீரசேகர ஈடுபடுத்தப்பட்டார். 'யாழ்தேவி' நடவடிக்கையின் இரண்டாவது நாளில், ஆனையிறவு கடற்படை துணைப் பிரிவின் வழிகாட்டு தலின் கீழ் தாக்குதலில் ஈடுபட்ட துருப்புக்களுக்கு உதவ டிங்கி படகுகள் பயன்படுத்தப்பட்டன. நான்கு நாட்கள் நடந்த கடுமையான மோதலில், பெருந் தொகையான எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர்களும் பாதுகாப்புப் படைவீரர்க ளும் கொல்லப்பட்டதோடு புலிகளின் 750-இற்கும் மேற்பட்ட படகுகள் அழிக்கப்பட்டன.

91 'யாழ்தேவி' நடவடிக்கையை வெற்றிகரமாக முடித்த பாதுகாப்பு படையினர், வடக்கில் எல்.ரி.ரி.ஈ இயக்கம் கட் டியெழுப்பியிருந்த பலத்தை தோற்கடிப்பதற்காக இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கினர். 11 நவம்பர் 1993 அன்று, பூநகரியைக் கைப்பற்றுவதற்காக தரையிலும் கடலிலும் இருந்து தாக்குதல்களை முன்னெடுத்த புலிகள், அதே சமயத்தில் பூநகரி சங்குப்பிட்டி மற்றும் நாகதேவன் துறையில் உள்ள இராணுவத் தளங்களையும் ஒரே தடவையில் தாக்கினர். சுமார் 1,000 புலி உறுப்பினர்கள் கலந்துகொண்ட இந்தத் தாக்குதலின் முதல் நாளில், அவர்கள் கடற்படை நிலைகளைத் தாக்கியதுடன் இரு தரப்பினருக்கும் சேதங்கள் ஏற்பட்டன.

இரண்டாவது நாளில், எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதக் குழுவால் பூநகரி பாதுகாப்பு வளையத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்ற முடிந்தது. மேலும் அரச படையினர் பலத்த இழப்புகளை சந்தித்தனர். நவம்பர் 12 அன்று, பாதுகாப் புப் படையினர் யாழ்ப்பாணம், சாவக்சேரி பிரதேசங் களில் சுமார் 20 எல்.ரி.ரி.ஈ இயக்க முகாம்கள் மீது தாக் குதல் நடத்தியதோடு அவர்களில் சுமார் 100 பேரைக் கொன்றனர். இந்த மோதலில் சுமார் 250 பாதுகாப்பு படை வீரர்களும் கொல்லப்பட்டனர். பூநகரி பகுதியில் சிக்கியிருந்த படைவீரர்களை மீட்க ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை இணைந்து செயல்பட்டன. பல நாட்களாக, இரு தரப்பினருக்கும் இடையில் கடலிலும் தரையிலும் கடுமையான போர் நடந்ததுடன் நவம்பர் 17 அளவில், அமைப்பின் உறுப்பினர்களுக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்திய இராணுவம், பூநகரி பகுதியை முழுமையாகக் கைப்பற்றியது.

92,
93 பூநகரி படைத்தளத்தை எல்.ரி.ரி.ஈ-யின் பிடியிலிருந்து மீட்டு மீண்டும் அதனைப் பலப்படுத்த முடிந்தபோதும் இந்த இராணுவ நடவடிக்கையில் T 55 ரக டாங் கிகள் இரண்டையும், பல ஆயுதங்களையும் பல இராணுவ வீரர்க ளையும் இழந்ததாலும் அதற்கான பொறுப்பை ஏற்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத் தியரத்ன 31 டிசம்பர் 1993 அன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அதனைத் தொடர்ந்து இராணுவத் தலைமை அதிகாரியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா வடக்கு நடவடிக்கைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டதுடன், 01 ஜனவரி 1994 அன்று, அவர் இராணுவத்தின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டார்.

1994-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ஆம் திகதி, இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவின் வழிகாட்டலின் கீழ், வடக்கு தளபதி மேஜர் ஜெனரல் ஏ.எம்.யூ. செனவி ரத்ன மற்றும் பிரிகேடியர் பற்றிக் பெர்னாண்டோ ஆகியோ ரின் வழிநடத்துதலில் பாதுகாப்புப் படைகளின் பிரதான கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிராந்தியத்தை விரிவுபடுத் தும் நோக்கத்துடன் 'ஜயமக' இராணுவ நட வடிக்கையை ஆரம்பித்தனர்.

முன்னேறி வந்த பாதுகாப்புப் படையினர் ஏப்ரல்26 அன்று வவுனியா - மன்னார் வீதியில் சின்னம்பனை கிரா மத்தைக் கைப்பற்றியதோடு ஏப்ரல் 27 அன்று சாலம்பன் குளம், பூவரசங்குளம், யாயறு நான்கு மற்றும் யாயறு ஐந்தாம் கிராமங்களில் தமது பலத்தை நிறுவினர். பல காலாட் படையணிகளும் விமானப்படையும் இந்த ‘ஜயமக’ நடவடிக்கைக்கு பங்களித்தன. பொது நிர்வாக நடவடிக்கைகளுக்காக பூவரசங்குளத்தில் பொலிஸ் நிலையமொன்று அமைக்கப்பட்டதுடன் மேஜர் சேனநா யக்க கட்டளையின் கீழ் படையினரால் பொது வாழ்க் கைக்கான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின் விளைவாக, வவுனியா சஹால் நெலிய பிரதேசத்தில் வாழ்ந்த சுமார் 500 விவசாய குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 500 பொதுமக்கள் பயங் கரவாதத்தின் பிடியில் இருந்து இராணுவத்தால் காப்பாற்ற முடிந்தது.

94.
95 பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 16 ஆகஸ்ட் 1994-இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் பிரதம ரானார். ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க தொடர்ந்தும் அரச தலைவராக பதவி வகித்த போதிலும், புதிய பிரதமரின் விருப்பப்படி பயங்கரவாதம் தொடர்பான அரசாங் கத்தின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதுடன் அரசாங் கத்திற்கும் எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

(தொடரும்...)



sarawanan.n@thaiveedu.com

# தம்பிரான் மாணிக்கம்

-த. ஜீவராஜ்-

அப்படி என்னதான் பாட்டி உங்களுக்குள்ள பிரச்சினை என்று அறிவாட்டியைப் பார்த்து ஆதினி கேட்டாள். ஆதினி கனவில் கண்டதுபோல் ஆதினிக்கும், கோதைக்கும் தீங்கு செய்த ஆளப்பிறந்தாள் கடைசியில் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டது அனைவருக்கும் பெருந்துயரை உருவாக்கி இருந்தது. அடுத்த நாள் அதிகாலையில் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பதால் அனைவரையும் நித்திரை செய்யுமாறு குடிசையின் வெளியிலிருந்து மாதவர் கேட்டுக் கொண்டதால் ஆதினியால் உரையாடலைத் தொடர முடியாமல் போனது.

பொழுது புலராத நேரத்தில் ஆரம்பித்த பயணத்தில் ஆதினி அறிவாட்டியை விடுவதாக இல்லை. ஆளப்பிறந்தாளுக்கும் உங்களுக்கும் அப்படி என்னதான் பிரச்சினை பாட்டி என்று அறிவாட்டியிடம் மீண்டும் கேட்டாள். ஆளப்பிறந்தாளின் மரணம் பற்றிய செய்தி அறிவாட்டியை மிகவும் பாதித்திருக்க வேண்டும். வழக்கத்துக்கு மாறாக பலர் முன்னிலையில் தன் சொந்தக் கதையின் ஒரு பகுதியை சொல்லத் தொடங்கினாள்.

நான் விஜயராஜ விண்ணகரத்தில தேவரடியாராக இருந்த காலத்தில் நடந்த சம்பவம் அது. திருக்கோணேச்சரத்தில இருக்கிற விஷ்ணு ஆலயமான விண்ணகரத்தில் நாட்டியப் போட்டி ஒன்று நடந்தது. வெற்றி பெற்றவர்களுக்கு கும்பாபிஷேக நிகழ்வில் விருது வழங்கப்பட்டது. நாட்டின் எல்லா பாகத்திலும் இருக்கிற விஷ்ணு ஆலயங்களில் தேவரடியாராகப் பணிபுரிபவர்கள் ஆலயத்துக்கு ஒருவராக தேர்வு செய்யப்பட்டு போட்டியில் பங்கு பற்றினாங்க.

அப்ப விஜயராஜ விண்ணகரத்தில் இருந்து நீங்க போட்டிக்கு போனீங்களா பாட்டி ? என்று கேட்டாள் கோதை.

இல்ல அதுக்கு ஆளப்பிறந்தாள்தான் தெரிவு செய்யப்பட்டாள் என்றாள் அறிவாட்டிப் பாட்டி. மூவரும் அவரை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

விஜயராஜ விண்ணகரத்தில போட்டி வச்சு எடுத்திருந்தா நீங்கதானே போயிருப்பீங்க ? என்றாள் கோதையின் தாய்.

நடன ஆசிரியரின் விருப்பத்தை மீறி அப்போது ஆலயத்தைப் பரிபாலித்த தேவகன்மிகள் ஆளப்பிறந்தாளை திருக்கோணேச்சரம் அனுப்பி வைத்தார். அதே மாட்டு வண்டியில் நானும் திருக்கோணேச்சரம் போனேன் என்றாள் அறிவாட்டிப் பாட்டி. மூவரும் புரியாமல் பார்த்தார்கள்.

அதுதான் உங்களைத் தெரிவு செய்யவே இல்லையே. பிறகு ஏன் நீங்க திருக்கோணேச்சரம் போனீங்க என்றாள் கோதை.

திருக்கோணேச்சரத்தில தேவரடியாராக இருந்த தம்பிரான் மாணிக்கம் ஒருமுறை கந்தளாய் வந்திருந்தார். இராஜராஜேஸ்வரத்தை தரிசித்து விட்டு மருத்துவ காரணங்களுக்காக எங்களுடைய ஆலயத்தில் சில நாட்கள் தங்கி இருந்தார். எனது பணிவிடைகள் அவருக்குப் பிடித்துப் போய் இருக்க வேண்டும். என்னுடைய நடனத்தையும், பூக்களைக் கொண்டு நான் செய்யும் அலங்காரங்களையும் நேரடியாகப் பார்த்து வியந்து பாராட்டுவார். திருக்கோணேச்சரத்தின் ஆலயப் பூசகரான முற்பாகை முதன்மையின் மகனின் கல்யாண நிகழ்வுக்கு அவர் சில சடங்குகள் செய்ய வேண்டி இருந்தது. அதற்கு உதவியாகத்தான் என்னை அழைத்திருந்தார்.

கல்யாணத்துக்குச் செய் தொழும்பு என்று சொல்வது அதைத்தானே என்று வினாவினாள் ஆதினி. கோதையும், தாயும் வியப்புடன் ஆதினியைப் பார்த்தார்கள்.

அவருடைய குடிப்பெயர் நாகரத்தின மாணிக்கம். திருக்கோணேச்சர வழக்கப்படி அவருடைய பரம்பரையை பராமரிக்கும் பொறுப்பு தம்பிரான் குடிக்குரியது என்பதால் அவரை தம்பிரான் மாணிக்கம் என்று கூப்பிடுவாங்க என்றாள் அறிவாட்டி.



நங்கை சானி அம்மையார் வேதனமும் தந்து, எங்களுடைய குடும்பத்தினரையும் பராமரிக்கிறது போலத்தானே என்று கேட்டாள் கோதை.

ஆமா, ஆனா திருக்கோணேச்சரத்தில அவங்களுக்கு கிடைக்கிற வசதிகள் கூட. ஆடைகள், ஆபரணங்கள், அதற் கேற்ற பட்டுத் துணி, குடியிருப்பு நிலம், பயிர் செய்யும் விளை

நிலம், கன்றுடன் கூடிய கறவை மாடு, வேலையாட்கள் என்று ஏழு வசதிகளும் செய்து கொடுப்பாங்க என்றாள் அறிவாட்டி.

திருக்கோணேச்சரத்தில தேவரடியார்களுக்கு கிடைக்கும் வசதிகளைக் கேட்டு கோதையும், தாயும் பெருமூச்சு விட்டார்கள். உதவிக்குப் போன அறிவாட்டிப் பாட்டி எப்படி நடனப் போட்டியில் பங்கு பற்றினார் என்று யோசித்துக் கொண்டிருந்தாள் ஆதினி.

கல்யாணத்துக்குச் செய் தொழும்பில தம்பிரான் மாணிக்கம் அப்படி என்னதான் செய்வாங்க பாட்டி என்றாள் கோதை ஆர்வமாக. ஆகா கேள்வி வேற பக்கம் போகிறதே என்று தடுக்க நினைத்த ஆதினி அறிவாட்டிப் பாட்டியின் கண்கள் கனவுலகில் சஞ்சரிப்பதுபோல் இருப்பதைப் பார்த்து நிறுத்திக் கொண்டாள்.

முற்பாகை முதன்மைப் பூசகரின் வீட்டில் நடக்கும் கல்யாண வீட்டில் அவருடைய பணிதானே முக்கியமானது என்றாள் அறிவாட்டிப் பாட்டி. மணமகளை மஞ்சள் நீராட்டி, அலங்காரம் செய்து விடுவதில் தம்பிராமன் மாணிக்கத்தின் பணி தொடங்கும். இப்படி ஒவ்வொரு தேவரடியாருக்கும் தனித்தனியான கடமை ஒதுக்கப்பட்டு இருக்கும். அவரவர் தனது கடமையை சரியாகச் செய்ய வேண்டும் என்பது மரபு என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

அப்ப மணப்பெண் அலங்காரத்தை நீங்கதான் செய்திருப்பீங்க என்று ஆர்வத்தோடு உரையாடலில் கலந்து கொண்டாள் ஆதினி.

பின்ன, கிடைத்த சந்தர்ப்பத்தை விடுவேனா? இந்த வித்தை எல்லாம் எங்கே கற்றுக் கொண்டாய் என்று தம்பிரான் மாணிக்கமே என்னைப் பார்த்து வியந்து கேட்டார் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

உங்கள் கைவண்ணம் நாங்கள் காணாததா? குடுத்து வைத்த மணப்பெண் என்றாள் கோதையின் தாய்.

மணவறைக்கு மணப்பெண்ணை அழைத்து வருவது, ஆரத்தி எடுப்பது, மணப்பந்தலில் மணமக்களுக்கு எதிரே முன்வரிசையில் இருப்பது என்று கல்யாணத்துக்குச் செய் தொழும்பில் தம்பிரான் மாணிக்கத்திற்கு ஒதுக்கப்பட்ட கடமைகள் நிறைய இருந்தது. அப்போது அவருக்கும் நான்தான் அலங்காரம் செய்து விட்டேன். அவர் மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் இருந்தது என்று நினைவுகளை மீட்டாள் அறிவாட்டிப் பாட்டி.

தம்பிரான் மாணிக்கம் தன் வாழ்க்கையில் அத்தனை அழகாகத் தான் இருந்தது இல்லை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். கடவுள் தந்த வரம் என்று நினைக்கிறேன். அன்றைய கல்யாண நிகழ்வில் பலரது வியப்புக்கும், சந்தோசத்திற்கும் எனது கை காரணமாக இருந்தது என்று சொல்லிக் கொண்டு வயதாகி தோலில் சுருக்கங்கள் விழுந்துவிட்ட தன்னிரு கைகளையும் திருப்பிப் பார்த்துக் கொண்டாள் அறிவாட்டிப் பாட்டி.

கல்யாணச் செய் தொழும்பு முடிந்த பின்னும் தம்பிரான் மாணிக்கம் அவர்களின் அன்புக் கட்டளைக்கு அமைய திருக்கோணேச்சரத்தில் நான் சில நாட்கள் தங்க வேண்டி இருந்தது. ஒவ்வொரு நாளும் விஷ்ணு ஆலயத்துக்குச் சொந்தமான யாத்திரிகர் தங்கும் இடம் அமைந்துள்ள பகுதியில் இருக்கும் நந்தவனத்தில் காலையில் பூசைக்காக பூக்களைப் பறித்து வருவது என் வழக்கமாக இருந்தது.

நாட்டியப் போட்டிக்காக நாடெங்கிலும் இருந்து வந்திருந்த தேவரடியார்கள் யாத்திரிகர் மடத்தில் பயிற்சிகளில் ஈடுபடுவதைப் பார்க்கும் போதெல்லாம் என் கால்கள் பரபரக்கும். சில நாழிகை நேரம் என்னை அறியாமல் அவர்களின் பயிற்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பேன். ஒரு சமயம் என்னையும் அறியாமல் நாட்டியங்களைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது பூசைக்கு நேரமானதை நான் கவனிக்கவில்லை. என்னைத் தேடி வந்த தம்பிரான் மாணிக்கம் அவர்கள் என் தோள்களைத் தொட்டபொழுதுதான் தவறை உணர்ந்தேன்.

என்மீது அதீத அன்பு கொண்ட தம்பிரான் மாணிக்கம் அவர்கள் தன்னுடைய முழு செல்வாக்கையும் பயன்படுத்தி என்னை அந்த நாட்டியப் போட்டி நிகழ்வில் இணைத்து விட முயற்சி செய்தார். விஜயராஜ விண்ணகரத்தில இருந்து ஏற்கனவே ஒருவர் தெரிவு செய்யப்பட்டு போட்டிக்காக வந்திருப்பதால் அப்போட்டியில் நான் இணைந்து கொள்வது தேவையில்லாத சிக்கல்களை உருவாக்கும் என்பதை உணர்ந்து தம்பிரான் மாணிக்கத்தின் காலில் விழுந்து மன்றாடி அந்த வாய்ப்பை வேண்டாம் என்றேன்.

அப்ப எப்படி பாட்டி ஆளப்பிறந்தாள் பாட்டியோட நாட்டியத்தில போட்டி போட்டு வெற்றி பெற்றீங்க? என்று கோதை கேட்டாள். மற்றைய இருவரும் அதனை ஆமோதித்தபடி அறிவாட்டிப் பாட்டியின் பதிலுக்காக அவள் முகத்தை ஆவலுடன் கூர்ந்து நோக்கினார்கள்.

பிறகு நான்தான் மனசு மாறி போட்டியில் பங்குபெற்றப் போகிறேன் என்று தம்பிரான் மாணிக்கத்திடம் வேண்டினேன் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

ஏன்? என்ற கேள்வி திகைப்பில் ஆழ்ந்திருந்த மூவரின் வாயிலிருந்தும் ஒரே நேரத்தில் வெளிவந்தது.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***



# இனப்படுகொலையின் அரசியல்

## இனப்படுகொலை வரலாறும் வரைவிலக்கணமும்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### அறிமுகக் குறிப்புகள்:

இலங்கையில் இறுதிப்போரின் போது நடைபெற்றது இனப்படுகொலையா இல்லையா என்ற வாதங்கள் இன்றும் உலக அரங்கில் உண்டு. இது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இலங்கைக்கு மட்டும் தனித்துவமானவையல்ல. கடந்த அரை நூற்றாண்டுகால உலக அரசியல் பரப்பில் இனப்படுகொலை என்ற சொல்லாடல் ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் முக்கியமானவை. அதேவேளை அதிர்வலைகளுக்கு அப்பால் அவற்றின் பெறுமதி கேள்விக்குரியது. ஏனெனில் மனிதகுலத்தால் இன்றளவும் இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இப்போது காசாவில் அரங்கேறுபவை மனிதகுலத்தின் தோல்வியையே பறைசாற்றுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் கடைசி தசாப்தங்களில், இனப்படுகொலை பற்றிய ஆய்வுகள் பெரும்பாலும் ஹோலோகாஸ்ட் (Holocaust) என அழைக்கப்பட்ட இரண்டாம் உலகப்போரின் போது யூதர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைகளில் கவனம் செலுத்தின. அதை மையப்படுத்தியே ஏனைய பெரும் வன்முறைகள் ஒப்பீட்டு முயற்சிகளாக விரிவடைந்தன. கடந்த காலங்கள், புதிய கண்டங்கள் மற்றும் புதிய நிகழ்வுகளை உள்ளடக்கியதாக அது பின்னர் வரலாற்று ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் வளர்ச்சியடைந்தது. இவ்வாறு 1940-களில் உருப்பெற்ற இனப்படுகொலை என்ற கருத்தாக்கத்தினை கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் துரதிஷ்டவசமாக, எதிர்காலம் பற்றிய புரிதலினைப் பெற அறிவுசார் உரையாடல் முக்கியமானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இனப்படுகொலையின் விரிவுபடுத்தப்பட்ட பயன்பாடு - ஐக்கிய நாடுகள் சபையின் விவாதங்கள் வெளிப்படுத்தியபடி - இக் கருத்தாக்கம் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்தே காணக்கூடிய சிக்கல்களை உள்ளடக்கியிருந்தது. இனப்படுகொலையின் விரிவுபடுத்தப்பட்ட இந்தப் பயன்பாடு இதனுடன் தொடர்புபட்ட சிக்கல்களை மேலும் புரிந்து கொள்ளக்கூடியதாக மாற்றியதுடன் புதிய அக்கறைகளையும் சேர்த்துக்கொண்டது. குறிப்பாக, தத்துவம், வரலாறு, மானுடவியல், சட்டம், பாலின ஆய்வுகள் போன்ற துறைகளில் ஆராயப்பட்ட பன்முக யதார்த்தங்களுக்கு இடையிலான உராய்வுகளிலிருந்து பதட்டங்கள் எழுந்தன. மேலும், ‘இனப்படுகொலை நிலையை அடைவதால்’ ஏற்பட்ட சட்ட மற்றும் அரசியல் விளைவுகளும் பலன்களும் அரசியல் அழுத்தங்களால் பாதிக்கப்பட்ட ஒரு செயல்முறையான, எளிமையான ‘இனப்படுகொலையா இல்லையா’ என்ற ஒற்றைப் பரிமாண முறையைப் பயன்படுத்தி வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி விவாதிப்பதில் சக்திவாய்ந்த உந்துதலைச் செலுத்தின.

இனப்படுகொலை போன்ற சட்டரீதியிலும் நெறிமுறையாலும் அரசியல் முக்கியத்துவம் பெற்ற கருத்தாக்கத்தில் இனப்படுகொலையின் ஒன்றுக்கு மேற்பட்டதும், ஒன்றுக்கு மேலான வகையானவை ஒன்றிணைந்த முறைகளும் அவை தொடர்ச்சியாக மாறிவருகின்றமையும் கடுமையான சிக்கல்களையும் சவால்களையும் எழுப்புகின்றன. ஏனென்றால், சட்டப் பிரிவுகள், விளக்கத்திற்கு உட்படுத்தப்பட்டாலும், ஒப்பீட்டளவில் கிட்டத்தட்ட நிலையான அர்த்தங்களைக் கொண்டிருக்கின்றன. இவை வெறுமனே கறுப்பு-வெள்ளை எனத் தீர்மானிக்கக்கூடியவையல்ல. ஆனால் அரசியல் தீர்ப்புகளில் இதே போன்ற விறைப்பான பார்வை இயல்பாகவே உள்ளது. இதற்கு இனப்படுகொலை என்ற சொல்லாடலின் தெளிவின்மை முக்கிய காரணமாகும்.

### இனப்படுகொலை என்ற சொல்லாடல்:

1944-ம் ஆண்டு போலாந்து நாட்டைச் சேர்ந்த ரபேல் லெம்கின் Axis Rule in Occupied Europe என்ற தனது நூலில் முதன்முதலாக Genocide என்ற சொல்லை இனப்படுகொலையைக் குறிக்கப் பயன்படுத்தினார். லெம்கின் கிரேக்க வரலாற்றில் இருந்து ஜெனோஸ் என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் சட்டரீதியான ஒரு ஸ்திரத்தன்மையை வழங்க விரும்பினார். அவருடைய நிலைப்பாடு அறிவியல் ரீதியாக மரியாதைக்குரிய தோற்றத்தைக் கொடுக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தால் உந்தப்பட்டது. ஆனால் சிரமங்களும் சவால்களும் லெம்கின் உருவாக்கிய வகையிலேயே மறைமுகமாக உள்ளன. 1948-ல் உருப்பெற்றதைவிட நுட்பமானதான இனப்படுகொலை என்பது இருக்கிறது. லெம்கினின் சொல்லாடல் கூட தெளிவின்மை மற்றும் உள் முரண்பாடுகளால் ஸ்திரமின்மைக்கு உட்பட்டது.

முதலில், ஜெனோஸ் என்ற சொல்லில் தெளிவின்மை உள்ளது. பொதுவான வம்சாவளியைக் கூறும் ஒரு சமூகக் குழுவை விபரிக்க கிரேக்கர்கள் இதைப் பயன்படுத்தினர். நிச்சயமாக இருபதாம் நூற்றாண்டு போன்ற ஒரு 'தேசியவாத' நூற்றாண்டில் மக்கள் மற்றும் மக்களின் உரிமைகள் மீதான அதன் பேரார்வம் காரணமாகப் பொருத்தமானதாக இல்லை. லெம்கின் ஜெனோஸ் என அழைக்கப்படும் குழுக்கள் கலாசார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் 'கட்டுமானம் செய்யப்பட்ட' நிறுவனங்களாக இருக்கலாம், அதாவது மனிதனின் துணை தயாரிப்புகளாக இருக்கலாம் என்று வாதிட்டார். லெம்கினின் கருத்து ஆரம்பத்தில் மிகவும் மையங்கொண்டிருந்த 'இனத்துவ' கிரேக்க மரபணுக்களில் இருந்து விலகி மிகவும் பரந்த உணர்வுடன் நெருக்கமாக வளர்ந்தது. காலப்போக்கில் இனப்படுகொலை என்பது கோட்பாட்டளவில் எந்த மனிதக் குழுவையும் ஒடுக்குவதைக் குறிக்கும். இந்த வழித்தடத்தில் தேசிய, இன, மத குழுக்கள் எனக் குழுக்களை ஐக்கிய நாடுகள் வரையறை செய்தன.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் இனப்படுகொலைகளுக்கு எதிரான அரசியல் ரீதியான கட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்படுவதிலும் இந்த வரையறைகள் சிக்கல்களை ஏற்படுத்தின. இதனால் இனப்படுகொலை என்பதன் இறுதி வடிவம் ஐக்கிய நாடுகள் சபையில் வடிவமைக்கப்பட்டதுடன் நீதித்துறை ஒழுக்காற்றியல் சார்ந்த இறுகிய வடிவத்தையும் கொடுத்தது.

தெளிவான விரிவான ஒரு வரையறையை யாரும் விரும்பவில்லை என்பது இதற்கான காரணங்களில் ஒன்றாக இருந்தது. இரண்டாம் உலகப் போரில் தோற்கடிக்கப்பட்ட சக்திகள் பயங்கரமான குற்றங்களைச் செய்திருந்தன. ஆனால் வெற்றியாளர்களும் மாபெரும் குற்றங்களை இழைத்திருந்தனர். குறிப்பாக கொலனியாதிக்க நாடுகள் தங்கள் கொலனிகளில் நிகழ்த்தியவையும் இனப்படுகொலைக்கு நிகரானவையே. அமெரிக்காவில் பழங்குடியினர் மீதான திட்டமிட்ட கட்டவிழ்க்கப்பட்ட வன்முறையும் இதனுள் அடங்கக்கூடியவையே. எனவே மேம்போக்கான தெளிவில்லாத, சட்ட ஓட்டைகளுக்குள் புகுந்து தப்பிக்க வாய்ப்புள்ள வகையிலான ஒரு வரைவிலக்கணத்துக்கே உடன்பாடு எட்டப்பட்டது.

இனப்படுகொலையைக் குற்றமாக்கும் வரைவு மாநாடு 'இரண்டு வல்லரசுகளுக்கு இடையிலான கருத்தியல் போராட்டத்தில் ஒரு சிப்பாயாக மாறியது.' எனவே, இனப்படுகொலை வரையானது 'கெடுபிடிப்போரின் உயிரிழப்பு' மற்றும் 'கொலனித்துவ நீக்கம்' ஆகியவற்றில் மையங்கொண்டது. ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை உறுப்புரிமை கொண்ட நாடுகளின் கடந்த கால, நிகழ்கால துஸ்பிரயோகங்களுக்கு எதிராக இருக்கக் கூடிய விதிகளை நீக்குவதற்கு அமெரிக்கா முயன்றது. பிரித்தானியா, தனது காலனித்துவத்தின் கீழிருந்த நாடுகளின் ஆளுநர்களிடம் இந்த நெறிமுறைகளைப் பகிர்ந்து இவற்றினால் ஏதேனும் சிக்கல்கள் தமக்கு வருமா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டது.

மாநாட்டில் முதலில் கையெழுத்திட்ட நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் 1994-ம் ஆண்டு வரை இனப்படுகொலையை அதன் சொந்த சட்டத்தில் இணைக்கவில்லை, இது இனப்படுகொலைக் கருத்தை உருவாக்கி செயற்படுத்துவதில் வெற்றியாளர்களுக்கு எதிராகவிருந்த காரணிகளின் சரியான உதாரணம்; அத்துடன் அதன் தெளிவற்ற தன்மைகள் மற்றும் பிரச்சினைகள் எவ்வளவு ஆழமானவை என்பதைக் காட்டுகிறது. பிரெஞ்சு நீதிமன்றங்களின் வழி விச்சி முதல் அல்ஜீரியா வரையிலான பிரான்ஸின் கொலனித்துவ நடைமுறைகள் சுத்தப்படுத்தப்பட்ட பின்னரே இறுதியாக இனப்படுகொலை பிரெஞ்சு சட்டமாக மாற்றப்பட்டது. இங்கே கவனிப்புக்குரியது யாதெனில் பல்வேறு நிகழ்வுகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டே 'இனப்படுகொலை' என்பதற்கு நியாயமான முறையில் கூறக்கூடிய ஒரு வரைவிலக்கணக்கத்தைக் கூறமுடியும்.

## சொல்லாடலின் வரலாற்று வளர்ச்சி:

இனப்படுகொலை பற்றி வரலாற்றாசிரியர்களும் சமூக அறிவியலாளர்களும் மட்டுமன்றி, சட்ட வல்லுநர்களும் சிந்திக்கும் விதமே மாறிவருகிறது. மிகவும் பரவலான பயன்பாடு கருத்தாக்கத்தின் பகுப்பாய்வு மற்றும் சட்ட அதிகாரங்களை ஆபத்தில் ஆழ்த்துகிறது என்று சிலர் அஞ்சினால், கொலனித்துவ அனுபங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது போல, நமது அறிவின் விரிவாக்கத்திற்கு அது தேவை என்று மற்றவர்கள் நம்புகிறார்கள். உதாரணமாக 1965-ல் அரங்கேறிய இந்தோனேசிய கம்யூனிஸ்ட்களின் படுகொலை போன்றவை - அரசியல் குழுக்களின் கலைப்பு என்ற பொருளில் - இனப்படுகொலையாகக் கருதப்பட வேண்டும்.

இந்த வார்த்தைகள் இனப்படுகொலைகள் நிகழ்த்தப்படும் வழிமுறைகளை விரிவுபடுத்துவதுடன், பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களை விரிவுபடுத்துவதையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் (இரண்டும் நிச்சயமாக நெருங்கிய தொடர்புடையவை). பாலியல் வன்முறையை உள்ளடக்கியதாக இனப்படுகொலையின் வரைவிலக்கணம் விரிவாக வேண்டும் என்ற வாதம் வலுவாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆர்மேனிய இனப்படுகொலையின் போதும், 1990-களின் முன்னாள் யூகோஸ்லாவியாவிலும், பெருமளவிலான பலாத்காரம் அசாதாரணமான, திட்டமிட்ட அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்ற பரிமாணங்களை அடைந்தது என்பதை நாம் அறிவோம். உண்மையில், அந்த தசாப்தத்திலிருந்து, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களின் பட்டியலில் பாலியல் வன்முறை முறையாக சேர்க்கப்பட்டுள்ளது. ஹோலோகாஸ்டில் நிகழ்ந்த பாலியல் வன்முறையை குற்றமாக கருதாமையையும் இங்கு நோக்க வேண்டும். மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ வெகுஜனங்களைப் பட்டினி போடுவதும் இனப்படுகொலை நடைமுறைகளில் ஒன்றாக உள்ளடக்கப்பட வேண்டும் என்பதும் விவாதத்துக்குரியதாகியுள்ளது.

இனப்படுகொலைகள் பற்றிய கதையாடல்கள் மேலே இருப்போரின் நடவடிக்கைகளின் பங்கைப் பற்றியதாக மட்டுமே இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றவாளிகள் இருவரையும் உள்ளடக்கிய கீழ் மட்டத்தில் இருந்தான அணுகுமுறையை நோக்கி இனப்படுகொலை ஆய்வுகளை விரிவுபடுத்துவதற்கான தேவையும் இப்போது உணரப்பட்டுள்ளது. அதேவேளை குறித்த நிகழ்விற்குப் பிறகு இனப்படுகொலை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை உள்ளடக்கிய




ஒரு நீண்ட தூரக் கண்ணோட்டத்தில் எடுக்கப்பட்ட வாழ்க்கை அனுபவத்தை இனப்படுகொலை ஆராய்ச்சியின் மையத்தில் வைக்க வேண்டிய தேவையுண்டு என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

சிக்கல்கள் எதிர் திசையில் இருந்து எழுகின்றன, அதாவது, அதன் சட்டப் பெறுமதி குறித்தும் இழப்பீடுகள், இனப்படுகொலையை அங்கீகரிப்பதன் மூலம் வழங்கப்படும் தார்மீக, சித்தாந்த மேலாதிக்கத்தின் ஒத்திசைவான தாக்கம் என்பன கேள்விக்குள்ளாகின்றன. நிச்சயமாக, இந்த சட்ட மையமானது குறைந்தது இரண்டு கவலையளிக்கும் திசைகளில் அதன் செல்வாக்கை செலுத்துகிறது. ஒருபுறம், இது விஞ்ஞான விவாதத்தை ஏற்கனவே குறிப்பிடப்பட்ட ஒற்றைப் பரிமாணப் பாதையில் தள்ளுகிறது – 'இது இனப்படுகொலையா இல்லையா' - இவ்வாறு அறிவுபூர்வமாக அதே நேரத்தில் அந்த விவாதத்தை அரசியல் ரீதியாக உயிர்ப்பிக்கிறது, அதே சமயம் ஆராய்ச்சியை பெரிதும் எளிமைப்படுத்தி சாதாரணமாக்கவும் சிதைக்கவும் செய்கின்றது (ஆம் அல்லது இல்லை என்பது ஒரு விதியாக, சரியான அல்லது பயனுள்ள வரலாற்று அணுகுமுறை அல்ல). அத்துடன் இது சட்ட அம்சங்களில் அதிக கவனம் செலுத்துவதுடன் வரலாற்றை முன்னரே தீர்மானிக்கப்பட்ட நிலையான வகிபாகங்களுடன் கூடிய ஓர் ஒழுக்க நாடகமாக வெளிப்படுத்துகிறது, இது நிச்சயமாக வரலாறு இல்லை.

இனப்படுகொலையின் உடற்கூறியல் மீது மிகக் கூர்மையான கவனம் - எது தகுதி மற்றும் எது தகுதியற்றது, செயலைச் செய்ததற்கு அல்லது அதைத் தொடரத் தவறியதற்கு யார் காரணம் - இனப்படுகொலை பற்றிய ஆய்வை முன்வைப்பதன் மூலம் புலமைப் பரிசில்களை ஒரு மூலையில் தள்ளும் அபாயம் உள்ளது. இனப்படுகொலை அறிஞர்கள் மத்தியில், 'இது இனப்படுகொலையா இல்லையா?' என்று ஒரு மேலாதிக்கக் கேள்வி அடிக்கடி எழுகிறது. பெருந்திரள் வன்முறையின் மற்ற வடிவங்கள் இதே போன்ற அங்கீகாரம் மற்றும் அறிவார்ந்த நோக்கத்திற்கு தகுதியானவை அல்ல, மேலும் வன்முறையின் வரலாறுகள் எவ்வாறு கூறப்படுகின்றன என்பதைப் பற்றியது. ஆனால் இவை அதிக கவனம் பெறுவதில்லை.

சமீபத்திய ருவாண்டா - புருண்டி வரலாறு, இனப்படுகொலை வகையின் வரம்புகளுக்கும் ஆபத்துகளுக்கும் சுவாரஸ்யமானதும் அவசியமானதுமான மறுபரிசீலனைக்கான தேவையை உருவாக்குகிறது. உதாரணமாக, ருவாண்டா வழக்கு இரண்டு முக்கிய வரலாற்றுப் பாத்திரங்களான 'கெட்ட' ஹட்டஸ் மற்றும் 'நல்ல' துட்ஸி பாதிக்கப்பட்டவர்களின் பார்வையில் கூறப்பட்டது. இனக்குழுக்கள் ஒரே மாதிரியாக செயற்படும் என்கிற பொதுப்புத்திக் கருத்தினை இது வலுப்படுத்துகிறது. இந்த வகையான விபரிப்புகள் கீழ்ப்படிதலின் கடுமையான கட்டமைப்புகளைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் பயன்படுத்தப்படலாம், இதில் கொடுக்கப்பட்ட குழு அதன் மீது சுமத்தப்பட்ட கூட்டுக் குற்றத்தால் 'தாழ்ந்ததாக' இருக்கும். மேலும், இனப்படுகொலையின் முழுமையான மையமானது 'சிறு அல்லது கண்ணுக்குத் தெரியாத பிற வகையான வெகுஜன வன்முறைகளை' உருவாக்குகிறது, அதனால் 'இனப்படுகொலை அல்லாத குற்றங்களைப் பற்றி பேசுவது மறுப்புக்கு சமம்' என்பதுடன் 'மற்ற குற்றங்களை நிறுத்துதல் என்ற பெயரில் நியாயப்படுத்தப்படுகிறது'. இது அடிப்படையில், புதியவற்றைத் தடுப்பது என்ற பெயரில், நிகழ்ந்தது இனப்படுகொலை அல்ல என்பதை நிறுவுவதில் கவனம் செலுத்தவும் இதர வன்முறை நிகழ்வுகள் உட்பட எல்லாவற்றையும் மழுங்கடிக்கவும் முனைகிறது. இதன்மூலம் இனப்படுகொலை பற்றிய அறிவுசார் விவாதத்தை ஏழ்மைப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக,



இஸ்ரேலிய வரலாறு பற்றிய சில விவாதங்கள் இதை உறுதிப் படுத்துகின்றன.

## தொடரும் குறிப்புகள்:

இனப்படுகொலை பற்றி அறிஞர்கள் மதிப்பிடும் விதம் மாறி வருகிறது. சிலர் இது மிகவும் பரவலான பயன்பாட்டின் காரணமாக அதன் பகுப்பாய்வு சக்தியை இழந்த ஒரு கருத்தாக பார்க்கிறார்கள், மற்றவர்கள் இனப்படுகொலை என்று கணக்கிடக்கூடிய வழக்குகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதற்கு இதைப் பயன்படுத்த விரும்புகிறார்கள். இந்த அணுகுமுறைகள் தீர்க்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் ஒரு மக்களை அழிப்பதில் விளையும் வெகுஜன அட்டூழியத்தின் செயல்களை ஆய்வு செய்ய பயன்படுத்தப்படும் முறைகள் ஆகியவற்றுடன் ஆழ்ந்த ஈடுபாட்டிற்கு வழிவகுத்தன. இனப்படுகொலை, அதன் விளைவுகள் பற்றிய தெளிவான புரிதல், புதிய மற்றும் பழக்கமான குரல்கள் உட்பட சமூக அறிவியல், மனிதநேயம் போன்றவற்றில் உள்ள இடைநிலை முறைகள் மற்றும் கோட்பாட்டின் மீது கவனம் செலுத்தியுள்ளது. ஆனால் இனப்படுகொலை ஆய்வுகள் பரந்த அளவில் விரிவடைந்து, துறைகளில் புதிய பயன்பாட்டைக் கண்டறிவதால், மனிதகுலத்தின் மனிதாபிமானமற்ற தன்மையை விளக்குவதற்கும் புரிந்துகொள்வதற்கும் ஒரு கருவியாக கருத்தின் பயன் குறித்த தவிர்க்க முடியாத கேள்விகளை எதிர்கொள்கிறது.

இனப்படுகொலை என்பது ஒரு குறிப்பிட்ட, பகிரப்பட்ட வரலாற்று அனுபவத்தின் கதையாகும். மிகவும் நெகிழ்வான சட்ட, பொருளாதார, அரசியல் கருத்தாக்கங்களுக்கு ஆதரவாக இனப்படுகொலை வகையை வரலாற்றின் குப்பைத் தொட்டியில் தள்ளுவதற்குப் பதிலாக, அறிஞர்கள் புதிய கருவிகளைப் பயன்படுத்துவதற்கும், இனப்படுகொலையை காலம், இடம் முழுவதும் வரைபடமாக்கும் முறைகளைப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பு உள்ளது. மக்கள் இனப்படுகொலையை குற்றவாளிகளாகவோ, பாதிக்கப்பட்டவர்களாகவோ அல்லது பார்வையாளர்களாகவோ அனுபவிக்கிறார்கள். இனப்படுகொலையை நீடித்த மற்றும் மொழிபெயர்க்கக் கூடிய எண்ணற்ற அரங்காடிகள், செயல்கள் மற்றும் யோசனைகளைப் புரிந்துகொள்வது என்பது வரையறைகளுக்கு அப்பால் நகர்ந்து வரலாற்று ரீதியாக வரையறுக்கப்பட்ட நிகழ்வாக அங்கீகரிப்பதாகும். இனப்படுகொலை என்பது ஒரு நவீன மனித அனுபவத்தை வரையறுக்கும் சூழல் சார்ந்தது. இனப்படுகொலை பற்றிய இத்தகைய புரிதல், குற்றவாளிகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பார்வையாளர்களை ஒருங்கிணைந்த மற்றும் நீட்டிக்கப்பட்ட வரலாற்றுச் சட்டத்தில் வைப்பதற்கான வாய்ப்புகளை வழங்கும். இது இனப்படுகொலையின் தவிர்க்க முடியாத தன்மையைக் காட்டும் முந்தைய நிகழ்வுகளின் முன்னோடிகளைத் தேடும் அல்லது இனப்படுகொலையை பின்னோக்கிப் படிக்க முயற்சிக்கும் காலகட்டம் அல்ல. இது நிகழ்வுகளின் வரலாற்று சிகிச்சையை ஆபத்தில் ஆழ்த்துகிறது. அட்டூழியத்தின் தருணத்திற்கு அப்பால் இனப்படுகொலையை அனுபவமாக நீட்டிப்பது இனப்படுகொலையை செயல்முறையாக நிலைநிறுத்துகிறது. ஒப்பீட்டு இனப்படுகொலை பற்றிய வேதனையான கேள்வியையும் இது தீர்க்கத் தொடங்குகிறது. இனப்படுகொலை என்பது அரசு மற்றும் அரச சார்பற்ற நபர்களால் தொடரப்பட்ட ஒரு செயலாக புதிய கட்டத்தை அடைந்த இருபதாம் நூற்றாண்டின் குற்றமாகும். இது இருபத்தியோராம் நூற்றாண்டில் நம்மைத் தொடர்ந்து வருகிறது. அதன் வடிவங்கள், உந்துதல்கள் மற்றும் மனித அழிவுகளைப் புரிந்து கொள்ள, கலாசார மற்றும் சமூக வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்ட கருவிகள் நமக்குத் தேவை. அதை வெறுமனே மறுபெயரிடுவது அல்லது வேறு கோட்பாட்டு உரிமைகோரல்களில் அதை நிலைநிறுத்துவது, நமது புரிதலுக்கு சிறிதும் உதவாது. இனப்படுகொலையை அனுபவமாகப் படிப்பது என்பது அதை ஒரு சட்ட வகையாகவும், தார்மீக மனசாட்சியின் மீதான அரசியல் கோரிக்கையாகவும், நவீன மனிதப் பிரச்சினையாகவும் பகுப்பாய்வு செய்வதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இது அவர்களுக்கு அல்ல, ஆனால் நமக்கும் நடக்கக் கூடிய ஒன்று என்ற புரிதலுக்கு வந்தடைவதாகும்.



meenilankco@thaiveedu.com



# சுந்தர ராமசாமியின் திறனாய்வு அணுகுமுறை - பொருண்மைக்களம்

– சு. வேணுகோபால்

சிறுகதை என்ற இலக்கிய வடிவம் இன்று தமிழில் நிலை பெற்றுவிட்ட ஒன்று. இதன் பண்புகள் குறித்துப் பல்வேறு விளக்கங்களும் விவாதங்களும் உண்டு. திறனாய்வாளர்களும் படைப்பாளர்களும் இது பற்றிப் பேசியுள்ளனர். நாற்பதுக்கு மேற்பட்ட நல்ல சிறுகதைகள் எழுதிய சுந்தரராமசாமி சிறுகதைகளின் பல பொதுவான பண்புகள் குறித்துப் பேசியுள்ளார். சிறுகதை பற்றிய திறனாய்வுக்கு இக்கருத்துக்கள் துணை நிற்கின்றன.

வாழ்வின் இறுக்கங்களுக்கு ஒத்திசைவாக எழுதப்படுபவை சிறுகதைகள் அல்ல, வெறும் கதைகள் என்று கருதுகிறார். அதாவது வாழ்வின் 'போதாமை'களைக் கண்டும் காணாமல் விட்டுவிடாமல், அவற்றின் முரண்பாடுகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து மேன்மையான வாழ்க்கைக்கு வழிகாட்டுவது சிறுகதையின் இலக்கியக் கொள்கை என்று சு.ரா. கருதுகிறார்.

இது பற்றி, 'சூட்சும இயக்கம் கொண்டதாக நம்பப்பட்டு வந்த தர்மம் காணாமற் போய்விட்டதை உணர்ந்து வருத்தம் கொண்டது சிறுகதை. ஒழுங்கும் ஒத்திசைவும் கொண்டதாக உலகை கற்பனை செய்துகொண்டிருப்பது சாத்தியம் இல்லை என்ற நிலைக்கு தள்ளிவிட்டது. யதார்த்தத்தின் கோலத்தை உணர்ந்து உடைந்தன உணர்ச்சியும் மென்மையும் கொண்ட கலை உள்ளங்கள். அச் சிதறல்களின் கலை வடிவங்களே சிறுகதைகள். கதையில் தன் உயிரை வைத்துக்கொண்டிருக்கும் உன்னதச் சிறுகதை எதுவும் இல்லை. மேலான கலைகள் போல் சிறுகதைகளும் கலைஞனின் பார்வையில் தன் உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. கதைக்கு அடிப்படை ஒத்திசைவு என்றால் சிறுகதைக்கு அடிப்படை முரண்'[1] என்கிறார்.

இவ்வகையில் நிகழ்கால வாழ்க்கையில் உள்ள சிக்கல்களைக் களைவதற்குச் சிறுகதை படைத்தவர்களில் முக்கியமானவராகப் புதுமைப்பித்தனைக் காண்கிறார். சமுதாயத்தில் தான் கண்ட உண்மைகளை 'அறிந்தவுடன் போட்டுடைக்கும் குணம்' புதுமைப்பித்தனிடம் குடிகொண்டு இருப்பதால் அவரால் மேலான சிறுகதைகளைப் படைக்க முடிந்துள்ளது என்று கருதுகிறார்.

இவரைப் போலவே பாரதி, கு.ப.ரா. மௌனி, ந.பி., க.நா.சு., கு. அழகிரிசாமி, ஜி. நாகராஜன், தி. ஜானகிராமன், ஜெயகாந்தன், வண்ணதாசன் போன்றோர் நிகழ்கால வாழ்க்கைச் சிக்கலைத் தத்தம் கதைகளில் பிரதிபலித்துள்ளதை வைத்து அவர்களின் பார்வைக் கோணங்களைக் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார் அவர்.

### கலையும் பொருண்மைக்களமும்:

மனித வாழ்க்கை என்பது புதிரானது; காணமுடியாத ஆழமும் விரிவும் கொண்டது. இந்த அகண்ட பரப்பில் தடம் பரப்பிக் கொள்வது இலக்கியம். இதனுள் குறிப்பாகப் புனைகதை, வாழ்க்கையின் பரப்பைத் தனது உள்ளடக்கமாகவும் இனமாகவும் கொண்டிருக்கிறது.

வாழ்வின் சிக்கலைக் கலைஞன் சிறுகதையாகவோ, நாவலாகவோ மீண்டும் படைக்கும்போது, அவனுடைய பாடுபொருள்களின் பார்வைக்கோணங்களும் வெளிப்பட்டு விடுகின்றன. புனைகதைகளில் உள்ளடக்கமாக உருப்பெற்றிருக்கின்ற விரிந்த வாழ்க்கைத் தளத்தையும் அதனைக் கலை உருவமாகப் படைக்கின்ற கலைஞனின் பார்வைக் கோணங்களையும் 'பொருண்மைக் களம்' என்று இங்குக் கூறுகிறோம். இந்தத் தளத்தையும் இதன் பல்வேறு கோணங்களையும் இவை புனைகதைகளில் சித்திரமாயிருக்கின்ற தன்மைகளையும் இவ்வியல் ஆராய்கிறது.

இவை, புனைகதைகளுக்குப் பொதுவாயினும், இங்கு சிறுகதைகளை மையமாக வைத்தே சு.ரா. கூறும் பொருண்மைக்களம் ஆராயப்படுகிறது. சிறுகதையின் பாடுபொருள்களிலுள்ள அனுபவ வீச்சுக்களையும் பார்வைக் கோணங்களையும் சு.ரா. விரிவாகப் பேசுவதனை இங்கே நாம் புரிந்து கொள்ள முடியும். பொருண்மைக்களம் என்பது புனைகதைகளிலுள்ள பாடுபொருள்களின் வீச்சுக்களே.

### பொருண்மைக் களச்சார்பு:

படைப்பாளி கலையின் பொருண்மைக் களத்தைத் தேர்ந்தெடுப்பதற்குத் தன்னுடைய கோணத்திலிருந்து விளக்கம் தருகிறார்.

அதாவது படைப்பாளி 'நிகழ்காலச் சவால்களை உணர்ந்து, நமது சகல ஊனங்களையும் புண்களையும் உள்ளங்கையில் கூச்சமின்றி ஏந்தி, ஆராய்ந்தறிந்து அவற்றிலிருந்து விமோசனம் பெறுவதற்கான மார்க்கங்களைப் பற்றி யோசிக்கலாம்'[2] என்கிறார் சு.ரா.

‘விமோசனம் பெறுவதற்கான மார்க்கங்களில் ஈடுபட்ட கலைஞனிடம் உள்ள பார்வைக் கோணத்தை அடிப்படையாக வைத்துத்தான் படைப்பின் பொருண்மைக்களம் பற்றிய திறனாய்வை அவர் மேற்கொண்டிருக்கிறார்.

கலைஞன் தன் படைப்புலகம் பற்றி யோசிக்கும்போது அவன் நம் கலாசார பின்னணி சார்ந்த சிந்தனையை வெளியிட



வேண்டும் என்று அவர் விரும்புகிறார். வேறு ஒரு கலாசாரம் சார்ந்த சிந்தனைப் போக்கினைத் தழுவி எழுதுவது என்பது இரவல் வாங்கிக்கொண்டு செய்யும் கருத்துத் திணிப்பாகுமே தவிர நம் பண்பாட்டிற்கு உகந்த சிந்தனை ஆகாது.

சுருக்கமாகச் சொன்னால், படைப்பாளி எந்தத் தத்துவச் சாயலுக்கும் சித்தாந்தங்களுக்கும் உடன்பட்டுப் பார்வையைச் செலுத்தலாகாது என்று அவர் கருதுகிறார். நம் வாழ்க்கைச் சிக்கலைக் களைந்து கொள்வதற்கு நம் அனுபவங்களையே முன்னிறுத்த வேண்டும் என்கிறார்.

### இரு போக்குகள்:

தமிழ்ச் சிறுகதைகளின் பாடுபொருள் இரண்டு சிந்தனைப் போக்குகளில் தோன்றி வளர்ந்திருப்பதாக அவர் குறிப்பிடுவார்.

- இந்திய ஆத்மீக தளத்தில் நின்று தொழிற்பட்ட இலட்சியவாதிகள்.
- உலக சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டு, நம் கலாசார ஊனங்களைக் களைவதற்கு நமக்கான சிந்தனையைக் கொடுத்த யதார்த்தவாதிகள்.

என்று பிரித்துக்கொள்கிறார்.

அதாவது பாரதியையும் பாரதி சார்ந்த ஆத்மீக நெறியைப் பின்பற்றியவர்களையும் ‘பாரதி குடும்பம்’ என்றும் அதற்கு மாறான யதார்த்த நெறியைப் பின்பற்றிய புதுமைப்பித்தனையும் அவருடைய போக்கினைச் சார்ந்தவர்களையும் ‘புதுமைப் பித்தன் குடும்பம்’ என்றும் சு.ரா. அழைக்கிறார்.

### லட்சியவாதிகள்:

இந்திய ஆத்மீகத் துறையில் விவேகானந்தர், காந்தி போன்றோர் விளைவித்த புதிய சிந்தனையின் போக்கு இலக்கிய உலகிலும் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது. இதன் விளைவால் மறுமையைவிட இம்மையே சிறந்தது என்ற தத்துவப் போக்கு கிளம்பியது. இப்படிப்பட்ட இந்திய ஆத்மீக சிந்தனையை உள்வாங்கிக்கொண்டு ஈடுபட்டவர்களை ‘இலட்சியவாதிகள்’ என்று குறிப்பிடுகிறார்.

மறைந்த நம் கலாசார காலங்களை மீண்டும் நிலை நாட்டிவிட வேண்டும் என்பதிலும், அதிலிருந்து ஒரு இலட்சிய வாழ்க்கையை உருவாக்கிவிட வேண்டும் என்பதிலும் ஆசை வைத்திருந்தவர்களாக ஆத்மீகதளத்தில் தொழிற்பட்டவர்களைக் குறிப்பிடுகிறார்.

மேலும், பழமையின் மீது உள்ள பற்றை உதற மனம் இல்லாமலும், நிகழ்கால மானிட வாழ்க்கைத் துன்பங்களை, அவர்களின் குடும்பம், மதம், கல்வி, பிற சமூக உறவுப் பின்னணியை இருப்புக்களமாகக்கொண்டும், களைவதற்கான கவலையும், நிறைவான வாழ்க்கைக்கான தேடலையும் ஒருசேர படைப்பிற்கான பொருண்மைக்களமாக ஏற்றுக்கொண்டு இயங்கியவர்கள். இந்த ஆத்மீக குடும்பத்திற்கு வழி வகுத்த மூலவர் ‘பாரதி’ என்று சு.ரா. கருதுகிறார்.

### யதார்த்தவாதம்:

இலக்கியத்தின் பொருண்மைக்களத்திலும் அதன் சார்பிலும் ஒரே வகையான அல்லது ஒத்த கருத்துடையவர்களைக் ‘குடும்பம்’ (குழு அல்லது குழுமம்) என்று அழைக்கிறார். ஒரே வகையான அல்லது ஒத்த இலக்கியப் போக்கினைக் கொண்டது ஒரு குடும்பம் என்பது இங்கே பொருளாகிறது.

புதுமைப்பித்தன் குடும்பம் இந்திய ஆத்மீக பலத்தையோ,

மரபின் கட்டுக்களையோ ஏற்றுக்கொள்ள மறுதலித்தவர்கள். குறிப்பாக நம் கலாசார வாழ்க்கையை மறு பரிசீலனைக்கு உட்படுத்தியவர்கள். நம் கலாசார கேவலங்களையும் அவலங்களையும் மூடி மறைத்துப் புனிதம் பண்ணும் வேலையில் இயங்கியவர்களுக்கு நேர்மாறாகப் பொய்மைகளைச் சிறிதும் கூச்சமின்றி எடுத்துக்காட்டியவர்கள் இந்த யதார்த்தவாதிகள் என்கிறார்.

இந்த வேலையைப் பயமின்றிச் செய்த முதல் கலைஞர் புதுமைப்பித்தன், அதிலும் கலைப்பெறுமானத்தைக் காப்பாற்றிக் கொண்டே படைப்புலகில் நின்ற வெற்றிகரமான கலைஞர் இவர் என சு.ரா. வருணிக்கிறார்.

பாரதி குடும்பத்தவர்கள் ஆத்மீக மறுமலர்ச்சி சிந்தனையில் ஈடுபட்டவர்கள். புதுமைப்பித்தன் குடும்பத்தவர்கள், வாழ்வின் நடப்புகள் பற்றிய பரிசீலனைக்கு உலக அறிவையும், சுய சிந்தனையையும், பயன்படுத்திக் கொண்டவர்களாகக் குறிப்பிடுகின்றார். அதேபோது, இவர்கள் படைத்தளித்த உலகம் வேறொரு கலாசார பின்னணியைக் காட்டியதல்ல; அது, நம் கலாசார பின்னணியின் பரிணாம வளர்ச்சியே. அதுவும் ஏற்றுக்கொள்ளும்படியான யதார்த்த உலகம் இந்த புதுமைப்பித்தன் குடும்பத்தவர்களின் படைப்புலகமாகும்.

## பொருமைக்கள அணுகுமுறை:

சு.ரா. கூறும் படைப்பின் பொருண்மைக்களம் என்பது, மார்க்சியம், அமைப்பியல் போன்ற தத்துவ நிலைப்பாடுகளை எதிர் துருவத்தில் நிறுத்தி அதற்கு மாறாகவோ, உடன்பட்டோ வளர்த்துக்கொண்டது அல்ல; பெரும்பாலும் மூல சிருஷ்டியின் பண்புகளிலிருந்து உருவாக்கிக்கொண்ட பார்வையே ஆகும்.

அதாவது கலைஞர்கள், நிகழ்கால வாழ்க்கைச் சிக்கலைக் களைய தங்கள் அனுபவ பாதிப்புகளை மையமாகக்கொண்டே படைப்பின் பொருண்மைக்களத்தைச் செழுமைப்படுத்தியுள்ளார்கள் என்பது பற்றி ஆராய்வதாகும்.

இப்பார்வை, படைப்பாளிக்கும் படைப்பு ஆக்கத்திற்கும் உள்ள தொடர்பினைப் பற்றியதாகும். ஆயின் இதுவே முழுமையான திறனாய்வு அல்ல.

க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, தி.சு. நடராசன், சி. கனகசபாபதி போன்றோர் படைப்பு, சமூகத்திற்குத் தரும் எதிர்வினைகளைப் பற்றி ஆராய்வதைத் திறனாய்வாக ஏற்றுக் கொண்டிருக்கும் போது, சு.ரா., படைப்பாளிக்கும் படைப்புத் தொழிலுக்கும் உள்ள தொடர்பினை ஆராய்வதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இவ்விரு குழுவினரும் திறனாய்வின் ஒரு பகுதியை மட்டுமே திறனாய்வின் நோக்கமாக கொண்டிருக்கின்றனர். மேற்கண்ட திறனாய்வின் இரு முகங்களையும் ஒரு சேர இணைத்துக் கொண்டு படைப்பை ஆராய முற்படும் போதுதான் திறனாய்வு என்பது முழுமை பெற்றதாகும்.

படைப்பின் மையம் மனிதனே. இவனுடைய வாழ்க்கையை - வாழ்க்கைச் சிக்கலைக் - கலைப்படைப்பாக ஆக்குவதன் மூலம், அந்தச் சிக்கலைக் களைய மனிதன் முயல்கிறான். தன்னை மேம்படுத்த முயல்கிறான்.

சு.ரா. இத்தகைய பொருண்மைக்களத்தை மையமாகக் கொண்டே தமிழ்ச் சிறுகதையாளர்களைப் பாரதிக் குடும்பத்தவர்கள், புதுமைப்பித்தன் குடும்பத்தவர்கள் என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கின்றார்.

## பாரதிக் குடும்பத்தவர்கள்:

பாரதிக் குடும்பத்தில் இயங்கிய இலட்சியவாதிகள் தங்கள் பொருண்மைக்களத்தை ஆத்மீக சிந்தனையில் விரித்துக் கொண்டே இன்றையச் சிக்கலைக் களைவதற்கும், புதிய வாழ்க்கைக்கான பயணத்தை மேற்கொள்வதற்கும் அதனை ஒரு தளமாக ஏற்றுக்கொண்டவர்கள்.

இந்தியச் சிந்தனை வழிப்பட்ட பாரதிக் குடும்பத்தவர்கள் ஒருவருக்கு ஒருவர் தாக்கத்தினைப் பெற்றுக்கொண்டு இயங்கியவர்கள் என சு.ரா. கருதுகிறார்.

பாரதியின் வழி வந்தவராகக் கு.ப.ரா.வைக் காண்கிறார். இவ்வாறு காணும்போதே கு.ப.ரா.வின் தொடர் கண்ணியாக கு.-அழகிரிசாமி வருவதாகக் குறிப்பிடுகிறார். தி. ஜானகிராமனுக்கும் கு.ப.ரா.வுக்கும் உறவு இருப்பதாகக் கூறுகிறார். அதே சமயம், தி. ஜானகிராமனிலிருந்து கிளைவிடும் படைப்பாளிகளாக கி. ராஜநாராயணன், அசோகமித்திரன், வண்ணதாசன் முதலியோர் வருவதாகக் குறிப்பிடுகின்றார்.

## புதுமைப்பித்தன் குடும்பத்தவர்கள்:

வாழ்வின் பிறழ்வுகளைக் காலத்தின் முன்நிறுத்தி அதன் அவலங்களைத் தயவு தாட்சன்யமின்றி விமர்சனத்திற்கு உள்ளாக்கும் வேலையைப் படைப்புத் தொழிலாக மேற்கொண்ட மூலவர் புதுமைப்பித்தன். இவரின் வழியில் ஜி. நாகராஜன், ஜெயகாந்தன், சு.ரா., ஆ. மாதவன் போன்றோர் தொடர்ச்சியாக வருகிறார்கள்.

அதே போல, இவ்விரு குடும்பங்களிலும் சேராமல் பொதுப்படையாகச் சிலரின் பொருண்மைக்களம், வெவ்வேறு அனுபவ பாதிப்புகளுக்கு உள்ளாகிப் பார்வைக் கோணங்களை விரிவடையச் செய்திருக்கின்றதையும் சு.ரா. குறிப்பிட்டுள்ளார். க.நா.சு. கிருஷ்ஷன் நம்பி, வண்ணநிலவன், சா. கந்தசாமி, பிரபஞ்சன், நாஞ்சில்நாடன், பூமணி, அம்பை, சுரேஷ்குமார் இந்திரஜித், திலிப்குமார் போன்றோர்களைத் தனிப்பட்ட எக்குடும்பத்திலும் சேர்க்காமல் அவர்களுடைய படைப்பின் பொருண்மைக் களத்தை மட்டுமே ஆராய்ந்துள்ளார்.

முன்வந்தவர்களின் படைப்புகள் பின் வந்தவர்களின் படைப்புக்களில் தாக்கம் ஏற்படுத்துவது என்பது இயல்பு. அதே போது, சிறுகதைக்கான தளம், பிடிப்புடன் நிலைபெற்றபின் அதிலிருந்து புதியவர்கள் சுதந்திரமாக இயங்க வாய்ப்புக்கள் உண்டு.

சு.ரா. குறிப்பிடும் பாரதி, புதுமைப்பித்தன் குடும்பத்தவர்கள் இந்தத் தளத்தை அமைத்துத் தந்துள்ளார்கள். இன்று யாருடைய தோளிலும் சாய்ந்து கொண்டுதான் நிற்கவேண்டும்

என்ற நிர்ப்பந்தம் புதியவர்களுக்குத் தேவையில்லை என்றாகிவிட்டது. ஆகையால் பற்பல சிந்தனைப்போக்குகள் இவர்களின் இலக்கியத்திற்குள் ஊடுருவி விடுகின்றன. இதனால் ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்குள் இவர்களை அடக்காமல், பொதுப்படையாக அவர்களின் படைப்புலகப் பொருண்மைக் களத்தை மட்டுமே விமர்சனத்திற்கு உள்ளாக்கி இருக்கிறார் எனலாம்.

## ஆத்மீக சிந்தனையாளர்கள்:

அடிமை இந்தியாவில் சுரணையற்ற மக்களைத் தட்டி எழுப்புவதற்காகத் 'துறைகள் சார்ந்த வீச்சும்', 'வாழ்க்கையின் பன்முக அலகுகள்பால் கொண்ட கவனங்களும்' கொண்ட பாரதி, தான் வாழ்ந்த காலப் பின்னணியைக்கொண்டு மக்களின் அவலங்களைப் பிளந்துகாட்டவில்லை. மாறாக, 'மனிதனின் ஆத்மீகத்தை அதன் மீது பேதங்களும் சிறுமைகளும் படிய வைத்திருக்கும் சாம்பலை அகற்றி, ஊதி ஜுவாலை எழுப்பி புதிய மனிதனையும் அவன் மூலம் புதிய வாழ்க்கையையும் உருவாக்கும் ஆவேசத்தில் லயித்திருந்தவன் பாரதி. இந்த இலட்சியத்தின் அடிப்படை, மனிதனிடம் உறங்கிக் கிடக்கும் தேவ குணத்தின் மீதான நம்பிக்கை. மற்றொரு விதத்தில் சொன்னால் பரிணாமத்தின் மூலம் ஒரு மிருகம் தன்னில் மனிதனைக் கண்டெடுத்த யாத்திரையில் கொள்ளும் நம்பிக்கை'[3] என்று சு.ரா. பாரதி தன் படைப்புலகப் பொருண்மைக் களத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட முறையினை வெளியிடுகிறார்.

வாழ்வின் அவலங்களை எடுத்துக்காட்டிய புதிய வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்வதற்கான பாதையில் பாரதி தன் கலை ஆளுமையைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஆனால், அக்காலச் சூழலில் பாரதிக்கு முக்கியமாகப்பட்டது, இந்திய மக்களை ஒன்று திரட்டுவதற்குத் தேவையான கலாசாரமும், சமூக உறவுகளை உணர்ச்சியோடு வெளியிடுவதும் தான் என்று சு.ரா. நினைக்கிறார்.

'கு.ப.ரா.வின் படைப்புகளின் உள்ளடக்கம், அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் பாரதியின் காலடியில் அவர் அமர்ந்திருப்பது போன்ற சித்திரத்தை நமக்கு அளிக்கிறது'[4] என்கிறார்.

பாரதியின் இடைவெளிகளை நிரப்ப வந்த வலிமையான வாரிசாகக் கு.ப.ரா. வைக் காண்கிறார். மேலும் அவர், 'இலட்சியவாதம், வாழ்வைப் புனரமைத்தல், மதிப்பீடுகளின் சரிவுகளில் கவலை, மனித உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் தந்து பேதங்களின் வேலிகளைச் சாய்த்தல் போன்ற காந்தி யுகத்தின் முக்கிய கூறுகள் கு.ப.ரா.விடம் பூர்ணமாய் பிரதிபலிக்கின்றன'[5] என்கிறார்.

இவ்விதம் கு.ப.ரா.வின் படைப்புலகிற்கான பொருண்மைக் களத்தைச் செழுமைப்படுத்த வந்த பற்பல கூறுகளை சு.ரா. குறிப்பிட்டுக் காட்டுகின்றார். ஒட்டு மொத்தமாக அவரின் படைப்புலகிற்கான பொருண்மைக் களத்தைத் துல்லியப்படுத்தும் போது அது இரண்டு வகையான நிலையில் அமைந்திருப்பதாக அவர் காட்டுகின்றார்.

இது பற்றிக் கூறும் போது, அவர் 'ஆரம்பகாலச் சிறுகதைகள் சமூக தளத்திலும், பிற்காலச் சிறுகதைகள் ஆண், பெண் உறவு தளத்திலும் இயங்கின'[6] என்று குறிப்பிடுகிறார்.

## மன உலகப் படைப்பாளிகள்:

மனச் சலனங்களைப் படைப்பிற்குரிய பொருண்மைக் களமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களாக மௌனியையும், லா.ச.ராவையும் குறிப்பிடுகிறார். இவ்விருவருக்கும் இடையிலாக வித்தியாசத்தையும் மிகத் துல்லியமாகக் கணக்கிட்டுள்ளார்.

மௌனியின் பொருண்மைக்களம் முழுக்க முழுக்கப் புற உலகினைத் தவிர்த்து மன உலகிலிருந்து மட்டுமே பெற்றுக் கொள்ளப்படுகிறது. அந்த மன உலகம் ஆண், பெண் என்ற இரு உயிர் ராசிகளை முன்னிறுத்திப் படைக்கப்படுவதாக அவர் காண்கிறார்.

மௌனி பற்றி 'மௌனி இந்திய வேதாந்த விசாரத்தின் தளத்தில் நின்று செயற்படுகிறார். நமது பரிச்சய உலகத்தின் சாயல்கள், சாட்சிகள், இவற்றை மௌனியின் கலை உதறிவிடுகிறது. உயிர் ராசிகளின் இரு முகங்களான ஆணும் பெண்ணும் இரு ஆகர்ஷண கோளங்களாக இவர் கதைகளில் வெளிப்படுகின்றார். இனக் கவர்ச்சியை உடல் தளத்திலிருந்து மேலே எடுத்துச் சென்ற பின்னரும், வேதாந்த இசைத் தளங்களோடு அவை இணைக்கப்பட்ட பின்னரும், ஆகர்ஷண சக்திகள் கூடி முயங்க முடியாமற் போவதில் கொள்ளும் வியாகூலமும் துக்கமும் இவரது சிறுகதைகள் நெடுகிலும் வியாபித்துக் கிடக்கின்றன'[7] என்கிறார் சு.ரா.

இதற்குச் சற்று மாறாக, லா.ச.ரா.வின் படைப்புகள் மன உணர்ச்சிகளை மையமிட்டுச் சுழன்றாலும் புற உலகின் தன்மைகள் படைப்பின் பொருண்மைக்களத்திற்குத் தேவையான அளவு கிரகித்துக்கொண்டிருப்பதை மிகத் துல்லியமாகக் கணக்கிட்டுள்ளார்.

அதாவது மௌனியின் படைப்புலகம் முழுக்க முழுக்க மன உலகினைத் தேர்ந்து கொண்டிருக்கும் போது லா.ச.ரா.வின் படைப்புகள் மன உலகிற்குத் தேவையான புறத்தன்மைகளை உறிஞ்சிக்கொண்டிருக்கின்றன என்பதாகும்.

சு.ரா, லா.ச.ரா.வைப் பற்றி 'புற உலகம், ராமாமிருதத்தின் முன்னால் அவருடைய கலைத் தேவைக்கு ஏற்பச் சுருங்கி, தன் பரப்பை, பன்முகங்களைச் சுவடு தெரியாமல் கழித்துக் கொள்கிறது'[8] என்கிறார்.

லா.ச.ரா.வின் கதைகளில் வரும் சிக்கல் தன்மையை 'இவருடைய கதைகளில் மரபு, பிச்சமூர்த்தியைப் போல் விடுதலைப் பெற்று மனிதத் தன்மையில் சாராம்சத்தை எட்டாமல் வைதிய வாழ்வின் சாயல்களில் அழுந்திக் கிடக்கிறது. நெருக்கடிகளை உருவாக்கி தீவிர அனுபவங்களைத் தர வல்லவர் என்றாலும், இவ்வனுபவங்களின் அர்த்தம் நமக்குப் புரிவதில்லை நரம்புப் பதட்டங்கள் கொண்ட உணர்ச்சிப் பிழம்பான இவரது கதாபாத்திரங்கள் கூட குடும்பத்துக்குள் முட்டி மோதிக் கொண்டு கிடக்கிறார்களே தவிர ஏதும் தளைகளை அறுப்பதில்லை'[9] என்பதாக சு.ரா. காட்டுகின்றார்.

ஆக, லா.ச.ரா. காலமாற்றத்திற்கு ஏற்ப மனித மன இயல்புகளும் மாற்றம் கொள்ளும் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. லா.ச.ரா. முன் தலைமுறையினரிடம் காணப்

பட்ட கலாசார கூறுபாடுகளையும் இவருடைய காலங்களில் இன்றும் தொடர்ந்து வரும் மரபுவழிப்பட்ட சில குடும்ப உற வுச் சிக்கல்களையும் படைப்புப் பொருண்மைக்கு எடுத்துக் கொள்கிறார். இதனால் இளைய தலைமுறையினரிடம் ஏற்பட் டுள்ள அன்னியத் தன்மை, தனி மனித மேன்மைக்கான தேடல், அறிவியல் யுகத்தினால் ஏற்பட்டுள்ள மன இயல்பு மாற்றம், நடை உடை பாவனைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் இவற்றை இவர் நிராகரித்து விடுகின்ற போது காலம் இவரை நிராகரிக்கத் தயங்குவதில்லை. எனவே காலப்பிரக்ஞையை படைப்புலகத்திற்கு முக்கியக் கூறாக, இவர் தம் படைப்புக ளில் பயன்படுத்தத் தயங்குகிறபோது அது படைப்பின் சிக்க லாகி விடுகிறது.

மனித நாகரிகம் ஒரு எல்லைக்கு வந்து நின்றுவிடுவதில்லை. அவர்களின் வாழ்க்கை மாறுபடுகிறபோது, மாற்றத்திற்கான காரணம், அந்த மாற்றத்தில் தேங்கிக் கிடக்கும் மோகம், அல் லது மேடேறி நிற்கும் ஆரோக்கியமான மன வளர்ச்சி இவற்றி னுள் கலைஞன் தன் தேடலை முதன்மையாகக்கொண்டு செயற்பட வேண்டும் என்று சு.ரா. கருதுகிறார் எனலாம். எனவே நவீன வாழ்க்கையில் ஏற்பட்டு வரும் பிரச்சினைக ளைக் கூர்மையாகக் கவனிக்கிற ஒரு பார்வை மரபை லா.ச.ரா. ஏற்படுத்திக்கொண்டிருக்க வேண்டும் என்கிறார் என லாம்.

## முன்திட்ட படைப்பாளிகள்:

சில காரிய நிறைவேற்றத்திற்காக ரகுநாதன், வ.ரா. கல்கி, ராஜாஜி, மு. தளையசிங்கம் போன்றோர் முன்பே திட்டமிடப் பட்ட கொள்கைகளைப் படைப்பிற்கான பொருண்மைக் கள மாகத் தேர்ந்துகொண்டு இலக்கியக் கலவையில் ஈடுபட்டவர் கள் என்று சு.ரா.கருதுகிறார்.

இவர்களின் குரல் உயர்த்தும் தன்மைகளை அவர் விமர்சிப்ப திலிருந்து இதனைத் தொடர்புபடுத்தலாம்.

நம் கலாசார வாழ்வின் மூலம் பெற்றுக்கொண்ட சுய அனுப வப் பாதிப்புகளைப் படைப்புச் சக்தியாகப் பயன்படுத்தாமல் தத்துவத்தின் முகங்களைப் போர்த்திக்கொண்டு படைப்புத் தொழிலிற்குரிய பொருண்மைக்களமாக தேர்ந்தெடுத்தவர் ரகுநாதன் என்கிறார். இப்படிக் காரிய நிறைவேற்றத்திற்காக படைப்பை உருவாக்கும்போது அது நம் வாழ்க்கைக்குச் செழுமை ஊட்டாமல் பிரச்சாரத்திற்குச் செய்து கொண்ட ஜோடனையாகப் போய்விடுகிறது என்கிறார்.

மேலும் இவரைப் பற்றி '... இங்கு கதைப் பொருள்கள் எழுத் தாளனின் வாழ்க்கையைச் சார்ந்து அமையாமல், கதைப் பொருளில் வலியுறுத்தப்பட வேண்டிய பக்கம் கோட்பாடுக ளின் அடிப்படையில் முன் தீர்மானத்துக்கு ஆளாகி, அந்தப் பக்கத்தை அழுத்தும் வகையில் ஜோடனை செய்யப்படுகி றது'[10] என்கிறார்.

கல்கி, இரு வேறு முன் திட்டங்களில் பொருண்மைக் களத் தைத் தேர்ந்தெடுத்திருப்பதாக விமர்சிக்கிறார். இவரின் முற்ப குதிக் கதைகள் காந்தியுகத்திற்குரிய கொள்கைகளைப் பரப் புவதிலும், பிற்பகுதி வாசகனுக்குத் தீனி தயாரிக்கும் வேலை யிலும் தயாரித்துக் கொண்டன என்கிறார்.

வ.ரா.வின் புனைகதைகளில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டி ருப்பதாக சு.ரா. சுட்டிக் காட்டுகிறார். பாரதி, காந்தி இவர்க ளின் கருத்துக்கள் புனைகதை வடிவில் பிரச்சாரமாகியிருப்ப தைக் கூறுகிறார்.

நவீன வாழ்க்கையின் சிக்கல்களைக் களைந்து, ஆரோக்கிய மான வாழ்வை மேற்கொள்ள அரசியல், மதம், கலாசாரம் போன்றவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு கதைகளுக் கான பொருண்மைக்களத்தை அமைத்துக் கொண்டவராக மு. தளையசிங்கத்தை அடையாளப்படுத்துகிறார்.

இவரைப் பற்றி '.... வாழ்வின் சகல பரிமாணங்களையும் சமூ கம், பொருளாதாரம், கலாசாரம், பாலுணர்ச்சி போன்ற பல வற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மனித உறவில் ஒரு விவேகமான சமநிலையை இவர் உருவாக்க முயல்கிறார். இவ்வாறு விஞ்ஞான ரீதியான சோதனைகளுக்கு ஆட்படும் அனுபவங்கள், வாழ்வின் உணர்வு பூர்வமான தளங்களில் இறங்க மறுத்துவிடுகின்றன....'[11] என்கிறார்.

ராஜாஜி பற்றி 'தனது முற்போக்கான சிந்தனைகளுக்குச் சிறு கதையை ஒரு வாகனம் ஆக்கியதில் இவரைத்தான் முதல் முற்போக்குச் சிறுகதை எழுத்தாளர் என்று சொல்லவேண் டும்'[12] என்கிறார்.

சுய அனுபவ பாதிப்புகளிலிருந்து படைப்புகளை உருவாக் காமல், முன்பே கருத்துக்களை 'இவ்விதம்' கொடுக்க வேண் டும் என்று தீர்மானித்துக்கொண்டு பொருண்மைக் களத்தை அமைத்துக் கொண்டவர்களாக சு.ரா. மேற்கண்டவர்களைக் குறிப்பிடுகிறார்.

## அடிக்குறிப்புகள்:

- 1. சுந்தர ராமசாமி, 'கலைகள், கதைகள், சிறுகதைகள்', கொல் லிப்பாவை, இதழ்: 16, ஏப்ரல் 1986, ப.5.
- 2. சுந்தர ராமசாமி, 'தமிழ்ச் சமூகம் சாதனைகள் சாத்தியமா ?' புதுயுகம், இதழ்:2, மார்ச் 1987, ப.46.
- 3. சுந்தர ராமசாமி, 'க.நா.சு.: நட்பும் மதிப்பும்' காலச்சுவடு இதழ்: 5, மார்ச் 1989, ப.57.
- 4. மேலது, ப.58.
- 5. சுந்தர ராமசாமி, 'கலைகள், கதைகள், சிறுகதைகள்', கொல்லிப் பாவை, இதழ்: 16, ஏப்ரல் 1986, ப.5.
- 6. மேலது, ப.6.
- 7. மேலது, ப.6.
- 8. சுந்தர ராமசாமி, 'புதுமைப்பித்தன் கதைகளில் காலத்தின் கலை வண்ணம்'. சுந்தர ராமசாமி கட்டுரைகள், க்ரியா, சென்னை 1984, ப.131.
- 9. சுந்தர ராமசாமி, 'கலைகள், கதைகள், சிறுகதைகள்', கொல் லிப்பாவை, இதழ்.16, ஏப்ரல் 1986, ப.5.
- 10. மேலது, ப.7.
- 11. மேலது, ப.10.
- 12. மேலது, ப.7.

(தொடரும்...)



venugopal@thaiveedu.com




'ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்' என்னும் தலைப்பு ஈழத் தமிழரில் பலருக்கு வியப்பானதும் இன்னும் பலருக்கு வெறுப்பானதுமான விடயம் ஆகும். ஆனால், அது தான் உண்மை. எனது, இந்த ஆய்வின் நோக்கம், சிலருக்குத் தெரிந்த, சிலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, நாம் ஏற்றுக் கொள்ளவேண்டிய 'எமது மூதாதையர் பௌத்த மதத்தவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள்' என்ற உண்மையைச் சான்றுகளுடன் விளக்குவதேயாகும்.

### ஆய்வின் நோக்கம்:

'எமது மூதாதையர் பௌத்த மதத்தவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள்' என்ற உண்மையைச் சான்றுகளுடன் விளக்குவது.

### ஆய்வுச் சிக்கல்:

தமிழர், சிங்களவர் ஆகிய, எதிரும் புதிருமாக இன்று விளங்கும் இரு இனக் குழுமங்கள், ஒரு காலத்தில் 'பௌத்தம்' என்னும் ஒரு மதக் கோட்பாட்டைப் பின்பற்றியவர்களாக வாழ்ந்திருந்தார்கள் என்பதே மறக்கப்பட்ட நிலையில், வரலாற்று ஆவணங்களும் அகழாய்வுச் செய்திகளும் இன்று அந்த உண்மையை உலகுக்கு வெளிக்கொணர்ந்துள்ளது. சிங்களவர்களை 'பௌத்தம்' என்ற பெயரால் இணைத்து, தமிழர் என்னும் இனக் குழுமத்திற்கு எதிரான வன்மம் வளர்க்கப்பட்ட நிலையில், இக் கருத்தை உள்வாங்குவதோ, உள்வாங்க வைப்பதோ சிக்கல்.

### கருதுகோள் :

தமிழர், பண்டைக் காலத்தில் பௌத்தர்களாக இலங்கையில் வாழ்ந்திருக்கிறார்கள்' என்பது கருதுகோள்.

### சான்றுகள்:

- வரலாற்றாய்வு நூல்கள் - பேரா. சிவ. பத்மநாதனின், இலங்கைத் தமிழர் வரலாறு. பேரா. ப. புஷ்பரட்ணத்தின் வரலாறு தொடர்பான நூல்கள், வேறு வரலாற்று ஆய்வுகள்.
- இலக்கியங்கள் - மணிமேகலை, பெரியபுராணம் முதலியவை
- தொல்லியல் ஆய்வு அறிக்கைகள்.

### ஆய்வியல் நெறி:

- சமூகவியல்,
- வரலாற்றியல்,
- தொல்லியல்

### வரலாற்றுப் பின்னணி:

தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்பவை மொழிகள். மனிதர் தமது எண்ணக் கருத்துக்களை ஒருவருடன் ஒருவர் பகிர்ந்து கொள்வதற்காகப் பயன்படுத்தும் கருவி மொழியாகும். சைவம், பௌத்தம், சமணம், ஆசீவகம், கிறித்தவம், இஸ்லாம் என்பவை மதங்கள்/ சமயங்கள்.

உலக வரலாற்றில், பொ.ஆ.மு.6-ம் நூற்றாண்டு தத்துவ எழுச்சிக் காலமாக விளங்கியது. அக்காலத்தில் தான் வட இந்தியாவில், வேதங்களை மறுத்தும், வேள்விகளை எதிர்த்தும், வைதீகக் கொள்கைகளுக்கு மாறாகவும் சைனம், ஆசீவகம், பௌத்தம் முதலிய பிரிவுகள் தத்துவப் போராட்டம் செய்தன. தொடக்க காலத்தில் தத்துவப் போராட்டமாகத் தொடங்கிய இந்த இயக்கங்கள் நாளாவட்டத்தில் மதங்களாக மாற்றம் பெற்றன. மகாவீரர், ஜைன மதத்தையும், மற்கலிகோசாலர் ஆசீவக மதத்தையும், கௌதம புத்தர் பௌத்த மதத்தையும் நிறுவினர்.

எமது ஆய்வின் நோக்கத்திற்காக பௌத்த மதம் பற்றிய தகவல்களை மட்டும் இந்த ஆய்வு எடுத்து வருகிறது. கௌதம புத்தர், வேதங்களை மறுத்தும், வேள்விகளை எதிர்த்தும், வைதீகக் கொள்கைகளுக்கு எதிராக தத்துவ அடிப்படையில் போராட்டம் நடாத்தினார். உலகை வெறுத்து, தவம் செய்து, ஞானம் பெற்று, 'புத்தர்' என்று அழைக்கப்பட்டார். புத்தரது போதனைகளின் அடிப்படையில் ஏறக்குறைய பொ.ஆ.மு. 6-ஆம் நூற்றாண்டளவில், பௌத்தம் ஒரு தத்துவ இயக்கமாக முன்னெடுக்கப்பட்டது. பின்னர், அது ஒரு மதமாகியது.

அசோகச் சக்கரவர்த்தி காலத்தில், பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில், பௌத்தம், வடக்கே இமயத்துக்கு அப்பாலும் தெற்கே தமிழகத்தைக் கடந்து ஈழத்திலும் இன்னும் பல தெற்காசிய நாடுகளிலும் பரப்பப்பட்டது. தெற்காசிய நிலப் பரப்பு முழுமையிலும் 'பௌத்தம்' என்னும் பெயரால் பின்பற்றப்பட்ட மதமாகியது. ஆனால், பின் ஒரு காலத்தில், பௌத்தம் வாழ்ந்த சுவடே தெரியாமல் மறைந்து போகும்படியான நிலையை இந்தியாவிலேயே கண்டிருக்கிறோம்.

மௌரியப் பேரரசன் அசோகன், அவன் காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தின் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பகுதியைத் தன் ஆளுகையின் கீழ் கொண்டு ஆண்டவன். இந்தியத் துணைக்கண்டத்தின் மேற்கே தற்போதய ஆப்கானிஸ்-தான் முதல் கிழக்கே தற்போதைய வங்காளதேசம் வரையிலும் தெற்கே கலிங்கம் வரையிலும் இவனது அதிகாரத்தின் கீழ் இருந்தது. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கலிங்கத்துப் போரில் ஏற்பட்ட பேரழிவு அசோகனை பௌத்தனாக மாற்றியது என்னும் வரலாற்றை நாமெல்லாம் சிறுவயது முதலே கற்றிருக்கிறோம். இவரது ஆட்சிக் காலம் பொ.ஆ.மு. 268-232 வரை என்று அறியப்படுகிறது.

அசோகன் பற்றிய தகவல்கள், பெரும்பாலும், அவனது ஆணைகளாக நாடெங்கிலும் நிறுவப்பட்டிருந்த தூண் கல்வெட்டுக்கள், குகைக் கல்வெட்டுக்கள், பாறைக் கல்வெட்டுக்கள் மூலமாகவும் பிற்காலத்துப் புராணக் கதைகள் வாயிலாகவும் அறியப்படுகின்றன. அசோகன் கல்வெட்டுக்கள் அவனது 8-ம் ஆட்சி ஆண்டு முதலாக 87-ம் ஆண்டு வரை பொறிக்கப்பட்டவை. அசோகனது கல்வெட்டுக்கள், இந்தியாவில் தமிழ் நாடு நீங்கலாக அனைத்துப் பகுதிகளிலும் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுக்களில், பெரும்பாலும், அவன் பெயர் 'தேவநம்பியஸ' என்னும் அடைமொழியுடன் சேர்த்துக் காணப்படுகிறது. இவன் கல்வெட்டுக்களில், அராமிக் (தசசீலம்), கிரேக்கம் (சகர்-இ-குண), கரோஷ்டி (சபாஷ்கார்கி), பிராமி போன்ற வரிவடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பெரும்பாறைக் கல்வெட்டுக்களில் கூறப்படும் செய்திகள் பெரும்பாலும் சீவகாருணிய அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. அவை, உயிர்க் கொலை தவிர்த்தல், மருத்துவ சிகிச்சை வழங்கல், சிகிச்சைக்குரிய மூலிகைகள், பழமரங்கள் முதலியவை நாட்டல், மனிதருக்கும் பசுக்களுக்கும் நீர் நிலைகள் நிறுவுதல், நிழல் தரும் மரங்கள் நாட்டுதல் முதலிய பொதுத் தொண்டு பற்றியும் நன்னெறிகளைப் போதித்தல், சமயப்பொறை முதலியவை பற்றிப் பேசப்படுகின்றன.

அசோகனது கல்வெட்டுக்கள் அவனது 8-ம் ஆட்சி ஆண்டு முதலாக 87-ம் ஆண்டு வரை பொறிக்கப்பட்டவை. இக்கல்வெட்டுக்கள், தமிழ் நாடு தவிர்ந்த இந்தியா முழுவதும் கிடைக்கின்றன. இவை அசோக மன்னனது ஆணைகளைத் தாங்கி வருவதால் 'அசோகன் ஆணைகள்' என்று அழைக்கப்படுகின்றன. இக் கல்வெட்டுக்கள், பாறைக் கல்வெட்டுக்கள், தூண் கல்வெட்டுக்கள், குகைக் கல்வெட்டுக்கள் என அவை அமைந்திருக்கும் இடத்தைக் கொண்டு மூன்றாகப் பிரிக்கப்படும்.

அசோகரது கிர்னார் (Girnar) இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு அசோகரது கிர்னார் (Girnar)இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு, தமிழ் நாட்டுடனும் ஈழத்துடனும் தொடர்புபடுத்தி, அதிகம் பேசப்படும், அதி முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுக் கல்வெட்டாகும். இக் கல்வெட்டு, குஜராத் மாநிலம், கத்தியவாரில் கிடைக்கப்பெற்றது. இது, அசோக மன்னனால், பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில், அசோகன் பிராமியில் எழுதப்பட்டது. இக்கல்வெட்டு தரும் செய்திகள், பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில் தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்கள் தொடர்பான அரிய செய்திகளைத் தாங்கி நிற்பதுடன் ஈழம் பற்றியும் கூறுகிறது. இக்கல்வெட்டுக் குறிக்கும் தமிழ் நாடு, ஈழம் தொடர்பான தகவல்கள் தாங்கிவரும் கல்வெட்டுப் பகுதி

- ஸர்வத் விஜிதே(ம்)ஹி தேவாநாம்பிர்யஸ பிர்யதர்ஸினோ ராஞோ
- ஏவமபி ப்ர சந்தேஸீ யதா சோடா, பாடா ஸதியபுதோ கேதளபுதோ ஆ தம்ப
- பர்ணி அன்தியோகோ யோன ராஜா யே வாபி அன்தியகஸ் ஸாமிநோ

இக் கல்வெட்டின் இரண்டாம் மூன்றாம் அடிகள், 'தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகள் மட்டுமன்றி அண்டை நாடுகளான சோழர் (சோடா), பாண்டியர்(பாண்டா), சத்தியபுத்திரர் (ஸதியபுதோ), சேரர் (கேதளபுதோ), இலங்கை (தம்பபர்ணி)'... என்று தமிழ் நாட்டின் சுதந்திர அரசுகளாக இருந்த அரசுகளின் வம்சங்களுடன் இலங்கை முதலிய நாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டு, அசோகர் தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டுமன்றி அண்டை நாடுகளான சேர, சோழ, பாண்டிய, ஸத்தியபுத்திரர், கேரளபுத்திரர், தம்பபர்ணி (ஈழம்), யோன அரசரான அன்டியோகஸ் (கிரேக்கம்) மற்றும் அவருடைய அண்டை நாடுகளுக்கும் இருவகைச் சிகிச்சைகள் அளிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதை உறுதி செய்கிறது. இக்கல்வெட்டு மூலம் அறியப்படுவது

- அசோகன் தனது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளைக் கடந்து, பௌத்த மதக் கொள்கைகளைப் பரப்புவதில் ஈடுபட்டிருந்தான்.
- அந்த வரிசையில் தமிழ் நாடும் ஈழமும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இக்கல்வெட்டு மூலம் நிறுவப்படுவதாவது,

- *பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில், தம்பபர்ணி என்று வழங்கப்பட்ட ஈழத்திற்கும் பௌத்தம் பரப்பும் முயற்சி நடைபெற்றிருக்கிறது.*

இதனையே வரலாறு, மகிந்தனும் சங்கமித்தையும் வெள்ளரசுக் கிளையுடன் இலங்கை வந்து பௌத்த மதத்தைத் தாபித்தார்கள் என்று கூறுகிறது. எனவே பௌத்தம் பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில் கொண்டுவரப்பட்டது என்பது உறுதியாகிறது.



தொடரும் ...

selvanayaki.s@thaiveedu.com



# கனவாய் முடிந்தது கதையல்ல, வரலாறு

– கிருங்கை சேதுபதி

வரலாறென்பது தொடர் இயக்கம். எனினும் அது முழுமையாக அறிந்துகொள்ள முடியாத அளவிற்குப் பல்வேறு கண்ணிகளாக இருக்கின்றன. கிடைக்கும் தரவுகளைத் திரட்டிக் கொண்டு, வேண்டும் இடங்களில் இணைத்துப் பார்க்கிறபோது, விடுபாடுகளின் இடங்கள் பூர்த்தியாகின்றன. அப்போது ஓரளவிற்கு முழுமை கிட்டுகிறது.

இந்த உண்மை, பாரதி தொடர்பான தரவுகளைத் திரட்டுகிறபோது கிடைத்த அனுபவமாக இருக்கிறது. குறிப்பாக, மகான் குள்ளச்சாமி - மகாகவி பாரதி தொடர்பான தரவுகளின் அடிப்படையில் விபரிக்கப்பட்ட கட்டுரைகளைத் தொடர்ந்து இப்போது கிடைத்திருக்கும் ஒரு புதிய தகவல் பலராலும் அறியப்படாதது என்றே நினைக்கிறேன். அதிலும் விடுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. என்றாலும் இவ்விருவர் பற்றிய தேடுதலுக்கு மேலும் ஒரு வரவாக அமைந்திருக்கின்றது.

## கனவாய் முடிந்த கதை:

மனிதனாய்ப் பிறந்து, மகானாக உயர்ந்த குள்ளச்சாமி முதலான சித்தர்களின் தொடர்பால் மகாகவி பாரதி தன்னையும் ஒரு சித்தனாகப் பிரகடனப்படுத்திக் கொள்ள நேர்ந்தது புதுவையில்.

அங்கிருந்து வெளியேறிய பிறகு, விழுப்புரம், சிதம்பரம், கடலூர், சென்னை முதலிய பகுதிகளுக்குச் சென்று பிரசங்கம் செய்த பாரதி திரும்பப் புதுச்சேரிக்குள் ஏன் புகவே இல்லை என்பது ஒரு புதிர். ஆனால், புதுச்சேரியிலிருந்து சென்னைக்குக் குள்ளச்சாமியை அழைத்து வந்து இருத்தி, உரையாடிப் பெற்ற தகவல்களை முந்தைய பதிவுகளில் பார்த்தோம். அதுபோல், குள்ளச்சாமியின் தோற்றம், குணம், செயற்பாடு ஆகியன குறித்துப் பலரும் கூறிய தகவல்களை அறிந்தோம். அவரைப் புதுச்சேரியில் எங்கே, எப்போது பார்க்கலாம் என்று பார்த்தவர்கள் எழுதிய குறிப்புகளையும் கண்டோம்.

இனி, இவ்விருவர் வரலாற்றிலும் தொடர்புடைய, உடன் வாழ்ந்த ஒருவரின் பதிவினைப் பார்க்கலாம். அதற்கு முன்னால் சில வார்த்தைகள்.

'பார் மீது நான் சாகாது இருப்பேன் கண்டீர்' என்று கவிதை பாடியும், 'மனிதனுக்கு மரணமில்லை' என்று பேசியும் வந்த பாரதியின் வாழ்வு, 39 ஆண்டுகளுக்குள் சென்னையில் முடிந்துவிட்டது. தகவல் தெரிந்த பின்னர், இரங்கல் தெரிவித்தோர், பாரதி நினைவாகக் கூட்டங்கள் நடத்தியவர்கள் பற்றியெல்லாம் சில பதிவுகள் வந்திருக்கின்றன. ஆனால், பாரதிதாசன் அந்தக் கட்டத்தில் எங்கே இருந்தார்? பாரதி மறைவுச் செய்தி எப்படிக் கிடைத்தது? தகவல் கிடைத்தபிறகு, அவரது நிலைப்பாடு எப்படி இருந்தது? என்பது குறித்த தகவல்கள் தெரியவில்லை. தேடுங்கள் என்று கட்டளையிட்ட அறிஞர் சிலம்பொலி செல்லப்பனாரும் அமரராகிவிட்டார்.

அதே புதுச்சேரியில் இருந்த பாரதியின் சீடர் ரா. கனகலிங்கம் பாரதி மறைந்த செய்தி அறிந்த பிறகான தன் உணர்வுகளைத், தரவுகளை 'என் குருநாதர் பாரதி' நூலில் எழுதியிருக்கிறார். அதுபோல் பாரதிதாசனும் எங்கேனும் பதிவிட்டிருப்பார். தேடினால் கண்டடையலாம்.

அந்த வரிசையில், பாரதியின் குருநாதராக விளங்கிய குள்ளச்சாமியும் இருக்கிறார். பாரதி மறைவு குறித்த செய்தி அவருக்கு எப்போது சொல்லப்பட்டது என்று தெரியாது. ஆனால், எப்படிச் சொல்லப்பட்டது, அதனை எதிர்கொண்ட அவரது நிலைப்பாடு என்ன? அப்போது என்ன கூறினார் என்பது பற்றிய தகவல்கள் இப்போது நமக்குத் தெரியவருகின்றன.

அதன் விரிவாக்கமே இந்தக் கட்டுரை.

'என் பெயர் வேணு முதலி; நானும் உங்களுக்குத் தெரியாதவனல்ல. காளிதாஸருடைய சிநேகிதர்களில் நானொருவன். குள்ளச்சாமி, காளிதாஸன், நான் ஆகிய மூவரும் நண்பர்கள்.'

தன்னை இப்படி அறிமுகப்படுத்திக் கொள்ளும் வேணுமுதலி, 'காளிதாஸனின்' நண்பர். அதாவது, சுதேசமித்திரனில் காளிதாஸன் எனும் பெயரில் பாரதி எழுதுகிற கதைகளில், கட்டுரைகளில் இடம்பெறுகிற அன்பர் வேணுமுதலி. (இது

இயற்பெயரோ, பாரதி இட்ட பெயரோ? அது குறித்து வேறொரு இடத்தில் பார்க்கலாம்.)

இவர் தன்னைப் பற்றியும், தன் நண்பர் பாரதி பற்றியும், குள்ளச்சாமி குறித்தும் கூறிய தகவல்களை இனிப் பார்க்கலாம்.

## வேணுமுதலி என்கிற நான்...

'சுதேசமித்திரன் படிக்கும் தமிழர்களுக்கு, குள்ளச்சாமியார் ஒரு புதுப்பேர்வழியல்ல என்று நினைக்கிறேன். அநேகமுறை குள்ளச்சாமியாரைப் பற்றிய நீண்ட வியாசங்களை காலஞ் சென்ற காளிதாஸன் 'மித்திரனி'ல் எழுதியிருக்கிறார். கொஞ்ச நாளாக நீங்கள் அவரை மறந்திருக்கலாம். அவர் பெரிய ஞானி; சகலத்தையும் துறந்தவர்; பற்றற்றவர்; குளிர் வெயில் அவருக்கு சகஜம். குள்ளச்சாமியார் ஜாதி வித்தியாசம் பாராதவர்; பொழுது விடிந்து பொழுது போகும்வரை தெரு சுற்றுகிற வேலைதான்; எப்பொழுது பார்த்தாலும் தெருக் குழந்தைகளுடன் விளையாட்டு; சிற்சில சமயம் தவிர, முப்பது நாழிகையும் மௌனம் பூண்டவர்; அவருக்கு மௌனச் சாமியார் என்றொரு பெயரும் உண்டு. இவ்வளவும் உங்களுக்குத் தெரிந்த விஷயம்.'

இனி அவர் தெரிவிக்கப் போவது தெரியாத விஷயம். மகாகவி பாரதி மறைந்த பிறகு அவர் கூறும் விஷயம், தெரிந்து கொள்ள வேண்டியதாகவும் இருக்கிறது.

'காளிதாஸன் சென்ற பிறகு என் பாடு திண்டாட்டமாய்ப் போச்சு. எனக்குப் பேச்சுத் துணை யாரும் கிடையாது. அரட்டையடிக்க, குள்ளச்சாமியார் பிரயோசனமில்லை. கூட இருந்து தியானம் செய்ய, குள்ளச்சாமியார் முதல் தரம். நானும் குள்ளச்சாமியாரும் வேதபுரத்து ஆசாமிகள். இதுவும் உங்களுக்குத் தெரிந்ததே.

ஒருநாள் காலஞ்சென்ற காளிதாஸரைப் பற்றி நினைந்து நினைந்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். என் வீடெல்லாம் என்னமோ ஒருமாதிரி வெறிச்சு இருந்தது. அந்தி வெய்யில் எங்கள் வீட்டு முற்றத்தில் மஞ்ச மஞ்சேலென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. என்னுடைய மனைவியைக் கூப்பிட்டு, கெடியாரத்தில் மணி என்ன ஆயிற்றென்று பார்க்கச் சொன்னேன். 'சூரியன் மலைவாயிலே விழப்போகிறான். இன்னும் என்ன தூக்கம்? எழுந்திருங்கள். கடற்கரைக்குப் போகவில்லையா?' என்றாள். நான் படுக்கையை விட்டெழுந்து, முகங் கழுவிக் கொண்டு, காப்பி குடித்து தாம்பூலம் தரித்து அங்கியிட்டு, தலைப்பாகை தரித்துக் கடற்கரைப் பக்கமாக நடந்தேன். என்னுடைய மனைவியும் தன்னுடைய சிநேகிதர் வீட்டிற்குத் தெருக்கதவைப் பூட்டிக் கொண்டு சென்றனள்.

வேதபுரத்தின் கடற்கரை அருகாமையில் ஒரு பெரிய மாந்தோப்பு உண்டு. அந்தத் தோப்பில், அந்தி வேளையில் அநேக பறவைகள் அண்டுவது இன்றும் வழக்கம். குள்ளச்சாமியாரை சாயந்திர வேளையில் எங்கும் காணாமற்போனால் அந்த மாந்தோப்பில் கண்டுவிடலாம். குள்ளச்சாமியாரைக் கண்டு காளிதாஸன் பரகதியடைந்த விஷயத்தை அவருக்குத் தெரிவிக்கலாமென்று சென்றேன். நான் சொன்ன மாதிரியே குள்ளச்சாமியார் மாந்தோப்பில் இருந்தார். அவர் முன்னின்று அவரை நமஸ்கரித்தேன். என் உச்சி மண்டையில் தனது கையை வைத்து, 'தீர்க்காயுசு' என்றார். பிறகு கடலை நோக்கி நின்றார்.

அவர் முதுகைத் தட்டி, 'சாமியாரே, ஒரு துக்கமான விஷயம்' என்றேன். அவர் 'என்ன?' என்றார்.

'மூன்று தினத்திற்கு முன் காளிதாஸன் பரப்பிராப்தியாய்விட்டார் என்று எனக்கு அவர் மனைவியிடமிருந்து காகிதமொன்று வந்தது' என்றேன்.

'அடடா, தமிழ்நாட்டிற்கு ஒரு பெரும் நஷ்டம்' என்று சொல்லி, கீழே அசைவற்று விழுந்தார்.

இதற்குள் மணியும் ஆறடித்துவிட்டது. அந்த நிசப்த வேளையில் வேதபுரத்தின் மணிக்கூண்டு, 'டாம் டாம்' என்று ஆறடிக்கும் சப்தம் கணீரென்று என் காதில் விழுந்துகொண்டிருந்தது. மேற்கே செவ்வானம். கீழ்த்திசையில் மங்கிய இருள். மாந்தோப்பில் பட்சிகள் கலகலவென்று ஓலமிடுகின்றன. பிரகிருதி தேவியானவள் நித்திரை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பது போலிருந்தது. அவ்வேளையில், குள்ளச்சாமியார் மயக்கந் தெளிந்து எழுந்து உட்கார்ந்தார். நான் அவரெதிரில் போய் உட்கார்ந்தேன். எங்களருகாமையில் இன்னொரு மனிதன் வந்து குள்ளச்சாமியை நமஸ்கரித்துவிட்டு, கீழே உட்கார்ந்தான். வந்தவன் பாடுகிறான்.

'பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போயினவே...'

என்ற பட்டணத்துப் பிள்ளை பாடலை உரத்தக் குரலில் இன்னொரு முறை பாடினான். மெல் இருளின் மறைந்து கொண்டிருக்கும் பிரகிருதி தேவியைச் சித்திரித்தாற்போல இருந்தது, அந்தப் பாட்டு. புதிதாய் வந்தவனுடைய சாரீரம் வெகு ரம்யமாய் இருந்தது. குள்ளச்சாமியார் புதிய ஆசாமியை நோக்கி, 'உன் கதையை வேணுமுதலிக்குச் சவிஸ்தாரமாய்ச் சொல்' என்றார்.

ஜகந்நாதன்: 'ஸ்வாமிகளே, எங்கதை ரொம்ப நீளமாச்சே?'

குள்ளச்சாமியார்: 'இன்றைக்கேயா சொல்லி முடிக்க வேண்டும்? தினங் கொஞ்சமாய்ச் சொல்லி முடியேன்.'

ஜகந்நாதன்: 'ஸ்வாமிகளே-அப்படியே ஆகட்டும். என் கதையை நாளைய தினம் தொடங்குகிறேன்.'

நாங்களும் வீட்டுக்குப் புறப்பட்டோம்...'

இப்படி சுதந்திரன் இதழில் 20.03.1923 தேதியிலிருந்து 'ஜகந்நாதன்' என்ற பெயரில் எழுதி வந்தவர் வேறு யாருமல்லர்; புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தர் ஆச்சிரமத்தைச் சேர்ந்த அமுதன் அவர்கள் தான்.



sethupathi@thaiveedu.com



# கம்பனின் கருவூலம் திறந்து...

**- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா**

சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியா காண்டத்தின் ஐந்தாவது படலமாகிய தைலமாட்டுப் படலத்திலுள்ள சில செய்யுள்கள் வாயிலாகக் கம்பனின் கவி நயத்தைப் படித்துச் சுவைத்தோம். இந்த இதழில் அயோத்தியாக் காண்டத்தின் ஆறாவது படலமாகிய கங்கைப் படலத்தில் கம்பனின் கவி வண்ணத்தைச் சுவைத்து மகிழலாம்.

காடு செல்லப் புறப்பட்ட இராமன் கோசல நாட்டின் தெற்கு எல்லையிலுள்ள கங்கை நதியின் கரையை அடைந்ததும், அங்கே குகனை நண்பனாகக் கொண்டதும் அவனது துணையோடு கங்கையைக் கடந்ததும் ஆகிய செய்திகளைக் கங்கைப் படலம் கூறுகிறது. காடு நோக்கிப் புறப்பட்ட மூவரும் கோசல நாட்டு எல்லையைக் கடக்குமாறு செல்கையில் அந்நாட்டு மருத நிலத்தின் வளங்களைக் கண்ட வண்ணம் செல்கிறார்கள். அந்தக் காட்சியைக் கம்பர் கற்பனையும், கவிநயமும், இனிய ஓசையும் கொண்ட மிக அழகான எட்டுச் சந்தக் கலி விருத்தங்கள் என்னும் பாவின வடிவத்தில் படைத்துள்ளார். முதல் செய்யுளே மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்று. பலரும் அதன் இனிமை கருதி மனதில் பதித்துள்ள செய்யுள்.

***'வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியில் மறையப்***
***பொய்யோவெனும் இடையாளொடும் இளையானொடும் போனான்***

***மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ***
***ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.'***

- கம்ப. அயோத்தி: 625

இராமனது திருமேனியின் நிறம் கண்ணுக்குத் தீட்டும் மை நிறமோ? இல்லை மரகதமணியைப் போன்றதோ? இல்லையில்லை அலைமடங்கும் தன்மையுள்ள கடலைப் போன்றதோ? அதுவுமில்லை, வானத்து மழை முகிலைப் போன்றதோ? ஐயோ! எதனை அவனது நிறத்துக்கு உவமை கூறலாம் என வியக்கும்படியாக அழியாத அழகைப் படைத்தவனாகிய இராமனது மேனியிலிருந்து வெளிப்பட்டுப் பரவுகின்ற ஒளியில் வெப்பமான கதிர்களையுடைய ஞாயிற்றின் ஒளிகூட மறைந்துபோக, இல்லையென்று சொல்லுமாறு மிக நுண்ணிய இடையைக் கொண்டவளான சீதையோடும் தன் இளவலோடும் இராமன் சென்று கொண்டிருக்கின்றான் என்று வருணிக்கின்றார் கம்பர்.

இந்தச் செய்யுளில் 'ஐயோ! என்னும் அவலச் சொல்லைக் கம்பர் எடுத்தாண்டுள்ளது பொருத்தமானதல்ல என வாதிடுவோர் இருக்கின்றார்கள். மை, மரகதம், மறிகடல், மழைமுகில் என்பனவெல்லாம் மாறக்கூடியவை. மாற்றமடையாத இராமனது மேனி நிறத்துக்கு இவை முற்று உவமையாகா என்பதால் அவனது மேனியின் நிறத்துக்கு எதனை ஒப்பிடலாம் என்னும் பெருவியப்பினால், ஐயோ! என்றார். பெரு வியப்பு ஏற்படும் போதும், ஐயோ! என்னும் இடைச்சொல் வெளிப்படுவது இயல்பு. அதனை, 'அச்சோ, ஐயோ, என்னே, எற்று, எவன் எனும் சொல் அதிசயமுற இரங்கல்' எனச் சூடாமணி நிகண்டு கூறுவதிலிருந்தும் அறியலாம். ஞாயிற்றின் ஒளி இராமனது மேனியின் ஒளியில் மறைவதாகப் பொருள் கொள்வதற்குப் பதிலாகக் கதிரவனின் ஒளியின் மிகுதியான வெப்பத்துக்கு அஞ்சிப் பொய்யோவெனும் இடைகொண்ட சீதை இராமனின் மேனியொளியில் நிழலொதுங்குமாறு அவன் சென்று கொண்டிருக்கின்றான் எனவும் பொருள்கொள்ளலாம் என்பதும் சில உரையாசிரியர்களது கருத்து.

அவர்கள் செல்லுகின்ற காட்சியை வருணிக்கும் மேலுமொரு செய்யுள்.

***'அருப்பேந்திய கலசத்துணை அமுதேந்திய மதமா***
***மருப்பேந்திய வெனலாமுலை மழையேந்திய குழ லாள்***
***கருப்பேந்திர முதலாயின கண்டாளிடர் காணாள்***
***பொருப்பேந்திய தோளானொடு விளையாடினள் போனாள்'***

- கம்ப. அயோத்தி. 630

அரும்பைத் தம்மேலிடத்துத் தாங்கியுள்ள இரண்டு பொற்கல சங்களுக்கும், இனிமையைத் தம்மிடத்துக் கொண்டுள்ள, மத யானைகளின் இரட்டைத் தந்தங்களுக்கும் ஒப்பிடத்தக்க தனங்களோடு மேகத்தையொத்த கூந்தலையுடையவளான சீதை காட்டு வழியால் நடந்துபோவதிலுள்ள வருத்தத்தைச் சிறிதும் காணாதவளாய் அந்த வழியிலுள்ள கரும்பாலைகளைக் கண்ட வண்ணம் மலையை ஒத்த தோள்களையுடைய இராமனுடன் மகிழ்ச்சியுடன் சென்றாள் என்பது செய்யுளின் பொருள்.

இராமனோடு செல்வதனால் வழிநடையால் தோன்றும் வருத்தத்தைச் சீதை சிறிதும் உணராதவளாக மருதநிலத்தின் அழகில் மனம் ஒன்றியவளாகச் செல்கிறாள் என்கிறார் கம்பர். அருப்பேந்திய கலசமும், அமுதேந்திய மதமா மருப்பும் அவளுடைய தனங்களுக்கு உவமை கூறப்பட்டது. அவளுடைய கூந்தலுக்கு மழை மேகம் உவமையாக்கப்பட்டது. இவ்வாறான அழகிய உவமை அணிநயத்துடன், 'ஏந்திய' என்னும் சொல்லைப் பலமுறை அமைத்துச் சொற்பொருட் பின்வருநிலையணியுடனும் இச்செய்யுளை இனிமையாகக் கம்பர் யாத்துள்ளதைக் காண்கிறோம். மேலும் அரிமாவையும் உண்ண

வல்ல கருப்பேந்திரம் போன்ற விலங்குகளைக் கண்டும் அச்சமடையும் இடரைச் சிறிதும் காணாது விளையாடியவளாகச் சென்றாள் எனவும் சிலர் பொருள் காண்பர். ஆனால் குறிஞ்சி நிலத்தில் காணப்படக்கூடிய அந்த விலங்கை மருத நிலத்தில் சீதை கண்டாள் எனப் பொருள் கொள்வது பொருத்தமற்றது என்பது பலரது கருத்து. கருப்பேந்திரம் என்பது கரும்புச் சாறு பிழிகின்ற இயந்திரம் என்னும் வட சொல்லின் திரிபு எனக்கொண்டு கரும்பாலைகள் முதலாயின கண்டாள் எனப் பொருள் கொள்ளப்படுவதே பொருத்தமாகவுள்ளது.

இவ்வாறு அந்நாட்டு மருத நிலத்தின் வளங்களைக் கண்ட வண்ணம் அவர்கள் கங்கைக் கரையை அடைகிறார்கள். அங்கேயுள்ள முனிவர்கள் வந்து அவர்களை வரவேற்கிறார்கள். மூவரும் கங்கை நீராடிச் செய்கடன் முடித்து, முனிவர்கள் இட்ட காய், கனி, கிழங்கு வகைகளை உண்டு, அங்கேயுள்ள தவச்சாலை ஒன்றில் இளைப்பாறுகிறார்கள். அவர்கள் வந்துள்ளதைக் கேள்வியுற்ற அந்தக் கங்கைக் கரையிலுள்ள சிருங்கிபேரபுரத்து வேடர்களின் தலைவனாகிய குகன் என்பான் காணிக்கைப் பொருள்களையும் ஏந்தியவாறு தனது படையணியுடன் இராமனைக் காண வருகிறான். இராமனைக் காண வரும் குகனின் வீர, தீர, ஆற்றல்கள் பற்றி ஏழு செய்யுள்களில் கம்பர் வருணிக்கின்றார். அவற்றுள் ஒன்றை இங்கே காண்போம்.

***'காழ மிட்ட குறங்கினன் கங்கையின்***
***ஆழ மிட்ட நெடுமையி னான்அரைத்***
***தாழ விட்ட செந்தோலன் தயங்குறச்***
***சூழ விட்ட தொடுபுலி வாலினன்'***

- கம்ப. அயோத்தி. 655

சிருங்கி பேரபுரம் எனப்படுகின்ற பேரலைகள் படைத்த கங்கை நதியின் பக்கத்திலே காணப்படுவதான நகரில் வாழ்கின்றவன். காழம் என்னும் உடையணிந்தவனும், கங்கை நதியில் ஆழ அகலத்தைக் கண்டறிந்த பெருமையுடையவனும், அரையிலிருந்து தொங்க விடப்பட்ட செந்நிறத் தோலை அணிந்தவனும், அச்சத்தை ஏற்படுத்துமாறு அரையைச் சுற்றிப் பிணித்த புலிவாலை உடையவனுமாகியவன் குகன். காழம் என்பது அரையிலிருந்து தொடைவரையில் அணியும் குறுங் காற்சட்டை. அரையிலிருந்து தொடைவரை அணிந்திருந்த சட்டையின் மீது செந்நிறத்தோலைத் தொங்க விட்டு அரைக் கச்சாகப் புலியின் வாலையும் சுற்றிக் கட்டிக்கொன்டிருக்கின்றான் என அவனது தோற்றத்தைக் கம்பர் காட்டுகிறார்.

காணிக்கைப் பொருள்களை ஏந்தியவாறு தனது படையணியுடன் அங்கு வந்த குகனை இலக்குமணன் இராமனிடம் அழைத்துச் செல்கிறான். குகனை வரவேற்ற இராமன் தன்பக்கத்தில் அமருமாறு சொல்கிறான்.

***'இருத்தியீண் டென்ன லோடும் இருந்திலன் எல்லை நீத்த***
***அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக் கமைவ தா கத்***
***திருத்தினன் கொணர்ந்தே னென்கொள் திருவுள மென்ன வீரன்***
***விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற் றான்.'***

- கம்ப. அயோத்தி. 666

குகனைப் பார்த்த இராமன் அவனைத் தன்பக்கத்தில் இருக்குமாறு பணிக்க இராமனிடத்தில் அளவற்ற அன்பு கொண்டவனாகிய குகன் இராமனுக்குப் பக்கத்தில் இருப்பது தகுதியற்றது எனக் கருதியவனாய் அங்கு நின்றபடியே, 'தாங்கள் உண்பதற்காகத் தேனும், மீனும் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்துள்ளேன். அவற்றை ஏற்றுக்கொள்வதில் தங்களது மனக் கருத்து யாதோ?' எனக் கேட்க, இராமன் தன்னுடனிருந்த முதிய பெருந்தவசியரை நோக்கி இளநகை செய்கின்றான். தவ முனிவர்கள் உறையும் இடத்திற்குத் தகாதனவாகிய தேனையும், ஊனையும் கொண்டு வந்து 'அமுதினுக்கு அமைவதாகத் திருத்தினன் கொணர்ந்தேன்' என்கிறானே. இவனது வெகுளித்தனத்தை எவ்வாறு சொல்வது என்னும் குறிப்புப் பட இராமன் முனிவர்களை நோக்கி இளநகை செய்வதாகக் கம்பர் கூறுவதைப் பார்க்கிறோம்.

***'அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்***
***தெரிதரக் கொணர்ந்த வென்றால் அமிழ்தினும் சீர்த்த வன்றே***
***பரிவினிற் றழீஇய வென்னிற் பவித்திரம் எம்மனோர்க் கும்***
***உரியன இனிதி னால்நாம் உண்டெனம் அன்றோ வென்றான்.'***

- கம்ப. அயோத்தி. 667

இராமன் குகனைப் பார்த்து நீ கொண்டு வந்த காணிக்கைப் பொருள்கள் மனத்துள்ளே இருக்கின்ற அன்பின் முதிர்ச்சியின் வெளிப்பாடாக மன உவப்புடன் கொண்டு வந்தனவாகும். அதனால் அவை கிடைத்தற்கு அரிதானவையாகவும், அமுதத்திலும் சிறந்தனவாகவும் இருக்குமல்லவா? கொண்டு வந்த பொருள்கள் எப்படிப்பட்டனவாக இருந்தாலும் உள்ளத்து அன்போடு பொருந்தினவானதால் அவை தூய்மையான பொருள்களே. அவை எம் போன்றவர்க்கும் உரியன. அதனை நாம் உண்கிறோம் என்கிறான். பக்தி என்று சொல்லப்படுகின்ற அன்பின் முதிர்ந்த நிலையை 'உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்' என்கிறார் கம்பர். அந்த அன்பு வெளிப்படுமாறு மன உவப்போடு கொண்டு வந்தவை மிகவும் அரியனவும், அமுதத்திலும் சிறந்தனவாகையால் கொண்டு வந்த பொருளின் தன்மையை ஆராயாது, அவற்றைத் தூய பொருளாகவே ஏற்றுக்கொள்வதே பண்பு என்பதனைக் கம்பர் இராமனின் வாயிலாக வெளிப்படுத்துவது சிறப்பு.

எனினும் முதல் நூலாகிய வான்மீகத்தில் இராமன் அவற்றை ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படவில்லை. 'நீ விருப்பத்தோடு கொணர்ந்த பொருள்களை எனக்குக் காணிக்கையாக அளித்தாயென்று ஏற்றுக்கொண்டு உனக்கே திருப்பிக் கொடுக்கிறேன். நான் இப்போது தந்தை சொல்லை நிறைவேற்றத் தவ வேடம் பூண்டிருக்கின்றேன். வனத்திலிருக்கும் பழம் முதலியவை எனக்கு உணவாவதன்றி, உம்மைப் போன்றவரிடத்து உணவுப் பொருள் முதலியனவற்றை வாங்கிக் கொள்வதைத் தவிர்த்திருக்கின்றேன். நீ கொணர்ந்தவற்றை நான் உண்டதாகவே கொள்கிறேன்' எனக்கூறி அவற்றை அவனிடம் திருப்பிக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் கம்பரோ இச்செய்யுளில் வேற்றுமை பாராட்டாத பழந்தமிழர் பண்பாக இராமன் அவற்றை ஏற்றுக்கொண்டான் எனக் காட்டியிருப்பது நோக்கத்தக்கது.

பின்னர் இராமன் குகனிடம், 'நீ உன் சுற்றத்தோடு ஊருக்குப் போய் நாங்கள் கங்கையைக் கடப்பதற்கு நாவாய் கொண்டு

வா' எனக் கூறுகிறான். தங்களைப் பிரிந்து செல்வதற்குக் குகன் வருந்தியதைக் கண்ட இராமன் அன்றிரவு அவர்களைத் தம்மோடிருக்க அனுமதிக்கிறான். மறுநாள் பொழுது புலர்ந்ததும், 'விரைவில் சென்று நாவாய் கொணர்க' எனக் குகனிடம் இராமன் கேட்க, 'நீங்கள் கழிக்க வேண்டிய நாள்களை இங்கேயே கழியுங்கள்' எனக் குகன் வருந்தியபடியே இராமனை வேண்டுகிறான்.

***'தோலுள துகில் போலும் சுவையுள தொடர் மஞ்சம்***
***போலுள பரண் வைகப் புரையுள கடிதோடும்***
***காலுள சிலைபூணுங் கையு கலிவானின்***
***மேலுள பொருளேனும் விரைவொடு கொணர்வேமால்.'***

- கம்ப. அயோத்தி. 685

உடுத்துக் கொள்வதற்குப் பட்டாடை போலும் மெல்லிய மரவுரிகள் உள்ளன. உண்பதற்குப் பல இனிய தின்பண்டங்கள் உள்ளன. இனிதாகத் தூங்குவதற்குப் பிணித்துத் தொங்கவிடப்பட்ட தூங்கு மஞ்சம் போலுள்ள பரண்கள் உள்ளன. தங்குவதற்குச் சிறு குடிசைகள் உள்ளன. அத்தோடு விரைந்து செல்ல வல்ல கால்களும், பகைவரைத் தடுக்கவும், ஓங்கி உயர்ந்த இடத்திலுள்ள பொருள்களைப் பறிக்கக் கூடிய வில்லைப் பூணும் கைகளும் இருக்கின்றன. வானத்திலுள்ள பொருளானாலும் விரைந்து கொண்டு வந்து தருவோம். ஆகவே இங்கே தங்கிக் கழிக்க வேண்டிய நாள்களைக் கழிக்க எனக் குகன் மீண்டும் இராமனை வேண்டுகிறான்.

அரச குடும்பத்தினராகிய அவர்கள் உண்டு, உடுத்து, இன்பமாக நாள்களைக் கழிப்பதற்கு அரச மாளிகையிலுள்ள பொருள்கள் இல்லாவிட்டாலும் அவற்றையொத்த பொருள்கள் இங்கே இருக்கின்றன என எடுத்துக் கூறும் குகனின் வெள்ளையுள்ளத்தைக் கம்பர் இங்கே எடுத்துக்காட்டுவது சிறப்பாக இருக்கிறது.

குகன் இவ்வாறு கூறக் கேட்ட இராமன் நான் புண்ணிய நதிகளிலாடிப் புனிதரை வழிபட வேண்டும். அவை முடித்துச் சில நாளில் வருவேன் என்கிறான். இராமனின் கருத்தை உணர்ந்து குகன் உடனே சென்று நாவாய் கொணர்ந்து அவர்களை ஏற்றிக் கங்கையைக் கடக்க உதவுகிறான்.

***'பாலுடை மொழியாளும் பகலவ னனையானும்***
***சேலுடை நெடுநன்னீர் சிந்தினர் விளையாடத்***
***தோலுடை நிமிர் கோலிற் துழவிய நெடுநாவாய்***
***காலுடை நெடுஞெண்டிற் சென்றது கடிதம்மா.'***

- கம்ப. அயோத்தி. 690

பாலைத் தோற்கச் செய்கின்ற இனிய மொழியையுடைய சீதையும் கதிரவனையொத்த இராமனும், சேல் மீன்கள் துள்ளி விளையாடும் நீண்ட கங்கை நதியின் புண்ணிய நன்னீரைத் தம் கைகளால் எடுத்து வீசியெறிந்து விளையாடிக் கொண்டேயிருக்கக் கைப்பிடியில் தோலால் கட்டப்பட்டுள்ள தள்ளுந் தன்மையுடைய நீண்ட கோல்களினால் துளாவித் தள்ளப்படுகின்ற நீண்ட அந்த மரக்கலமானது பல கால்களையுடைய பெரிய நண்டைப் போல விரைவாகச் சென்றது என்பது செய்யுளின் பொருள். ஓடத்தைச் செலுத்துமாறு அதன் இரு பக்கத்திலும் கங்கையின் நீரைத் துழாவும் வண்ணம் அமைக்கப்பட்ட துடுப்புக் கோல்கள் நண்டின் கால்களை ஒத்திருந்ததாகக் கற்பனை செய்கிறார் கம்பர்.

கங்கையைக் கடந்ததும் சித்திர கூடஞ்செல்லும் வழி யாது என இராமன் குகனிடம் கேட்க, அவன் 'நான் தங்களை விட்டுப் பிரியேன். தங்களுக்கு வேண்டியனவெல்லாம் செய்வேன். என்னையும் தங்களுடன் கூட்டிச்செல்ல அனுமதி தருக' என வேண்டுகிறான்.

***'திருவுள மெனின் மற்றென் சேனையும் உடனே கெண்ட***
***ஒருவலன் ஒருபோதும் உறைகுவென் உளரானார்***
***மருவல ரெனின் முன்னே மய்குவென் வசையில்லேன்***
***பொருவரு மணிமார்ப போதுவென் உடனென்றான்.'***

- கம்ப. அயோத்தி. 696

'ஒப்பற்ற அழகிய திருமார்பை உடையவனே! ஒருபொழுதும் தம்மை விட்டுப் பிரியாதவனாய், எப்போதும் நான் என் படையுடன் உம்மோடு இருந்து உமக்குப் பிறரால் தீங்கு வராமல் பாதுகாப்பேன். ஒரு வேளை பகைவர் என்னை விட வலிமை கூடியவராய் என்னையும் அடக்கி உமக்குத் தீங்கு செய்ய நெருங்குவாராயின் அவரை எதிர்த்து நின்று என்னுயிரை மாய்ப்பேனே ஒழிய என் உயிருள்ளவரையில் உம்மை அப்பகைவர் கையில் கொடுத்து வசைக்கு ஆளாக மாட்டேன். உமது உள்ளத்தில் விருப்பமிருந்தால் என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்' என வேண்டுகிறான். இவ்வாறு குகனின் தூய அன்பையும் நட்பையும் கம்பர் வெளிப்படுத்துவது நயமாக உள்ளது. குகன் இவ்வாறு கூறக் கேட்ட இராமன்,

***'துன்புள தெனின் அன்றோ சுகமுள ததுவன்றிப்***
***பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்***
***முன்புளம் ஒருநால்வே முடிவுள தெனவுன்னா***
***அன்புள வினிநாமோ ஐவர்கள் உளரானோம்.'***

- கம்ப. அயோத்தி. 667

'துன்பம் இருந்தாலல்லவா சுகம் உண்டாகும். உன்னைக் காண்பது பின்னர் நிகழப்போகிறது. இன்பமாக இருக்கிற இக்காலத்துக்கும் இனியுன்னை அடையப் போகின்ற காலத்துக்கும் இடைநடுவிலே மிகவும் பிரிவுத் துயரானது உள்ளது என எண்ணிக் கலங்காதே. உன்னோடு தோழமை கொள்வதற்கு முன்னம் நாங்கள் உடன் பிறந்தவர்கள் நால்வராக இருந்தோம். முடிவுள்ளது எனக் கருதமுடியாத அன்பைக் கொண்டுள்ள நாம் இனிமேல் ஐவர் ஆகி விட்டோம்.' என இராமன் கூறுவதாகக் கம்பர் மிக அருமையான கருத்தை இச்செய்யுளில் வைத்துள்ளார்.

குகனுடைய வார்த்தைகளைக் கேட்ட இராமன், 'வெயிலில் வருந்தியவர்க்கே நிழலின் அருமை தெரிவதைப்போல. பிரிவினால் தோன்றும் வருத்தத்தை அனுபவித்தால்தான் பின்னர் கூடும்போது அது இனிதாகத் தோன்றும். பின்னே வரப்போகின்ற இன்பத்துக்கிடையே இப்போது பிரிவுத் துன்பம் நேர்கிறதே என வருந்தாதே. பிரிவதனால் அன்பு குறைவுறாது. நீ என்னுயிரை ஒத்தவன். என் தம்பி உன் தம்பி. சீதை உன் தோழி. நாங்கள் தயரதருக்கு நால்வர் மைந்தர்கள். இப்போது உன்னுடன் ஐவரானோம். இனி உன் சுற்றம் என் சுற்றமே. ஆதலால் சிருங்கிபேரபுரத்தில் உள்ளோரைப் பாதுகாக்க உன்னை வைத்திருக்கிறோம். அவர்களுக்குப் பாதுகாப்பாக இருப்பாய்' என நட்புரிமை பாராட்டிச் சொல்வதாகக் கம்பர் கூறுகிறார். வேடுவர் குலத்தவனான ஒருவனைத் தன் உடன் பிறப்பாகக் கருதி இராமன் ஏற்றுக்கொண்டானோ இல்

லையோ உண்மையான நட்புக்கிடையே உயர்வு தாழ்வுக்கு இடமிருக்கக் கூடாது என்னும் கம்பரின் மெய்க்கருத்தாக இது இச்செய்யுளில் வெளிப்படுவதைக் காண்கிறோம்.

பிரிவுத் துயர் மிகுந்திருந்தாலும் இராமனின் சொல்லைக் கடவாது அதனை ஏற்றுக் குகன் விடைபெற்றுச் செல்ல இராமன், சீதை, இலக்குமணன் மூவரும் காட்டு வழியே செல்லத் தொடங்குகின்றார்கள். நட்பின் ஆழத்தை வலியுறுத்திய கங்கைப் படலம் இவ்வாறு, பல இனிமையான செய்யுள்களோடு முற்றுப் பெறுகிறது. தொடர்ந்து வரும் வனம்புகு படலத்தில் கம்பனின் கவிநயத்தோடு மீண்டும் உங்களோடு இணைகிறேன்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com



கனடா, தொல்காப்பிய மன்றமும்
தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய மன்றமும்
இணைந்து நடத்தும்

# முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு

திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசித் திங்கள் 04, 05, 06 ஆம் நாள்களில்
(2024-09-20, 2024-09-21, 2024-09-22)
கனடா




**குறிக்கோள் : தொல்காப்பியத்தில் உயர் ஆய்வுகள் மேற்கொள்ளுவதற்கான களமாக இம்மாநாடு அமையவேண்டும்.**

இணையத்தளம் : www.tolkappiyam.ca
தொடர்புகளுக்கு : 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152

# தமிழ்வலை - 105

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**




## தமிழ்வலை-105 வினா

### இடமிருந்து வலம்

3 விக்கியம்பலம் (Wikileaks) நிறுவனர் (4-4)
6 பீதி
7 விரட்டு
8 பொழுது
10 பெரியார் (1-1-1)
11 பாலத்தீன விடுதலை அமைப்பு நிறுவனர் (3-4)
13 உதவி
14 மியன்மாரின் பழைய பெயர்
15 இலக்கியப் புகழ்வாய்ந்த தென்னக ஆறு
17 நீர்ப்பாசனத் துறையில் பேரெடுத்த இலங்கை மன்னன்

### மேலிருந்து கீழ்

1 காலன்
2 யாழ் மாவட்டத்தில் ஓர் ஊர்
3 கொலையுண்ட பண்டை உரோம ஆட்சியாளர் (4-3)
4 இல்லம்
5 கியூப புரட்சி வீரர் (1-3)
9 குடக்கூத்து எனப்படும் நாட்டுநடனம்
10 ஓர் இஸ்லாமிய பண்டிகை
12 இளம்பனை
15 சௌதி அராபிய மக்கா பள்ளி வாசலின் தொழுகை மையம்
16 சூடாகு


விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**


## தமிழ்வலை - 104-க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கே | | 2 போ | | 3 து | | | | 4 க | சை |
| ழ் | | 5 பா | ல | கி | ரு | ஷ் | ண | ன் | |
| 6 வ | ய | ல் | | ல் | | | | னி | |
| ர | | | 7 சி | | | 8 க | ணை | யா | ழி |
| 9 கு | ண் | ட | லை | கே | சி | | | | |
| | | | ம் | | | 10 க | | 11 மோ | னை |
| 12 தீ | | 13 வி | பு | லா | ந | ந் | 14 த | ர் | |
| ரா | | | | | | 15 தி | ரு | | |
| 16 ந | வ | ர | த் | தி | ன | சா | மி | | 17 மோ |
| தி | | | | | | மி | | 18 வி | தி |

## தமிழ்வலை-104 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

சுமதி முத்துராஜா யாழ்ப்பாணம்
உமா கதிர், ஏஜக்ஸ், கனடா.
சின்னத்தம்பி பார்வதி, வவுனியா
ஜோன் பப்டிஸ்ட் ஜோசராசா, ஸ்கார்பரோ
ஜெயரட்ணம் ஜோண், ரொறன்ரோ
தேவாம்பிகை அரவிந்தன், இங்கிலாந்து
நேசன் சபாராணி, பிரான்ஸ்
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ
கிருபா சண். ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

## சுதர்சன் ஜெயலட்சுமி,

### யாழ்ப்பாணம்.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.




# அ. யேசுராசாவின் 'திரை உலா



### தொகுப்பு: நேசன்

கடந்த மே 24, 2024 அன்று எழுத்தாளர், திறனாய்வாளர், திரை விமர்சகர் அ. யேசுராசாவின் 'திரை உலா' கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு யாழ்ப்பாணத்திலுள்ள 'எங்கட புத்தகங்கள் இல்லத்தில்' நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் பீடாதிபதி கலாநிதி சி. ரகுராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அறிமுகவுரையைத் திருமறைக் கலாமன்றப் பிரதி இயக்குநர் திரு. ஜோன்சன் ராஜ்குமாரும் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரைகளை யாழ். பல்கலைக்கழக சமூகவியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இராஜேஸ் கண்ணனும்; எழுத்தாளர், விமர்சகர் திரு. ந. மயூரரூபனும் ஆற்றினார்கள். ஏற்புரையை நூலாசிரியரும், நன்றியுரையைக் குலசிங்கம் வசீகரனும் நிகழ்த்தினர்.



யுத்தத்தில் கொல்லப்பட்ட எமது மக்களுக்கு ஒரு நிமிட அஞ்சலி செலுத்தி, நிகழ்வு ஆரம்பமானது.





'திரு. அ. யேசுராசா ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருப்பதைப் போல் பல பரிமாணங்கள் கொண்ட ஓர் ஆளுமை. அதேவேளை அவரிடம் இருக்கக்கூடிய முக்கியமான பண்பு என்னவெனில், எழுதியும், சஞ்சிகைகள் வெளியிட்டும், திரைப்பட இயக்கங்களில் இயங்குதல், இலக்கிய, திரைப்படத் திறனாய்வு என ஏதோ ஒரு வகையில் ஈழத் தமிழ் சூழலில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பவர். இங்கு நடைபெறும் பல நிகழ்வுகளிலும் அவரது பிரசன்னம் இருக்கும். இந்தப் பிரசன்னம்தான் அவரை இயங்கவைக்கிறதென்று நினைக்கிறேன். அந்தவகையில் அவருடைய மிக முக்கியமான நூலாக வெளிவருகிறது திரை உலா' எனத் தலைமையுரையில் கலாநிதி ரகுராம் அவர்கள் குறிப்பிட்டதுடன், அவருக்கென்று ஒரு பார்வை இருக்கிறது. 'எங்களுடைய தளத்தில் திரைப்படத் திறனாய்வை, திரைப்படங்களை இரசிப்பதை, திரைப்படங்களை உள்வாங்குவதை ஒரு உயிரோட்டமுள்ளதாக ஆக்கி வைத்திருக்கும் பெருமை, திரு. யேசுராசா அவர்களுக்கு இருக்கிறது. திரைப்படத் திறனாய்வை வெறுமனே ஒரு பொறிமுறையாக அல்லது இயந்தி











ரமயமானதாக அல்லது முற்றுமுழுதாக ஒரு மூன்றாந்தரப்பிலிருந்து செய்வதை விட, ஆழமாக அதை உள்வாங்குவதற்காகத் திரைச்சுவடி ஆக்கங்களையும் பயன்படுத்தியிருக்கிறார். இந்த நூலிலும் குறிப்பிடத்தகுந்த ஒரு திரைச் சுவடி இடம்பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு திரைப்படத்தையும் திறனாய்வு செய்யும்போதும் அவருக்கு இருக்கும் கருத்தியல், அவருக்கிருக்கும் படைப்புலகம் ஆகியவற்றுக்கூடாக அதனைப் பேசும்போதெல்லாம், திரைப்படத் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களும் மிக இயல்பாகவே வந்துபோகின்றன' எனவும் குறிப்பிட்டார்.

தலைமையுரையைத் தொடர்ந்து நூலின் அறிமுகவுரையைத் திரு. யோன்சன் ராஜ்குமார் அவர்கள் நிகழ்த்தினார்.



'திரு. அ. யேசுராசா அவர்கள் ஏற்கெனவே பத்து நூல்களை வெளியிட்டிருக்கிறார். ஒவ்வொன்றும் வித்தியாசமான அனுபவத்தைத் தருபவை. திரைப்படத் துறையிலே அவருக்கிருந்த ஆர்வம் காரணமாக, சிறிய வயதிலிருந்தே அவரது திரை அனுபவம் அவரிடம் உருவாகியது. அது தொடர்பாகவே இன்று 'திரை உலா' என்ற படைப்பின் வழி எம்மை அடைகிறது.

இந்த நீண்ட அவருடைய அனுபவங்கள் எங்களுக்கு உண்மையிலே ஒரு முன்மாதிரியாக இருக்கிறது; முன்னுதாரணமாக இருக்கிறது; அவரது கண்களுக்கூடாகப் பார்க்க நான் முனைகிறேன்.

'தாய்வீடு', 'மருதம்' இணை வெளியீடாக இந்த நூல் வெளிவந்திருக்கிறது. ஞானரதன், பாலு மகேந்திரா, லெனின் எம். சிவம் ஆகிய மூன்று ஈழத்துக் கலைஞர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பித்திருக்கிறார். இதிலே திரைப்பட விழாக்கள் பற்றிய பதிவுகள் இருக்கின்றன, திரைத்துறை பற்றிய கட்டுரைகள் இருக்கின்றன. குறும்படங்கள் பற்றிய பார்வைகள் இருக்கின்றன. பேசப்படக்கூடிய தென்னிந்தியப் படங்கள் பற்றிய பார்வைகள் இருக்கின்றன. பதினாறு ஆக்கங்கள் உள்ளன. ஏற்கெனவே தான் எழுதிய ஒரு சிறுகதையைக் குறும்படச் சுவடியாக்கி, அதனையும் இணைத்திருக்கிறார்.



இந்த நூல் அவருடைய கண்களினாலே நல்ல திரைப்படங்களைப் பார்ப்பதற்கான தூண்டுதலை எங்களுக்குத் தருகின்ற ஒன்றாக இருக்கிறதென்பதிலே, எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. உண்மையில், நல்ல இரசனை கட்டியெழுப்பப்பட வேண்டுமென்று அவர் அவாவி நிற்கிறார்', என்றவாறாக அவரது அறிமுகவுரை அமைந்திருந்தது.

தொடர்ந்து 'திரை உலா' நூல் வெளியீடு இடம்பெற்றது. முதற்பிரதியை நூலாசிரியரிடமிருந்து கலை, திரைப்பட ஆர்வலரும் செயற்பாட்டாளருமான திரு. சித்திராங்கதன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

அதனையடுத்து சிரேஷ்ட விரிவுரையாளர் இராஜேஸ் கண்ணன் நூல் பற்றிய மதிப்பீட்டுரையை ஆற்றினார்.



'இந்த நூல் ஏன் முக்கியம் பெறுகிறது என்று பார்த்தோமாகில், இந்த நூலில் மூன்று தளங்களை முன்வைத்து திரையுலகம் தொடர்பான பல்வேறு விடயங்களைத் திரு. யேசுராசா அவர்கள் பேசுகிறார். இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டிலுள்ள சினிமாக்கள், ஈழத்தில் இந்த மண்ணுக்கென்றே உருவான சினிமாக்கள், இந்த மண்ணுடைய தொடர்ச்சியாகப் புலம்பெயர் தேசங்களிலுள்ள சினிமாக்கள் என்று, மூன்று பிரதேசங்களில் உருவான திரைப்படங்கள் - மூன்று நிலங்களிலுள்ள சினிமாவைப் பற்றி அவர் பேசுகிறார். இதை எங்களுடைய சினிமா பற்றிய பார்வையை விசாலப்படுத்துவதற்குரிய ஒரு வாய்ப்பாக நான் உணர்ந்துகொண்டேன். ஏனெனில், தென்னிந்திய மலின சினிமாவைப் பார்த்து பழகிய எங்களுக்கு எங்களுடைய சினிமா இரசனை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இந்த மூன்று களங்களில் வருகின்ற சினிமாக்களைப் பற்றிப் பேச வேண்டிய தேவையுள்ளது.

இந்நூலிலுள்ள பாலு மகேந்திராவின் ஐந்து குறும்படங்கள், சமகாலக் குறும்படங்கள் என்ற பெயரில் எழுதப்பட்ட கட்டுரை, சித்ரா என்ற தனியொரு குறும்படத்தைப் பற்றிய குறிப்புகள். இவற்றிலே யேசுராசாவை இரண்டு வகையிலே தரிசிக்கக்கூடிய தாகவுள்ளது. இதில் குறிப்பிடும் குறும்படங்களைப் பற்றிய அறி முகக் குறிப்பு மிகச் சிறப்பாகவுள்ளது. இக்குறும்படங்களைப் பார்க்காதவர்களிடம், அவற்றைப் பார்க்கும்படியான விருப்பை உருவாக்குவதில் சிறந்தவையாக அக்குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் பெரும்பாலான விடயங்களை எங்களைப் போன்றோ ருக்கு அறிமுகப்படுத்தித் தூண்டுவதற்காகவோ என்னவோ அவர் எழுதுவது, கூடுதலாகக் கதைப்பொருள் விளக்கங்களாகத்தான் அமையும். சில படங்கள் தொடர்பில் தொழிநுட்ப அம்சங்கள், தொழிநுட்பப் பகுதியைப் பற்றிச் சொல்கிறார். 'சொட்ஸ்'கள் எவ்வாறு வைக்கப்படுகின்றன என விளக்குகிறார்.









கந்தசாமியின் தயக்கம் என்று ஒரு குறும்படச் சுவடி இருக்கிறது. திரைச்சுவடி தயாரிப்பதில் எங்களுக்கு ஒரு மாதிரியை இவர் காண்பித்திருக்கிறார். திரைநயம் - திரை விமர்சனம், சினிமா நயம் - சினிமா விமர்சனம் இந்த இரண்டு எல்லைகளுக்குமி டையில், இந்த நூலிலுள்ள சில கட்டுரைகள் ஒரு நயமாகப் பார்க்கப்படவேண்டிய கட்டுரைகளாக இருப்பதும், இங்கு குறிப் பிட்டுச் சொல்லப்பட வேண்டிய விஷயம்.

இந்த நூல் மிகப் பெறுமதியான நூல். இவருடைய பழைய நூல்க ளோடு இதை ஒப்பிட்டு நாங்கள் பார்க்கவேண்டும். எங்களுடைய தமிழ் சினிமாவில் 'சென்சிபிளான' சினிமாவுக்குரிய வரலாற்றைப் பேசுவதற்கும், அதுபற்றிய தகவல்களைச் சொல்வதற்கும், இந்த நூலும் இதிலுள்ள கட்டுரைகளும் மிக அவசியமானவை' என்ற வாறாக அவரது மதிப்பீடு அமைந்திருந்தது.

திரு. இராஜேஸ்கண்ணன் அவர்களின் மதிப்பீட்டுரையை அடுத் துக் கலாநிதி ரகுராம் அவர்கள், ஒரு பின்குறிப்பை வழங்கினார்.

'இங்கு இன்னுமொரு விடயத்தை நான் சொல்ல வேண்டும். சமீ பத்தில் 'போரின் சாட்சியம்' என்று சுரேன் எழுதிய நூல், வெளி நாட்டில் வெளியிடப்பட்டது. அதில் 'தமிழ்நெற்' ஆசிரியர் ஜெயச் சந்திரன் முக்கியமான உரையொன்றை ஆற்றியிருக்கிறார். அதில் அவர், 'நரேற்றிவ்' என ஒரு முக்கியமான விடயமொன்று குறித்துச் சொல்கிறார். 'நரேஷன்' அல்ல நரேற்றிவ். நரேஷன் - கதையாடல்; நரேற்றிவ் - அதற்கப்பால் இருக்கக்கூடிய அர்த்தத்தை நாங்கள் தேடவேண்டும். நரேற்றிவ் என்பதற்கு நாங்கள் எதைச் சொல்லலாம்? அது எதைச் சொல்கிறதெனில் ஒரு கதையைச் சொல்லும்போது, கதையில் இருக்கிற எல்லாத்தையும் சொல்லிச் செல்வதல்ல. அதை உள்வாங்கிப் படைப்பாளி தன்னுடைய பார்வையில் சொல்கிறார். அவ்வாறு சொல்லும்போது சமூகப் பொறுப்பு, சிலவேளை அவ்வக் காலத்துக்கு இசைந்த போக்கு என்று பல விடயங்கள் அதிலுள்ளது. ஆகையினால் நரேற்றிவ் - நாங்க சொல்லிக்கொண்டு போகும்போது இன்னொருவர் அதை உள்வாங்கும்போது, சிலவேளை வித்தியாசமாக உள்வாங் கலாம். அந்தச் சுதந்திரம் கேட்பவருக்கு இருக்கிறது. முக்கி யமான சில விடயங்களை முன்வைக்கும்போது அந்தத் தன்மை வேண்டுமென்று, அவர் அதில் வாதிக்கிறார்.

நான் நினைக்கிறேன், திரு. யேசுராசா அவர்களின் திறனாய்வு அல்லது திரைச் சுவையை உள்வாங்குகின்ற தன்மைகளுக்குள் ளாலும் யேசுராசா அவர்களுக்குள்ளால் நரேற்றிவ்வைப் பார்க்கக் கூடுமானதாக இருக்கும். அவர் எந்த ஆசாபாசமுமில் லாமல், விருப்பு வெறுப்பில்லாமல்தான் - எழுதியிருக்கிறாரென் றால், அது பொய். அவருக்குள் ஒன்று இருக்கிறது. அவருக்குத் தமிழ் தேசியத்தின்பால் ஒரு மிகப்பெரிய உறுதியான - உறுதி யல்ல பற்றுறுதி இருக்கிறது. அதனூடாகத்தான் பார்க்கிறார். அதனால்தான் அவர், திரைச் சுவையை அல்லது திறனாய்வை, ஒரு திரைப்படத்தைப் பார்த்த அனுபவத்தினால் மாத்திரமல்ல, அதைப் பார்த்த பின்பு வரும் கலந்துரையாடல் வழியாகவும் அனுபவங்களூடாகவும் பதிவு செய்கிறார். குறிப்பாக 'சிங்கிள் டம்ளர்' - அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அதன் பிறகு நடந்த விடயங்களை அவர் பதிவுசெய்திருப்பது, படத்தை விடவும் சுவா ரசியமாக இருக்கிறது. நீங்கள் கட்டாயம் அந்தப் பகுதியை வாசிக்கவேண்டும். ஏனென்றால், அங்கே இருக்கக்கூடிய அரசியல் நிலைப்பாடுகள் அல்லது யேசுராசா எதைச் சொல்லவருகிறார் என்பதற்குப் பின்னால், நரேற்றிவ் என்ற முக்கியமான விடயம் இருக்கிறது. இது அவரது எழுத்துகள் பூராவுமே எதிரொலிக்கிறது. அந்தவகையில், விமர்சனங்கள் இருந்தாலும் அவர் சொல்கின்ற முறை, அவருடைய குரல், எல்லாவற்றுக்குள்ளும் இருக்கிறது.'

அதனை அடுத்து எழுத்தாளர், விமர்சகர் ந. மயூரரூபன் நூல் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டுரையை ஆற்றினார்.

இந்தத் தொகுதியில் சினிமா தொடர்பான எழுத்துகளைப் பார்க் கும்போது, விமர்சனங்கள் என்ற ஒரு விடயம் வருகிறது. இதை விமர்சனரீதியான தொகுதியெனத் தனியாக அடையாளப்படுத்துவது என்பது, அந்தளவு சொல்லக்கூடியதாயிருக்காது. ஆனால், நான்கு விதமான அடிப்படைகளுக்கூடாக இந்த எழுத்துகளைப் பார்க் கலாம்.

இரசனை சார்ந்த திறனாய்வு.

விமர்சனச் சிந்தனையைக் கொண்டுள்ள திறனாய்வு.

கோட்பாட்டு அடிப்படையிலான திறனாய்வு.

வரலாறு சார்ந்த திறனாய்வு வகையைச் சார்ந்ததெனச் சொல் லிக் கொள்ளலாம்.

இந்த அடிப்படைகளை இக்கட்டுரைகளுக்கூடாகப் பார்க்கும் வாய்ப்புகள் இந்நூலில் இருக்கிறதென்பது முக்கியமான விடயம். சுருக்கமாகச் சொன்னால், திரு. யேசுராசாவின் எழுத்துகளில் அவரிடம் இருக்கக்கூடிய தேசியம் தொடர்பான எண்ணங்களும், சமூகப் பொறுப்பு சார்ந்த விடயங்களும் அதிகமாகத் துருத்திக் கொண்டு நிற்பதாக, இந்த எழுத்துகளில் அடையாளங் காண லாம். அதுவொரு முக்கிய விடயமாகவுமிருக்கிறது.

யேசுராசா அவர்களின் எழுத்து எங்களுக்குத் தேவையான கருத் தியல் சார்ந்த விடயத்தில் சமூகப் பொறுப்பைக் கொண்டுவருவ தற்கும், ஒரு தேசிய உணர்வைக் கொண்டுவருவதற்கும் அடிப்ப டையாக இருக்குது. அதே நேரத்தில், சில முன்வைப்புகளை நாங்கள் எப்படி வைக்கவேண்டும் என்ற ஒரு விடயத்தையும் எங் களுக்குக் கொண்டு வருகிறது. அந்த வகையில் மிக முக்கியமான தொகுப்பு' என அவர் தனது மதீப்பீட்டுரையில் குறிப்பிட்டார்.

மதிப்பீட்டுரைகளைத் தொடர்ந்து நூலாசிரியர் அ. யேசுராஜா அவர்கள் ஏற்புரையாற்றினார்.

'நான் கூற நினைத்திருந்த பல பின்னணி விபரங்களைத், தனது அறிமுகவுரையில் ஜோன்சன் ராஜ்குமார் சொல்லிவிட்டார். எனது திரைப்பட ஆர்வம், சிறுவயதில் ஐயாவின் கையைப் பிடித்தபடி சென்று தியேட்டரில் பார்த்த ஹரிதாஸ், பொன்முடி, ரத்தினகுமார் போன்ற பழைய படங்களில் தொடங்குகிறது. பின்னர் மாணவப் பருவத்தில் சிவாஜி கணேசன், ஸ்ரீதர் போன்றோரின் படங்களில் விருப்பத்துடன் தொடர்ந்தது. அறுபதுகளில் கே.எஸ். சிவகுமா ரனின் 'மனத் திரை' பத்தி எழுத்துகள் எனது திரைப்பட இரசனை யில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தின. கொழும்பில் பணிபு ரிந்த காலத்தில் அவரைச் சந்தித்துப் பழகும்போது, உலகக் கலைத் திரைப்படங்களை அறிமுகப்படுத்தினார். அன்றிலிருந்து இன்றுவரை இந்த ஈடுபாடு என்னில் தொடர்கிறது.

கோட்பாடுகளை முன்வைத்து - வலிந்து எனது எழுத்துச் செயற் பாட்டைச் செய்வதில்லை. நான் ஈடுபாடுகொண்ட இலக்கியம், திரைப்படம், இசை, அரசியல், சமூக விடயங்கள், வாழ்க்கை அனுபவங்கள் எனது ஆளுமையை - இரசனையை வடிவமைக் கின்றன. இவற்றால் உருவாகும் 'பார்வை'யையே ஆதாரமாகக் கொள்கிறேன்.

இந்த நூலின் அட்டையை வடிவமைத்தவர் மதிப்புக்குரிய மூத்த கலைஞரான ட்ரொட்ஸ்கி மருது அவர்கள். நான் அவரில் எவ்விதத் தலையீடும் செய்யவில்லை. பழைய தமிழ் நடிகை எம்.என். ராஜத்தின் உருவத்தை வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. எனது நூல் தமிழ் திரைப்படங்களையே முக்கியப்படுத்துகிறது. அவ்விதத்தில் தமிழ் அடையாளத்தைச் சிறப்பாக வெளிப்படுத்த அவர் முனைந்திருக்கிறார் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். அட்டையிலுள்ள பெட்டி 'திரை'யைக் குறிக்கிறது! அதன்வழி அதிலுள்ள உருவம் நடிகை என்பதையும் உணர்த்துகிறது.

நன்றியுரை தனியாக இருந்தாலும், எனக்கும் கடமையிருக்கிறது. இந்நூலைத் தமது பதிப்பகத்தின் மூலம் வெளியிட்ட ட்ரொட்ஸ்கி மருது, டிலிப்குமார் (மருதம் பதிப்பகம், தாய்வீடு பதிப்பகம்)ஆகி யோருக்கும், வெளியீட்டு நிகழ்வை ஒழுங்குசெய்த குலசிங்கம் வசீகரனுக்கும், தலைமை தாங்கிய கலாநிதி சி. ரகுராமுக்கும், அறிமுகவுரையாற்றிய ஜோன்சன் ராஜ்குமாருக்கும், மதிப்பீட்டு ரையாற்றிய இராஜேஸ் கண்ணன், ந. மயூரரூபன் ஆகியோருக் கும் எனது நன்றிகள். நேரத்தை ஒதுக்கி இந்நிகழ்விற்கு வருகை தந்த திரைப்பட - புத்தக ஆர்வலராகிய உங்களுக்கும், எனது நன்றிகள்!' என அவரது ஏற்புரை அமைந்திருந்தது.

இறுதியாக எங்கட புத்தகங்கள் நிறுவனர் குலசிங்கம் வசீகரன் அவர்களின் நன்றியுரையுடன் வெளியீட்டு நிகழ்வு நிறைவுற்றது.

info@thaiveedu.com



# பிரளயத்தின் நடுவே...!

– உஷாதீபன். எஸ்

அப்பா தண்ணி ஏறிட்டேயிருக்கு கீழே போய் காரை ஜாக்கி போட்டு தூக்கி நிறுத்திட்டு வந்திடுவோம் இல்லன்னா இன்ஜினுக்குள்ள தண்ணீர் போயிடும், பிரபு சொன்ன வேகத்தில் படபடப்புத் தெரிந்தது. எப்படா பொழுது விடியும் என்று காத்திருந்ததுபோல் கூறினான் அவன். கார் வாங்கி ஒரு வருடம்தான் ஆகிறது. அவன் கவலை அவனுக்கு. இப்பொழுதுதான் மூன்று ஃப்ரீ சர்வீஸ் முடிந்திருக்கிறது. மூன்றாவது சர்வீஸ் பண்ணிக் கொண்டு வந்து நிறுத்தி ரெண்டு நாள்தான் ஆகிறது. மழை பிடித்துக் கொண்டது.

புயல்பற்றிய அறிவிப்பு வந்து கொண்டேதான் இருந்தது. ஆனால் இந்த அளவுக்குப் போகும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. விடாமல் ஊற்ற ஆரம்பித்ததும்தான் பயம் வந்தது. அருகிலுள்ள மேம்பாலத்தில் கொண்டு நிறுத்தியிருந்தார்கள் பலர். நூற்றுக் கணக்கான கார்கள் ஏற்கனவே வந்து விட்டது என்றார்கள். பெரிய பெரிய மால்களில் ரூபாய் ஆயிரம் ஒரு நாளைக்கு வாடகை என்று அங்கு கொண்டு போயும் நிறையப் பேர் விட்டிருந்தார்கள். இதுதான் சந்தர்ப்பம் என்று வசமாய் சம்பாதிக்க ஆரம்பித்திருக்கிறார்களோ என்று தோன்றியது. வீட்டு வாசலில், சாலையோரங்களில் கார் நிறுத்தினால் அபராதம் என்று அரசு அறிவித்திருந்தது. ஆனாலும் வீட்டுக்கு ஒரு கார் என்கிற விகிதத்தில் வெளியே கார்கள் நின்று கொண்டுதான் இருந்தன. ஒரு வேளை இந்தப் பகுதியெல்லாம் அரசின் கண்களில் படவில்லையோ என்று நினைத்துக் கொண்டார் இவர். இப்படிப் பயப்படாம நிறுத்தியிருக்காங்களே என்று ஆச்சரியப்படுவார். இப்போது தண்ணீர் ஏற ஏற அந்தக் கார்களெல்லாம் என்ன கதியாகும் என்று நினைத்தபோது ஐயோ பாவமே! என்று வயிற்றைக் கலக்கியது கருணாகரனுக்கு. என்ன ஆகுதோ ஆகட்டும் என்று விட்டுவிட்டது போலிருந்தது. அல்லது எந்த யோசனையும் பலன் தராமல் கையைப் பிசைந்து கொண்டிருப்பார்களோ என்று நினைக்க முற்பட்டார்.

பெரு நகரத்தில் காரின் தேவை அத்தியாவசியமாகியிருந்தது. உறவினர்கள் வீட்டு விசேடங்களுக்கு என்று டாக்ஸிகளுக்கு வாடகை கொடுத்து மாளவில்லை. கோயில் குளம் என்று போக, குழந்தைகளைப் பள்ளி கொண்டு விட, கூட்டி வர, கடைகளுக்குப் போக, திடீரென்று வெளியூர் பயணம் மேற்கொள்ள என்று பல நிலைகளிலும் காரின் தேவை அத்தியாவசியமாகி விட்டதோ என்று தோன்றியது. அதற்குச் செய்யும் செலவு முக்கியமில்லை. வசதிதான் முக்கியம் என்ற கதையாகிப் போனது. ஒரு காலத்தில் ராலே - பச்சை நிற சைக்கிள் வைத்திருந்தாலே கௌரவம், பிறகு எவன் ஸ்கூட்டர் வைத்திருக்கிறானோ அது கௌரவம் இப்போது கார் வைத்திருந்தால்தான் கௌரவம் என்றாகிப் போயிருக்கிறது. காரினால் அனுபவித்த வசதிகள் அதிகமா அல்லது அதற்குப் பராமரிப்பிற்காகச் செய்த செலவுகள் அதிகமா என்றால் இரண்டாவதுதான். ஆனாலும் கார் மோகம் மக்களை விட்டபாடில்லை. இன்றைய உலகமயமாக்கல் கற்றுக் கொடுத்த பாடங்களில் இதுவும் ஒன்று.

ரெண்டு பேரும் சம்பாதிக்கிறார்கள் என்றாலும், தன் பங்கும் இருக்கட்டும் என்று ஒரு தொகையை இவரும் அந்தக் கார் வாங்க என்று வழங்கியிருந்தார். அப்படியானால்தான் அதில் ஏறி உட்காருவதற்கு ஒரு அருகதை இருக்கும் என்பதும் இவரின் எண்ணமாயிருந்தது. மூணு லட்சம் கொடுத்திடுங்க என்று வள்ளிசாய் காயத்ரி சொன்னபோது இவர் மறுக்கவில்லை. மீதி அஞ்சோ, ஆறோ அவர்கள் சம்பாத்தியத்தில் போட்டுக் கொள்ளட்டுமே! அந்தக் காரைக் காப்பாற்ற வேண்டியது இன்றைய தினத்தில் முக்கியமாகிப் போனது. கார் பார்க்கிங்கில் எந்த நேரம் தண்ணீர் நுழையுமோ என்றிருந்தது. கன மழை, மிக கனமழை, அதிமிக கனமழை என்று பிரித்து அறிவிப்பதைப் பார்த்தால் எதுவொன்றையும் இந்த நகரம் தாங்காது என்றுதான் தோன்றியது.

முந்தைய புயலின்போது டூவீலர் மட்டுமே இருந்தது. ஆனால் கார் பார்க்கிங் பகுதியில் வண்டி முக்கால்வாசி மூழ்கிப் போனது. சர்வீசுக்கு விட்ட போது இன்ஜினுக்குள் பாம்பு சுற்றி இருக்கு சார் என்று மெக்கானிக் சொன்னபோது அடிவயிற்றில் கலக்கி அங்கேயே மயக்கம்போட்டு விடும் நிலைக்கு வந்து விட்டார் இவர். எப்படி ஓட்டி வந்தோம்? என்ற கேள்விதான் அவரை அந்நிலைக்குத் தள்ளியிருந்தது. சிறிது தூரம்தான் எனினும் அதுவரை அது அடங்கிக் கிடந்ததா? அல்லது

சுற்றிய பகுதியிலிருந்து எப்படி வெளியே வருவது என்று தெரியாமல் போனதா? அல்லது செத்துப் போய்விட்டதோ?

சாகல சார் நல்லவேளை உங்க அதிருஷ்டம், சாரைப் பாம்பு சார், சாரை வெளில இழுத்துப் போட்டதும் என்னா வேகம்ங்கிறீங்க அடிக்க முடில அந்தா அந்தப் பொந்துக்குள்ள போயிருச்சு என்றார் மெக்கானிக். அந்தத் தடவை அவன் கேட்ட கூலியை வாய் மூடிக் கொடுத்தார். வண்டியை இவர் எடுப்பதே இல்லை. பெரு நகரச் சாலைகளில் வண்டிகள் பறக்கும் வேகம் பயப்படுத்தியது. தன்னால் அதன் நடுவே சமாளித்து, ஜாக்கிரதையாக ஓட்ட முடியுமா என்ற ஐயம் ஏற்பட்டது. ரோடு வரை போவது வருவது என்றுதான் வைத்துக் கொண்டார். ரோட்டுக்குள்ளே கலப்பது என்பதில்லை. எங்கேயாவது விழுந்து அல்லது மோதி கால் கையை உடைத்துக் கொண்டால்? பிறகு இந்த வயசுக்கு எலும்பு சேராதே? நொண்டியாய் மற்றவர்களுக்கு சிரமம் அளித்து எப்படி மீதி வாழ்க்கையைக் கழிப்பது? கவனம், கவனம் என்று அவர் மூளை அவரை எச்சரித்திருந்தது.

இப்போதுதான் பெருமையாகக் கார் வேறு சேர்ந்து கொண்டிருக்கிறதே? தேவைகளை அதிகரிக்க அதிகரிக்கத் துன்பம்தான் போலும் ஆசைகளே துன்பத்திற்குக் காரணம் எளிய வாழ்க்கையே என்றும் நிம்மதி...! இருக்கிற குடிசைகளை இழந்துட்டு குடி படை எங்க ஒண்டுறதுன்னு அலையுது. நமக்கு நம்ம காரை எப்படிப் பாதுகாக்கிறதுங்கிறதுல கவனமாயிருக்கோம். எவ்வளவு முரண் நகை பாரு. பெருங்கவலையாயிருக்கு. இந்த ஏழை ஜனம் எங்க போகும். நினைத்து நினைத்துத் தனக்குத்தானே மனதுக்குள் நொந்து கொண்டார் கருணாகரன்.

பின்னால் உள்ள குடிசைப் பகுதி முழுக்கத் தண்ணீர் நிரம்பி விட்டது. இருக்கும் பொருட்களையெல்லாம் விட்டு விட்டு ஒரு பெரும் கூட்டம் பக்கத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் ஒண்டியிருந்தது. அதையாவது திறந்து விட்டார்களே என்றிருந்தது. சின்னப் பள்ளிக் கூடம்தான். மாடியிலிருந்து பார்த்தபோது அங்கு ஒண்டியிருக்கும் கூட்டத்தைப் பார்த்து மனம் பதை பதைத்தது. ஜே.சி.பி.இயந்திரங்களில் எப்படி எப்படியோ பெட்டி பெட்டியாகப் பார்சல்களைக் கொண்டு வந்து இறக்கிக் கொண்டிருந்தார்கள். அரசு இயன்றவரை உதவிகளை வழங்கிக் கொண்டுதான் இருந்தது. வரிசை வரிசை என்கிற சத்தம் இங்கு கேட்டது. கூட்டத்தில் சாப்பாட்டுப் பொட்டணம் வாங்க ஒரே அடிபிடி. அதை ஒழுங்கு படுத்தப் போலீசார். எல்லாருக்கும் உண்டு எல்லாருக்கும் உண்டு என்று கத்திக் கொண்டே விநியோகித்துக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் இடுப்பில் குழந்தையை வைத்துக் கொண்டும், இடிபட்டும், மிதிபட்டும் சனம் பரபரத்துக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் வானத்தில் உறலிகாப்டர் வேறு பறக்க ஆரம்பித்திருந்தது. எந்தெந்த மாடியில் ஆட்கள் அதிகமாக நின்று கையசைக்கிறார்களோ அங்கு மட்டும் பார்சல் பொட்டலங்கள் விழுவது தெரிந்தது. அவ்வளவு மழையிலும் மக்களுக்கு இந்த வேடிக்கை பார்க்கும் புத்தி போகவில்லையே என்று நினைத்தார் இவர். ஏம்பா நாமளும்தானே அதுக்கு வந்திருக்கோம் என்றான் பிரபு. இரண்டு மூன்று உறலிகாப்டர்கள் வெவ்வேறு பகுதிகளில் பறந்து கொண்டிருந்தன. ஆனால் இவர்கள் இருக்கும் பகுதிக்கு வரவேயில்லை. இவனும் பிரபுவும் மட்டும் இங்கு நின்றார்கள். மற்றெல்லாரும்தான் அவரவர் ஊர் போயாயிற்றே? என்னதான் போடுறான் பார்த்து விடுவோம் என்று வீச்சு வீச்சென்று கையசைத்தும் பலனில்லை. எட்டியே பார்க்கவில்லை இந்தப் பக்கம். மத்திய மந்திரி வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டதாகச் செய்தி வந்தது.

இடம் பத்தாம இந்த அபார்ட்மென்டுக்கு ஏதாச்சும் ஒரு கூட்டம் வந்தாலும் நாம யாரும் விரட்டக் கூடாது சொல்லிட்டேன் என்று கண்டிஷன் போட்டார் கருணாகரன். நாம மட்டும்தானேப்பா இங்கே இருக்கோம் மத்த எல்லாரும்தான் கிளம்பிப் போயிட்டாங்களே அந்த காலேஜ் மேடம் ஒருத்தங்க மட்டும் இருக்காங்க அவுங்களுக்கும் ஏதாச்சும் உதவின்னா நாமதான் செய்யணும்.

ஆபத்துக்குப் பாவமில்லே தாராளமா செய்யலாம். சொல்லிக் கொண்டிருந்தபோதே கீழே சத்தம் கேட்டது. ஒரு சனக்கூட்டம் உள்ளே நுழைந்திருந்தது. பக்கத்திலுள்ள தேவ நகர் குடும்பங்கள் என்று சொன்னார்கள். இடுப்பளவு தண்ணீரிலேயே வந்து ஒண்டியிருந்தார்கள்.

கார் பார்க்கிங்ல ஒரு கக்கூஸ் இருக்குல்ல அத அவங்களுக்குத் திறந்து விட்ரு வெளில இருக்கிற குழாயைப் பயன்படுத்திக்கட்டும் என்றார் இவர்.

அப்பா அது மழைத் தண்ணி மேல் தொட்டில தண்ணி தீர்ந்து போச்சு மூடியத் திறந்து வச்சிருக்கு மழைத் தண்ணி அதுல விழட்டும்னுதொட்டில மழைத்தண்ணி கொஞ்சமாச்சும் சேர்ந்தாத்தான் நமக்கே தண்ணி கிடைக்கும். இன்னும் நாலு நாளைக்கு மழை இருக்கும்ங்கிறான் மழை நின்னாலும் தெருக்குளம் வத்துற வரைக்கும் கரன்ட் வராது. நாமளும் அந்த மேடமும் சமாளிச்சாகணும் கீழ்க் குழாய் லீவரை மாடில மூடியாச்சு கழுவத்தானே மழைத் தண்ணியப் பிடிச்சு உபயோகப்படுத்திக்குவாங்க ஓகே என்று விட்டுவிட்டார் கருணாகரன். அதற்கு மேல் வற்புறுத்த முடியாது. காரணம் ஓடியாடுபவன் அவன். ரெண்டு நாளாய் உட்காராமல், சளி இருமலோடு அல்லாடிக் கொண்டிருக்கிறான். எல்லாவற்றிலும் அவனுக்கு உதவ முடியவில்லையே என்று இவருக்கு வருத்தம். இன்னும் வண்டிக்கு ஜாக்கி போடுவோம் என்று வேறு சொல்கிறான். தண்ணீர் ஏறும் முன் போட்டுத் தூக்கியாக வேண்டும். அதுவரை தண்ணீர் ஏறாமல் இருக்க வேண்டும். தண்ணீர் ஏறினால் அதில் நின்று ஜாக்கி ஏற்றும் வேலை செய்தாக வேண்டும். அது காய்ச்சலில் கொண்டு விடாமல் இருக்க வேண்டும். இருக்கும் நிலைமை மிகுந்த வருத்தத்தைத் தந்தது கருணாகரனுக்கு.

அடுக்ககத்தில் உள்ள எட்டு வீட்டிலும் இருப்பவர்கள் அவரவரைக் காப்பாற்றிக் கொள்ள என்று முன்னமே கிளம்பிப் போய் விட்டார்கள். எல்லோரும் வாடகைக்கு இருப்பவர்கள். மழை ஓய்ந்து, தண்ணீர் வற்றி. மின்சாரம் வந்து எல்லாம் நார்மலான பிறகு சாவகாசமாய் உறவு என்று சொல்லிக் கொண்டு வரு



வார்கள். அதுவரை என்னென்ன வேலை நடந்தது என்று ஒரு வார்த்தை கேட்டுக் கொள்ள மாட்டார்கள். வாட்ஸப் குரூப் பில் இன்னின்ன பணிக்கு இவ்வளவு இவ்வளவு என்று நீட்டிமு ழக்கிக் கொண்டிருப்பான் இவன். அதற்கு ஆயிரம் காரணம் கேட்பார்கள். கைக்காசு போட்டு செலவழித்த பணம் லேசில் வந்து சேராது. என்றைக்கானாலும் கொடுக்காமல் முடியாது, அதே நேரத்தில், காலதாமதமின்றிக் கொடுத்துத் தொலைப் போம் என்கிற அறிவு கிடையாது. அறிவென்ன, மனசு இல்லை. அவ்வளவுதான். இத்தனையையும் ஓடி ஓடி ஒருவன் செய்தி ருக்கிறானே... அவன் கைப்பணம் போட்டிருக்கிறானே அவ னுக்கு மட்டும் என்ன தலைவிதி என்கிற சிந்தனை ஒருவனுக் கும் இல்லை. வெறும் சுயநலமிகள். இதில் பராமரிப்புச் செலவு மிக அதிகம் என்கிற முனகல் வேறு. பிரதி மாதமும் அவரவர்க்கான பராமரிப்புச் செலவினத்தை லேசில் தருவ தில்லை. மாதக் கடைசி வரை இழு இழு என்று இழுத்து கடை சியில் மனசில்லாமல் வங்கிக் கணக்கில் தொகை மாற்றம் செய்வது. அதையும் பணம் அனுப்பியாச்சு என்று மனசோடு தகவல் தருவதில்லை. மனிதர்கள் ஏனிப்படி அல்பமாய் இருக்கிறார்கள்? வந்தபின்னால்தானே தெரிகிறது என் னென்ன பிரச்னை எழும் என்று? இதையெல்லாம் முன் வேறு எங்கேயும் படித்து அறிய வாய்ப்பேயில்லை. அனுபவப்பட அனுபவப்படத் தெரிந்து கொள்வதாய் இருக்கின்றன. எல்லா வற்றுக்கும் தன்னைத்தான் நொந்து கொண்டார் கருணாகரன். அடுக்ககத்தில் வீடு வாங்கியது மகா தவறு அதுதான் அவர் நிலை. இன்றுவரை அந்தத் தவறுக்காக நொந்து கொண்டி ருக்கிறார்.

வீட்டை வாடகைக்கு விட்டுட்டு நாம தனி வீடு பார்த்துப் போயிடுவோம்ப்பா இந்த வாடகையை வாங்கி அங்க கொடுப்போம். கூடக் கொஞ்சம் சேர்த்துன்னாலும் வசதியா, பிரச்னையில்லாமத் தனி வீடா நிம்மதியா இருக்கலாம் தானே? பையன் பிரவுவிடம் பொறுக்கமாட்டாமல் அனத்த ஆரம்பித்திருந்தார் கருணாகரன்.

அப்பாவின் அனத்தல் பொறுக்க மாட்டாமல் ஒரு நாள் பிரபு கோபமாய்ச் சொன்னான். என்ன இப்படிக் கோபப்பட்டுட்டான் என்றிருந்தது கருணாகரனுக்கு. இப்படி அவன் மறுத்துச் சொல்லுவான் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. மிகுந்த வருத்தமாயிருந்தது. இங்கிருந்து கிளம்பினால் இடம் வாங்கி, லோன் போட்டு, வீடு கட்டித்தான் நகருவேம்ப்பா அப்போ இதை வாடகை க்கு விட்டாப் போதும் வேறே வாடகை வீடு பார்த்து நாம போய் இருக்கிறாப்ல எல்லாம் ஐடியா இல்ல முடிவாய்ச் சொல்லி விட்டான்.

அப்போதுதான் யோசித்தார் கருணாகரன் தன் தவறை. பெரிய மனதோடு அவன் பெயருக்கு இந்த டபிள் பெட்ரூம் ஃப்ளாட்டை வாங்கினது தப்பு என்று. வாங்கினது கூடத் தப்பில்லைதான் அதைத் தன் பெயரிலேயே பதிவு செய்யாமல் விட்டதுதான் மாபெரும் தவறு என்று நினைத்தார். அதைச் செய்திருந்தால் இப்போதான தன் விருப்பத்தை சுதந்திரமாய் நிறைவேற்றியிருக்கலாம். யாரும் தடுக்க முடியாது. அநாவசியக் கஷ்டங்களுக்கு இடமில்லாமல் போயிருந்திருக்கும். அவன் பெயருக்கு வீடு இருப்பதை மனதில் வைத்து, மாற்ற முடியாது என்று பிடிவாதம் பிடிக்கிறான். தன் வார்த்தைக்கு மதிப்பில்லை. நல்லது சொன்னால் கேட்க வேண்டாமா? அதென்ன அத்தனை பிடிவாதம்? நான்தான் இருக்கேன்லப்பா எல்லா உதவியும் செய்றதுக்கு? பிறகென்ன உனக்கு வீடு மாத்தறதுல கஷ்டம்? என்று சொல்லிப் பார்த்தார். அவன் அசைவதாய் இல்லை.

சென்னைக்கு வந்த பிறகு, அதிலும் அவனுக்குத் திருமணம் ஆனபிறகு அதிகாரம் தன் கையிலிருந்து போய் விட்டாற் போல் உணர்ந்தார் கருணாகரன். இனிமே அவனை டா போட்டுக் கூப்பிடாதீங்க என்றாள் ஒருநாள் காயத்ரி. இவருக்கு அதிசயமாய் இருந்தது இது. என் பையனுக்கு என்றும் நான் தகப்பன்தானே? இதிலென்ன தப்பு? இது என் அன்பான உரிமையில்லையா? இதைப் போய்த் தடுக்கிறாளே? என்று எண்ணினார். ஆனால் இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவனும் ஒன்றும் சொல்லவில்லையே என்று நினைத்தபோதுதான் 'டா' வை நிறுத்த வேண்டும் என்று தோன்றியது அவருக்கு. கல்யாணம் ஆகிவிட்டதால் மனைவி முன், தான் 'டா' போட்டு அழைக்கப் படுவதை ஒருவேளை அவனே விரும்பவில்லையோ? அல்லது அந்தப் பெண் விரும்பவில்லையா? சரி விட்டு விடுவோம் என்று நிறுத்திக் கொண்டார் கருணாகரன். ஆனால் அந்த 'டா'-வில் இருந்த நெருக்கம் சற்றே விலகியது போல்தான் அவரால் உணர முடிந்தது.

ஏன் அவன் பெயருக்கு எழுதினீங்க? யாராச்சும் இப்படி செய்வாங்களா? மடத்தனமால்ல இருக்கு காலம் எதை எப்படி மாத்தும்னு சொல்ல முடியாதுங்க உங்களையே வெளியேத்தினாலும் போச்சு ப்ராப்பர்ட்டிலாம் கடைசி வரை நம்ம பெயரில்தான் இருக்கணும். அப்பத்தான் சிதைல போய் அடங்குறவரைக்கும் மதிப்பு மரியாதையா இருக்க முடியும். உலகம் போற போக்குத் தெரியாமச் செய்திட்டீங்களே? பலரும் இப்படித்தான் சொன்னார்கள். யோசிக்க ஆரம்பித்திருந்தார் கருணாகரன். இனி கைவசம் இருப்பதையும் கைவிட்டுவிடக் கூடாது என்கிற தீர்மானம் வந்தது அவருக்கு. ஆனால் தன் பையன் அப்படியெல்லாம் இருக்க மாட்டான் என்கிற நம்பிக்கையும் ஒரு பக்கமாய் இருக்கத்தான் செய்தது. ஆனால் கைபேசியில் பார்க்கும் வீடியோக்கள் அந்த நம்பிக்கையைத் தகர்த்தன. மருமகள் தன் மாமியாரைப் பிடித்துத் தள்ளிவிடும் ஒரு காட்சி. போ போய்த்தொலை என்ற சுடுசொற்களோடு. அந்தக் கிழவி தடால் என்று கட்டிலிலிருந்து கீழே விழும் காட்சி மனதைப் பதை பதைக்கச் செய்தது.

அப்பாவின் நினைவு தினத்திற்கு ஒரு முதியோர் இல்லம் சென்று பணம் கட்டியிருந்தார் கருணாகரன். அன்றைய தினம் அங்கிருக்கும் அனைவருக்கும் பாயாசம், வடை. நாலுவகைக் காய்கறிகள், பச்சடி, கிச்சடி, இனிப்பு, பழம், இவைகளோடு விருந்து. சாப்பாட்டு இலையின் முன் அமர்ந்து அவர்கள் தன் தந்தைக்காகத் தியானித்ததும், தனக்கு நன்றி தெரிவித்ததும், அவர்களை ஒவ்வொருவராக நின்று, தான் கவனித்ததும். பின் அவர்களோடு அமர்ந்து உண்டதும் மறக்க முடியாத நிகழ்வாயிருந்தது. மாலையில் அங்கு போய் காற்றாட அமர்ந்திருந்த பொழுது அவர்களில் பலர் வாசலையே நோக்கிக் கொண்டிருந்ததும், சாலையில் யார் வருகிறார்கள் என்று கவனித்துப் பார்த்ததும் மாதம் ஒரு முறை வந்து பார்த்துவிட்டுச் செல்லும் மகனைக் காணவில்லையே என்று ஏங்கிக் கிடந்ததும் இவரை மிகவும் வருத்தியது. அந்த நிலை தனக்கும் வந்து விடக் கூடாது என்று அப்போதைக்கு மனதைத் திடப் படுத்திக் கொண்டார் கருணாகரன். ஆனால் காலம் யாரை எவ்வாறு. எங்கு கொண்டு நிறுத்துமோ என்கிற பயமும் அவருள் இருக்கத்தான் செய்தது.

சிந்தனை அறுபட்டது. பல சமயங்களில் பின்னோக்கிப் போய் விடுவதாக உணர்ந்தார். எதிர்காலம் எப்படியிருக்குமோ என்கிற பயம் கூடவே வந்து கொண்டிருந்தது. சென்னைக்கு வரும் முன்பான தனக்கும் தன் மனைவிக்குமான பேச்சை நினைத்துப் பார்த்தார்.

சென்னைல ஒரு வீடு வாங்குவோம் நாம அங்க போயிடுவோம். அவனுக்கு ஒரு கல்யாணத்தப் பண்ணுவோம். தனிக் குடித்தனம் வைப்போம் பிறகு நாம இந்த மதுரைக்குத் திரும்ப வந்திடுவோம் இதுதான் கிளம்பும் முன் உண்டான சுருக்கமான பேச்சு, ஒப்பந்தம். அக்ரிமென்டா எழுதிக் கொடுக்க முடியும்? புருஷன் பெண்டாட்டிக்குள் என்ன அக்ரிமென்ட்? வாய் வார்த்தைதான் ஒப்பந்தம். அதற்கு மதிப்பில்லை என்றால்? அவள் இப்போது வர மறுக்கிறாள். பையனும் அமைதி காக்கிறான். நீ வேணா போய் இருந்துக்கோ என்று சொல்லி விடுவானோ? என்ற சந்தேகம் வந்தது இவருக்கு. நான் வராப்ல இல்லை. பையனோடுதான் இருப்பேன். அவன் போயிடுங்கன்னு சொல்லட்டும். கிளம்பறேன் அல்லாமல் நான் நகர்றாப்ல இல்லை என்றாள். அவன் அப்படிச் சொல்ல மாட்டான் என்கிற திடமிருந்தது அவளிடம். ஆனால் நீயும் இருப்பா அங்க ஏன் போறே? என்று ஒரு வார்த்தை வரவில்லை. போனாப் போய்க்கோ ரோட்டுல விழுந்து செத்தா சாவு! இதுதான் தன் கதியா?

ஆரம்பம் முதலே. அதாவது படிக்கிற காலம் முதலே அவன் அம்மா கோண்டுதான். அவர்கள் இருவரும் சேர்ந்துதான் மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்பார்கள். ஒன்றாய்

கோயில் போவார்கள். கடைக்குப் போவார்கள். அவன் ஊரில் இருந்தால் இவருக்கு வண்டி கிடைக்காது. அம்மாவைப் பின்னால் உட்கார்த்திக் கொண்டு ஊர்வலம் வருவான். சரி நாலு நாளைக்குத்தானே என்று விட்டுவிடுவார். காலேஜ் படிக்கும் போதும், பிறகு வேலைக்குப் போனபோதும் அப்படித்தான். ஏதாவது முக்கிய வீட்டுக் காரியமாய் வேண்டுமென்றால் மட்டும் அவர்களால் செய்ய முடியாததற்கு இவரை அணுகுவார்கள். மற்றப்படி பேச்சு பேச்சு பேச்சு அப்படி என்னதான் பேசுவார்களோ என்று நினைத்துக் கொள்வார் இவர். தனக்கு எதிராகவா பேசிவிடப் போகிறார்கள்? இதை ஏன் இத்தனை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்? பையனுக்கு அம்மாமேல் பிரியம் ஜாஸ்தி. இருந்துவிட்டுப் போகட்டுமே! அதனால் தனக்கென்ன பாதகம்? என்று விட்டு விட்டார் இவர். தன்னிடம் கொஞ்சம் அதிக நேரம் பேசிவிட்டால் கூட போதும் போதும் இன்னைக்கு அப்புறம் உங்கம்மா கோவிச்சிக்கப் போறா! என்று கிண்டலடிப்பார் சமயங்களில்.

அந்த ஒப்பந்தம் இப்போது காலாவதியாகி விட்டது. அவருக்கும் சேர்த்துத்தான். ஆனால் இவருக்குத்தான் இந்தச் சென்னையில் இருப்புக் கொள்ள மாட்டேனென்கிறது. ரெண்டு மாதத்திற்கொருமுறை ஊர் சென்று வருகிறார். அங்கு போய் அவர் ஜனங்களைப் பார்த்தால்தான் திருப்தி. அவர்கள் பேசுகிறார்களோ இல்லையோ, ஒரு சிறு புன்னகை, நல்லாயிருக்கீங்களா? என்ற ஒற்றை வார்த்தைக் கேள்வி வேண்டாமே அவர்களையெல்லாம் கண் கொண்டு பார்த்தாலே போதுமே மனதிற்குப் புதிய உற்சாகமும், ஆரோக்கியமும் வந்துவிடுகிறதுதான். அப்படித்தான் இவரது மீதி வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. எங்கே வாழ்க்கை துவங்கும், அது எங்கே எவ்விதம் முடியும்? இதுதான் பாதை, இதுதான் பயணம் என்பது யாருக்கும் தெரியாது! பாதையெல்லாம் மாறி வரும் பயணம் முடிந்து விடும் பாடலின் கடைசி வரி அவரை ஈர்த்தது. என்று முடியுமோ இந்தப் பயணம் என்று அவர் மனது ஏங்கியது. கடந்து போன காலங்களின் ஈரத்தில்தான் இப்போது தான் மீதி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டார் கருணாகரன். நடப்பு வாழ்க்கை அவருக்கு அத்தனை ஸ்வாரஸ்யம் தருவதாயில்லை. சொல்லப் போனால் பையனின் திருமணத்திற்குப் பின்பே அந்த ஸ்வாரஸ்யம் போய்விட்டது என்று துல்லியமாயத் தோன்றியது அவருக்கு. தனிக் குடித்தனம் வைத்து விட்டு நாம் நம் இடம் பெயர்ந்து விடுவோம் என்ற அவரது கோரிக்கை நிராகரிக்கப் பட்டது அவருள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

அவுங்கள்லாம் ஏதாச்சும் சாப்டாங்களா என்று கீழே போய்க் கேட்டார் கருணாகரன். மழைத் தண்ணில தப்பிச்சு வர்றதே பெரும்பாடாப் போச்சு சாமி எங்க சாப்பிடுறது என்று அவர்கள் துக்கமாய் சொன்னார்கள். வாங்கி வைத்திருந்த பிஸ்கட் பாக்கெட்டுகளைக் கொண்டு போய்க் கொடுத்தார். எதற்கும் இருக்கட்டும் என்று படகில் வந்தவர்கள் கொடுத்த ரொட்டிப் பாக்கெட்டுகள் கிடந்தன. அவற்றையும் எடுத்துப் போய் நீட்டினார். பிரட் ரோஸ்ட் பண்ணிச் சாப்பிடணும்னு சொன்னீங்க? என்று கேட்க காயத்ரியின் கேள்விக்கு பதில் சொல்லாமல் இறங்கினார். ரொம்ப முக்கியம் என்று கேலியாய் அவர் மனது நினைத்தது. பால் பாக்கெட் என்று கேட்டு வெள்ளத்தில் இறங்கிய போது அடுத்தாப்ல வண்டி வரும் சார் என்று சொல்லி விட்டுப் போயிருந்தார்கள். அதுபோல் அடுத்து வந்த படகில் கை நீட்டிய போது பால் பாக்கெட்டிற்கு பதிலாக பால் பவுடர் பாக்கெட்டுகளை தாராளமாய்க் கொடுத்து விட்டுப் போனார்கள். அதை எடுத்துக் கொண்டு கொடுக்கக் கிளம்பினார்.

இதக் கொண்டு கொடுக்கப் போறீங்களே? தண்ணிக்கு எங்க போவாங்க? என்று காயத்ரி நினைவு படுத்த, நம்மகிட்டதான் மூணு கேன் இருக்கே, ஒண்ணை அவங்களுக்குக் கொடுத்திடுவோம் என்று அவர் சொல்லியது அவளுக்குப் பிடிக்கவில்லை. இதக் கொடுங்க வேண்டாங்கலை தண்ணி கேன் நமக்கு வேணும் என்று அவள் தடுத்தபோது அவருக்குக் கோபம் வந்தது. போகட்டும் காயத்ரி, நமக்கு வாங்கிக்கிடுவோம். எதிர் கட்டிட பீகார் பசங்கள்ட்ச் சொல்லி நான் வாங்கிட்டு வரச்சொல்றேன். ஒரு அவசரத்துக்குத்தான், எத்தனை குழந்தைகள் இருக்கு தெரியுமா அங்கே? என்றார்.

சுடவச்சுக் கொடுத்தாப் பரவால்ல வெறும் தண்ணில கரைச்சு சாப்பிட்டாங்கன்னா வயித்துக்கு என்ன செய்யுமோ? என்றாள் காயத்ரி. அவங்களுக்கு அதெல்லாம் ஒண்ணும் செய்யாது. எல்லாக் கோளாறும் நமக்குத்தான் வரும். நமக்குத்தான் குடல் வீக். அவுங்களுக்கு எதுவும் ஜீரணிக்குமாக்கும் என்று விட்டு ஒரு கேனையும் கஷ்டப்பட்டுத் தூக்கக் கிளம்பினார்.

நீ இறங்குப்பா நான் கொண்டு வந்து தர்றேன் என்று எழுந்தான் பிரபு. தான் அந்தக் கேனையும் தூக்கிக் கொண்டு இறங்கினால் நிச்சயம் மாடிப் படிகளில் வழுக்கி விழத்தான் செய்வோம். பின் எப்படி செய்யத் துணிந்தோம் என்று எண்ணி ஒரு கணம் தன்னைத் தடுத்த மகனை நினைத்துக் கொண்டார். ஆபத்திற்கு நிச்சயம் வரத்தான் செய்வான் என்ற நம்பிக்கை வந்தது அவருக்கு. அத்தனை சுலபமாய் நம்பிக்கை இழந்து விடத் தேவையில்லைதான். எப்போதுமே எந்த விஷயத்தையுமே தான் கொஞ்சம் அதீதமாய்க் கற்பனை செய்து கொள்வதாய் அவருக்குத் தோன்றியது.

ஃபோனை எடுத்து கார்ப்பரேஷனுக்குத் தகவல் சொன்னார். வெகு நேரம் யாருமே எடுக்கவில்லை. ரிங் போய்க்கொண்டேயிருந்தது. ஆபீசே திறந்திருக்கிறதோ என்னவோ என்ற சந்தேகம் வந்தது. ஃபோனில் 30 பாயின்ட்தான் இருந்தது மிச்சம். இன்னும் பத்து குறையும் வரை பேசலாம். சார்ஜ் போட முடியாது. கரன்ட் இல்லை. ஏதாச்சும் ரெண்டு மூணு ப்ளக் பாயின்ட்டில் இன்வெர்ட்டர் கனெக்ஷனும் கொடுத்திருக்கலாம். இந்த மாதிரி இக்கட்டான சமயங்களில் சார்ஜ் போடவாவது உதவும். இப்போது புத்தியில் உறைத்தது.

நாம் குறிப்பாய்க் கவனித்துச் சொல்வதை எங்கே பசங்கள் கேட்கிறார்கள். அவன் அம்மா சொல்வதுதான் வேத வாக்காக இருக்கிறது அவனுக்கு. எப்படியோ போங்கள் என்று ஒதுங்க நினைத்தது மனம். அதுவும் அவனது திருமணத்திற்குப் பிறகு அவர் அடியோடு ஒதுங்கி விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். என்னவோ செய்து கொள்ளுங்கள் எனக்குத் தெரியாது என்றிருந்தார். வரவு செலவு எதிலும் தலையிடுவதில்லை.ஆனாலும் இந்த மாதிரி இக்கட்டான சமயங்களில்

அப்படி ஒதுங்கியிருக்க முடியுமா?

இருக்கும் களேபரத்தில் தான் சொன்னது எதிர்த்தரப்பில் காதில் விழுந்ததா என்று கூட தீர்மானிக்க முடியவில்லை. வருவாங்க சார் வருவாங்க சார் என்ற வார்த்தை மட்டும் கேட்டது. எதுக்கு வருவாங்க. யார் வருவாங்க எங்க வருவாங்க இந்த ஜனங்களையெல்லாம் ஏதாச்சும் பாதுகாப்பான இடத்துல கொண்டு சேர்ப்பாங்களா அல்லது தண்ணி வத்துற வரைக்கும் அவங்க இங்கதானா? கீழே இம்புட்டு ஆட்களைப் பரிதவிக்க விட்டிட்டு மேலே நாம எப்படிச் சாப்பிடறது? சோறு உள்ளே இறங்குமா? என்றிருந்தது இவருக்கு. குறைந்தது மோர் சாதமாவது ஆளுக்கு ஒரு கப் ஒரு கப் என்று சாதம் வடித்துக் கொடுக்கலாம். தான் சொன்னால் காயத்ரி கேட்பாளா? அல்லது பையன்தான் சரி என்பானா? இம்மாதிரிக் காரியங்களெல்லாம் அவர்களுக்குப் பழக்கமில்லை. தேவைப்படும் இக்கட்டான காலங்களில் ஒரு சமய சந்தர்ப்பம் என்று இல்லையா? செய்தால் என்ன கௌரவம் குறைஞ்சு விடப் போகிறது? புண்ணியம்தானே? ஆனால் அவர் வார்த்தைகள் அங்கே எடுபடாது.

சின்ன வயசிலிருந்தே ரொம்பவும் வறுமையையும், தரித்திரத்தையும், பற்றாக்குறைகளையும், அவமானங்களையும் சந்தித்து வளர்ந்தவர் கருணாகரன். அதனால் ஏழ்மை என்பது எவ்வளவு துயரமானது என்பதை அவர் அறிவார். கஷ்டப்படுபவர்களைப் பார்த்தால் என்னமாவது தன்னால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்று நினைப்பார். ஒரு பிச்சைக்காரனுக்கு ஏதாவது போடுவது என்றால் கூட பத்து ரூபாய்தான் போடுவார். ரெண்டு ரூபாய் ஒரு ரூபாய், ஐந்து ரூபாய் என்று என்றுமே பிச்சையிட்டதில்லை அவர். இல்லையென்றால் பக்கத்து டீக்கடையில் சொல்லி டீ சாப்பிடுங்க என்று கடையில் காசைக் கொடுத்து விடுவார். கோயிலுக்கு என்று சென்றால் சில்லரையாக மாற்றி வைத்துக் கொண்டு கிளம்புவார். வெளியே அமர்ந்திருக்கும் எல்லாப் பிச்சைக்காரர்கள், பண்டாரங்களுக்கும் வித்தியாசமின்றி ஒரே மாதிரி பத்துப் பத்தாய் எடுத்து நீட்டி விடுவார். அவரைப் பொறுத்தவரை சாமி கும்பிட்ட திருப்தி அதில்தான் வந்தது அவருக்கு.

இந்தச் சமயத்தில் இன்னொன்று ஞாபகம் வந்தது அவருக்கு. மதுரையில் சில ஆண்டுகளுக்கு முன்பு வந்த வெள்ளத்தின் போது அப்பா இ.பி. கான்டீனில் வேலை பார்த்த சமயம். பள்ளிகளிலும், கோயில்களிலும், கல்யாண மண்டபங்களிலும் தங்க வைக்கப்பட்டிருந்த பொது ஜனங்களுக்கு பொங்கல், தயிர்சாதம், உப்புமா, கிச்சடி என்று இரவு பகல் பார்க்காது செய்து போட்டு கடைசியில் அது நான் இந்த மக்களுக்கு செய்த சேவையாய் இருக்கட்டும் என்று கூலி வாங்க மறுத்து விட்டதும், மூன்று நாட்களாய்த் தூக்கமில்லாமல் உழைத்து, வீடு வந்து நாள் முழுக்க உறங்கி ஓய்வு எடுத்ததும் அந்த மாதிரி நிகழ்வுகளையெல்லாம் இந்தக் காலத்து இளைய தலைமுறையிடம் சொல்ல முடியுமா? காது கொடுத்துத்தான் கேட்பார்களா அல்லது அதன் மதிப்பைத்தான் உணருவார்களா? அது வெறும் செய்தியாகத்தான் அவர்களின் காதில் விழும். இன்னொரு காது வழியே வெளியேறிவிடும். மூத்த தலைமுறையின் விழுமியங்களான விஷயங்கள் மதிப்பற்றுப் போன காலம் இது. சொல்லிப் புண்ணியமில்லை.

நாம காரைப் பத்தி யோசிக்காமயே போயிட்டோம் என்றாள் காயத்ரி. முதல்ல நம்மள எப்படிப் பாதுகாத்துக்கிறதுங்கிறதப் பார்ப்பியா, காரைப் பத்திச் சொல்றே? அதைக் காசு கொடுத்து சரி பண்ணிக்கலாம். இல்ல இன்ஷுரன்ஸ் வந்திடும் அதுவா இப்பப் பெரிசு? என்றார் இவர். என்னப்பா இப்டிச் சொல்றே, எவ்வளவு உபயோகமா இருக்கு காரு? பத்து லட்சம் மதிப்பான அதைக் காப்பாத்துறதும் முக்கியம் தானே? கொஞ்சம் யோசிக்காமப் போயிட்டேன். சுதாரிச்சிருக்கணும். நிறையப் பேரு பாலத்துல கொண்டு நிறுத்திட்டாங்க. நம்ம அபார்ட்மென்ட்லயே கீழே ஒருத்தர் அப்டி செய்திருக்கார். பெரிய காத்து அடிச்சிதுன்னா காரை அப்டியே புரட்டி அலாக்காக தூக்கி பாலத்துக்குக் கீழே எறிஞ்சிடும்ப்பா நீங்க வர்றதுக்கு முன்னாடி அப்டி நடந்திருக்கு. நான் பார்த்திருக்கேன். அங்க கொண்டு நிறுத்தறதெல்லாம் சரிப்படாது என்றான் பிரபு. இவ்வளவு நேரம் அதையே நினைத்துக் கொண்டிருந்திருப்பானோ? உறவினர்கள் வீடு ஏதேனும் வசதியா என்றும் யோசனை போனதுதான். அங்கு ஏற்கனவே அவர்களின் கார், அடுக்ககமாயிருந்தால் அங்குள்ளவர்களின் கார் என்று இருக்குமே எனவே அந்த யோசனை கைவிடப்பட்டது. காரில் மதுரைக்கே கிளம்பி விடலாமா என்றும் ஒரு யோசனை வந்தது. ஒரு வாரம் கழித்து வந்தால் போயிற்று. ஆனால் இது வரை வெளியூர் என்று காரில் நீண்ட தூரப் பயணம் மேற்கொண்டதில்லை. அதுவும் இந்த மழை நேரம் வேண்டாம் என்று தோன்றியது. பகலில் விடிகாலை வெளிச்சம் வந்தவுடன் கிளம்பி, மாலைக்குள் மதுரை சென்றடைந்துவிட வேண்டும். இரவுப் பயணம் கூடாது. அப்படி ஒரு முறை போவோம் என்று சொல்லியிருந்தார் பையனிடம். ஆனால் அதற்கு இது சமயமில்லை.

நல்லவேளை ஒர்க் ஷாப்பிலயே நிக்காம சர்வீஸ் முடிஞ்சவுடனேயே எடுத்துட்டு வந்துட்டோம் இல்லன்னா அங்க மாட்டியிருக்கும். என்ன கதியாகியிருக்குமோ? அந்த ஒர்க் ஷாப் கிரவுன்டே ஒரு பெரிய குளம். நூத்துக்கும் மேலே வண்டி நிற்கும். அதோகதிதான் இப்போதைக்கு அவன் செல்லப்பிள்ளை அந்தக் கார்தான். இந்த அளவுக்கு சாதாரணமாக ஓட்டக் கற்றுக் கொள்வான் என்று எதிர்பார்க்கவேயில்லை. கார் தயாரிப்பு நிறுவனமே ஓட்டுநர் பயிற்சியும் அளிக்கிற இடத்தில் சென்று சேர்ந்து அவனுக்கு டிரைவிங் நன்றாகக் கை வந்திருந்தது.

நல்லா ஓட்டுவேம்ப்பா பயப்படாம வா என்று அவன் ஆசைப்பட்டு அழைத்தபோது மறுத்துவிட்டார் கருணாகரன். காயத்ரி தான் நான் வரேண்டா உங்கப்பா ஒரு பயந்தாங்கொள்ளி என்று கூடப் போனாள். அவளை வைத்துக் கொண்டு இந்தச் சென்னையையே பல முறை சுற்றி வந்து விட்டான் அவன். ஓட்டலுக்கெல்லாம் போய் அம்மாவுக்கு விருப்பப்பட்டதை வாங்கிக் கொடுத்து திருப்தி பண்ணிக் கூட்டி வந்தான்.

நான் வரட்டுமாடா என்று இவர்தான் வலியக் கேட்டார். அப்போது இவருக்கு அவன் மேல் நம்பிக்கை வந்திருந்தது. ஏறி உட்கார்ந்து கொண்டார். நன்றாகத்தான் ஓட்டினான். அந்த

நிதானம் இவருக்குப் பிடித்திருந்தது. இரண்டாவது மாடிதான் வீடு என்பதால் இப்போது காரைக் காப்பாற்ற வேண்டியதே முதல் பணி. வீட்டிற்கு வேண்டியதைக் கூட இடுப்பளவு தண்ணீரில் நடந்து போய் வாங்கி வந்து விடலாம். அதற்கு மேல் ஏறாமல் இருக்க வேண்டும். முன்பு வந்து பிரளயப்படுத்தின புயல் இந்த அனுபவத்தைக் கொடுத்திருந்தது.

ஓரளவுக்கு மூன்று நாளைக்குத் தாங்குமாறு குடி நீர், காய்கறி என்று இருந்தது. பால்தான் பற்றாக்குறை வரும். பார்த்துக் கொள்ளலாம் என்று தோன்றியது. மேல் தொட்டியில் தண்ணீர் இல்லை. மூடியைத் திறந்து வைத்தாயிற்று. மழை நீர் இறங்குமளவுக்கு இறங்கட்டும் என்று. கீழே சம்ப்பில் முதல் நாள்தான் லாரித் தண்ணீர் வந்து நிரப்பியிருந்தது. இப்போது கார் பார்க்கிங்கில் தண்ணீர் ஏறினால் அந்தச் சாக்கடைத் தண்ணீரும் அப்படியே மூடி வழியே சம்ப்பில் இறங்கி விடும். அத்தனையும் பாழ். அந்த நீரைப் பிறகு பயன்படுத்தவே முடியாது. மோட்டார் கொண்டு வந்து இறைத்து வெளியேற்ற வேண்டும். சம்ப்பைச் சுத்தம் செய்து, புது லாரித் தண்ணீர் ஏற்ற வேண்டும். நினைக்க நினைக்க கருணாகரனுக்கு வயிற்றைக் கலக்கியது.

தெரியாத்தனமா ஏன் முட்டாள்தனமான்னே சொல்லலாம் சென்னைல அடுக்கக வீடு வாங்கினது பயங்கரத் தப்பு. அதுலயும் இந்த மாதிரி ஏரியாவுல வாங்கினது படு மடத்தனம் என்று நினைத்துக் கொண்டு மனதுக்குள் அழுதார். அங்க தண்ணி தேங்கும்னு சொல்வாங்க பார்த்து வாங்கு என்றார்கள். தண்ணீர் தேங்குறதப் பார்த்து வாங்கு என்று சொன்னார்களோ என்று நினைத்து அத்தனை சோகத்திலும் சிரிப்பு வந்தது இவருக்கு. அப்படிப்பார்த்தால் இன்று உறவினர்கள் இருக்கும் பகுதிகளும் வெள்ளக் காடாய்த்தான் கிடக்கிறது என்று தகவல் வருகிறது. அதில் ஒரு சமாதானம் என்று சொல்லலாமா? மனிதனுக்கு தான் கஷ்டப்படுவதைவிட அடுத்தவன் சுகமாய் இருந்து விடுவானோ என்பதில் அக்கறை அதிகம். அப்படிப்பார்த்தால் அந்த இடத்தில் தண்ணீர் தேங்கும். வாங்காதே வேறு இடம் பார் என்று யாருமே உறுதியாய்ச் சொல்லவில்லையே?

ரெண்டு மூணு நாள் தண்ணி சேரும் சார் பிறகு வத்திடும் அப்டி ஒண்ணும் பயப்பட வேண்டியதில்ல இது பில்டர் சொன்னது. ஐந்தடி தோண்டினால் தண்ணீர் நிற்கிறது. உப்புத் தண்ணீர். உபயோகப்படுத்த முடியாத தண்ணீர். இருந்து என்ன புண்ணியம்? அதில் பெல்ட் போட்டு, பில்லர் நிறுத்தி கட்டடம் எழுப்பியிருக்கிறார்கள். அந்தப் பகுதி முழுவதுமே ஒரே அடுக்ககங்கள்தான். எத்தனையைத்தான் இந்த ஈரப்பகுதி தாங்கப் போகிறதோ? பூமி மாதா எவ்வளவுதான் பொறுப்பாளோ? சிவனே என்று ஊரிலேயே இருந்திருக்கலாமோ என்கிற அளவுக்குக் கற்பனை போனது கருணாகரனுக்கு. வலிய வந்து சென்னையில் மாட்டிக் கொண்டோமே என்று நினைக்க ஆரம்பித்தார். சென்னை அவருக்குள் ஒட்டாமல் போனதற்கு இதுவே பிரதானமான காரணமாய்த் தோன்றியது.

வெளியே மழை விடாது பெய்து கொண்டிருந்தது. குழாய்களைத் திறந்து விட்டதுபோல் தண்ணீர் தொடர்ச்சியாக இறங்கிக் கொண்டிருந்தது. மழை பெய்தல் என்பது வேறு, பொழிதல் என்பது வேறு என்று அந்த நேரம் கருணாகரனுக்குத் தோன்றியது. இரவு பூராவும் நிற்காமல் பெய்த மழை. காலையில் சாலையை அடைத்து குப்பை கூளங்களுடன் பொதக் பொதக் என்று பக்க வீட்டுச் சுவர்களில் மோதி தண்ணீர் வெளியேற வழியில்லாமல் அலம்பிக் கொண்டிருந்த காட்சி மனதுக்குள் பயத்தை ஏற்படுத்தியது.

கார் பார்க்கிங்கிற்குள்ள வந்திடுச்சா தண்ணீ? என்றார் கருணாகரன். அவ்வளவு உயரத்திற்கு வராது என்ற எண்ணமிருந்தது அவருக்கு. எட்டுச் சறுக்குத் தடுப்புகளோடு சாலையிலிருந்து உயரமாய்த்தான் கார் பார்க்கிங் பகுதி இருந்தது. அந்தப் பகுதிகளில் உள்ள மற்ற அடுக்ககங்களில் இருக்கும் உயரத்தைக் காட்டிலும் கூடுதல்தான் என்று வெளியே நடைப் பயிற்சிக்குச் செல்லும் சமயங்களில் ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து ஆறுதல்பட்டிருக்கிறார் கருணாகரன். ஆனாலும் இந்த முறை பெய்யும் மழை பயப்படுத்தியது.

முதல் நாள் காலையில் ஆரம்பித்த மழை விடாது பெய்து கொண்டிருக்கிறது. முன்ஜாக்கிரதையாக உடனுக்குடனே மின்சாரத்தைத் துண்டித்து விட்டார்கள். இருக்கும் இன்வெர்ட்டர் எத்தனை நாளைக்கு வரும்? அதிக பட்சம் ரெண்டு நாள். பிறகு அதுவும் கண்ணை மூடிக் கொள்ளும். அதற்குள் மழை நிற்குமா? மழை நின்று என்ன பயன்? தேங்கியுள்ள தண்ணீர் வடிந்தாக வேண்டுமே?

பகல்ல லைட் போடாதீங்கப்பா உங்க ரூம்ல ஒரு ஃபேன் மட்டும் ஓடட்டும். அதுவும் தேவைன்னாத்தான். அணைச்சு வச்சீங்கன்னா ராத்திரி தூங்குறபோது உதவும். எங்களுக்கு ஃபேன் வேண்டாம். இப்பவே குளிர் வந்தாச்சு தாங்க முடில சொல்வதைச் சொல்லி வைப்போம் என்று ஓதிவிட்டார் கருணாகரன்.

சாதாரண சமயங்களில் ஆளில்லாத இடத்தில் ஓடி ஓடிச் சென்று ஃபேனை அணைப்பார். கரன்ட் என்ன ஓசிலயா கொடுக்கிறான்? இடத்த விட்டு எந்திரிச்சா, ஃபேனை அணைங்கப்பா என்று பொத்தாம் பொதுவாய்த்தான் சொன்னார். ஆனால் அதுவே சண்டையாகிவிடுமோ என்று பயமாய் இருந்தது. பாத்ரூம் போனேன். வந்திட மாட்டனா? அதுக்குள்ளயும் அணைக்கணுமா? என்று காயத்ரியே கூறுகிறாள். இப்படி தினமும் பாத்ரூம் போக, அடுப்படி போக, துணி உலர்த்தப் போக, எடுக்கப்போக என்று நகரும் போதெல்லாம் அணைக்காமல் போனால் கரன்ட் வீணாகி மாதம் கூடி யூனிட் அதிகரிக்காதா? ரெண்டு மாசத்திற் கொருமுறைதான் பில். ரேட்டை ஏற்றி விட என்றே ஏற்பட்ட கணக்கு. இ.பி.யில் வைத்திருக்கும் ஸ்லாப் பில் தொகையை எங்கோ கொண்டு நிறுத்தியது. இவ்வளவு மின் கட்டணமெல்லாம் நம்மள மாதிரி சாதாரண ஆட்கள் வீட்ல வர்றது நியாயமா? பொறுப்பில்லாம செயல்பட்டா அப்டித்தான் எகிறும். தேவைக்குப் போட்டுக்க வேண்டிதான். ஆனால் விரயம் பண்ணக் கூடாது. அதை நிறுத்தினாலே பாதிக் கட்டணம் குறையும், சொல்லித்தான் பார்த்தார். சங்கடமாய்த்தான் நினைத்தார்கள். இன்னும் கொஞ்சம் போனால் பெரிய தொல்லையாப் போச்சே இவரால, என்று சொன்னாலும் போச்சு, வயதான காலத்தில் வாயை அடக்கித்தான் வாழ்ந்தாக வேண்டும் போலிருக்கிறது.

அப்படிப் பார்த்தால் கீழே கார் பார்க்கிங் லைட்கள் பக பக வென்று எரிந்து கொண்டிருக்கின்றன. வண்டிகளும், கார்க ளும் நிற்கின்றன. டூவீலரில் பெட்ரோல் திருடு போகிறது. டூ வீலர் காணாமல் போகிறது. வெளிச்சம் இருந்தாலாவது திருட வருபவனுக்கு ஒரு பயம் இருக்கும். தயக்கம் ஏற்படும். கார் பார்க்கிங் ஏரியாவிற்கு கமர்ஷியல் ரேட் போடுகிறார்கள் இ.பி. யில். நானூறு ஐநூறு என்று வந்தது இப்போது நாலாயிரம் தாண்டி வருகிறது.

எல்லாமும் சொல்லித்தானே, தகவல் அறிஞ்சுதானே வாட கைக்கு வர்றாங்க? அப்புறம் இப்போ மெயின்டனன்ஸ் சார்ஜ் கொடுக்க அழுதா? ஒருத்தனே கைக்காசு போட்டுட்டிருக்க முடியுமா? பத்துத் தேதிக்குள்ளாவது கொடுக்கணும்ல... மாசக் கடைசி வரை இழுத்தா என்ன அர்த்தம்? புலம்பிக் கொண்டேதான் இருந்தான் பிரபு. மூன்று மாதத்திற்கொரு முறை பராமரிப்பினை சுழற்சி முறையில் ஒவ்வொரு வீட்டுக் காரர் பார்த்தாக வேண்டும் என்பது பேச்சு. வெறும் பேச்சு தான். அக்ரிமென்ட்லாம் கிடையாது. வெறும் எட்டு வீடு. இதற்கு ஒப்பந்தம் ஒரு கேடா என்று விட்டாயிற்று. எல்லாமும் வாய் வார்த்தையில்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. அதனால் என்னால முடியாது, உன்னால முடியாது என்று ஆளாளுக்கு மறுக்கிறார்கள். வெறு வழியின்றி பிரபுவே பொறுமையோடு இழுத்துச் செல்கிறான்.

நீயும் முடியாதுன்னு படுத்துக்கோ இல்ல ஒரு வாரம் லீவைப் போடு மதுரை போயிடுவோம் யாரோ பார்த்துக்கிறாங்க இவ் வளவு எதுக்கு? வீடை வாடகைக்கு விட்டுட்டுக் கிளம்புன்னா கேட்க மாட்டேங்கிறே? எல்லாக் கஷ்டங்களுக்கும் அது ஒண் ணுதான் தீர்வு அப்பா சொல்றதக் கேளு மன்றாடினார் கரு-ணாகரன்.

அது மட்டும் அவனுக்கு ஏனோ மனசாகவில்லை. வாங்கிய இந்த வீட்டில் எவ்வளவோ அழகு படுத்தியிருக்கிறான். மேலே ஃபால்ஸீலிங் போட்டு குளிர்ச்சியாக்கி இருக்கிறான். டிசைன் டிசைனாக விளக்குப் போட்டிருக்கிறான். அங்கங்கே பார்த் துப் பார்த்துச் சொல்லி ஷெல்ப் வைக்கச் செய்து, அதைக் கண்ணாடிக் கதவுகள் கொண்டு மூடி அத்தனையும் நாம் அனுபவிப்பதற்காகச் செய்தது. அடுத்தவனுக்குக் கொடுத் துட்டுப் போகவா? ஒரு பத்து வருஷமாச்சும் அனுபவிக்க வேண்டாமா? அப்புறம் சொந்த வீடுங்கிறதுக்கு என்னதான் அர்த்தம்? ஆபீசுக்குப் பக்கமா இருக்கு அதுவே பெரிய வசதி நகரத்துக்குள்ள போய்வர எலெக்ட்ரிக் டிரெய்ன் வசதி பஸ் வசதி பக்கா ஏரியா தள்ளியிருக்கிறவங்ககிட்டல்லாம் கேட்டுப் பார்த்தாத்தான் இந்த ஏரியாவோட அருமை தெரியவ ரும் என்று சொல்லி வாயை அடக்கினான்.

கருமேகங்கள் அடர்ந்திருக்க பட்டப் பகலில் எங்கும் இருள். ஜன்னல் வழியே துளி வெளிச்சமில்லை. திறந்து வைக்கவும் வழியில்லை. பிறகு லைட்டைப் போடாதே என்றால் எப்படி? இருட்டுக்குள் எப்படிப் புழங்குவது? ஆகையால் ஓரளவுக்கு மேல் எதுவும் சொல்ல முடியாத நிலையிருந்தது.

உங்க அப்பா என்ன ஓடி ஓடி வந்து லைட்டை அணைச்சிட் டுப் போறார்? போட்டவங்களுக்குத் தெரியாதா அதை எப்ப அணைக்கணும்னு? காரியம் முடியறவரைக்கும் அந்த ரூமுக் கும் இந்த ரூமுக்கும் எனப் போகத்தானே வேண்டியிருக்கும் உடனே படக்குன்னு லைட்டை அணைச்சு அணைச்சுப் போட முடியுமா? பல்ப் ஃபியூஸ் ஆயிடாது சும்மாச் சும்மா அணைச் சுப் போட்டா? குழந்தை தூங்குறான்ல? அங்கயும் வந்து அணைச்சிடப் போறாரு! கொஞ்சம் சொல்லுங்க அவர்ட்ட பிரீதி சொல்வதைக் கேட்டுக்கொண்டே அமைதி காத்தான் பிரபு. பையன் தூங்கும் இடத்திலுமா வந்து அணைப்பார்? அந்த அறிவு கூட அவருக்கு இல்லையா என்ன? வேண்டாத பேச்சு!

எதிர் வீடுகளில் ஒன்றிரண்டில் வெளிச்சம் தெரிந்தது. அவர்க ளுக்கு மட்டும் எங்கிருந்து எரிகிறது? இன்னுமா இன்வெர்ட்டர் தீரவில்லை? அந்த வெளிச்சம் வீதியில் நிறைந்திருக்கும் தண்ணீரிலும் பளிச்சிட்டது. அப்பாடீ! எவ்வளவு குப்பைகள்? அங்கங்கே கொத்துக் கொத்தாக நகர இடமின்றித் தேங்கிக் கிடக்கின்றனவே! மழை நீர் வடிகாலுக்குப் போட்டிருக்கும் துளைகளில் போய் அடைத்துக் கொள்கிறது. அந்த வடிகா லுக்குத் தண்ணீர் இறங்க மறுக்கிறது. யார் போய் எடுத்து விடுவது? குப்பையை விலக்கினால் தொப தொபவென்று தேங்கியிருக்கும் தண்ணீர் இறங்க வாய்ப்பு. இந்த மழையில் எவன் போய் பொந்தில் கையை விடுவான்? அவனும் மனு ஷன்தானே? ஏதேனும் விஷ ஜந்துக்கள் கடித்து வைத்தால்? ஆரோக்கியமற்றுப் போனால்? வியாதி வந்தால்?

மக்கும் குப்பை மக்கா குப்பை பிரித்துப் போட்டா நலமாகும் என்று பாடிக் கொண்டு வரும் கார்ப்பரேஷன் குப்பை வண்டி வர குறைந்தது ஒரு வாரமாவது ஆகும். அந்த பேட்டரி வண்டி என்ன கதியாகியிருக்கிறதோ? நிச்சயம் ரிப்பேர் ஆகியிருக் கும். குப்பையைச் சேர்த்துச் சேர்த்து வச்சீங்கன்னா உங்க ளுக்குத்தான் வியாதி வரும் எத்தனைவாட்டிதான் சொல்றது? என்று அறிவுரையாக ஒலிபெருக்கியில் வரும் குரல் கேட்டு நான்கு நாளாயிற்று. அவனோடு அங்கங்கே வீடுகளில் எப் போதும் பிரச்னை தான். யாராவது மக்கும் குப்பை, மக்கா குப்பை என்று பிரித்துப் போட்டால்தானே? நா அப்டித்தான் போடுவேன் நீதான் பிரிச்சிக்கணும் என்பதுபோல் அந்தந்த வீடுகளில் நடந்து கொள்வது இவர்களெல்லாம் படித்தவர்க ளாதானா என்ற நினைப்பை இவருக்கு ஏற்படுத்தியிருக்கிறது. மஞ்சள் நிறப்பெட்டி மக்கா குப்பை, நீலநிறப் பெட்டி மக்கும் குப்பை என்று வகுத்துச் சொல்லியும் பின்பற்றவில்லயெ னில்? நம் மக்களை எப்படித்தான் திருத்துவது? அவனோடு ஏற்பட்ட ஒரு நீண்ட அனுபவம் இவருக்குள் நினைவுகளாய் ஓடியது. அதற்குப் பின்னால்தான் அந்த ஆள் இவருக்கு நண் பனானான்.

குப்பை வண்டிக்காரனெல்லாம் உங்களுக்கு ஃபிரெண்டா? வெளில சொல்லிக்காதீங்க சிரிக்கப் போறாங்க என்றாள் காயத்ரி. ஏன் அவன் மனுஷனில்லையா? உழைச்சித்தானே பிழைக்கிறான்? திருடல, கொள்ளையடிக்கலையே? நம்ம ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறான் அவன். தெருவை சுத் தமா வைக்க அவன் இல்லாட்டா முடில நாறிப் போகுமாக் கும்! எந்த மனுஷனையும் கேவலமா நினைக்காதே திருடக் கூடாது பிச்சையெடுக்கக் கூடாது இது ரெண்டும்தான் கேவல மான பிழைப்பு. மத்த எல்லாமும் மதிப்பானதுதான்.

எவ்வளவு கஷ்டமான வேலை? தினசரி தவறாமல் வருகி

றானே! ஒரு நாள் ஆப்சென்ட் ஆனதுண்டா? அவனை நினைத்துப் பெருமைப்பட்டார் கருணாகரன். லஞ்ச லாவண்யமும், கொள்ளையும், அபகரிப்பும், அதிகரித்துக் கிடக்கும் நாட்டில் இம்மாதிரி இன்னும் கஷ்டப்பட்டு உழைக்கவும், சரா சரியான, அதற்கும் கீழான வகையில் வாழ்க்கையை வறுமையோடு ஓட்டவும், நேர்மையான ஜீவனம் பண்ணவும் இன்னும் பெருவாரியான மக்கள் இருக்கிறார்களே? அவர்களால் தானே நியாயமும், தர்மமும் காப்பாற்றப்படுகிறது? சொல்லப்போனால் மழையே அவர்களுக்காகத்தான் பெய்கிறதோ? நாலு நாளாய் கண்ணில் படாத அந்தக் குப்பை அள்ளும் பணியாளர்களை நினைத்து பாவம், அவர்கள் பாடுகளெல்லாம் எவ்வாறு ஆனதோ இந்தப் பேய் மழையில் என்று மனசுக்குள் வருத்தம் கொள்ளலானார் கருணாகரன்.

மாடில செங்கல் இருக்குப்பா அடுக்கி வச்சிருக்கேன். கிரகப்பிரவேசத்தின் போது காசு கொடுத்து வாங்கினமே கணபதி பூஜைக்கு அதைப் பாதுகாத்து வச்சிருக்கேன் அதை எடுத்துக்கலாம் என்றார் கருணாகரன்.

பிரபு தயங்குவது போலிருந்தது. என்ன பேசாம இருக்கே? என்றார். ஒண்ணுமில்லே அது தாங்குமான்னு யோசிக்கிறேன். பழைய செங்கலாச்சே இத்தனை வருஷம் மழைலயும். காத்துலயும் கிடந்திருக்குமேன்னு

ஒண்ணும் ஆகாதுப்பா மாடி லிப்ட் ரூமுக்குப் போகுற படி அடில தண்ணி படாத இடத்துலதான் அடுக்கி வச்சிருக்கேன். மழைல நனைஞ்சதேயில்லை பூஜாஸ்டோன்ஸ், எஸ்2, டோன்ட் டச்-ன்னு எழுதி வச்சிருக்கனே கவனிச்சதில்லையா? பிரபு லேசாய்ச் சிரிப்பது கேட்டது.

அந்தச் செங்கல்களைப் பாதுகாப்பதே பெரும்பாடாய்ப் போய்விட்டது இவருக்கு. என்னதான் எழுதி வைத்திருந்தாலும் யார் பொருட்படுத்துகிறார்கள்? அவரவர் உபயோகத்திற்கு என ஒன்று இரண்டு என்று எடுத்துக் கொள்ள வேண்டியது பிறகு அங்கங்கே விட்டு விட வேண்டியது. அல்லது உடைத்துப் போட வேண்டியது. எடுத்த இடத்தில் திரும்பக் கொண்டு வைக்க வேண்டும் என்கிற பொறுப்புணர்ச்சி எவருக்குமில்லை. எடுப்பதற்கு முன் ஒரு வார்த்தை கேட்க வேண்டும் என்கிற முறை மையும் இல்லை. தினசரி மாடிக்கு வந்து வந்து அதைப் பார்த்துப் போவார் கருணாகரன். சரியாய் இருக்கிறதா என்று எண்ணிப் பார்ப்பார்.

அத யாரு எடுக்கப் போறாங்க என்னவோ சொத்தப் பாதுகாத்து வச்சிருக்கிற மாதிரி? என்று கோபப்படுவாள் காயத்ரி. காசு கொடுத்து வாங்கினது, ஓசில கிடைச்சதில்ல அதைப் பாதுகாக்குறதுல என்ன தப்பு? உனக்குத் தெரியாது நம்ம ஜனங்களோட மனப்பான்மை ஃப்ரீயாக் கிடைக்குதுன்னா, கேட்பாரில்லாமக் கிடக்குதுன்னா யார் வேணாலும், எப்படி வேணாலும் எடுத்து தன்னிச்சையா உபயோகிச்சுப்பாங்க எடுக்கிறபோது இருக்கிற அக்கறை, திரும்பக் கொண்டு வந்து வைக்கிறதுல நிச்சயம் இருக்காது, என்றார் இவர் பதிலுக்கு.

நம்ம வீட்லயே எல்லாமும் அப்படித்தானே கிடக்கு எந்தப் பொருள் வச்ச இடத்துல வச்சமேனிக்கே இருக்கு? எடுக்கிறது ஒரு இடம், திரும்பக் கொண்டு வைக்கிறது இன்னொரு இடம். நீ வச்ச இடத்துல நீ தேடுவே அது இருக்காது. வேறே எங்கேயாவது கூட்டத்தோடு கூட்டமாக் கெடக்கும் தேடி எடுக்கப் பொறுமை இருக்காது. கேட்டாலும் எடுத்துக் கொடுக்க மாட்டாங்க ! கோபப்படுவாங்க, முனகுவாங்க, எரிச்சல்படுவாங்க சின்னச்சின்ன விஷயங்கள் தான்னாலும் இங்க படியுற பழக்கங்கள்தானே வேலை பார்க்கிற ஆபீஸ்லயும் வரும். அங்கெல்லாம் இவங்களை எப்படிப் பொறுத்துக்கிறாங்களோ? வீட்டுல பொறுப்பா ஒவ்வொரு சின்ன விஷயத்துக்கும் பழகியிருந்தாத்தானே வெளிலயும் அது வரும்? இல்லன்னா கெட்ட பெயர் தான்.

எல்லாமும் வச்சது வச்ச இடத்துல இருக்கணும்னா அது வீடுல்லை மியூசியம் காயத்ரி அவர்கள் சார்பாக இந்தப் பதிலைச் சொல்கிறாளோ என்று தோன்றியது இவருக்கு. மூத்த தலைமுறையான அவளது பேச்சு அவளுக்கே பொருத்தமாய் இல்லை என்பது அவளுக்குத் தெரிய வேண்டாமா? பையனையும். மருமகளையும் தன்னைக்கட்டிப் பேசி அரவணைக்கிறாளாம். நல்லது கொஞ்சம் உஷ்ணமாய்த்தான் வரும். கடைப்பிடித்தால் அவர்களுக்குத்தான் நல்லது. தான் சொன்னால் பிடிக்காத பல விஷயங்களை அவர்களாகவே கடைப்பிடிக்கட்டுமே? சொல்லிக் கொடுத்து வளர்ப்பது என்பது எது? இம்மாதிரிச் சின்னச் சின்ன விஷயங்கள்தானே? இவளே புரிந்து கொள்ளவில்லையென்றால் பிறகு அவர்களைச் சொல்லி என்ன பயன்?

இதையெல்லாம் எத்தனையோ பேர் சொல்லிக் கேட்டாச்சு. பொருளை எடுக்க வேணாம்னு யாரும் சொல்லலியே? எடுத்த எடத்துல திரும்ப வைக்கணும்னுதானே சொல்றோம். அதுதான் பொறுப்பு செய்து பழகினாத்தான் எல்லாமும் வரும். விட்டேத்தியா இருந்தா அந்த அவலட்சணம் நம்மளோட அடையாளமாப்போயிடும். அதை ஞாபகம் வச்சிக்கோ.

வீடு அந்தலை சந்தலையாய்க் கிடப்பதைப் பார்த்துப் பார்த்து மனசு பொறுக்க மாட்டாமல் பொறுமிக் கொண்டிருந்தார் கருணாகரன். அவரால் எதையும் சொல்ல முடிவதில்லை. சொன்னால் நை நை-ன்னு அரிச்சு எடுப்பதாய் நினைத்து சங்கடப்படுகிறார்கள். பெத்த பையனிடமே சொல்ல முடிவதில்லையே பெண்டாட்டி ரொம்பக் கேட்கிறாளா? அவளும்தான் சங்கடப்படுகிறாள். அப்படியிருக்கையில் அந்த மருமகப் பெண்ணைச் சொல்லி என்ன பயன்? ஆயிரம்தான் சொன்னாலும் அந்த மூத்த தலைமுறையின் பொறுப்புணர்ச்சியும், கடமையுணர்ச்சியும், சகிப்புத்தன்மையும் நடப்பு இளைய தலைமுறைக்கு நிச்சயம் வராது. அதைச் சொல்லிச் சொல்லித் திருத்தக்கூட முடிவதில்லையே என்பதுதான் விநோதம்.

அதெல்லாம் சரிதாம்ப்பா செங்கல் மேலே ஏத்தி நிறுத்தி ஜாக்கி போட்டா தாங்குமான்னு யோசிக்கிறேன் முன் வரிசைக்கு ஆறும் ஆறும் பன்னெண்டு செங்கல் வேணும். ரெண்டு ரெண்டா ஒரு டயருக்கு மூணு வரிசைல ஆறு செங்கல் மேனிக்கு பின் வரிசைக்கு ரெண்டு வரிசை போதும் அதுக்கு ஒரு எட்டு செங்கல் ஆக இருபது செங்கல் வேணும் இருக்குமா?

தாராளமா இருக்கு. எடுத்தது போக மீதி கிடக்கும் யோசிக்காதே தண்ணீர் விறு விறுன்னு ஏறிடும் பையனைத் துரிதப்படுத்தினார் கருணாகரன். இதற்குள் முதல் தளத்தில் இருக்கும் வினோத் என்கிற பையன் இடுப்பளவில் இருக்கும் தண்ணீரில் இறங்கி, அருகில் கட்டட வேலை நடக்கும் இடத்திலிருந்து செங்கல்களை வாங்கி வருவது தெரிந்தது. அது அத்தனையும் புதுசுப்பா நம்மளது அரதப் பழசு தாங்கும்னு எனக்குத் தோணல என்று சலித்தான் பிரபு. நம்மதுதான் நல்லா காய்ஞ்சது. அவர் வாங்கிட்டு வர்றது அத்தனையும் புதுச் செங்கல் வெளில அடுக்கினது. ஈரமா இருக்கும். பயப்படாம வை அதுக்காக இந்தத் தண்ணில நடந்து போய் எங்க செங்கல் வாங்கிட்டு வருவ? ஊரெல்லாம் எது எதுக்கோ அல்லாடும் போது, செங்கல் எங்க கிடைக்கும்னு அலைவியா? எல்லாக் கடைகளும் அடைச்சிக் கிடக்காம். அந்தச் சேதி தெரியுமா? நம்ம செங்கல் என்னா வெயிட் இருக்கும் தெரியுமா? ஆபத்துக்குப் பாவமில்லே மேலே சேமிச்சு வச்சிருக்கிற செங்கல்கள் இந்த சமயத்துலயாவது பயன்படட்டும். அடுத்தாப்ல வர்ற வீட்டு விசேடத்துக்குப் புதுசு வாங்கிக்கலாம் சொன்னாக் கேளு அழுத்தமாய்ச் சொன்னார் கருணாகரன். இவர்களை ஒவ்வொன்றுக்கும் பேசிப் பேசி திருப்தி பண்ணுவதே பெரும்பாடாயிருப்பதாய்த் தோன்றியது.

தண்ணீர் சறுக்கு அடுக்களையெல்லாம் தாண்டி உள்ளே புக ஆரம்பித்திருந்தது இப்போது. இன்னும் அஞ்சு பத்து நிமிடங்களில் காருக்கடியில் வந்து விடும் என்று நிச்சயமாய்த் தோன்றியது. கொஞ்சம் பொறுப்பா அவசரப்படுத்தாதே கைடு லைன்சை எடுத்து ஒரு பார்வை பார்த்துக்கிறேன் இதுவரை ஜாக்கி போட்டதேயில்லை. இதுதான் முதல் தடவை இவனென்ன இப்படிச் சொல்கிறான் என்றிருந்தது இவருக்கு. இதற்குள் அருகிலுள்ள தன் காருக்கு அந்த வினோத் தன் வேலையைத் துவக்கியிருந்தான். அப்பா முதல் வேலையா பேட்டரியை டிஸ்கனெக்ட் பண்ணியாகணும் இல்லன்னா பெரிய டேஞ்சர் சொல்லியவாறே அந்த வினோத்தை நோக்கிப் போனான். ஜி உங்களமாதிரியே என் வண்டிக்கும் கொஞ்சம் பேட்டரியைக் கழற்றி விட்ருங்களேன் இதுவரைக்கும் அதநான் செய்ததில்ல ஒண்ணுமில்ல ப்ரோ சின்ன வேலைதான் என்றவாறே வந்து இவன் கார் பேனட்டைத் திறந்து பேட்டரியை டிஸ்கனெக்ட் செய்தான் வினோத். சொன்னவுடன் சங்கடப்படாமல் உடனே வந்து செய்தது இவருக்குப் பிடித்திருந்தது. அவரவர் பொருளைப் பாதுகாப்பதில் அக்கறையாய் இருக்கிறான் இதிலென்ன தவறு?

அப்டியே ஜாக்கியையும் போட்டு வண்டியை ஏத்தித் தரச் சொல்லேன் என்று பையனிடம் முனகினார் இவர். நல்ல கதையா இருக்கே அதென்ன சாதாரண வேலையா என்னப்பா நீபாட்டுக்கு இப்படிச் சொல்றே அவர் வண்டிக்கு சுத்தி சுத்தியே கை ஒய்ஞ்சு போகும் தெரியுமா? அத நாமளே செய்துக்குவோம் நீ ஒண்ணும் பயப்படாதே நான் ஏற்கனவே ஒரு வாட்டி மொத்த கைட்லைன்சையும் படிச்சிருக்கேன். இப்போ ஜஸ்ட் ஒரு பார்வை அவ்வளவுதான் என்றவாறே புத்தகத் தை ஒரு புரட்டுப் புரட்டிவிட்டுத் தயாரானான். இதற்குள் மாடியிலிருந்து கற்களை ஒரு சாக்கில் வைத்து தூக்கமாட்டாமல் தூக்கி வந்தார் கருணாகரன். பாரத்தைத் தூக்கியவுடன் நெஞ்சில் பிடித்துக் கொண்டது. மனசிலிருக்கும் டென்ஷன் வேறு. ஏற்கனவே வாய்வுத் தொந்தரவு அவருக்குக் கணிசமாய் உண்டு. அதை இந்தச் சமயத்தில் சொல்ல முடியுமா? ஆக வேண்டிய காரியத்தை மட்டும் பார்ப்போம். பையனை ஒத்தையில் விட முடியுமா? இக்கட்டான காலகட்டத்திலாவது கூட இருக்க வேண்டாமா? ஃபிசிகலாய் ஆள் நிற்பதே பெரிய துணையாயிற்றே? வண்டியை ஜாக்கி போட்டுத் தூக்கி நிறுத்தியபோது தண்ணீரின் அளவு பாதிச் சக்கரத்திற்கு வந்திருந்தது. எந்த வேலையைச் செய்தாலும் அதுக்குன்னு உள்ள பொஸிஷன்ல உட்கார்ந்து செய்யணும். அப்பத்தான் வேலை திருத்தமா நடக்கும் தான் அடிக்கடி சொல்வதை அப்படியே கடைப்பிடித்து அந்த வேலையை சுருக்க முடித்துவிட்டான் பிரபு. கொஞ்சமாவது தன் குணம் அவனிடம் படிந்திருக்கிறதே என்று மனதுக்குள் பெருமைப் பட்டுக்கொண்டார் கருணாகரன். உட்கார்ந்து செய்ததில் இடுப்புவரை ஈரம் சொட்டச் சொட்ட நின்றான். இளவயசு தாங்குது என்று நினைத்துக் கொண்டார் இவர்.

நல்லவேளைப்பாமுன் பக்கம் மூணு வரிசை வச்சு ஏத்திட்டோம். இன்ஜின் வரைக்கும் தண்ணி ஏறாதுன்னு நினைக்கிறேன். அப்டியே ஏறினாலும் என்ன செய்யப் போறோம்? கொண்டுபோய் கம்பெனி ஒர்க் ஷாப்புல விட வேண்டியதுதான். இன்ஷ்யூரன்ஸ் நாம எதிர்பார்க்கிறது கிடைக்கும்னு தோணலை! கிடைச்ச வரைக்கும் லாபம்.

ஒ.கே காரை இப்போதைக்கு சேஃப்டி பண்ணியாச்சு அடுத்தாப்ல ப்ரிதியையும், குழந்தையையும் கொண்டு அவுங்க வீட்டுல விடுற வழியைப் பாரு அதுதான் பாதுகாப்பு! ஏம்ப்பா இப்டிச் சொல்ற? புரியாமல் கேட்டான் பிரபு. வீட்ல தண்ணி இல்ல... கரன்ட் இல்ல எதாச்சும் வாங்கணும்னா நீதான் ஒவ்வொண்ணுக்கும் வெளில ஓடணும் என்னைக்கு தண்ணி இறங்கும். கரன்ட் வரும்னு தெரியாது மழை நிக்காமப் பெய்திட்டிருக்கு ரோட்டுல தண்ணி ஏறிட்டேயிருக்கு இப்போ கொஞ்சம் வானம் வெறிச்சிருக்கும்போதே கொண்டு அவுங்க வீட்ல விட்டுட்டேன்னாத்தான் நமக்கு சேஃப்டி அங்க அவுங்க வீட்டுக்கு முன்னாடி தண்ணி தேங்கலையே... இங்க எல்லாமும் செட்ரைட் ஆகுறவரைக்கும் அங்கே இருக்கலாமே நான் பேசறேன் சம்பந்திட்ட ப்ரீதி அப்பா அப்போவே டயல் பண்ணினமாதிரியிருந்தது. நமக்குத்தான் சரியா லைன்கிடைக்கலை ஏதாச்சும் சொல்றதுக்குத்தான் பேசியிருப்பார் அது இதாத்தான் இருக்கும் நான் சொல்றதச் செய் குழந்தையைத் தலைக்கு மேலே கழுத்துல தூக்கி உட்கார்த்திக்கோ முன் பக்கமா அவன் தொடைல கை வச்சு ஆடாமப் பிடிச்சிக்கோ அவளையும் கூட்டிக்கோ நடையைக் கட்டு இருக்கிற சுமைகளை நான் தூக்கிட்டுப் பின்னாடியே வர்றேன்.

ஓகே-ப்பா ஓகே ஆனா நீ வரவேண்டாம், நாங்களே போய்க்கிறோம் எப்டிப் போவே? மூணு நாலு பையை ப்ரீதியே தூக்க முடியுமா? நான் ரெண்டு தூக்கிட்டு வந்து ரோட்டுல தர்றேன். அங்கே ஆட்டோ பிடிச்சுப் போகட்டும் இல்லன்னா வீடு வரை கொண்டு விட்டுட்டு வா. அவ தம்பி பாலு வர்றேன்னிருக்கான். அநேகமா மெயின் ரோடு ஆரம்பத்துல நிப்பான். அவன் தன் வண்டில கூட்டிண்டு போயிடுவான்.

ஏற்கனவே பேசியாச்சா பலே பிளான் பண்ணித்தான் எல்லாம் செய்றீங்க போல்ருக்கு ஓகே பிரச்னை இல்லாம வண்டி ஓடினாச் சரி எனக்குத் தேவை அதுதான். வீட்ல அநாவசிய

சண்டை சச்சரவு கூடாது. அவ்வளவுதான் பேசி முடித்தபிறகு தான் கூடக் கொஞ்சம் பேசிவிட்டது உரைத்தது கருணாகர-னுக்கு. அவர்கள் ரெண்டு பேரும் அடிக்கடி போடும் சண்டை அவரை அப்படி நினைக்க வைத்திருந்தது. உப்புச் சப் பில்லா விஷயத்திற்கெல்லாம் வாய்ச் சண்டை. உர் புர் என்று முனகல். முறைப்பு வீட்டில் இரண்டு பெரியவர்கள் இருக்கி றார்களே என்கிற மதிப்பு மரியாதையே கிடையாது. வீடுன்னா அப்டித்தான் இருக்கும். எல்லாம் கலந்துதான் இருக்கும் என்று விட முடியவில்லை. வயசான காலத்தில் மனுஷனுக்கு ஒரு நிம்மதி வேண்டாமா? தனிக்குடித்தனம் வைத்து விட்ட நாம் கம்பி நீட்டி விடுவோம் என்றால் பையனோடுதான் இருப் பேன் என்று அடம் பிடிக்கிறாளே? அவர்கள் வாழ்க்கையை அவர்கள் வாழட்டும் நம் மீதி வாழ்க்கையை நாம் தனியே இருந்து வாழ்ந்து கழிப்போம். என்றால் கேட்டால்தானே? வீட்டு வேலைகள், பொறுப்புகள், கடமைகள் நியமங்கள் என்று எப்பொழுது அவர்கள் பழகுவது? சின்ன வயசுதானே? உழைத்தால் உடல் உரம் பெறத்தானே செய்யும். தேய்ந்தா போகும்? தேய்தல் என்பதெல்லாம் ஐம்பது வயசுக்குப் பிற குதானே? இது ஏன் தெரியமாட்டேனென்கிறது? அமைதி, தனிமை என்று கடைசி காலத்தில் இருந்து கழிக்க வேண்டும் என்கிற தன் தணியாத ஆசை நிறைவேறவே செய்யாது போலிருக்கிறது. மனதிற்குள் அன்றாடம் புழுங்கிக் கொண்டு தான் இருக்கிறார் கருணாகரன்.

அப்பாவின் யோசனை பிரபு மனதிலும் ஓடிக் கொண்டிருந்தது தான். குழந்தையின் ஆரோக்கியம் முக்கியம். ஆகவே அவ ளோடு அதை அனுப்பி வைப்பதுதான் நல்லது என்ற முடி வுக்கு அவனும் வந்திருந்தான். இருமல், ஜலதோஷம், காய்ச் சல் என்றால் அங்கு ஆஸ்பத்திரி பக்கம். இங்கு மாட்டிக் கொண்டால்? திருதிருவென்று முழித்துக் கொண்டு நிற்க வேண்டியது தான். காரை எப்படிப் பாதுகாப்பது என்கிற சிந்த னையிலேயே நேரம் போய்விட்டது. இனி கொண்டு விடுவதில் தாமதிப்பது சரிவராது என்று கிளம்பினான்.

இடுப்பளவு தண்ணீரில் அவன் குழந்தையைத் தலைக்கு மேலே தூக்கி ஷோல்டரில் அமர்த்தி நடையைக் கட்ட, ப்ரீதி பின் தொடர, இவரும் ரெண்டு தோல்பை பாரங்களைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு தண்ணீருக்குள் மெல்ல மெல்ல ஆழம் பார்த்து நடக்கலானார்.

தான் பண்ணிய அடி முட்டாள்தனமான செயலால் தன்னைச் சார்ந்தவர்கள் எல்லோரும் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாவ தாய்த் தோன்றி மனசாட்சி அவரைக் குத்திக் கிழித்தது.

நடந்து செல்லும் இடமெல்லாம் அடை அடையாகக் குப்பை கள் மிதந்து கொண்டிருந்தன. வலது. இடது என்று தெருக்க ளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனார் கரு ணாகரன். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே நீர்ப்படலா மாய்த்தான் தெரிந்தன. மக்கள் எல்லோரும் அச்சத்தோடு வீடுகளில் முடங்கிக் கிடந்தனர். மொட்டை மாடியிலிருந்து செய்வதறியாது கீழே நிரம்பித் தளும்பி நிற்கும் தண்ணீரை யும், அதில் வேறுவழியின்றி மூட்டை முடிச்சுகளோடு இஞ்சிபை இஞ்சாக நடந்து கடக்கும் மனிதர்களையும் பார்த்தவாறிருந் தனர். ஒரு பெரிய இரும்பு போட் வந்தது.

அதில் தடி தடியாய் ஏழெட்டு ஜவான்கள். ஆட்கள் பார்ப்ப தற்கு மிகுந்த பலசாலிகளாய்த் தோற்றமளித்தனர். சீருடை அணிந்திருந்தனர். சரி தண்ணீரில் தவிக்கும் மக்களைக் காப் பாற்றத்தான் வருகிறார்கள் என்று நினைத்து சந்தோஷப்பட்ட னர் பலர். அதோ போட் வந்திருச்சு போட் வந்திருச்சு என்று வீட்டு வாசலில் நின்று பலரும் குரலெடுத்துக் கத்தினர். அந்த போட் அவர்கள் குரல்களைக் காதில் வாங்காமல் கடந்து சென்று கொண்டிருந்தது. வீடுகளைக் கடந்து கடந்து வேக மாய்ச் சென்று கொண்டிருக்கும் அந்தப் படகில் இருந்த ஜவான்கள் இவர்கள் யாரையும் கவனித்ததாகவே தெரிய வில்லை. அப்போது தண்ணீரில் நின்ற ஒரு கார்ப்பரேஷன் பணியாள் சொன்னான்.

இந்தத் தெருக் கடைசில ஒரு மிலிட்டரி ஆபீஸர் இருக்காரு. அவரையும் அவுங்க வீட்டுக்காரவுகளையும் கூட்டிட்டுப் போகுறதுக்கு வர்றாங்க இவுங்க நல்லாக் கூட்டிட்டுப் போகட் டும்ங்க யாரு வேண்டாம்னாக கூடவே இந்தத் தண்ணி நடு வுல நின்னு பரிதவிச்சிக்கிட்டு முன்னாடி போறதா, பின்னாடி திரும்பிடுறதான்னு தெரியாம நிக்கிறாங்களே இவுங்களையும் கொஞ்சம் கரை சேர்த்திட்டுப் போகலாமுல்ல அந்த ஒதவி செய்யக் கூடாதா நாங்கள்லாம் மனுஷாளுக இல்லையா கண்ணு முன்னாடி இப்படிப் பார்த்தமேனிக்குக் கடந்து போறாகளே இது நியாயமா? அந்தத் தெப்பக்குளக் கூட்டத் தினர் நடுவே நின்று கொண்டிருந்த ஒருவன் ஓங்கிக் குரலெ டுத்து நீட்சியாக இப்படிக் கூறினான். அந்தப் பேச்சும் காதில் விழாமல் இன்னொரு பெரிய இரும்புப் படகும் நிறைய பார் சல்களைச் சுமந்து கொண்டு அந்த எளிய மனிதர்களையும் அவர்களின் புலம்பல்களையும் கண்டு கொள்ளாமல் வேக மாய் கடந்து போய்க் கொண்டிருந்தது. அய்யா எங்களுக்கும் சோத்துப் பொட்டணம் கொடுத்திட்டுப் போங்க நல்லாயிருப் பீக ஆளுக்கொரு தண்ணி பாட்டிலாச்சும் கொடுங்க என் றான் விடாமல்.

உங்களுக்கு வேறே படகு தனியே வருது இது அங்கே இருக் கிறவுங்களுக்கு புரிந்தும் புரியாத கொச்சைத் தமிழில் ஒரு ஜவான் இப்படிச் சொல்லிக் கொண்டே கையசைத்து, சைகை செய்து நகர்ந்து போனதை எதுவும் புரியாமல் அப்பாவியாய்க் கலங்கிய நீருக்கு நடுவே நின்று கொண்டிருந்த அந்த மக் கள் கலக்கத்தோடு பார்த்துக் கொண்டு நின்றனர். மழை இப் போது மீண்டும் வலுக்க ஆரம்பித்திருந்தது...



ushadeepan@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com Fax: 1-416-849-0594 Tel: 1-416-857-6406***



# வாழ்வுரிமை!

- மா. சித்திவினாயகம் -

விலங்குப் பண்ணை விளக்குகள் கரடிப் போக்குச் சந்தியில் ஜெகஜோதியாக எரிந்து கொண்டிருந்தது.

மாலையாகியும் சூரிய வெப்பத்தின் வெக்கை தாங்க முடியவில்லை. அந்தக் கொடூர வெப்பத்திலிருந்து விடுபடக் குடும்பம் குடும்பமாக மக்கள், இரணைமடுக் குளத்திலிருந்து நீர் பாய்கின்ற கரடிப் போக்கு வாய்க்காலுள் பாய்ந்து நீந்திக் கொண்டிருந்தனர். பண்ணை வேலையாட்கள் தனித்தனி அறைகளில் ஏசி எனப்படும் குளிரூட்டியில் குளிர் காய்ந்தார்கள். கட்டற்ற மின்சாரப் பயன்பாடும், குளிரூட்டிகளில் உபயோகிக்கப்படும் விஷ வாயுவும் சுற்றுச் சூழலை மாசுபடுத்தி ஓசோன் படலத்தை உடைத்துப் போடுகின்றன. அந்த வடிகட்டாத சூரிய வெப்பக் கதிரலையால் பூமி நாசமாகிறதென்று சொல்பவர் எவரையும் நம்பாதவர்கள் போல, இந்த மனிதர்கள் தம்பாட்டிற்குக் கருமமாற்றிக் கொண்டிருந்தார்கள்.

கனடாவின் நயகரா நீர்வீழ்ச்சியைச் சிறுவயது முதல் பார்த்து மகிழ்ந்திருந்த விலங்குப் பண்ணை முதலாளியான ஸ்ரெவ்னி கரடிப் போக்கின் வாய்க்கால் குளிப்பையும், இந்த மனிதர்களையும் வியப்போடு பார்த்தபடி வாய்க்கால் கரையோரம் நடந்து கொண்டிருந்தாள். அவளோடு அவளின் லாப்ரடோர் இன நாயான அமாயாவும் கூட நடந்து வந்துகொண்டிருந்தது.

கடலில் போகிற கப்பல் தன்னளவு நீரை இடம்பெயர்த்தே கடலில் மிதக்கிறது. அதே போல் நீந்தும் மனிதரும் தன்னளவு நீரை இடம் பெயர்ப்பார். இது ஆக்கிமீடிசின் பௌதீகவிதி என்று கூறியபடி தன் இளம் மனைவியைக் கைகளால் தூக்கித் தண்ணீரில் போட்டு நீச்சல் பழக்கினான் கணேசன். அவர்களது ஜலக்கீரிடையை அவர்களது சிறுபிள்ளை கரையோரத் தண்ணீரில் நின்று வேடிக்கை பார்த்தது.

நெடுநேரமாக நீச்சல் பயிற்சியில் மும்முரமாக இருந்த அந்தத் தம்பதிகளை நோக்கி அவர்களது குழந்தை பொறுமையிழந்து நடக்கவும் வாய்க்கால் நீர் குழந்தையை இழுத்துச் சென்றது. குழந்தை வாய்க்காலில் மூழ்கி நீர் குடித்து வீறிட்டு அலறிய சத்தம் தம்பதிகள் காதில் விழவில்லை.

ஸ்ரெவ்வனியோடு இருந்த அமாயா நாய் வெடுக்கென்று நீரில் பாய்ந்து அலையில் அடிபட்டுச் செல்லும் குழந்தையின் சட்டையில் கௌவி கரைக்கு இழுத்து வந்தது. சனங்கள் கூடினார்கள்.

'நாயின்ர பல்லுப் பட்டிருக்கோ என்று பாருங்கோ... நாய் நகமும் பொல்லாத விசம் தான்...' கூட்டத்தில் ஒரு பெண் கூறினாள்.

'மிருக சாதிக்கும் அறிவிருக்குத் தான்...' என்றான் இன்னொருவன்.

அதின்ர வாயையும் தலையையும் பார்க்க இது விசர் நாய் போலக் கிடக்கு... விசர்நாய் கடித்தால் தொப்பிளைச் சுற்றி 24 ஊசியெல்லே போடணும்... என்றவனைப் பார்த்து,

வெள்ளைக்காரி வளர்க்கிற நாய் எப்பிடி விசராய்ப் போகும். அவள் காதில இதைக் கேட்டால் உனக்கு... என்றான் பக்கத்தே நின்ற மற்றுமொருவன்.

குளித்துக் கொண்டிருந்த பிள்ளையின் தாயும் தந்தையும், ஸ்ரெவ்வனியின் நாயையும் அந்த வெள்ளைக்காரி ஸ்ரெவ்வனியையும் புகழ்ந்து தள்ளினார்கள். 'வெள்ளைக்காரர்களைப் போலவே வெள்ளையர்கள் வளர்க்கிற நாய்க்கும் நல்ல அறிவப்பா... நல்ல வளர்ப்பு... மனிசர் மாதிரி நீந்துது... இது கடி நாயில்லை தானே...' என்றாள் வெள்ளேந்தியாகப் பிள்ளையின் தாய்!

'கனடா நாயெல்லே... அதேன் கடிக்குது...?' என்றான் கணவன்.

காப்பாற்ற வக்கற்று... பிள்ளையை வாய்க்காலின் அலை இழுத்துச் செல்வதை வேடிக்கை பார்த்த சுயநலம் கொண்ட இந்த மனிதர்கள் ஆளுக்காள் புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

வெற்றுப் புலம்பலுள்ள இந்த மனிதர்கள் எல்லோரும் உயர்திணையாம்... காப்பாற்றிய நாய் அஃறிணையாம். அவ்வாறு தான் மனிதப் பள்ளிக் கூடங்கள் மனிதருக்குக் கற்றுக்கொடுக்கின்றன.

உண்மையில் ஆதிமனிதரும் அவர்கள் மூதாதையரும் விலங்குகள் என்பதை அவர்கள் எளிதில் மறந்துபோகின்றார்கள்.

சிங்கம், புலி வீரத்திற்கு, யானை, குதிரை பலத்திற்கு, மானும், மயிலும் மென்மைக்கும் பெண்மைக்கும், மீன் அவள் கண்ணிற்கு என்றெல்லாம் மிருகங்களின் உடம்புகளை மனிரோடு வர்ணிக்கின்ற, கவி பாடுகின்ற, மிர்மிக்கள் என்று எறும்பைக்

கூட கிரேக்க கடவுளாக்கிய, விலங்குகளைப் பறவைகளைக் கடவுள்களின் வாகனங்களாக்கி மகிழ்கிற இந்த மனிதர்கள் அந்த விலங்குகளையே கொன்று தின்கிற பொல்லாத காரிய வாதிகள்.

கோபத்தோடு திரும்பிய அமாயாவிற்குத் தலையைத் தடவிய படியே டென்டாஸ்டிக்ஸ் (DENTASTIX) எனும் நல்லுணவு கொடுத்தாள் ஸ்ரெவ்வனி. நாய் நாலு காலும் நிலத்தில் பரப்பி நன்றி சொல்லிவிட்டுப் பண்ணைக்குச் சென்றது.

Led நியோன் வெளிச்சம் சூழ் விலங்குப் பண்ணையில் புரோ யிலர் கோழி வதிவிடத்தில் பெரும் சத்தமாக இருந்தது. வியா பாரத்தைக் கூட்ட மலிவு விலைகளில் இறைச்சி விற்பனையா கிக் கொண்டிருந்தது. இப்போதெல்லாம் இறைச்சிச் சாம்பி ளைச் சமைத்துச் சாப்பிடக் கொடுத்து விலங்குப் பண்ணை யில் விசேடமாக சனிக்கிழமை மாலைகளில் பபிக்கியூ எனப் படும் இறைச்சி வாட்டும் கொண்டாட்டம் நடைபெறும். போவோர் வருவோர் அதை இரசித்து, ருசித்துச் சாப்பிடுவார் கள். வாங்குவோர்கள் வாங்கிச் செல்வார்கள். வாய் பேசா விலங்குகள் தன்னினம் கொலைப்பட்டு அழிவதையும், மனி தர்களின் அநியாயங்களையும் கூண்டிலிருந்து பார்த்துக் கதி கலங்கும்.

புரோயிலர் கோழிகளை உரித்து மசாலா தடவி இரும்புக் கம் பிகளில் கொழுவி பபிக்கீயூத் தட்டில் போட்டுப் பரவி தீ மூட்டி வாட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள். பன்றித் தொடை கள் வெந்து கொண்டிருந்தன. சாப்பிட்ட பலரும் வாட்டிய இறைச்சி அருமையென்றார்கள். ‘இந்த புரோயிலர் கோழியி றைச்சி சக்குச் சக்கென்று கொஞ்சமும் ருசியுமில்லை, சத்து மில்லை... பிளாஸ்ரிக்கைத் திண்டது போலக் கிடக்கு...’ என் றான் மூலையில் புரோயிலரைத் தின்று கொண்டே வேலன்...

இதைச் சாப்பிட்ட எங்களின்ர சிறுமிகள் ஏழெட்டு வயதிலேயே பூப்பெய்துதுகள். இதைச் சாப்பிட்டால் உடம்பு வைத்துச் சாக வேண்டியது தான்... 100 வயது வரை இருக்கிறவர் நடுவ யதிலேயே மாரடைப்பால போறது உந்தக் கோதாரிகளால தான்...

ஆளுக்காள் எழுந்தபாட்டிற்குக் கருத்துச் சொல்லிக் கொண் டிருந்தார்கள். அநியாயமாக அந்தக் கோழிகளுக்கு இரசா யன நச்சுத் தீவனங்களைக் கொடுத்து அவற்றைப் பிறந்து நாலைந்து நாட்களிலேயே பெருங்கோழிகளாக்கி விடுகின்ற இந்தத் தீய மனிதர்கள் கோழிகளின் மேலேயே குற்றம் சொல் லிக் கொண்டிருந்தார்கள்.

புரோய்லர் கோழிகள் இறைச்சிக்காக மட்டும் வளர்க்கப்படும் பாவப்பட்ட ஜன்மங்கள். பண்ணைகளில், அவை 5 அல்லது 6 வாரங்கள் இருக்கும் போதே படுகொலை செய்யப்படுகின் றன. இந்தப் பாழும் கொடும் புவியில் இந்த வகைக் கோழிக ளின் துன்பத்தைப் பெரும்பாலும் எவரும் கண்டு கொள்வ தில்லை. ஏனென்றால் மனிதர் அனைவரும் உண்டு கொழுக் கிற ஆனந்த உணவு அது.

குறுகிய காலத்தில் இயற்கைக்கு மாறாக உடனேயே உட லைப் பெரிதாக்க வல்ல இரசாயன ஹார்மோன்களால் வளர்க்கப்படும் இக்கோழிகள் பண்ணைகளில் மிகச் சொற்ப கால வாழ்க்கையோடு கொலைப்படுகின்றன. பிராய்லர் கோழி ஒருபோதும் சூரியனையோ பகல் வெளிச்சத்தையோ கண்டறியாதது. நல்ல காற்றைச் சுவாசித்தறியாது. தன் பெற் றோரை வாழ்நாளில் ஒருபோதும் அது பார்க்காதது. தன் ஜீவன் கொலைக்காகப் படைக்கப்பட்டது என்பதையும் அது அறிய மாட்டாது. வாழ்வின் இறுதித் தருணங்களில் இவை சந் திக்கின்ற கொடூரமான கொலைக்களத்தை மனிதப் பதர்கள் எவரும் இதுவரை பாடியதில்லை.

உயிரோடு வதைபடும் இவற்றின் கசாப்புக் கூடத்தை இவை அடைந்ததும், மூச்சிரைக்கத் தலைகீழாகக் கட்டப்பட்டு, தொங்கவிடப்படும் நேரம் உலகின் எல்லாப் பயங்களதும் மொத்தமான கொடூரத்தின் நேரம். அவற்றின் தொண்டை அறுத்தெறிவதற்கு முன்னதாக சுடு நீரில் உயிரோடு அமுக்கி மின்சாரக் குளியல் செய்கிற கொடூரத்தை இந்த உலகில் எவ ரும் அனுபவித்திரார். இத்தகு கொடூரத்தின் உறைவிடமான மனிதர்கள்தான் அன்பின் உறைவிடமாம். அஹிம்சையின் திருவுருவாம்...

கோழி வளர்ப்பவரோ கோழிகள் மேயும் நிலம் சரியில்லை அதனால்த்தான் சத்துள்ள இரசாயனத் தீவனம் கொடுக்கின் றோம் என்கின்றார். மேயும் நிலம் ஏன் சரியில்லை என்று கேட் டால் நல்ல மழையில்லை, அதனால புழுப் பூச்சி பிழைக்க வழியில்லை என்கின்றார். நல்லமழை ஏன் பெய்வதில்லை என்று கேட்டால் நாட்டில் நல்லாட்சி இல்லையதனால் நல்ல மழையில்லை என்கின்றார்கள். ஏன் நல்லாட்சியில்லை என் றால் நல்ல ஜனாதிபதி இல்லை அதனால் நல்லாட்சி இல்லை என்கின்றார்கள். நல்ல ஜனாதிபதி ஏனில்லை என்றால் தேர்வு செய்ய நல்ல மக்கள் இங்கில்லை என்கின்றார்கள். ஜனாதிப தியாவதற்கு யாருக்கும் நாம் வாக்குப் போட மாட்டோம் என் கின்றார்கள் இன்னும் சிலர். அப்போ வாக்குரிமை உங்களுக் கேன் என்றால் பதில் சொல்லத் தெரிவதில்லை... யாரில் பிழையென்றால் எவருக்கும் எதுவும் சொல்லத் தெரிவ தில்லை. மாற்றம் ஒன்றே வழியென்று எல்லா வழிகளையும் அடைத்து விட்டு நிற்கின்றார்கள் அவர்கள். எல்லோரும் ஒவ் வொருவரைக் குற்றம் சொல்லித் தாங்கள் தாங்கள் தப்பித் துக் கொள்கின்றார்கள்.

பபிக்கியூ சாப்பிட வந்தவர்கள் விலங்குப் பண்ணையைப் பார்வையிட உள்ளே சென்றார்கள். விலங்குகளுக்குக் கடுங் கோபம்.

எங்கள் இறைச்சியைத் தின்ற வாயோடு வந்துட்டானுங்க நம்மை வேடிக்கை பார்ப்பதற்கு... கெட்ட பயலுக... கழுதை வாய்விட்டு அலறியது. மற்றைய மிருகங்கள் அதற்கு வழி மொழிந்தன.

உலகில் அதிக சத்தமாக ஒலி எழுப்பும் விலங்கு எங்கட இந் தக் கழுதையில்லை, எங்கிடை அரசியல்வாதிகள்தான்... மூலையில் தன் சட்டைகளைப் பிய்த்துத் தாடியை, தலை யைத் தன் கூரிய நகங்களால பிராண்டியபடியே மிருகங்க ளோடு மிருகமாக உட்கார்ந்திருந்த பைத்தியக்காரச் சோமன் சொன்னான்...

மிருகங்கள் வேறு இனத்தோடு சேர்ந்து புணர்வதுண்டா? அவ் வாறு இணைந்து இனப்பெருக்கம் செய்யுமா? இந்த மனிசர் செய்யிறாரே... இங்கே அப்பாவிப் பெண்களை வேட்டையாடு வது சட்டை போட்ட மிருகமான மனிசர் தானே...




அவன் கரகரத்த குரலில் பேசினான். அவன் குரலில் வெறும் வெறுப்பு மட்டுமே எஞ்சிக் கிடந்தது.

எனக்கு ஒரு கனவுண்டு. இந்த விலங்குகளும் நாமும் ஒன்றாக ஒரே மேசையில் உட்கார்ந்து சாப்பிட வேணும். விலங்குகளும் பறவைகளும் என்னோட அர்த்தமுள்ள, ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழவேணும்... அவன் அழுதான். மூலையில கிடந்த புல்லாங்குழலை எடுத்து வாசித்தான். மரக்கிளையில் மரங்கொத்தி ஓட்டை போட, அதற்குள் காற்று உள் நுழைந்து ஓசையெழுப்ப, அதைக் கண்ட மனிசர் தான்தான் இசையைக் கண்டு பிடிச்சதென்கின்றான். எல்லோரும் திருட்டுப் பயலுகள்...

விலங்குப் பண்ணைக்கு வந்தவர்கள் அந்தப் பைத்தியக்காரச் சோமனை ஓர் கேவலமான பிறவியாகப் பார்த்தபடி நகர்ந்து போனார்கள். உண்மையில் அவன் இவர்களை விட ஞானமுள்ளவனாக இருந்தான். ஞானமுள்ளவனே இங்கு பைத்தியம் என்று முத்திரை குத்தப்படுகின்றான். உண்மையான பைத்தியங்களே மனிதர்களாக இங்கு உலவுகின்றன.

இஞ்ச பாருங்கோ... இந்த மிருகங்கள் சரியான பாவம்... என்ன

மாதிரி வெயில் வெக்கையில கிடந்து புழுங்குதுகள்...

அங்க பாருங்கோ எருமைத் தலையில காகம் இருக்கிறத...

இந்தா பார் என்ன வடிவாப் பஞ்சுப் பெட்டி மாதிரிக் கோழிக் குஞ்சுகளை...

வாயில் கோழித்துண்டை மென்றபடியே அவர்கள் ஒருவருக் கொருவர் பேசிச், சிரித்து, விலங்குகளைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டாடினார்கள்..

ஆனால் விலங்குகளுக்கோ...
நாம் பிறந்து பல பில்லியன் ஆண்டுகள் கடந்தும் இந்தப் புவியில், மிருகங்கள், பறவைகள் இன்னும் விடுதலை பெற வில்லை. இன்றும், பிரிவினையின் சூழ்ச்சிகளாலும், பாகுபாட் டின் சங்கிலிகளாலும், நித்தக் கொலைகளாலும் எம்வாழ்வு முடங்கிக் கிடக்கிறது... மிருகங்கள் மனிதருக்கானவை என் கிற மத வாசகங்கள் இன்னமும் மாற்றப்படவில்லை. இத் தனை வருடங்களுக்குப் பின்னரும் ஒரு தனித்த பண்ணை யில் பட்டினி வயிற்றோடு உணவிற்காக மனிதரின் கை பார்த்து நிற்கிறோம் நாம்.

கரடிப் போக்கு வயல்களில் ஒரு நாள், மனிதர்களை உழவில் பூட்டி நாமுழவேண்டும் என்று எனக்கு ஓர் கனவு இருக்கிறது தோழர்களே!

அநீதியின் வெப்பிசாரத்துள்ளும், அடக்குமுறையின் நெருக் குவாரத்துள்ளும் தத்தளிக்கும் எங்களுக்கான சுதந்திர நாள் ஒருநாள் நிச்சயம் மலரும் என நான் கனவு காண்கின்றேன் தோழர்களே.

அந்நாளில் எனது விலங்குத் தோழிகளும் தோழர்களும் பற வைத் தோழிகளும் தோழர்களும் இந்நாட்டில் சுதந்திரத் தோடு நிச்சயம் வாழ்வார்கள் என்று நான் கனவு காண்கிறேன்.

இந்நாட்டின் கொடிய இனவெறியர்களான மனிதர்களைய ழித்து எல்லா மிருகமும் பறவைகளும் கைகோர்க்க நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒன்றிணையும் காலம் விரைவில் வரும் என்றான், பன்றித் தலைவனான தேவன்.

இன்று இவங்கள் சொல்லுறாங்கள் வெயில் கொடுமையில நாங்க பரிதவிக்கிறோமாம்... பார்த்தா தங்களுக்குப் பாவமாக இருக்கிறதாம்... மரங்களை வெட்டி, நெகிழியால் பூமியை நாச மாக்கி... காற்றை மாசுபடுத்தி, இரசாயனக் குண்டுகளை விதைத்து, நிலத்தையும் நாட்டையும் பாழ்படப் பண்ணி, மிரு கவதை செய்கிற இந்தக் கொடிய பாதகர்களின் நடிப்புக் கதையளைக் கேட்டியளே... படுத்திருந்த எருமை கோபத் தோடு சொன்னது.

நாம் குடிக்கிற தண்ணீரில் இரசாயன உரங்களையும், நச்சுக் கிருமி கொல்லிகளையும், உடல் பருக்கும் இரசாயனக் கல வைகளையும் கலந்தவர்கள் இவர்கள்... இயற்கை தந்த இந் தத் தண்ணியில கண்ட கண்ட இரசாயனக் கழிவுகளெல்லாம் கலந்து, அனைத்தையும் கேடாக்கி, இந்த அழகான பூமியை அழியச் செய்யத் துடிக்கிற பேய்கள் இவர்கள். தாங்கள் குடிக்கப் போத்தல் தண்ணீர்... நாங்க குடிகிறது இந்தச் சாக்க டைச்சேறு... சேற்று நாற்றத்தோடு சொல்லிப் பெருமூச்சு விட் டது எருமை.

இப்போ பாவம் பார்க்கிறான்களாம். என்னடா கூத்து இது... நல்ல நடிகர்களடா சாமி...

எனக்கு இவனுகளையெல்லாம் பார்த்தா அப்படியே இதி லேயே என் கொம்பால குத்திக் கொல்ல வேணும்போல கிடக்கு' என்றது முள்ளிவாய்க்காலில் தப்பிய எருது...

இதைக் கேட்ட அதன் கொம்பிலிருந்த காகம், இந்த அயோக் கியப் பயல்களை அணுகுண்டு போட்டு அழிக்கவேணும் எண்டு நான் சொன்னால் நீங்கள் யாரும் கேட்கிறியளே? தமக்கு ஆறறிவாம். எங்களுக்கு ஐந்தறிவாம் என்கிற இவங் கள... உன்னாண இந்த மனுஷங்களால இந்தப் பூமிக்கோ எங்களுக்கோ என்ன நன்மை? காகம் சுற்றி நின்ற விலங்குக ளைப் பார்த்துக் கேட்டது.

தங்களின்ர செத்துப்போன சொந்தங்களின் அம்சமாக நாங்க ள் இருப்பதாகவும், அவர்களின் நினைவு நாட்களில் மட்டும் எங்களுக்குச் சோறு வைத்தால் தங்களின் மூதாதைகள் சாப் பிட்டிடும் எண்டு நினைக்கின்ற முட்டாள்கள் இவர்கள். அப்ப டியெண்டால், ஒவ்வொரு நாளுமல்லோ தங்களின் மூதாதைக ளுக்கு சாப்பாடு போடவேண்டும்.

மாட்டுக்கறி, மட்டன் குழம்பு, எலும்பு இரசம், கோழிப் புரி யாணி, குடல்கறி - ஈரல் பொரியல், மட்டன் றோல்ஸ் என்று நம் மைப் போன்ற மிருகங்கள், பறவைகளையெல்லாம் கொல் கிற, வெட்டிச் சாய்த்துச் சமைக்கிற இவங்கள் எங்களுக்கு... கா... கா...எண்டு கூப்பிட்டு மரக்கறியோடு சோறு வைக்கிற தென்பது உலகில் எத்தனை ஏமாற்றும் பொய்யும்... காகம் கோபப்பட்டது.

குடியினாலும் போதையினாலும் உருவாகி, ஏமாற்றாலும் பொய்யாலும் வெளிவேச நடிப்பாலும் நடமாடுகின்ற கிறுக்கு வியாபாரிகளான இவர்களுக்கு, யார் மனிதர் எனப் பெயர் சூட் டினார்கள் என்று தெரியவில்லை. மனிதர் தன் சுயநலத்திற் காக உலகில் யாரின் மலங்களையும் புசிக்கத் தயங்காத மகா அயோக்கியர்... இந்த மனிதரைத் தாண்டிய எந்த அயோக்கிய, அபாயகரமான விலங்கும் உலகில் இல்லை. மிருக வேட்டையை மும்முரமாக நடத்திக்கொண்டிருக்கும் இந்த மனிதர்க்கெதிரான எங்களின் மனித வேட்டை எப் போது?

'நாம் இரு வேறு உலகங்களுக்கிடையே கிடந்து போராடிக் கொண்டிருக்கிறோம். ஒன்று எம்மையழிக்கிற மனித உலகு. அது மரித்துக் கொண்டிருக்கிறது... மற்றையது எங்களின் புரட்சியால் மலரவிருக்கிற விலங்குலகு.' அதுதான் இனி எம் தணியாத் தாகம்.

மிருகங்கள் ஒன்றையொன்று அர்த்த புஷ்டியோடு பார்த்தன!

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com

# குறைவற்றதோர் அமைதி

- ஜிஜுன் லி

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

ஓராண்டில் முக்கியமான சீன விடுமுறைகளின்போது மின்னுக்கு ஒருத்தனிடமிருந்து மின்னஞ்சல் வரும். அவனை அவள் தன் வாழ்வில் இரண்டு முறை மட்டுமே சந்தித்திருக்கிறாள். ஒவ்வொரு நவம்பர் மாதமும், இன்னொரு பிறந்த நாளைக் கொண்டாடிய பின் அந்த நவம்பர் மாதம் 3-ஆந்திகதி அவன் அதை அவளுக்கு நினைவூட்டத் தவறுவதில்லை. அத்துடன் அவன் தன் நிழற்படத்தையும் அனுப்பி அவளுடைய படத்தை அனுப்பும்படிக் கெஞ்சிக் கேட்டு எழுதியிருப்பான். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக, அவனுடைய பேரப் பிள்ளைகள் நான்கு மடங்காக அதிகரித்து விட்டார்கள். அவனுடைய மூத்த பேரன் கல்லூரியில் பட்டதாரியாகி நியுயோர்க் நகரத்தில் ஒரு நல்ல வேலையும் எடுத்து விட்டான். அடுத்த இரண்டு பேரப் பிள்ளைகளும் கல்லூரியில் கற்கிறார்கள். இன்னும் சிலரும் உள்ளனர். அவர்கள் அதிகமாக மேற்குக் கரையோரம் உள்ளனர். இளையவன் கண்ணியமான தோற்றத்தை உடையவன். அவனை அந்த மனிதர் ஜே.சி. என்ற புனைபெயரில் அழைப்பார். அதாவது யூலியஸ் சீசர் என்பதன் சுருக்கம். 2012-ல் அந்த முதியவனின் மனைவி இறந்து விட்டாள். ஆனால் அவன் பொதுவாக உடல் நலத்துடன் நன்றாகவே இருக்கிறான். வயது முதிர்ந்தோரை வருத்தும் சில பொதுவான நோய்கள் தான் உள்ளன. உயர் இரத்த அழுத்தம், குறுகிய கால நினைவாற்றல் பிரச்சினை என்று. அவற்றை விட வேறு சில விவரங்களும் அவருடைய மின்னஞ்சல்களில் இருந்தன. கவாய்க்கு ஒரு கிழமை விடுமுறையில் சென்றது, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றும் இணையர், உழவர் சந்தையில் கிழமை இறுதியில் புளு-பெரி விற்றது, வாடகையை அதிகரித்ததால் விருப்பத்துக்குரிய உணவகம் ஒன்றை மூடினது என்று. மின்னஞ்சல்கள் அனுப்புவதை நிறுத்து என்று அதிகமானோர் நெடுங்காலத்திற்கு முன்பே கடுமையாக அவனுக்குப் பதிலளித்திருப்பார்கள். அவன் தொடர்ந்து அனுப்பியிருந்தால் அந்த மின்னஞ்சல்களைத் தடையும் செய்திருப்பார்கள். அவள் அப்படிச் செய்யவில்லை.

‘கடந்த கிழமை எனக்கு வயது எண்பத்து நாலாகியது.’ அப்படித்தான் மிக அண்மையில் வந்த செய்தி துவங்கியது. ‘நான் குரங்கு வருடம் பிறந்தேன். என் பிறந்தநாளின்போது எடுத்த குடும்ப நிழற்படம் ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன். என்னுடைய நினைவாற்றல் இன்னும் நன்றாக இருக்கிறது. நீ எலி வருடம் பிறந்தாய் என்பது எனக்கு நினைவில் இருக்கிறது. ஆக உனக்கு இப்போது வயது நாற்பத்து நாலு. உன்னுடைய படம் ஒன்றை எனக்கு அனுப்பி வைப்பாயா? இப்போது எப்படி இருக்கிறாய் என்பதை என்னால் பார்க்க முடியும்.’

இதை அந்த மனிதர் எழுதியபோது அதிகாலை 3 மணி. அவர் சியாட்டில் புறநகர்ப் பகுதியில் ஓர் ஓய்வகத்தில் வசிக்கிறார். அது அவருடைய மூத்த மகனின் குடும்பம் வசிக்கும் இடத்திலிருந்து ஐந்து நிமிஷ தூரத்தில் உள்ளது என்று எழுதினாள், மின். அவள் சன் ஃபிரான்சிஸ்கோவிற்குச் சற்றுத் தெற்கே வசிக்கிறாள். மின் நாள்பட்ட தூக்கமின்மை நோயால் பீடிக்கப் பட்டவள். அவளால் தூங்க முடியாமல் போனால் தன் தொலைபேசியைப் பார்ப்பாள். அது அவள் தூக்கமின்மையை மேலும் அதிகரிக்கும். மின்னுடைய வயதைக் கணக்கிடுவதிலே அவர் தன் இரவைக் கழித்துக் கொண்டிருப்பார். மின் இன்னும் மோசம். அவளுக்கு வந்த செய்தி அவள் விழித்திருந்த நேரம் முழுவதும் அவளைத் தாக்கிக் கொண்டிருந்தது. அதனால் தன்னைச் சும்மா இருக்கவிடும்படி அவருக்குச் சொல்ல நினைத்தாள். நீ ஒரு தொல்லைபிடித்தவன். உன்னை நினைத்து நீயே வெட்கப்பட வேண்டும். அப்படி அதைச் சொல்ல வேண்டும் என்று ஒத்திகை பார்த்தாள்.

ஆனால் அடுத்த நாள் காலை, மின் தன் இரட்டைக் குழந்தைகளைக் காரில் ஓட்டிச் சென்றபோது அந்தச் செய்திகளுக்கு அவள் பதிலளிக்கவில்லை என்பதை நினைத்துச் சந்தோசப் பட்டாள். சிலவேளை அந்த மனிதர் இந்த மாதமோ அடுத்த மாதமோ அல்லது அடுத்த ஆண்டோ அதற்கடுத்த ஆண்டோ இறந்து போகலாம். அந்த மனிதருடைய மின்னஞ்சல்கள் வருவது எப்போது நிறுத்தப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அப்படி நடந்தால் அவள் அமைதியாக இருந்தே அந்தப் போட்டியில் வென்று விடுவாள்.

‘அம்மா, எமிக்குச் சொல் அவள் சொல்வது பிழை என்று,’ என்றாள் டியானா.

‘அம்மா, டியானாவுக்குச் சொல், அவள் பிழை என்று,’ என்றாள் மற்றவள்.

முதல் நாள் அந்தச் சிறுமிகள் பள்ளிக்கூடத் தோட்டத்தில் இரண்டு கோழிக்குஞ்சுகள் மேலும் சேர்ந்துள்ளன என்று சொல்லியிருந்தார்கள். அவற்றுக்குப் பான்கேக் என்றும் வாஃபிள் என்றும் பெயர் சூட்டியிருந்தார்கள். அப்படிப் பெயர் சூட்டியதுக்குக் காரணம் தோட்டக்கலை ஆசிரியரால் அவற்றைத் தனித்தனியாக எதுவென்று சொல்ல முடியாமல் போனதால் தான். பான்கேக் என்று அழைத்த குஞ்சு முதலில் வாஃபிளாக இருந்திருக்கலாம் என்று டியானா புத்திசாலித்தனமாகச் சுட்டிக் காட்டினாள்.

இருவருமே சரி என்று மின் சொன்னாள். அப்படிச் சொன்ன போது ‘ஒரு வகையில்’ என்று சேர்த்தும் சொன்னாள். அந்தச்



சிறுமிகள் இருவரும் தங்கள் கருத்துகளில் வேறுபட்டால் அவர்களைச் சமாளிப்பதற்காக அப்படிச் சொல்வது தான் அவள் வழக்கம். ஆனால் அவர்கள் இருவரும் ஒரே நேரத்தில் உடனடியாக அவளை மறுத்துச் சொல்லுவார்கள்.

'நாங்கள் அந்த விஷயத்தை விட்டு விடுவோமா,' என்று மின் சொல்லுவாள்.

'மிளகுத் தெளிப்பு ஒரு சுவையூட்டி என்று முன்பு நினைத்த தாக அமீலியா சொன்னாள்,' என்று டியானா சொன்னாள்.

'அமீலியாவின் நடுப்பெயர் பாஸ்தா என்ற உணவின் பெயர் போன்றது,' என்றாள் எமி.

'இல்லை, அது வெண்ணெயின் பெயரைப் போன்றது,' என் றாள் டியானா.

'அது இரண்டாகவும் இருக்கலாம்,' என்றாள் மின். ஒருவகை யில் எல்லாமே இன்னொன்றாகவும் இருக்கலாம் என்று அவள் நினைத்தாள்.

'கெவின் குடியரசுக்கட்சி ஆதரவாளன்,' என்றாள் எமி.

மின் ஏதோவொன்றைத் தவற விட்டு விட்டாள் போலும். 'உனக்கு எப்படித் தெரியும்?

'அவன் றம்ப்பிற்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறான்,' என்றாள் எமி.

'இப்படி எழுதியிருக்கிறான், 'அன்பான திரு. றம்ப் அவர்களே,

நான் உங்கள் ஆதரவாளன். ஆனால் நீங்கள் மேலும் நல்ல ஆளாக இருந்தால் உங்களை இன்னும் பலர் விரும்புவார்கள்.' என்று டியானா சொன்னாள்.

'மற்றவர்கள் எல்லோரும் ஹிலாரிக்குத் தான் கடிதம் எழுதினார்கள்.'

மின் காரின் பின் கண்ணாடியில் இரட்டையர்களைப் பார்த்தாள். இருவரும் அதை ஆமோதிப்பவர்கள் போலத் தங்களின் தலைகளை அசைத்தார்கள். அவள் மேலும் கைகளை விசாரித்தபோது 'தேர்தல் முடிவுகள் பற்றிப் புரிந்து கொள்ளல்' என்ற அவர்களுடைய செயற்பாட்டு வகுப்பின்போது மூன்றாம் தரத்திலுள்ள மாணவர்கள் திருமதி. கிளின்ரனுக்கு அல்லது திரு. ரம்ப்புக்கு ஒரு கடிதம் எழுதச் சொல்லியிருக்கிறார்கள் என்று அறிந்து கொண்டாள்.

மின் பள்ளிக்கூட வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கெவினுடைய தாயான சண்ட்ராவைச் சந்தித்தபோது அவள் அழுது கொண்டிருப்பதைக் கண்டாள். கெவின் குடியரசுக் கட்சி ஆதரவாளன் என்ற கதையைக் கேள்விப்பட்டிருக்கிறாயா என்று சண்ட்ரா கேட்டாள். கேட்டிருக்கிறாள் என்பதை மின் ஏற்றுக் கொண்டாள்.' ஆசிரியையிடம் அந்தக் கடிதத்தைக் காட்சிப் பலகையிலிருந்து எடுத்துவிடும்படி சொல்லியிருக்கிறேன்,' என்றாள் சண்ட்ரா. 'அவள் அதைக் காட்சிபடுத்துவதற்கு முன் என்னிடம் கேட்டிருக்க வேண்டும். குடியரசுக்கட்சி ஆதரவாளன் என்றால் என்ன என்று அவனுக்கு எதுவும் தெரியாது,' என்றாள்.

'அதனால் எதுவித தீங்கும் ஏற்படவில்லை,' என்றாள் மின்.

'எல்லாப் பிள்ளைகளும் தங்கள் பெற்றோரிடம் இதைப்பற்றிச் சொல்லுவார்கள். ஏற்கெனவே சொல்லாவிட்டால்,' என்றாள் சண்ட்ரா. பெற்றோர்கள் அவர்களை அணுகுவதற்கு முன்பே, 'வா போய்க் கோப்பி குடிக்கப் போவோம்,' என்றாள்.

சண்ட்ராவும் மின்னும் பள்ளிக்கூட விருந்தோம்பல் குழுவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக இருக்கிறார்கள். அதற்கு முன்பு பேன் தொல்லை அணியில் இருந்தார்கள். அவர்கள் இருவரும் நன்றாகவே நட்புடன் இருக்கிறார்கள். காரணம், சண்ட்ரா மளிகைக் கடையில் நடந்த சிறியதொரு தற்செயல் சந்திப்பையே அதற்கொரு ஆரம்பத்தையும் மையத்தையும் முடிவையும் கொடுத்து ஒரு கதையாகச் சொல்லக் கூடியவள். அதை மின் கேட்பதற்கு விரும்புவாள். சண்ட்ரா மின்னின் தாயை அவளுக்கு நினைவூட்டுவாள். தாய் இளமையில் கணவனை இழந்தவள். இருந்தும் அவள் கதை சொல்லும் விருப்பத்தைக் கைவிடவில்லை. அத்துடன் அவள் உடனடியாகச் சிரித்தும் விடுவாள்.

மின் தன் தாயின் கதை சொல்லும் திறமையை மரபுரிமையாகப் பெறவில்லை. அவளுடைய இரட்டைக் குழந்தைகள் பாலர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது அவர்களுடைய ஆசிரியை மின்னைக் கண்டித்தாள். 'அவர்கள் இருவரும் நல்ல வாசகர்கள். ஆனால் இந்த நாட்டில் குழந்தைகள் வாசிக்கக்கூடியவர்களாக இருந்தாலும் அவர்களுக்குப் பெற்றோர்கள் கதைகள் வாசித்துக் காட்டுவார்கள். அந்தப் பாரம்பரியம் இங்கிருக்கிறது. அது அவர்களுக்கும் பெற்றோருக்கும் ஒரு பிணைப்பு அனுபவத்தைக் கொடுக்கும்,' என்றாள்.



ஜிஜுன் லி 1972 நவம்பர் 4-இல் பேஜிங்கில் பிறந்தார். சீனாவில் பீக்கிங் பல்கலைக்கழகத்திலும், அமெரிக்காவில் ஐயோவா பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றுள்ளார். இப்போது அமெரிக்காவில் பிறின்ஸ்ரன் பல்கலையில் பேராசிரியராகக் கடமையாற்றுகிறார். அதேவேளை சிறுகதைகள் நாவல்கள், கட்டுரைகள், சுயவரலாறு எழுதி வருகிறார். இவருடைய சிறந்த படைப்புகளாக A Thousand Years of Good Prayers, The Vagrants, The Book of Goose சொல்லப்படுகின்றன. பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுள்ளார். இவருடைய கதைகள், கட்டுரைகள் நியுயோர்க்கரிலும் பரிஸ் றிவ்வியூவிலும் வெளிவந்துள்ளன. நியுயோர்க்கர் 2010-ல் தெரிவு செய்யப்பட்ட நாவலாசிரியர்களில் 40 வயதுக்குட்பட்ட 20 பேரில் இவரும் ஒருவர். கிராந்தா 2007-ல் 20 மிகச் சிறந்த இளம் நாவலாசிரியர்களில் இவரும் ஒருவர். மான் புக்கர் சர்வதேசப் பரிசு தெரிவுக்குழுவில் ஒருவர்.

'இந்த நாட்டில்,' என்ற சொற்றொடர் கலிஃபோணியாவிலுள்ள முற்போக்கான பாடசாலையில் உபயோகப்படுத்தும் ஒரு சொற்றொடரல்ல. மின் அந்த ஆசிரியையின் கருத்துரையைக் கவனத்தில் எடுக்காமல் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தாள். இரட்டையர்கள் ஒன்றாக வாசிக்கும்போது ஒவ்வொரு பக்கத்தையும் அதிக ஊக்கத்துடன் வாசித்தார்கள், மின் வாசித்துக் காட்டுவதிலும் பார்க்க. அந்த ஆசிரியை திரும்ப ஒருநாள் மின்னுடன் கதைத்தால் தன் மகள்களின் படைப்பாற்றலை ஊக்கப்படுத்தவே விரும்புகிறாள் என்று சொல்ல நினைத்திருந்தாள். 'படைப்பாற்றல்' என்பது ஒரு பல்துறைக் கடவுச்சொல்.

இப்பொழுது கோப்பியைக் குடித்துக் கொண்டு சண்ட்ரா தேர்தல் இரவைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். 'அவர்கள் வாக்குகளை எண்ணுவதற்கு முன்பே என் ஆழ் உள்ளத்தில் ஓர் உணர்வு இருந்து கொண்டிருந்தது. நான் மேல்மாடிக்குச் சென்று கெவினுடைய ஹலோவீன் உடையைத் தைத்துக் கொண்டிருந்தேன். அதில் ஏதோ பிழை இருந்தது என்று நினைத்தேன். பிக்காச்சுவின் காதுகளில் ஒன்று கோணலாகத் தெரிந்தது போல இருந்தது. கெவின் சொன்னான், 'அம்மா, ஹலோவீன் ஏற்கெனவே முடிந்து விட்டது.' 'அதைச் சரி செய்து தானமாகக் கொடுக்க விரும்புகிறேன்' என்று நான் சொன்னேன். ஆனால் அதைத் திருத்தத் திருத்த அது மோசமாகிக் கொண்டிருப்பது போலத் தோன்றியது. அதன் பின் சக் வந்தான். அவன் கூச்சல் போடுவது எனக்குக் கேட்டது. 'அவர் வெல்கிறார், அவர் வெல்கிறார்' என்றான். 'ஏன் தொலைக்காட்சியை இன்னும் போடாமல் இருக்கிறீர்கள்?' கெவின் மேல்மாடிக்குப் போனான். அப்போதும் சக் கூச்சல் போட்டுக் கொண்டேயிருந்தான். 'நான் சொல்லவில்லையா அவர் வெல்லுவார் என்று. நான் சொல்லவில்லையா? நீங்கள் நான் சொன்னதை நம்பவில்லை. இல்லையா?' நான் கீழ் மாடிக்குப் போகாவிட்டால் அவன் இரவு முழுவதும் அப்படிக் கூச்சலிட்டுக் கொண்டிருப்பான் என்பது எனக்குத் தெரியும். அதனால் நான் கீழே போய் அது படுக்கை நேரம் என்று கெவினுக்குச் சொன்னேன். படுக்கைக்கு நேரம் இருக்கிறது என்றும் தகப்பனுடன் தொலைக்காட்சி பார்க்க வேண்டும் என்றும் சொன்னான். சக் சொன்னான், 'கடவுளே, உனக்கு என்ன பிரச்சினை? அவன் விழித்திருந்து என்னுடன் அதைக் கொண்டாட்டும்.'

‘நாங்கள் எல்லோரும் எங்களுடைய கெட்ட மோசமான விஷயங்களுக்குப் பழகிக் கொள்கிறோம்.’

மின்னுடைய வீட்டில் எவரும் குரலை உயர்த்திக் கதைப்பதில்லை. அவளோ அவளுடைய கணவன் றிக்கோ தேர்தல் முடிவுகளைப் பற்றி உரையாடியதில்லை. தங்கள் நிதானத்தையும் கணம் கூட இழந்ததில்லை. றிக் றம்பின் ஆதரவாளன் என்று மின் சண்ட்ராவுக்கு ஒருபோதும் சொன்னதும் இல்லை. சக் சுத்தம் செய்யும் பொருட்கள் விற்கும் ஒரு நிறுவனத்தை வைத்திருந்தான். அந்த வியாபாரம் அந்தக் குடும்பத்திடம் மூன்று தலைமுறையாக இருந்து வருகின்றது. றிக்-பெஜிங்கின் ஏழ்மையான சுற்றாடலில் வளர்ந்தவன். அவன் தன்னுடைய சீனப் பெயரை எப்பொழுதோ கைவிட்டு விட்டான். இப்பொழுது ஓர் ஆரம்ப நிலையிலுள்ள தொழில்நுட்ப நிறுவனத்தில் வேலை செய்கிறான். ஒவ்வொரு மனிதரும் மற்றவர் அதிக மரியாதைக்குத் தகுதியானவர் இல்லை என்று நினைக்கிறார். இரண்டு கணவன்மாரும் றம்ப்புக்கு வாக்களித்த இருபது வீதமானவர்களில் இருவர் என்று சண்ட்ராவுக்குச் சொல்வதில் என்ன நன்மை வரப் போகிறது ? அவமதிப்பதால் ஒருத்தரை நண்பராக்கி விட முடியாது.

சக்கை ஒரு குருட்டுப் பிடிவாதக்காரன் என்று அவன் முகத்திற்கு நேரேயே சண்ட்ரா அழைத்திருக்கிறாள். அவனும் அதைப்போலவே கெட்ட பெயர்களால் அவளை அழைத்திருக்கிறான். மின் றிக்கை அப்படியான இழிவுபடுத்தும் வார்த்தைகளில் அழைத்ததில்லை. அவள் அப்படியான கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்தும் பெண்ணில்லை என்பதால்தான் அவன் அவளை மணம் முடித்தான். அவர்கள் தேர்தலைப் பற்றி ஒருமுறைதான் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய உரையாடல்கள் குழந்தைகளின் பாதுகாப்புப் பற்றிய விசயத்துக்கு அப்பால் சென்றதில்லை. மளிகைச் சாமான் பட்டியல், விடுமுறைத் திட்டங்கள் பற்றி மட்டுமே பேசியிருக்கிறார்கள். றம்ப்பைப் பற்றி றிக் நீளமாக, உற்சாகமாகப் பேசியிருக்கிறான். மின் கிளின்ரனுக்குத்தான் வாக்களிக்கப் போகிறேன் என்று சொன்னபோது அவள் மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறாள் என்று சொன்னான். ‘ஒரு பெண்ணின் தலைமுடி எத்தனை நீளமாக இருக்கிறதோ அவள் பார்வை அத்தனை குறுகியதாகவும் இருக்கும்,’ என்று சொன்னான். அது அவனுக்குப் பிடித்தமான சீனப் பழமொழி. அவனுடைய தகப்பனுக்கும் பிடித்தமான பழமொழி. அவனுடைய பேரனுக்கும் பிடித்தமான பழமொழி அதுதான்.

‘ஒருத்தன் இறக்க வேண்டும் என்று நீ விரும்பும்போது அவன் இறந்தான் என்றால் நீ விரும்பியதால் தான் அவன் இறந்தான் என்று நீ நம்புவது சரியா இல்லையா ?’ என்றாள் மின்.

‘அப்படி உணர்வது நீ மட்டுந்தான் என்றில்லை.’

‘ஓ,..’ என்றாள் மின். அவள் றம்ப்பைப் பற்றி நினைக்கவில்லை என்பதை ஏற்றுக் கொண்டாள்.

‘நீ யாரைப் பற்றிக் கதைக்கிறாய் ? றிக் பற்றி இல்லை என்று நினைக்கிறேன்.’

‘ஓ, இல்லை.’

‘அப்போ யாரைப்பற்றி ?’

ஒரு முதியவர் விரைவாக மரணமடைய வேண்டும் என்று அவள் விரும்புவது இரக்கமற்ற ஒரு எண்ணம். மின் தான் ஒரு நாவலை வாசித்துக் கொண்டிருப்பதாகவும் அதில் வரும் பாத்திரம் ஒன்றைக் கழுத்தை நெரித்துக் கொல்ல விரும்புவதாகவும் சொன்னாள். அதுவொரு தரமற்ற பொய். சண்ட்ரா அதைப்பற்றி மேலும் ஊன்றிக் கேட்டிருப்பாள். ஆனால் அவளுக்கு இருக்கும் பிரச்சினையில் அதைப்பற்றி அவள் கேட்கவில்லை. தாங்கள் கெவினுடைய கூட்டாளிகள் என்று எந்தக் குழந்தையும் சொல்லாது என்பது உண்மை. மின்னின் குழந்தைகள் தங்கள் தந்தை ட்ரம்பின் ஆதரவாளர் என்பதைச் சொல்லக்கூடாது என்று அவர்களை எச்சரித்திருந்தாள். தாங்கள் அத்தனை மடையர்கள் இல்லை என்று அதற்கு அவர்கள் பதிலளித்திருந்தார்கள்.

மின்னுக்கு மின்னஞ்சல் எழுதும் அந்த மனிதர் தான் மின்னின் திருமணத்திற்கும் ஒருவகையில் பொறுப்பு. ஆனால் இந்த எண்ணம் அவளுக்குத் தோன்றியபோதெல்லாம் அவளை எவரும் றிக்கை மணம் முடிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தவில்லை என்பதையும் தனக்குத் தானே சொல்லிக் கொள்வாள்.

மின் அந்த மனிதரை முதல் முதல் சந்தித்தபோது அவளுக்குப் பத்தொன்பது வயது. அந்த மனிதர் அவளுடைய மாமனாராகலாம் என்று தான் அவரை அறிமுகப்படுத்தினார்கள். பெஜிங்கிலுள்ள முக்கியமானதொரு பல்கலைக்கழகத்தில் அவர் ஒரு மொழியியல் பேராசிரியர். அவருக்கு அமெரிக்காவில் மூன்று மகன்கள் இருந்தனர். திருமணத் தரகர் சொன்னபடி மூத்த மகன் மைக்றோ சொஃப்ரில் வேலை பார்க்கிறான். அவனைத்தான் மின்னுக்கு மணம் முடித்து வைக்க அந்தக் குடும்பம் நினைத்திருந்தது. அது நடைபெறாவிட்டால் அவனின் பின்னால் இரண்டு மகன்கள் இருக்கிறார்கள்.

மின் கல்வியில் பெரிதாகச் சிறக்கவில்லை. அவள் ஒரு தொழிற்கல்விப் பள்ளியில் பயின்றாள். அது பெண்களைச் செயலாளர் பதவிகளுக்குப் பயிற்சியளிப்பது. அதில் பட்டம் பெற்ற பின் அவள் ஒரு பெரும் வணிகக் கடையில் வேலை பார்த்தாள். அவர்கள் அமெரிக்காவிலிருந்தால் ஏன் சீனாவில் பெண் தேட வேண்டும் என்று மின் அவளுடைய தாயைக் கேட்டாள். நீ ஒரு குருடியை வழி கேட்கிறாய் என்றாள் தாய். ஆனால் உன்னைப் போல ஒரு நல்ல பெண் அங்கே கிடைக்காமல் இருக்கலாம் என்றாள் தாய்.

அவளுடைய தாய்க்கு அமெரிக்கா கவர்ச்சியான இடமாகத் தோன்றியிருக்கிறது என்று மின் நினைத்தாள். மின்னுடைய தந்தை அவள் நடுநிலைப் பள்ளியில் இரண்டாம் ஆண்டு படிக்கும்போதே இறந்து விட்டார். அவர் வேலை செய்த எஃகு ஆலையில் ஒரு விபத்தில் இறந்தார். அவர் அங்கே பதினெட்டு வயதிலிருந்து வேலை செய்தார். செய்தித்தாள் விற்பனை நிலையம் ஒன்றை அவள் தாய் நடத்தி வருகிறாள். அந்தச் சொற்ப வருமானத்தில் தந்தை இறந்த பிறகு மின்னும் தாயும் சிக்கனமாக வாழ்க்கை நடத்தி வந்தார்கள். தந்தைக்கு விபத்திற்காகக் கிடைத்த நட்ட ஈட்டை தாய் மின்னுடைய சீதனத்திற்காகச் சேமித்து வைத்திருக்கிறாள்.

மின் பள்ளியில் படிக்கும்போது ஒரு சிறுவனிடம் குறுகிய காலம் ஈர்ப்பு இருந்தது. ஆனால் அவள் அவனுடன் ஒருபோதும் பேசியதில்லை. அவள் பார்ப்பதற்கு அழகானவள்.

ஆனால் கண்ணைக் கவரும் வகையில் அல்ல. அவளிடம் ஒருவகை தனிச் சிறப்பான அழகு இருந்தது. மிங் வம்ச ஓவியம் ஒன்றில் உள்ளவள் போல. அல்லது வரலாற்றுக்காலப் பின்னணி கொண்ட சினிமா போல. இணக்கமான குறுகிச் செல்லும் தோள்களும், நீண்ட கழுத்தும், பளபளப்பான நிறமும், கண்களும் மூக்கும் உதடுகளும் இனிமையான முறையில் பொருந்தியிருந்தன.

குறைவற்ற மகளாகத் தான் பிறந்திருக்கிறாள் என்ற நினைவுடன் மின் வளர்ந்தாள். குறைவற்ற மருமகளாகவும், மனைவியாகவும், தாயாகவும் ஒருநாள் போய் வாழ்வாள் என்றும் அவள் நினைத்திருந்தாள். ஆனால் அவள் அப்படியில்லை என்பது அவளுக்கு நாளடைவில் தெரிந்தது. அவளுக்கு குறைகள் இருக்கின்றன என்று அவளுக்குத் தெரியவில்லை. எவருமே பூரணமானவரல்ல என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் புத்தகங்களிலும் திரைப்படங்களிலும் அர்த்தமுள்ள கவர்ச்சிகரமான வகையில் குறைபாடுள்ளவர்களாகக் காட்டப்படுகிறார்களே. பள்ளிகளில் மற்றத் தாய்மார்கள் கவலையாக இருந்தால் அதற்குத் தகுந்த காரணம் இருக்கின்றது. கணவனின் கள்ளக்காதல், குழந்தையின் நோய், பள்ளி ஏலக் குழுப் பதவிப் பிரச்சினை போன்றவை.

அவர்கள் எல்லோரும் பிரமாண்டமானதொரு பொம்மை வீட்டில் வாழ்கிறவர்களாக இருக்கலாம். எமிக்கும் டியானாவுக்கும் உரிய பொம்மைகளைப் போல சிலருக்குச் சிக்கலான வாழ்க்கைக் கதைகள் இருக்கலாம். அந்தக் கதைகளில் பல கதைக் கருக்களும் நாடகீய தருணங்களும் உற்சாகங்களும் இருக்கலாம். மற்றவர்கள் அனைவரும் மின் தன் இளமைக் காலத்தில் வைத்திருந்த ஒரேயொரு பொம்மை போல. அது நெகிழியால் செய்யப்பட்ட சிறிய கைப்பாவை. அதன் வளையாத கால்களும் கைகளும் உடற்பகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தன. மின் அந்தப் பொம்மையை போகும் இடமெல்லாம் கவனமாகக் கொண்டு திரிவாள். ஆனால் அதைப்பற்றி ஒரு கதையையும் அவள் உருவாக்கவில்லை. குளிர்கால இரவொன்றில் அந்தப் பொம்மைக்கு ஒரேயொரு பேரழிவு மட்டும் ஏற்பட்டது. ஒருமுறை மின் யன்னல் அடிச்சட்டத்தில் அதை வைத்திருந்தாள். அன்றிரவு ஏற்பட்ட மின்சாரத் தடையால் அடுத்த அறையின் வெப்பநிலை குறைந்தது. அவளுக்கோ அவளின் பெற்றோர்களுக்கோ புரியாத ஒரு காரணத்தால் பொம்மையின் ஒரு கால் கொள்குழிக்குள்ளிருந்து கழன்று விழுந்து விட்டது. அதை அவர்களால் திரும்பப் பொருத்த முடியவில்லை.

அந்த ஒற்றைக்கால் பொம்மையை அவள் நெடுக வைத்திருந்தாள். கழன்று விழுந்த அந்தக் காலைப் பற்றி மின் ஒருபோதும் கவலைப்பட்டதாக அவளுக்கு நினைவில்லை. பொம்மை ஒரு பொம்மைதானே. அவள் ஒருபோதும் உணர்ச்சிவயப்படும் குழந்தையல்ல.

அந்தப் பேராசிரியரைச் சந்திப்பதில் எவ்விதக் குறைவும் ஏற்படப் போவதில்லை என்று அவளின் தாய் சொன்னதை மின்னும் ஏற்றுக் கொண்டாள். பத்தொன்பது வயதில் அப்படியான ஒரு பெண்ணைத் தான் சில பெற்றோர்கள் தன் மகனுக்கு மணமகளாக்குவதற்கு விரும்புவார்கள். மிக அழகான, அடக்க ஒடுக்கமான, ஓரளவு வறுமையை அனுபவித்தவளாக, கனவு கண்டு கொண்டிருக்கும் அப்பாவித்தனமான, ஆனால் தன் தந்தையை இழந்த பின்னரும் துன்பக் கனவுலகில் ஆழ்ந்து விடாத ஒரு பெண்ணை விரும்புவார்கள்.

மின்னும் அவளுடைய தாயும் திருமணத் தரகரின் அடுக்கக அறையில் ஒரு ஞாயிற்றுக்கிழமை அந்த ஆளைச் சந்தித்தார்கள். தேநீர் குடித்தார்கள். அப்பொழுது தரகர் அவரும் மின்னுடைய தாயாரும் பக்கத்திலிருந்த பூங்காவில் ஒரு நடை நடந்து போட்டு வரலாம் என்று சொன்னார். தனியாக அந்த ஆணுடன் இருந்தபோது அவருடைய அங்கீகாரத்தைப் பெற அவளிடம் என்ன எதிர்பார்க்கப்பட்டது என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவர் ஒரு திரைப்படத்தில் பார்த்த பேராசிரியர் போன்ற தோற்றத்தில் இருந்தார். கம்பி விளிம்பு போட்ட கண்ணாடி, அப்பழுக்கற்ற முறையில் இரு பக்கங்களுக்கும் வழித்து விட்ட வெள்ளி முடி. அவளை அவர் கேள்விகள் கேட்டபோது அவளின் தந்தை ஒருபோதுமே உபயோகிக்காத சொற்களைப் பாவித்தான். உலகத்தைப்பற்றிய உன் பார்வை என்ன? உன்னிடமுள்ள திறமையை உச்சமாக வளர்த்துக் கொள்ள என்ன செய்கிறாய்? அவற்றுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் அவள் இருந்தபோது, நீயே உனக்கு அறிவூட்டி முழுமைப்படுத்துவது என்பது ஆற்றின் மேல்படுக்கைக்குப் படகை ஓட்டிச் செல்வது போன்ற செயல் என்று சொன்னார். அதன் பின் பாடநூல்கள் சிலவற்றை வெளியே எடுத்து வைத்தார். அதிலொன்று, 'புதிய கருத்துரு ஆங்கிலம்.' உன் ஆங்கில மொழியின் தரம் என்ன என்று நினைக்கிறாய் என்று கேட்டார். அந்தப் பாடநூல்களின் பெயர்களை அவள் கேள்விப்பட்டதேயில்லை. அவளைத் தன் கண்ணாடிக்கு மேலாகப் பார்த்த அவர் அவள் அமெரிக்காவுக்குப் போவதற்கு விரும்பினால் உடனடியாக ஆங்கிலம் கற்க வேண்டும் என்று சொன்னார்.

நேர்முகத் தேர்வில் அவள் தோற்று விட்டாள் என்று அவள் நினைத்தாள். அதைப்பற்றி அவள் அதிகம் கவலைப்படவில்லை. அவர் சோபாவில் அவளுக்குப் பக்கத்தில் வந்து குந்தியிருந்து கொண்டு இரண்டாவது பாடநூலைத் திறந்தார். 'தனிப்பட்ட உரையாடல்' என்ற தலைப்புப் போடப்பட்டிருந்த முதலாவது பாடத்தைத் திறந்து அவர் சொல்வதைத் திருப்பிச் சொல்லும்படி சொன்னார். அவர்கள் இருவரின் தோள்களும் தொடைகளும் மிக அருகாமையில் இருந்தன. புத்தகத்தைக் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தபோது அவள் உடம்பு இறுக்கமடைந்தது.

அவர் ஒரு தந்தையைப் போல நடத்துகிறார் என்று தன்னைத் தானே அவள் சமாதானப்படுத்திக் கொண்டாள். அந்தப் புத்தகங்களை அவளிடமே அவர் விட்டுச் சென்றார். வருகிற வார இறுதியில் தன்னை அழைக்கும்படி வலியுறுத்தி விட்டுச் சென்றார். அவளுக்குப் பயிற்றுவிப்பதற்காக ஓர் அட்டவணையை ஒழுங்கு செய்துள்ளதாகவும் சொன்னார். அந்தத் திட்டத்தைத் தரகருக்கோ தாய்க்கோ அவர் சொல்லவில்லை. பதிலாகத், தன் மகன் கோடை விடுமுறைக்கு வீட்டுக்கு வருவான். அப்போது இரண்டு இளையவர்களும் முறையாகச் சந்திக்கலாம் என்றார்.

மின் அவரை அழைக்கவில்லை. அவர்கள் வீட்டில் தொலைபேசி இருக்கவில்லை. பொதுத் தொலைபேசியைப் பாவிப்பதை அவள் வெறுத்தாள். அந்தப் பேராசிரியர் அவளுடன் கதைக்கத் தரகர் மூலம் அவசரமாகச் சந்திக்க வேண்டும் என்று தெரிவித்தபோதிலும் அவள் அமைதியாக இருந்தாள். அவர் கடனாகக் கொடுத்திருந்த புத்தகங்களையும் பழைய

செய்தித் தாள்களுக்குள் மறைத்து வைத்து விட்டாள். சில வாரங்களின் பின் அந்த மனிதரை அவள் சந்திக்கவேயில்லை என்று நடிக்கலாம் என்று எண்ணினாள். அந்த மனிதர் அவர்களிடம் விடைபெற்றபோது அவருடைய விரல்கள் அவளுடைய தோளில் ஒரு கணம் தங்கிச் சென்றது.

பேராசிரியர் மின் தகுதியானவளல்ல என்று சொன்னதாக ஒரு நாள் மின்னின் தாயார் சொன்னாள். அவர்களுடைய குடும்பத்துக்கேற்ற விடாமுயற்சியோ புத்திசாலியான பெண்ணோ அல்ல என்ற முடிவைத் திருமணத் தரகர் மூலம் மின்னின் தாயாருக்குச் சொல்லியனுப்பினார்கள்.

'அவர் காட்டிய நிழற்படத்தை நீ பார்த்திருக்கிறாயா? என்று மின்னின் தாயார் அவளைக் கேட்டாள். 'அவருடைய மகனுக்கு முப்பது வயது கூட ஆகவில்லை. ஆனால் அவனுக்குத் தலை ஏற்கெனவே மொட்டை விழுந்து கொண்டிருக்கிறது. இந்தப் பேராசிரியர் அவர்களுக்கு அறிவாளிப் பேரக் குழந்தைகளைப் பெற்றுக் கொடுக்க மாட்டாய் என்று நினைத்தால், நானும் அதேபோல இந்த மைக்ரோ சொஃவ்ற் மகன் அசிங்கமான பேரக் குழந்தைகளைப் பெற்றுக் கொடுப்பான் என்று கவலைப்படுவேன்,' என்றாள்.

'அநாதையும் கைம்பெண்ணும்' என்று நண்பர்களிடையேயும் அயலவர்களிடையேயும் பெயர்பெற்ற மின்னும் அவளுடைய தாயும் அவர்களுக்குக் கிடைத்த பட்டத்திற்கேற்ப அடக்கமாகவே நடந்து கொண்டார்கள். ஆனால் எவருமில்லாத நேரத்தில் அவர்கள் இருவருக்கும் பலவற்றையும் நினைத்துச் சிரித்துக்கொள்ள பல விசயங்கள் இருந்தன.

சில நாட்களின் பின் ஓர் இரவுணவு நேரத்தில் எமி, கெவின் குடியரசு ஆதரவாளன் என்ற மதிப்பீட்டைச் சொன்னபோது அவனுடைய வகுப்புத் தோழர்களிடையே அந்த மதிப்பீடு நிலைபெற்று விட்டது என்பது தெரிந்தது. 'எல்லோரும் அவனுக்காக அனுதாபப்படுகிறார்கள்,' என்றாள் எமி.

'நான் அனுதாபப்படவில்லை,' என்றாள் டியானா. 'அவனுக்காக நீ அனுதாபப்படுகிறாய். ஏனென்றால் உனக்கு அவன் மீது கவர்ச்சி,' என்றாள்.

'அரசியல் பற்றியோ மற்றச் சிறுவர்களைப் பற்றியோ பேசுவதற்கு உங்களுக்கு வயது வரவில்லை,' என்றான் றிக்.

'நீங்கள் ஒரு வயதுவாதி,' என்றாள் எமி.

றிக்கின் பொறுமையின்மையை மின் உணர்ந்தாள். ஆனால் அவன் எமியை விறைத்துப் பார்த்த பின் டியானாவிடம் திரும்பி அவளுடைய நாள் எப்படிப் போனது என்று கேட்டான். அவன் ஆண்டுகள் செல்லச் செல்ல சிறிது மென்மையாகி விட்டிருந்தான். ஆனால் அவனுடைய மூத்த மகன் மக்ஸ் எளிதில் மன்னிக்காத, நிலையற்ற மனதுடைய தந்தையுடன் வளர்ந்திருந்தான். அவன் கல்லூரிக் கல்வி முடிந்த உடனே சிங்கப்பூருக்குக் குடி போய் விட்டான். மின் அவனுடைய இன்மையை அதிகம் உணரவில்லை. ஆனால் ஒரு தாயாக அவனை இழந்ததை இன்னும் கூடுதலாக உணர்ந்திருக்க வேண்டும் என்று நினைத்தாள். அவள் தன் இருபத்தோராவது வயதில் அவனைப் பெற்றெடுத்தாள். அவளுடைய தாய்மை வருடங்கள் செல்லச் செல்ல மங்கலாகி விட்டது. அவள் தன் மகனை நேசித்தாள். இப்பொழுதும் நேசிக்கிறாள். அது அவளுக்கு உறுதியாகத் தெரியும். ஆனால் அவள் அவனை விரும்புகிறாளா என்று அவளுக்குத் தெரியாது. ஒருத்தரை ஒருவர் நேசிக்க முடியுமா அவரை விரும்பாமல்? மக்சுக்கும் றிக்குக்கும் ஒரு சிக்கலான தொடர்பிருந்தது. ஆனால் அவர்கள் இருவரும் உலகை ஒரே மாதிரியாகப் பார்த்தார்கள். இருவரும் வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒரு விலையை நிர்ணயிக்கத் தவறுவார்கள். அது அவர்களுடைய ஆளுமைக் குறைபாடு. ஒருத்தருடைய தவறைச் சாதகமாகப் பயன்படுத்தாமல் இருப்பது ஒரு பாவம்.

சிலவேளைகளில் மின் வருங்கால மருமகளை நினைத்து இரங்குவாள். அது யாராக இருந்தாலும். அந்த மருமகள் புத்திசாலித்தனமாக ஒருத்தரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம் என்று விரும்புவாள். பத்தாண்டுகளுக்கு முன்பு திருமண முறிவு ஏற்படும் நிலையில் இருந்தபோது அதற்கு றிக்கின் தீர்வு இன்னுமொரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளலாம் என்றான். திருமண முறிவு எல்லோருக்கும் கேட்டையே விளைவிக்கும் என்று நிதானமாக வாதிட்டான். மக்ஸ் பதின்மப் பருவத்தைத் தேவையற்ற கொந்தளிப்புடன் கழிக்கவேண்டி வரும் என்றான். றிக்குக்கு நிதிநிலைமையில் பின்னடைவு ஏற்படும். மின்னுக்கும் அப்படி நடக்கும். மிகக் கட்டாயமாக அவன் தன் இழப்பைக் குறைத்து அவளின் இழப்பைக் கூட்டுவான் என்று நினைத்தாள். றிக் சொன்னதெல்லாம் உண்மை என்று மின்னுக்குத் தெரியும். ஜீவனாம்சம் கொடுப்பதைத் தடுப்பதற்காகச் சொத்துகளைச் சீனாவுக்கு அனுப்புவான். மக்ஸின் பொறுப்பு யாருக்கென்று சண்டை நடக்கும். ஆனால் அவளுக்கு அவனுடைய பணமோ குழந்தையோ தேவையில்லை என்பது அவனுக்குத் தெரியாது. அந்த எண்ணம் அவளுக்கு விநோதமான ஒரு சுமைத் திணிவைக் கொடுத்தது. மக்சின் பழைய முன்பள்ளியில் பார்த்த பகுதிநேரக் கணக்காளர் தொழிலில் கிடைத்த சம்பளத்தில் அவளால் எளிய வாழ்க்கையை வாழ முடியும்.

ஆனால் தன் குழந்தையை அத்தனை இலகுவாக விட்டுக் கொடுக்கும் தாய் எப்படிப்பட்டவளாக இருப்பாள்? அவள் தன் கணவனைப் போதியளவு காதலிக்கவில்லையா? குறைந்தது தன் குழந்தையைப் போதியளவு நேசிக்கவில்லையா? இன்னொரு குழந்தையைப் பெற்றுக் கொள்வது அத்தனை மோசமான யோசனையாகத் தெரியவில்லை. தாய்மை என்பது தானாகவே புதுப்பிக்கப்படும் ஓர் ஒப்பந்தம் போன்றது. அந்த ஒப்பந்தம் பற்றி நீங்கள் ஒன்றும் செய்யாமல் இருந்தால் உங்கள் கடனட்டையில் ஒரு கட்டணம் காட்டப்படும். தானாகப் புதுப்பிக்கப்படுவதில் வாழ்க்கையில் என்ன குறை வந்துவிடும்?

'கிளின்ரன் தேர்தலில் வெற்றி பெற்றால் என்ன ஆபத்துகள் வந்துவிடும் என்பதை எனக்கு விளங்கப்படுத்துங்கள்,' என்று அந்தச் சிறுமிகளிடம் றிக் கேட்டான். மின் எல்லோரும் அமைதியாக இருந்து உணவு உண்பதை விரும்புவாள். ஆனால் றிக் இரவுணவின்போது உரையாடல்கள் நடப்பதை நம்பினான். அவை குழந்தைகளை நிஜ உலகில் எதிலும் சிறந்தவர்களாக இருப்பதற்குத் தயார்ப்படுத்தும் என்றான். 'அதை உன்னால் கற்பனை செய்ய முடியாவிட்டால் இந்த மேசையிலிருந்து அரசியல் கதைப்பதற்கு உரிமையில்லை,' என்றான்.

எமி தன் நாக்கை வெளியே நீட்டினாள். டியானா தான் றிக்கிற் குப் பிடித்தவள். அது அவளுக்குத் தெரியும். அதை அவன் அவளுக்குச் சொல்லவும் செய்திருக்கிறான். அவள் தான் அவளுடைய சகோதரியிலும் பார்க்க, தாயும் சகோதரியும் சேர்த்தாலும் அவர்களிலும் பார்க்கத் தான் புத்திசாலி என் றும் சொல்லியிருக்கிறான். அவள் தன் கைகளை மடித்து கன் னத்தில் வைத்திருந்தாள். 'எந்தெந்த ஆபத்துகள், அப்பா?' என்று கேட்டாள்.

உதாரணமாகப் பள்ளிக்கூடத்திலுள்ள பெண்களுக்கான கழி வறையை எந்தச் சிறுவனும் விரும்பினால் உபயோகித்திருக் கலாம்,' என்றான் றிக். 'அதை நீ எப்படி விரும்பியிருப்பாய்?'

'அரசியல் கதைப்பதில்லை என்று நாங்கள் ஒத்துக் கொண்டி ருக்கிறோம்,' என்றாள் மின்.

'என் குழந்தைகளுக்கு அறிவுறுத்தும்போது மட்டும் அதற்கு விதிவிலக்கு இருக்கிறது,' என்றான் றிக்.

சடுதியாக எழுந்து சமையறைக்குள் சென்றாள், மின். அங்கே குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து எதையோ குடைந்து குடைந்து தேடினாள், எதையோ மறந்து விட்டவள் போல. சமையலறை மேசையில் வைன் போத்தல் ஒன்றிருந்தது. அதை றிக் வாங்கி வந்திருந்தான். போத்தலிலிருந்த விளக் கச் சீட்டை அவளுக்கு வாசித்துக் காட்டி அதன் விலையைச் சொன்னான். தேர்தலைக் கொண்டாடுவதற்காகச் சனிக்கி ழமை இரண்டு நண்பர்கள் வருகிறார்கள் என்றான். அந்தப் போத்தலை மெதுவாக முழங்கையால் தள்ளி விடலாம் என்று எண்ணினாள். அவன் அவளைப் பார்த்துக் கூச்சலிட வேண்டு மென்றால் குழந்தைகளைத் தங்கள் படுக்கை அறைக்குச் செல்லும்படி கூறுவான். போத்தல் விழுந்தது ஒரு விபத்து என்று சொல்லுவாள். அதை எவரும் நம்பப் போவதில்லை என்று அவன் சொல்லுவான். அதுவொரு விபத்தாக இருந்தா லும் அதை மன்னிக்க முடியாது என்பான். அதுவொரு வைன் போத்தல் மாத்திரமே என்று அவள் சொல்லுவாள். அப்படி யான அற்பமான விசயங்களுக்கு அவனுடைய மன்னிப்பு அவ ளுக்குத் தேவையில்லை. அவன் வேறேதாவது சொல்லுவான். அப்போது எமி அவர்களை நிறுத்தி விடுவாள். டியானாவைப் போல அவள் புயல் ஓயும்வரை பொறுத்திருப்பவளல்ல. ஏன் நீங்கள் விவாதிக்கிறீர்கள் என்று எமி சொல்லுவாள். றிக் தன் குரலை மென்மையாக்கித் தாங்கள் இருவரும் வளர்ந்தவர் கள்போல கலந்துரையாடுகிறோம் என்று சொல்லுவான். எதைப்பற்றி? என்று எம்மா கேட்பாள். எங்களிடையே இருக் கும் அடிப்படை வேறுபாடுகளைப் பற்றி என்பாள் மின். நீங் கள் மணவிலக்கம் செய்யப் போகிறீர்களா என்று கேட்பாள், எமி. இல்லை, இல்லவே இல்லை என்று இருவரும் சேர்ந்து சொல்லுவார்கள்.

இந்தக் காட்சியைத் திரைப்படங்களில் மின் பார்த்திருக்கி றாள். ஆனால் அது தன் குடும்பத்தில் கடைசிவரை நடைபெ றாது என்று நினைத்திருந்தாள். அவளும் றிக்கும் ஒருவர் ஒரு வர் பற்றிய மிகுந்த கற்பனையுடன் மணம் முடிக்கவில்லை. ஒருவகை மிகு கற்பனையுடன் ஒரு திருமணம் ஆரம்பிக்க வில்லை என்றால் அதில் காதலுக்கு ஒரு இடம் இருக்கிறதா? அவர்கள் இருவரும் யதார்த்தவாதிகள். திருமணம் ஒரு கால நிலை போன்றது. அதைக் கட்டுப்படுத்தவோ மாற்றவோ ஆசைப்படாமல் அதில் வாழ்ந்தார்கள். காலநிலை பற்றி முன் மதிப்பீடு செய்ய இருவருக்கும் நன்றாகவே தெரியும்.

பேராசிரியரைச் சந்தித்த சில கிழமைகளின் பின்னர் அமெரிக் காவில் வேலை பார்க்கும் ஓர் இளைஞன் தன் வீட்டுக்கு வந்தி ருந்தான். அவளைப் பார்ப்பதற்கு அவன் விருப்பமாக இருக் கிறான் என்று அவளுடைய தாய் சொன்னாள். 'இந்த முறை அவனுடைய பெற்றோரைப் பற்றி அவனிடம் நான் கேட்டேன். அவர்கள் எங்களைப் போன்றவர்கள்தான், அறிவாளிகள் இல்லை,' என்றாள் தாய்.

அஞ்சல்-விளம்பர-மணமகள்-தேவை என்ற விளம்பரத்து பெண் போல மின் தன்னைப் பற்றி எண்ணிக் கொண்டாள். அதன் பின் அவளும் றிக்கும் நீண்ட தூரக் காதல் தொடர்பில் இருந்தார்கள். எட்டு மாதங்களாகக் கடிதங்கள் எழுதினார் கள். தொலைபேசியில் பேசினார்கள். அவள் அவனை வெறுக்கவில்லை. ஆனால் அவன் எழுதிய கடிதங்களைத் திரும்பத் திரும்ப வாசிக்கவில்லை. அவற்றில் அடிக்கடி அறி வுரைகள் பட்டியலிடப்பட்டு இருந்தன. 'ஆள் பாதி, ஆடை பாதி,' என்று ஒரு கடிதத்தில் எழுதியிருந்தான். அதைப்பற்றி விளக்கியும் இருந்தான். வணிகப் பெயரிட்ட ஆடைகள், கால ணிகள் உன்னுடைய அந்தஸ்தையும் தன்னம்பிக்கையையும் அதிகரிக்கும் என்றான். 'எவனும் பணக்காரனாக வருவதற்கு முயற்சிக்காமல் இருந்தால் அவன் வெட்கப்பட வேண்டும்,' என்று இன்னொன்றில் எழுதியிருந்தான். 'முக்கியமாக அமெ ரிக்காவில்.' ஆங்கிலம் படிக்கச் சொல்லியும், கணிதத் திறன் களை வளர்க்கச் சொல்லியும் தொலைபேசியில் தூண்டிக் கொண்டே இருந்தான். அவனுடைய திட்டம் அவளை ஒரு சமூ கக் கல்லூரியில் கணக்கியல் வகுப்பில் சேர்த்து விடுவதே. அதன் பின் நல்ல ஓய்வூதியத்துடன் உள்ள அரச வேலை ஒன்றை எடுப்பது. அவளிடம் லட்சியமும் திறமையும் இருந் தால் நல்ல சம்பளம் கொடுக்கும் ஒரு நிறுவனத்தில் சேர்ந்து விடுவது.

றிக் மின்னுடைய பின்னணியைக் கொண்ட குடும்பத்திலிருந் துதான் வந்தவன். அவனுடைய தந்தை நகராட்சி குளியல் இல்லத்தில் கொதிகலன் அறையில் வேலை செய்தார். அவ னுடைய தாய் உயர்நிலைப் பள்ளிச் சிற்றுண்டிச்சாலையில் வேலை செய்தாள். றிக்கும் நடுப்பள்ளி படித்த பிறகு அவனு டன் சிறுவயதில் படித்த நண்பர்களைப் போல ஒரு தொழிற்சா லையில் தொழிற்பயிற்சி எடுத்திருக்கலாம். அந்தப் பாதை யில் செல்லாமல் தடுத்தது அவனுடைய ஐந்தாம் வகுப்பு ஆசிரியர். றிக் மின்னுக்கு அந்தக் கதையை ஒருமுறை தொலைதூரத் தொலைபேசி உரையாடலின் போது சொல்லி யிருக்கிறான். பின்னர் பலமுறை அவளுக்கும் குழந்தைகளுக் கும் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறான்.

அந்தக் கதையில் றிக்கும் அவனுடைய சில நண்பர்களும் ஒருநாள் பின்மதியம் பள்ளிக்கூடம் போகாமல் மட்டம் அடித் திருக்கிறார்கள். அடுத்த நாள் ஆசிரியர் அவர்களுக்கு வழக் கம் போல மேலதிக வேலை கொடுக்காமல் வகுப்பின் முன் னால் நிற்கச் சொல்லியிருக்கிறார். இன்னும் இருபது அல்லது முப்பது ஆண்டுகளில் இவர்கள் என்னவாக இருப்பார்கள் என்று கற்பனை பண்ணச் சொல்லி மற்ற மாணவர்களைக் கேட்டிருக்கிறார்.

எவரும் ஒன்றும் சொல்லாமல் இருந்தபோது, ஆசிரியர் மாண வர்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். 'கோடை காலத்

தில் சந்துகளில் குந்திக் கொண்டிருப்பவர்கள் போல இருப்பார்கள். சட்டை போடாமல், அரைப்பட்டிக்கு மேலாக வயிறு பிதுங்க, பியர் அல்லது சிகரெற் கைகளில் இருக்க, செய்வதற்கு வேறொன்றுமில்லாமல் தாங்கள் ஏதோ வெட்டி விழுத்தியவர்கள் போல நினைத்துக் கொண்டு தங்கள் மனைவிமாரையும் பிள்ளைகளையும் ஏசிக் கொண்டிருப்பார்கள். உங்களுடைய பெற்றோர்கள் உங்களைப் பார்த்து வெட்கப்படாமல் இருந்தாலும் உங்கள் பிள்ளைகள் உங்களைப் பார்த்து வெட்கப்படுவார்கள். நான் உறுதியாகச் சொல்லுகிறேன்.'

றிக் தன் கதையை ஆசிரியரின் மேற்கோளைக் கூறி முடிப்பான். ஆனால் அந்தக் கதையில் இன்னும் மிச்சம் இருக்கிறது என்று மின்னுக்குத் தெரியும். அவனுடைய தந்தையும் சந்தில் குந்திக் கொண்டிருந்தவர்களில் ஒருத்தர். அவளுடைய தந்தையையும் அப்படி அவள் விபரித்திருக்கலாம். அவளும் அப்படியான ஒருத்தரை மணம் முடித்திருக்கலாம், அவள் பேஜிங்கில் தங்கியிருந்திருந்தால். மிகைக் கற்பனை என்ற ஒன்றில்லை என்றால் அதைத் தவறு என்று சொல்ல முடியாது. றிக் அவளுக்கு வேறு மாதிரியான வாழ்க்கையைக் காட்டியிருக்கிறான். அவளும் அவனுக்குச் சந்ததியைப் பெற்றுக் கொடுத்திருக்கிறாள். அவர்கள் அவனைப் போற்றி வணங்குகிறார்கள்.

மின்னும் றிக்கும் மணம் முடிப்பதற்குத் தொலைபேசியில் ஒப்புக்கொண்டபோது அதில் அவள் உறுதியாக இருக்கிறாளா என்று அவளுடைய தாய் கேட்டாள்.

மின் தான் உறுதியாக இருப்பதாகப் பொய் சொன்னாள். அவள் தன் தீர்மானத்தைத் தெளிவாக எடுப்பதற்கு காரணம், திருமணத்தைப் பற்றிய கதையை றிக் எடுப்பதற்கு முன் பேராசிரியர் அவளைப் பார்ப்பதற்கு வந்திருந்தார். அப்போது அவளுடைய தாய் தன் செய்தித்தாள் விற்பனை நிலையத்தில் இருந்தாள். மின் வீட்டில் இருந்தாள். மின் கதவைத் திறந்தபோது பேராசிரியர் அடுக்ககத்திற்குள் உள்ளே நுழைந்தார், அவரை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல. அவர் உள்ளே வந்து பழைய தளவாடங்களையும் 12 அங்குல கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டியையும் கூர்மையாகப் பார்த்த பின் அவளைப் பார்த்தார். 'உன்னுடைய அழைப்பை நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்,' என்றார். 'உன்னுடைய வாக்குறுதியை நீ காப்பாற்றத் தவறி விட்டாய்.' அவரைத் தான் சந்திக்கவேயில்லை என்று நடிப்பது குழந்தைப்பிள்ளைத்தனமாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. அவர் தந்த புத்தகங்களை தான் இன்னும் வைத்திருந்ததை அவர் மறந்திருப்பார் என்று நினைப்பதும் குழந்தைப் பிள்ளைத்தனம். மின் அந்தப் புத்தகங்களைச் செய்தித்தாள்களுக்கு அடியிலிருந்து எடுத்துக்கொண்டு, பொருத்தமான மன்னிப்பைக் கேட்பதற்கு முயன்று கொண்டிருந்தாள். ஆனால் அதைக் கேட்பதற்குள் அவர் இடையில் புகுந்து, 'ஒழுங்கான ஒரு நேரத்தில் நாங்கள் சந்தித்து என்னிடம் ஆங்கிலத்தை நீ கற்கலாம் என்று சொல்வதற்காக வந்தேன்,' என்றார்.

மின் அவருக்கு நன்றி சொல்லிவிட்டு அது தேவையில்லை என்று சொன்னாள்.

'ஏன் தேவையில்லை. நீ தரமான இடத்தில் வளர்க்கப்படாததால் உனது தரத்தைக் குறைக்கத் தேவையில்லை.'

'நான் உமது மகனுக்கு சரியான சோடி இல்லையென்று நீங்கள் தீர்மானித்ததாக நான் எண்ணியிருந்தேன்,' என்றாள் மின்.

'இப்போ நான் என் மனதை மாற்றி விட்டேன். நீ ஓர் அரும் பச்சைக்கல் போன்றவள். அனுதாபம் குறைந்தவர்கள் உன்னை ஒரு சாதாரண கல் என்று நினைக்கலாம். ஆனால் நீ அப்படியில்லை. என்னைப் போன்ற ஒருவருக்கு உன்னுடைய மதிப்புத் தெரியும். என்னால் உன்னை ஒரு பளபளப்பான தலைசிறந்த படைப்பாக ஆக்க முடியும்' என்றார். மின் பின்னால் சென்றாள். பேராசிரியர் இன்னும் கிட்ட வந்தார். அவருடைய கை அவளுடைய தோளிலிருக்க, பெருவிரல் அவளுடைய கழுத்தெலும்பைத் தொட்ட வண்ணம் இருந்தது. 'உனக்குப் புரிகிறதா? உனக்கு நான் எவ்வளவோ செய்ய முடியும்,' என்றார்.

'மன்னிக்க வேணும், உங்கள் உதவி எனக்குத் தேவையில்லை.'

'ஏன்? என்னுடைய பட்டதாரி மாணவர்கள் கூட இத்தனை கவனத்தை என்னிடமிருந்து பெறுவதில்லை.'

மின் தன் தலையை ஆட்டினாள். அவருடைய விரல்கள் அவளுடைய தோளை இறுகப் பிடித்திருந்தன.

நான் இப்போது ஒருவரைக் காதலிக்கிறேன்,' என்றாள்.

'என்ன? இரண்டு மாதத்திற்கு முன் தானே நீ என் மகனை மணம் முடிக்க ஒப்புக் கொண்டாய்?'

'நான் ஒப்புக்கொள்ளவில்லை.'

'ஏன் என்னை எதற்காகச் சந்தித்தாய்? நீ காதலிக்கும் அவன் யார்?' நீ அமெரிக்காவிற்குப் போக நான் உதவி செய்வேன் என்பதை நினைவில் வைத்துக்கொள்.'

'நான் அமெரிக்காவிலுள்ள ஒருத்தரைத் தான் காதலிக்கிறேன். அவரை நான் மணம் முடிப்பேன்.'

அந்த மனிதரின் கண்களிலிருந்த கோபம் அக்கறையுள்ள தந்தையின் கோபத்தைப் போன்றதல்ல. பத்தொன்பது வயதிலும் மின்னால் அதைச் சொல்ல முடியும். அவரிடம் இருந்த மனக்கசப்பு ஒரு வஞ்சிக்கப்பட்ட காதலனுடையது. 'ஆக, நீ என்னை உபயோகித்தாய். இப்போ என்னிலும் சிறந்த ஒருவனைக் கண்டு கொண்டாய் உபயோகிக்க. உன்னைப் போன்ற ஒரு பெண்ணிடம் கௌரவம் இருக்காது என்பது எனக்குத் தெரிந்திருக்க வேணும்.'

வேறொரு பெண்ணாக இருந்திருந்தால் அவர் முகத்திற்கு நேரேயே எள்ளி நகையாடி அவரை ஒரு பைத்தியக்காரன் என்று சொல்லியிருப்பாள். இன்னொரு பெண்ணாக இருந்திருந்தால் அவர் கையை எடுத்தெறிந்து போகச் சொல்லியிருப்பாள். 'உங்களை நான் ஏமாற்றியிருந்தால் என்னை மன்னிக்கவும். என்னால் உங்களுக்கு உதவ முடியாது,' என்றாள் மின்.

'நிச்சயமாக உன்னால் உதவ முடியும். உனக்கு இன்னும் நான் ஆங்கிலம் கற்பிக்க முடியும். நீ என்னுடைய மகனை மணம் செய்யத் தேவையில்லை. என்னை வந்து சந்தி. சரியென்று சொல்.'

அந்த வேண்டுகோளிலிருந்த உதவியற்றதன்மை இரக்க உணர்வால் மின்னை அருவருப்படையச் செய்தது. அவர் அவளுக்களித்த ஆற்றலை உபயோகிக்க விரும்பவில்லை. அது உண்மையான ஆற்றலல்ல. அதுவொரு கடப்பாடு, இல்லை, மோசமான கடன். அவர் தன் கண்களை அவள்மேல் பதித்த அந்தக் கணமே அவருக்கு அவள் ஏதோ கடன் பட்டிருக்கிறாள். இருந்தும், அவருக்காக அவள் வருத்தப்பட்டாள். உன்னை நீயே முட்டாளாக்கிக் கொள்கிறாய் என்று சொல்ல வேண்டும் போலத் தோன்றியது. நான் ஒரு பெண். எந்த அந்தஸ்தோ முக்கியத்துவமோ அற்றவள். ஏன் உம்மை இப்படி அவமானப்படுத்திக் கொள்கிறீர்கள் ?

பல்லாண்டுகளாக, மின் அந்தக் கணத்தைப் பற்றி நினைக்காமல் இருக்க முயன்றாள். ஆனால் அந்த மனிதரின் மின்னஞ்சல் வந்தபோது, தன்னைத் தானே முட்டாளாக்கிக் கொண்டவர் அவரல்ல, நீ தான் என்று அவளுடைய இளம் சுயத்திற்குச் சொல்ல உந்துதல் வந்தது. நீ தான் மணம் முடிக்க அவசரப்பட்டாய். ஏனென்றால் முட்டாள்தனமாக அப்படி நடக்க மாட்டாத ஒருவரை மணம் முடிப்பது நல்லது என்று நீ நினைத்தாய். கண்களில் அப்படியான வெறித்தனமாக பார்வையில்லாத ஒருத்தர் தான் சரியான கணவன் என்று நீ நினைத்தாய். ஆனால் திருமணம் என்பது ஒருவகையான நோய். அதற்கு ஒப்புதல் அளித்தது நீ. ஏனெனில் மணம் முடித்தால் இருவரும் ஒன்றாகவே அந்த நோயிலிருந்து மீளலாம் என்று நீ நினைத்தாய். அதில் சிலர் வெற்றி பெறுகிறார்கள். சிலர் தோற்கிறார்கள். ஆனால் இருவரும் தனித்தனியான துன்பத்தில் இருக்காமல் நல்லதே நடக்கும் என்று நம்ப முடியாது.

'இங்கே பார், சிறுமிகளுடன் நான் அரசியல் கதைக்க விரும்பவில்லை,' இரட்டையர்கள் படுக்கைக்குப் போன பின் றிக் மின்னுக்குச் சொன்னான்.

மின் அதற்குப் பதிலிக்கவில்லை.

என் குழந்தைகளை இந்த இடதுசாரி முட்டாள்தனத்திற்கு உட்படுத்த நான் விரும்பவில்லை.'

அதே உரையாடல் சண்ட்ராவின் வீட்டிலும் நடைபெறும். ஆனால் அங்கே அது மேலும் சூடாகச் சண்டையாக நடக்கும். மிகு உணர்ச்சியான சொற்கள் எறிகுண்டுகள் போல இங்கும் அங்கும் எறியப்படும். இருந்தும் சண்ட்றா சக்கிடமிருந்து மணவிலக்குப் பெறாமலிருந்தாள். மின் றிக்கிடமிருந்து மணவிலக்குப் பெறாமல் இருப்பது போல.

'ஒரு பதிவுக்காகச் சொல்லி வைக்க விரும்புகிறேன்,' என்று றிக் தொடர்ந்து சொன்னான். 'உன்னை யாராவது யாருக்கு வாக்களித்தாய் என்று கேட்டால், நீ றம்புக்கு என்று சொல்ல வேண்டும் அல்லது அதைச் சொல்ல விரும்பாவிட்டால் நான் வாக்களிக்கவேயில்லை என்று சொல்,' என்றான்.

ஒரு கணம் மின் பழிவாங்குகிற மகிழ்ச்சியை உணர்ந்தாள். அவனைப் பற்றிய உண்மையைச் சிறுமிகள் ஏற்கெனவே உலகத்துக்குச் சொல்லாமல் இருக்கத் தெரிந்திருந்தார்கள். ஒரு சில ஆண்டுகளில் அவர்கள் பதின்ம வயதை அடைந்து விடுவார்கள். எமி எளிதில் அமைதி இழக்கின்றவள். தன் மனநிலைகளை அவளால் மறைக்க முடியாது. டியானா நாணம் கொண்டவள். ஆனால் அவள் தன் தந்தையின் அதிகாரத்தைச் சீர்குலைக்க நினைத்தால் அதைச் சாமர்த்தியமாகச் செய்வாள். அதேநேரம் பேரழிவுடனும் செய்யக் கூடியவள். இரட்டையர்கள் வளர்வதற்காகச் சற்றுப் பொறுத்திருந்தால் அவற்றைப் பார்க்கலாம். மின்னின் தந்தை இறந்த பிறகு அவளுடைய தாயார் இப்படித்தான் உணர்ந்திருப்பார். குழந்தைகள் வளர்ந்து எங்களால் தீர்க்க முடியாத இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வார்கள் என்று.

அவர்களால் தீர்க்க முடியாத புதிய பிரச்சினைகளையும் அவர்கள் எதிர்கொள்வார்கள். தீங்கு செய்யாத அந்த மனிதர் இறப்பதற்காக நீ காத்துக் கொண்டிருக்கலாம். அவர் அவளுடைய வாழ்க்கையில் ஒரு பகுதியாக இருந்தால் அவர் தன் பிடியைத் தளர்த்த மாட்டார்.

'மீண்டும் தொடர்பு கொள்ள' என்று தான் பேராசிரியர் தன் முதலாவது மின்னஞ்சலை ஆரம்பித்திருந்தார். அதை அவர் அனுப்பியபோது மக்ஸ் தொடக்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான். அமெரிக்காவுக்குக் குடிவந்து பத்து ஆண்டுகளின் பின் கோடை காலத்தில் பேஜிங்குக்கு முதன் முதலாகச் சென்றபோது மின்னுடைய பழைய அடுக்ககக் கட்டடத்திற்கு எந்தக் காரணமுமின்றித் திடீர் மனப்போக்கின் காரணமாக அங்கே வந்ததாகச் சொன்னார். 'ஆச்சரியப்படும் வகையில் அந்தக் கட்டடம் இடிக்கப்படாமல் அப்படியேயிருந்தது. அங்கேதான் அவருடைய தாயார் இன்னும் வசித்து வந்தாள். தொலைந்து போன சிநேகிதியுடன் திரும்பவும் தொடர்பு கொள்ள வேண்டும் என்று எல்லா அறிகுறிகளும் என்னை நம்ப வைத்தன,' என்று அவர் எழுதினார்.

தனிமையின் காரணமாகவோ கடந்த கால ஏக்கம் காரணமாகவோ அவர் எழுதியிருக்கிறார் என்று மின் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். அவரை அகற்றி விடும் எண்ணத்திலும் அன்பினாலும் அப்படி எண்ணினாள். அமைதியாக இருக்க வேண்டியதே அவள் செய்ய வேண்டியது. அந்த அமைதியை உறுதியுடன் காத்து வந்தாள். ஆனால் அது அவளுக்கு எந்த மேன்மையையும் தரவில்லை என்பது அவளுக்குப் புரிந்தது. அடுத்த மாதமும் அதற்கு அடுத்த மாதமும் அவர் இன்னொரு மின்னஞ்சலை அனுப்பினார். தான் நினைத்த பெண் தன்னிடமிருந்து எப்போதுமே தூரத்தில் இருக்கவில்லை என்று அவளுக்கு நினைவூட்டினார். அவருடைய கற்பனையில் அவள் இன்னும் இளமையாகவும், அழகாகவும், மென்மையானவளாகவும் இருக்கிறாள். அவளுடைய அமைதி அவருடைய எல்லையற்ற கற்பனையைத் தடுத்து நிறுத்த முடியாதிருந்தது.

அன்றைய இரவு, மின்னால் தூங்க முடியாமல் போனபோது அந்த மனிதர் முதல் நாள் அனுப்பிய மின்னஞ்சலைத் திறந்து பார்த்தாள். பின் அதை அவரால் எளிதாக வாசிக்க இயலும் என்பதால் பெரிய எழுத்தில் தட்டச்சடித்தாள். 'தயவு செய்து எனக்கு எழுதுவதை நிறுத்து.' திரும்பவும் சிந்தித்து அதை அழித்து விட்டு, 'நாசமாகப் போ'
என்றெழுதினாள்.



mahalingam.k@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள் பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You®



33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated
Office: 905-201-9977




HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam
Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com




With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
Family Portraits
Children Portraits
Business Portraits
Passport & Citizenship Photos
Classic Weddings
Arangetram
Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined




BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272


- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Providing Peaceful, Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிசிஸ்சாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை
கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?
சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்
Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்
அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com


BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK



MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
TD Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
HOMELIFE
GRAND MASTER CLUB
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace CO
$2100 Rebate Available Now
call us 416-414-2280
AATEK
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090


SABONA


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC.



NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice




Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111




வீடு | வணிகம்
* வாங்க * விற்க * வாடகைக்கு...
Residential | Commercial
* BUY * SELL * LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet




நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6




COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Ravi Kana




"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com




Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5




DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989


15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544


AEREN Thiyagarajah
Realtor
647-888 3500
DILEEP Thangavel
Realtor
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8


நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.


ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana
Yoganathan
416.418.5749
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE* OFFICE: 905-305-1600


HomeLife Today Realty Ltd.,
Brokerage*
416-298-3200
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545


RL RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225


Ahilan
Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage


UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP


Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE


Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120


Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011


Suba Aynkharan
Broker
416-722-4444
RE/MAX
COMMUNITY
REALTY INC.


Azon
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL
BANKER


Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com


BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 11 Progress Ave, Suite 210, Toronto ON,M1P 4S6


NOW HIRING
JOIN OUR
DYNAMIC TEAM
INFORCE LIFE
Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN
RASALINGAM
President & CEO


Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
416 505 8532


DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
Smiles
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524


RE/MAX
077 566 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner